# மனிதரில் எத்தனை நிறங்கள்!

என். கணேசன்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மனிதரில் எத்தனை நிறங்கள் |
| ஆசிரியர் | : | என்.கணேசன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பகம் | : | நிலாச்சாரல் லிமிடட் |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பாசிரியர் | : | நிலா |
| பதிப்பு எண் | : | 1.0W |
| காலம் | : | ஆகஸ்ட் 2012 |
| அட்டை வடிவமைப்பு | : | பாலாஜி |
| Wrapper Image Courtesy | : | Victor Habbick<br>freedigitalphotos.net |


**“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”**


**Nilacharal Ltd**
**18 Collingwood Road**
**Crawley**
**RH10 7WG**
**UK**
**E-mail: team@nilacharal.com**

**TERMS OF USE:**

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

*******

## உபயோக நிபந்தனைகள்

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

*******

# 1

தூண்டிற் புழுவினைப் போல்- வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக-எனது
நெஞ்சம் துடித்ததடி! - பாரதியார்

மறுபடியும் அதே கனவு-

வெளியே இடி மின்னலுடன் பேய் மழை பெய்து கொண்டு இருக்கிறது....அழைப்பு மணியை யாரோ விடாமல் அழுத்திக் கொண்டே இருந்தார்கள்...அந்த மழை சத்தத்துடன் சேர்ந்து கேட்கும் போது அந்த அழைப்பு மணியின் தொடர்ச்சியான சத்தம் நாராசமாக கேட்கிறது....ஒரு பெண் கலவரத்துடன் யாருடனோ போன் பேச முயன்று கொண்டிருக்கிறாள்.....பிறகு கலவரத்துடன் ரிசீவரைக் கீழே வைத்து விட்டு முகத்தைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொள்கிறாள்.. யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது....இரண்டு பெண்கள் ஒரு அறைக்குள் ஆவேசத்துடன் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்கிறது...பேச்சைத் தொடர்ந்து ஒரு பெண் அமானுஷ்ய குரலில் சிரிக்கிறாள். .ஒரு வினோதமான காலடி ஓசை கேட்கிறது...ஒரு பெண்ணின் அலறல் இடிச்சத்தத்தையும் மீறி அந்த பங்களா முழுவதும் எதிரொலிக்கிறது.... துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது....மூடிய அறைக்குள் இருந்து கதவிடுக்கின் வழியே இரத்தம் வெளியே வருகிறது... வெளியே ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது.... முகமெல்லாம் இரத்தம் வடிய ஒரு பெண் அறையிலிருந்து ஓடி வருகிறாள்....யாரோ ஈனசுரத்தில் "ஆர்த்தி" என்றழைக்கிறார்கள்....."

அலறியபடி ஆர்த்தி விழித்துக் கொண்டாள். உடல் எல்லாம் வியர்க்க, இதயம் படபடக்க திகிலுடன் படுக்கையில் உட்கார்ந்தாள். இந்தக் கனவு அவளுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து வருகிறது. முன்பெல்லாம் நான்கைந்து மாதங்களுக்கு ஒரு முறை வருவது, இப்போதெல்லாம் மாதம் ஓரிரு முறை வர ஆரம்பித்து விட்டது. இந்தக் கனவின் காட்சிகள் எப்போதும் இதே வரிசையில் வருவதில்லை. ஒவ்வொரு முறையும் முன் பின்னாக மாறி மாறி வரும். ஆனால் கனவில் காணும் அந்த காட்சிகளில் மாற்றம் இருப்பதில்லை. ஒரு பெரிய ஸ்கிரீனில் சினிமா ஸ்லைடுகள் காண்பிக்கப்படுவது போல கோர்வையில்லாமல் வேகமாக வந்து போகும் கனவின் காட்சிகள் கலைவது மட்டும் ஈனசுரத்தில் ஆர்த்தி என்று யாரோ அழைக்க அலறியபடி அவள் விழித்துக் கொள்வதில் தான்.

மின் விளக்கு எரிந்தது. அவளுடைய அலறல் சத்தம் கேட்டு வந்த தாத்தாவும் பாட்டியும் அவளையே கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் என்ன ஆயிற்று என்று அவளைக் கேட்கவில்லை. வருடக்கணக்கில் அவளை வதைத்து வந்த கனவைப் பற்றி அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

சிவந்த நிறம், நீண்ட கூந்தல், அழகான பெரிய கண்கள், கண்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய அழகு முகம், செதுக்கிய உடற்கட்டு, சராசரிக்கும் மேற்பட்ட உயரம் என அழகோவியமாய் இருக்கும் பேத்தியின் இந்த தொடர் சித்திரவதையைப் பார்க்க பாட்டியின் கண்களில் லேசாக கண்ணீர் திரை போட்டது. தாத்தாவின் முகத்தில் இயலாமையுடன் கூடிய துக்கம் குடி கொண்டது. இருபத்தியொரு வயதை அடுத்த வாரம் எட்டப் போகிற அவர்கள் பேத்தியை இந்தக் கனவில் இருந்து காப்பாற்ற அவர்களால் முடியவில்லையே என்ற ஆதங்கம் அவர்களிடம் தெரிந்தது. ஆர்த்தி அவர்கள் இருவரையும் பார்த்து பலவந்தமாக மெலிதாய் புன்னகையை வரவழைத்தாள். "வழக்கமான கனவு தான். நீங்க போய் தூங்குங்க".

பாட்டி பார்வதி அவளைப் படுக்க வைத்து போர்வை போர்த்தி அவள் தலைமுடியைக் கோதி விட்டு ஆசுவாசப்படுத்தி விட்டுத் தான் அங்கிருந்து நகர்ந்தாள். தாத்தா நீலகண்டன் பேத்தியைப் பாசத்துடன் பார்த்தபடி ஒரு கணம் நின்று விட்டு மனைவியைப் பின் தொடர்ந்தார். பார்வதி கணவனிடம் மெல்லிய குரலில் சொன்னாள். "அவள் கிட்ட இன்னும் எத்தனை நாள் உண்மையை மறைக்கிறது. எல்லாத்தையும் சொல்லிடறது நல்லதில்லையா?". அவர் தற்காலிகமாய் செவிடானார்.

அவர்கள் போன பின்பு ஆர்த்திக்கு உறக்கம் நீண்ட நேரம் வரவில்லை. இந்தக் கனவு ஏன் வருகிறது என்று அவளுக்குப் புரியவில்லை. அடிக்கடி வரும் கனவாக இருந்தாலும் கூட ஒவ்வொரு முறையும் அவளுக்குள் ஏற்படுத்தும் பாதிப்பு ஏனோ சிறிதும் குறைவதில்லை. அவளுக்கு சுமார் பதினைந்து வயது இருக்கும் போது நீலகண்டன் அவளை ஒரு சைக்கியாட்ரிஸ்டிடம் கூட்டிக் கொண்டு போனார். அந்த டாக்டர் அவளிடம் அரை மணி நேரம் பேசி விட்டு பிறகு தனியாக தாத்தாவிடம் அரை மணி நேரம் பேசினார். அவர் என்ன சொன்னார் என்று கேட்டதற்கு தாத்தா சரியாக பதில் சொல்லவில்லை. அதற்குப் பின் தாத்தா அவளுக்கு இந்த விஷயத்தில் சிகிச்சை பார்க்கும் முயற்சியே எடுக்கவில்லை. பணம் அதிகமாக செலவாகும் சிகிச்சை ஏதாவது அந்த டாக்டர் தாத்தாவிடம் சொல்லி இருக்கலாம், ஏழ்மை நிலையில் இருக்கும் தாத்தா இது நம் வசதிக்கேற்றதில்லை என்று விட்டிருக்கலாம் என்று ஆர்த்தி நினைத்தாள். ஆனால் அவளுக்கு தாத்தா மீது வருத்தம் இல்லை. பாண்டிச்சேரியில் ஒரு சிறிய ஓட்டு வீட்டில் குடியிருந்து கொண்டு காலையிலும் மாலையிலும் டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டு, இடைப்பட்ட நேரத்தில் ஒரு தனியார் நூலகத்தில் வேலை செய்து கொண்டு, வரும் வருமானத்தில் மனைவியையும், பேத்தியையும் காப்பாற்ற வேண்டி உள்ள அவர் நிலைமையை அவள் அறிவாள். அவர் அவளைப் பட்டப்படிப்பு படிக்க வைத்ததே பெரிய விஷயம்..... அவள் அப்படியே உறங்கிப் போனாள்.

ஆனால் பார்வதியால் உறங்க முடியவில்லை. பேத்தியின் கனவின் பின்னால் இருக்கும் உண்மையை இனியும் தெரிவிக்காமல் இருப்பது முட்டாள்தனம் என்று அவள் உள்ளுணர்வு சொன்னது.

மறுநாள் காலை பார்வதி பேத்தியிடம் ஏதோ சொல்ல வாய் திறப்பதும் பின் வாங்குவதுமாக இருந்தாள். ஆர்த்தி "என்ன பாட்டி?" என்று கேட்கும் போது நீலகண்டன் அவர்கள் அருகே வர, அவர் போகட்டும் பிறகு சொல்கிறேன் என்று அவர் அறியாமல் சைகையால் சொன்னாள். நீலகண்டன் காய்கறி வாங்கி வர வெளியே போகும் வரை காத்திருந்து விட்டு பிறகு பேத்தியைத் தன் அருகே உட்கார வைத்து ஏதோ சொல்ல பார்வதி வாய் திறந்தாள். மறுபடியும் வார்த்தைகள் வெளிவரவில்லை.

"என்ன பாட்டி?"

பார்வதிக்கு முகமெல்லாம் வியர்த்தது. அவள் முந்தைய நாள் இரவெல்லாம் உறங்காமல் சிந்தித்து தான் பேத்தியிடம் சில உண்மைகளை தெரிவித்து விட தீர்மானித்திருந்தாள். ஆனாலும் அதை சொல்ல முற்படுகையில் ஏதோ தொண்டையை அடைத்தது. பொறுமையாக ஆர்த்தி தன் பாட்டி பேசக் காத்திருந்தாள்.

"ஆர்த்தி, உன்னோட அந்தக் கனவு...."

"சொல்லுங்க பாட்டி அதுக்கென்ன?"

"அது நீ நினைக்கற மாதிரி காரணமில்லாமல் வர்றதில்லை"

ஆர்த்தி திகைப்புடன் தன் பாட்டியைப் பார்த்தாள்.

"உன் அம்மா சாகறப்ப உனக்கு மூணு வயசு....அவ மரணம் இயற்கையாய் இருக்கலை....அது கொலையாய் இருக்கலாம்கிற சந்தேகம் எங்களுக்கு ஆரம்பத்தில் இருந்தே இருக்கு... அந்த சமயத்தில் நீ உங்கம்மா கூட இருந்திருக்கிறாய்.... உன் ஆழ்மனசில் அப்ப பதிஞ்சதெல்லாம் தான் இந்தக் கனவாய் வருதுன்னு அன்றைக்குப் பார்த்த டாக்டர் நினைக்கிறார்...எங்களுக்கும் அது சரியாக இருக்கலாம்னு தோணுது"

ஆர்த்தியின் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்று போனது.

# 2

Time is a test of trouble
But not a remedy.
-Emily dickinson

ஆர்த்தி அதிர்ச்சியிலிருந்து மீண்டவுடன் கேட்டாள். "என்ன பாட்டி சொல்றீங்க?....இதையேன் இவ்வளவு நாள் சொல்லாமல் வச்சிருந்தீங்க?"

பார்வதி குற்ற உணர்ச்சியுடன் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். "உன் தாத்தா உன் கிட்ட சொல்லவே கூடாதுன்னு முதல்ல இருந்தே பிடிவாதமாய் இருக்கார். உனக்கு தான் உன் தாத்தாவோட குணம் தெரியுமே. உண்மையை சொன்னா உனக்கு அதிர்ச்சியாகும்னு நினைச்சார். இன்னொரு பக்கம் உன்னை இழந்துடுவோமோன்னு பயப்பட்டார்...."

"என்னை இழந்துடுவோம்னா?...."

"நீ உங்கப்பா கிட்ட போயிடுவாயோன்னு பயந்தார்..."

ஆர்த்தி திகைப்புடன் தன் பாட்டியைப் பார்த்தாள். பார்வதி தலை குனிந்தபடியே சொன்னாள். "உன் அம்மா ஆனந்தி தான் உன் மூணாம் வயதில் இறந்தாலே ஒழிய உன் அப்பா உயிரோட தான் இருக்கார்....."

ஆர்த்திக்கு தலை சுற்றியது. தன்னுடைய சிறு வயதிலேயே பெற்றோர் இருவரும் ஒரு விபத்தில் இறந்து விட்டதாகவும் அதனால் தான் தன்னுடைய தாய்வழி தாத்தா பாட்டியுடன் வாழ்ந்து வருவதாகவும் நம்பி வந்திருந்த அவளுக்கு இந்தப் புதுத் தகவல்கள் பெரும் அதிர்ச்சியைத் தந்தன. "எல்லாத்தையும் தெளிவாய் ஆரம்பத்தில் இருந்து சொல்லுங்க பாட்டி"

பார்வதி தன் கணவன் வருவதற்கு முன் சொல்லி முடித்து விட எண்ணி சுருக்கமாய் சொன்னாள். "உங்கப்பா பெரிய பணக்காரர். ஊட்டியில் பெரிய எஸ்டேட்டும், கோயமுத்தூரில் பல கம்பெனிகளும், ஃபேக்டரிகளும் அவங்களுக்கு இருக்கு. அப்ப நாங்களும் கோயமுத்தூர்ல இருந்தோம். உன் அம்மாவும், அவரும் ஒரே காலேஜில் படிச்சாங்க. காதலிச்சாங்க. கல்யாணம் செய்துகிட்டாங்க. உன் அம்மா ஆரம்பத்தில் சந்தோஷமாய் தான் இருந்தாள். பிறகு கொஞ்சம்

கொஞ்சமாய் அந்த சந்தோஷம் வடிஞ்சு போனதை நாங்க பார்த்தோம். என்னன்னு கேட்டதுக்கு அவள் பதிலே சரியாய் சொல்லலை."

"உனக்கு மூணு வயசு இருக்கறப்ப ஊட்டி பக்கம் விடாம பேய் மழை அடிச்சு பல இடங்கள்ல நிலச்சரிவு ஆயிடுச்சு. உங்கம்மா ஆனந்தியும் அப்ப ஊட்டி எஸ்டேட் பங்களாவில் இருந்ததால் நாங்க கவலையோட போன் செஞ்சு கேட்டோம். வீட்டாளுங்க யாரும் இருக்கலை. உங்கம்மாவைக் காணோம்னும் தேடிகிட்டிருக்கிறதாகவும் ஒரு வேலைக்காரன் தான் சொன்னான். நாங்க பதறிப் போய் அங்கே உடனே போனோம். ரெண்டு நாள் அங்கேயே இருந்தோம். அப்பவும் அவளை தேடிகிட்டு தான் இருந்தாங்க. ரெண்டு நாள் கழிச்சு அவங்க எஸ்டேட் பக்கத்தில் நிலச்சரிவு ஆகியிருந்த இடத்தில் சிக்கி செத்திருந்ததாய் சொல்லி அவள் பிணத்தை எடுத்துட்டு வந்தாங்க. எங்களை முகத்தைப் பார்க்கக் கூட விடலை..... முகம் சிதிலமாயிடுச்சு, பார்த்தா தாங்க மாட்டீங்கன்னு சொல்லி மூடி எடுத்துகிட்டு வந்த பிணத்தை அவசர அவசரமாக அப்படியே எரிச்சுட்டாங்க..... எங்களுக்கு சந்தேகம் வந்தாலும் அந்த சமயம் ஒண்ணும் சொல்ல முடியலை.... அப்புறமாய் உனக்கு தொடர்ச்சியாய் வந்த கனவு உங்கம்மா மரணம் பத்தி முதல்ல எங்களுக்கு வந்த சந்தேகம் பொய்யில்லைன்னு நிரூபிச்சிடுச்சு...." பார்வதி சொல்ல சொல்ல அழுதாள். அவள் கடந்த காலத்துக்கே போய் விட்ட மாதிரி இருந்தது.

பின் தன்னை சுதாரித்துக் கொண்டு தொடர்ந்தாள். "அந்த நாள் அந்த ஊட்டி பங்களாவில் உன் அம்மா கூட இருந்தது நீயும் ஒரு வேலைக்காரியும் மட்டும் தான். அந்த வேலைக்காரி என்ன ஆனான்னு யாருக்கும் தெரியலை. பிரமை பிடிச்ச மாதிரி அங்கே அழக்கூட முடியாமல் நீ மட்டும் நின்னுட்டுருந்தாய். உங்கம்மாவை எரிச்ச மறு நாளே உன்னை கொஞ்ச நாள் வச்சிகிட்டிருந்து பிறகு அனுப்பறோம்னு சொல்லி எடுத்துகிட்டு வந்த நாங்க பிறகு அந்தப் பக்கம் எட்டிக்கூட பார்க்கலை. "

பாட்டி சொன்னதை ஜீரணிக்க ஆர்த்திக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. ஏதோ இரவல் வாங்கிக் கொண்டு வந்த புத்தகத்தைத் திருப்பித் தரவில்லை என்பது போல பார்வதி சொன்னது அவளுக்கு திகைப்பை ஏற்படுத்தியது. திகைப்போடு ஆர்த்தி கேட்டாள். "எங்கப்பா பிறகு என்னைத் தேடிகிட்டு வரலையா?"

பாட்டி குற்ற உணர்வோடு சொன்னாள். "கோயமுத்தூரில் உங்க தாத்தாவுக்கு ஒரு ஸ்கூல்ல வாத்தியார் வேலை இருந்தது. உன்னை எடுத்துட்டு வந்த பிறகு அவர் நிறைய யோசிச்சார். உன்னை அந்த கொலைகார குடும்பத்துக்கு திருப்பி அனுப்ப அவருக்கு மனசு வரலை. வேலையை ராஜினாமா செய்துட்டு, இருந்த வாடகை வீட்டையும் காலி செஞ்சுட்டு யாருக்கும் சொல்லிக்காம அங்கிருந்து என்னையும் உன்னையும் கூட்டிகிட்டு கிளம்பிட்டார். எங்க போறதுன்னு முடிவு செய்ய முடியலை. மனசெல்லாம் ரணம், குழப்பம். அரவிந்தாஸ்ரமத்து அன்னை மேல் இருந்த நம்பிக்கைல, இங்கே வழி கிடைக்கும்னு இந்தப் பாண்டிச்சேரிக்கு வந்தோம். அவருக்கு டியூஷன் ரூபத்தில் பிழைப்புக்கு வழி கிடைச்சது. பிறகு லைப்ரரியில வேலையும் கிடைச்ச பிறகு சுதாரிச்சுகிட்டோம். நாங்க இங்கே இருக்கிறோம்னு உங்கப்பாவுக்குத் தெரிவிக்கலை. அவங்களுக்குத் தெரியாமல் இங்கே நாம ஒளிஞ்சு வாழ்ந்திட்டிருக்கிறோம்...."

"என் மகள் இறந்ததுல எனக்கு துக்கம் இல்லாமல் இல்லை. ஆனா உன்னை உங்கப்பாகிட்டே இருந்து பிரிச்சு எடுத்துகிட்டு வந்ததில் எனக்கு ஒப்புதல் இல்லை. உன் தாத்தா கிட்டே அப்பவே இதை சொன்னேன். அப்ப நான் சொன்னதுக்கு அதுக்கு பதிலாய் விஷத்தை சாப்பாட்டுல கலந்து கொடுக்கச் சொன்னார். இந்த மாதிரி பேசினா நான் என்ன செய்ய முடியும் சொல்லு. உன் தாத்தாவுக்கு உணர்ச்சிவசப்பட்டு முடிவு எடுத்துட்டு, பிறகு அது தான் சரின்னு சாதிக்கிறது எப்பவுமே இருக்கிற கெட்ட பழக்கம். உன்னை எடுத்துகிட்டு வந்தது தான் உனக்கு செஞ்ச நல்ல

காரியம்கிறது அவர் எண்ணம். ஆனா உங்கப்பா குடும்பம் போலீசு மூலம் எங்களைத் தேடிகிட்டு எப்ப நம்ம வீட்டு வாசலில் நிற்குமோன்னு நான் ஆரம்பத்தில் நிறையவே பயந்துகிட்டிருந்தேன்..."

பார்வதியின் கண்களில் லேசாய் நீ கோர்த்தது. "பணம், செல்வாக்குன்னு ராணி மாதிரி இருக்க வேண்டிய உன்னை இந்த தீப்பெட்டி மாதிரி சின்னதாய் இருக்கிற மூணு ரூம் வீட்டில் வச்சு வளர்த்தினதில் எனக்கு நிறையவே வருத்தம் ஆர்த்தி. எமன் எப்ப கூப்பிடுவான்னு தெரியாமல் காத்துகிட்டிருக்கிற இந்த சமயத்தில் கூட நாங்க உன் கிட்ட உன் அப்பா பத்தி சொல்லாமல் இருக்கிறது சரியில்லைன்னு தான் உன் கிட்டே இதை சொன்னேன். எங்களுக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா உனக்கு யாரிருக்காங்கன்னு நான் பயப்படறேன்...."

ஆர்த்திக்கு பாட்டி சொன்னதையெல்லாம் ஜீரணிக்க இன்னும் கஷ்டமாகவே இருந்தது. எப்போதும் அர்த்தமில்லாமல் வரும் கனவு என்று அவள் நினைத்திருந்த அந்தக் கனவில் வரும் அந்தப் பெண்ணின் முகத்தை நினைவுக்குக் கொண்டு வர முயற்சித்தாள். அந்த பெண்ணின் உருவமே மங்கலாகத் தெளிவில்லாமல் இருந்ததால் தான் தினமும் பார்க்கும் தாயின் புகைப்படத்திற்கும் அந்தப் பெண்ணிற்கும் சம்பந்தம் இருக்கலாம் என்கிற சந்தேகம் கூட அவளுக்கு இத்தனை நாள் வரவில்லை என்பது புரிந்தது.

எத்தனையோ கேள்விகள் ஒருசேர மனதில் எழுந்தாலும் ஆர்த்தி ஒரு கேள்வியை முதலில் தேர்ந்தெடுத்தாள். "அம்மாவை யார் கொன்னாங்க பாட்டி?"

# 3

**சத்ரோரபி குணா வாச்யா**
**தோஷா வாச்யா குரோரபி – ஒரு சம்ஸ்கிருத ஸ்லோகம்**

[சத்ருவாய் இருந்தால் கூட குணத்தைப் பார்க்க வேண்டும். குருவாய் இருந்தால் கூட தோஷத்தைப் பார்க்க வேண்டும்]

பார்வதியால் உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. பின் கைகளை விரித்தபடி சொன்னாள். "தெரியலை.... ஆனால் பிணத்தை எடுத்துட்டு வந்ததில் இருந்து அவசர அவசரமாய் அதை எரிக்க ஏற்பாடு செய்தது வரை எல்லாமே உன் பெரியத்தை மேற்பார்வையில் நடந்ததால் உன் தாத்தா அவளைத் தான் சந்தேகப்படறார்....."

"பெரியத்தையா?" ஆர்த்தியின் கேள்வியில் இருந்த குழப்பத்தைப் பார்த்த பார்வதி விளக்கமாக சொல்ல ஆரம்பித்தாள்.

"தாயை சின்ன வயதிலேயே இழந்துட்ட உன் அப்பாவுக்கு இரண்டு அக்காக்கள் இருந்தாங்க. பெரியக்காவை அவர் அம்மா ஸ்தானத்திலேயே வச்சிருந்தார். அவங்கப்பாவும் அவர் மேஜராகறதுக்கு முன்னால் போய் சேர்ந்துட்டதால் வியாபாரம், சொத்து எல்லாத்தையும் கூட அவர் பெரியக்கா தான் ஆரம்பத்தில் பார்த்துகிட்டிருந்தாள். அப்புறமும் கூட எல்லாமே அவள் கட்டுப்பாட்டில் தானிருந்துச்சு. உன் அப்பா ஒரு ரப்பர் ஸ்டாம்பாக தானிருந்தார். அவளைக் கேட்காம அந்த வீட்டில் ஒரு அணு கூட அசையாதுங்கற அளவு உயரத்தில் பெரியக்காவை வச்சிருந்தார். அவள் சொல்லாமல் அவராய் செய்த காரியம் உங்கம்மாவைக் காதலிச்சதாய் தான் இருக்கணும்..."

ஆர்த்தி கேட்டாள். "அவங்களுக்கு அப்பா அம்மாவைக் காதலிச்சது பிடிக்கலையா?"

"அவள் இவங்க காதலுக்கு எதிராய் இருக்கலை. அவள் தான் எங்க கிட்ட வந்து தம்பிக்குப் பெண் கேட்டாள். கட்டின சேலையோட பெண்ணை அனுப்பினா போதும்னாள். நாங்களும் எங்க பொண்ணு மாதிரி அதிர்ஷ்டக்காரி உலகத்தில் இல்லைன்னு நினைச்சோம். கல்யாணத்துக்கு அப்புறம் உங்கம்மாவும் அவளைத் தலையில் வச்சு கொண்டாடினாள்..." சொல்லிக் கொண்டே வந்த பார்வதி நிறுத்தி பேத்தியிடம் கேட்டாள். "உனக்குத் தெரியுமா, உன் பெரியத்தை யாருன்னு?"

"தெரியலை"

"உங்க காலேஜ் டேயில் ஒரு சீஃப் கெஸ்ட்டாய் போன வருஷம் வந்தாளே ஒருத்தி.... நீ கூட அன்றைக்கு முழுசும் அவளைப் பத்தியே பேசிகிட்டிருந்தாயே...."

"சிவகாமியம்மாவா?" – ஆர்த்தியால் நம்ப முடியவில்லை.

ஆர்த்தியால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. "அவள் தான் உன் பெரியத்தை" பாட்டி சொன்ன போது அவள் நம்ப முடியாமல் திகைத்தாள். ஆனால் சந்திரசேகர் இண்டஸ்ட்ரீஸின் எக்சிகியூடிவ் டைரக்டர் சிவகாமியம்மாள் என்று அரங்கில் அறிமுகப்படுத்தப்பட்டு பலராலும் பாராட்டப்பட்ட அவளை இன்று வரை அவளால் மறக்க முடிந்ததில்லை என்பது உண்மை. தன் தந்தை சந்திரசேகர் தான் அந்த இண்டஸ்ட்ரீஸின் பெயரில் இருக்கும் சந்திரசேகர் என்பதையும் இப்போது தான் ஆர்த்தி அறிகிறாள்.

சென்ற வருடம் கல்லூரி நாளில் சிறப்பு விருந்தினராக வந்து மேடையில் அமர்ந்திருந்த சிவகாமி அப்போது அவளைக் காந்தமாய் கவர்ந்திருந்தாள். நல்ல உயரம், சிவந்த நிறம், கம்பீரமான அழகான தோற்றம், தன்னம்பிக்கை நிறைந்த பேச்சு, என எல்லாமே ஆர்த்தியை அன்று வசியப்படுத்தியது. பெண் சுதந்திரம், பெண்களின் முன்னேற்றம், என்று எல்லா மாணவிகளும் புத்துணர்ச்சி பெறும் வண்ணம் பேசி எல்லோரையும் அன்று சிவகாமி கவர்ந்தாள். அன்று மேடைக்கு முன்னால் மூன்றாவது வரிசையில் அமர்ந்திருந்த ஆர்த்தி மந்திரத்தால் கட்டுண்டது போல அந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.....

அவள் தான் தன் பெரியத்தை என்று அறிந்த இந்தக் கணம் தான் இன்னொரு உண்மை அவளுக்கு உறைத்தது. சிவகாமி மேடைக்கு வந்தது முதல் அங்கிருந்து கிளம்பும் வரை ஆர்த்தியை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். பேசும் போது அவளையே அதிக நேரம் பார்த்துப் பேசினாள். மற்ற நேரங்களிலும் அவளையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வை தன் மீது அதிக நேரம் விழுவது கூட அவளுக்குப் பெருமையாக அன்று இருந்தது. வீட்டுக்கு வந்து அன்று முழுவதும் ஆர்த்தி சிவகாமியம்மாவைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் பாட்டியும் தாத்தாவும் தர்மசங்கடத்துடன் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டிருந்ததன் அர்த்தமும் இப்போது தான் புரிந்தது. அவர்கள் முடிந்த வரை பேச்சை வேறு திசைகளில் திருப்பப் பார்த்தார்கள். ஆனால் ஒரு வித "ஹீரோ வர்ஷிப்"பில் இருந்த ஆர்த்தி அன்று திரும்பத் திரும்ப சிவகாமி பற்றியே பேசினாள்....தாத்தா முக்கிய வேலை இருப்பதாகச் சொல்லி வெளியே போனவர் நீண்ட நேரம் வரவேயில்லை.

"நீ அன்றைக்கு சிவகாமி பத்தி அவ்வளவு பெருமையாய் பேசிகிட்டுருந்தப்ப எங்களுக்கு உன் அம்மா ஞாபகம் தான் வந்தது. அவளும் அப்படி தான் சிவகாமி பத்தி வாய் நிறைய பேசுவாள்..." என்று பார்வதி சொன்னாள்.

தன் மனதைக் கவர்ந்திருந்த அந்த சிவகாமி ஒரு கொலைகாரியாக இருப்பாள் என்று நம்ப ஆர்த்திக்குத் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் யோசித்துப் பார்க்கையில் சிவகாமி வேறு விதங்களிலும் சந்தேகத்தைக் கிளப்பினாள். சென்ற வருடக் கல்லூரி நாளன்று ஆர்த்தி யார் என்று முதல் பார்வையிலேயே உணர்ந்து தான் சிவகாமி அவளைக் கவனித்தாள் என்று இப்போது ஆர்த்திக்கு உள்ளுணர்வு சொன்னது. அப்படியானால் பாட்டி சொன்னது போல் அவள் எங்கிருக்கிறாள் என்று அவளது தந்தை குடும்பத்திற்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. குறைந்த பட்சம் சிவகாமி, கண்டிப்பாக ஆர்த்தி பாண்டிச்சேரியில் இருப்பதை, தெரிந்து வைத்திருந்தாள் என்பதில் ஆர்த்திக்கு சந்தேகம் இருக்கவில்லை.

என்ன தான் ரப்பர் ஸ்டாம்பாக இருந்தாலும் தன் மகள் இருக்கும் இடம் தெரிந்த பிறகு ஒரு தந்தை வராமல் இருப்பார் என்பதை அவளால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. ஒன்று, சிவகாமி தன் தம்பியிடம் ஆர்த்தியைப் பார்த்த விஷயத்தை சொல்லாமல் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சிவகாமிக்கு அவளை யார் என்றே தெரியாமல் இருந்திருக்க வேண்டும். மறுபடியும் யோசித்துப் பார்த்த போதும் மனம் இரண்டாம் அனுமானத்தை ஏற்க மறுத்தது. ஆனந்திக்கும் அவளுக்கும் உள்ள உருவ ஒற்றுமை பார்வை உள்ளவனுக்குக் கண்டிப்பாகத் தெரியும். தெரிந்தும் சிவகாமி அதை ரகசியமாய் வைத்திருப்பது தான் உண்மை என்று பட்டது. அது ஏன் என்பதை அவளால் யூகிக்க முடியவில்லை.

பாட்டியிடம் கேட்க எத்தனையோ கேள்விகள் இருந்தன. பாட்டி கதைச் சுருக்கம் தான் சொன்னாளே ஒழிய முழுக்கதை இன்னும் தெளிவாக சொல்லவில்லை என்பதை ஆர்த்தி உணர்ந்தாள். மனதில் எழுந்த பிரதானமான கேள்வியைக் கேட்டாள்.

"அவங்க அம்மாவைக் கொல்ல என்ன காரணம் இருந்திருக்கக்கூடும் என்று நீங்க நினைக்கிறீங்க?"

"அது தான் குழப்பமாய் இருக்கு ஆர்த்தி. என்ன காரணம் இருக்க முடியும்னு எனக்கு இன்னும் புரியலை...." என்று பார்வதி சொல்லச் சொல்ல தாத்தாவின் குரல் இடைமறித்தது. "கடவுள் கொடுத்த மூளையை உபயோகிச்சுப் பாரு, புரியும்."

அப்போது தான் பாட்டியும் பேத்தியும் நீலகண்டனைக் கவனித்தார்கள். அவர் தன் மனைவியை சுட்டெரித்து விடுவது போல் பார்த்தார்.

## 4

The rising morn canot assure
That we shall end the day
For death stands ready at the door
To take our lives away
- Unknown

அந்த இறுக்கமான சூழ்நிலையிலும், எல்லா விதங்களிலும் அந்த தம்பதிகள் மாறுபடுவதை ஆர்த்தியால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. தாத்தா மாநிறம், நல்ல உயரம், ஆஜானுபாகுவான உடல்வாகு. பாட்டியோ நல்ல சிவந்த நிறம், குறைவான உயரம், ஒடிசல் தேகம்.

தோற்றத்தில் மட்டுமல்லாமல் குணாதிசயங்களிலும் நிறையவே இருவரும் மாறுபட்டார்கள். தாத்தா உணர்ச்சிகளால் உந்தப்படுபவர். பாட்டியோ சிந்தித்து செயல்படுபவள்..... நான்கு வார்த்தைகள் சேர்ந்தாற்போல் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டால் ஐந்தாவது வார்த்தை சண்டையில் தான் முடியும் என்பது ஆர்த்தியின் அனுபவ அறிவு. அதைப் பொய்யாக்க விரும்பாதது போல் பார்வதி கோபத்துடன் சொன்னாள். "கடவுள் எனக்கு மூளையை வைக்கலை. எனக்கும் சேர்த்து உங்களுக்குத் தானே வச்சிருக்கார். சொல்லுங்க, உங்க பேத்தி கேட்கட்டும்"

"மூளை இருந்தால் இதையெல்லாம் அவ கிட்ட சொல்லுவாயா? சொல்ல வேண்டாம்னு படிச்சுப் படிச்சு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்"

"நாம என்ன சிரஞ்சீவிகளா? எமன் கூப்பிடு தூரத்தில் இருக்கான். அவன் நம்மளை கூட்டிட்டு போறதுக்கு முன்னாடி நாம அவள் கிட்ட அவங்கப்பா பத்தி சொல்லி அவர் கிட்ட சேர்த்துடறது நல்லதில்லையா"

"எதுக்கு? அவளோட அம்மாவைக் கொன்னுட்ட மாதிரி இவளையும் அவங்க கொன்னுடறதுக்கா?"

"இவளை ஏன் கொல்லப் போறாங்க?"

"சொத்துக்காக தான். வேறென்ன. இவங்கப்பாவுக்கு இரண்டாம் தாரத்திலும் குழந்தை இல்லை. இப்ப எல்லா சொத்துக்கும் இவள் தான் வாரிசு" என்று ஆக்ரோஷமாக தெரிவித்த நீலகண்டன் ஆர்த்தியிடம் சொன்னார். "நீ கேட்டதுக்கு நான் பதில் சொல்றேன்மா. உங்கம்மா ஏழ்மை நிலையில் வளர்ந்தாலும் பிடிவாதக்காரி. யாருக்கும் அவ்வளவு சீக்கிரம் வளைந்து கொடுக்கிற ரகம் அல்ல. என்னை மாதிரி. கிட்டத்தட்ட எல்லாத்தையும் தன் கைப்பிடிக்குள் வச்சிருக்கிற சிவகாமிக்கு உங்கம்மா ஒத்துப் போகாமல் இருந்திருக்கலாம். உங்கப்பாவும் மனைவி பக்கம் சாய்கிற மாதிரி இருந்திருக்கலாம். நிலைமை கை மீறிப் போகிறதுக்கு முன் உங்கம்மாவை தீர்த்துக் கட்ட அந்த ராட்சஸி முடிவெடுத்திருக்கலாம்....." தாத்தாவுக்கு சிவகாமியைப் பற்றிப் பேசப் பேச இரத்தக் கொதிப்பு அதிகமானது போல் தோன்றியது. பேச்சில் ஆக்ரோஷம் அதிகரித்தது.

"ஆனந்தி எதுவும் நம்ம கிட்ட சொல்லவேயில்லையே...."

தாத்தா மனைவியை இடைமறித்து சொன்னார். "பெத்தவங்க கிட்ட சொல்லி அவங்க மனசைப் புண்படுத்த வேண்டாம்னு நினைச்சிருப்பாள். அதனால் சொல்லலை. எனக்குத் தெரியும், என் குழந்தை மனசு....ஆனா அவள் ஏதாவது சொல்லியிருந்தா நாங்க கண்டிப்பா உன்னை எடுத்துகிட்டு வந்த மாதிரி அவளையும் கூட்டிகிட்டு வந்திருப்போம். யாருக்கு வேணும் காசு பணம்? ஆனா எதுவும் சொல்லாமல் மனசுக்குள் இருந்ததையெல்லாம் மூடி வச்சுட்டே இருந்துட்டு முகத்தைக் கூட கடைசியாய் காட்டாம ஓரேயடியாய் போயிட்டாள்....." தாத்தா சொல்லச் சொல்ல கண் கலங்கினார். துக்கத்தால் உடைந்து போனார். திடீர் என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

பார்வதி வேகமாய் வந்து அவரைப் பிடித்துக் கொண்டு "என்ன ஆச்சுங்க" என்று கேட்டாள்.

"பார்வதி எனக்கு நெஞ்சடைக்கற மாதிரி இருக்கு...." சொன்னவர் மனைவி மீது சாய்ந்தார்.

டாக்டர் ஆர்த்தியை தனியாக அழைத்துச் சொன்னார். "இதயத்தில் மூன்று இடங்களில் அடைப்பு இருக்கும்மா. எவ்வளவு சீக்கிரம் பை பாஸ் சர்ஜரி செய்ய முடியுமோ அவ்வளவு நல்லது. இல்லாட்டி உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம்"

ஆர்த்தி பயந்து கொண்டே கேட்டாள். "எவ்வளவு செலவாகும்?"

"கிட்டத் தட்ட ரெண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் ஆகும். ஏதாவது மெடிக்கல் இன்ஷூரன்ஸ் செஞ்சிருக்கீங்களா?"

இல்லை என்று ஆர்த்தி தலையசைத்தாள். டாக்டர் அடுத்த ஃபைலை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தபடி தலையை நிமிர்த்தாமல் சொன்னார். "பணம் உடனடியாய் ரெடி செய்ய முடிஞ்சா சொல்லும்மா. இல்லாட்டி நீங்க நாளைக்கே அவரை டிஸ்சார்ஜ் செய்துக்கலாம்"

கண்ணில் தழும்ப ஆரம்பித்த நீரைத் துடைத்துக் கொண்டு ஆர்த்தி வெளியே வந்தாள். பார்வதி தன் பேத்தியை ஆவலோடு பார்த்தாள். "டாக்டர் என்ன சொல்றார்? பயப்பட ஒண்ணும் இல்லை தானே?"

"ஆபரேஷன் செய்தால் நல்லதுங்கறார்"

"எவ்வளவு ஆகுமாம்?"

ஆர்த்தி தொகையைச் சொன்னவுடன் பார்வதியின் முகம் வெளிறியது. "வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் எந்த நேரத்தில் எமன் பக்கத்தில் இருக்கான்னு சொன்னேனோ தெரியலை இப்படி வாசல்ல வந்து நிற்கறான். எத்தனை நாள் லக்ஷ்மி ஷோபானம் படிச்சிருப்பேன். அவள் பார்வையைக் கூட இந்தப் பக்கம் திருப்பலை". எழுந்து போய் ஆஸ்பத்திரியின் ஐ.சி.யூ கண்ணாடி வழியாக கண்கலங்க கணவனைப் பார்த்தாள். மறுபடி வந்து ஆர்த்தி அருகில் அமர்ந்தாள். "மனுஷன் வலி கொஞ்சமும் தாங்க மாட்டாரே. எப்படி இருக்கோ தெரியலையே"

பாட்டியைப் பார்க்க ஆர்த்திக்குப் பாவமாக இருந்தது. என்ன தான் சண்டை போட்டாலும் அந்த முதிய தம்பதிகள் இருவருக்கும் இடையே இருந்த அன்பு ஆழமானது என்பதையும் ஆர்த்தி அறிவாள். தாத்தாவைக் காப்பாற்ற என்ன வழி என்று யோசிக்கையில் அவளுக்கு ஒரே ஒரு வழி தான் கண் முன் தெரிந்தது.

"பாட்டி நான் என் அப்பா கிட்ட பணம் கேட்டுப் பார்த்தால் என்ன?"

பார்வதி இருதலை கொள்ளி எறும்பாகத் தவித்தாள். நிறைய யோசித்து விட்டுப் பேத்தியைக் கேட்டாள். "திடீர்னு எப்படிப் போய் கேட்பாய்? என்ன சொல்வாய்? அவங்க கோயமுத்தூர்லயோ, ஊட்டியிலயோ இருப்பாங்க. நம்ம கிட்ட போன் நம்பர் கூட இல்லையே."

ஆர்த்தி வெளியே உள்ள டெலிபோன் பூத்திற்கு போய் தன் கல்லூரி முதல்வருக்குப் போன் செய்து சிவகாமி அம்மாளின் ஆபீஸ் அல்லது வீட்டு போன் நம்பர் தர முடியுமா என்று கேட்டாள். நல்ல வேளையாக கல்லூரி முதல்வர் தன் விசிட்டிங் கார்டுகள் சேமித்து வைத்திருந்த தொகுப்பில் தேடி எடுத்து மூன்று எண்களைச் சொன்னார். ஆர்த்தி ஊட்டி வீட்டு எண்ணிற்குப் போன் செய்தாள்.

"ஹலோ சந்திரசேகர் இருக்கிறாரா"

"அவர் கோயமுத்தூர் ஆபீசில் இருக்கார். நீங்க யார் பேசறது?"

பதில் சொல்லாமல் இணைப்பைத் துண்டித்து ஆர்த்தி கோயமுத்தூர் ஆபிசிற்குப் போன் செய்தாள்.

"ஹலோ சந்திரசேகர் இருக்கிறாரா?"

டெலிபோன் ஆபரேட்டர் சந்திரசேகரின் செகரட்டரிக்கு இணைப்பு கொடுத்தாள். அந்த செகரட்டரியோ எடுத்தவுடன் யார் பேசுவது என்று கேட்டாள். ஆர்த்திக்கு சிறிது நேரம் தொண்டையை அடைத்தது. பிறகு சொன்னாள். "நான் அவர் மகள் பேசறேன்"

அந்த செகரட்டரியின் குழப்பம் அவளது அடுத்த கேள்வியில் தெரிந்தது. "உங்களுக்கு எந்த சந்திரசேகர் வேணும். இது மேனேஜிங் டைரக்டர் சந்திரசேகர் ஆபிஸ்"

"நான் அவர் மகள் தான் பேசறேன்"

"உங்களுக்கு விளையாட வேறு ஆள் கிடைக்கவில்லையா?" என்று கோபத்துடன் கேட்ட அந்த செகரட்டரி போன் இணைப்பை உடனடியாக துண்டித்தாள்.

தன் துர்ப்பாக்கிய நிலையை எண்ணி வருந்திய ஆர்த்தி இனி என்ன செய்வது என்று யோசித்தாள்.

# 5

The moment an individual succumbs to the fear of making a fool of himself, he loses all chances of acting heroically.

-Miguel De Unamuno

ஆனால் அவளால் மேலும் தயங்க முடியவில்லை. தாத்தாவின் உடல்நிலை மேலும் யோசிக்க விடவில்லை. மறுபடியும் அந்த செகரட்டரியை போனில் அழைத்து அவசர அவசரமாக சொன்னாள். "தயவு செஞ்சு போனை வச்சுடாதீங்க. அவருக்கு போனை கனெக்ட் செய்தா நான் அவர் கிட்ட பர்சனலா சொல்லிக்கறேன். இது எமர்ஜென்சி....ப்ளீஸ்..."

சொல்லி விட்டு ஆர்த்தி சகல இஷ்ட தெய்வங்களையும் பிரார்த்தித்தாள். செகரட்டரி சொன்னாள். "அவர் வெளியே போய் இருக்கார். நீங்க யார் பேசறீங்க? உண்மையை சொல்லுங்க"

"சொன்னேனே. அவர் மகள் பேசறேன்"

"எங்க பாஸுக்குக் குழந்தைகளே இல்லை. நீங்க தவறான இடத்துக்கு போன் செஞ்சு உங்க நேரத்தையும், பணத்தையும் வீணாக்கிறீங்கன்னு நினைக்கிறேன்" செகரட்டரி போனை வைத்து விட்டாள்.

ஆர்த்தி போனை வைத்து விட்டுக் கையைப் பிசைந்தாள். அவளுக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை. போனில் கூட நெருங்க முடியாத அளவு தூரத்திலும், உயரத்திலும் அவள் தந்தை இருப்பதை ஜீரணிக்க சிறிது நேரம் தேவைப்பட்டது. மறுபடி ஆஸ்பத்திரிக்குத் திரும்பினாள். பாட்டி ஆவலாக அவளைப் பார்த்த போது அவளுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. பாட்டியிடம் மெல்ல நடந்ததைச் சொன்னாள்.

"நேரில் போனாலும் அப்பாயின்மெண்ட் இல்லாம அவங்களை எல்லாம் அவ்வளவு சீக்கிரம் பார்க்க முடியாதும்மா....போன்ல சொல்லவே தேவையில்லை..." பாட்டி விரக்தியுடன் சொன்னாள். அவளுக்கு அமைதியாக உட்கார முடியவில்லை. மறுபடி எழுந்து ஐ.சி.யூ கண்ணாடி வழியாக கணவனைப் பார்த்தபடி சிறிது நின்று விட்டு வந்தாள்.

ஆர்த்திக்கு நேரம் செல்லச் செல்ல மனம் பதைத்தது. தாத்தாவைக் காப்பாற்ற வழி எதுவும் புலப்படவில்லை.

"உங்கப்பா போனில் கிடைச்சிருந்தா கூட உன்னை வேணும்னா வந்து கூட்டிகிட்டு போயிருக்கலாம். உன் தாத்தாவைக் காப்பாற்ற எதுவும் செய்வார்ங்கிற நம்பிக்கை எனக்கில்லை. அவருக்கு உங்கம்மா வேண்டியிருந்ததே தவிர எங்கள் ரெண்டு பேரையும் எப்பவுமே மதிச்சதில்லை. ஏதாவது உபகாரம் செய்யணும்னா சிவகாமி செய்யலாம். கொஞ்சமாவது தர்மசிந்தனை இருக்கிறது அந்த வீட்டுல அவளுக்குத் தான். ஆனா அவள் கிட்ட பேச முடியறது அதை விடக் கஷ்டம்"

இந்த இக்கட்டான நேரத்திலும் ஆர்த்திக்கு சிவகாமி பற்றிய தகவல்கள் குழப்பின. சிவகாமி பற்றி முரண்பாடான தகவல்களாக அவளுக்கு இவர்கள் சொல்கிறார்கள். தாத்தா ராட்சஸி என்கிறார்; பாட்டியோ அந்த வீட்டிலேயே அவள் தான் தர்மசிந்தனை உள்ளவள் என்கிறாள். அம்மா சிவகாமியைப் பற்றி எப்போதும் வாய் நிறையப் பேசுவாள் என்று பாட்டி சொல்கிறாள். ஆனால் தாத்தா பாட்டி இருவருமே அவள் தான் அம்மா பிணத்தை அவசர அவசரமாக எரித்தாள் என்கிறார்கள். ஆர்த்தி இருக்கும் இடம் தந்தைக்கும் சிவகாமிக்கும் தெரியாது என்று பாட்டி தாத்தா நம்புகிறார்கள். ஆனால் சிவகாமி அன்று கல்லூரி விழாவில் அவளைக் கூர்ந்து பார்த்த விதம் அவள் யார் என்று உணர்ந்ததைத் தான் காட்டியது. முன்பே அவளைக் கவர்ந்திருந்த சிவகாமி இப்போது புதிராக 'என்னைக் கண்டுபிடி பார்க்கலாம்' என்பது போல் ஆர்த்தி மனதில் விஸ்வரூபம் எடுத்து நின்றாள்.

உடனடியாக ஏதாவது செய்தால் ஒழிய தாத்தாவைக் காப்பாற்ற முடியாது என்கிற இக்கட்டான இந்தக் கட்டத்தில் ஆர்த்திக்கு சிவகாமிக்குத் தான் போன் செய்து பார்க்கலாமே என்று தோன்ற பாட்டியிடம் தன் எண்ணத்தை வாய் விட்டுச் சொன்னாள்.

பாட்டி கவலையோடு முன்பு சொன்னதையே திருப்பிச் சொன்னாள். "உங்கப்பா கிட்டவே உன்னால் பேச முடியலை. சிவகாமி கிட்ட பேச முடியறது இன்னும் கஷ்டம் தான் ஆர்த்தி."

"ஆனா முயற்சி செய்யறதில் தப்பில்லையே பாட்டி. அப்புறமா அவங்க கிட்ட பேசியிருந்தா தாத்தாவைக் குணப்படுத்தி இருக்கலாம்னு மனசுல உறுத்தக் கூடாது இல்லையா. காரியம் ஆகாட்டியும் போன் செய்யற செலவைத் தவிர வேற நஷ்டம் இல்லையே"

பாட்டி தயக்கத்துடன் தலையசைத்தாள். "அந்த மனுஷனுக்குத் தெரிஞ்சா கத்துவார்.... பரவாயில்லை செஞ்சு பார்"

மறுபடியும் வெளியே டெலிபோன் பூத்திற்கு வந்து தந்தையின் கோயமுத்தூர் ஆபிசிற்குப் போன் செய்தாள். டெலிபோன் ஆபரேட்டரிடம் சிவகாமி அம்மாளிடம் பேச வேண்டும் என்று சொன்னாள். இந்த முறை டெலிபோன் ஆபரேட்டர் சிவகாமியின் செகரட்டரிக்குக் கூட உடனடியாகக் கொடுக்கவில்லை. "நீங்க யார்னு அவங்க செகரட்டரி கிட்ட சொல்லட்டும்?" என்று கேட்டாள். ஆக வடிகட்டும் வேலை சிவகாமி விஷயத்தில் ஆபரேட்டர் இடத்திலேயே ஆரம்பமாகிறது என்பதை ஆர்த்தி உணர்ந்தாள். பாட்டி சொன்னது போல சிவகாமியை அணுகுவது மேலும் கஷ்டமான விஷயம் என்பது உறுதியாகியது. அவளுடைய செகரட்டரியிடம் பேசுவதே பெரும்பாடாக இருக்கும் போலத் தெரிகிறது. உண்மையான உறவைச் சொன்னால் கண்டிப்பாக நம்பவோ, போன் கனெக்க்ஷன் தரவோ

மாட்டார்கள் என்பதை அனுபவம் சொன்னதால் வேறு என்ன சொல்வது என்று மூளையைக் கசக்கிக் கொண்டவள், பின்பு அவசரமாகச் சொன்னாள். "நான் ஆர்த்தி பேசறேன். பாண்டிச்சேரியில் இருந்து. அவங்க கிட்ட அவசரமாய் பேசணும்"

டெலிபோன் ஆபரேட்டர் ஒரு நிமிட அமைதிக்குப் பின்னால் சொன்னாள். "மேடம், அவங்க செகரட்டரி எல்லாம் பிசியாய் இருக்காங்கம்மா. நீங்க தெளிவாய் என்ன விஷயமாய் பேசறீங்கன்னு சொன்னால் தான் கனெக்ஷன் தரமுடியும்"

"அவங்க சொந்தக்காரர் ஒருத்தர் ஆஸ்பத்தியில் சீரியசாய் இருக்கார். அவர் உயிர் பிழைக்கறதும், பிழைக்காததும் மேடம் கையில் தான் இருக்கு. ப்ளீஸ் கொஞ்சம் தயவு பண்ணுங்க" சொல்லச் சொல்ல அவளுக்கு அழுகை வந்தது. அந்த அழுகை சத்தம் அந்த டெலிபோன் ஆபரேட்டரை நெகிழ்த்தி இருக்க வேண்டும். வேறொன்றும் சொல்லாமல் அவள் இணைப்பைக் கொடுத்தாள்.

"ஹலோ" ஒரு ஆணின் குரல் கேட்டது.

"நான் சிவகாமி அம்மா கிட்ட பேசணும்"

"உங்க போனை மேடம் எதிர்பார்த்துட்டு இருக்காங்களா?"

"இல்லை...."

"நீங்க யார்?"

"நான் ஆர்த்தி. பாண்டிச்சேரியில் இருந்து பேசறேன். ஒருத்தர் ஆஸ்பத்திரியில் உயிருக்குப் போராடிகிட்டிருக்கார்... மேடம் கிட்ட அவசரமாய் பேசணும். ப்ளீஸ்....."

அழுகையுடன் வந்த பேச்சைக் கேட்ட அந்த செக்ரட்டரி ஒரு கணம் தயங்கினார். பின் சொன்னார். "ஏதாவது உதவி சம்பந்தமாய் பேசணும்னா நான் சொல்ற நம்பர் நோட் பண்ணிக்குங்க. அது அவங்க டிரஸ்ட்....."

அவசரமாக ஆர்த்தி இடை மறித்தாள். "சார். நாங்க மேடமோட உறவுக்காரங்க. ஒரே ஒரு தடவை பேச அனுமதிச்சீங்கன்னா உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும். ப்ளீஸ்.....ஆர்த்தி, பாண்டிச்சேரின்னு சொல்லுங்க. அவங்களுக்குத் தெரியும்"

"யாரு சீரியசாய் இருக்காங்கன்னு சொன்னீங்க"

"எங்க தாத்தா, பேர் நீலகண்டன்"

செகரட்டரி மேலும் தயங்கினார். ஆனால் அவள் குரலில் தொனித்த ஏதோ ஒன்று எதற்கும் மேடத்திடம் சொல்லிப் பார்க்க எண்ணியது. "கொஞ்சம் வெயிட் பண்ணுங்க" என்றவர் சிவகாமி அம்மாவிடம் இண்டர்காமில் சொன்னார். "மேடம். யாரோ ஆர்த்தியாம். பாண்டிச்சேரியில் இருந்து பேசறாங்க. உங்க சொந்தக்காரங்கன்னு சொல்றாங்க. அவங்க தாத்தா நீலகண்டன் ஆஸ்பத்திரியில் சீரியசாய் இருக்காங்களாம். உங்க கிட்ட பேசணும்கிறாங்க..."

# 6

Have faith in God. Therefore, I say unto you what things soever you desire, when you pray, believe that you receive them and you shall have them. – Jesus Christ

எதுவும் தீர்மானமாகச் சொல்லாமல் "கொஞ்சம் வெயிட் செய்யுங்க" என்று செக்ரட்டரி சொன்ன பிறகு ஒவ்வொரு வினாடியும் ஆர்த்திக்கு யுகமாக நகர்ந்தது. மனம் திக் திக் என்றது. சிவகாமி பேசுவாளோ, மாட்டாளோ என்ற சந்தேகம் வந்தது. கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் வந்தது. மனமுருக கடவுளைப் பிரார்த்தித்தாள். "கடவுளே தாத்தாவைக் காப்பாற்று" என்று திரும்பத் திரும்ப மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

சிறு வயதிலேயே அவளைத் தூக்கிக் கொண்டு வந்தது தாத்தாவின் முட்டாள் தனமான செய்கையாக இருக்கலாம். ஆனால் அதன் காரணம் அவள் மேல் இருந்த பாசம் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தத் தள்ளாத வயதிலும் கஷ்டப்பட்டு சம்பாதித்து, அவளை வளர்த்து படிக்க வைத்தார் என்பதும் உண்மை. இன்று அவர் ஒன்றும் முடியாமல் படுத்திருக்கிறார். இப்போதும் அவளால் அவரைக் காப்பாற்ற எதுவும் செய்ய முடியா விட்டால் அவளையே அவளால் மன்னிக்க முடியாது.

ஒரு வேளை சிவகாமி பேசினால் என்ன சொல்வது என்று மனதில் ஒத்திகை பார்த்தாள். எதுவும் சரியாய் வரவில்லை. "கடவுளே... கடவுளே... அவங்க பேசணும்... உதவி செய்யணும்....நீ தான் அவங்களுக்கு அந்த எண்ணத்தை ஏற்படுத்தணும்....". வழக்கமாய் வாரத்தில் திங்களும், வெள்ளியும் பிள்ளையார் கோயிலுக்குப் போவது வழக்கம். சென்ற வாரம் ஏதோ சில்லறைக் காரணங்களுக்காக போகாமல் இருந்தது நினைவுக்கு வர "கடவுளே நான் போன வாரம் கோயிலுக்கு வரலை. அதையெல்லாம் மனசில் வச்சுக்காதே. ப்ளீஸ், காப்பாத்து" என்றும் வேண்டிக் கொண்டாள்.

"ஹலோ நான் சிவகாமி பேசறேன்" என்ற கணீர் குரல் காதில் விழுந்தவுடன் ஆர்த்தி சிறிது நேரம் பேச்சிழந்து போனாள்.

"ஹலோ" என்று இன்னொரு முறை சிவகாமி சொல்ல, 'ஐயோ கீழே வைத்து விடப்போகிறாள்' என்கிற பயம் தொற்றிக் கொள்ள அவசரமாக ஆர்த்தி பேசினாள். "நான்.... நான்.... ஆர்த்தி பேசறேன்....தாத்தாவுக்கு ஹார்ட் அட்டேக்.... ஆஸ்பத்திரியில் இருக்கார்....ஆபரேஷன் செய்ய ரெண்டு லட்சம் ஆகும்னு டாக்டர் சொல்றார்... எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை..." அதற்கு மேல் அவளுக்குப் பேச்சு வரவில்லை. அழுகை தான் வந்தது. அவள் வாய் விட்டு அழுதாள். இப்போதும் அவளை சிவகாமி அங்கீகரிக்காவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளை ஆட்கொண்டது.

ஆனால் சிவகாமியின் குரல் அமைதியாக வந்தது. "நீ அழுதாத் தான் உன் தாத்தா பிழைச்சுக்குவாரா"

ஆர்த்தி தன்னை சுதாரித்துக் கொண்டு சொன்னாள். "இல்லை.... நான்...."

சிவகாமி அவளைப் பேச விடவில்லை. "ஆஸ்பத்திரி பெயர் என்ன?". ஆர்த்தி சொன்னாள்.

"டாக்டர் பெயர் என்ன?" ஆர்த்தி சொன்னாள்.

"டாக்டர் என்ன சொன்னார்?" ஆர்த்தி டாக்டர் சொன்னதை அப்படியே சொன்னாள்.

"நீ எங்கேயிருந்து பேசுகிறாய்?" "வெளியே டெலிபோன் பூத்தில் இருந்து"

"ஆஸ்பத்திரி போன் நம்பர் என்ன?" ஆர்த்திக்குத் தெரியவில்லை. "தெரியலை"

"பரவாயில்லை. பயப்படாதே. பணத்தாலயும், ஆபரேஷனாலயும் அவரைக் குணப்படுத்த முடியும்னா, அவரைக் குணப்படுத்தறது என் பொறுப்பு. உன் பாட்டி எப்படியிருக்காங்க?"

"நல்லாயிருக்காங்க. ஆஸ்பத்திரியில் இருக்காங்க"

"நீ போய் ஆஸ்பத்திரி ரிசப்ஷன் கிட்ட நில்லு. நான் டாக்டர் கிட்ட பேசிட்டு உனக்கு போன் செய்யறேன்.

போனை வைத்த போது ஆர்த்திக்கு எல்லாம் கனவு மாதிரி இருந்தது. கனவில் நடப்பது போல் ஆஸ்பத்திரியை நோக்கி நடந்தாள்.

கடவுள் அவளைக் கைவிடவில்லை. சிவகாமி உணர்ச்சி வசப்படும் நபர் அல்ல என்பது அவள் பேச்சிலேயே நன்றாகத் தெரிந்தது. அவள் இப்போதும் அவளை அசத்தினாள். ஆர்த்தியா, பாண்டிச்சேரியா, நீ யார் என்கிற ஆச்சரியக் கேள்விகள் இல்லாதது அவளை சென்ற ஆண்டுக் கல்லூரி விழாவில் அவள் அடையாளம் அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தியது. அவளை இத்தனை நாட்கள் அழைத்துச் செல்ல வராதது ஏன்? இப்போது போன் செய்ததும் எல்லா உதவிகளும் உடனடியாகச் செய்ய தயாராய் இருப்பது ஏன்? ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறதே! இப்போதும் அவளை சிவகாமி குழப்பினாள். பாட்டியிடம் சொல்வதற்கு முன் சிவகாமி உதவி செய்வாள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது என்று தோன்ற ஐ சி யூ அருகே போகாமல் ரிசப்ஷன் அருகே வந்து நின்றாள்.

சில நிமிடங்களில் அவளிடம் முன்பு பேசிய டாக்டர் அவசர அவசரமாய் அவளிடம் வந்து பேசினார். "நீங்க சிவகாமி அம்மா ரிலேடிவ்வா. என் கிட்ட முதல்லயே சொல்லியிருக்கலாமே. அவங்க டிரஸ்ட் ஸ்காலர்ஷிப்பில் தான் நான் படிச்சேன். ஆபரேஷன் செலவை அவங்களே பார்த்துக்கறதா சொல்லிட்டாங்க. கவலைப் படாதீங்க. எல்லாத்தையும் உடனடியா செஞ்சிடலாம்." திரும்பி ட்யூட்டி டாக்டரிடமும், நர்சிடமும் அவசரமாக உத்தரவுகள் பிறப்பித்தார். "பேஷண்ட் நீலகண்டனை ஸ்பெஷல் ஐ.சி.யூக்கு மாத்திடுங்க. இவங்களுக்கு ஸ்பெஷல் ரூம் ஒதுக்கிடுங்க. அவரோட டெஸ்ட் ரிப்போர்ட்டெல்லாம் உடனடியா என் டேபிள்ல வைங்க....."

ஆர்த்திக்கு எல்லாம் மலைப்பாக இருந்தது. தலையைக் கூட நிமிர்த்தாமல் பணம் அல்லது டிஸ்சார்ஜ் அன்று கறாராகப் பேசிய டாக்டர் மாறிய விதத்தை நம்ப முடியவில்லை. ரிசப்ஷனிஸ்ட் அலறிய போனை எடுத்துப் பேசி ஆர்த்தியை அழைத்தாள். "உங்களுக்கு ஃபோன்". அவள் குரலிலும் டாக்டர் பேசியதைக் கேட்ட பிறகு தனி மரியாதை தெரிந்தது.

"ஹலோ ஆர்த்தி. டாக்டர் கிட்ட பேசிட்டேன். அவர் எல்லாம் பார்த்துக்குவார். கவலைப்படாதே. நான் என் மகன் ஆகாஷை அனுப்பறேன். பாக்கியெல்லாம் அவன் பார்த்துக்குவான். என் செல் நம்பர் தர்றேன். அவன் வர்றதுக்குள்ள ஏதாவது அவசரம்னா எனக்கு போன் செய். நம்பர் நோட் செய்துக்கறியா....."

ஆர்த்தி அந்த செல் நம்பரை குறித்துக் கொண்டாள். ஆர்த்திக்கு நன்றி சொல்லக்கூட நேரம் தராமல் சிவகாமி போனை வைத்து விட்டாள். ஆர்த்தி நடந்த அதிசயத்தைப் பாட்டியிடம் சொல்ல ஓடினாள்.

சிவகாமி போனை வைத்து விட்டு சிறிது நேரம் ஆழ்ந்த யோசனை செய்தாள். பின் இண்டர்காமில் செக்ரட்டரியிடம் சொன்னாள். "ஒரு அரை மணி நேரத்துக்கு என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்."

பின் தம்பியை பர்சனல் இண்டர்காமில் அழைத்தாள். "சந்துரு. கொஞ்சம் பேச வேண்டி இருக்கு வா"

ஒரு நிமிடத்தில் சந்திரசேகர் தமக்கையின் அறைக்கு வந்தார். "என்னக்கா"

"உட்கார்"

அவள் எதிரே அமர்ந்தவர் கேட்டார். "என்னக்கா அந்த சிங்கப்பூர் பார்ட்டி திரும்ப போன் செய்தாங்களா?"

தம்பியைக் கூர்ந்து பார்த்தபடி சிவகாமி சொன்னாள். "இல்லை. உன் மகள் தான் பாண்டிச்சேரியில் இருந்து போன் செஞ்சா"

சந்திரசேகர் ஒரு நிமிடம் கண்ணை மூடிக் கொண்டு இருந்தார். அவர் உள்ளத்தில் கொந்தளித்த உணர்ச்சிகளை முகம் கண்ணாடியாகக் காட்டியது. அக்காவைப் போல் அவற்றை முகத்திற்குக் கொண்டு வராத வித்தை அவருக்கு இன்னும் வரவில்லை.

# 7

**பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து**
**ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்,**
**வரிசிலை அண்ணனும் வாள்கண் நங்கையும்**
**இருவரும் மாறிபுக்கு இதயம் எய்தினார்.**
**–கம்ப இராமாயணம்**

நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டு பாட்டி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். "மகராசி அவள் நல்லாயிருக்கட்டும்" என்று குரல் தழுதழுக்க சிவகாமியை வாழ்த்தினாள்.

ஆர்த்தி புன்னகையுடன் கேட்டாள். "ஏன் பாட்டி நீங்க மகராசிங்கிறீங்க, தாத்தா ராட்சஸிங்கிறார். இதில் எது நிஜம்?"

பார்வதி பேத்தியைப் பார்த்து லேசாக சிரித்தாள். சமீபத்தில் பாட்டியின் முன் வரிசைப் பல் ஒன்று போனதில் இருந்து பாட்டி சிரிக்கும் போது அழகு கூடியது போல் ஆர்த்திக்குத் தோன்றியது. "உங்கம்மாவை எரிச்ச நாள் அவள் அவசரமாய் நடந்துகிட்டாள்ங்கிறதுல சந்தேகம் இல்லை. அது எனக்கே கேள்விக் குறியாய் தான் இருக்கு ஆர்த்தி. ஆனா அவள் ஆரம்பத்தில் இருந்து எங்க கிட்டயும் உன் அம்மா கிட்டயும் நல்லபடியாய் தான் நடந்துகிட்டாள். உங்கப்பாவும் சரி உன் சின்னத்தையும் சரி ஏதோ பிச்சைக்காரங்களைப் பார்க்கிற மாதிரி எங்களைப் பார்ப்பாங்க. ஆனா அவள்

ஒரு நாள் கூட எங்களை அப்படி நடத்தினதில்லை. உன் அம்மா வாழ்ந்த நாள் வரைக்கும் ஒரு நாள் கூட அவளைப் பத்தி தப்பாய் சொன்னதுமில்லை. பெரியக்கா பெரியக்கான்னு வாய் நிறைய கூப்பிடுவாள்...."

பாட்டி சொன்னதை வைத்து ஆர்த்தியால் சிவகாமியைக் குறித்து எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

மறுநாள் தாத்தாவின் ஆபரேஷன் நல்ல படியாக முடிந்து ஒரு முறை பாட்டியும், ஆர்த்தியும் அவரைப் பார்த்து விட்டு வந்தார்கள். தாத்தா அவர்களைப் பார்த்து லேசாகப் புன்னகை செய்தார். அவரைப் பார்த்து விட்டு வந்த பிறகு பார்வதி பெரும் யோசனையில் இருந்தாள்.

"என்ன பாட்டி யோசிக்கிறீங்க?"

"இல்லை ரூமுக்கு வந்த பிறகு இந்த மனுஷனை எப்படி சமாளிக்கிறதுன்னு யோசிக்கிறேன். அவள் காசு கொடுத்து தான் ஆபரேஷன் நடந்ததுன்னு தெரிஞ்சா ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் குதிப்பார். அதுவும் அவங்களுக்கு நீ இருக்கிற இடம் தெரிஞ்சுடுச்சு. உன்னை கூட்டிகிட்டு போயிடுவாங்கன்னு தெரிஞ்சா இன்னொரு அட்டாக் வந்தாலும் வந்துடும்"

ஆர்த்தி தாத்தா குணமடைந்தால் போதும் என்று நினைத்தாளே ஒழிய இந்த சிக்கலை யோசிக்கவில்லை. ஆனால் பாட்டி சொன்ன இரண்டாவது விஷயம் அவளைக் கேள்வி கேட்க வைத்தது. "அவங்க என்னைக் கூட்டிகிட்டு போயிடுவாங்கன்னு யார் சொன்னது?"

"இவ்வளவு நாள் தெரியாததால் விட்டிருந்தாங்க. இனி விட மாட்டாங்க. உங்கப்பாவுக்கு இரண்டாம் தாரத்திலும் குழந்தைகள் இல்லை".

ஆர்த்தி பாட்டியிடம் கல்லூரி விழாவில் சிவகாமி பார்த்ததையும், இப்போது பேசும் கூட பாண்டிச்சேரியில் இருந்து மருமகள் பேசுவதைக் கேட்டு எந்த வியப்பையும் காண்பித்துக் கொள்ளவில்லை என்பதையும் சொல்ல நினைத்து பிறகு அந்த எண்ணத்தைக் கை விட்டாள். பாட்டிக்கு முதலில் இருக்கும் தலைவலிகளே போதும் இதையும் சொல்லி அதிகப்படுத்த வேண்டாம் என்று நினைத்தாள்.

"சின்னத்தைன்னு சொன்னீங்க அவங்க எங்கே இருக்காங்க?"

"அவள் புருஷன் சின்ன வயசுலயே இறந்திட்டார். அவளும், அவள் பையனும் உங்கப்பா கூட தான் இருக்காங்க"

"பெரியத்தை மகனை அனுப்பறேன்னாங்க. அவங்களுக்கு எவ்வளவு குழந்தைங்க"

"ஒருத்தன் தான். சிவகாமி புருஷன் ஜட்ஜாய் இருந்தார். இப்ப ரிடையர் ஆயிருப்பார். நல்ல மனுஷன்"

"அப்பா இரண்டாம் கல்யாணம் யாரை செஞ்சுகிட்டாங்கன்னு தெரியுமா?"

"யாரு என்னன்னு தெரியலை. உங்கம்மா போய் ஒரு வருஷத்திலேயே சிவகாமி தம்பிக்கு இன்னொரு கல்யாணம் செஞ்சு வச்சுட்டா. அதில குழந்தைகள் இல்லைன்னு மட்டும் கேள்விப்பட்டோம்."

சிறிது நேரம் கழித்து பாட்டி அவளிடம் சொன்னாள். "ஒரு வேளை அவங்க உன்னைக் கூட்டிகிட்டு போறதா சொன்னா பைத்தியக்காரத் தனமா மாட்டேன்காதே. போயிடு" சொல்லி முடிக்கையில் பாட்டிக்குக் கண் கலங்கியது.

"அப்ப நீங்க ரெண்டு பேரும்?"

"எங்க காலம் முடியறதுக்காச்சு ஆர்த்தி. அது உன் தாத்தாவுக்குப் புரியலைன்னாலும் எனக்குப் புரியுது. ஆனா உனக்கு வாழ்க்கை இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. உங்கம்மாவுக்கு என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை. ஆனா உன் தாத்தா சொல்ற மாதிரி உன்னை யாரும் கொன்னுட மாட்டாங்கங்கற நம்பிக்கை எனக்கிருக்கு..... உன்னை ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுக்கிற யோக்கியதை கூட எங்களுக்கு இல்லை. உன் தாத்தா ஏதோ கற்பனை லோகத்தில் இருக்கார். நீ போயிடு. அது தான் நல்லது"

தாத்தா, பாட்டியை விட்டுப் பிரிவதைப் பற்றி இது வரை எப்போதுமே யோசித்திராத ஆர்த்திக்கு இதைக் கேட்கவே துக்கமாய் வந்தது. ஆனாலும் இப்போது எதுவும் சொல்ல அவள் பிரியப்படவில்லை. முதலில் அவர்கள் கூப்பிடட்டும் பிறகு பார்க்கலாம் என்று நினைத்தாள்.

அப்போது தான் அந்த இளைஞனைப் பார்த்தாள். கிட்டத் தட்ட ஆறடி உயரம், சிவந்த நிறம், அழகான முகம், அகன்ற தோள்கள், அவசரமில்லாமல் நடந்து வரும் விதத்தில் நளினமான ஒரு ஸ்டைல் இருந்தது. ஜீன்ஸும், டீ ஷர்ட்டும் அணிந்திருந்தான். ஒரு கணம் அவள் இதயத்துடிப்பு நின்று போனது. இதுவரை யாரும் அவளை அந்த அளவுக்கு பாதித்ததில்லை. உண்மை என்னவென்றால் அவள் இது வரை யாரையும் அப்படி உற்றுப் பார்த்ததுமில்லை. அவனை சற்று தூரத்திலிருந்தே பார்த்தவள், அவன் அருகே வர ஆரம்பிக்கையில் பார்வையைக் கஷ்டப்பட்டுத் திருப்பினாள்.

"இப்ப எதுக்குப் பாட்டி அதைப் பத்தியெல்லாம் யோசிக்கிறீங்க. தாத்தா குணமாயிட்டு வரட்டும். அப்புறம் பார்க்கலாம்"

அந்த இளைஞன் அவளைத் தாண்டிப் போகவில்லை. அவள் அருகில் வந்து நின்றான். "ஆர்த்தி?" என்று கேட்டான்.

அவள் பேரை அவன் சொல்லும் போதே அவளுக்கு என்னவோ செய்தது. நாக்கு வரண்டது. எழுந்து நின்று ஆமென்று தலையாட்டினாள்.

"நான் ஆகாஷ்" என்றவன் ஆயிரம் வாட்ஸ் புன்னகை ஒன்றைப் பூத்தான். அந்தக் கணத்திலேயே அவளையும் அறியாமல் அவள் தன் மனதைப் பறிகொடுத்தாள். கதைகளில் 'கண்டதும் காதல்' என்று வரும் போதெல்லாம் அவளுக்கு அது பைத்தியக்காரத்தனமாய் தோன்றும். பார்த்தவுடன் காமம் வரலாம், காதல் வராது என்று தோழிகளிடம் வாதம் செய்திருக்கிறாள். ஆனால் இன்றைய அவள் நிலையை அவளாலேயே நம்ப முடியவில்லை. பார்வையை அவனிடம் இருந்து அகற்றுவது அவ்வளவு சுலபமல்ல என்று தோன்றியது.

பாட்டி எழுந்து நின்று "வாங்க தம்பி" என்று வரவேற்றாள்.

அவன் பாட்டியிடம் திரும்பினான். "நீங்க தான் ஆர்த்தி பாட்டி. இல்லையா? தாத்தா எப்படியிருக்கார்?"

"ஆபரேஷன் உங்கம்மா தயவுல நல்ல படியா முடிஞ்சது. நல்லாயிருக்கார்"

"பாட்டி உங்க வார்த்தையில் இருந்து இந்த 'தயவு' 'கியவு' எல்லாம் எடுத்துடுங்க. வெளியாளுக்கு செய்யறது தான் தயவு. வீட்டாளுக்கு செய்யறதுக்குப் பேர் கடமை"

வந்து சேர்ந்த ஒரே நிமிடத்தில் பாட்டியையும் பேத்தியையும் ஆகாஷ் கவர்ந்து விட்டான்.

சிலரால் சில மனங்களில் இடம் பெற எத்தனை காலமானாலும் முடிவதில்லை. இவனால் எப்படி நிமிடத்துக்குள் முடிந்து விட்டது என்பதை நினைத்து ஆர்த்தியால் வியக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால் அதே நேரம் அவள் உள்ளுணர்வு அந்த ஒருவித மயக்க நிலையிலும் அவளை எச்சரித்தது. "இவன் சிவகாமியம்மாள் மகன். அழகும் கவர்ச்சியும் இருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும். ஜாக்கிரதையாக இரு".

# 8

With mine eyes
I shall drink the first smile
That blooms on your half open lips
Like a flower bud-
This is my wish
-Rabindranath Tagore

அவளைப் பார்த்தவுடன் முதலில் ஆகாஷுக்கு நினைவிற்கு வந்தது அதிகாலைப் பனியில் நனைந்திருந்த ரோஜா தான். அது ஏனென்று அவனுக்குக் காரணம் தெரியவில்லை. எப்போதும் ஊட்டி பங்களாவில் அதிகாலை நேரங்களை அவன் தவற விடுவதில்லை. அந்த ரம்மியமான சூழ்நிலையில் அதிகாலைப் பனியில் குளித்துக் கொண்டிருக்கும் தோட்டத்து ரோஜாக்கள் முன் நிறைய நேரம் நிற்பான். அவை அமைதியாக காற்றின் லேசான இசைக்கேற்ப நடனமாடும் அழகு தனி தான். இந்த ஆஸ்பத்திரி அந்த ரம்மியமான சூழ்நிலையில் இல்லை தான். அவள் அழகாக இருந்தாலும் சாதாரண உடைகளில் அலங்காரம் எதுவும் இல்லாமல் தான் இருந்தாள். ஆனாலும் அவள் ஏனோ ரோஜாவை நினைவுபடுத்தினாள். தூரத்தில் இருந்தே அவளை அவன் பார்த்துக் கொண்டு தான் வந்தான். ஒரு பாட்டியிடம் ஏதோ பேசிக் கொண்டு இருந்தாள். அவள் முகத்தில் ஏதோ சோகம் கவ்வியது போலிருந்தது. அவள் பார்வை அப்போது தான் அவன் மேல் விழுந்தது. விழுந்த பார்வை அவன் அருகே போகும் வரை தங்கிப் பின் இடம் மாறியது. அருகில் வந்த பிறகு அவனுக்கு அவள் யார் என்று சந்தேகம் வரவில்லை. அத்தையின் போட்டோவைப் பார்த்தவர்களுக்கு சந்தேகம் வர வாய்ப்பில்லை. ஆர்த்தி தான்.

அறிமுகம் முடிந்து அவன் பாட்டியிடம் பேசிக் கொண்டிருக்கையில் சிலையாக நின்றபடி ஆர்த்தி தன்னைப் பார்ப்பதைக் கவனித்தான். புன்னகையுடன் கேட்டான். "நானென்ன உன்னைப் படமா வரையப் போகிறேன். ஏன் சிலை மாதிரி நிற்கிறாய்?"

ஆர்த்தி தன்னை சுதாரித்துக் கொண்டு மெல்லப் புன்முறுவல் பூத்தாள். இப்போது அவன் தான் பார்வையை விலக்க முடியாமல் சிலையானான். ரோஜா நினைவு வரக் காரணம் புரிந்தது. இந்த அழகான உதடுகள் தான். ரோஜா விரிந்து முத்துக்கள் பளிச்சிட்டன. ஆனால் எதை வெளிப்படுத்துவதிலும் கட்டுப்பாட்டை வைத்திருக்கும் அவனுக்கு எதுவுமே பாதிக்காதது போல பாக்கி

விஷயங்கள் பேச முடிந்தது. ஆபரேஷன் பற்றி நிறைய கேள்விகள் கேட்டான். பின் டாக்டரிடம் பேச ஆர்த்தியையும் அழைத்துக் கொண்டு போனான்.

பார்வதி அவர்கள் சேர்ந்து போவதையே பார்த்துக் கொண்டு இருந்தாள். 'நல்ல ஜோடிப் பொருத்தம்' என்று மனம் பாராட்டியது. அவனைப் பார்த்தவுடன் ஆர்த்தி ஏதோ மின்னல் தாக்கியது போல் ஆனதை அவள் கவனிக்கத் தவறவில்லை. இத்தனை வருடங்கள் அவள் வளர்த்த அவள் பேத்தி இப்படி பாதிக்கப்படுவது முதல் முறை தான். ஆகாஷ் ஆர்த்தி அளவுக்கு வெளிக்காட்டா விட்டாலும் அவனும் அவளால் வசிகரிக்கப்பட்டான் என்பதில் பார்வதிக்கு சந்தேகம் இல்லை.

மனம் கணவனை ஒரு கணம் நினைத்துப் பார்க்க பார்வதி பெருமூச்சு விட்டாள். "கடவுளே! ஆபரேஷனுக்கு பணம் கொடுத்து ஏற்பாடு செஞ்சது சிவகாமி, பேத்தி சிவகாமி மகன் கிட்ட மனசைப் பறி கொடுத்துட்டான்னு எல்லாம் தெரிஞ்சா இந்த ஆள் என்ன செய்வார்னு தெரியலையே. இவருக்கு உடனே இன்னொரு ஹார்ட் அட்டாக் வராமல் நீ தான் பார்த்துக்கணும்."

டாக்டரிடம் ஆபரேஷன் செலவுக்கான டிராஃப்டைக் கொடுத்து விட்டு தாத்தாவின் உடல்நிலை பற்றி முழு விவரத்தையும் ஆகாஷ் கேட்க, அவரும் சிவகாமி அம்மாள் மகன் என்ற மரியாதையுடன் நேரம் பார்க்காமல் முழுவதும் விவரித்தார். ஆர்த்திக்கு அவனுடன் இருக்கின்ற நேரம் அதிகமாக அதிகமாக அவன் மேல் உள்ள மதிப்பும், இன்னும் ஏதோ ஒன்றும் [இன்னும் அவளுக்கு அதைப் பெயர் வைக்க முடியவில்லை] உயர்ந்து கொண்டே போனது. கம்பீரமாக, அலட்டிக் கொள்ளாமல், அதே நேரம் ஆணித்தரமாகப் பேசினான். நடந்து கொண்டான்.

"காஃபி சாப்பிடலாமா?" –டாக்டர் அறையில் இருந்து வெளியே வந்தவுடன் ஆகாஷ் கேட்டான். அவள் தலையசைத்தாள்.

"உனக்கு எப்போதிருந்து இந்த ப்ராப்ளம்"

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

"இந்த பேச்சு வராத ப்ராப்ளம். நான் வந்ததில் இருந்து நீ பேசி நான் கேட்கலை"

"எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலை" என்று தயக்கத்துடன் ஆர்த்தி சொன்னாள்.

குரலும் நன்றாகத் தான் இருக்கிறது என்று ஆகாஷ் மார்க் போட்டான். பக்கத்து கேண்டீனில் காபி சாப்பிடும் போது அவளைப் பற்றி எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவள் படிப்பு, அவளுக்குப் பிடித்த விஷயங்கள், பாட்டி, தாத்தா பற்றிய விவரங்கள், அவள் ஃப்ரண்ட்ஸ் ... கேண்டீனில் இருந்து வெளியே வருவதற்குள் அவளைப் பற்றி பெரும்பாலான விஷயங்கள் அவன் அறிந்திருந்தான். அவளிடம் மற்ற எல்லாவற்றையும் விட அதிசயிக்க வைத்த விஷயம் 'தான் அழகு' என்கிற எண்ணமே சுத்தமாக இல்லாதது தான். உடையணிந்திருந்த விதம் கூட ஒழுங்காக இருந்ததே ஒழிய அழகுபடுத்துவதாக இருக்கவில்லை. அந்தக் கலை மட்டும் அவளுக்கு இருந்திருந்தால், தான் பலத்த போட்டியை சந்திக்க வேண்டி இருந்திருக்கும் என்று தோன்றியது.

இந்த சமயத்தில் அம்மா ஞாபகம் வந்தாள். அவனுக்குத் தெரிந்து அம்மா கூட மிக அழகாக இருந்தாலும் அடிக்கடி சொல்வாள். "ஒரு மனுஷன் பெருமைப்பட்டுக் கொள்ள வேற விஷயமே இல்லாட்டி தான் அழகைப் பத்தி பெருமைப்பட்டுக்குவான்."

ஆர்த்தியுடன் கூட இருந்த ஒவ்வொரு மைக்ரோ செகண்டும் அவளை ஆகாஷ் உன்னிப்பாக கவனித்தான் என்றே சொல்ல வேண்டும். ஓரிரு இளைஞர்கள் அவளை ரசனையுடன் பார்த்ததை அவள் கவனிக்கவேயில்லை. ஆனால் சில பெண்கள் அவனை சற்று அதிகமாகப் பார்த்த போது அவள் உடனடியாக உணர்ந்தாள். அப்போதெல்லாம் அவனைக் கூர்ந்து பார்த்தாள். ஆகாஷுக்கு மனம் லேசாகி சிறகடித்துப் பறந்தது. அம்மா சொன்னதையும் மீறி வாழ்வில் முதல் முறையாகத் தான் அழகாக இருப்பதற்கு சந்தோஷப்பட்டான்.

ஆகாஷ் அவனையுமறியாமல் புன்னகை செய்த போது பேரழகாக ஆர்த்தி கண்ணுக்குத் தெரிந்தான். அதே போல் அவன் மற்ற பெண்களுக்கும் தெரிவது அவளை சங்கடப்படுத்தியது. அவனை சற்று அதிகமாய்ப் பார்த்த பெண்கள் அவளுக்கு எரிச்சலைக் கிளப்பினார்கள். அரை குறையாக உடை அணிந்த படி எதிரே வந்த ஓரிரு பெண்களைப் பார்வையால் சுட்டு எரித்தாள். "இவ்வளவு அநாகரிகமாய் டிரஸ் செய்ய இவங்க வீட்டில் எப்படி அனுமதிக்கிறாங்க?" என்று மனதினுள் பொரிந்து தள்ளினாள்.

"என்னாச்சு?"

ஆகாஷ் கேட்டவுடன் தான் தன் முகபாவனையை அவன் உன்னிப்பாக பார்த்துக் கொண்டு இருந்ததைக் கவனித்தாள்.

அவளுக்குத் தான் நினைத்ததை சொல்ல முடியவில்லை. பொய் சொல்லவும் முடியவில்லை. ஒன்றுமில்லை என்று புன்னகையுடன் தலையசைத்தாள். மறுபடி ரோஜா இதழ்கள் விலகி முத்துக்களின் பளிச்! அவன் பெருமூச்சு விட்டான்.

அவளை ஐ.சி.யூக்கு வெளியே அமர்ந்திருந்த பாட்டியிடம் விட்டு விட்டு ஆகாஷ் சொன்னான். "சரி நான் லாட்ஜுக்குப் போய் நாளைக்குக் காலைல வர்றேன். இப்ப போகிறதுக்கு முன்னால் தாத்தாவைப் பார்த்துட்டுப் போகிறேன்"

ஆர்த்தியும் பாட்டியும் கலவரத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

# 9

The use of the word ALWAYS is very powerful...so is the use of NEVER. While I encourage you to find empowering ways to use the word "always", I also encourage you to drop completely the word NEVER. One cannot use that word positively.
- Marie T. Russell

ஆகாஷ் அவர்கள் பார்வை பரிமாற்றத்தைக் கவனித்து என்ன என்பது போல புருவங்களை உயர்த்தினான்.

பார்வதி சமாளித்தாள். "இல்லை. புதுசா யாரைப் பார்த்தாலும் வளவளன்னு பேச ஆரம்பிச்சுடுவார். ரெஸ்ட் எடுக்கணும், ஐ சி யூல இருக்கிறோம்கிறதையெல்லாம் மறந்துடுவார். அதான். இன்றைக்கு ராத்திரி ரூமுக்கு வந்துடுவார். நாளைக்குக் காலைல வர்றப்ப பாருங்களேன்"

"இட்ஸ் ஓகே" என்று தோள்களை உயர்த்தினான். ஆனால் அந்த விளக்கத்தை அவன் நம்பவில்லை. ஆரம்பத்தில் இருந்தே ஆர்த்தி சம்பந்தமானதெல்லாம் மர்மமாக இருப்பதாகவே அவனுக்குப் பட்டது. தன் மாமாவின் ஒரே மகளை அவளுடைய தாத்தா அழைத்துக் கொண்டு சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டதாகவும் அவள் எங்கிருக்கிறாள் என்று தெரியவில்லை என்றும் சிறு வயதிலேயே அவன் அறிவான். அவள் தாத்தா அப்படி அவளை அழைத்துக் கொண்டு காணாமல் போனதும், அதை ஏற்றுக் கொண்டு மாமா அப்படியே விட்டு விட்டதும் விசித்திரமாக அவனுக்கு இருந்தன. அதை அவன் அம்மாவிடம் வாய் விட்டுப் பலமுறை சொல்லி இருக்கிறான். சிவகாமி அதற்கு எந்த விளக்கமும் தர முற்பட்டதில்லை. தானாகப் பேச முடிவெடுத்தால் ஒழிய சிவகாமியை யாராலும் பேச வைக்க முடியாது....

திடிரென்று அவனை அழைத்து அம்மா பாண்டிச்சேரிக்குப் போகச் சொல்லிய போதும் ஆர்த்தி போன் செய்ததைச் சொன்னால் ஒழிய வேறு எதுவும் சொல்லி அவனைத் தெளிவுபடுத்தவில்லை.

ஆர்த்தி "எந்த லாட்ஜில் தங்கி இருக்கிறீர்கள்?" என்று கேட்டு அவன் சிந்தனையைக் கலைத்தாள். அவன் தங்கியிருந்த நட்சத்திர ஓட்டல் பெயரை ஆகாஷ் சொன்னான். அந்த ஓட்டலைத் தெருவில் இருந்து அவள் பார்த்திருக்கிறாள். உள்ளே போகும் வாய்ப்பு கிடைத்ததில்லை. போய் விட்டு வருவதாகச் சொல்லி நட்புடன் ஆர்த்தியிடம் கை குலுக்கி விடைபெற்றான் ஆகாஷ். அவன் ஸ்பரிசம் அவள் உடலில் மின் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அவனுக்கும் மின்சாரத்திற்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. தொட்ட போது மட்டுமல்ல, அவன் பார்த்தாலும், அருகில் இருந்தாலும் கூட அவளுக்கு லேசாக மின்சாரம் பாய்ந்தது. புன்னகை பூத்து விட்டு அவன் போய் விட்டான். அவள் இதயத்துடிப்பு சமநிலைக்கு வர சிறிது நேரம் ஆயிற்று.

பார்வதி பேத்தியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். ஆர்த்தியை அவள் முகபாவத்தில் இருந்தே சுலபமாகப் படிக்க முடியும். எளிமையும், யதார்த்தமும் மட்டுமே அறிந்த அபூர்வமான பிறவி அவள். அவள் தாயிடமாவது கோபம், பிடிவாதம் எல்லாம் வேண்டிய அளவிருந்தன. ஆனால் இவளிடம் அதெல்லாம் துளியும் இருக்கவில்லை. இவளிடம் இருக்கும் மென்மையும், நன்மையும் இந்தக் காலத்து மனிதர்களுக்கு ஏற்றதல்ல என்று பார்வதி நினைத்தாள். அதுவும் காதல் வயப்பட்டுவிட்ட இந்த நிலையில் ஆர்த்தி இன்னும் மென்மையானது போல் தெரிந்தது. பார்வதி கடவுளிடம் வேண்டிக் கொண்டாள். "கடவுளே! இந்தப் பெண்ணை நீ தான் காப்பாத்தணும்"

அன்றிரவு நீலகண்டனை ஐ.சி.யுவில் இருந்து அறைக்கு மாற்றினார்கள். அறை ஏ.சி யுடன் கூடிய ஸ்பெஷல் அறை. வந்தவுடன் நீலகண்டன் கேட்டார். "ஏன் பார்வதி உனக்கு ஏதாவது லாட்டரியில் பரிசு விழுந்திருக்கா?"

"ஆமா, அதை நேரடியாய் தரமாட்டாங்களாம். ஆஸ்பத்திரிக்குத் தான் தருவாங்களாம்"

அவர் மனைவியை முறைத்தார். பார்வதி ஆர்த்தி பக்கம் திரும்பினாள். "ஆர்த்தி நமக்கு ஏதாவது டிபன் வாங்கிட்டு வந்திடேன்"

ஆர்த்தி சென்றாள். அவள் போன பிறகு கணவன் கால் மாட்டில் வந்து பார்வதி அமர்ந்தாள்.

நீலகண்டன் சுற்றி வளைத்துப் பேசி மனைவியை என்றுமே ஜெயித்ததில்லை. வார்த்தை ஜாலத்தில் அவள் அவரை அப்படியே நாக்கு படாமல் விழுங்கி விடுவாள். ஆகவே நேரடியாகக் கேட்டார். "ஆபரேஷனுக்கே காசு நிறைய செலவாயிருக்கும். இந்த ரூம் ஏ.சி. காசு யார் தந்தது"

பார்வதி பதில் எதுவும் சொல்லாமல் அவர் கால்களை மெல்ல அமுக்கி விட்டாள்.

"அவங்கப்பன் கிட்ட கேட்டியாக்கும்"

"நீங்க டென்ஷனாய், கோவப்பட மாட்டீங்கன்னு சொன்னா நான் எல்லாம் சொல்றேன்"

அவர் அவளை முறைத்தார். அவள் கண்கலங்க சொன்னாள். "உங்க பேத்திக்காவது அவங்கப்பா, அத்தைகள்னு நிறைய பேர் இருக்காங்க. எனக்கு உங்களை விட்டால் யாரிருக்கா சொல்லுங்க. நீங்க இனிமேலும் டென்ஷனாகி, ஏதாவது ஆனா நான் மட்டும் தான் அனாதையாய் நிற்பேன். ஆதரிக்கவோ, சண்டை போடவோ கூட ஆளில்லை"

அவர் மனைவி அவ்வளவு சுலபமாகக் கண்கலங்குபவள் அல்ல. அவளைக் கண்ணீருடன் பார்க்கையில் அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை அவர் இதயத்தின் ஆழத்தைத் தொட்டதில் அவர் கோபம் காற்றாய்ப் பறந்தது.

"கோபப்படலை சொல்லு"

"நான் கேட்கலை. அவளாய் தான் கேட்டாள். அவங்கப்பா கிடைக்கலை. கடைசில சிவகாமி கிட்ட தான் பேசினாள்"

சிவகாமி கிட்ட பேசினதுக்குப் பதிலாய் என்னை சாக விட்டிருக்கலாமே என்று சொல்ல நினைத்தார். கண்ணீருடன் கால்மாட்டில் அமர்ந்திருந்த அவர் மனைவியின் பரிதாபத் தோற்றம் அவரை என்னவோ செய்தது. அவரும் போய் விட்டால் அவர் மனைவிக்கு யாருமில்லை என்கிற யதார்த்த உண்மை எல்லா உணர்வுகளையும் உள்ளடக்கியது. சொல்ல நினைத்த வார்த்தைகளை அவர் மென்று விழுங்கினார்.

அவளைத் திருமணம் செய்து கொண்ட போது அவருக்கு வயது பதினேழு. அவளுக்கு வயது பதிமூன்று. அன்றிலிருந்து இன்று வரை அவர்கள் அன்பான வார்த்தைகளைப் பேசிக் கொண்டதை விட காரசாரமாகப் பேசிக் கொண்ட காலம் தான் அதிகம். ஆனாலும் அத்தனை சண்டை சச்சரவுகளின் ஊடே வார்த்தைகள் இல்லாத நேசம் இழைந்தோடியது என்பது தான் உண்மை. அவள் பிரசவத்திற்குப் போய் இருந்த ஐந்து மாதங்கள் அவருக்குப் பைத்தியம் பிடித்தது போல் இருந்தது. பிரசவத்திற்குப் போகும் போதும் சரி பிரசவம் முடிந்து குழந்தையோடு வந்த போதும் சரி சண்டை தான் போட்டுக் கொண்டார்கள். ஆனாலும் அவர்கள் அந்த ஐந்து மாதங்கள் தவிர பிரிந்து இருந்ததே இல்லை. தான் போனால் அவள் தனித்துப் போவாள் என்கிற உண்மை அவரைப் பெரிதும் சிந்திக்க வைத்தது.

"உங்க பேத்தி உங்களுக்கு ஆபரேஷன் ஆகி குணமாகணும்னு துடிச்சதை நீங்க பார்த்திருக்கணும். அவள் நம்ம பொண்ணு மாதிரி கூட இல்லைங்க. ரொம்பவே பாவம். அது உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா தாங்கி இருக்காதுங்க....." நடந்ததை எல்லாம் விவரமாகச் சொன்னாள். ஆகாஷ் ஆர்த்தியைப் பாதித்த விதத்தை மட்டும் மறைத்தாள். ஓரேயடியாக அவரைக் கலவரப்படுத்த அவள் விரும்பவில்லை.

தனக்காக பேத்தி இவ்வளவு தூரம் செய்திருக்கிறாள் என்று அறிந்த போது நீலகண்டன் நெகிழ்ந்து போனார். அதே சமயம் சிவகாமியின் தயவால் உயிர் பிழைக்க வேண்டியதாய் போயிற்றே என்ற எண்ணம் அவரை வாட்டி எடுத்தது. மனம் ரணமானது. ஆனால் பார்வதி பயந்தது போல பெரிய அளவில் அவர் காண்பித்துக் கொள்ளவில்லை. எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டவர் சிறிது நேர

மௌனத்திற்குப் பின்னால் விரக்தியுடன் சொன்னார். "எப்பவுமே அவங்க தயவுக்குப் போய் எந்த விதத்திலும் நிற்கக் கூடாதுன்னு நினைச்சிருந்தேன். கடவுள் நினைப்பு வேற மாதிரி இருந்துருக்கு"

சிறிது நேரம் அவருக்கு எதுவும் பேசப்பிடிக்கவில்லை. சிவகாமி பற்றிய நினைவு வந்ததும் மகளும் நினைவுக்கு வந்தாள். கிட்டத் தட்ட அவளும் அவரைப் போலவே தான் இருந்தவள். அவளது விருப்பு வெறுப்புகளும் ஆழமானவை. மற்றவர்களுக்காக அதை மாற்றிக் கொள்வதும், ஒருமுறை வெறுத்தவர்களை மன்னிப்பதும் அவளால் என்றுமே முடிந்ததில்லை. அது தான் அவளை மரணம் வரை அழைத்துப் போனதோ என்று அவர் பல முறை நினைத்துக் கொண்டதுண்டு.....

# 10

Compromise is simply changing the question to fit the answer.
– Merritt Malloy

ஆகாஷுக்கு அன்றிரவு ஆர்த்தி பற்றிய நினைவுகளில் இருந்து மீள முடியவில்லை. மனதை வலுக்கட்டாயமாக வேறு விஷயங்களுக்கு இழுத்துச் சென்றாலும் மனம் திரும்ப அவளிடமே வந்தது. அவள் கைகளின் ஸ்பரிசத்தை அவன் கை இப்போதும் உணர்ந்து கொண்டு இருந்தது. மற்ற இளைஞர்கள் யாரிடமும் அவள் அதிகமாய்ப் பழகியிருந்தது போலத் தெரியவில்லை. ஆனால் அவன் நண்பர்களில் ஆண், பெண் என இருபாலாரும் இருந்தனர். பெண்களில் ஓரிருவர் ஆர்த்தியை விட அழகாகவே இருந்தார்கள் என்பதும் உண்மை. ஆனால் இவளைப் போல் யாரும் அவனை இப்படி பாதித்ததில்லை. பெண்களிடம் கை குலுக்குவது முன்பு கல்லூரியிலும் சரி, இப்போது ஆபிசிலும் சரி சர்வசகஜம். ஆனால் யார் ஸ்பரிசமும் இப்படி மின் அதிர்வை ஏற்படுத்தியதில்லை. பல மணி நேரத்துக்குப் பின்னும் உடல் அந்த ஸ்பரிசத்தின் நினைவை இப்படி தக்க வைத்துக் கொண்டதில்லை.

அவளும் அவனால் அதே போல் ஈர்க்கப்பட்டாள் என்பதை அவள் முகத்தில் இருந்தே அவனால் அறிய முடிந்தது. அவனையும் அறியாமல் சந்தோஷமாகப் புன்னகைத்தான். அவன் செல் போன் அடித்தது. சிவகாமி தான் பேசினாள். "ஆகாஷ், எங்கடா இருக்கே?"

"ஓட்டல்ல இருக்கேம்மா. நான் உனக்கு போன் டிரை செஞ்சு சலிச்சுட்டேன். லைன் இஸ் பிசின்னே வந்துட்டு இருந்தது"

அவன் சொன்னது உண்மை என்றாலும் கடந்த அரை மணி நேரமாய் ஆர்த்தியைப் பற்றி நினைக்க ஆரம்பித்ததில் இருந்து அம்மாவுக்குத் திரும்ப போன் செய்யும் நினைவே சுத்தமாய் வரவில்லை.

"ஆர்த்தி தாத்தா எப்படியிருக்கார்"

"நல்லாயிருக்கார்ம்மா. இப்ப ஐ.சி.யூல இருந்து ரூமுக்கு வந்துருப்பார்."

"நீ பார்த்து பேசினியா?"

"இல்லை.... ரூமுக்கு வந்தப்புறமே பார்த்துப் பேசலாம்னாங்க" என்றவன் தனக்கு வந்த சந்தேகத்தை நேரடியாகவே தாயிடம் சொன்னான். "ஆர்த்தியும் அவங்க பாட்டியும் நான் தாத்தாவை உடனடியாய் பார்த்துப் பேசறதை பயத்தோட தடுத்த மாதிரி இருந்தது. அது ஏம்மா?"

சிவகாமி உடனடியாக எதுவும் சொல்லவில்லை. பின் இயல்பான குரலில் சொன்னாள். "அவர் பேச ஆரம்பிச்சா நிறுத்த மாட்டார். அதனால் இருக்கலாம்"

இதையே தான் ஆர்த்தியின் பாட்டியும் சொல்லி இருந்தாலும் அந்தப் பதில் அவனுக்கு சரியானதாகப் படவில்லை.

அதை உணர்ந்த சிவகாமி அவன் ஏதாவது சொல்லும் முன் பேச்சை திசை திருப்பினாள். "ஆர்த்தி எப்படி இருக்கா?"

ப்யூட்டிஃபுல் என்று சொல்ல வந்தவன் அந்த வார்த்தையை விழுங்கிக் கொண்டு "ஃபைன்மா"

மகன் பதில் சொல்ல எடுத்துக் கொண்ட அந்த சின்ன இடைவெளி, வழக்கத்துக்கு அதிகமாய் சந்தோஷமாக வந்த பதில் எல்லாம் சிவகாமிக்கு மகன் மனதை படம் பிடித்துக் காட்டின. என்றுமே சூட்சுமமான, நளினமான விஷயங்களைக் கூர்மையாக கவனிக்க முடிந்த அவளுக்கு மனிதர்களை கணிப்பதில் இருந்த திறமை அசாத்தியமானது. அதுவும் அவளுக்கு நெருக்கமானவர்களிடம் அவளுடைய இந்தத் திறமை நூறு சதவீதம் துல்லியமாக வேலை செய்தது. அவர்களது வழக்கமான நடவடிக்கைகள், அங்க அசைவுகள், குரல் தொனிகள், ஈடுபாடுகள் எல்லாம் அவள் முழுமையாக அறிந்திருந்ததால் சற்று லேசான மாற்றங்கள் கூட அவளுக்கு அவர்களைப் பற்றிய பல நூறு புதிய தகவல்கள் சொல்லும். மகனிடம் ஆர்த்தியைப் பற்றி வேறு சில கேள்விகளும் கேட்க அவன் உற்சாகமாக ஆர்த்தியைப் பற்றி கேட்காததற்கும் சேர்த்து பதில் சொன்னான். சிவகாமி புன்னகை செய்தாள். அவள் மீண்டும் பேசிய போது குரலில் புன்னகையின் சுவடு கூட இல்லை.

"நாளைக்கு நீ காலைல ஆஸ்பத்திரிக்குப் போவாய்?"

"ஒன்பது மணிக்குப் போவேன். ஏம்மா?"

"நீ போனதும் மாமாவுக்கு ரிங் செய்து செல்லை ஆர்த்தி கிட்ட கொடு. அவனுக்கு மகள் கிட்ட பேசணுமாம்"

அப்போது தான் ஆர்த்தி தன் தந்தையிடம் பேசியதில்லை என்பது நினைவுக்கு வந்தது. மாமாவுக்காகவும் ஆர்த்திக்காகவும் அனுதாபப்பட்டான்.

**ஆ**ர்த்திக்கு அன்றிரவு தூக்கம் சரியாக வரவில்லை. ஆகாஷைப் பற்றியே மனம் திரும்பத் திரும்ப சுற்றியது. வந்த தூக்கத்திலும் அவன் கனவில் வந்து புன்னகைத்தான். திரும்பத் திரும்ப கை குலுக்கினான்..... மறு நாள் எப்போது விடியும் என்று இருந்தது. விடிந்த பின் அவன் எப்போது வருவான் என்று மனம் எதிர்பார்க்க ஆரம்பித்தது.

ஆர்த்திக்கும், கண்ணாடிக்கும் இடையே ஆரம்பத்தில் இருந்தே நெருக்கம் இருந்ததில்லை. தினமும் ஓரிரு நிமிடங்களுக்கு மேல் அதன் முன் அவள் நின்று பார்த்ததாக பார்வதிக்கு நினைவு இல்லை. இன்று அடிக்கடி ஆர்த்தி அதன் முன் நின்றதையும் அடிக்கடி வெளியே போய் எட்டிப் பார்ப்பதையும் பார்வதி கவனித்தாள். நீலகண்டனும் கவனித்தார். உடன் வாழ்ந்து வரும் நபர் வித்தியாசமாக முதல் முறையாக நடந்து கொள்ளும் போது மற்றவர்களால் உடனடியாக உணர

முடிகிறது. அதுவும் இது போல் ஆஸ்பத்திரியில் வேறு எதுவும் வேலை இல்லாத போது எதுவும் அவர்கள் பார்வைக்கு தப்புவதில்லை.

அவள் டிபன் வாங்க கேண்டீன் சென்ற போது நீலகண்டன் மனைவியைக் கேட்டார். "அவன் அழகாய் இருப்பானா?"

"அவங்க பக்கம் யாருமே அழகாய் இல்லாம இல்லை. இவன் ரொம்பவே அழகாய் இருக்கான்"

"அவங்க மாமனும் அழகாய் இருந்தான். அழகு சந்தோஷத்தைக் கொடுத்துடாதுங்கறது நாம கண்ணால் பார்த்த அனுபவம், பார்வதி"

"ஒரு உதாரணம் உலக உண்மையாயிடாதுங்க. சிவகாமியும், அவ புருஷனும் சந்தோஷமாய் இல்லையா. ஆனந்தி எப்பவுமே அவங்க ரெண்டு பேர் அன்னியோன்னியத்தைப் பத்தி சொல்லிகிட்டே இருப்பா. ஞாபகம் இருக்கா?"

நீலகண்டன் சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. பின் கேட்டார். "சிவகாமி தம்பியை அனுப்பறதுக்குப் பதிலா ஏன் மகனை அனுப்பிச்சா, பார்வதி?"

"அந்த மனுஷன் நான் போக மாட்டேன்னு சொல்லியிருக்கலாம்"

நீலகண்டன் பெருமூச்சு விட்டார். "நீ இப்பவும் சிவகாமி நல்லவள்னு திடமாய் நம்பறே இல்லையா, பார்வதி"

"ஏன், நீங்க அவள் மகனை அனுப்பிச்சதுக்கு வேறு காரணம் இருக்கும்னு நினைக்கிறீங்களா?"

"ஆர்த்தி ஆகாஷைப் பார்க்கணும், அவன் கிட்ட அட்ராக்ட் ஆகணும்னு கணக்குப் போட்டு அனுப்பிச்ச மாதிரி எனக்குப் படுது"

பார்வதி ஏதோ சொல்ல வாய் திறந்த போது ஒரு நர்ஸ் இரத்த அழுத்தம் சோதிக்க வந்தாள். அவள் அதைக் குறித்துக் கொண்டு போன பிறகு நீலகண்டன் கேட்டார். "அவன் வேறெதாவது சொன்னானா?"

எதைப் பற்றி என்று அவள் கேட்கவில்லை. அவர் மனதில் என்ன ஓடுகிறது என்பது அவளுக்குத் தெரியும். பார்வதி சொன்னாள். "எதுவும் சொல்லலை. ஆனாலும் இருக்கிற ஒரே மகள் எங்கிருக்கிறாள்னு தெரிஞ்சதுக்கப்புறமும் அவங்கப்பா விட்டுட்டு இருப்பார்னு தோணலை. அவளைக் கூட்டிகிட்டு போயிடுவாங்கன்னு நினைக்கிறேன்"

நீலகண்டன் உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. பார்வதி குரல் கம்ம சொன்னாள். "அப்படி கூட்டிகிட்டுப் போறது நல்லதுன்னு தோணுது. நாம் எத்தனை நாள் கூட இருக்க முடியும்?"

இதையே தான் சில நாட்களுக்கு முன் அவர் மனைவி சொன்ன போது அவருக்கு ஆத்திரம் வந்தது. ஆனால் மாரடைப்பு வந்த பிறகு, மரணத்தின் விளிம்பு வரை ஒருமுறை போய் விட்டு வந்த பிறகு, அவரால் அவள் சொன்னதை ஒத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஆனால் பேத்தி அவள் தந்தை வீட்டில் பாதுகாப்பாக இருக்க முடியும் என்கிற நம்பிக்கை மட்டும் அவருக்கு வரவில்லை.

"பார்வதி அவங்க நம்ம பொண்ணை முகத்தைக் கூட காட்டாமல் எரிச்சாங்களே, மறந்துட்டியா"

"அவங்க பொண்ணை அவங்க நல்லா பார்த்துக்குவாங்கங்கற நம்பிக்கை எனக்கு இருக்குங்க"

மனைவியின் நாசுக்கான பதிலைக் கேட்டு நீலகண்டன் பெருமூச்சு விட்டார்.

# 11

I went to the garden of love,
And saw what I never had seen.
-William Blake

ஆகாஷ் உள்ளே நுழைந்த போது நீலகண்டன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்.

"ஹலோ தாத்தா, எப்படி இருக்கீங்க?"

"நல்லாயிருக்கேன்" புன்னகைக்க முயன்று அவர் தோற்றுப் போனார். தோற்றத்திலும், பேச்சிலும் அவன் அவருக்கு சிவகாமியை நினைவுபடுத்தினான். சிவகாமி நினைவு வந்ததும் அவருக்குத் தன் மகள் நினைவும் வர முகமலர்ச்சியை நடிப்புக்காகக் கூட கொண்டு வர முடியவில்லை.

ஆனால் அவன் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவன் கண்கள் ஆர்த்தியைத் தேடின. ஆனால் அவள் எங்கே என்று அவனாகக் கேட்கவில்லை. பார்வதியைப் பார்த்து "ஹலோ பாட்டி" என்றான்.

"ஆர்த்தி கேண்டீனுக்குப் போயிருக்கா" என்று பார்வதி சொல்ல ஆகாஷ் இந்தப் பாட்டியிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். இந்தப் பாட்டியின் கண்களுக்கு எதுவும் தப்புவதில்லை.

நீலகண்டன் பக்கம் திரும்பி அவர் உடல்நலம் பற்றி விசாரிக்க ஆரம்பித்தான். எல்லாவற்றிற்கும் ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிக் கொண்டிருந்த கணவனை பார்வதி எரிச்சலோடு பார்த்தாள். நல்ல வேளையாக ஆர்த்தி அந்த சமயம் உள்ளே வர ஆகாஷ் கவனம் அவள் பக்கம் திரும்பியது. இருவர் முகத்திலும் சூரியப் பிரகாசம். "ஹாய் ஆர்த்தி" என்று சொன்னவன் தன் பிரகாசத்தை கவனமாக குறைத்துக் கொண்டு இயல்பு நிலைக்கு மாறினான். ஆர்த்தி அப்படி மாறத் தெரியாமல் அதே பிரகாசத்துடன் "ஹாய்" என்றாள்.

பேத்தியின் முகத்தில் தெரிந்த அந்த மலர்ச்சி நீலகண்டனை என்னவோ செய்தது. சரித்திரம் திரும்புகிறது என்று நினைத்துக் கொண்டார். ஆனால் திரும்புகின்ற இந்த சரித்திரத்தில் ஆழமும் வேகமும் அதிகமாய் இருப்பதாகத் தோன்றியது. ஆனந்தி கூட இவ்வளவு தன்னிலை மறந்தது போல் அவருக்கு நினைவில்லை. கண்களை மூடிக் கொண்டு பெருமூச்சு விட்டார்.

ஆர்த்தி அன்று முந்தைய நாளை விட நேர்த்தியாக உடை அணிந்து மேலும் அழகாகத் தெரிவதாக ஆகாஷிற்குப் பட்டது. அதே போல தான் ஆர்த்தியும் அவன் தோற்றத்தைப் பற்றி நினைத்தாள். அவள் தான் கொண்டு வந்த டிபனை பாட்டியிடம் கொடுத்த போது ஆகாஷ்

மாமாவிற்குப் போன் செய்தான். "ஹலோ மாமா, ஆகாஷ் பேசறேன். ஒரு நிமிஷம். ஆர்த்திக்குத் தர்றேன்..... ஆர்த்தி உங்கப்பா"

ஒரு நிமிடம் அந்த அறையில் பலத்த அமைதி நிலவியது. தாத்தாவும் பாட்டியும் பேத்தியை பதட்டத்துடன் பார்த்தனர். ஆர்த்திக்கு அவன் கையில் இருந்து செல்லை வாங்கினாலும் பேச்சு வரவில்லை. மறு முனையிலும் கிட்டத் தட்ட அதே பாதிப்பு போல் தான் தெரிந்தது. ஒரு கனத்த மௌனத்திற்குப் பின் அவள் தந்தையின் குரல் கேட்டது. "ஹலோ....ஆர்த்தி?"

ஆர்த்திக்குப் பேச்சு வரவில்லை. கண்ணீர் தான் வந்தது. உடைந்த குரலில் அழைத்தாள். "அப்பா.....". அந்த வார்த்தையைச் சொல்லி முதல் முதலில் அழைக்கையில் உடல் ஏனோ புல்லரித்தது. மறுமுனை ஒரு கணம் மௌனம் சாதித்தது. மீண்டும் ஒலித்த போது அவர் குரலும் கரகரத்தது. "எப்படியிருக்கே ஆர்த்தி?"

"நல்லாயிருக்கேன்ப்பா"

"எப்ப வர்றே?"

அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. பாட்டி சொன்னது போல் அழைப்பு வருகிறது. ஆனால் அவளுக்கு தாத்தாவையும் பாட்டியையும் இந்த நிலையில் தனியாக விட்டுப் போக மனமில்லை. அதே சமயம் அவரை ஒரு முறை பார்க்க மனம் துடித்தது. "கொஞ்ச நாள் ஆகட்டும்ப்பா. வர்றேன். தாத்தா கொஞ்சம் தேறிட்ட பிறகு வர்றேன்."

அந்த பதிலை அவர் ரசித்தது போல் தெரியவில்லை. மேற்கொண்டு பேசப் பிடிக்காதது போல் ஒருவித இறுக்கத்தோடு சொன்னார். "அக்கா பேசணும்கிறா. அவகிட்ட தர்றேன்....."

அவருடைய உதாசீனம் அவள் முகத்தில் பளாரென அறைந்த மாதிரி இருந்தது. அவள் முகம் கருகியதை மூன்று பேரும் கவனித்தார்கள். அதற்கான காரணம் தெரியாவிட்டாலும் மூவரும் அவள் வலியை உணர்ந்தார்கள்.

சிவகாமியின் குரல் ஆர்த்தி காதில் கணீரென்று ஒலித்தது. "ஆர்த்தி நீ எப்படியிருக்கே?"

"நல்லாயிருக்கேன் அத்தை"- அவள் அந்த அத்தை வார்த்தைக்குக் கொடுத்த அழுத்தத்தை கவனித்த பார்வதி ஆகாஷைப் பார்த்து புன்னகைக்க, நீலகண்டன் மனைவியை முறைத்தார்.

"தாத்தா எப்படியிருக்கார்?" சிவகாமி கேட்டாள். ஆர்த்தி சொன்னாள் "நல்லாயிருக்கார்"

"அவர் கிட்ட கொஞ்சம் செல்லைக் குடும்மா."

சிவகாமி மேல் தாத்தாவுக்கு இருந்த வெறுப்பின் அளவை உணர்ந்திருந்த ஆர்த்தி அதிர்ந்து போய் தாத்தாவைப் பார்த்தாள்.

"என்னம்மா?" நீலகண்டன் கேட்டார்.

"அத்தை உங்ககிட்ட பேசணும்கிறாங்க"

ஆர்த்தியை எடுத்துக் கொண்டு சொல்லிக் கொள்ளாமல் தலைமறைவானது ஏன் என்ற கேள்வி கேட்கப்பட்டால் நீலகண்டன் ஆகாஷ் முன்னிலையில் வாய் தவறி சிவகாமி பற்றி ஏதாவது தாறுமாறாக சொல்லி விடப்போகிறார் என்று பயந்தாள் பார்வதி. ஆனால் நீலகண்டன் எதையும் பேசும் நிலையில் இருக்கவில்லை. அவர் மனம் பெரும் போராட்டத்தில் இருந்தது. ஒரு விதத்தில் பார்த்தால் யார் தயவில் அவர் உயிர் பிழைத்திருக்கிறாரோ அவள் பேசுகிறாள். இன்னொரு விதத்தில் பார்த்தால் யார் திட்டத்தால் அவர் மகள் உயிர் இழந்திருக்கிறாளோ அவள் பேசுகிறாள். இதில் அவளது எந்த செயலைப் பெரிதாக எடுத்துக் கொண்டு அவளிடம் எப்படிப் பேசுவது என்று அவரால் தீர்மானிக்க முடியவில்லை. அவர் கை இயந்திரத்தனமாக பேத்தி கையில் இருந்த செல்லை வாங்கியது.

"ஹலோ மாமா, எப்படி இருக்கீங்க?"

சிவகாமியின் குரல் கணீர் என்று கேட்டது. அவர் மகள் உயிரோடு இருந்த காலத்தில் இதே உரிமையுடன் தான் சிவகாமி அவரிடம் பேசுவாள். இன்றும் எதுவுமே நடக்காதது போல் அவள் பேசுகிறாள். அவரையும் அவளிடம் அப்படியே பேச வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள். அவள் எதிர்பார்த்தது போல் அடுத்தவர்களை நடக்க வைப்பதில் அவளுக்கு நிகர் யாருமில்லை. அவரையும் மீறி வார்த்தைகள் வந்தன. "நல்லாயிருக்கேம்மா"

"டாக்டர் கிட்டயும் பேசினேன். இன்னும் பயப்பட எதுவும் இல்லைன்னுட்டாங்க. மூணு நாள்ல டிஸ்சார்ஜ் செய்யறதா சொன்னாங்க. ஆர்த்தி, நீங்க, அத்தை மூணு பேரும் இங்கயே வந்துடுங்க."

நீலகண்டனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவர் இந்த அழைப்பை எதிர்பார்க்கவில்லை. "நாங்க ரெண்டு பேர் எதுக்கும்மா?"

"உங்களை விட்டுட்டு வந்தா ஆர்த்திக்கு உங்க யோசனையா தான் இருக்கும். நீங்க ரெண்டு பேர் எதுக்கு பாண்டிச்சேரியில் தனியா இருக்கணும்? வந்துடுங்க"

"இங்க நாங்க தனியா இல்லை. அரவிந்தாஸ்ரமமும், அன்னையும் இங்க இருக்காங்க"

"பக்தி இருந்தா உங்க மனசோட அவங்களை இங்கயும் கொண்டு வந்துடலாம். நீங்க ஆர்த்தி கூட வர்றீங்க. அவ்வளவு தான்"

இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஆணித்தரமாய் சொல்லியவள் அவர் சம்மதத்தைக் கூட எதிர்பார்க்கவில்லை.

சிவகாமி சொன்னதை அவர் மனைவியிடமும் ஆர்த்தியிடமும் சொன்ன போது ஆர்த்தியின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பார்வதி ஒன்றும் சொல்லவில்லை. ஆகாஷ் ஆர்த்தியின் சந்தோஷத்தில் சந்தோஷப்பட்டான். எப்படி குழந்தையைப் போல் அழகாக சந்தோஷப்படுகிறாள் என்று கண் நிறைய அவளைப் பார்த்தான். மனிதர்கள் சந்தோஷப்படும் போது அழகு கூடி விடுகிறது என்று நினைத்தான். அதுவும் அழகானவர்கள் சந்தோஷப்படும் போது பேரழகாகி விடுகிறார்கள்.

ஆனால் இளையவர்களின் சந்தோஷத்தில் அந்த முதியவர்கள் பங்கு கொள்ள முடியாமல் திணறினார்கள். பார்வதி தன் கணவனின் குணத்தை அறிந்ததால் தயங்கினாள். நீலகண்டனோ "சிவகாமி, இப்போது என்ன திட்டம் தீட்டி தங்களை அழைக்கிறாள்" என்ற கேள்விக்கு விடை பெற முடியாமல் குழம்பினார். எல்லாவற்றிற்கும் மேலாக ஏன் குழந்தையை எடுத்துக் கொண்டு தலைமறைவானீர்கள் என்று அவளோ, அவள் தம்பியோ கேட்காமல் இருந்தது பார்வதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

# 12

What we see depends mainly on what we look for. – John Lubbock

"நீங்க டிபன் சாப்பிட்டாச்சா?" ஆர்த்தி ஆகாஷைக் கேட்டாள்.

"இல்லை. நீ?"

"இல்லை. தாத்தாக்கும், பாட்டிக்கும் மட்டும் பார்சல் வாங்கிட்டு வந்தேன். நான் இனிமே தான்...."

ஆர்த்திக்கு அவன் சாப்பிட்டு விட்டு வர மாட்டான் என்று உள்ளுணர்வு முன்பே சொல்லி இருந்ததால் தான் அவள் தனக்கு பார்சல் வாங்கி வராமல் இருந்தாள். இருவரும் சாப்பிட கேண்டீனுக்கு ஜோடியாகக் கிளம்பினார்கள். நீலகண்டன் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்து விட்டு மனைவியிடம் சொன்னார். "எனக்கு இது பிடிக்கலை பார்வதி"

"நமக்கு பிடிச்சது மட்டும் தான் நடக்கும்னு பகவான் உத்தரவாதமா கொடுத்திருக்கான்"

நீலகண்டன் ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் உர்ரென்று உட்கார்ந்திருந்தார். பார்வதி கேட்டாள். "என்ன சத்தத்தையே காணோம். என் மேல கோவமா?"

"கோவம் உன் மேல இல்ல. நமக்கு பொருத்தம் பார்த்த அந்த எட்டிமடை ஜோசியன் மேல தான்...."

"எப்பவோ பரலோகம் போய் சேர்ந்த அந்த மனுஷன் மேல எத்தனை தடவை தான் கோவப்படுவீங்க"

**சே**ர்ந்து நடக்கும் போதே மனம் இவ்வளவு உயரத்திற்கு இறக்கை கட்டி பறக்கும் என்பதை ஆர்த்தியால் நம்ப முடியவில்லை. 'இவருடன் இருக்கும் போது சின்னச் சின்ன விஷயங்கள் கூட எவ்வளவு இனிமையாக இருக்கின்றன" என்று அவள் தனக்குள் நினைத்துக் கொண்டாள். கூடவே மனதின் உள்ளே இருந்து ஒரு குரல் சொன்னது "ஜாக்கிரதையாய் இரு. இந்த இனிமைக்குப் பின்னால் அபாயம் இருக்கக்கூடும்". ஆனால் இது போன்ற எச்சரிக்கை கூட அவளுக்கு இப்போது கசந்தது.

ஆகாஷ் கேட்டான். "உங்கப்பா என்ன சொன்னார்னு உன் முகம் அப்போ ஒரு மாதிரியா வாடிடுச்சு?"

மறுபடி அவள் முகம் அப்பா கோபத்தை நினைத்து வாடியது. அவனிடம் தங்களுக்குள் பேசிக்கொண்டதையும் அவர் கோபத்தோடு செல்லை சிவகாமிக்குக் கொடுத்ததையும் சொன்னாள்.

அவன் அமைதியாகச் சொன்னான் "மாமா நிலைமையில் நீ ஒரு நிமிஷம் நின்னு பார்க்கணும் ஆர்த்தி. அவரோட ஒரே குழந்தையை அவர் மாமனார் எடுத்துகிட்டு தலைமறைவாயிடுறார். எத்தனையோ வருஷங்கள் கழிச்சு மகள் கிடைக்கிறாள். ஆனா வர சொல்றப்ப அவள் இன்னும் தன் தாத்தா சார்பாய் தான் பேசறாள்ங்கிறது அவருக்கு ரசிக்க முடியும்னு நீ நினைக்கிறாயா?"

"அவருக்கு மகள் மேல் அவ்வளவு பாசமாய் இருந்தா அவரும் உங்க கூட வந்திருக்கலாமே"

ஆகாஷிற்கு அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஒரு நிமிட சிந்தனைக்குப் பின் சொன்னான். "அவர் ஒரு moody டைப் ஆர்த்தி. எப்ப எப்படி யோசிப்பார், மாறுவார்னு யாராலயும் சொல்ல முடியாது. எனக்குத் தெரிஞ்சு அவர் எப்பவுமே ஒரே மாதிரி நடந்துக்கறது எங்கம்மா ஒருத்தி கிட்ட தான். அவர் இப்ப வந்திருந்தால் கூட உங்க தாத்தா கிட்ட கண்டிப்பா நல்ல விதமாய் நடந்துகிட்டிருப்பார்னு சொல்ல முடியாது. ஒரு விதத்தில் வராமல் இருந்தது நல்லதுக்குத் தான்."

அவன் வார்த்தைகளை மனதில் அசை போட்டபடி சிறிது நேரம் ஆர்த்தி மௌனமாக இருந்தாள். இப்போது கூட தாத்தாவிடம் பேசியதும், தாத்தாவையும் பாட்டியையும் வரச் சொன்னதும் கூட சிவகாமி தான் என்பது நெருடலாய் இருந்தது. தாத்தா செய்தது சரி என்று சொல்ல முடியாவிட்டாலும் அப்பா தாத்தாவை உதாசீனப்படுத்துவதை அவளுக்கு ஜீரணிக்கக் கஷ்டமாக இருந்தது.

அவள் தந்தையின் குணம் பற்றி அவன் சொன்னதை கேட்ட பின் அவளுள் எழுந்த எண்ணத்தை அவள் வெளிப்படையாக அவனிடம் சொன்னாள். "எனக்கு அப்பாவை நேரில் பார்த்த ஞாபகம் கூட இல்லை. போட்டோல பார்த்த முகம் தான் ஞாபகம் இருக்கு. பிறகு எப்படி அவர் மனசும், குணமும் தெரியும்"

அவள் வார்த்தைகள் அவன் மனத்தை உருக்கின. தாய் தந்தையரின் பூரண அன்பைப் பெற்று வளர்ந்த அவனுக்கு அவளது இழப்பின் வேதனையை உணர முடிந்தது. பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் அவளுடன் நடந்தான்.

அவர்கள் கேண்டீனை அடைந்த போது கூட்டம் அதிகமாக இருந்தது. ஒரு மூலையில் இருந்த இரண்டு இருக்கைகள் மட்டும் காலியாக இருந்ததைக் கண்டு அவர்கள் அங்கு சென்று அமர்ந்தனர். அந்த நேரத்தில் தன்னை யாரோ பின்னாலிருந்து கண்காணிக்கிறார்கள் என்று ஆர்த்திக்கு உள்ளுணர்வு சொல்லியது. ஆனால் அவள் திரும்பிப் பார்க்க முயற்சிக்கவில்லை.

அவளுக்கு வரும் கனவைப் போலவே இந்த உணர்வும் பல சமயங்களில் வருவதுண்டு. ஆரம்ப காலங்களில் அவள் திரும்பிப் பார்த்திருக்கிறாள். அது போன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்தப் பகுதியில் கும்பலாக மனிதர்கள் இருந்ததால் அவளால் அது யார் என்று கண்டு பிடிக்க முடிந்ததில்லை. நாளாக நாளாக தன் உள்ளுணர்வும் அந்தக் கனவைப் போலவே ஏதோ மானசீக நோயின் அறிகுறியாகவே இருக்கும் என்று நம்ப ஆரம்பித்து விட்டாள். ஆனால் இப்போது அவள் கனவு ஏதோ நிஜத்தின் நிழல் தான் என்று தெரிந்த பின் இந்த உள்ளுணர்வும் உண்மையாக இருக்குமா என்று சந்தேகம் எழ அவள் இதயத்துடிப்பு வேகமாகியது. யார் அவளைக் கண்காணிக்கிறார்கள்? ஏன் கண்காணிக்கிறார்கள்?

ஆர்த்தியின் முகத்தில் இருந்து கண்களை எடுக்காமல் இருந்த ஆகாஷ் அவள் முகமாறுதலை உடனடியாக கவனித்தான். "என்ன ஆச்சு ஆர்த்தி?"

அவனிடம் சொல்வதா வேண்டாமா என்கிற குழப்பம் உடனடியாக அவளுக்குள் எழுந்தது. அவன் அவளைப் பைத்தியம் என்று நினைத்துக் கொள்வானோ என்கிற சந்தேகம் அவளுக்கு வந்தது. ஆனால் அந்த உள்ளுணர்வு மேலும் பலமாக அவளுக்கு ஏற்படத் தொடங்கவே அவனிடம் மெல்ல சொன்னாள். "என்னை யாரோ பின்னாலிருந்து பார்த்துட்டு இருக்காங்கங்கற உணர்வு....சும்மா கூட இருக்கலாம்...."

அவன் அழகாக குறும்பாகப் புன்னகை செய்தான். "அழகான பொண்ணுன்னா அப்படி பார்க்கப்படறது சகஜம் தான்"

அவனிடம் அழகு என்ற பாராட்டை வாங்கியதால் பெரியதோர் ஆனந்த அலை மனதில் அடித்த போதிலும் தற்போதைய சூழ்நிலையில் அவளால் அதை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. "அதில்லை. இது வேற மாதிரி....." அவளுக்கு எப்படி சொல்வது என்று தெரியாவிட்டாலும் அவனுக்கு இந்த குறுகிய காலத்தில் முகம் பார்த்தே அவளை நன்றாகப் படிக்கத் தெரிந்திருந்ததால் இது விளையாட்டான உணர்வல்ல என்பதை ஊகிக்க முடிந்தது.

அவன் உடனடியாக அந்தக் கூட்டத்தில் பார்வையை படர விட்டான். பலவிதமான மனிதர்கள் அங்கிருந்தார்கள். அதில் இவளைக் கண்காணிப்பது யாராக இருக்கும் என்று எண்ணியபடி பார்வையைக் கூர்மையாக்கினான். பார்த்துக் கொண்டே வந்த அவன் கண்கள் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி மீது வந்த போது வேகமாக எழுந்த அந்தப் பெண்மணி அங்கிருந்து அதே வேகத்துடன் வெளியேறினாள்.

அந்த அவசரமான வெளியேற்றம் ஆர்த்தியைப் பார்த்துக் கொண்டு இருந்த பெண்மணி அவளாகத் தான் இருக்க வேண்டும் என்று உறுதி செய்தது.

"உன் ஃபீலிங் சரியாய் இருந்ததுன்னா இப்ப போற லேடியாய் தான் இருக்கணும்"

ஆர்த்தி உடனடியாகத் திரும்பிப் பார்த்த போது சிவப்பு சேலை உடுத்திருந்த அந்தப் பெண்மணி கேண்டீன் கதவுப் பக்கம் போயிருந்தாள். ஆர்த்தியும் மின்னல் வேகத்தில் எழுந்து வெளியே செல்ல முற்பட அந்த நேரமாகப் பார்த்து ஒரு டிரேயில் டிபன் எடுத்துக் கொண்டு வந்த சர்வர் எதிரே வர வேறு வழியில்லாமல் அவனுக்கு அவள் ஒதுங்கி வழி விட வேண்டி இருந்தது. அதன் பிறகு அவள் வெளியே வந்தபோது அந்த சிவப்பு சேலைப் பெண்மணி மாயமாகி இருந்தாள்.

# 13

Decision making can sometimes seem like inner civil war.
- Jim Rohn

ஆகாஷுக்கு ஆர்த்தியின் செய்கை திகைப்பை ஏற்படுத்தியது. அவள் ஏமாற்றத்துடன் திரும்ப வந்து அமர்ந்த போது திகைப்பு மாறாமல் கேட்டான். "என்ன ஆர்த்தி?"

அவள் சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. அவனிடம் சொல்ல நிறைய இருந்தன. அவன் மீது இந்த மிகக்குறுகிய காலத்தில் அவளுக்கு ஏற்பட்டிருந்த அந்த ஏதோ ஒன்று எதையும் மறைக்காமல் சொல்லத் தூண்டியது. ஆனால் அவன் சிவகாமியின் மகன் என்ற ஒரே காரணம் அவள் வாயை அடைத்தது. தனக்குத் தொடர்ந்து வரும் கனவைப் பற்றியும், அதன் பின்னால் இருந்த மர்ம நிகழ்வுகள் பற்றியும், தாய் கொலை செய்யப்பட்டிருந்தாள் என்ற சந்தேகம் பற்றியும், அவன் தாய் மீது அவளது தாத்தாவிற்கு சந்தேகம் இருப்பது பற்றியும் அவள் எப்படிச் சொல்வாள்? அதைச் சொன்னால் ஒழிய தன்னை சிறு வயது முதல் யாரோ அவ்வப்போது கண்காணிப்பது போன்ற உணர்வு ஏற்படுவது பற்றிச் சொல்லி அவனுக்குப் புரிய வைக்க முடியாது என்று தோன்றியது. ஒரு வேளை சிவகாமி யாராவது ஆள் அனுப்பி தங்களைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருப்பாளோ என்கிற சந்தேகமும்

அவளுக்கு வந்தது. தாத்தாவின் சந்தேகம் தன்னையும் தொற்றிக் கொண்டு விட்டது என்று நினைத்தாள்.

அவன் தனது பதிலுக்காகக் காத்திருக்கிறான் என்பதை உணர்ந்த பின் மெல்ல சொன்னாள். "எனக்கு திடீர்னு அந்தம்மா கிட்ட பேசணும், எனக்குத் தோணியது நிஜம் தானான்னு தெரிஞ்சுக்கணும்னு தோணிச்சு. அதான்....."

அவள் சொல்லியது உண்மையாக இருக்கும் என்று அவன் நம்பினாலும் அவள் சொல்லாமல் விட்டது நிறைய இருக்கிறது என்ற எண்ணம் அவனுள் பலமாக எழுந்தது. சர்வர் டிபனுடன் வர இருவரும் அமைதியாக சாப்பிட ஆரம்பித்தார்கள்.

நீலகண்டன் தன் தலைவிதியை நொந்து கொண்டார். யாருடைய நிழல் கூடத் தன் பேத்தி மீது விழக் கூடாது என்று அவர் வைராக்கியமாக இருந்தாரோ அவள் இன்று அவர் பேத்தியை பறித்துக் கொள்ளப் போகிறாள் என்பதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. அது மட்டுமல்ல ஆர்த்தி அவள் மகனிடமே மனதைப் பறி கொடுத்தும் விட்டாள் என்ற உண்மை அவர் இதயத்தை சுக்கு நூறாக உடைய வைத்தது. 'இந்தக் காதல் கத்தரிக்காய்னு எல்லாம் இல்லாமல் என் பேத்தி ஸ்படிகம் மாதிரி பவித்திரமாய் இருந்தாள். இந்த ராட்சஸி மகனை அனுப்பி எல்லாத்தையும் மாத்திட்டாள். எல்லாத்துக்கும் ஆரம்ப காரணம் இந்தப் பார்வதிக் கடன்காரி தான். அவள் வாய் மூடிகிட்டிருந்திருந்தா எனக்கு இந்த மாரடைப்பு வந்திருக்காது.. இந்த மாரடைப்பு வராமல் இருந்திருந்தா இப்படி அந்தக் குடும்பத்து கிட்ட உதவிக்குன்னு ஆர்த்தி போயிருக்க வேண்டியிருக்காது....."

கணவன் தன்னைப் பார்த்த பார்வையில் உஷ்ணம் இருந்ததைக் கவனித்த பார்வதி சொன்னாள். "இப்படி நெத்திக் கண்ணைத் திறக்காம நினைக்கிறதை வெளிப்படையாவே சொல்லலாம்..."

"எல்லாம் உன்னால் தான் ஆச்சுன்னு நினைச்சேன் அவ்வளவு தான்"

"ஆமா. நான் தான் டாக்டர் சொன்ன மாதிரி ப்ரஷருக்கு மாத்திரை சரியா சாப்பிடாம கேர்லஸா இருந்தேன். டாக்டர் கிட்ட செக்கப்புக்குப் போனா அவர் திட்டுவார், இனியும் மாத்திரை சாப்பிட சொல்வார்னு அந்தப் பக்கம் போகவே கூடாதுன்னு வைராக்கியமா இருந்ததும் நான் தான். கண்டதுக்கு எல்லாம் டென்ஷன் ஆயி உடம்பைக் கெடுத்துகிட்டதும் நான் தான்....."

"அம்மா தாயே போதும் உன் திருவாயை இதோட மூடிக்கோ. இப்ப என்ன செய்யலாம். அதைச் சொல்லு"

பார்வதி அவர் கால்மாட்டில் வந்து அமர்ந்தாள். "அவளை அனுப்ப முடியாதுன்னு சொல்ல நமக்கு உரிமையில்லை. அதனால அதில யோசிக்க எதுவும் இல்லை. சிவகாமி கூப்பிட்ட மாதிரி நாமளும் போகணுமா வேண்டாமாங்கறது தான் நாம முடிவெடுக்கணும்"

"எனக்கு அவள் அனுப்பின காசில் உயிர் பிழைச்சதே அவமானமாய் இருக்கு. இன்னும் அவள் வீட்டுக்கே போய் வாழ்றதை என்னால் நினைச்சுக் கூட பார்க்க முடியலை பார்வதி"

பார்வதி அமைதியாகக் கேட்டாள். "சரி, ஆர்த்தியைப் பிரிஞ்சு உங்களால இருக்க முடியும்னு நினைக்கிறீங்களா?"

நீலகண்டன் முகத்தில் விவரிக்க முடியாத வேதனை படர்ந்தது. "நாம் மனசறிஞ்சு யாருக்கும் துரோகம் நினைக்கலையே பார்வதி. கடவுள் ஏன் நம்மள இப்படி சோதிக்கிறான்? ஏழைகள் வாழ்க்கையில விளையாடறதைத் தவிர கடவுளுக்கு வேற பொழுதுபோக்கே இல்லை போலிருக்கு"

கணவனின் வேதனையைக் கண்டதும் பார்வதிக்குக் கண்ணில் நீர் திரை போட்டது. ஆனாலும் கணவனை தைரியப்படுத்தும் வகையில் பேசினாள். "நம்ம பொண்ணு இறந்ததை விட்டுப் பார்த்தால் மத்த எல்லா சோதனையிலும் அந்தக் கடவுள் நமக்கு வழி காட்டியிருக்கான். பாண்டிச்சேரி வந்தப்ப உங்களுக்கு அந்த லைப்ரரியில நல்ல சம்பளத்தில் வேலை கிடைச்சிருக்காட்டி நாம என்ன ஆயிருப்போம், யோசிச்சுப் பாருங்க. இப்பவும் உங்களை இந்த ஆஸ்பத்திரிக்குக் கூட்டிகிட்டு வந்த பிறகு சிவகாமி மனசு வச்சிருக்கலன்னா நானும் உங்க பேத்தியும் நடுத்தெருவில் தான் நின்னுருப்போம்....."

நீலகண்டன் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்து விட்டுச் சொன்னார். "எனக்கு அங்கே போகவும் பிடிக்கலை. ஆர்த்தியை விட்டுட்டு இருக்கவும் பிடிக்கலை. ஆர்த்தி அந்தப் பையன் வலையில் விழுந்துட்டது சுத்தமாய்ப் பிடிக்கலை. எனக்கென்னவோ சிவகாமி அந்தப் பையன் மூலம் நம்ம ஆர்த்திக்கு வசியம் செய்துட்டாளோன்னு சந்தேகமாய் இருக்கு..... சும்மா அந்த ஓட்டைப் பல்லைக் காட்டிட்டு சிரிக்காதே பார்வதி. நான் என்ன ஜோக்கா அடிக்கறேன்."

பார்வதி சிரிப்பை சிறிது குறைத்துக் கொண்டு சொன்னாள். "உங்க பிரச்சினையே பிடிக்கலைங்கற இந்த வார்த்தை தான். நடக்கறது எதுவும் பிடிக்கலைங்கறதே ஒரு மாதிரி வியாதி தான். ஆனா இந்த வியாதிக்கு மருந்து தான் இல்லை. உலகத்தில் எதுவும் நம்ம விருப்பப்படி நடக்கறதும் இல்லை. உலகம் நம்ம கருத்தை லட்சியமும் செய்யறதில்லை. அதனால் விமரிசனத்தை விட்டுட்டு நடக்க வேண்டியதைப் பாருங்க".

"இத்தனை வேதாந்தம் பேசற நீயே சொல்லு, நாம என்ன செய்யலாம்?"

"ஆர்த்தி கூடவே நாமளும் போயிடறது நல்லதுன்னு தோணுது"

"பார்வதி உனக்கு அறிவு, கூடு, சொரணைன்னு ஏதாவது இருக்கு?"

"அது எல்லாம் இருந்து பிரஷர், டென்ஷன், ஹார்ட் அட்டாக் எல்லாம் வரும்னா எனக்கு அது எதுவுமே வேண்டாம்"

"நம்ம பொண்ணைக் கொன்னவங்க வீட்டுக்குப் போய் பிழைக்கணுமா? இதெல்லாம் ஒரு பிழைப்பா."

"ஏன், இப்படி எடுத்துக்கோங்களேன். நம்ம பேத்தி பாதுகாப்பா இருக்காளான்னு பார்த்துகிட்டு பக்கத்திலேயே இருக்கலாம் இல்லையா. இங்கே இருந்துகிட்டு அங்கே அவ எப்படி இருக்காளோ, அவங்க என்ன செஞ்சுட்டாங்களோன்னு பயப்படறதை விட அவ கூடவே போய் இருக்கிறது நல்லதில்லையா?"

# 14

Hope does not just occur. It is a conscious choice, an act of will. One must choose hope in the face of all we know.
- Daisaku Ikeda

தன் வாழ்க்கையில் தனக்குள்ள பிடி சிறிது சிறிதாக நழுவிக்கொண்டு போவதாக நீலகண்டன் உணர்ந்தார். ஏழ்மையிலும், சோதனைக் கட்டங்களிலும் கூட வேறு ஒருவர் தயவை அவர் நாட வேண்டி வந்ததில்லை. அவர் வாழ்வை அடுத்தவர் தீர்மானிக்க அவர் விட்டதில்லை. ஆனால் இப்போது எங்கோ இருந்து சிவகாமி அவர் வாழ்வைத் தீர்மானிப்பதை வேடிக்கை பார்க்கும்படியாக ஆகி விட்டது. எல்லாம் ஆனது பேத்தியை அந்தக் கொலைகாரக் குடும்பத்திற்குத் தனியாக அனுப்ப அவர் மனம் சிறிதும் ஒத்துக் கொள்ளாததால் தான்.

பார்வதி சொன்னது போல் பேத்தியின் கூட இருப்பது தான் பாதுகாப்பு என்று உள்ளுணர்வும் சொன்னதால் அவளுடன் போக சம்மதித்த போது அவர் மனம் உடைந்தே போனார். அரவிந்தாஸ்ரமத்துக்குப் போய் அன்னை சமாதியில் தலையை வைத்து குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதார். கணவனின் துக்கத்தைப் பார்த்த போது பார்வதி மனம் தாங்காமல் சொன்னாள். "உங்களுக்கு அவ்வளவு கஷ்டமாய் இருந்தால் நாம் அங்க போக வேண்டாம். ஆர்த்தியை மட்டும் அனுப்பலாம். நமக்கு ஞாபகம் வர்றப்ப போய் அவளைப் பார்த்துகிட்டா போதும்"

"ஒரு வேளை அப்படிப் பார்க்கப் போறப்ப ஆனந்திக்கு ஆன மாதிரி இவளுக்கும் ஏதாவது ஆகியிருந்தா நம்மளை நாமே மன்னிக்க முடியுமா பார்வதி"

"எத்தனை சொன்னாலும் ஏன் நீங்க திரும்பத் திரும்ப பயப்படறீங்கன்னு எனக்குப் புரியலை"

"ஒரு தடவை அடிபட்டிருக்கோம் பார்வதி. அதனால என்னால பயப்படாமல் இருக்க முடியலை. அதே நேரம் அங்க போகக் கூட மனசு கூசுது. எங்கேயிருந்து அந்தக் குழந்தையைக் கூட்டிகிட்டு வந்தோமோ அங்கேயே நாமளே கொண்டு போய் விட்டு அங்கே தங்கற மாதிரி ஒரு நிலைமையை இந்த அன்னை தந்துட்டாங்களேன்னு வேதனையாய் இருக்கு."

"நம்மால் மாத்த முடியாத விஷயங்களை ஏத்துக்கறதுதாங்க புத்திசாலித்தனம். கடவுள் எதையுமே காரணம் இல்லாமல் தர்றதில்லைங்க"

"ஆனா நம்ம பொண்ணு செத்ததுக்கே இன்னும் நம்மால காரணம் கண்டுபிடிக்க முடியலையே பார்வதி"

"ஒரு வேளை அந்தக் காரணத்தைத் தெரிஞ்சுக்கத்தான் திரும்ப கடவுள் நம்மளை அங்கே அனுப்பறாரோ என்னவோ?"

நீலகண்டன் கண்களைத் துடைத்துக் கொண்டார். "உங்கப்பன் உன்னை வக்கீலுக்குப் படிக்க வச்சிருக்கலாம்"

அன்று நிறைய நேரம் அன்னையின் சமாதியின் அருகே மனைவியுடன் அமர்ந்து தன் பேத்திக்காக பிரார்த்தித்தார். வேலை செய்யும் லைப்ரரிக்குப் போய் இனி தான் வர முடியாது என்று தெரிவித்தார். டியூஷன் சொல்லிக் கொடுக்கும் குழந்தைகளிடம் வேறு இடத்தைத் தேடிக் கொள்ளச்

சொன்னார். நன்றாகப் படிக்கும்படி அந்தக் குழந்தைகளைக் கேட்டுக் கொண்டார். அன்றிரவு மகள் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு தூங்காமல் நிறைய நேரம் பிரமை பிடித்தபடி உட்கார்ந்திருந்தார்.

"ஆனந்தி இந்த அப்பாவை மன்னிச்சுடு. என்னால் முடிஞ்ச வரை நான் ரகசியமாய் உன் மகளைப் பாதுகாத்துட்டேன். இப்ப எல்லாமே என் கை மீறிப் போயிடுச்சு ஆனந்தி..... உன்னைக் கொன்ற கூட்டத்துக்கு உன் மகளைத் தனியாய் அனுப்ப பயந்துட்டு தான் நானும் கூடப் போறேன். அவங்க தயவுல வாழ்றது பிச்சையெடுத்துப் பிழைக்கிறதை விட கேவலமாய் தான் இருக்கு. ஆனா எனக்கு வேற வழி தெரியலை ஆனந்தி....."

தன் கணவன் வாழ்வில் முதல் முறையாக விட்டுக் கொடுத்திருக்கிறார் என்பதை எண்ணிய போது பார்வதியின் மனம் மிகவும் இளகியது. மருமகன் ஒரு பேச்சுக்காகக் கூட உடல்நிலை பற்றி விசாரிக்கவில்லை என்பதும், அவர்களை வரச் சொன்னது கூட மருமகன் அல்ல என்பதும் அவரைப் பொறுத்தவரை அவமானமான விஷயம் என்பதை அவள் அறிவாள். அப்படியிருந்தும் அங்கு போகும் முடிவை பேத்தி மீது இருக்கும் பாசத்தால் செய்திருக்கிறார். 'இந்தக் கோபம், பிடிவாதம் இல்லாவிட்டால் நல்ல மனுஷன் தான்' என்று நினைத்த பார்வதி பெருமூச்சு விட்டாள்.

மனைவி தூங்கவில்லை, விழித்துக் கொண்டு தானிருக்கிறாள் என்று உணர்ந்த நீலகண்டன் சொன்னார். "பெருமூச்சு விடறதுக்கு பதிலா வெளிப்படையாய் நினைச்சதை சொல்லலாம்"

"இந்த நடு ராத்திரியில் வாக்குவாதம் ஆரம்பிக்க நான் தயாரில்லை. உங்க பேத்தி முழிச்சுக்குவா"

ஒரு நிமிடம் ஒன்றும் பேசாமல் இருந்தவர் குரல் கரகரக்க சொன்னார். "அவள் ரொம்ப சந்தோஷமாய் இருக்காள், இல்லையா"

"அப்பாவைப் பார்க்கப் போறோம், கூட பாட்டி தாத்தாவும் வர்றாங்கன்னு சந்தோஷமாய் இருக்காள்"

கூட ஆகாஷும் இருப்பான் என்பதும் சந்தோஷத்திற்கு ஒரு காரணம் என்பதை இருவரும் வாய் விட்டு சொல்லவில்லை. நீலகண்டனால் ஆகாஷ் மேல் சிவகாமியின் மகன் என்ற குற்றத்தைத் தவிர வேறெந்தக் குற்றமும் காண முடியவில்லை. ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனவுடன் வீட்டுக்குக் கூட்டி வந்தவன் அந்த மிகச்சிறிய வீட்டைப் பார்த்து முகம் சுழிக்கவில்லை. அவன் தங்கியது நட்சத்திர ஓட்டலில் என்றாலும், அந்த வீட்டுக்கு வந்து அவர்களுடைய சாமான்கள் பேக் செய்வதிலும் வெகு இயல்பாக அவர்களுக்கு உதவினான். அவர்கள் வீட்டில் கீழே உட்கார்ந்து சாப்பிட்டான். ஆர்த்தியிடம் எவ்வளவு கவரப்பட்டிருந்தாலும் அவளுடன் பழகிய விதத்தில் மிகவும் கண்ணியமாக இருந்தான் என்பதை அவரால் மறுக்க முடியவில்லை. இதில் எத்தனை நடிப்பு என்ற சந்தேகம் அவருக்கு இருந்தாலும் அதை நடிப்பு என்று நிரூபிக்க அவரிடம் ஆதாரம் இருக்கவில்லை. நாளை அவர்கள் பாண்டிச்சேரியை விட்டுக் கிளம்புகிறார்கள். அவனுடைய வீட்டுக்குப் போன பின்பு எப்படி நடந்து கொள்கிறான் என்பதை வைத்துத் தான் எந்த முடிவுக்கும் வரமுடியும்.

"பார்வதி, அங்கே அவங்கப்பா கிட்ட ஆர்த்திக்குத் தொடர்ந்து வரும் இந்தக் கனவைப் பற்றி நாம் சொல்ல வேண்டாமா?"

பார்வதியும் அந்தக் கேள்வியைப் பலமுறை தன்னுள் கேட்டுக் கொண்டு இருக்கிறாள். தான் நினைத்ததை கணவனிடம் சொன்னாள்.

"நாமளா எதுவும் சொல்ல வேண்டி வராது. அவங்களா தெரிஞ்சுக்குவாங்க. இதெல்லாம் மறைக்கக் கூடிய விஷயம் இல்லையே"

"இந்தக் கனவைப் பத்தித் தெரிஞ்சுக்கறப்ப அவங்கப்பாவும் சிவகாமியும் அதை எப்படி எடுத்துக்குவாங்க, என்ன செய்வாங்கன்னு நினைக்கிறாய்"

பார்வதியாலும் அதை ஊகிக்க முடியவில்லை.

# 15

**மன அமைதியும் பொருள்களில் பேராசையும் ஒன்றுக்கொன்று முரணானவை. அவை இரண்டும் ஒத்துப் போகா.**

**– சுவாமி சிவானந்தர்**

"அப்படின்னா இளவரசி அரண்மனைக்கு திரும்பி வர்றான்னு முடிவாயிடுச்சு. எப்ப வர்றான்னு சொன்னாய் பவானி?" பஞ்சவர்ணம் மகளிடம் ஆர்வமாகக் கேட்டாள்.

"பாண்டிச்சேரியில் இருந்து கிளம்பிட்டாங்களாம். நாளைக்கு வர்றாங்களாம்"

பஞ்சவர்ணம் மெள்ள எழுந்து அந்த அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள். அப்படி நடக்கிறாள் என்றால் அவள் ஆழமாக ஏதோ சிந்திக்கிறாள் என்று அர்த்தம். ஆரம்பத்தில் வேகமாக நடக்கும் போது அவளது மூளை பல்வேறு திட்டங்களை மேற்போக்காக மனதில் அலசிப் பார்க்கிறது என்று அர்த்தம். நடை வேகம் குறைந்து நிதானமாக நடக்கும் போது அதில் ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டது என்றும் அந்த ஒரு திட்டம் அணு அணுவாக பரிசீலிக்கப்படுகிறது என்றும் அர்த்தம். கிட்டத்தட்ட அறுபது வயதை எட்டி விட்டாலும் பஞ்சவர்ணத்தின் மூளை தன் செயல் திறன் சற்றும் இழக்காமல் இருந்தது.

பஞ்சவர்ணத்தின் நடை வேகம் குறைய ஆரம்பித்த போது பவானிக்கு அடிவயிற்றைக் கலக்கியது.

"அவள் கூட அந்தக் கிழங்களும் வருதுன்னு சொன்னாயே, கூப்பிட்டது யார் உன் புருஷனா, சிவகாமியா?" பஞ்சவர்ணம் கேட்டாள்.

"அவருக்கு மகள் மட்டும் வந்தால் போதும்னு இருந்தது. ஆனா பெரியக்கா தான் அவங்களையும் கூட வரச் சொல்லிக் கூப்பிட்டாங்க"

"அவளென்ன உன் கூடப்பிறந்தவளா? ஏண்டி அவளைப் பெரியக்கான்னு கூப்பிடறாய். சரி, அந்தக் கொலைகாரி ஏதாவது திட்டம் போடாமல் ஒரு துரும்பைக் கூட அசைக்க மாட்டாளே, இப்ப என்னடி திட்டம் வச்சிருக்கா?"

பவானி பதில் சொல்லவில்லை. யார் மனதில் என்ன இருக்கிறது என்று யாரால் தெரிந்து கொள்ள முடியும். அதுவும் பஞ்சவர்ணம், சிவகாமி போன்றவர்களைப் புரிந்து கொள்ள படைத்தவனால்

கூட முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. மகளின் மௌனம் பஞ்சவர்ணத்தின் எரிச்சலைக் கிளப்பியது.

"கல்யாணமாகி பதினேழு வருஷத்துக்கும் மேல ஆயிடுச்சு. ஆனா இன்னும் உன் வீட்டு நிர்வாகமே உன் கையில் வரலை, வீடு கம்பெனி எல்லாமே சிவகாமி கையில் தான் இருக்குன்னா அதுக்குக் காரணம் உன் மந்த புத்தி தான்டி. அழகு இருந்தால் பத்தாதுடி, சாமர்த்தியமும் வேணும். புருஷனைக் கூட கையில் போட்டுக்க முடியலைன்னா நீ என்ன பொம்பளைடி"

பவானி வாயைத் திறக்கவில்லை. பல வருடங்களாக இது போன்ற திட்டுக்களைக் கேட்டு அவளுக்கு சலித்து விட்டது. கல்யாணம் ஆன புதிதில் தாய் பேச்சைக் கேட்டு கணவனை தன் வசப்படுத்த பிரம்மப் பிரயத்தனம் செய்திருக்கிறாள். ஆனால் அதில் ஒரு சிறு வெற்றி கூட அவளுக்குக் கிடைத்ததில்லை. சிவகாமி என்ற மலையோடு மோத தனக்கு சக்தியில்லை என்று அவள் ஒப்புக் கொண்டு பல காலமாயிற்று. ஆனால் பஞ்சவர்ணத்திற்கு இன்னும் தன் மகளின் தோல்வியை சகித்துக் கொள்ள முடியவில்லை. பெருமூச்சு விட்டபடி சோபாவில் அமர்ந்தாள்.

"உன்னாலயும், அவங்கம்மாவாலயும் முடியாததை அந்தப் பொண்ணாவது சாதிக்குதான்னு பார்ப்போம். அந்தப் பொண்ணு பேரு என்ன சொன்னாய்?"

"ஆர்த்தி"

"சரி உன் புருஷனை சரிக்கட்ட முடியாட்டியும் அந்த ஆர்த்தியையாவது சரிக்கட்டப் பார். நம்ம மூர்த்தியும் அந்தப் பொண்ணும் நல்லா நெருங்கிப் பழகற மாதிரி பார்த்துக்கோ. அவனைப் பத்தி அவள் கிட்ட உயர்வாய் பேசு. புரிஞ்சுதா?"

பவானி தலையாட்டினாள். மூர்த்தி அவளுடைய சகோதரனின் மகன். பெற்றோரை இழந்திருந்த அவன் இங்கு தான் வாழ்ந்து வருகிறான். பார்க்க அழகாகவும், தினமும் குறைந்தது ஜிம்மில் ஒரு மணி நேரமாவது செலவழித்து நல்ல உடற்கட்டோடும் இருக்கும் அவனுக்கு ஆர்த்தியைக் கவர்வதில் சிரமம் எதுவும் இருக்காது என்று அவளுக்குத் தோன்றியது. அவள் மனதில் ஓடிய எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல் பஞ்சவர்ணம் சொன்னாள். "பார்க்க உன் பெரிய நாத்தனார் பையனும், சின்ன நாத்தனார் பையனும் கூட நல்லாத் தான் இருக்கானுங்க. அதனால ரொம்பவும் சுலபமா இதை நினைச்சுடாதே. சிவகாமி பையனுக்கு உன் புருஷனே சாதகமாய் இருப்பான். அந்த ஊமைக் கோட்டான் தன் மகனை அந்தப் பொண்ணுக்குக் கட்டி வைக்க எதையும் செய்வாள்... நான் சொல்றது புரியுதா?

ஊமைக் கோட்டான் என்று அவள் குறிப்பிட்டது பவானியின் சின்ன நாத்தனார் அமிர்தத்தை. பவானி தலையாட்டினாள். சூட்சுமமாக அவளைக் கவனித்த பஞ்சவர்ணத்திற்கு மகளை ஓங்கி ஒரு அறை விடலாமா என்று ஒரு கணம் தோன்றியது. இப்படியொரு சுறுசுறுப்போ, வேகமோ இல்லாத பெண் தன் வயிற்றில் எப்படி உருவானது என்று கேட்டுக் கொண்டாள். மறு கணம் அவள் மனம் மகளுக்காக இளகியது. ஆரம்பத்தில் அவள் இப்படி இருக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டாள். எத்தனையோ முயன்றும் சிவகாமியிடம் எதுவும் எடுபடாததால் தான் அவள் நாளடைவில் தன்னம்பிக்கை இழந்து விட்டாள் என்று நினைக்கையில் சிவகாமி மீது பஞ்சவர்ணத்திற்கு அளவு கடந்த கோபமும் வெறுப்பும் கூடியது.

தன் எண்ணங்களை ஒதுக்கி விட்டுத் தன் திட்டத்திற்குத் தேவையான தகவல்களைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்ட பஞ்சவர்ணம் மகளை அடுத்த கேள்வி கேட்டாள். "அந்த கிழவனும், கிழவியும் எப்படிப்பட்டவங்க?"

"தெரியலை. ஆனா இவருக்கு அவங்க மேல நல்ல அபிப்பிராயம் எதுவும் இல்லை"

"உன் புருஷனுக்கு அந்த சண்டாளியையும், அவளுக்கு வேண்டியவங்களையும் தவிர யார் மேலயும் எப்பவுமே நல்ல அபிப்பிராயம் இருந்தது கிடையாது. அதை விடு. அவங்களே தரித்திரத்தில் இருக்கிறதா கேள்விப்பட்டேன். அந்த லட்சணத்துல சொல்லிக்காமல் அந்தக் குழந்தையை எடுத்துகிட்டு ஓடியிருக்கிறதைப் பார்த்தா அவங்களுக்கு உன் மூத்தாள் செத்ததில் சந்தேகம் வந்திருக்கணும்னு தான் தோணுது....."

"இருக்கலாம். ஆனா குழந்தையை இங்கிருந்து எடுத்துகிட்டு போனப்ப பெரியக்கா கிட்ட பத்து நாள் வச்சிருந்து அனுப்பறதா தான் சொல்லிட்டு எடுத்துகிட்டு போயிருக்காங்க...."

அவள் பேச்சைப் பஞ்சவர்ணம் பொருட்படுத்தவில்லை. "பவானி, அவங்க மனசுல நான் சொன்ன சந்தேகம் இருந்துதுன்னா நாம அதை ஊதி ஊதி பெருசாக்கணும். அந்தப் பொண்ணு இங்கேயே வளராததுல ஒரு நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைச்சிருக்கு. இங்கே வளர்ந்திருந்தா அதோட மனசையும் சிவகாமி வளைச்சுப் போட்டிருப்பா. இப்ப அந்தப் பொண்ணுக்கு அவங்க பாட்டி தாத்தா கருத்துல தான் நம்பிக்கை பெருசா இருக்கும்"

பவானி தலையசைத்தாள். ஆனால் ஆர்த்தியின் வரவு கூட சிவகாமியின் அதிகாரத்தை இந்த வீட்டில் குறைத்து விடும் என்று நம்ப அவளுக்கு முடியவில்லை. அவள் தலையசைப்பில் இருந்த சந்தேகம் பஞ்சவர்ணத்திற்கு எரிச்சலூட்டியது.

"இந்த வீட்டில் முழு அதிகாரத்தையும் அவள் கிட்ட பறி கொடுத்துட்டு நீ நிற்கிறதைப் பார்த்தா எனக்குப் பொறுக்கலைடி. அதைத் திருப்பி வாங்க இந்த ஆர்த்தி தான் துருப்புச் சீட்டு. இத்தனை சொத்துக்கும் அவள் தான் வாரிசு. இதை மறந்துடாதே. இதில் ஜெயிக்கற வரை எனக்கு மனசு நிம்மதி கிடையாது"

பவானிக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவள் தாய் எதிலும் திருப்தியடைந்ததாக நினைவில்லை. தன் தாயிற்கு இனியும் மன நிம்மதி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் பவானிக்கு இருக்கவில்லை. சிவகாமியை எதிர்த்து ஜெயிக்க பஞ்சவர்ணம் தேர்ந்தெடுத்த துருப்புச் சீட்டுக்காக ஒரு கணம் அவள் மனம் இரக்கப்பட்டது.

## 16

For each glance of the eye so bright and black,
Though I keep with heart's endeavour,--
Your voice, when you wish the snowdrops back,
Though it stay in my soul for ever!--
-Robert Browning

"அம்மா, ஆர்த்தி பார்க்க எப்படியிருப்பா?" என்று பார்த்திபன் கேட்ட போது அமிர்தம் மல்லிகை பூக்களை தொடுத்துக் கொண்டு இருந்தாள். ஒரு கணம் கண்களை மூடி யோசித்து விட்டு மகனிடம் சொன்னாள். "அப்ப சாயல் அவளோட அம்மா மாதிரி தான் இருந்தது. மூணு வயசுல பார்த்தது. இப்ப எப்படி மாறியிருக்கான்னு தெரியலை"

பார்த்திபன் தன் தாயைக் கூர்ந்து பார்த்தபடி கேட்டான். "அவளைக் கூட்டிகிட்டு வர ஏன் மாமா போகாமல் ஆகாஷ் போனான்?"

யாருக்குத் தெரியும் என்பது போல தோள்களை லேசாக உயர்த்திய அமிர்தம் பூக்களைத் தொடுப்பதைத் தொடர்ந்தாள்.

"ஒரு வேளை உங்கக்கா தம்பிக்கு அனுமதி தரலையோ?"

பூக்களில் இருந்து கண்களை எடுக்காமல் அமிர்தம் சொன்னாள். "இவன் தான் போக மனசில்லாமல் இருந்திருப்பான். இவனுக்கு அந்த மாமனாரை ஆரம்பத்தில் இருந்தே ஆகாது. அதிலும் குழந்தையைத் தூக்கிகிட்டு போன பிறகு கேட்கவே வேண்டாம்"

"ஒரு வேளை சொத்துக்கு வாரிசை தன்னோட மகன் முதல்ல சந்திக்கட்டும்னு பெரியம்மாவுக்கு இருக்குமோ?"

"சும்மா வாயிற்கு வந்ததை சொல்லாதேடா"

"நான் சொல்லலை. மூர்த்தி தான் சொன்னான்....."

"அவனுக்கு அவன் பாட்டி சொல்றது தான் வேதவாக்கு. அந்தக் கிழவிக்கு நாக்குல விஷம்"

மாமா அளவுக்கு அக்காவின் புகழ் பாடி அவளுடன் ஒட்டிக் கொண்டு இருக்காவிட்டாலும் அமிர்தம் என்றுமே தன் தமக்கையை விட்டுக் கொடுத்ததாக பார்த்திபனுக்கு நினைவில்லை. பஞ்சவர்ணத்தைப் பற்றியும் மூர்த்தியைப் பற்றியும் அவனுக்கு நல்ல அபிப்பிராயம் சிறிதும் இல்லை என்றாலும் அவர்கள் சந்தேகம் நியாயமாக இருப்பதாகவே அவனுக்குப் பட்டது.

"அவன் சொல்றான், ஆர்த்தி வந்தவுடன் அவளுக்கும், ஆகாஷுக்கும் கல்யாணம் செஞ்சுட பெரியம்மா ஏற்பாடுகள் ஆரம்பிச்சுடுவாங்களாம்..."

அமிர்தம் தலையை நிமிர்த்தாமல் தெரிவித்தாள். "அவன் மாதிரி ஆள்கள் பேசறப்ப காது ரெண்டையும் மூடிக்க. அது தான் நல்லது. கல்யாண விஷயத்தில் யாரையும் எப்பவும் அக்கா நிர்பந்திச்சதேயில்லை. உன் மாமன் கல்யாணம் செய்துகிட்ட ரெண்டு பேரும் காசில்லாதவங்க தான். அக்கா ஆட்சேபணையே சொல்லலை. ஆர்த்தி யாரையாவது கல்யாணம் செய்துக்க தீர்மானிச்சா, அதுக்கு அவங்கப்பன் குறுக்குல நிக்கக் கூட அக்கா விடமாட்டாள். ஆர்த்திக்கு உன்னைப் பிடிச்சிருந்தால் நீ கூட அவளைக் கல்யாணம் செஞ்சுக்கலாம்....." கடைசி வாக்கியத்தை சொல்லும் போது தலையை நிமிர்த்தி மகனைக் கூர்ந்து பார்த்தாள்.

வார்த்தைகளால் சொல்லாததை அமிர்தம் பார்வையால் மகனுக்குத் தெரியப்படுத்தினாள்.

அதைப் புரிந்து கொண்ட பார்த்திபன் தாயிடம் கறாராகச் சொன்னான். "முதல்ல எனக்கு அவளைப் பிடிச்சிருக்கணும். சொத்துக்காக பிடிக்காத பெண்ணை நான் கண்டிப்பாய் கல்யாணம்

செஞ்சுக்க மாட்டேன். உங்க அக்கா வேணும்னா காசு மேல குறியாய் இருந்துட்டு ஆகாஷை கல்யாணம் செஞ்சுக்க வற்புறுத்தலாம். ஆனால் நீங்க இந்த விஷயத்தில் என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம், இப்பவே சொல்லிட்டேன்"

அமிர்தம் மகனை "அட முட்டாளே" என்பது போலப் பார்த்தாள்.

**ஆ**ர்த்திக்கு நடப்பதெல்லாம் ஒரு அழகான கனவு போலத் தோன்றியது. சில நாட்களுக்கு முன் வரை உப்பு சப்பில்லாமல் இருந்த வாழ்க்கை இப்போது முழுவதுமாக மாறி உயிர்ப்பும் ரம்மியமும் நிரம்பியதாக ஆகி விட்டது. தந்தை இருப்பதை அறிந்ததும், அவரை சந்திக்க சென்று கொண்டிருப்பதும் அவள் வாய் விட்டு சொல்லக் கூடிய காரணமாக இருந்தாலும் ஆகாஷின் அறிமுகமும், அருகாமையும் தான் அதற்கு நிஜக்காரணம் என்று உள்மனம் சொல்லியது. தாத்தா ஜாடையாக அவன் சிவகாமியின் மகன் என்று ஓரிரு முறை நினைவுபடுத்தி இருந்தாலும் அதையும் மீறி மனம் அவனை ரசித்தது. அவன் புன்னகை, பேச்சு, நடை, அழகு எல்லாம் மனதில் சலிக்காத ரசனைக்குரிய விஷயங்களாக அவளுக்கு இருந்தது.

கோயமுத்தூரில் இருந்து அவர்களது கம்பெனி காரில் ஊட்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இந்த நேரத்திலும் அவன் அந்த மலைப்பாதையில் அனாயாசமாக காரை ஓட்டிய விதத்தில் கூட ஒரு தனி ஸ்டைல் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

அதே போல் ஆகாஷும் அவளால் நாளுக்கு நாள் அதிகமாகக் கவரப்பட்டான். அழகையும் விட அதிகமாய் அவளது எளிமையும், அடக்கமும், கள்ளங்கபடமில்லாத மனமும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. இருவரும் சுவாரசியத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவன் தான் எம்.பி.ஏ படித்து விட்டு மாமாவின் கம்பெனியில் ஒரு டிபார்ட்மெண்டின் மேனேஜராக இருப்பதாகத் தெரிவித்தான். அவள் பி.ஏ சைக்காலஜி படித்து முடித்திருப்பதைத் தெரிவித்தாள்.

"ஏன் அந்த சப்ஜெக்ட்?"

"எனக்கு மனுஷங்க மனசைப் பத்தித் தெரிஞ்சுக்கறதுல சின்னதில இருந்தே நிறைய ஆர்வம்....". அந்த ஆர்வம் வர ஆரம்பித்ததற்கு மூல காரணம் தனக்குத் தொடர்ந்து வரும் கனவின் தன்மையே என்பதை அவளால் சொல்ல முடியவில்லை. அந்தக் கனவு பற்றிய பேச்சை எடுப்பதே கூட வேதனைக்குரிய விஷயமாக இருந்ததால் அந்தக் காரணத்தை அவள் தன் பாட்டி தாத்தாவிடம் கூட சொன்னதில்லை.
பின்பு பேச்சு பொது விஷயங்களுக்கு மாறியது.

தங்கள் பேச்சில் அவர்கள் உலகையே மறந்து விட்டதாக பின் சீட்டில் அமர்ந்திருந்த பார்வதிக்குத் தோன்றியது. அவள் அவர்கள் பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டே வந்தாள். ஆனால் அவள் அருகில் இருந்த நீலகண்டனுக்கோ பேத்தி அவனுடன் அதிகமாக நெருங்கிப் பழகுவது சகிக்க முடியாததாகவே இருந்தது. அவர் முகச் சுளிப்பைக் கண்ட பார்வதி அவருக்கு மட்டும் கேட்கும்படி சொன்னாள். "ஏன் இப்படி பாவக்காயைக் கடிச்சுட்ட மாதிரி முகத்தை வச்சிருக்கீங்க. நல்லாத் தான் இருங்களேன்"

மனைவியை எரித்து விடுவது போல் நீலகண்டன் பார்த்தார். மனைவியைப் போல் மெல்லிய குரலில் பேசத் தெரியாத அவருக்கு இது போன்ற சந்தர்ப்பங்களில் அவள் காதைக் கடிப்பது

எரிச்சலாக இருந்தது. உன்னிடம் அப்புறமாக பேசிக் கொள்கிறேன் என்பது போல் அவர் தலையசைத்தார்.

ஆகாஷ் செல்ஃபோனை எடுத்துப் பேசினான். "ஹலோ மாமா, நான் அஞ்சு நிமிஷத்துல வீட்டுக்கு வந்துடுவேன்"

போனை ஆஃப் செய்து விட்டு ஆர்த்தியிடம் சொன்னான். "உங்கப்பா இன்னைக்கு ஆபிஸ் போகலை. உனக்காக காத்துகிட்டு இருக்கார்....."

ஆர்த்தி மனதில் இனம் புரியாத சந்தோஷமும், துக்கமும் பின்னிப் பிணைந்து எழுந்தன. அவளுக்கு அது ஏன் என்று விளங்கவில்லை.

ஐந்து நிமிடங்களில் ஒரு பிரம்மாண்டமான பங்களா முன் அவர்கள் கார் வர கேட்டைத் திறந்த கூர்க்கா சல்யூட் அடித்தான். கார் உள்ளே நுழைந்தது.

# 17

How should I greet thee,
With silence and tears.
- Lord Byron.

ஆர்த்தி சினிமாவில் தான் அப்படிப்பட்ட பங்களாவைப் பார்த்திருக்கிறாள். மெயின் கேட்டில் இருந்து போர்ட்டிகோ போகும் வரை பாதையின் இருபக்கங்களிலும் பல வண்ணப் பூச்செடிகள் கண்களைக் கவர்ந்தன. போர்ட்டிகோவில் இரண்டு விலையுயர்ந்த கார்கள் நின்றிருந்தன. ஆகாஷ் காரை நிறுத்தி விட்டுச் சொன்னான். "இது தான் நம்ம ஊட்டி வீடு".

அரண்மனை போன்ற அந்தப் பங்களாவைக் கண்களை விரித்து பிரமிப்புடன் பார்த்தபடி ஆர்த்தி இறங்கினாள். அவளைப் பல இடங்களிலிருந்து பல ஜோடிக் கண்கள் கூர்மையாக கவனித்தன.

பஞ்சவர்ணம் மாடியில் இருந்த தன் அறையில் இருந்து ஜன்னல் வழியாகத் தன் துருப்புச் சீட்டைக் கூர்ந்து பார்த்தாள். பார்த்தவுடனேயே அந்தப் பெண் ஒரு வெகுளி என்று கண்டுபிடித்த அவள் திருப்தியடைந்தாள். தன் பேரன் மூர்த்தி இந்த நேரமாகப் பார்த்து வெளியே போயிருந்தது அவளுக்கு எரிச்சலைக் கிளப்பியது. "முக்கியமான நேரத்தில் இருக்க மாட்டேன்கிறான்."

அமிர்தம் வாசலிலேயே நின்று கொண்டு இருந்தாள். ஆர்த்தியின் அழகைப் பார்த்து நிம்மதியடைந்தவள் அருகில் நின்று கொண்டு இருந்த தன் மகனைப் பார்த்தாள். ஆர்த்தியின் அழகில் தன்னை மறந்த நிலையில் பார்த்திபன் நின்று பார்த்துக் கொண்டு இருந்தான். அமிர்தம் முகத்தில் புன்னகை அரும்பியது.

அவளுக்கு அருகில் நின்ற பவானி ஆர்த்தியை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டு இருந்தாள். தோற்றத்தில் ஆர்த்தி தன் தாயைக் கொண்டிருந்தாலும் முகத்தில் தெரிந்த வெகுளித்தனம் பவானியை வெகுவாகக் கவர்ந்தது.

மாடியில் தனதறையின் ஜன்னல் வழியாக சந்திரசேகர் ஆர்த்தியைப் பார்த்தபடி சிலையாக நின்றிருந்தார். மூத்த மனைவி ஆனந்தியே நேரில் வந்தது போல் அவருக்கு இருந்தது. அவள் பிரமிப்புடன் அந்த பங்களாவைப் பார்த்த விதம் அவர் இதயத்தில் இரத்தம் கசிய வைத்தது. 'இத்தனைக்கும் சொந்தக்காரி இப்படிப் பிரமிப்புடன் தன் வீட்டையே பார்க்கும்படியாக ஆகி விட்டதே!' மூன்று வயதில் தோளில் தூக்கிக் கொஞ்சி விளையாடிய அவர் குழந்தை இன்று அழகான இளம்பெண்ணாக வந்திருக்கிறது. இடையில் எத்தனை வருடங்களை, எத்தனை அழகான தருணங்களை இழந்து விட்டோம் என்று எண்ணிய போது மனம் வலித்தது.

ஆகாஷின் போன் வந்தவுடனேயே வாசலில் நின்று தன் மகளை வரவேற்கத் தான் அவர் ஆரம்பத்தில் எண்ணியிருந்தார். ஆனால் அவருக்கு அத்தனை பேர் முன்னிலையில் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உடனடியாக வரவில்லை. பெரியக்கா ஒரு முக்கிய வேலையாக ஆபிஸ் போயிருந்தாள். இந்த நேரத்தில் அவள் கூட இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்றியது.

முதலில் அமிர்தம் தான் புன்னகையுடன் மருமகளை வரவேற்றாள். "வாம்மா ஆர்த்தி, நான் தான் உன் சின்னத்தை" சின்னத்தையிடமும் சிவகாமியின் சாயல் இருந்தது. ஆனால் அந்த கம்பீரமும், உயரமும் இருக்கவில்லை. அவள் கண்களில் புத்திசாலித்தனம் பளிச்சிட்டதை ஆர்த்தி கவனித்தாள். காதுகளில் வைரங்கள் மின்னின. அமிர்தம் தன் அருகில் இருந்த ஒரு அழகான வாலிபனை அறிமுகப்படுத்தினாள். "இது என் மகன், பார்த்திபன்"

பார்த்திபன் "ஹாய்" என்றான். ஆர்த்திக்கு ஏனோ அவனைப் பார்த்த உடனே பிடித்து விட்டது. ஆனால் அவர்களிடம் என்ன பேசுவது என்று தெரியவில்லை. புன்னகை பூத்தாள்.

பவானிக்கு தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள தயக்கமாக இருந்தது. நல்ல வேளையாக ஆகாஷ் உதவிக்கு வந்தான். "இது உன் சித்தி". சித்தி மிகவும் அழகாக இருந்தாள். ஆனால் அவள் கண்களில் தெரிந்த ஒருவித சோகத்தை ஆர்த்தியால் உடனடியாக உணர முடிந்தது. பவானி ஏனோ அந்தப் பெண் தன்னிடம் ஒருவித விரோதப் போக்கை கடைபிடிப்பாள் என்று பயந்து கொண்டு இருந்தாள். ஆனால் நினைத்ததற்கு மாறாக அவள் மனம் நிறையப் புன்னகை பூத்தது பவானிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. "வா ஆர்த்தி" என்று அதே மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

மிகவும் தயக்கத்துடன் காரருகேயே நின்று கொண்டு இருந்த நீலகண்டனையும் பார்வதியையும் யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. பஞ்சவர்ணம் மட்டும் தான் அவர்களை எடை போட்டபடி பார்த்துக் கொண்டு இருந்தாள்.

ஆகாஷ் மாமா எங்கே என்று கேட்க வாய் திறந்த போது தான் சந்திரசேகர் படியிறங்கி வருவதைப் பார்த்தான்.

"ஆர்த்தி" சந்திரசேகரின் குரல் கரகரத்தது. ஒரு கணம் கண்கலங்கத் தந்தையைப் பார்த்த ஆர்த்தி அடுத்த கணம் ஓடி சென்று அவர் விரித்த கைகளுக்குள் அடைக்கலம் புகுந்தாள். அவள் மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும் போதும் இப்படித்தான் அவர் அழைத்தவுடன் ஓடிச் சென்று அவரை அணைத்துக் கொள்வாள். இப்போதும் அனிச்சைச் செயலாக அவளையும் அறியாமல் அவரிடம் வந்து விட்டாள் என்பதை எண்ணிய போது அவர் கண்களோடு மனமும் நிறைந்து போயிற்று. ஆர்த்தி "அப்பா, அப்பா" என்று முணுமுணுத்தபடி அவளையும் அறியாமல் கண்ணீரோடு தந்தையை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு இருந்தாள். அந்தக் காட்சி அருகே நின்றிருந்த அனைவரையும் உருக்கியது.

ஆனால் தொலைவில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்த நீலகண்டனுக்கு என்னவோ போல் இருந்தது. மூன்று வயதில் இருந்து அவர் வளர்த்த பேத்தி இந்த அளவு அவரை ஒரு நாளும் தன்னை மறந்து கட்டிக்கொண்டதாய் அவருக்கு நினைவில்லை. அவர் முகத்தில் தெரிந்த லேசான பொறாமையைப் படிக்க முடிந்த பார்வதி சொன்னாள். "உங்க மகளும் உங்க கிட்ட இப்படித்தானே ஒட்டிகிட்டு இருந்தாள். ஒரே ரத்தம்னா அப்படித்தான். அதுக்கென்ன அப்படியொரு பார்வை"

இவளை அருகில் வைத்துக் கொண்டு சுதந்திரமாக மனதில் கூட எதையும் நினைக்க முடியவில்லையே என்று நினைக்கையில் அவருக்கு மனைவி மீது ஆத்திரமாக வந்தது. அவளிடம் தான் நினைத்ததை மறுக்கவும் முடியாத அவஸ்தையில் அப்போதைக்கு அவளை முறைக்க மட்டும் தான் அவரால் முடிந்தது. யாரும் உள்ளே அழைக்காத போது எப்படி உள்ளே போவது என்று இருவரும் தர்மசங்கடத்துடன் சிறிது நேரம் நின்று கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் இருவரும் வெளியே காரருகிலேயே நிற்பதைக் கவனித்தது முதலில் ஆகாஷ் தான்.

"தாத்தா, பாட்டி வாங்க ஏன் அங்கேயே நிற்கிறீங்க?" என்று சத்தமாகச் சொன்னவன் மாமாவைப் பார்த்தான். அவன் குரல் ஆர்த்தியையும் சகஜ நிலைக்கு வரவழைத்தது. தாத்தா, பாட்டியின் இக்கட்டான நிலைமை அவளுக்கும் உறைக்க தந்தையை சற்று பயத்துடன் பார்த்தாள். சந்திரசேகர் முகம் இறுகியது.

நீலகண்டனையும், பார்வதியையும் சந்திரசேகர் வரவேற்பார் என்று ஆர்த்தி எதிர்பார்த்தாள். ஆகாஷும், தான் சத்தமாய் சொன்னதைப் புரிந்து கொண்டு மாமா உள்ளே அழைப்பார் என்று தான் எதிர்பார்த்தான். ஆனால் இறுகிய முகத்துடன் நின்ற சந்திரசேகர் அவர்களைக் கூப்பிடுகிற மாதிரி தெரியவில்லை. ஒருவித தர்மசங்கடமான சூழ்நிலை உருவாகியது. நீலகண்டனும், பார்வதியும் முகம் சிறுத்துப் போய் வெளியே நின்றனர்.

## 18

Agonies are one of my changes of garments,
I do not ask the wounded person how he feels, I myself become the wounded person,
My hurts turn livid upon me as I lean on a cane and observe.
– Walt Whitman

ஆகாஷ் தன் தாய் இங்கு இல்லாதது தான் பிரச்சினை என எண்ணினான். அவள் இருந்திருந்தால் தன் பார்வையிலேயே தம்பியை இயக்கியிருப்பாள். அமிர்தம் தன் தம்பி அழைக்காத போது தான் அவர்களை அழைத்தால் சரியாக இருக்காது என்று எண்ணி மௌனமாக இருந்தாள். பவானியும் அதே அபிப்பிராயத்தில் தான் பேசாமல் இருந்தாள். ஆர்த்திக்கு தன் தாத்தா பாட்டியின் நிலை தாங்க முடியாத துக்கத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. அவர்களுக்கு இடமில்லாத இடத்தில் தானும் இருக்க அவள் பிரியப்படவில்லை. தந்தையிடம் இருந்து விலகி தானும் வெளியேறத் தீர்மானித்தாள்.

அந்த நேரத்தில் தான் "நமஸ்காரம் வாங்க, வாங்க" என்ற வரவேற்புக் குரல் வீட்டின் உள்ளே இன்னொரு மூலையில் இருந்து கேட்டது. ஆகாஷின் தந்தை சங்கரன் புன்னகையுடன் நீலகண்டன் தம்பதியரை நோக்கி நடந்து வந்தார்.

அவரைப் பார்த்தவுடன் ஆர்த்திக்கு நினைவு வந்த வார்த்தை – "கனிவு". அவர் முகத்தில் சாந்தமும், கனிவும் நிறைந்திருந்தது. அவர் தான் ஆகாஷின் தந்தை என்று அவளுக்குத் தெரியாவிட்டாலும் இந்த வீட்டில் மரியாதை தெரிந்த ஒரு பெரியவர் இருப்பது மனதை நிறைத்தது. ஆகாஷ் தந்தையை நன்றியுடன் பார்த்தான். எப்போதும் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் அவர் அனாவசியமாக அடுத்தவர் விஷயங்களில் தலையிட விரும்பாதவர். அதுவும் தன் மனைவியின் வீட்டாரின் விஷயங்களில் ஒதுங்கியே இருக்கக் கூடியவர்.

அவர் வரவும், வரவேற்பும் சந்திரசேகரையும் அசைத்தது போல் இருந்தது. அவரும் ஒரு அடி முன்னால் நடந்து சென்று "வாங்க மாமா, வாங்க அத்தை" என்று புன்னகை இல்லாமல் அழைத்தார்.

ஆர்த்தி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அவள் முகத்தில் தெரிந்த நிம்மதியைக் கவனித்த சந்திரசேகர் தான் நினைத்ததை விட அதிகமான கேள்வி ஒன்றை மாமனாரிடம் கேட்டார். "இப்ப எப்படியிருக்கீங்க"

நீலகண்டன் வரண்ட குரலில் சொன்னார். "இப்ப பரவாயில்லை"

சந்திரசேகர் மனைவியிடம் சொன்னார். "அவங்களுக்கு அவங்க ரூமைக் காண்பி பவானி". அதோடு தன் கடமை முடிந்தது போல முகம் திருப்பிக் கொண்டவர் பின் நீலகண்டன் தம்பதியர் பக்கம் முகத்தைக் கூட திருப்பவில்லை. உள்ளே நுழைந்த அவர்களை பவானி புன்னகையுடன் வரவேற்றாள்.

நீலகண்டனிடம் சங்கரன் சொன்னார். "பார்த்து பல காலம் ஆயிடுச்சு இல்லையா? நீங்க பெருசா மாறலை"

நீலகண்டன் அந்த வீட்டில் முதன் முதலாகக் கேட்ட அந்தக் கனிவான பேச்சுக்கு மனம் நெகிழ்ந்தார். ஆர்த்திக்கும் அவர் நடந்து கொண்ட விதம் மனதைக் குளிர்வித்தது. அவள் ஆகாஷிடம் "இது யார்" என்று சைகையில் கேட்க அவன் பெருமிதத்துடன் சொன்னான். "எங்கப்பா"

ஏழைகள் என்றுமே பெரிதாய் மாறி விட முடிவதில்லை என்று சொல்ல நினைத்த நீலகண்டன் அப்படிச் சொன்னால் தவறாக அவர் எடுத்துக் கொண்டால் என்ன செய்வது என்று நினைத்து ஒன்றும் சொல்லாமல் புன்னகை செய்து அவருக்குக் கை கூப்பினார். கணவனின் பதில் பேசாமை பார்வதிக்கு ஒரு மாதிரியாக இருந்தது. 'பெரிய மனுஷன் இவ்வளவு பேசறார். இவர் ஏதோ ஊமையாட்டம் நிற்கிறார்' அவரிடம் ஏதாவது பேசாவிட்டால் மரியாதை இல்லை என்று நினைத்தவள் "சிவகாமி இல்லையா" என்று சங்கரனிடம் கேட்டாள்.

ஆனால் சங்கரன் நீலகண்டனின் மௌனத்தைத் தவறாக நினைத்தது போல் தெரியவில்லை. பார்வதியிடம் புன்னகையுடன் சொன்னார். "அவளுக்கு ஏதோ மீட்டிங் இருக்குன்னு போயிருக்காள். வந்துடுவாள்". பின் ஆர்த்தியைப் பார்த்து புன்னகையுடன் சொன்னார். "உங்கம்மா கல்யாணம் ஆகி வந்தப்ப இப்படியே தான் இருந்தாள்...."

'ஆமாம்' என்று தானும் சொல்ல வாயெடுத்த அமிர்தம், சந்திரசேகர் பேச்சு தன் முதல் மனைவியின் பக்கம் திரும்புவதை ரசிக்கவில்லை என்பதை அவர் முகபாவனையில் இருந்து

அறிந்தவுடன் வாயை மூடிக் கொண்டாள். தாத்தா பாட்டியை அப்பா உள்ளே அழைக்காதது கண்டு ஒரு நிமிஷம் ஆர்த்தி ஆத்திரமடைந்ததைப் பார்த்திருந்த அவள் கவனம் பார்வதியிடம் திரும்பியது. ஆர்த்தி மனதில் இடம் பெற அந்த முதியவர்களிடம் நட்புடன் இருப்பது நல்லது என்று அவளுக்குத் தோன்றியது. தம்பியே அழைத்ததற்குப் பிறகு அவர்களிடம் இனி பேசுவதில் தப்பில்லை என்று முடிவெடுத்து புன்னகையுடன் பார்வதி அருகில் சென்றாள். "எப்படி இருக்கீங்க அத்தை.....?"

சிறிது நேரம் சம்பிரதாயமான பேச்சுக்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். ஆகாஷ் ஒரு வாரமாக பார்க்காமல் விட்ட ஆபிஸ் வேலையைக் கவனிக்க வேண்டும் என்று கிளம்பி விட்டான். பார்த்திபன் சிறிது நேரம் ஆர்த்தியிடம் ஆர்வத்துடன் பேசினான். பிறகு பவானி நீலகண்டன் தம்பதியருக்கு ஒதுக்கி இருந்த அறையைக் காட்ட அவர்களை அழைத்துப் போக, அமிர்தம் மருமகளுக்கு மாடியில் ஒதுக்கி இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள். மகளுடன் செல்ல தானும் ஓரடி எடுத்து வைத்த சந்திரசேகர் பின் ஏதோ நினைத்துக் கொண்டவராக அப்படியே நின்று விட்டார்.

"இந்த ரூம் ஒரு காலத்தில் உங்கம்மா, உங்கப்பாவோட பெட் ரூமாய் இருந்துச்சு. உங்கம்மா இறந்ததுக்கு அப்புறம் உங்கப்பாவுக்கு அந்த ரூமில் இருக்கப் பிடிக்கலைன்னு வேற ரூமுக்கு மாறிட்டான். அப்புறம் யாரும் யூஸ் செய்யாம பூட்டியே இருந்தது. நீ வர்றதுன்னு தீர்மானம் ஆன பிறகு அக்கா தான் உனக்கு இதையே ஒதுக்கிடலாம்னு சொன்னாள்..... உங்கம்மாவோட பொருள்கள் எல்லாம் கூட ஒரு பீரோல அப்படியே இருக்கு"

அந்தப் பெரிய அறை பாண்டிச்சேரியில் அவர்கள் வாழ்ந்த முழு போர்ஷனை விடப் பெரியதாக இருந்தது. அறையில் சந்திரசேகர்-ஆனந்தி சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் மேசை மீது இருந்தது. அதில் அவர்கள் இருவரும் மலர்ந்த முகத்துடன் காணப்பட்டார்கள். அது திருமணம் ஆன புதிதில் எடுத்துக் கொண்ட படம் போலத் தெரிந்தது. அந்தப் புகைப்படமும், தாய் தனது கடைசி நாள் வரை வாழ்ந்த அறை அது என்ற உணர்வும் ஆர்த்தியின் மனதை என்னவோ செய்தது.

ஒரு கணம் கூட இருந்த அமிர்தத்தையும் ஆர்த்தி மறந்தாள். அந்தப் புகைப்படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தாயின் முகத்தைக் கூர்ந்து அவள் பார்த்தாள். "அம்மா இவ்வளவு சந்தோஷமாய் இதில் தெரிகிறாயே, உன் வாழ்க்கையில் எங்கே எப்போது தப்புத் தாளம் ஆரம்பித்தது?... உன்னை யார் ஏன் கொன்றார்கள்?"

ஆர்த்தியின் தாய் பதிலில்லாத புன்னகையுடன் மகளை புகைப்படத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

# 19

**Beliefs dictate our experience whether we realize it or not. We automatically notice things we're expecting to see, because we're looking for them. In this way, the world largely conforms to our beliefs about it. – Rich Rahn**

பெற்றோரின் புகைப்படத்தைப் பிடித்துக் கொண்டு சிலையாக நின்று கொண்டிருந்த மருமகளைப் பார்க்கையில் அமிர்தத்தின் மனம் இரக்கப்பட்டது. தானும் சிறு வயதிலேயே தாயை இழந்திருந்ததால் அந்த வேதனையை அமிர்தத்தாலும் உணர முடிந்தது. அப்பா இருந்தார் என்றாலும் அவர் அமிர்தத்தை ஒரு பொருட்டாக என்றுமே நினைத்ததில்லை. அக்கா சிவகாமி ஓரளவு தாயில்லாத குறையைப் போக்கினாள் என்றாலும் சிவகாமி என்றுமே கொஞ்சி, செல்லம் கொடுத்து பாச மழை

பொழிகிறவளாக இருந்ததில்லை. சிறு வயதில் எத்தனையோ முறை தாயை எண்ணி அமிர்தமும் ஏங்கி இருக்கிறாள்.

இளகிய மனதுடன் அமிர்தம் சொன்னாள். "உங்கம்மா உன் மேல் உயிரையே வச்சிருந்தாள். நீயும் உங்கம்மா இடுப்பில் இருந்து இறங்க மாட்டாய். எனக்கு இப்பவும் நல்லா ஞாபகம் இருக்கு"

ஆர்த்தி அமிர்தத்தைக் கண்கலங்க பார்த்தாள். "எனக்கு அம்மா பத்தி எதுவுமே ஞாபகம் இல்லை அத்தை. பாட்டி தாத்தா கூட அம்மா பத்தி அதிகமாய் பேசறதில்லை. ஞாபகப்படுத்திகிட்டு வேதனைப்பட அவங்களும் தயங்கினாங்க".

அமிர்தத்திற்கு அவள் மனநிலை புரிந்தது. மருமகள் தோளில் கை வைத்துச் சொன்னாள். "இது தான் நீ உன் அம்மா, அப்பாவோட மூணு வருஷம் வாழ்ந்த ரூம். அது தான் உங்கம்மாவோட வீணை...இந்த டிரஸ்ஸிங் டேபிள் கல்யாணம் ஆன புதுசுல உங்கம்மா ஆசையாய் வாங்கினது... இன்னும் உங்கம்மாவோட பொருள்கள் எல்லாம் அந்த ரெண்டு பெரிய பீரோவிலும் இருக்கு. அதோட சாவிகள் தான் இல்லை. எங்கே போச்சுன்னு தெரியலை..... ஒரு வேளை அக்கா கிட்ட இருக்கோ என்னவோ...."

வீணையையும், டிரஸ்ஸிங் டேபிளையும், அந்த பீரோக்களையும் ஆர்த்தி இதயம் கனக்கப் பார்த்தாள். அப்போது அறை வாசலில் "ஹாய்" என்ற குரல் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்த போது அறைக் கதவில் கை வைத்தபடி அழகான திடகாத்திரமான ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்தவுடன் அமிர்தத்தின் முகம் கறுத்தது. "இந்தத் தடியன் எத்தனை நேரமாய் ஓட்டுக் கேட்டுகிட்டு நிற்கிறான்னு தெரியலையே. இவங்க பரம்பரைக்கே இந்தப் புத்தி போகாது போல் இருக்கு" என்று அமிர்தம் முணுமுணுத்தது ஆர்த்திக்குக் கேட்டது.

"என்ன பெரியம்மா என்னை ஆர்த்தி கிட்ட இன்ட்ரடியூஸ் செய்ய மாட்டீங்களா?" என்று புன்னகையுடன் கேட்டபடி அவன் உள்ளே வந்தான். அப்போதும் இறுகிய முகத்துடன் அமிர்தம் அவனைப் பார்த்தாளே ஒழிய அவனை அறிமுகப்படுத்த முனையவில்லை.

அவனாகவே தன்னை ஆர்த்தியிடம் அறிமுகப்படுத்திக் கொண்டான். "என் பேர் மூர்த்தி. உங்க சித்தியோட அண்ணா மகன்."

ஆர்த்தி புன்னகையுடன் "ஹாய்" என்றாள்.

மூர்த்தி திரும்பி அமிர்தத்திடம் சொன்னான். "மாமா உங்களைக் கூப்பிடறார்"

அப்போதும் அமிர்தம் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அசையாமல் நின்றாள். ஆனால் உள்ளூர அவளுக்குக் கோபம் கொப்புளித்தது. "பெரியம்மாவாம் பெரியம்மா. இவன் உறவு கொண்டாடலைன்னு இங்கே யார் அழுதா?" என்று உள்ளுக்குள் வெடித்தாள். அவன் சத்தமாகச் சொன்னான். "உங்க தம்பி உங்களைக் கூப்பிடறாருன்னேன்"

அமிர்தம் அவனை மீண்டும் பொருட்படுத்தாமல் ஆர்த்தியிடம் புன்னகையுடன் சொன்னாள். "சரி ஆர்த்தி, நான் அப்புறமா வர்றேன். நீ கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ"

அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற மூர்த்தி மனதில் நினைத்துக் கொண்டான். 'அழுத்தத்துல இவள் இவங்கக்காவுக்கு எந்த விதத்திலும் குறஞ்சவ இல்ல. அவள் கிட்ட இருக்கிற தைரியமும், அதிகாரமும் இருந்திருந்தா இவளும் எல்லாரையும் என்ன விலைன்னு கேட்பா.' அவள் கண்ணில் இருந்து மறைந்தவுடன் ஆர்த்தியிடம் தன்னைப் பற்றி மேலும் சொன்னான். "நான் இங்கயே தான் இருக்கேன். எங்கம்மாவும் அப்பாவும் என் சின்ன வயசுலயே இறந்ததால எனக்கு வேற போக்கிடம் இல்லை. எம்.பி.ஏ படிச்சு முடிச்சுட்டு ஒரு பெரிய கம்பெனியில் வேலையில் இருக்கேன்" அவன் குரலில் மிகுந்த மரியாதை தெரிந்தது.

ஆர்த்தி தலையசைத்தாள். இன்னும் தாயின் நினைவுகளில் இருந்து விடுபட முடியாத நிலையில் அவள் இருந்தாள்.

"நான் எம்.பி.ஏ முடிச்சப்ப உங்கப்பா என்னை உங்க கம்பெனியில் சேரச் சொன்னார். உங்க பெரியத்தைக்குக் கீழே அடிமை மாதிரி வேலை செய்யப் பிடிக்கலை. அதனால் வேற வேலை பார்த்துகிட்டேன். இன்னும் கொஞ்ச நாள்ல நான் என் பாட்டியைக் கூட்டிகிட்டு தனியா வீடு பார்த்துகிட்டு போயிடுவேன்"

மனம் விட்டுப் பேசுகிற யதார்த்தம் அவனிடம் தெரிந்தது. பாட்டி என்றவுடன் ஆர்த்தி குழப்பத்துடன் பார்க்க அவன் விவரித்தான். "உங்க சித்தியோட அம்மாவும் இங்கே தான் இருக்காங்க.....

திடீரென்று குரலை வெகுவாகக் குறைத்துக் கொண்டு ரகசியம் பேசுவது போல் தொடர்ந்தான். "நீங்க நல்ல மாதிரியாய் தெரியறீங்க, அதனால் சொல்றேன். இது உங்க வீடுன்னு நீங்க நினைச்சுகிட்டிருக்கலாம். ஆனால் உண்மையில் இது சிவகாமியம்மா வீடு தான். இங்கே ஒரு அணு அசையணும்னாலும் அந்தம்மா அனுமதி வேணும். அப்படி ஒரு கட்டுப்பாட்டோட எல்லாரையும் அந்தம்மா வச்சிருக்காங்க. அதனால் ரொம்பவும் ஜாக்கிரதையாய் இருங்க. அவங்க கிட்ட மட்டுமில்லை. இப்ப போறாங்களே உங்க சின்னத்தை இவங்க கிட்டயும் எச்சரிக்கையாய் இருங்க. இவங்களும் லேசுப்பட்டவங்க கிடையாது."

ஆர்த்தி முகத்தில் கலவரம் படர்ந்தது.

"என்னடா இப்படி பயப்படுத்தறானேன்னு நினைக்காதீங்க. இவங்க நடத்தற கூத்தை எல்லாம் சின்னதிலே இருந்து பார்த்துகிட்டிருந்ததால சொல்றேன். உங்கம்மாவோட மரணம் ஏகப்பட்ட சந்தேகத்தைக் கிளப்பியிருக்குன்னு உங்களுக்கே தெரிஞ்சிருக்கும்னு நினைக்கறேன். இப்ப கூட உங்கம்மாவோட பீரோ சாவிகள் காணோம்னு இந்தம்மா சொல்றாங்க. இவங்களுக்கு இது எவ்வளவு வசதியாய் போச்சு பார்த்தீங்களா? சாவி ஒருவேளை அக்கா கிட்ட இருக்கோ என்னவோன்னு சொல்றாங்களே இது விசித்திரமா இல்லைங்களா? சாவி உங்கப்பா கிட்ட இருக்குன்னாலும் அதில் அர்த்தம் இருக்கு....."

ஆர்த்திக்கும் அவன் எழுப்பிய சந்தேகங்கள் நியாயமானதாகவே தோன்றியது. அதே நேரம் அமிர்தம் முணுமுணுத்தது போல இவன் அவர்கள் பேசுவதை ஓட்டுக் கேட்டிருக்கிறான் என்பதையும் அவளால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை.

"ஏன் இப்படி முதல்லயே சொல்றேன்னா, சொந்தம்னு நினைக்கிற இவங்க எல்லாம் ரொம்பவும் ஆபத்தானவங்கன்னு நீங்க ஆரம்பத்திலேயே மனசுல பதிய வச்சுகிட்டு உஷாராகிக்கறது நல்லது. சிவகாமியம்மா எப்பவுமே ஒரு தடியனை கூட வச்சுகிட்டு சுத்திகிட்டிருக்கறது உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனா அந்தம்மா கண் அசச்சா போதும், அவன்

யாரையுமே கொலை செய்யக் கூடத் தயங்க மாட்டான். உங்கம்மா பிணத்தை சாக்குல கட்டி தோளுல போட்டுகிட்டு வந்தவன் கூட அவன் தான்னு உங்களுக்குத் தெரியுமா?"

இதயம் படபடக்க ஆர்த்தி தெரியாது என்று தலையசைத்தாள்.

"அவன் இன்னும் இங்கே தான் இருக்கான். சிவகாமியம்மா நிழல்னு தான் அவனைப் பத்தி எல்லாரும் சொல்வாங்க. அந்தம்மா பின்னாலேயே இருப்பான். எதுக்கும் நான் சொன்னதை ஞாபகம் வச்சுக்கோங்க. உங்க தாத்தா பாட்டி கிட்டயும் சொல்லி வைங்க. பாவம் வயசானவங்க..." சொல்லிக் கொண்டே வந்தவன் திடீர் என்று நிறுத்தி காதுகளைக் கூர்மையாக்கினான்.

"உங்கப்பா வர்றார்னு நினைக்கறேன். நான் கிளம்பறேன். சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். அப்புறம் பார்க்கலாம்" என்று சொல்லி மின்னலாக அங்கிருந்து மாயமானான். அவன் சொன்னபடி சிறிது நேரத்தில் சந்திரசேகர் உள்ளே நுழைந்தார்.

# 20

Empathy-Your pain, in my heart.
- Jess Lair

பஞ்சவர்ணம் மூன்றாம் வகுப்பில் கால் பரீட்சை வரை தான் பள்ளிக்கூடம் போய் இருக்கிறாள் என்றாலும் அறிவு கூர்மைக்கும், பள்ளிப் படிப்புக்கும் சம்பந்தம் இல்லை என்பதற்கு ஒரு அருமையான உதாரணமாகத் திகழ்ந்தாள். எந்த வார்த்தை எந்த சூழ்நிலையில் எந்த அளவு எடுபடும் என்பதைக் கணிப்பதில் அவள் அனுபவ ஞானம் அலாதியானது. தான் சொல்லிக் கொடுத்ததை பேரன் எந்த அளவு ஒப்பித்து விட்டு வந்திருக்கிறான் என்பதை அவனிடம் திரும்பவும் சொல்லச் சொல்லிக் கேட்ட பிறகு திருப்தியடைந்தாள். ஆனால் அடுத்து ஒரு அரை மணி நேரம் மூர்த்தியைப் பல கேள்விகள் கேட்டாள். மூர்த்தி சொன்னதைக் கேட்ட போது ஆர்த்தியின் முகபாவம் எப்படி இருந்தது, அமிர்தம் என்ன சொல்லிக் கொண்டிருந்தாள், அமிர்தம் ஆர்த்தியிடம் நல்ல பெயரெடுத்திருப்பாளா என்பது போன்ற பல கேள்விகள் தொடர்ச்சியாகக் கேட்டாள். மூர்த்தியும் சலிக்காமல் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டு வந்தான். அவனுக்கு பாட்டி மீது பாசமும், மதிப்பும் நிறைய இருந்தது. எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவள் எதிர்பார்த்தபடியே பலரும் நடப்பது பார்த்து அவன் பிரமித்துப் போய் இருக்கிறான். சொல்வதை எல்லாம் சொல்லி விட்டு அவள் கருத்துக்காகக் காத்திருந்தான்.

பஞ்சவர்ணம் சொன்னாள். "இனி அந்தப் பொண்ணு உஷாராயிக்குவாள். தாத்தா பாட்டி மேல் பாசமாய் இருக்கிற மாதிரி தான் தெரியுது. அவங்களையும் பார்த்து பேச ஆரம்பிக்கறது நல்லதுன்னு நினைக்கிறேன். சரி பவானி, இனி நீ அந்தக் கிழங்களைப் பத்தி சொல்லு."

அடுத்த அரை மணி நேரம் பவானியும் தாயிடம் பல கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டி வந்தது. மூர்த்தி அளவுக்கு ஆர்வமாகச் சொல்லாவிட்டாலும் பவானியும் தாயிடம் ஒன்று விடாமல் சொன்னாள். நீலகண்டன் தம்பதியருக்கு ஒதுக்கி இருந்த அறையில் உள்ள பொருள்கள், அவர்கள் இருவரும் பவானியிடம் பேசியது என்ன, அவர்கள் என்ன மனநிலையில் இருந்தார்கள் என்பதையெல்லாம் விளக்கமாக மகளைச் சொல்லச் சொன்னாள். நீலகண்டன் அதிருப்தியுடன் இருந்தார், மனைவியைப் பார்த்து அடிக்கடி முறைத்தார் என்பதை பவானி சொன்ன போது பஞ்சவர்ணம் முகத்தில் புன்னகை அரும்பியது. மற்றவர்களிடம் இருக்கும் அபிப்பிராய பேதங்களைக் கண்டு பிடித்து அவற்றைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதில் அவளுக்கு நிகர் யாருமில்லை. மகள் சொன்னதில் இருந்து ஓரளவு நீலகண்டன் தம்பதியரைக் குறித்து கணிக்க

முடிந்தாலும் முழுவதும் தெரிய அவர்களிடம் பேசித் தான் பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

பிறகு ஆர்வத்துடன் மகளைக் கேட்டாள். "அது சரி ஆர்த்தியை ஆகாஷ் எந்த அளவு கவர்ந்திருக்கிறான்னு நினைக்கிறாய்"

பவானி நிஜமாகவே திரு திருவென்று விழித்தாள். "தெரியலை. எனக்கு எப்படித் தெரியும்?"

பஞ்சவர்ணத்திற்குக் கோபம் வந்தது. "ஒரு பொண்ணு ஒரு பையனைப் பார்க்கிற பார்வையிலேயே கண்டு பிடிச்சுடலாம். இதுக்கெல்லாம் பாடமா எடுத்துட்டு இருக்க முடியும். இப்படி பேக்கு மாதிரி இருக்கறதால தான் எல்லாத்தையும் கோட்டை விட்டுட்டு நிற்கிறாய். எல்லாம் என் தலையெழுத்து. இந்தத் தடியன் என்னடான்னா அவள் வர்ற நேரமாய் பார்த்து எங்கேயோ இருக்கான். அப்பவே இருந்து அந்தக் கிழங்களோட பெட்டி படுக்கைகளை எல்லாம் எடுத்துட்டு வர ஒத்தாசையெல்லாம் செஞ்சிருந்தால் நல்லா இருந்துருக்கும். சரி தொலையட்டும். . பவானி எனக்கு அவங்க மூணு பேரையும் பார்த்துப் பேசணும். சிவகாமி இல்லாத நேரமாய் பார்த்து சீக்கிரமாய் ஒருதடவை கூட்டிகிட்டு வா"

சரியென்று பவானி தலையசைத்தாள். இனி என்ன திட்டம் தீட்டி அம்மா அவர்களைப் பலிகடா ஆக்கப் போகிறாள் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. ஆர்த்தியின் தாத்தாவும் பாட்டியும் நல்ல மனிதர்களாகத் தோன்றினார்கள். பவானி பெருமூச்சு விட்டாள்.

**அ**ந்த அறைக்குள் நுழைந்த சந்திரசேகர் மனதை இனம் புரியாத சுமை திடீரென்று அழுத்தியது. அவரும் ஆனந்தியும் ஆர்த்தியும் சேர்ந்து வாழ்ந்த அந்த அறையில் இன்னும் ஆனந்தியின் சுவடுகள் அப்படியே இருந்தன. எத்தனையோ இனிமையான நினைவுகளும், கசப்பான நினைவுகளும் அந்த அறையில் நிறைந்திருந்தன. இறந்த காலம் உயிர் பெற்று வந்தது போல் ஒரு உணர்வு மேலோங்கி நின்றது. ஆர்த்தி ஆனந்தியாய் ஒரு கணம் தெரிந்தாள். ஆனால் மறு கணம் முகம் வெளுக்க நிராதரவாக நின்று கொண்டிருந்த ஆர்த்தியைப் பார்த்த போது ஆனந்தி மறைந்து போனாள். ஆனந்தி எப்போதும் இப்படி பயந்து போய் பரிதாபமாக நின்றதில்லை.

தன்னை சுதாரித்துக் கொண்டு மகளைக் கவலையுடன் கேட்டார். "என்னாச்சு ஆர்த்தி?"

மூர்த்தி சொல்லி விட்டுப் போனவைகளை யோசிக்க யோசிக்க அவளையும் அறியாமல் ஒருவித பீதி ஆர்த்தியை ஆட்கொண்டிருந்தது. சாவிகள் இல்லாத அந்த பீரோக்கள், தாயின் பிணத்தை சாக்கில் போட்டு தூக்கிக் கொண்டு வந்தவன் இப்போதும் இந்த வீட்டில் இருக்கிறான் என்ற தகவல், ஜாக்கிரதையாயிருங்கள், உஷாராக இருங்கள் என்று அவன் எச்சரித்த விதம் எல்லாம் அவளை நிலைகுலைய வைத்து விட்டது. சுபாவத்தில் அவள் மென்மையானவளே தவிர பயந்தாங்கொள்ளி அல்ல. ஆனாலும் இன்றைய தினம் அவள் தைரியம் இழந்து விட்டாள் என்பதே உண்மை. அதிலும் தாத்தா பாட்டி உயிருக்கே ஆபத்து என்கிற மாதிரி மூர்த்தி சொல்லி விட்டுப் போனது அவளை மிகவும் பாதித்து விட்டது. தாத்தா பாட்டி இங்கு வந்ததன் உண்மையான காரணம் தன் மேல் உள்ள பாசம் தான் என்பதை அவள் அறிவாள். அவர்களுக்கு இங்கு ஆபத்து என்றால் அவளால் எப்படித் தாங்க முடியும்?

கீழே ஹாலில் இருந்த போது தென்பட்ட மனிதரை விட மாறிய மனிதராக அப்பா அவள் கண்களுக்குத் தெரிந்தார். அவர் முகத்தில் மகளுக்காகத் தெரிந்த கவலையும், இறுக்கம் குறைந்து அவர் முகத்தில் தெரிந்த கனிவும் அவளுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

மனம் விட்டு தந்தையிடம் சொன்னாள். "அப்பா எனக்கு என்னவோ பயமாக இருக்கு.."

சந்திரசேகர் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "பயமா? எதுக்கு?"

திடீர் என்று அவர்களுக்கு இடையே ஒரு திரை விழுந்தது போல் ஆர்த்தி உணர்ந்தாள். தந்தையிடம் இது விஷயமாக மனம் விட்டு எதையும் சொல்ல முடியாது என்று தோன்றியது. பெரியக்கா கிழித்த கோட்டை தாண்ட மாட்டார் என்று பெயரெடுத்த மனிதரிடம் தன் பயத்தையும் சந்தேகங்களையும் அவளால் எப்படிச் சொல்ல முடியும். ஒருவித இயலாமையுடன் சொன்னாள். "தெரியலைப்பா"

சந்திரசேகர் மகளைப் பார்த்துக் கனிவாகப் புன்னகை செய்தார். "நானும் சின்ன வயசுல நிறைய பயப்படுவேன் ஆர்த்தி. ஆனா அக்கா எப்பவுமே பயத்தைப் பெரிய பலவீனம்னு நினைக்கிறவள். நான் இருட்டுக்குப் பயந்தால் என்னை இருட்டான ரூமுல வச்சு ஒரு மணி நேரம் பூட்டி வச்சுடுவாள். பயத்தை ஜெயிக்க ஒரே வழி அதை சந்திக்கறதுதான்னு சொல்வாள். அப்படி எத்தனையோ பயங்களை ஜெயிச்சிருக்கிறேன். சில பயங்களை அவ கிட்ட சொல்லக் கூடத் தயங்குவேன். ஏன்னா அதையும் அவள் சந்திக்க சொல்லுவாளே? ஆனால் பிரச்சினை என்னன்னா நான் சொல்லாட்டியும் கண்டு பிடிச்சு அதையும் சந்திக்க வச்சுடுவாள்....."

ஆர்த்தியால் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை. "இப்ப நான் பயப்படறதே உங்கக்காவைப் பார்த்து தான்ப்பா. அவங்களை சந்திக்க என்னையும் அவங்க வரவழைச்சுட்டாங்க....."

# 21

Acceptance of what has happened is the first step to overcoming the consequences of any misfortune. – William James

மகள் ஏதோ அழ்ந்த சிந்தனையோடு தன்னைப் பார்த்தது ஏன் என்று சந்திரசேகருக்கு விளங்கவில்லை. ஆனால் அதைப் பற்றி அவர் அதிகம் சிந்தித்து குழப்பிக் கொள்ளவில்லை. மகளிடம் சொன்னார். "இந்த ரூம்ல வசதியெல்லாம் எப்படியிருக்குன்னு பார். என்ன வேணும்னாலும் சொல்லு...உன்னோட டிரஸ்ஸெல்லாம் எங்கே?"

ஆர்த்தி தனது சிறிய சூட்கேஸைக் காண்பித்தாள். சந்திரசேகர் அந்த சூட்கேஸைப் பார்த்து மனம் கொதித்துப் போனார். அவர் கம்பெனி பியூன் மகளிடத்தில் கூட இதை விட அதிகமாகவும் தரமாகவும் துணிமணிகள் இருக்கும் என்று தோன்றியது. மகள் உடுத்தி இருந்த சுடிதார் கூட மிக மலிவு விலைப் பொருளாகவே தெரிந்தது. தந்தையின் முகத்தில் தெரிந்த உக்கிரத்திற்குக் காரணம் தெரியாமல் ஆர்த்தி குழம்பினாள்.

"உன் தாத்தாவால வாங்கிக் கொடுக்க முடிஞ்சதெல்லாம் இவ்வளவு தானா?"

"அவர் இந்த வயசுல உழைச்சு சம்பாதிச்சதுல இதுக்கும் அதிகமாய் எப்படி வாங்கிக் கொடுக்க முடியும்ப்பா. எனக்கு மூணு டிரஸ் வாங்கறப்ப அவங்க ரெண்டு பேரும் ஒரு டிரஸ் தான் வாங்குவாங்க."

நாக்கின் நுனி வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு சந்திரசேகர் விழுங்கிக் கொண்டார். 'அப்படி இருக்கறப்ப உன்னைத் தூக்கிட்டு ஏன் அந்த ஆள் ஓடணும்?'

வார்த்தைகள் வெளிவராவிட்டாலும் அவர் முகத்தில் தெரிந்த கோபத்தைப் பார்த்த ஆர்த்தி தந்தையிடம் கெஞ்சும் குரலில் சொன்னாள். "அப்பா அவங்களைக் கோவிச்சுக்காதீங்கப்பா. தாத்தாவும் பாட்டியும் ரொம்ப நல்லவங்கப்பா. எனக்காக எத்தனையோ தியாகம் செஞ்சிருக்காங்கப்பா"

சந்திரசேகர் முகத்தில் தெரிந்த கோபம் வடிந்து போனது. பெருமூச்சு விட்டபடி மகளிடம் சொன்னார். "ஆர்த்தி கோபம்கிறது மத்தவங்க வரச் சொல்லி வர்றதுமில்லை. போகச் சொல்றப்ப போறதுமில்லை. அக்கா எப்பவுமே சொல்லுவாள், 'ரெண்டு புள்ளிகளுக்கு இடையே இருக்கிற மிகக்குறைந்த தூரம் நேர்க்கோடுதான்னு'. அதனால நான் நேராவே சொல்லிடறேன். நான் கோபத்தை அவங்க கிட்ட காண்பிச்சுக்கலை. போதுமா? ஆனா அவங்க கிட்ட எதுவுமே நடக்காதது மாதிரி பேசவோ, பழகவோ என்னால முடியாதும்மா. நீ அதை மட்டும் என் கிட்ட எதிர்பார்க்காதே. அப்புறம் உனக்காக தியாகம் செஞ்சதா சொன்னாய். நான் ஒண்ணும் உன்னை எடுத்துகிட்டுப் போய் வளர்த்தச் சொல்லலை. அவங்க கிட்ட தியாகம் செய்யச் சொல்லலை....."

சொல்லிக் கொண்டே வந்தவர் திடீர் என்று கண்களை மூடிக்கொண்டு ஒரு நிமிடம் மௌனமாய் இருந்தார். கண்கள் திறந்த போது அவர் முகத்தில் விரக்தி தெரிந்தது. என்ன பேசி என்ன பயன் என்று சிந்தித்த மாதிரி ஆர்த்திக்குத் தோன்றியது. பிறகு பொதுவாக சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். மகளிடம் அன்பாகப் பேசினார் என்றாலும் அந்த அறையும் அதன் நினைவுகளும் அவரை அடித்தளத்தில் அமைதியிழக்கச் செய்தது என்பது அவர் நிலை கொள்ளாமல் தவித்த விதத்தில் தெரிந்தது. அங்கிருந்த வீணை மீதும் டிரஸ்ஸிங் டேபிள் மீதும் அவரையும் மீறிக் கண்கள் சென்ற போதெல்லாம் முகம் களை இழந்தது. முதல் மனைவியின் நினைவு அவரை அலைக்கழித்தது. அவரால் தாக்குப் பிடிக்க முடியாமல் போன போது எழுந்து விட்டார். "சரி ஆர்த்தி, கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ. அப்புறம் பார்க்கலாம்"

சந்திரசேகர் போய் நிறைய நேரம் ஆர்த்தி அவரைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தாள். அவருக்கு அந்த அறையில் அதிகம் இருக்கப் பிடிக்கவில்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. காரணம் அம்மா பற்றிய நினைவுகளா இல்லை வேறு ஏதாவதா என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.....

அவர் பற்றிய எண்ணங்களில் இருந்து மீண்டு எழுந்த ஆர்த்தி அந்த வீணையை வருடிப் பார்த்தாள். அம்மா உபயோகித்தது என்ற நினைவு வர மனம் லேசாகியது. அம்மா வீணை வாசிப்பாள் என்று பாட்டி இது வரை தன்னிடம் சொன்னதேயில்லை என்று சிறு கோபம் வந்தது. அப்போது தான் அம்மாவைப் பற்றிய எத்தனையோ விஷயங்கள் தனக்குத் தெரியாது என்பது உறைத்தது. இனி முக்கியமான ஒரே வேலை அம்மாவைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரிப்பது தான் என்ற முடிவுக்கு ஆர்த்தி வந்தாள். இந்த அறையில் தன் வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களைக் கழித்திருக்கிறோம் என்பதை அவளால் நம்பக் கஷ்டமாக இருந்தது. இந்த அறை எந்த நினைவையும் அவள் மனதில் வரவழைக்கவில்லை.....

ஆர்த்தி பழைய நினைவுகளை வரவழைக்க முயன்று கொண்டு இருக்கையில் பவானி அந்த அறை வாசலில் தயக்கத்துடன் வந்து நின்றாள். திருமணமாகி இத்தனை வருட காலங்களில் இந்த அறையினுள் அவள் ஒரு முறை கூட நுழைந்ததில்லை. கணவனும், அவரது முதல் மனைவியும் உபயோகித்த அறை ஏன் இத்தனை வருடங்களாகப் பூட்டப்பட்டிருக்கிறது என்று பல முறை அவள் தனக்குள் கேட்டுக் கொண்டதுண்டு. கணவனிடம் ஒரு முறை கேட்டதுமுண்டு. அவர்

பார்வையாலேயே உனக்கு இது தேவையில்லாதது என்று உணர்த்தி பதில் சொல்லவில்லை. அமிர்தத்திடம் கேட்டிருக்கிறாள். அமிர்தம் 'தெரியலை' என்று ஒரே சொல்லில் விலகிக் கொண்டாள். அறையின் சாவி சிவகாமியிடம் தான் இருக்க வேண்டும் என்று மட்டும் பவானி ஊகித்தாள். சிவகாமியிடம் கேட்கும் அளவு தைரியம் இல்லாததால் கேள்வி கேள்வியாகவே அவள் மனதில் தங்கி விட்டது.

ஆர்த்தி வருகிறாள் என்ற செய்தி வந்தவுடன் அறை திறக்கப்பட்டு அதை சுத்தம் செய்வதை மேற்பார்வை பார்க்கும் பொறுப்பும் அமிர்தத்திற்குக் கொடுக்கப்பட்டது. அமிர்தமும் பெரும் பரபரப்புடன் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள் என்பது அவளைப் பார்க்கையில் தெரிந்தது. இரண்டு நாட்கள் சுத்தம் செய்யும் வேலை நடந்தது. அப்போது ஓரிரு முறை உள்ளே போய்ப் பார்க்க பவானிக்கும் தோன்றினாலும் ஏனோ அந்த அறை அவள் மனதில் கிலியைக் கிளப்பி அவளை வர விடாமல் தடுத்தது. இன்னும் கணவரின் முதல் மனைவியின் ஆவி அந்த அறையில் உலாவுவது போன்ற பிரமை அவளுக்கு இருந்தது.

சுத்தம் செய்யும் போது அந்த அறையில் இருந்த பீரோக்களின் சாவிகளைத் தேடி அமிர்தம் சலித்துப் போனாள். கடைசியில் தம்பியிடம் வந்து அமிர்தம் கேட்ட போது அங்கு பவானியும் இருந்தாள். "ஏண்டா சந்துரு, அந்த ரூம்ல இருக்கிற ரெண்டு பீரோ சாவியும் கிடைக்கலையே. உன் கிட்ட இருக்கா?"

"என் கிட்ட இல்லை"

"அப்படின்னா அக்கா கிட்ட இருக்கும்னு நினைக்கிறேன்" என்று சொன்ன அமிர்தம் தம்பியின் பதிலுக்காகக் காத்து நின்றாள்.

அதற்கு சந்திரசேகர் பதிலே சொல்லவில்லை. குழப்பத்துடன் தம்பியைப் பார்த்து சிறிது நேரம் நின்று விட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டாள். அமிர்தம் சிவகாமியிடம் போய்க் கேட்பாள் என்று பவானி நினைத்தாள். ஆனால் அமிர்தம் அது பற்றி தன் அக்காவிடம் கேட்கத் துணியவில்லை.

ஆக எல்லாமாக சேர்ந்து இந்த அறையில் ஏதோ மர்மம் இருக்கிறது என்ற உணர்வை பவானியிடம் ஏற்படுத்தி இருந்தது. இப்போதும் அந்த அறையில் ஆர்த்தியைப் பார்க்கையில் ஆனந்தி போலவே பவானிக்குத் தோன்றியது. திடீர் என்று காலம் பதினெட்டு வருடங்களுக்குப் பின்னே போய் விட்டதாக ஒரு பிரமை அவளுக்கு ஏற்பட்டது. ஆனந்தி மகள் வடிவில் எல்லா கணக்கையும் தீர்க்க வந்திருப்பது போல் தோன்றியது. இதயத்துடிப்பு இடிகளாக மாற பவானி சத்தமில்லாமல் வந்த வழியே திரும்பினாள்.

# 22

Trust him not with your secrets, who, when left alone in your room, turns over your papers.

– Johann Kaspar Lavater

பார்வதி சோபாவில் சாய்ந்தபடியே அசந்து தூங்கும் கணவனை புன்னகையுடன் பார்த்தபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தாள். சிறிது நேரம் முன்பு வரை தான், அவள் காரில் காதைக் கடித்ததிற்குத் திட்டித் தீர்த்தார்.

"நான் என்ன பாவக்காயைக் கடிச்சுட்ட மாதிரி மூஞ்சை வச்சிருக்கேனா? இப்படிப் பொது இடத்தில் என் கிட்ட வம்பு வச்சுக்காதேன்னு எத்தனை தடவை சொல்லியிருப்பேன். நானே இந்த வீட்டுக்கு வர வேண்டியதாய் போயிடுச்சேன்னு வெறுப்புல உட்கார்ந்திருக்கேன். பெருசா உபதேசம் செய்ய வந்துட்டா. நிலைமை தெரியாம அந்த ஆகாஷும், நம்ம பேத்தியும் நெருக்கமாகிறதை ரசிச்சுட்டு வேற இருக்கிறாய். பட்டாலும் உனக்குத் தெரியறதில்லை.....உன்னைச் சொல்லித் தப்பில்லை.... ...."

அதற்கு மேல் அவர் சொன்னதை அவள் காது கொடுத்து கேட்கவில்லை. இனி என்ன வரப்போகின்றது என்று அவளுக்குத் தெரியும். அவர்களுக்குப் பொருத்தம் பார்த்த அந்த எட்டி மடை ஜோசியன், என்றைக்கோ அவளுடைய தாயார் அவருக்கு காபித்தூளோ, பாலோ பெயருக்குப் போட்டு காபி என்ற பெயரில் ஒரு திரவத்தைக் கொடுத்தது, கல்யாணமான புதிதில் அவள் அவர் வாங்கிக் கொடுத்த சேலையில் ஊதுபத்தியால் கவனமில்லாமல் ஓட்டை போட்டுக் கொண்டது போன்ற பல முறை கேட்டு அலுத்துப் போன அவரது வருத்தங்கள் ஒவ்வொன்றாக வெளிவரும். பதில் சொல்லி அவர் இரத்த அழுத்தத்தை உயர்த்த விரும்பாமல் பார்வதி அமைதி காத்தாள். நீலகண்டன் பேசி முடித்து விட்டு அசதியில் கண்களை மூடியவர் தூங்கியே விட்டார்.

"இப்ப எல்லாம் மனுஷன் சீக்கிரமே களைச்சுப் போறார். முன்ன இருந்த சக்தியெல்லாம் இந்த ஹார்ட் அட்டாக்கில் போயே போயிடுச்சு. பாவம்....."

சத்தமில்லாமல் எழுந்து பேத்தி என்ன செய்கிறாள் என்றறிய வெளியே வந்தாள். ஹால் வெறிச்சோடி இருந்தது. 'இந்த மாதிரி பெரிய வீட்டில் யார் எங்கே இருக்காங்கன்னே தெரியறதில்லை.' ஆர்த்திக்கு ஆனந்தியின் அறை தான் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று அமிர்தம் சொன்னது நினைவுக்கு வர மாடிப்படி ஏறினாள். படியேற ஏற மனதில் கனமும் கூடியது. மகள் ஆனந்தி வாழ்ந்த போது பல முறை ஏறி இறங்கிய படிகள் இவை. அவள் வாழ்ந்த நாள் வரை அவர்கள் வரும் போதெல்லாம் சந்தோஷமாக ஆரவாரத்துடன் அவள் எதிர்கொள்வாள். இப்போதோ அந்த வீட்டில் உள்ளே வரச் சொல்லக் கூட உடனடியாக ஆள் இல்லை. ஏதோ அந்தப் பெரிய மனிதர் அழைத்திருக்காவிட்டால் நிலைமை பரிதாபமாகப் போயிருக்கும்.....

ஆர்த்தியின் அறைக்கு நுழைந்த போது பார்வதியும் திடுக்கிட்டுப் போனாள். அந்த அறையில் அந்த சூழ்நிலையில் கையால் அந்த வீணையை ஆழ்ந்த சிந்தனையுடன் தடவிக் கொண்டு நின்ற ஆர்த்தியைப் பார்க்கையில் அவளுக்குத் தன் மகள் ஆனந்தியே உயிர் பெற்று வந்தது போலத் தோன்றியது. அவளுக்கு வயிற்றை என்னவோ செய்தது. அவளையும் அறியாமல் வாய் அழைத்தது. "ஆனந்தி...." தன் குரலைக் கேட்ட பின் தான் தன்னையும் அறியாமல் பேத்திக்குப் பதிலாக மகளை அழைத்திருக்கிறோம் என்பதை அவள் உணர்ந்தாள்.

ஆர்த்தியும் திகைப்புடன் பாட்டியைத் திரும்பிப் பார்த்தாள். "என்ன பாட்டி அம்மா பேர் சொல்லிக் கூப்பிடறீங்க?"

ஒரு நிமிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்த பார்வதி கடைசியில் உண்மையைச் சொன்னாள். "இல்லை.... ஒரு நிமிஷம் உங்கம்மா மாதிரியே தெரிஞ்சுது. இந்த ரூம், இந்த வீணை, உங்கம்மாவோட சாயல் உன் கிட்ட இருக்கிறது இதெல்லாம் காரணமாய் இருக்கலாம்....."

"அம்மா குணத்திலேயும் என்னை மாதிரியா பாட்டி?"

பார்வதி மறுபடியும் தயங்கினாள். ஆனந்தியைப் பற்றிப் பேச்சு திரும்புவது அவளுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. பிறகு சமயோசிதமாகச் சொன்னாள். "உன்னை மாதிரி யாரும் கிடையாது ஆர்த்தி".

"இது நான் கேட்ட கேள்விக்கான பதில் இல்லையே பாட்டி"

பார்வதி தன் ஓட்டைப் பல் தெரிய சிரித்தாள். பிறகு சிரிப்பு தேய்ந்து அவள் முகத்தில் சிந்தனை படர்ந்தது. என்ன சொல்வது என்று நினைத்தபடி மகளுடைய புகைப்படத்தைப் பார்த்தாள். ஆனந்தியின் கண்கள் புகைப்படத்தில் மின்னின. 'என்ன சொல்லப் போகிறாய்?' என்றன. அவள் உயிர் பெற்று அங்கு வந்து இருப்பதைப் போல் ஏனோ தோன்றியது. பார்வதிக்கு அந்த ஊட்டிக் குளிரிலும் வியர்த்தது.

ஆனந்தி உயிரோடு இருந்த காலத்தில் என்றுமே நீலகண்டன் மகளைப் பற்றி ஏதாவது தப்பாக சொன்னதாகவோ, கண்டித்ததாகவோ பார்வதிக்கு நினைவில்லை. மகள் தவறே செய்ய முடியாது என்ற திடமான நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆனால் பார்வதி மகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டவோ, கண்டிக்கவோ என்றுமே தயங்கியதில்லை. ஆனந்தி தன் தாய் பேச்சைக் கேட்டுத் திருந்தாவிட்டாலும் கண்களில் குறும்பு மின்ன முழுவதையும் கேட்காமல் இருந்ததில்லை....

மகள் புகைப்படத்தைப் பார்த்தபடி பார்வதி உள்ளதை உள்ளபடி சொன்னாள் "உன் அம்மாவும் ரொம்பவே நல்லவள். புத்திசாலி. எதிலும் நியாய அநியாயத்தைப் பார்க்கக் கூடியவள். அந்த விஷயத்தில் எல்லாம் அவள் உன்னை மாதிரி தான். ஆனால் சில விஷயங்களில் உனக்கு நேர் எதிர்மாறாய் இருப்பாள். முக்கியமாய் உனக்கு மன்னிக்கத் தெரியும். அவளுக்கு மன்னிக்கத் தெரியாது"

பாட்டி சொன்ன விஷயமும், அதை அவள் ஆனந்தியின் புகைப்படத்தைப் பார்த்தபடி சொன்ன விதமும் ஆர்த்தியை திகைக்க வைத்தது. "என்ன பாட்டி சொல்றீங்க"

பார்வதி அவள் திகைப்பைக் கவனித்தது போல் தெரியவில்லை. மகள் புகைப்படத்தில் இருந்து கண்களை எடுக்காமல் சொன்னாள்.

"எத்தனை நெருக்கமாய் பழகி இருந்தாலும் சரி, எவ்வளவு வருடங்கள் பழகி இருந்தாலும் சரி யாராவது அவளை ஏமாத்திட்டாலோ, அவமானப்படுத்திட்டாலோ அவளால் தாங்க முடியாது. அதுக்குப் பிறகு அவங்க எத்தனை கீழிறங்கி வந்து மன்னிப்பு கேட்டாலும் சரி, பிறகு என்ன ஆனாலும் சரி அவளைப் பொருத்த வரை அவங்க எதிரி தான். பல சமயங்கள்ல அது ரொம்ப சின்ன விஷயமாய் இருக்கும். ஆனா அவளைப் பொருத்த வரை ஒரு தடவை ஆன விரிசல் எப்பவுமே விலக்கி விட்டுடும்"

ஆர்த்திக்குக் குழப்பம் குறையவில்லை. பார்வதி மகள் புகைப்படத்திலிருந்து விலக்கிய பார்வையை பேத்தி மீது திருப்பினாள். ஆர்த்தியின் முகத்தில் தெரிந்த குழப்பத்தைக் கவனித்த போது அவள் மனம் பாசத்தால் கனிந்தது. பேத்திக்கு விளக்கம் தர வாயைத் திறந்தாள்.

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்றறிய அறைக்கு வெளியே ஓட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மூர்த்திக்கும் ஆவலாக இருந்தது. ஆனந்தியைப் பற்றி அந்த வீட்டில் பேசுபவர்கள் குறைவு என்பதால் ஆனந்தி ஒரு புதிராகவே அவனுக்கு இருந்தாள். சந்தேகிக்கப்படும் விதத்தில் மரணமடைந்தாள் என்பதைத் தவிர அவளைப் பற்றி வேறெந்தத் தகவலும் அவனுக்கும் தெரியாது.

ஆனால் அந்த நேரமாய்ப் பார்த்து ஒரு வித்தியாசமான கார் ஹாரன் சத்தம் கேட்டது. உடனடியாக அந்த இடத்தை விட்டு மூர்த்தி மறைந்தான்.

சிவகாமியின் கார் ஹாரன் சத்தம் தான் அது என்பதை பார்வதியும் உணர்ந்தாள். உச்சஸ்தாயியில் நாதமிசைக்கும் அந்த ஹாரனை அன்றிலிருந்து இன்று வரை சிவகாமி மாற்றவில்லை..... பேத்தியிடம் சொல்ல வந்ததை அப்படியே விழுங்கிக் கொண்டு அப்போதைய தகவலைச் சொன்னாள். "ஆர்த்தி உன் பெரியத்தை வந்துட்டா"

# 23

You may be deceived if you trust too much,
but you will live in torment if you don't trust enough.
– Frank Crane

ஆர்த்திக்கு ஏனோ மூச்சு முட்டுவதைப் போல் இருந்தது. தாயின் மரணம் எழுப்பிய சந்தேகங்கள் இல்லாமல் இருந்திருந்தால், அவளைக் கல்லூரி விழாவில் வசீகரித்த உறவு இல்லாத சிவகாமியாக மட்டும் சிவகாமி இருந்திருந்தால் இந்நேரம் ஆனந்தம் பொங்க அவளைச் சந்திக்க விரைந்திருப்பாள். ஆனால் ஆயிரம் கேள்விகளை அவள் மனதில் கிளப்பி இருந்த சிவகாமியை சந்திப்பதில் இப்போது ஏனோ பயம் மட்டும் மிஞ்சியது.

"ஆர்த்தி" என்று அழைத்தபடி உள்ளே நுழைந்த சந்திரசேகர் ஆர்த்தியின் கூட இருந்த பார்வதியைக் கண்டு கொள்ளவில்லை.

"ஆர்த்தி, அக்கா வந்துட்டா, .... உனக்கென்ன உடம்பு சரியில்லையா"

"ஒண்ணும் இல்லைப்பா. நல்லாத்தான் இருக்கேன்..."

"சரி வா. அக்காவைப் பார்" என்று அவள் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போனார். ஏதோ கடவுளைக் காட்டுகிறேன் வா என்று கூட்டிக் கொண்டு போவது போன்ற பெரும் பரபரப்பு அவரிடம் இருந்தது. ஆர்த்தி அவருடன் போக பார்வதியும் பின் தொடர்ந்தாள்.

ஆர்த்தி மாடிப்படி இறங்கும் போது ஹாலில் அமிர்தம், பவானி, பார்த்திபன், ஒரு மூலையில் மூர்த்தி ஆகியோர் இருந்ததைக் கவனித்தாள். அவர்கள் அனைவரும் அவளைப் பார்த்த விதத்தில் இருந்தே சிவகாமியுடன் அவளது சந்திப்பு எப்படி இருக்கப் போகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறார்கள் என்பது தெரிந்தது. ஆர்த்திக்கு நாக்கு வறண்டது.

சாதாரணமாக தன் அறையை விட்டு வராத பஞ்சவர்ணம் அன்று அறையிலிருந்து வெளியே வந்து ஆவலுடன் ஹாலில் நடப்பது நன்றாகத் தெரிகிற இடத்தில் நின்று கொண்டாள். சிவகாமி தன் மருமகளையும் அவளது பாட்டி தாத்தாவையும் எப்படி எதிர்கொள்கிறாள், அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதனை நேரில் காண்பது நல்லது என்று நினைத்தாள். பவானியிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது வீண், மூர்த்தி மூலம் தெரிந்து கொண்டாலும் அவன் கண்களுக்குத் தப்பும் விஷயங்களும் உள்ளன என்பதால் இந்த முதல் சந்திப்பைத் தானே நேரில் கண்டு கணிப்பது தான் சரியாக இருக்கும் என்று எண்ணினாள்.

சிவகாமி உள்ளே நுழைந்தாள். சிவகாமியின் அழகும், கம்பீரமும், அவள் விலை உயர்ந்த காட்டன் புடவையை உடுத்திருந்த நேர்த்தியும் அந்த சூழ்நிலையிலும் ஆர்த்தியை வியக்க வைத்தது. ஓரிரு நரை முடிகள் அங்கொன்றும் இங்கொன்றும் தெரிந்தது கூட அவள் அழகைக் கூட்டியது போலத் தெரிந்தது.

உள்ளே நுழைந்த சிவகாமியின் கண்கள் ஒரு நொடியில் அங்கு கூடி இருந்தவர்களைக் கணக்கெடுத்தது. மாடியில் ஓரமாக நின்றிருந்த பஞ்சவர்ணத்தைக் கவனித்த போது அவள் முகத்தில் புன்னகை படர்ந்தது. சிவகாமியைத் தொடர்ந்து உள்ளே நுழைந்த ஆகாஷ் தாயை மிகுந்த ஆவலுடன் பார்த்தான். அவன் கண்கள் ஆர்த்தியையும் சிவகாமியையும் மாறி மாறி பார்த்தது. கிட்டத்தட்ட அதே ஆவலுடன் சந்திரசேகரும் அக்காவைப் பார்த்தார்.

சிவகாமி தன் தம்பியின் முகத்தில் தெரிந்த உணர்வுகளையும், தன் மகன் முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும் கவனிக்கத் தவறவில்லை. ஆகாஷின் ஆவல் அவள் புன்னகையை அதிகரித்தது என்றால் சந்திரசேகரின் ஆவல் அவள் புன்னகையை உறைய வைத்தது. ஒரு கலைஞன் தன் படைப்பை பரிசீலிக்கும் நீதிபதியைப் பார்க்கும் ஆவல் அவரிடம் இருந்தது. 'என் மகள் எப்படி இருக்கிறாள் பார்' என்று காட்டும் சந்தோஷம் அவரிடம் தெரிந்தது.

பல காலமாய் தம்பி எதற்காகவும் இப்படி ஒரு ஆர்வம் காண்பித்ததாய் அவளுக்கு நினைவு இல்லை. மருமகளை விட அதிகமாய் தன் தம்பியைக் கவனித்த சிவகாமி பின்பு தன் கவனத்தை ஆர்த்தி மீது திருப்பிய போது அவள் முகத்தில் மலர்ச்சி இருந்தது.

"ஆர்த்தி" என்று அழைத்தபடி வந்து அவளை ஒரு முறை அணைத்துக் கொண்ட சிவகாமி "நீ ஆனந்தி மாதிரியே இருக்கிறாய்" என்று சொன்னாள்.

ஆனந்தியின் பெயர் கேட்டவுடன் சந்திரசேகர் முகம் சிறிது களை இழந்தது.

சிவகாமி பார்வதியின் பக்கம் திரும்பினாள். "எப்படி இருக்கீங்க அத்தை? நீங்க பெருசா மாறின மாதிரி தெரியலை"

அவள் மலர்ச்சியுடன் வரவேற்றது பார்வதிக்கு இதமாக இருந்தது. வேண்டாத விருந்தாளியாக வந்து விட்டோமோ என்ற சந்தேகத்தை சந்திரசேகரின் நடவடிக்கை கிளப்பியிருந்தது.

"மாமா எங்கே?" என்று சிவகாமி கேட்ட போது நீலகண்டன் தளர்ந்த நடையுடன் எதிரே வந்து நின்றார். யார் முகத்தில் முழிக்கவே கூடாது என்று நினைத்திருந்தாரோ அவள் முன் வர வேண்டிய கட்டாயத்தை எண்ணி அவர் வருந்தினார்.

"எப்படி இருக்கீங்க மாமா?" அவள் முகத்தில் மலர்ச்சி மாறவில்லை.

"உன் தயவில் உயிரோட இருக்கேன்மா"

"கடவுள் தயவுன்னு சொல்லுங்க. உயிரோட இருக்கிறதோ போய் சேர்றதோ மனுஷங்க தயவுல இல்லை"

ஒருவிதத்தில் அந்தப் பதில் பெருந்தன்மையானதாகத் தோன்றினாலும் இன்னொரு விதத்தில் உங்கள் மகள் இறந்ததற்கும் நான் காரணம் இல்லை என்று சொல்வது போல் நீலகண்டனுக்குத் தோன்றியது.

சிவகாமி தொடர்ந்து சொன்னாள். "நான் சொன்னதை மதிச்சு ஆர்த்தி கூட வந்தீங்களே அதுவே எனக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கு"

பார்வதி கண்களில் நீர் கோர்த்தது. இவ்வளவு பெருந்தன்மையாகப் பேசுகிறாளே என்று தோன்றியது. மேலேயிருந்து கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்த பஞ்சவர்ணம் 'இந்தக் கிழவன் நம் பக்கம் இருப்பான் கிழவி அந்தப் பக்கம் சாய்ந்தாச்சு" என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள். சிவகாமியின் நடவடிக்கை அவள் எதிர்பார்த்தது தான். எந்த சந்தர்ப்பத்திலும் சிவகாமி வெகு இயல்பாக நடந்து கொள்வதில் கெட்டிக்காரி என்பதில் அவளுக்கு சந்தேகம் என்றும் இருந்ததில்லை.

அந்த சமயத்தில் தான் ஆகாஷும் ஆர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்ற விதத்தை பஞ்சவர்ணம் கவனித்தாள். அதைக் காதல் என்று கண்டுபிடிப்பதில் அவளுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. ஒரு கணம் தனது கனவுகள் எல்லாம் சரிவதாக உணர்ந்தாள். மறு கணம் தன் சாமர்த்தியத்தில் மீண்டும் நம்பிக்கை பெற்றாள். "எதுவும் எப்போதும் மாறலாம். மாற்றலாம்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். சந்திரசேகர் தன் மகளைப் பிடித்துக் கொண்டு நின்ற விதமும், நீலகண்டன் முகத்தில் சிவகாமி மீது தெரிந்த சந்தேகமும் அவளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டின.

அந்த நேரத்தில் சிவகாமியின் ப்ரீஃப் கேஸை எடுத்துக் கொண்டு திடகாத்திரமான, மிக மிக அசிங்கமான முகமுடைய ஒருவன் உள்ளே நுழைந்தான். அவன் முகமெல்லாம் சதைகள் பல மேடுபள்ளங்களுடன் காணப்பட்டன. கண்கள் அந்த சதைக் குவியலுக்குள்ளே கிட்டத்தட்ட மறைந்து போய் இருந்தன. இரு கருப்பு வட்டங்கள் மட்டுமே கண்களின் இடத்தில் காணப்பட்டன. ஆர்த்திக்கு அவனைப் பார்த்தவுடனேயே முகத்தைத் திருப்பிக் கொள்ளத் தோன்றியது. அப்படி அருவருப்பாக இருந்தது. இவன் தான் மூர்த்தி சொன்ன ஆள் என்று புரிந்தது. கஷ்டப்பட்டுப் பார்வையை அவன் மேல் நிறுத்தினாள். "இவன் தான் அம்மாவைக் கொன்றவனோ?"

வந்தவன் ஆர்த்தியைப் பார்த்தவுடன் சிலையாக நின்றான். தோற்றத்தில் ஆனந்தி போல் இருந்தது தான் காரணமாக இருக்கும் என்று ஆர்த்தி ஊகித்தாள். அவன் அடுத்ததாக சிவகாமியைப் பார்த்தான். அவன் திகைப்பைப் பார்த்த சிவகாமி மனதினுள் நினைத்துக் கொண்டாள். "இந்த ஆர்த்தி தனக்குத் தெரியாமலேயே பல பேரிடம் புதிய உணர்ச்சிகளை வரவழைத்திருக்கிறாள். சந்திரசேகரிடம் இது நாள் வரை இல்லாத பாசம், எந்தப் பெண்ணிடமும் இது வரை கவரப்படாத ஆகாஷிடம் காதல், எப்போதுமே உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத இவனிடம் திகைப்பு"

# 24

I have never been hurt by anything I didn't say. – Calvin Coolidge

சிவகாமி புன்னகையுடன் ஆர்த்திக்கு அந்த மனிதனை அறிமுகப்படுத்தினாள். "ஆர்த்தி. இவன் அர்ஜுன்"

வெறும் பெயர் மட்டும் சிவகாமி சொன்னாளே ஒழிய வேறு எதையும் சொல்லி மருமகளைத் தெளிவுபடுத்த முனையவில்லை. புன்னகையுடன் அர்ஜுன் பக்கம் திரும்பி சொன்னாள். "அசப்பில் ஆனந்தி மாதிரியே இருக்கிற இவளை அறிமுகப்படுத்தத் தேவையில்லைன்னு நினைக்கிறேன். இவள் தான் ஆர்த்தி".

ஆர்த்திக்கு ஒரு சம்பிரதாயத்திற்காகக் கூட புன்னகை பூக்கத் தோன்றவில்லை. அர்ஜுனைப் பார்த்தபடி சிலையாக நின்றாள். அர்ஜுனும் அப்படியே நின்றிருந்தான். இருவரில் முதலில் சுதாரித்துக் கொண்டது அவன் தான். அவசரமாக சிவகாமியின் ப்ரீஃப்கேஸை அவள் அறையில் வைக்க அங்கிருந்து கிளம்பினான். போகும் போது ஏதோ நினைவுகளால் அவன் பாதிக்கப்பட்டது போல ஆர்த்திக்குத் தோன்றியது.

சிவகாமி தன் மகனையும் தம்பியையும் பார்த்துப் புன்னகைத்தாள். எனக்கு இவளைப் பிடித்திருக்கிறது என்பது போல் இருந்தது அவள் புன்னகை. இருவர் முகமும் மலர்ந்தது. மேலே பார்த்துக் கொண்டு இருந்த பஞ்சவர்ணத்திற்கு வயிறு எரிந்தது. "இந்தக் கொலைகாரிக்கு என்ன அதிர்ஷ்டம். சொந்த மகளைக் கூட அக்காவுக்குப் பிடித்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற ஒரு பைத்தியம் உலகத்தில் இந்த மாதிரி இன்னொன்னு இருக்க முடியாது"

சிவகாமி மருமகளிடம் கேட்டாள். "இங்கே சௌகரியம் எல்லாம் சரியாயிருக்கா ஆர்த்தி"

இருக்கிறது என்று ஆர்த்தி தலையசைத்தாள். அமிர்தம் தான் சாவியை ஞாபகப்படுத்தினாள். "அக்கா அந்த ரூம்
பீரோக்களோட சாவி தான் கிடைக்கலை"

சில வினாடிகள் கனத்த மௌனம் அங்கே நிலவியது. சிவகாமி என்ன சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ள பஞ்சவர்ணம் ஆவலாக இருந்தாள். ஆர்த்தி வருவதற்கு முந்திய நாள் இரவில் எல்லோரும் தூங்கிய பிறகு சிவகாமி ஆனந்தியின் அறைக்குச் செல்வதை பஞ்சவர்ணம் பார்த்திருக்கிறாள். உள்ளே சுமார் அரைமணி நேரமாவது சிவகாமி இருந்திருப்பாள். திரும்பி வரும் போது சிவகாமி கையில் ஒரு பை இருந்தது. உள்ளே நுழையும் போது அவள் கையில் அந்தப் பை இருக்கவில்லை என்பதில் பஞ்சவர்ணத்துக்கு சந்தேகம் இல்லை. சிவகாமி வந்த போதும் சரி அறையை விட்டுப் போகும் போதும் சரி அவளிடம் பதட்டமோ பரபரப்போ இல்லை. எதையோ அங்கிருந்து அப்புறப்படுத்தி இருக்கிறாள் என்பதை பஞ்சவர்ணம் ஊகித்தாள். எடுத்தது எதுவானாலும் அந்த பூட்டப்பட்ட பீரோவில் இருந்து தான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் ஊகிக்க அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை.

இன்றும் சிவகாமி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. புன்னகையுடன் சொன்னாள். "அந்த சாவி என் கிட்ட தான் இருக்கணும். நான் அப்புறமா தேடித் தர்றேன் ஆர்த்தி. அதில் உன் அம்மா பொருள்கள் எல்லாம் தான் இருக்கணும். அதை வேணும்னா நீ வேற எங்கேயாவது மாத்திட்டு உன் பொருள்களை வச்சுக்கோ....சரி சாப்பிடறப்ப பார்க்கலாம்...."

சிவகாமி போய் விட்டாள். கூட்டம் கலைந்தது. பஞ்சவர்ணம் வேகமாகத் தன் அறைக்குப் போய் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள். சிவகாமி அந்த அறையிலிருந்து அந்த நள்ளிரவில் எதையெல்லாம் அப்புறப்படுத்தி இருப்பாள் என்று பஞ்சவர்ணம் ஊகிக்க முயன்றாள். ஆனந்தி எழுதிய டைரி இருக்கலாம். ஆனந்தி எழுதிய கடிதங்கள் இருக்கலாம். ஆனந்திக்கு எழுதப்பட்ட கடிதங்களாகக் கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அது ஆர்த்தி கண்களில் பட வேண்டாம் என்று சிவகாமி நினைத்திருக்க வேண்டும்.....

"தீவிரமா என்ன யோசிக்கிறீங்க பாட்டி?" பேரன் குரல் கேட்டுத் திரும்பினாள் பஞ்சவர்ணம்.

"சிவகாமி என்னை யோசிக்க வைக்கிறாள் மூர்த்தி. எதையோ அந்த பீரோல இருந்து எடுத்துட்டுப் போனதை நான் என் கண்ணால் பார்த்தேன். எதை எடுத்திருப்பாள்னு யோசிக்கிறேன். சில விஷயங்கள் எல்லாம் பல்லிடுக்குல மாட்டிகிட்ட பதார்த்தங்கள் மாதிரி. அதை எடுக்காத வரைக்கும்

நாக்குக்கு நிம்மதியில்லை. எனக்கு இந்த சஸ்பென்ஸ்னாலே அலர்ஜி. தெரிஞ்சுக்காட்டி மண்டை வெடிச்சுடும்."

மூர்த்தி தன் பாட்டியைக் கூர்ந்து பார்த்தான். அவனைப் பாட்டி தான் வளர்த்தாள் என்பதால் அவளிடம் நிறையவே பாசம் உண்டு. பாட்டியும் அவன் மேல் நிறையவே பாசமாய் இருந்தாலும் அவனிடம் எதையோ மறைக்கிறாள் என்ற சந்தேகம் அவனுக்கு எப்போதும் உண்டு. இந்த புத்திசாலித்தனம், மற்றவர்களிடம் இருந்து பலவற்றையும் மறைக்கும் குணம் போன்றவற்றில் பாட்டியும் சிவகாமியும் ஒன்று என்று நினைத்தான்.

"என்னடா அப்படிப் பார்க்கறாய்"

"பாட்டி நீங்க என் கிட்ட சொல்லாம மறைக்கிற அந்த விஷயம் என்ன பாட்டி?"

பஞ்சவர்ணம் பேரனைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள். மற்றவர்களுக்குத் தெரியாத எத்தனையோ விஷயங்கள் அவள் மனதில் புதைந்து கிடக்கின்றன. அதில் இவன் எதைச் சொல்கிறான்?

"புதிர் போடாம எதைக் கேட்கிறாய்னு சொல்லித் தொலையேண்டா"

"உங்களுக்கும் சிவகாமிக்கும் ஆகிறதில்லைங்கிறது தெரிஞ்ச விஷயம் தான். ஆனா நீங்க ஆர்த்தியோட அம்மாவோட கொலை விஷயமா காட்டற இண்ட்ரஸ்ட்டுக்கு அது மட்டுமே காரணம் இல்லைன்னு தோணுது. வேற ஏதோ காரணமும் இருக்கு. அது என்ன பாட்டி?"

ஒரே நேரத்தில் இரு எதிர்மறையான உணர்ச்சிகள் பஞ்சவர்ணத்தைத் தாக்கின. ஒன்று பேரன் புத்திசாலி, அதனால் தான் இதை ஊகித்திருக்கிறான் என்ற பெருமிதம். இன்னொன்று பயம். அவளையும் அறியாமல் அவள் கண்கள் அந்த அறையில் தொங்கிக்கொண்டு இருக்கும் மகன் மருமகள் புகைப்படத்திற்குப் போய் தங்கின. ஒரு கணம் புகைப்படத்தில் இருந்து அவள் மகன் அர்த்தமுள்ள புன்னகை பூக்கிறதாக அவளுக்குப் பட்டது. கடைசியாக அவன் அவளிடம் வாக்குவாதம் செய்து விட்டுப் போனது நினைவுக்கு வந்தது. அவள் வற்புறுத்தித் தான் அவன் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை...

தேவையில்லாமல் கேள்விகள் கேட்கும் போது இவனும் அவனை ஞாபகப்படுத்துகிறான்.

"என்ன பாட்டி. எங்கப்பா, அம்மா ஃபோட்டோ பார்க்கிறீங்க?"

"ஒண்ணுமில்லைடா மூர்த்தி. ஏதோ பழைய ஞாபகங்கள்....நீ என்ன கேட்டாய்?"

இத்தனை வருடங்கள் பாட்டியுடன் இருந்த மூர்த்திக்கு இந்தக் கேள்வி ஆச்சரியப்படுத்தியது. எதையும் இரண்டாவது தடவையாகக் கேட்கிற பழக்கம் பாட்டிக்குக் கிடையாது. அவள் ஞாபக சக்தி பிரசித்தமானது. அப்படிக் கேட்கிறாள் என்றால் பதிலை யோசிக்க காலத்தை நீட்டிக்கிறாள் என்று அர்த்தம்.

தன் கேள்வியை மூர்த்தி மறுபடி கேட்டான். பஞ்சவர்ணம் உட்கார்ந்து கொண்டாள். கண்களை மூடிக் கொண்டபடி சொன்னாள். "எல்லாத்தையும் நேரம் வர்றப்ப சொல்றேன் மூர்த்தி"

பாட்டி எதை ஏன் மறைக்கிறாள் என்பதை ஊகிக்க முடியாத மூர்த்திக்கு ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. ஆர்த்தியின் தாய் மரணத்தோடு வேறு சில முடிச்சுகளும் இருக்கின்றன.

# 25

Difficult people have been trained and taught to act the way they do since they were children. In fact, they have been rewarded for their negative behavior throughout their entir lives. Difficult behavior worked for them as children – and more important, it continues to work for them as adults. – Connie Podesta

தாத்தா பாட்டிக்கு ஒதுக்கியிருந்த அறையிலும் சௌகரியங்களுக்குக் குறைவில்லை என்பதை நேரில் போய் பார்த்தபின் ஆர்த்தி திருப்தி அடைந்தாள். மனதில் ஆயிரம் சந்தேகங்களும், குழப்பங்களும் இருந்தாலும் சிவகாமி தன் தாத்தா பாட்டியை மலர்ந்த முகத்துடன் வரவேற்ற விதம் மனதுக்கு நிறைவாக இருந்தது. "அப்பா மாதிரி வேண்டா வெறுப்பாய் நடந்துக்கலை"

ஆனால் நீலகண்டன் மிகவும் விரக்தி நிலையில் தான் இருந்தார். சிவகாமியைப் பார்க்கும் போதெல்லாம் ஆனந்தி ஞாபகம் தான் வந்தது. கடைசியில் மகள் முகத்தை ஒரு தடவை கூடப் பார்க்க முடியாமல் போன துக்கம் புதுப்பிக்கப்பட்டது. சௌகரியங்கள் இருந்த போதும் முள் மேல் இருப்பது போல் இருந்தது. மனைவியைப் போல் அவருக்கு நடந்ததை எல்லாம் ஜீரணித்துக் கொண்டு இருக்க முடியவில்லை. ஆகாஷைப் பார்க்கையில் எல்லாம் ஆர்த்தியின் முகம் மலர்ந்ததைப் பார்க்கையில் வயிற்றைக் கலக்கியது. "கடவுளே நீ பொண்ணைக் காப்பாத்தாம போனதுக்கு உன்னை மன்னிச்சுடறேன். என் பேத்தியையாவது காப்பாத்து" என்று அடிக்கடி வேண்டிக் கொண்டார்.

"பாட்டி நீங்க அம்மாவைப் பத்தி ஏதோ சொல்லிட்டு இருந்தீங்க. அம்மாவால சுலபமா யாரையும் மன்னிக்க முடிஞ்சதில்லைன்னு....." ஆர்த்தி பாட்டி விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தாள்.

நீலகண்டனுக்கு மனைவி மேல் கோபம் வந்தது. "நம்பிக்கை துரோகத்தை அவளால் என்னைக்கும் சகிச்சுக்க முடிஞ்சதில்லை ஆர்த்தி. ஒருத்தர் கூட நல்லா பழகி அவங்களை நம்புனதுக்கப்புறம் அவங்க ஏமாத்துனாலோ துரோகம் செஞ்சாலோ அவளால் தாங்க முடிஞ்சது கிடையாது. அவ அதைக் கொலை மாதிரின்னு சொல்வா. நம்பிக்கையைக் கொலை செய்யற மாதிரின்னு அவ சொல்வா. அதுல என்ன தப்பு சொல்லு பார்ப்போம். உப்பு போட்டு சாப்பிடறவன் எவனும் அப்படி நினைக்கிறது சகஜம் தானே?"

பார்வதி கணவனை முறைத்தாள். "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லைன்னு பழமொழி சொல்லுவாங்க. யார் தான் தப்பு செய்யறதில்லை. அப்படி ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு தப்புக்காக வெறுக்க ஆரம்பிச்சா உலகத்துல நாம் நேசிக்க ஒரு ஜீவன் மிஞ்சுமா?"

"அவ எல்லார் கிட்டயும் அப்படி எதிர்பார்க்கலை. அவ நெருங்கி நேசிச்சவங்க செஞ்ச துரோகத்தை அவளால் மன்னிக்க முடிஞ்சதில்லை. அதைத் தெளிவா சொல்லு"

பார்வதி பெருமூச்சு விட்டாள். பின் பேத்தியைப் பார்த்து சொன்னாள். "உன் தாத்தாவுக்கு மகள் செய்யற எதுவுமே தப்பு இல்லை. அப்படி செல்லமா வளர்த்ததால் உங்கம்மா சிலதை மாத்திக்க முயற்சி செஞ்சதேயில்லை. நான் கத்தி என்ன பிரயோஜனம் சொல்லு.... உங்கம்மாவுக்கு சின்ன வயசுல இருந்து ஒரு ஃப்ரண்ட் இருந்தா. எப்ப பார்த்தாலும் ஒண்ணாவே இருப்பாங்க. ஒண்ணாவே

சுத்துவாங்க. காலேஜ் வரைக்கும் அப்படியே இருந்தாங்க. அப்புறமா ஏதோ சின்ன விஷயத்துல பொய் சொல்லிட்டாளோ, ஏமாத்திட்டாளோ தெரியலை. அதுக்கப்புறம் உங்கம்மா அவ முகத்தைக் கூட பார்க்கலை. அந்தப் பொண்ணு சாரின்னு சொல்லிகிட்டு பல தடவை வந்துது. இவ பேசவேயில்லை. அப்புறம் அவளும் வர்றதை நிறுத்திட்டா."

"மூணு மாசம் கழிச்சு அந்தப் பொண்ணு ஒரு விபத்துல செத்துட்டா. தகவல் வந்துச்சு. உங்கம்மா அப்பக் கூட பார்க்கப் போகலை. எத்தனையோ சொல்லிப் பார்த்தேன். அவ போகலை. கடைசியா நான் போய் பார்த்துட்டு வந்தேன். எத்தனையோ நாள் என் கையால அந்தப் பொண்ணுக்கு சாதம் போட்டுருக்கேன். அதனால் என் மனசு கேக்கலை. செத்தப்ப கூட மன்னிக்க முடியலைன்னா அது என்ன மனசுன்னு தான் நான் கேட்கறது"

ஆர்த்திக்கு பாட்டி சொல்வதில் அர்த்தம் உள்ளது என்று தோன்றியது.

நீலகண்டன் மகள் சார்பாகப் பேசினார். "அவ சரியா இருந்துட்டு தான் அடுத்தவங்களும் அப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிறா. அதுல என்ன தப்பு? அந்தப் பொண்ணு செத்துட்டாங்கறதால் அவள் செஞ்சது சரியின்னு ஆயிடுமா?"

தாத்தா சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லை என்றாலும் இயல்பாகவே இளகிய மனம் உள்ள ஆர்த்திக்கு பாட்டி சொன்னது போல் அத்தனை வருடம் பழகிய தோழியின் மரணத்தின் போதாவது அம்மா மன்னித்துப் போய் பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

அம்மா அப்படி இங்கும் வெறுக்க ஆரம்பித்ததால் தான் உயிரை விட நேர்ந்ததா என்ற கேள்வி அவள் மனதில் விஸ்வரூபம் எடுத்தது.

அதே நேரத்தில் சந்திரசேகர் சிவகாமியிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். "அக்கா ஆர்த்தி எதனாலோ நிறையவே பயந்து போயிருக்கிற மாதிரி இருக்கு. எப்பவுமே ஏதோ யோசனையாவே இருக்கா"

சிவகாமி தன் தம்பி குரலிலும் முகத்திலும் தெரிந்த கவலையைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"நீ ஏன் சிரிக்கிறாய் அக்கா?"

"எதைப் பத்தியும் கவலைப்படாத ஆள் புதுசா கவலைப்படறதப் பார்த்தா வேடிக்கையாய் இருக்கு. ரத்த பந்தம் ரத்த பந்தம் தான்னு நினைச்சேன்"

சந்திரசேகரும் புன்னகை செய்தார். ஆனால் தொடர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டார். "அவ ஏன் பயப்படறாள்னு நினைக்கிறாய்க்கா"

சிவகாமி முகத்தில் புன்னகை தேய்ந்து தீவிர சிந்தனை தெரிந்தது. "தெரியலை சந்துரு"

"ஆர்த்திக்கு ஆகாஷை நிறையவே புடிச்சுருக்குன்னு தோணுது. அவனுக்கும் அப்படித்தான்னு தோணுது. அவங்க ரெண்டு பேரும் பாத்துக்கறதைக் கவனிச்சியாக்கா"

"எதையும் ஆரம்ப கட்டத்துலயே முடிவு பண்ணிட முடியாது சந்துரு. கொஞ்ச நாள் போனால் தான் எதையும் நிச்சயமா சொல்ல முடியும்"

தன் சந்தோஷத்தை அதே அளவில் தமக்கை பகிர்ந்து கொள்ளாதது சந்திரசேகருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் எப்போதும் உணர்ச்சிகளால் அதிகமாகப் பாதிப்படையாதவள் அவள் என்பதால் சந்திரசேகர் அந்த ஏமாற்றத்தை உடனடியாக உதறித் தள்ளினார். சிறிது நேரம் தமக்கையுடன் பேசிக் கொண்டு இருந்து விட்டுக் கிளம்பினார்.

அவர் போய் சில நிமிடங்கள் சிந்தனையில் ஆழ்ந்திருந்த சிவகாமி பிறகு எழுந்து தன் மேசையின் கடைசி டிராயரை சாவி போட்டுத் திறந்து அடியில் இருந்த ஒரு ஃபைலை எடுத்தாள். பல வருடங்களுக்கு முன் பாண்டிச்சேரி டாக்டர் ஒருவர் ஆர்த்தியின் கனவுகள் பற்றித் தந்திருந்த மூன்று பக்க ரிப்போர்ட்டைப் படிக்க ஆரம்பித்தாள்.

அந்த டாக்டர் கடைசியில் எழுதியிருந்தார். "இந்தக் கனவுகள் கடலில் தெரியும் பனிப்பாறை முகடுகள் போல் ஆழ்மனதில் பதிந்துள்ள ரகசிய நினைவுகளின் வெறும் எட்டிப் பார்த்தல் மட்டும் தான். முழுவதும் தெரிந்து கொள்ள ஹிப்னாடிசம் செய்வது நல்லது. அப்படிச் செய்து அந்த ஆழ்மனதில் பதிந்துள்ள பயத்தையும் காயங்களையும் போக்கினால் ஒழிய ஆர்த்தியை அந்தக் கனவுகளின் சித்திரவதையில் இருந்து காப்பாற்ற முடியாது. ஆனால் அந்தப் பெண்ணின் தாத்தா அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை..."

"ஆர்த்தியின் ஆழ்மனதில் என்னென்ன பதிந்திருக்கக் கூடும் என்று யாருக்குத் தெரியும்?"- சிவகாமி பெருமூச்சு விட்டாள்.

# 26

Difficult people have been trained and taught to act the way they do since they were children. In fact, they have been rewarded for their negative behavior throughout their entir lives. Difficult behavior worked for them as children - and more important, it continues to work for them as adults. - Connie Podesta

தாத்தா பாட்டிக்கு ஒதுக்கியிருந்த அறையிலும் சௌகரியங்களுக்குக் குறைவில்லை என்பதை நேரில் போய் பார்த்தபின் ஆர்த்தி திருப்தி அடைந்தாள். மனதில் ஆயிரம் சந்தேகங்களும், குழப்பங்களும் இருந்தாலும் சிவகாமி தன் தாத்தா பாட்டியை மலர்ந்த முகத்துடன் வரவேற்ற விதம் மனதுக்கு நிறைவாக இருந்தது. "அப்பா மாதிரி வேண்டா வெறுப்பாய் நடந்துக்கலை"

ஆனால் நீலகண்டன் மிகவும் விரக்தி நிலையில் தான் இருந்தார். சிவகாமியைப் பார்க்கும் போதெல்லாம் ஆனந்தி ஞாபகம் தான் வந்தது. கடைசியில் மகள் முகத்தை ஒரு தடவை கூடப் பார்க்க முடியாமல் போன துக்கம் புதுப்பிக்கப்பட்டது. சௌகரியங்கள் இருந்த போதும் முள் மேல் இருப்பது போல் இருந்தது. மனைவியைப் போல் அவருக்கு நடந்ததை எல்லாம் ஜீரணித்துக் கொண்டு இருக்க முடியவில்லை. ஆகாஷைப் பார்க்கையில் எல்லாம் ஆர்த்தியின் முகம் மலர்ந்ததைப் பார்க்கையில் வயிற்றைக் கலக்கியது. "கடவுளே நீ பொண்ணைக் காப்பாத்தாம போனதுக்கு உன்னை மன்னிச்சுடறேன். என் பேத்தியையாவது காப்பாத்து" என்று அடிக்கடி வேண்டிக் கொண்டார்.

"பாட்டி நீங்க அம்மாவைப் பத்தி ஏதோ சொல்லிட்டு இருந்தீங்க. அம்மாவால சுலபமா யாரையும் மன்னிக்க முடிஞ்சதில்லைன்னு....." ஆர்த்தி பாட்டி விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தாள்.

நீலகண்டனுக்கு மனைவி மேல் கோபம் வந்தது. "நம்பிக்கை துரோகத்தை அவளால் என்னைக்கும் சகிச்சுக்க முடிஞ்சதில்லை ஆர்த்தி. ஒருத்தர் கூட நல்லா பழகி அவங்களை

நம்புனதுக்கப்புறம் அவங்க ஏமாத்துனாலோ துரோகம் செஞ்சாலோ அவளால் தாங்க முடிஞ்சது கிடையாது. அவ அதைக் கொலை மாதிரின்னு சொல்வா. நம்பிக்கையைக் கொலை செய்யற மாதிரின்னு அவ சொல்வா. அதுல என்ன தப்பு சொல்லு பார்ப்போம். உப்பு போட்டு சாப்பிடறவன் எவனும் அப்படி நினைக்கிறது சகஜம் தானே?"

பார்வதி கணவனை முறைத்தாள். "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லைன்னு பழமொழி சொல்லுவாங்க. யார் தான் தப்பு செய்யறதில்லை. அப்படி ஒவ்வொருத்தரையும் ஒவ்வொரு தப்புக்காக வெறுக்க ஆரம்பிச்சா உலகத்துல நாம் நேசிக்க ஒரு ஜீவன் மிஞ்சுமா?"

"அவ எல்லார் கிட்டயும் அப்படி எதிர்பார்க்கலை. அவ நெருங்கி நேசிச்சவங்க செஞ்ச துரோகத்தை அவளால் மன்னிக்க முடிஞ்சதில்லை. அதைத் தெளிவா சொல்லு"

பார்வதி பெருமூச்சு விட்டாள். பின் பேத்தியைப் பார்த்து சொன்னாள். "உன் தாத்தாவுக்கு மகள் செய்யற எதுவுமே தப்பு இல்லை. அப்படி செல்லமா வளர்த்ததால் உங்கம்மா சிலதை மாத்திக்க முயற்சி செஞ்சதேயில்லை. நான் கத்தி என்ன பிரயோஜனம் சொல்லு.... உங்கம்மாவுக்கு சின்ன வயசுல இருந்து ஒரு ஃப்ரண்ட் இருந்தா. எப்ப பார்த்தாலும் ஒண்ணாவே இருப்பாங்க. ஒண்ணாவே சுத்துவாங்க. காலேஜ் வரைக்கும் அப்படியே இருந்தாங்க. அப்புறமா ஏதோ சின்ன விஷயத்துல பொய் சொல்லிட்டாளோ, ஏமாத்திட்டாளோ தெரியலை. அதுக்கப்புறம் உங்கம்மா அவ முகத்தைக் கூட பார்க்கலை. அந்தப் பொண்ணு சாரின்னு சொல்லிகிட்டு பல தடவை வந்துது. இவ பேசவேயில்லை. அப்புறம் அவளும் வர்றதை நிறுத்திட்டா."

"மூணு மாசம் கழிச்சு அந்தப் பொண்ணு ஒரு விபத்துல செத்துட்டா. தகவல் வந்துச்சு. உங்கம்மா அப்பக் கூட பார்க்கப் போகலை. எத்தனையோ சொல்லிப் பார்த்தேன். அவ போகலை. கடைசியா நான் போய் பார்த்துட்டு வந்தேன். எத்தனையோ நாள் என் கையால அந்தப் பொண்ணுக்கு சாதம் போட்டுருக்கேன். அதனால் என் மனசு கேக்கலை. செத்தப்ப கூட மன்னிக்க முடியலைன்னா அது என்ன மனசுன்னு தான் நான் கேட்கறது"

ஆர்த்திக்கு பாட்டி சொல்வதில் அர்த்தம் உள்ளது என்று தோன்றியது.

நீலகண்டன் மகள் சார்பாகப் பேசினார். "அவ சரியா இருந்துட்டு தான் அடுத்தவங்களும் அப்படி இருக்கணும்னு எதிர்பார்க்கிறா. அதுல என்ன தப்பு? அந்தப் பொண்ணு செத்துட்டாங்கறதால் அவள் செஞ்சது சரியின்னு ஆயிடுமா?"

தாத்தா சொன்னதிலும் உண்மை இல்லாமல் இல்லை என்றாலும் இயல்பாகவே இளகிய மனம் உள்ள ஆர்த்திக்கு பாட்டி சொன்னது போல் அத்தனை வருடம் பழகிய தோழியின் மரணத்தின் போதாவது அம்மா மன்னித்துப் போய் பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

அம்மா அப்படி இங்கும் வெறுக்க ஆரம்பித்ததால் தான் உயிரை விட நேர்ந்ததா என்ற கேள்வி அவள் மனதில் விஸ்வரூபம் எடுத்தது.

அதே நேரத்தில் சந்திரசேகர் சிவகாமியிடம் சொல்லிக் கொண்டு இருந்தார். "அக்கா ஆர்த்தி எதனாலோ நிறையவே பயந்து போயிருக்கிற மாதிரி இருக்கு. எப்பவுமே ஏதோ யோசனையாவே இருக்கா"

சிவகாமி தன் தம்பி குரலிலும் முகத்திலும் தெரிந்த கவலையைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"நீ ஏன் சிரிக்கிறாய் அக்கா?"

"எதைப் பத்தியும் கவலைப்படாத ஆள் புதுசா கவலைப்படறதப் பார்த்தா வேடிக்கையாய் இருக்கு. ரத்த பந்தம் ரத்த பந்தம் தான்னு நினைச்சேன்"

சந்திரசேகரும் புன்னகை செய்தார். ஆனால் தொடர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டார். "அவ ஏன் பயப்படறாள்னு நினைக்கிறாய்க்கா"

சிவகாமி முகத்தில் புன்னகை தேய்ந்து தீவிர சிந்தனை தெரிந்தது. "தெரியலை சந்துரு"

"ஆர்த்திக்கு ஆகாஷை நிறையவே புடிச்சுருக்குன்னு தோணுது. அவனுக்கும் அப்படித்தான்னு தோணுது. அவங்க ரெண்டு பேரும் பாத்துக்கறதைக் கவனிச்சியாக்கா"

"எதையும் ஆரம்ப கட்டத்துலயே முடிவு பண்ணிட முடியாது சந்துரு. கொஞ்ச நாள் போனால் தான் எதையும் நிச்சயமா சொல்ல முடியும்"

தன் சந்தோஷத்தை அதே அளவில் தமக்கை பகிர்ந்து கொள்ளாதது சந்திரசேகருக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் எப்போதும் உணர்ச்சிகளால் அதிகமாகப் பாதிப்படையாதவள் அவள் என்பதால் சந்திரசேகர் அந்த ஏமாற்றத்தை உடனடியாக உதறித் தள்ளினார். சிறிது நேரம் தமக்கையுடன் பேசிக் கொண்டு இருந்து விட்டுக் கிளம்பினார்.

அவர் போய் சில நிமிடங்கள் சிந்தனையில் ஆழ்ந்திருந்த சிவகாமி பிறகு எழுந்து தன் மேசையின் கடைசி டிராயரை சாவி போட்டுத் திறந்து அடியில் இருந்த ஒரு ஃபைலை எடுத்தாள். பல வருடங்களுக்கு முன் பாண்டிச்சேரி டாக்டர் ஒருவர் ஆர்த்தியின் கனவுகள் பற்றித் தந்திருந்த மூன்று பக்க ரிப்போர்ட்டைப் படிக்க ஆரம்பித்தாள்.

அந்த டாக்டர் கடைசியில் எழுதியிருந்தார். "இந்தக் கனவுகள் கடலில் தெரியும் பனிப்பாறை முகடுகள் போல் ஆழ்மனதில் பதிந்துள்ள ரகசிய நினைவுகளின் வெறும் எட்டிப் பார்த்தல் மட்டும் தான். முழுவதும் தெரிந்து கொள்ள ஹிப்னாடிசம் செய்வது நல்லது. அப்படிச் செய்து அந்த ஆழ்மனதில் பதிந்துள்ள பயத்தையும் காயங்களையும் போக்கினால் ஓழிய ஆர்த்தியை அந்தக் கனவுகளின் சித்திரவதையில் இருந்து காப்பாற்ற முடியாது. ஆனால் அந்தப் பெண்ணின் தாத்தா அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை..."

"ஆர்த்தியின் ஆழ்மனதில் என்னென்ன பதிந்திருக்கக் கூடும் என்று யாருக்குத் தெரியும்?"- சிவகாமி பெருமூச்சு விட்டாள்.

# 27

"Construct your determination with Sustained Effort, Controlled Attention, and Concentrated Energy. Oppurtunites never come to those who wait... they are captured by those who dare to attack."
-Paul J.Meyer

.....யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது....இரண்டு பெண்கள் ஒரு அறைக்குள் ஆவேசத்துடன் பேசிக் கொள்ளும் சத்தம் கேட்கிறது...பேச்சைத் தொடர்ந்து ஒரு பெண் அமானுஷ்ய குரலில்

சிரிக்கிறாள். திடீரென்று துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது....மூடிய அறைக்குள் இருந்து கதவிடுக்கின் வழியே இரத்தம் வெளியே வருகிறது...வெளியே ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது....ஒரு வினோதமான காலடி ஓசை கேட்கிறது...ஒரு பெண்ணின் அலறல் இடிச்சத்தத்தையும் மீறி அந்த பங்களா முழுவதும் எதிரொலிக்கிறது.... முகமெல்லாம் இரத்தம் வடிய ஒரு பெண் அறையிலிருந்து ஓடி வருகிறாள்....யாரோ ஈனசுரத்தில் "ஆர்த்தி" என்றழைக்கிறார்கள்.....

உடல் எல்லாம் வியர்க்க, அலற முற்பட்ட ஆர்த்தியை வேறு யாரோ உலுக்கினார்கள். "ஆர்த்தி... ஆர்த்தி... என்ன ஆச்சு?"

ஆகாஷின் குரல் தான் அது. தொலைவில் இருந்து கேட்பது போல் இருந்தது. மெல்ல ஆர்த்தி கண்களைத் திறந்தாள். ஆகாஷின் முகம் கவலையோடு அவளைப் பார்த்தது.

அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்தாலும் அவள் இதயத்துடிப்பு இயல்பு நிலைக்கு வர நிறைய நேரம் ஆயிற்று. "என்ன ஆச்சு ஆர்த்தி? கனவா?"

அவன் கனிவான குரல் கேட்டவுடன் அவள் கண்களில் நீர் பெருகியது. ஆமாம் என்று தலையாட்டினாள்.

"அது தான் கனவுன்னு தெரிஞ்சுடுச்சுல்ல. இனி என்ன?" என்றவன் அவள் தலையை சினேகத்துடன் கோதி விட்டான். தன் அறையில் கம்ப்யூட்டரில் இரவு பன்னிரண்டு வரை வேலை செய்து கொண்டு இருந்தவனுக்கு ஆர்த்தி அறையில் இருந்து லேசான முனகலுடன் வினோத சத்தங்கள் கேட்க என்ன என்று பார்க்க வந்தான். ஆர்த்தி ஏதோ பயங்கரக் கனவு கண்டு கொண்டு இருந்தாள் என்பது மட்டும் அவள் முகத்தில் தெரிந்த பீதியில் இருந்து புரிந்தது. உடனே அவளை எழுப்பினான். எழுந்த பின்னும் அவள் பயம் முழுவதும் விலகி விடவில்லை என்பது அவள் முகத்தைப் பார்க்கையில் தெரிந்தது.

"என்ன ஆர்த்தி?"

அவனிடம் எல்லாவற்றையும் சொல்லி அழ அவளுக்குத் தோன்றியது. ஆனாலும் சொல்ல முடியாத தவிப்பில் அழுகை மட்டும் வந்தது. ஆர்த்தியின் துக்கம் ஆகாஷை மிகவும் குழப்பியது. 'இவள் எதையோ மறைக்கிறாள்' என்ற எண்ணம் திரும்பவும் பலமாக அவனுள் எழுந்தது.

இதை ஜன்னல் வழியாக மூர்த்தியும் பார்த்துக் கொண்டு இருந்தான். ஆர்த்தியின் படுக்கை அருகே நின்று அவள் தலையை உரிமையோடு ஆகாஷ் கோதிக் கொண்டு நிற்பதைப் பார்க்க அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

ஆர்த்தியின் அழுகை அதிகமாகவே ஆகாஷ் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். படுக்கையில் உட்கார்ந்து அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டு அழ விட்டான். சில நேரங்களில் அழுது ஓய்வதே பெரிய ஆறுதல் என்று எங்கோ படித்த ஞாபகம் நினைவுக்கு வந்தது. சில நிமிடங்களில் அவள் அழுகை நின்றது. கண்களைத் துடைத்துக் கொண்டு "சாரி..." என்றாள்.

ஆகாஷ் கனிவாகச் சொன்னான். "இட்ஸ் ஓகே". சிறிது நேரம் அமைதியாக அவளுடன் அமர்ந்திருந்து விட்டு ஆகாஷ் எழுந்தான். "சரி நீ தூங்கு ஆர்த்தி. ஏதாவது தேவைன்னா என்னைக் கூப்பிடத் தயங்காதே".

அவள் நன்றியுடன் தலையசைத்தாள். அவன் குட் நைட் சொல்லிக் கிளம்பினான். மூர்த்தி அடுத்த நொடியில் அங்கிருந்து மாயமானான். மறு கணம் பாட்டி அறையில் இருந்தான்.

பஞ்சவர்ணம் ஆழ்ந்து தூங்குவது அபூர்வம். எனவே பேரன் உள்ளே வந்தவுடன் கண் விழித்து பேரனைக் கேள்விக்குறியோடு பார்த்தாள். தான் கண்டதை மூர்த்தி விவரமாகச் சொன்னான். எல்லாவற்றையும் விவரமாய்க் கேட்ட பஞ்சவர்ணம் சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு தீர்மானமாகச் சொன்னாள். "ஆர்த்தியும் ஆகாஷூம் இப்படியே நெருங்கிகிட்டு வர்றது ஆபத்து. முதல்ல அவங்களப் பிரிக்கணும். அதே நேரத்துல சிவகாமியைத் திணறடிக்கணும். இதுக்கு ஒரே வழி, நான் ஆர்த்தியோட தாத்தா பாட்டியை உடனடியா சந்திக்கிறது தான். மூர்த்தி, பவானி கிட்ட காலைல முதல் வேலையா என்னை வந்து பார்க்கச் சொல்லு".

மூர்த்தி போய் விட்டான். பஞ்சவர்ணம் பிறகு தூங்கவில்லை. அவள் மனம் நாளைய நடப்புகளைத் திட்டமிட ஆரம்பித்தது.

மறுநாள் அதிகாலையில் தனது அறைக்கதவை பவானி திறந்தவுடன் மூர்த்தி வந்து பாட்டி சொன்னதைச் சொன்னான். பவானிக்கு வியப்பாக இருந்தது. 'இவன் எத்தனை நேரமாய் இந்தக் கதவருகே நிற்கிறான். கதவைத் திறந்தவுடன் வந்து சொல்லி விட்டுப் போகிறானே'.

பவானியைக் கண்டவுடன் பஞ்சவர்ணம் எதிரே இருந்த சோபாவில் உட்காரச் சைகை செய்தாள். பவானிக்கு லேசாக வயிற்றைக் கலக்கியது. இப்படி உட்காரச் சொல்கிறாள் என்றால் ஏதோ திட்டத்தை விவரிக்கிறாள் என்று பொருள். இப்படி அதிகாலையில் தன்னை அழைத்துச் சொல்லும் திட்டம் என்னவாக இருக்கும் என்று அவளால் ஊகிக்க முடியவில்லை.

"பவானி. ஆர்த்தி ஆகாஷைக் காதலிக்கிறாள்னு தெரியுது. இதை இப்படியே விட்டால் அது அவங்க கல்யாணத்துல போய் முடியும். அப்படி ஒரு கல்யாணம் நடந்தால் சிவகாமியை இனி எப்போதும் யாரும் அசைக்க முடியாதுன்னு ஆயிடும். ஆகாஷ் ஆர்த்தி காதலை முறிக்கவும் சிவகாமியின் அஸ்திவாரத்தையே தகர்த்து எறியவும் ஒரு வழியை நான் யோசிச்சு வச்சிருக்கிறேன்....."

பஞ்சவர்ணம் தன் திட்டத்தை மகளுக்கு விளக்கினாள். "ஆர்த்தியோட பாட்டி தாத்தாவுக்கு மகள் மரணத்துல சந்தேகம் இருக்குங்கறது என்னோட அபிப்பிராயம். அந்தக் கிழவன் சிவகாமி கிட்ட நடந்துகிட்ட முறையைப் பார்த்தா அவன் சிவகாமியைத் தான் சந்தேகப்படறான்னு தெரியுது. ஆகாஷ் மேல் காதல் இருந்தாலும் ஆர்த்திக்கும் சிவகாமி மேல சந்தேகம் இருக்கிற மாதிரி தான் தெரியுது. நம்ம மூர்த்தியும் அவ கிட்ட சில சந்தேகங்களைக் கிளப்பி இருக்கிறான். இது இப்போதைக்கு நமக்கு சாதகமாய் இருக்கிற அம்சம். நீ அந்தக் கிழங்களையும் ஆர்த்தியையும் சிவகாமி ஆபிஸ் போனவுடனே என் கிட்ட கூட்டிகிட்டு வா. அதுக வாயில இருந்து சிவகாமி மேல சந்தேகம்கிறதை நான் எப்படியாவது வரவழைச்சுடறேன். இதை உடனடியா ஆகாஷ் கிட்ட மூர்த்திய விட்டு சொல்லச் சொல்றேன். "ஆர்த்திக்கும் அவங்க தாத்தா பாட்டிக்கும் ஆர்த்தியோட அம்மாவக் கொலை செஞ்சது உங்கம்மா தான்னு சந்தேகம் இருக்கு"ன்னு அவன் ஆகாஷ் கிட்ட தெரிவிக்கட்டும்."

"ஆகாஷூக்கு அவங்கம்மா தெய்வம் மாதிரி. சந்தேகப்பட்ட ஆர்த்தியை வெறுக்க ஆரம்பிச்சுடுவான். உடனடியா போய் அவங்கம்மா கிட்ட சொல்வான். ஒரு பிரளயம் இங்கே வெடிக்கும். இந்த வீட்டுல சிவகாமியை நேரடியா குற்றம் சாட்டுனா என்ன ஆகும்னு பார்க்கலாம். உன் புருஷன் யார் பக்கம் நிப்பான்னு சொல்ல முடியாது. அவன் அக்கா பக்கம் நின்னா ஆர்த்தி ஒதுக்கப்படுவா. அவன் மகள் பக்கம் நின்னா சிவகாமி ஒதுக்கப்படுவா. ரெண்டுமே நமக்கு அனுகூலமே. ஆர்த்தி ஒதுக்கப்பட்டா மூர்த்தி அவ பக்கம் சப்போர்ட்டா இருந்து அவ மனசுல இடம் பிடிக்க வசதியாய் இருக்கும். அந்தக் கிழங்கள இந்த வீட்டுல இருந்து துரத்தவும் வாய்ப்பிருக்கு.

அப்படின்னாலும் அவங்களுக்கு ஒரு தனி வீடு பார்த்து சப்போர்ட் செய்தும் மூர்த்தி அவ மனசுல இடம் பிடிக்கலாம். சிவகாமியே ஒதுக்கப்பட்டா அது நமக்கு பெரிய பீடை ஒழிஞ்ச மாதிரி."

"வாழ்க்கைல சந்தர்ப்பத்துக்காக நாம காத்துகிட்டு இருந்தா பல நேரங்கள்ல அது வராது. அதை நாமளே உருவாக்கிக்கறது தான் புத்திசாலித்தனம். என்ன பிரச்சனைகள் வெடிச்சாலும் உன் புருஷன் மனநிலை எப்படி இருக்குன்னு மட்டும் கவனிச்சிகிட்டு இரு. மகள் வந்தப்புறம் மகள் மேல பாசம் அதிகமா வச்சிருக்கிற மாதிரி தான் தெரியுது. என்ன நடக்குதுன்னு பார்க்கலாம். நீ எப்படியாவது அவங்க மூணு பேரையும் காலைலயே எண் கிட்ட கூட்டிகிட்டு வந்துடு".

பவானிக்கு என்ன நடக்கும் என்ற சந்தேகம் சிறிதும் இல்லை. சிவகாமியின் அஸ்திவாரத்தை தகர்க்கும் சக்தி யாருக்கும் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அப்படியானால் ஒதுக்கப்படப் போகும் நபர்கள் ஆர்த்தியும் அவள் தாத்தா பாட்டியும் தான். ஆர்த்திக்காக அவள் மனதில் பச்சாதாபம் தோன்றியது.

# 28

People seem not to see that their opinion of the world is also a confession of character.

– Emerson

பஞ்சவர்ணம் மூவரையும் நெடுநாள் நெருங்கிப் பழகியவர்களை வரவேற்பது போல வரவேற்றாள். "வாங்க வாங்க". பவானி அவர்களைத் தாயின் அறைக்குள் அனுப்பி விட்டு அங்கிருந்து அப்படியே தனதறைக்குள் தஞ்சம் புகுந்து கொண்டாள். தாய் அரங்கேற்றும் நாடகத்தில் பங்கு பெற அவளுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை.

பார்வதி பவானி தன் தாய் அவர்களைக் காண விரும்புவதாகச் சொன்ன போது படுத்த படுக்கையாக நடமாட முடியாத நிலையில் உள்ள ஒரு மூதாட்டியைப் பார்க்கப் போகிறோம் என்று நினைத்திருந்தாள். பஞ்சவர்ணத்தை அவர்கள் வந்ததில் இருந்து வெளியே பார்த்ததில்லை என்பதும் அதனால் தான் தங்களைக் காண தன் அறைக்கு அழைக்கிறாள் என்றும் நினைத்தாள். ஆனால் பஞ்சவர்ணம் எழுந்து நின்று வரவேற்றதைப் பார்த்த போது அவளுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

தன் திகைப்பை பார்வதி நாசுக்காகத் தெரிவித்தாள். "நாங்க வந்ததில் இருந்து உங்களை வெளியே பார்க்காததால் உங்களுக்கு உடம்பு சரியில்லையோன்னு நினைச்சேன்"

பஞ்சவர்ணம் தன் முகத்தை மிகவும் சோகமாக வைத்துக் கொண்டாள். "உடம்புக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மனசு தான் ரணமாய் இருக்கு. பிடிக்காத இடத்தில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். வேற வழியில்லாமல் இங்க இருக்கேன். அதனால நான் இந்தப் படியைத் தாண்டாமல் ஒரு ஜெயில் வாழ்க்கை வாழ்ந்துட்டு இருக்கேன்"

நீலகண்டனுக்குக் கிட்டத்தட்ட தங்கள் நிலையிலேயே இருக்கும் இன்னொருத்தியைப் பார்க்கையில் ஒருவித சகோதரத்துவம் தோன்றியது.

பஞ்சவர்ணம் அவர் உடல்நிலையை அக்கறையுடன் விசாரித்தாள். ஆர்த்தியிடமும் மிகக் கனிவாக அவள் கல்வி பற்றி விசாரித்தாள். பின் மெல்ல ஆரம்பித்தாள்.

"ஏதோ நீங்க உங்க பேத்தியை அப்பவே எடுத்துகிட்டு போயிட்டதால அவள் பண சௌகரியங்கள் குறைவாய் இருந்தாலும் மத்தபடி சுதந்திரமாய் சந்தோஷமாய் வளர்ந்துட்டா. இங்கே இருந்திருந்தால் இந்த சர்வாதிகாரத்துல சிக்கிக் கஷ்டப்பட்டிருப்பாள்"

அந்த சமயத்தில் மூர்த்தி உள்ளே வந்தான். "இது தான் என் பேரன் மூர்த்தி. என்னை மாதிரி இன்னொரு துரதிர்ஷ்டசாலி. பெத்தவங்கள சின்ன வயசுலயே இழந்ததால இங்கே என் கூடவே இருக்கான். மூர்த்தி பெரியவங்க கால்ல விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக்கப்பா".

மூர்த்தி மிகவும் பவ்யமாக நீலகண்டன், பார்வதி கால்களைத் தொட்டு வணங்கினான். நீலகண்டனுக்கு மூர்த்தியை மிகவும் பிடித்து விட்டது. இந்தக் காலத்திலும் இப்படி மரியாதை தெரிந்த இளைஞன் ஒருவன் இருப்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

பார்வதி பஞ்சவர்ணத்திடம் கேட்டாள். "இவனோட அப்பா அம்மா எப்படி இறந்தாங்க?"

பஞ்சவர்ணம் பார்வதியின் இந்தக் கேள்வியை ரசிக்கவில்லை. ஆனால் அதை சிறிதும் காண்பித்துக் கொள்ளாமல் நிதானமாய் பதில் சொன்னாள். "ஒரு விபத்துல போயிட்டாங்க". விட்டால் இந்தக் கிழவி தன்னுடைய திட்டப்படி நடக்காமல் தன்னிடம் தேவையில்லாத தர்மசங்கடமான கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுவாள் என்று எண்ணிய பஞ்சவர்ணம் மூர்த்தியிடம் தன் வேதனையைத் தெரிவிப்பது போல் பேச்சை ஆரம்பித்தாள்.

"ஆர்த்தியோட அம்மா இயற்கையாய் சாகலை, நடந்தது கொலை தான்னு நம்மகிட்ட பல பேர் உன் அத்தையைக் கல்யாணம் செஞ்சு கொடுத்ததுக்கு அப்புறம் சொன்னதை முதல்லயே சொல்லி இருந்தா கண்டிப்பா பவானியை இந்தப் பாழும் கிணத்துல தள்ளி இருக்க மாட்டேன் மூர்த்தி...." சொல்லி விட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நீலகண்டன் மனைவியை எரித்து விடுவது போலப் பார்த்தார். 'நான் சந்தேகப்பட்ட போது நீ நம்பவில்லை. இப்போது பார் பல பேர் அப்படி சொல்கிறார்கள் என்று இந்தம்மா சொல்கிறார்' என்று பார்வதி அந்தப் பார்வையைப் படித்தாள். பஞ்சவர்ணம் சொன்னதைக் கேட்ட போது ஆர்த்திக்கும் மனம் பதைத்தது. தாத்தா சந்தேகப்பட்டதில் தப்பு இல்லையோ?

பார்வதிக்கு நடப்பது எதுவும் இயல்பான ஒன்றாய்த் தோன்றவில்லை. ஏதோ அபஸ்வரம் இந்த அறைக்குள் நுழைந்ததில் இருந்தே ஒலித்துக் கொண்டிருந்தது போல் ஒரு பிரமை.

நீலகண்டன் பஞ்சவர்ணத்திடம் கேட்டார். "அப்படின்னா உங்க கிட்ட மத்தவங்களும் என் ஆனந்தி கொலை தான் செய்யப்பட்டாள்னு சொன்னாங்களா"

"ஆமாங்க. ஆனா லேட்டா சொல்லிட்டாங்க. முதல்லயே சொல்லி இருந்திருந்தா இந்த சம்பந்தத்திற்கு நான் ஒத்துகிட்டுருக்க மாட்டேன்...." என்று பஞ்சவர்ணம் மறுபடி சொல்ல பார்வதி அவளை சமாதானப்படுத்தினாள். "சரி விடுங்க. உங்க பொண்ணு இப்ப வரைக்கும் இங்கே நல்லா தானே இருக்காள்"

பஞ்சவர்ணத்திற்கு பார்வதியின் நாக்கை இழுத்து அறுத்தால் என்ன என்று தோன்றியது. தான் நினைப்பது போல் நடந்து கொள்ளாத மனிதர்களிடம் அவளுக்கு இயல்பாக ஏற்படும் கோபம் அது. ஆனால் அதைக் காண்பித்துக் கொள்ளாமல் பார்வதியின் பேச்சை அங்கீகரிக்கவும் செய்யாமல் நீலகண்டனைப் பார்த்துக் கேட்டாள். "அதுசரி உங்க பொண்ணு சாகறதுக்கு முன்னால் உங்க கிட்ட எதுவுமே சொல்லலையா?"

நீலகண்டனுக்கு அதற்கு மேல் எதுவும் கேட்கத் தேவை இருக்கவில்லை. மகள் கடைசி மாதங்களில் சந்தோஷம் இல்லாமல் இருந்ததில் இருந்து பிணத்தை அவசர அவசரமாக எரிக்க சிவகாமி ஏற்பாடு செய்தது வரை சொன்னது மட்டுமல்லாமல் சிவகாமி பேத்தியையும் கொன்று விடுவாளோ என்ற பயத்தில் தான் பேத்தியைத் தூக்கிக் கொண்டு போனதையும் உணர்ச்சி பூர்வமாக விவரித்தார். பஞ்சவர்ணம், முகத்தில் தேவையான அதிர்ச்சி, கோபம், வருத்தம் ஆகியவற்றை தக்க சமயங்களில் சரியாக வெளிப்படுத்தி அவரை ஊக்குவித்தாள்.

எல்லாவற்றையும் சொன்ன நீலகண்டன் பேத்தியின் கனவு பற்றியும் சொல்ல வாயெடுத்த போது பார்வதி யாருக்கும் தெரியாமல் கணவனை லேசாகக் கிள்ளித் தடுத்தாள். ஆனால் பஞ்சவர்ணத்தின் கண்களுக்கு அது தப்பவில்லை. 'இந்தக் கிழவி எதைச் சொல்ல விடாமல் தடுக்கிறாள்' என்று அனுமானிக்க முயன்றாள்.

நீலகண்டனை நிறைய நேரம் கட்டுப்படுத்த முடியாது என்று அனுபவத்தில் உணர்ந்திருந்த பார்வதி பேச்சைத் திசை திருப்பினாள். "இன்னொரு விஷயத்தையும் ஒத்துக்காம இருக்க முடியாது. என் மகள் சாகிற வரைக்கும் சிவகாமியைப் பத்தி ஒரு வார்த்தை தப்பாய் சொன்னது கிடையாது. இப்பவும் சிவகாமி உதவி செஞ்சிருக்கலைன்னா நான் பூவும் பொட்டுமா இங்க உட்கார்ந்து பேசிகிட்டு இருக்க முடியாது. ஏன் சொல்றேன்னா சொல்றப்ப எல்லாத்தையும் சொல்றது தானே நியாயம்"

பஞ்சவர்ணத்துக்கு பார்வதி இங்கு வராமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று தோன்ற ஆரம்பித்தது. "நீங்க வர்றதுக்கு முந்தின நடுராத்திரியில் ஆர்த்தியோட அம்மா ரூமுக்குப் போய் சிவகாமி ஏதோ எடுத்துகிட்டு போனதை நான் கண்ணால் பார்த்தேன். எதை எடுத்துட்டு போனாளோ அந்த மகராசி எனக்குத் தெரியலை....."

அடுத்து அரை மணி நேரம் பஞ்சவர்ணம் பேசினாள். பேச்சு முழுவதும் சிவகாமியைப் பற்றியே இருந்தது. எல்லா விதங்களிலும் அதிகாரத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டு எல்லோரையும் ஆட்டுவிக்கும் அவளது அராஜகப் போக்கு பற்றித் தான் பேசினாள். நீலகண்டன் அதை சீரியஸாகக் கேட்டு உணர்ச்சிவசப்பட்டார். ஆர்த்தி அதைக் கேட்டுப் பயப்பட்டாள். பார்வதிக்கு அவள் பேச்சு சலிப்பையே ஏற்படுத்தியது.

கடைசியில் அவர்கள் கிளம்பினார்கள். பஞ்சவர்ணம் சொன்னாள். "நீங்க எல்லாம் வந்து உங்க கிட்ட பேசிகிட்டு இருந்தது எனக்கு ரொம்பவும் ஆறுதலா இருந்துச்சு. இப்படியே அடிக்கடி வாங்க"

அவர்கள் போனவுடன் பஞ்சவர்ணம் பேரனிடம் சொன்னாள். "நாம எதிர்பார்த்ததை அவங்க சொல்லிட்டாங்க. ஆகாஷ் இன்னும் ஆபிஸ் போகலை போலத் தெரியுது. நீ உடனடியா போய் ஆர்த்திக்கு அவங்கம்மா கொலையில சிவகாமி மேல தான் சந்தேகம்கிறதை அவன் கிட்ட தெரிவிச்சுடு"

மூர்த்தி வேகமாகக் கிளம்பினான்.

# 29

**எதையும் எவரும் தவறாகப் புரிந்து கொண்டும் விடலாம்; தவறாக ஆக்கியும் விடலாம்.**

**– ஜெயகாந்தன்**

மூர்த்தி ஆகாஷின் அறைக்குள் நுழைந்த போது ஆகாஷ் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தான். சிறு வயதில் இருந்தே மூர்த்தியும் அந்த வீட்டில் வாழ்ந்து வருகிறான் என்றாலும் மூர்த்தி என்றுமே அவனுடனோ பார்த்திபனுடனோ சேர்ந்ததில்லை. ஆகாஷும், பார்த்திபனும் சேர்ந்து விளையாடிக் கொண்டு இருக்கையில் மூர்த்தி தூர நின்று அவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்தபடி இருப்பான். ஆரம்பத்தில் சில முறை சேர்ந்து விளையாட அழைப்பு விடுத்த ஆகாஷும் பார்த்திபனும் பிறகு அழைப்பதை விட்டு விட்டார்கள். அப்படி அவனுடைய அந்த விலகி நிற்கும் போக்கு நிகழ்காலம் வரை தொடர்ந்து வருகையில் அவனது திடீர் பிரவேசம் ஆகாஷைத் திகைப்பில் ஆழ்த்தியது. "என்ன" என்பது போல அவனைப் பார்த்தான்.

"ஆர்த்தியோட அம்மா கொலை செய்யப்பட்டிருக்காங்கன்னு ஆர்த்தி, அவங்க பாட்டி தாத்தா நம்பறாங்க" என்று மூர்த்தி சொன்னான்.

ஆகாஷ் திகைத்துப் போனான். "உன் கிட்ட யார் சொன்னாங்க"

"அவங்க மூணு பேரும் தான். இப்ப தான் என் பாட்டி கிட்ட சொல்லிகிட்டு இருந்தாங்க"

ஆகாஷிற்கு பஞ்சவர்ணத்தை என்றுமே பிடித்ததில்லை. அந்தக் கிழவி ஒரு காலத்தில் அந்த வீட்டின் நிர்வாகத்தைத் தன் கையில் எடுக்கப் பெரும் முயற்சி மேற்கொண்டு செய்த அட்டகாசங்கள் அவன் மனதில் சிறு வயதிலேயே அவள் மீது வெறுப்பை ஏற்படுத்தி இருந்தன. அதெல்லாம் சிவகாமி முன் செல்லுபடியாகாததால் ஏற்பட்ட கோபத்தில் தன் அறையில் போய் பதுங்கி வாழும் பஞ்சவர்ணத்தை மூர்த்தி பவானி தவிர இப்போதெல்லாம் யாரும் அணுகுவதில்லை. ஆனால் திடீர் என்று இன்று ஆர்த்தி தன் தாத்தா பாட்டியுடன் சென்று அவளுடன் பேசிக் கொண்டு இருந்த தகவலை ஆகாஷ் ரசிக்கவில்லை.

மூர்த்தி ஆனந்தமாக ஆகாஷிடம் சொன்னான். "உங்கம்மா தான் அவங்கம்மாவைக் கொன்னுட்டதாய் அவங்க சந்தேகப்படறாங்க."

அதிர்ந்து போன ஆகாஷ் தன் இதயத்தில் தீயால் தகிக்கும் ஈட்டியைச் சொருகியது போல் உணர்ந்தான். அவன் முகத்தில் அந்த வலி ஒரு கணம் பெரிதும் வெளிப்பட்டது. ஆனால் சந்தோஷமாகத் தன் வேதனையை இரு விழிகள் ரசிப்பதை உணர்ந்தவுடன் அவன் முகம் அலட்சியம் என்ற திரையைப் போட்டுக் கொண்டது. "சரி, உன் பாட்டி எப்ப போலீஸ் டிபார்ட்மென்டில் சேர்ந்தாங்க?"

மூர்த்திக்கு அவன் கேள்வி விளங்கவில்லை. ஆகாஷ் அமைதியாக விளக்கினான். "கொலை சம்பந்தப்பட்ட புகார் எல்லாம் போலீசுக்குப் போய் தான் கொடுப்பாங்க. உன் பாட்டி கிட்ட பிரத்தியேகமாய் வந்து கொடுத்திருக்காங்களே அதனால் தான் உன் பாட்டி போலீஸ்ல சேர்ந்துட்டாங்களான்னு கேட்டேன்"

மூர்த்தி அவனுடைய சுயக் கட்டுப்பாட்டை மெச்சினான். சிவகாமியிடம் அவள் மகன் நிறைய கற்று வைத்திருந்தான். "போலீஸ் கிட்ட தான் சொல்லணும்னு இல்லை. பிடிச்சவங்க கிட்டயும் சொல்லலாம்"

"அது சரி. நீ இங்கே ஏன் வந்து சொல்கிறாய். என் கிட்டே சொல்லச் சொல்லி உன்னை அவங்க அனுப்பிச்சாங்களா" என்று புன்னகையுடன் ஆகாஷ் கேட்டான்.

மூர்த்தி அமைதியாகச் சொன்னான். "இல்லை. நானாக தான் சொல்ல வந்தேன். கேட்டு எனக்கே அதிர்ச்சியாயிடுச்சு."

"ரொம்பவும் அதிர்ச்சியாயிடாதே. இதயத்துக்கு அது நல்லதல்ல. இனி நீ போகலாம்"

மூர்த்திக்கு முழு திருப்தி ஏற்படவில்லை என்றாலும் ஆரம்பத்தில் தகவலைச் சொன்னவுடன் ஆகாஷ் முகத்தில் தெரிந்த அந்த வேதனை தந்த திருப்தியுடன் கிளம்பினான். அன்று ஆபிசுக்குப் போக வேண்டி இருக்காவிட்டால் இனி ஆகாஷ் என்னவெல்லாம் செய்கிறான் என்று வேவு பார்த்திருப்பான். போய் பாட்டியிடம் நடந்ததை விவரமாகத் தெரிவித்தான்.

பஞ்சவர்ணம் ஆகாஷின் கிண்டலைக் கேட்டு கொதித்துப் போனாள். "நான் போலீஸ் டிபார்ட்மெண்டில் இருந்திருந்தா அவங்கம்மா இன்னேரம் ஜெயில்ல கம்பி எண்ணிகிட்டு இருந்திருப்பா". மூர்த்தி போய் நிறைய நேரம் ஆன பின்னும் அவளுக்குத் தன் கோபத்தை அடக்கக் கஷ்டமாக இருந்தது. ஆனால் இத்தனை நாட்கள் தன் பக்கம் திரும்பிப் பார்க்காமல் இருந்த அதிர்ஷ்டம் ஆர்த்தி வடிவில் வந்து விட்டதால் இனி இவர்களை என்ன விலை என்று கேட்கும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை என்கிற எண்ணம் சிறிது சிறிதாக அவள் கோபத்தைத் தணித்தது.

ஆகாஷால் இன்னும் நடந்ததை ஜீரணிக்க முடியவில்லை. கடந்த அரை மணி நேரம் நடந்ததெல்லாம் கனவாக இருந்தால் பரவாயில்லை என்று தோன்றியது. அவன் தன் தாயை உயிருக்கு உயிராக நேசித்தான். அவன் அவளை மதிக்கும் அளவு வேறொரு மனிதரை மதித்ததில்லை என்பதும் உண்மை. அப்படிப்பட்ட அவன் தாய் மீது அவன் காதலிக்க ஆரம்பித்திருக்கும் ஒரு பெண் கொலைக் குற்றம் சாட்டுகிறாள் என்பதை அவனால் சிறிதும் சகிக்க முடியவில்லை. ஒரு கணம் மூர்த்தி சொன்னதெல்லாம் பொய்யாய் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் உண்மையா என்று நேரடியாகக் கேட்க ஆர்த்தி அருகிலேயே இருக்கையில் மூர்த்தி அந்த அளவு பொய் சொல்லத் துணிய மாட்டான் என்று அவன் அறிவு சொல்லியது.

எதற்கும் அவளிடம் நேரடியாகவே கேட்டு விடலாம் என்று தீர்மானித்தவன் ஆர்த்தியின் அறைக்குப் போனான்.

ஆகாஷைப் பார்த்தவுடன் ஆர்த்தியின் முகம் மலர்ந்தது. எந்த மனநிலையில் இருந்தாலும் அவனைப் பார்த்தவுடன் தன் மனம் ஏன் இப்படி சந்தோஷத்தால் நிறைந்து விடுகிறது என்று அவளுக்குத் தெரியவில்லை. "ஹாய்" என்றாள்.

ஆகாஷ் ஒன்றும் சொல்லாமல் அவளை ஆழமாகப் பார்த்தான். அவன் முகத்தில் சிரிப்பு துளியும் இல்லை. அவன் முகபாவனையும், அவன் பார்த்த விதமும் அபாய அறிகுறிகளாக அவளுக்குப் பட்டது.

"உட்காருங்க"

அவன் உட்காரவில்லை. "உங்கம்மா மரணத்தில் உங்களுக்கு எல்லாம் சந்தேகம் இருக்குன்னு கேள்விப்பட்டேன். நீங்க எங்கம்மா தான் கொலை செய்ததாய் சந்தேகப்பட்டு சொன்னதாயும் கேள்விப்பட்டேன். உண்மையா?"

ஒரு வினாடியில் ஆர்த்தியின் முகம் வெளுத்தது. இதயத் துடிப்புகள் சம்மட்டி அடிகளாயின. உடல் எல்லாம் வியர்க்க ஆர்த்தி ஆகாஷைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவனுடைய கூரிய பார்வை அவள் முகத்தை விட்டு விலகவில்லை. அவள் குரல் பலமிழந்தது. பலவீனமாய் சொன்னாள். "நான் அப்படி சொல்லலை"

"சொல்லலை சரி. ஆனா யார் சொல்லி இருந்தாலும் உன் மனசில் எங்கம்மா மேல் சந்தேகம் இருக்கு. இல்லையா"

அவன் வார்த்தைகள் ஈட்டிகளாய் வந்தன. அவள் நிலைகுலைந்து போனாள். அவன் விடுவதாக இல்லை. "சொல்லு. சந்தேகம் இருக்கா இல்லையா?"

பஞ்சவர்ணம் அவளிடம் சிவகாமி தான் ஆனந்தியைக் கொன்றாள் என்று பலரும் சொன்னதாய் சொன்னதும், சிவகாமி அந்த அறையில் இருந்து எதையோ அப்புறப்படுத்தியதைத் தன் கண்ணால் கண்டதாய் சொன்னதும் உண்மையில் ஆர்த்தி மனதில் சந்தேக விதைகளை விதைத்திருந்தது. அதை ஆகாஷிடம் சொல்வது என்றென்றைக்குமாய் அவனை தன்னிடம் இருந்து பிரித்து விடும் என்று அறிவு அவளை எச்சரித்தது. ஆனால் பட்டவர்த்தனமாக பொய் பேசி அறியாத ஆர்த்தி தன்னையுமறியாமல் பரிதாபமாகத் தலை அசைத்தாள்.

ஒரு சின்ன தலையசைப்பு தன் இதயத்தை இப்படி சுக்கு நூறாகக் கிழித்து விடும் என்று முன்பு யாராவது சொல்லி இருந்தால் ஆகாஷ் சிரித்திருப்பான். ஆனால் இன்று அந்த வேதனையை அவனால் உணர முடிந்தது.

அதன் பிறகு அவன் அவளைப் பார்த்த பார்வையில் எந்த விதத்திலும் சம்பந்தமேயில்லாதது போல் அன்னியத்தனம் இருந்தது. இறுகிய முகத்துடன் அமைதியாகச் சொன்னான். "நான் என் அம்மா கிட்ட இதை சொல்லி உங்க சந்தேகத்தை உடனடியாக தீர்க்கச் சொல்கிறேன்."

அந்தக் கணமே அவனை இழந்து விட்டதாக ஆர்த்தி உணர்ந்தாள். அவன் மேற்கொண்டு ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசாமல் அவள் அறையில் இருந்து வெளியேறினான்.

# 30

A person knowing the power of the word, becomes very careful of his conversation. He has only to watch the reaction of his words to know that they do "not return void." Through his spoken word, man is continually making laws for himself.

– Florence Scovel Shinn

கண்களில் நீர் மல்க வந்து நின்ற பேத்தியைப் பார்த்த பார்வதி பதறிப் போனாள். "என்ன ஆர்த்தி. என்ன ஆச்சு"

ஆர்த்திக்கு வார்த்தைகளுக்குப் பதிலாக மீண்டும் அழுகை தான் வந்தது. ஆகாஷ் அவள் அறையை விட்டுப் போன போது அவளது சந்தோஷம், உற்சாகம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டது போல் உணர்ந்து அழ ஆரம்பித்தவள் அரை மணி நேரம் கழித்து ஓரளவு தன் துக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டோம் என்று தோன்றிய பிறகு தான் பாட்டியிடம் நடந்ததைச் சொல்லக் கிளம்பினாள். ஆனால் இந்த துக்கம் அவ்வளவு சீக்கிரம் அடங்கக்கூடியதல்ல என்று மறுபடி அழ ஆரம்பித்த போது தான் அவளுக்கு உறைத்தது.

பதில் பேசாமல் அழும் பேத்தியை அணைத்து ஆசுவாசப்படுத்தி என்ன நடந்தது என்பதைப் பார்வதி நிதானமாகச் சொல்ல வைத்தாள். கேட்டவுடன் தலையில் இடி விழுந்தது போல் அவள் உணர்ந்தாள். யோசிக்க யோசிக்க அவளுக்குத் தலை சுற்றியது.

பஞ்சவர்ணத்திடம் பேசி விட்டு வந்து ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை, அதற்குள் செய்தி ஆகாஷை எட்டி இருக்கிறது என்பதை நினைக்கையில் இது பஞ்சவர்ணத்தின் திட்டமிட்ட சதி என்று பார்வதிக்குத் தெளிவாக விளங்கியது. அவசரமாக வரவழைத்தவள் தானாகவே ஆனந்தி மரணம் பற்றிய பேச்சு எடுத்து நீலகண்டனைப் பேச வைத்து அவர்களை அனுப்பியவுடன் முதல் வேலையாக அதை ஆகாஷிற்குத் தெரிவித்திருக்கிறாள் என்றால் இதற்குப் பின்னால் ஏதோ பெரிய திட்டத்தை அவள் வைத்திருக்கிறாள் என்பதும் புரிந்தது. இதன் விளைவாக ஆகாஷ் தன் தாயிடம் தெரிவித்து அவர்கள் சந்தேகத்தைத் தீர்க்க வைக்கிறேன் என்று சொன்னது பிரச்சினையின் உச்சகட்டமாக அவளுக்குப் பட்டது.

சிவகாமி காதில் இந்தத் தகவல் எட்டுவதை பார்வதியால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. யாரால் தான் இன்று சுமங்கலியாக இருக்கிறோமோ அவள் மீது இந்தப் புகார் தாங்கள் சொன்னதாக அவள் காதில் எட்டுவது தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. அவள் அதைக் கேட்டு தங்களைப் பற்றி என்ன நினைப்பாள் என்பது ஒரு புறமிருக்க அதன் பின் ஏற்படும் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை அவளால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

சிவகாமி பிணம் எரிப்பதில் அவசரம் காட்டினாள் என்பதைத் தவிர வேறெந்த ஆதாரமும் இல்லை. சிவகாமி இப்போதும் அன்று சொன்னதையே திரும்பவும் சொல்லலாம். "முகம் சிதிலமாகி விட்டது அதனால் தான் உங்களுக்கு பிணத்தைக் கண்ணில் காட்டாமல் சீக்கிரம் எரித்து விட ஏற்பாடு செய்தேன்" என்று சொன்னால் அது பொருத்தமாகத் தான் இருக்கும். ஆனால் இப்படி குற்றம் சாட்டியது சந்திரசேகர் காதில் விழுந்தால் அந்த மனிதர் எந்த அளவு மோசமாக எடுத்துக் கொள்வார், அவர்களிடம் எப்படி நடந்து கொள்வார் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

ஒரு தீர்மானத்துடன் எழுந்தாள். "நீ இங்கேயே இரு. நான் ஆகாஷ் கிட்ட போய் பேசறேன். இது சிவகாமி காதில் விழாமல் இருக்க நான் முயற்சி செய்யறேன்"

ஆர்த்தி தடுத்தாள். "வேண்டாம் பாட்டி. அவர் பழைய ஆகாஷாய் இனி நம்ம கிட்ட பழக மாட்டார். என்னை ஒரு புழுவைப் பார்க்கிற மாதிரி பார்த்தார். உங்க கிட்ட எப்படி நடந்துக்குவார்னு தெரியலை...."

"பரவாயில்லை. அந்த பஞ்சவர்ணத்து கிட்ட ஏமாந்ததுக்கு என் மேல அவன் காறித் துப்புனாலும் தப்பில்லை. நீ இரு நான் பேசிட்டு வந்துடறேன்"

பார்வதி ஆகாஷ் அறையினுள் நுழைந்த போது அவன் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டு இருந்தான்.

இன்னும் அவனால் நடந்ததை ஜீரணிக்க முடியவில்லை. ஆர்த்தி அவன் தாய் மீது சந்தேகப்பட்டதை ஒத்துக் கொண்ட போது ஏற்பட்ட ரணம் இனி குணமடையாது என்று அவனுக்குத் தோன்றியது. அம்மாவிடம் சொல்லும் போது கூட அவள் சந்தேகப்படுகிறாள் என்பதை தன்னால் ஒத்துக் கொள்ள முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. அவளுடைய தாத்தா பாட்டியைத் தான் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். அப்போது தான் பார்வதி தயக்கத்துடன் அவன் அறை வாசலில் நின்றாள்.

அவன் அவளைப் பார்த்த பார்வையில் பழைய சினேகம் இல்லை. அவன் கண்களில் கோபம் கொப்பளித்தது. "கொஞ்சம் பொறுங்க. இன்னைக்கு சாயங்காலம் அம்மா கிட்ட பேசி உங்க சந்தேகத்தை தீர்க்கச் சொல்கிறேன்னு உங்க பேத்தி கிட்ட சொல்லி அனுப்பி இருந்தேனே. இன்னும் என்ன?"

"அப்படி செஞ்சீங்கன்னா அந்த பஞ்சவர்ணம் போட்ட திட்டப்படி நீங்க நடந்துகிட்ட மாதிரி ஆயிடும்"

பஞ்சவர்ணத்தின் பெயரைக் கேட்ட ஆகாஷ் திடுக்கிட்டான். "என்ன சொல்றீங்க?"

"இன்னைக்குக் காலைல அவசர அவசரமா அந்தம்மா எங்க மூணு பேரையும் கூப்பிட்டு அனுப்பிச்சா. போனோம். அவளே ஆர்த்தியோட அம்மா சாவைப் பத்தி பேச்சை ஆரம்பிச்சா. ஆனந்தியை உங்கம்மா தான் கொன்னாங்கன்னு பல பேர் சொன்னதாய் சொல்லி எங்க வாயைக் கிளறுனா. என் வீட்டுக்காரருக்கு முதல்லயே மகள் சாவுல சந்தேகம்... அவரும் ஏதோ பேசுனார். நாங்க வெளியே வந்து அஞ்சாவது நிமிஷம் உன் காதுல இது விழற மாதிரி பார்த்துகிட்டா. என்ன திட்டம் போட்டு இப்படி நடந்துக்கறான்னு தெரியலை. ஆனா நாங்க பலிகடா ஆயிருக்கோம்கிறது தான் உண்மை"

ஆகாஷ் ஆழ்ந்த யோசனையுடன் பார்வதியைப் பார்த்தான். மூர்த்தி உடனடியாக அவனிடம் வந்து அதைச் சொன்னதைப் பார்த்தால் அவள் சொன்னது நிஜம் என்றே தோன்றியது. ஆனால் அவன் பேசிய போது முகம் இறுகியே இருந்தது. "ஆனா நீங்க சந்தேகப்பட்டது நிஜம்"

"எனக்கு சந்தேகமே இல்லை. என் மகள் சாகற வரை உங்கம்மாவைப் பத்தி தப்பாய் ஒரு வார்த்தை சொன்னதில்லை. என் புருஷனுக்கு மகள் சாவுல சந்தேகம். ஆனா அது உங்கம்மா மேலன்னு இல்லை. பொதுவாய் சந்தேகம். ஆர்த்தி....."

அவன் அமைதியாக இடைமறித்தான். "ஆர்த்திக்கு எங்கம்மா மேல சந்தேகம் இருக்குன்னு எனக்குத் தெரியும். அதை க்ளியர் செய்ய வேண்டியது என் கடமை".

பார்வதி இயலாமையுடன் பெருமூச்சு விட்டாள். ஆர்த்திக்குப் பொய் பேசவோ, உண்மையை சாய்த்துச் சொல்லவோ, திரித்துச் சொல்லவோ தெரியாதது தான் அவளுக்கு எதிராக செயல்படுகிறது என்று தோன்றியது. இப்போது தற்காப்புக்காக தன் கணவனுக்குப் பொதுவான சந்தேகம், சிவகாமி மேல் இல்லை என்று பச்சையாகப் பொய் பேச முடிந்தது போல் அவன் கேட்கையில் 'பஞ்சவர்ணம் சொன்னதை நான் நம்பவில்லை' என்று ஆர்த்தி சொல்லி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று பார்வதி நினைத்தாள். "ஆகாஷ் அந்தப் பஞ்சவர்ணம் பேசினதைக் கேட்டு அவ குழப்பம் அடைஞ்சுட்டா..."

"பரவாயில்லை....யாரோ ஒருத்தர் எங்கம்மாவைப் பத்தி உயர்வாய் நினைக்கணும், சந்தேகமே படக் கூடாதுன்னு நினைக்க எனக்கு உரிமையில்லை"

ஆர்த்தியை அவன் யாரோ ஒருத்தர் என்றது பார்வதி காதில் காய்ச்சிய ஈயமாய் விழுந்தது.

"அந்த பஞ்சவர்ணம் இப்படி ஒரு புரளியைக் கிளப்பி எங்க மேல் உங்கம்மா, ஆர்த்தியோட அப்பா மனசுல அதிருப்தியைக் கிளப்பத் திட்டம் போட்டிருக்கற மாதிரி தெரியுது. தயவு செஞ்சு உங்கம்மா காதுல இது எட்டாமல் பார்த்துக்கன்னு சொல்ல வந்தேன்."

"ஆனா சந்தேகம்னு வந்ததுக்கப்புறம் அதை நிவர்த்தி செய்துக்கறது நல்லது தானே. இப்ப உங்களுக்காக இல்லாட்டியும் எனக்காகவாவது நான் கேட்டுத் தெளிவடையணும்னு தோணுது"

"கேளு. நீயா அவளோட மரணத்தைப் பத்தி சும்மா கேட்கிற மாதிரி கேட்டு தெளிவடைஞ்சுக்கோ. ஆனா ஆகாஷ் தயவு செஞ்சு எங்க பேரைச் சொல்லிடாதே. இன்னைக்கு நான் சுமங்கலியாய் இருக்கேன்னா அது உங்கம்மா தயவுல தான். நன்றி கெட்டத் தனமாய் வாய்க்கு வந்ததைச் சொன்னோம்கிற பேரை மட்டும் தயவு செஞ்சு வாங்கிக் கொடுத்துடாதே. அந்த பஞ்சவர்ணம் எதிர்பார்த்ததை மட்டும் செஞ்சுடாதே. தயவு பண்ணுப்பா...." சொல்லச் சொல்ல பார்வதி குரல் உடைந்தது.

பஞ்சவர்ணம் திட்டப்படி இயங்க ஆகாஷுக்கும் விருப்பமில்லை. ஆனால் பார்வதியின் வேண்டுகோள் குறித்து அவனால் முடிவெடுக்க முடியவில்லை. "சரி நீங்க சொன்னீங்கன்னு சொல்லலை. பஞ்சவர்ணம் உங்ககிட்டே சொன்னான்னு சொல்லட்டா"

"அவ சொன்னான்னு என்ன ஆதாரம் எங்க கிட்ட இருக்கு. அவ நாங்க தான் சொன்னோம்னு திருப்பி விட நிறைய விஷயம் என் வீட்டுக்காரர் கிட்ட சேகரிச்சு வச்சிருக்கா. ஆனந்திய எரிச்ச அன்னைக்கு என்ன எல்லாம் நடந்ததுன்னு அவர் விலாவரியா சொல்லி இருக்கார். நாங்க சொல்லாம அது எல்லாம் தனக்கு எப்படித் தெரியும்னு சுலபமா அந்தம்மா சொல்லிடுவா"

பார்வதி சொன்னதில் அர்த்தம் இருப்பதாக ஆகாஷுக்குப் பட்டது. யோசித்துச் சொன்னான். "நான் அம்மா கிட்ட சொல்லாட்டியும் அம்மா காதுல விழாமப் போகாது. அந்த மூர்த்தி நீங்க தான் சொன்னதா அந்தப் புரளியை வீட்டுல ஒவ்வொருத்தர் கிட்டயும் போய் சொல்லாம இருக்க மாட்டான்."

# 31

Things don't turn up in this world until somebody turns them up.—GARFIELD

பார்வதி சொன்னாள். "அப்படி இன்னொரு தடவை இந்தப் பேச்சு அடிபடாமல் நான் பார்த்துக்கறேன், ஆகாஷ்"

"எப்படி?"

"நான் பஞ்சவர்ணம் கிட்ட பேசறேன். அதைப் பத்தி நீ யோசிக்காதே. நீ மட்டும் இதைப் பத்தி அம்மா கிட்ட சொல்லாம இருந்தால் போதும்"

ஆகாஷ் அரை மனதோடு தலையசைத்தான். ஆனால் பார்வதி போய் பஞ்சவர்ணத்தின் வாயை மூட முடியும் என்று அவன் நம்பவில்லை.

"ரொம்ப நன்றிப்பா" என்று சொல்லி அவன் மனம் மாறும் முன் அங்கிருந்து கிளம்பத் தயாரானாள். போகையில் குரல் கரகரக்கச் சொன்னாள். "ஆகாஷ் ஆர்த்தியை வெறுத்துடாதேப்பா".

"வெறுப்பு கூட ஒரு பந்தம் தான் பாட்டி. அதனால் நான் அதைக் கூட உங்க பேத்தி மேல் வச்சுக்க விரும்பலை..."

வார்த்தைகள் தீப்பிழம்பாகத் தாக்க கனத்த இதயத்துடன் பார்வதி அங்கிருந்து நகர்ந்தாள். ஆனால் அவளுக்கு இப்போது வருத்தப்படக் கூட நேரம் இல்லை. ஆகாஷ் சொன்னது போல் பஞ்சவர்ணம் பேரனை விட்டு ஒவ்வொருவரிடமாக இவர்கள் சொல்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு வரலாம். அதை நிறுத்த அவள் கண்டிப்பாகப் பஞ்சவர்ணத்திடம் பேசியாக வேண்டும். பார்வதி வேகமாக பஞ்சவர்ணத்தின் அறைக்குச் சென்றாள்.

பஞ்சவர்ணம் வெடிப்பட்டாசிற்குத் தீ வைத்து விட்டு அது வெடிக்கக் காத்திருக்கும் சிறுவனைப் போல பரபரப்பாகக் காத்துக் கொண்டு இருந்தாள். ஆகாஷ் எப்போது தாயிடம் சொல்வான் சிவகாமியின் ரியாக்ஷன் எப்படி இருக்கும், இந்தக் குழப்பத்தில் குளிர் காய்வது எப்படி என்று யோசித்து அவ்வப்போது என்ன ஆனால் எந்த விதத்தில் அனுகூலம் என்றெல்லாம் தன் மகள் பவானியிடம் மெல்லிய குரலில் விவரித்துக் கொண்டு இருந்தாள். பவானி பள்ளி முடியப் போகும் நேரத்தில் கஷ்டமான பாடம் நடத்தத் துவங்கிய ஆசிரியையைப் பார்க்கும் மாணவி போல் தாயைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். ஒரு காலத்தில் தாயின் பரபரப்பும் ஆர்வமும் அவளையும் தொத்திக் கொண்டு இருக்கும். இப்போதெல்லாம் அவளுக்கு சலிப்பு தான் மிஞ்சுகிறது.....

பார்வதி உள்ளே நுழைந்ததைக் கண்ட பஞ்சவர்ணம் "வாங்க வாங்க" என்று வாயார வரவேற்றாள். "உட்காருங்க"

பார்வதி உட்காரவில்லை. "கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நாம பேசிகிட்டு இருந்ததை நாங்க மட்டும் சொன்னதாய் ஆகாஷ் கிட்ட உடனடியா யாரோ போய் சொல்லி இருக்கிறாங்க. அவன் கிட்ட போய் சொன்னது நாங்க இல்லை. அதனால ஒன்னு நீங்க இல்லைன்னா உங்க பேரன் தான் சொல்லி இருக்கணும். இதுக்கு என்ன அர்த்தம்னு எனக்கு விளங்கலை...."

பஞ்சவர்ணம் நிஜமாகவே திடுக்கிட்டாள். இந்த விஷயம் இவ்வளவு சீக்கிரம் பார்வதி காதில் எட்டியதில் கூட அவளுக்கு திகைப்பு இல்லை, அதைத் தைரியமாக உடனடியாகத் தன்னிடம் நேரடியாக வந்து கேட்கும் அளவுக்கு பார்வதி உஷாராக இருப்பாள் என்று அவள் கணித்திருக்கவில்லை. கணவனை விட மனைவி புத்திசாலி என்று மட்டுமே அவள் கணித்திருந்தாள். மனிதர்களைக் கணிப்பதில் அவள் அறிவுக்கூர்மை என்றுமே சோடை போனதில்லை என்றாலும் பார்வதியை முழுமையாக கணிக்க அவளுக்குப் போதுமான காலம் கிடைக்கவில்லை என்பதால் தான் இந்த நேரடி குற்றச்சாட்டை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

உடனடியாக சுதாரித்துக் கொண்ட பஞ்சவர்ணம் தன் நடிப்புத் திறமையை மிக அழகாக வெளிப்படுத்தினாள். "சிவசிவா.... நீங்க என்ன சொல்றீங்கன்னே தெரியலை. நான் இந்த ரூமை விட்டு வெளியே போறதில்லைன்னு உங்களுக்கே தெரியும்"

"அப்படின்னா உங்க பேரன் சொன்னானா?" –பார்வதி விடவில்லை.

"ஒரே நிமிஷம் இருங்க. உங்க சந்தேகத்தை இப்பவே நிவர்த்தி செய்துடறேன். பவானி மூர்த்திக்கு உன் செல்லுல ஒரு போன் இப்பவே போடு"

பவானி இந்த நேரத்தில் தான் இங்கே இல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்து மௌனமாக மூர்த்திக்கு செல்லில் போன் போட்டு தாயிடம் கொடுத்தாள்.

"ஏண்டா மூர்த்தி இன்னைக்குக் காலைல நாம பேசினதை நீ போய் ஆகாஷ் கிட்ட சொன்னாயா..... என்ன.... உனக்கு மனசு கொதிச்சிப் போய் தாங்காம அவன் கிட்ட போய் கேட்டுட்டியா...ஏண்டா கடவுள் உனக்கு மூளையே வைக்கலையா... நீ கிறுக்குத் தனமா இப்படி செய்யப்போய் ஆர்த்தியோட பாட்டி நாம வேணும்னே அவங்க வாயைக் கிளறி உடனடியா போய் ஆகாஷ் கிட்ட சொல்லிட்டதா சந்தேகப்படறாங்க. அவங்க மேல என்னடா தப்பு, அவங்க இடத்துல நான் இருந்திருந்தாலும் அப்படித் தான் நினைப்பேன். ஆள் வளர்ந்திருக்கியே தவிர அறிவு வளரலையே. நீ நேருல வா பேசிக்கறேன்.."

பஞ்சவர்ணம் பார்வதியிடம் உருக்கமாய் சொன்னாள். "நீங்க சொன்னது வாஸ்தவம் தான். இந்த மூர்த்தி தடியன் தான் போய் சொல்லி இருக்கிறான். அவனை சூதுவாது தெரியாமலேயே வளர்த்துட்டதோட விளைவு தான் இதெல்லாம். இங்க பேசினதை எல்லாம் கேட்டு மனசு கொதிச்சுப் போயிட்டானாம். சிவகாமி கிட்ட போய் கேட்க தைரியம் இல்லை. அதனால தன் வயசு இருக்கிற ஆகாஷ் கிட்ட போய் நியாயம் கேட்டுருக்கான். நான் சொன்னதுக்கப்புறம் தான் இப்படிப் போய் சொல்லி இருக்கக் கூடாதுன்னு ஃபீல் செய்யறான்.... அவன் சார்பா நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்....."

'திரைக்கதை, நடிப்பு, வசனம், டைரக்ஷன் எல்லாமே அம்மா தான்' என்று இந்த இக்கட்டான சூழ்நிலையை புத்திசாலித்தனமாக சமாளித்த பஞ்சவர்ணத்தைப் பார்த்து பவானி மனதிற்குள் சபாஷ் போட்டாள்.

பார்வதிக்கும் பஞ்சவர்ணம் சொன்னது யதார்த்தமாகவே பட்டது என்றாலும் எங்கோ இடித்தது. மேற்கொண்டு அதைப் பற்றி சிந்திக்காமல் விஷயத்திற்கு வந்தாள். "மன்னிப்பு எல்லாம் வேண்டாம். ஆனா இன்னொரு தடவை உங்க பேரனை மனசு கொதிக்காம இருக்கச் சொல்லுங்க. ஆகாஷைக் கெஞ்சிக் கூத்தாடி அவங்க அம்மா கிட்ட இந்த விஷயத்தைப் பத்திப் பேசாமல் இருக்க ஒத்துக்க வச்சிருக்கேன். இன்னொரு தடவை உங்க பேரன் இதை வேற யாரு கிட்டயாவது போய் சொன்னான்னு தெரிஞ்சா நானாகவே நேரா சிவகாமி கிட்ட போய் இது நாங்க சொன்னதல்ல அவனாவே கற்பனை செஞ்சு நாங்க சொன்னதாய் சொல்லி வதந்தியைப் பரப்பிகிட்டு இருக்கிறான்னு சொல்லிடுவேன். வேணும்னா கற்பூரம் அணைச்சு சத்தியம் செய்யவும் நான் தயாராய் இருப்பேன். என் புருஷனும் பேத்தியும் நான் அந்த அளவுக்குப் போனதுக்கப்புறம் மறுத்துப் பேசவோ என்னை விட்டுக் கொடுக்கவோ மாட்டாங்க"

பவானி பார்வதியை பிரமிப்புடன் பார்த்தாள். மிகவும் பாவமாகத் தெரிந்த இந்தப் பெண்மணி இவ்வளவு ஆணித்தரமாகப் பேசி தன் தாயிற்கு செக்மேட் வைப்பாள் என்று இன்னும் அவளால் நம்ப முடியவில்லை. ஆனால் அந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது.

பஞ்சவர்ணம் கூட இதை எதிர்பார்க்காததால் அதிர்ந்து போனாள் என்றாலும் அதை வெளியில் காண்பிக்காமல் பார்வதியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பார்வதி தொடர்ந்தாள். "என்னடா இப்படிப் பேசறாளேன்னு நீங்க நினைக்கக் கூடாது. என் சூழ்நிலை அந்த மாதிரி. நான் இங்க சண்டை கட்டவோ, மகளைக் கொன்னது யாருன்னு தெரிஞ்சு

பழி வாங்கவோ வரலை. மேலே ஒருத்தன் இருக்கான். அவன் கோர்ட்டுல இருந்து கொலை செஞ்சவங்க தப்ப முடியாது. என் இப்போதைய கவலை எல்லாம் என் பேத்தி நிம்மதியா பாதுகாப்பா இருக்கணும். அவ்வளவு தான். இந்த வீட்டுல சிவகாமியைப் பகைச்சுகிட்டு அது முடியாது. அதனால அவளை எதிர்த்துக்கற எந்த விளையாட்டுலயும் நான் இல்லை..."

பஞ்சவர்ணம் மிகவும் பரிவு காட்டி சொன்னாள். "நீங்க எங்களைத் தப்பா புரிஞ்சுகிட்டீங்கன்னு நினைக்கறேன். எல்லாம் அந்த தடியனோட முட்டாள்தனம் தான் காரணம். இனிமேல் இப்படி அவன் வாயில் இருந்து வராமல் நான் பார்த்துக்கறேன்."

பார்வதி அங்கிருந்து கிளம்பிய போது உடலில் இருந்து அத்தனை சக்தியும் வெளியேறி விட்டது போன்ற களைப்பு அவளுக்கு ஏற்பட்டது.

அவள் போன பின் பஞ்சவர்ணம் மகளிடம் சொன்னாள். "இந்தப் பாண்டிச்சேரி கிழவி இவ்வளவு ராங்கி பிடிச்சவளா இருப்பான்னு நான் நினைக்கலை. சரி பரவாயில்லை. நான் நினைச்ச மாதிரி முழுசும் நடக்காட்டியும் முக்கால் வாசி நடந்துருக்கு பவானி. ஆகாஷையும் ஆர்த்தியையும் பிரிச்சாச்சு. என் கணிப்பு சரியா இருந்தா ஆகாஷ் இந்தக் கிழவி கெஞ்சலுக்கு ஒத்துகிட்டு அம்மா கிட்ட சொல்லாம இருந்தாலும் அம்மா கிட்ட தான் கேட்கற மாதிரியாவது துருவித் துருவி அந்த ஆனந்தி கொலை பத்திக் கேட்காம இருக்க மாட்டான். அம்மான்னா தெய்வம்னு நினைச்சுகிட்டு இருந்த மகன் சந்தேகப்பட ஆரம்பிக்கறதை விட அந்த சிவகாமிக்கு தண்டனை என்னடி வேணும். இன்னைக்கு வெடிக்காட்டியும் இந்த வெடி என்னைக்காவது ஒரு நாள் வெடிக்கும்."

# 32

If you have tears, prepare to shed them now.
-William Shakespeare

பஞ்சவர்ணம் மூர்த்தி வரும் வரை நிலை கொள்ளாமல் காத்துக் கொண்டு இருந்தாள். "என்ன வேலை இது? இன்னும் வரலை. என் திட்டம் கை கூடினா இந்த பாழாப் போன வேலைக்கெல்லாம் இவன் போக வேண்டி இருக்காது. ஆயிரக்கணக்கானவங்களை வேலை வாங்கிகிட்டு கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து அதிகாரம் செஞ்சுகிட்டு இருக்கலாம்.... இவன் வந்தவுடனேயே அந்த மூணு பேரு கிட்டயும் போய் பேச வைக்கணும். அந்தக் கிழவி மனசுல இருக்கற சந்தேகத்தை முழுசா நீக்கிடணும். ..... அந்தக் கிழவி என்னமா என்னையே மிரட்டிட்டுப் போறா. சரியான ராங்கிக்காரி. அது தான் அப்படியே அவ மகளுக்கும் வந்திருந்தது. அவளும் ஒரு காலத்துல என்னமா ஆடுனா..."

மூர்த்தி அன்று ஒரு மணி நேரம் தாமதமாக வந்தான்.

"ஏண்டா லேட்?"

"வேலை இன்னைக்கு ஜாஸ்தி"

"எல்லாம் கொஞ்ச நாளைக்கு தான். அது வரைக்கும் பொறுத்துக்கோடா மூர்த்தி. என் திட்டப்படி நீ அந்த ஆர்த்தி கழுத்தில ஒரு தாலியைக் கட்டிட்டா அப்புறம் நாம வச்சது தான் சட்டம்.... அதை விடு. இப்ப முக்கியமான ஒரு கட்டத்துல நாம் இருக்கோம். அந்தக் கிழவி கிட்டத்தட்ட நம்ம திட்டத்தைக் கண்டு பிடிக்கற அளவுக்கு வந்துட்டா. அப்புறம் நான் அந்தக் கிழவியோட

சந்தேகத்தைக் குறைக்க சமாளிக்க வேண்டியதாப் போச்சு. நீ இப்ப என்ன செய்யறேன்னா..." – பேரன் என்ன செய்ய வேண்டும் என்று விவரித்தாள்.

மூர்த்தி தன் பாட்டி சொன்னதைக் கவனமாகக் கேட்டு விட்டுக் கிளம்பினான். ஆர்த்தியின் அறையில் எட்டிப் பர்த்தான். அங்கு அவள் இல்லை. பாட்டி தாத்தாவுடன் தான் இருப்பாள் என்று நினைத்தவனாக பக்கத்து அறையை எட்டிப் பார்த்தான். ஆகாஷ் தன் கம்ப்யூட்டரில் ஏதோ வேலை செய்து கொண்டு இருந்தான். இன்னேரம் அவன் சோகக்கடலில் மூழ்கி இருந்தால் மூர்த்திக்கு ஆனந்தமாக இருந்திருக்கும். ஆனால் சிவகாமியின் மகன் எதுவுமே நடக்காதது போல் வேலை பார்த்துக் கொண்டிருந்தது மூர்த்தியை மிகவும் பாதித்தது. சரியான அழுத்தக்காரன்....

மூர்த்தி சோகத்தை முகத்திலும், லேசாகக் கண்ணீரை கண்களிலும் தேக்கிக் கொண்டு நீலகண்டன் தம்பதிக்கு ஒதுக்கப்பட்டு இருந்த அறைக்குள் நுழைந்தான். நேராக நீலகண்டன் காலில் சென்று விழுந்தான். "என்னை மன்னிச்சுடுங்க"

நீலகண்டன் பதற்றத்துடன் அவனை எழுப்ப முயன்றார். "ஐயோ என்ன தம்பி இதெல்லாம்... முதல்ல எழுந்திரு"

"முதல்ல மன்னிச்சேன்னு சொல்லுங்க"

"சரி... மன்னிச்சேன்... எழுந்திரு"

கண்களில் நீர் மல்க அவர்கள் மூவரையும் பார்த்தான். "சத்தியமா நான் என்னோட கட்டுப்பாட்டுல இன்னைக்குக் காலைல இருக்கலை. காரணம் எனக்கு சின்னதுல இருந்தே அநியாயத்தை எங்கே பார்த்தாலும் சகிச்சுக்க முடிஞ்சதில்லை. சின்னதுலயே அப்பா அம்மாவை விபத்துல இழந்துட்டேன். அது விதி. ஆனா ஆர்த்தி தன்னோட அம்மாவை இழந்ததுக்கு விதி காரணம் இல்லை. ஒருத்தியோட சதி தான் காரணம். அதுவும் உங்களால கடைசியில் செத்துப்போன அவங்க முகத்தைக் கூட பார்க்க முடியலைங்கறதைக் கேட்டதும் ரத்தம் கொதிச்சுடுச்சு. அந்தம்மா கிட்ட போய் கேட்க முடியலை. என்ன செய்யறதுன்னு தெரியாம ஆகாஷ் கிட்ட போய் கேட்டேன். "உங்கம்மா இந்த மாதிரி செஞ்சுட்டாங்களே இது நியாயமான்னு நீயே சொல்லு"ன்னு. ஆனா எங்க பாட்டி திட்டினப்ப தான் எனக்கு என்னோட தப்பு உறைச்சுது..... நீங்க எங்களோட நோக்கத்தையே சந்தேகப்படறீங்கன்னு தெரிஞ்சப்ப என்னை வெட்டிப் போட்ட மாதிரி இருந்துச்சு. என் முட்டாள்தனத்துக்கு நீங்க என்ன தண்டனை தந்தாலும் ஏத்துக்கறேன்...."

அவன் தலை குனிந்து நின்றான். அவன் கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது.

நீலகண்டனும் ஆர்த்தியும் அவனைக் கண்டு மனம் இளகினார்கள். உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒரு முட்டாள்தனமான செயல் செய்த பாவப்பட்ட நல்ல மனதுடைய இளைஞனாக அவன் அவர்களுக்குத் தெரிந்தான். பார்வதி மட்டும் சந்தேகக் கண்ணோடு அவனைப் பார்த்தாள்.

"தண்டனை எல்லாம் வேண்டாம். இனியொரு தடவை இந்த மாதிரி யார் கிட்டயும் சொல்லாமல் இரு போதும்"

பார்வதியின் பக்கம் திரும்பிய மூர்த்தி கைகள் கூப்பி சொன்னான். "வாயே திறக்க மாட்டேன். இப்ப வேணும்னா போய் ஆகாஷ் கிட்ட இதெல்லாம் அவங்க சொன்னதில்லை, நானா ஜோடிச்சு சொன்னதுன்னு சொல்லவும் தயாராய் இருக்கேன். நீங்க வேணும்னா என் கூட வாங்க. உங்க முன்னாடியே நான் சொல்றேன்"

கொஞ்ச நஞ்ச சந்தேகம் இருந்திருக்குமானால் அதையும் நீலகண்டன், ஆர்த்தி மனதிலிருந்து மூர்த்தி நீக்கி விட்டான். பார்வதியின் சந்தேகம் ஓரளவு குறைந்தது. "அதெல்லாம் வேண்டாம்" என்றாள். அதனால் ஒரு பயனும் இல்லை என்று அவளுக்குத் தெரியும்.

மூர்த்தி ஆர்த்தி பக்கம் திரும்பினான். இன்னொரு முறை "சாரி ஆர்த்தி. உன்னோட இப்போதைய நிலைமை தெரியாமல் இப்படி ஒரு முட்டாள் தனம் செஞ்சுட்டேன்."

ஆர்த்தி பரவாயில்லை என்று தலையசைத்தாள். மூர்த்தி குரல் கரகரக்க சொன்னான். "இன்னொரு தடவை நீங்க என்னைப் பார்க்கிறப்ப சகஜமாய் பழகணும். அது தான் நீங்க என்னை மன்னிச்சுட்டதுக்கு அடையாளம்னு நான் நினைப்பேன்". சொல்லி விட்டுப் போய் விட்டான்.

நீலகண்டன் மனைவியைக் கடிந்து கொண்டார். "இவ்வளவு நேரம் அவனைக் கரிச்சுக் கொட்டிகிட்டு இருந்தியே. இப்ப புரியுதா அந்தப் பையன் கிட்ட அப்படித் தப்பு எண்ணம் இல்லைன்னு"

பார்வதி யோசனையுடன் சொன்னாள். "எனக்கு இப்பவும் முழு சந்தேகமும் போயிடலை. அழற ஆம்பிளையை எப்பவுமே நம்பக்கூடாது...."

★★★★★★★

சிவகாமி அந்த இரண்டு டைரிகளையும் திறக்காமல் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். ஆனந்தியின் பீரோவில் இருந்து எடுத்து வந்த அந்த டைரிகளைப் படிக்க மனம் வரவில்லை. என்ன எழுதி இருப்பாள் என்று தெரியும். அறை மூலையில் குளிரைத் தணிக்க எரிந்து கொண்டிருந்த நெருப்பைப் பார்க்க ஆரம்பித்தாள். மனம் ஆனந்தியைச் சுற்றியே வட்டமிட்டது....

பல ஆண்டுகளுக்கு முன் சிவகாமி ஆனந்தியிடம் கேட்டிருக்கிறாள். "நீ ஏன் விடாமல் டைரி எழுதிகிட்டு வர்றே"

"அந்தந்த சமயங்கள்ல எப்படி ஃபீல் செய்கிறோம்கிறது நமக்கே நிறைய காலம் கழிச்சு ஞாபகம் முழுசா இருக்கிறது இல்லைக்கா. சம்பவம் நினைவுக்கு வரும், ஓட்டு மொத்தமாய் அதை நாம் நினைச்ச விதம் ஞாபகம் வரும். இப்படி எழுதி வச்சா படிக்கறப்ப நாம அந்த நாள் வாழ்க்கையை இன்னொரு தடவை வாழ்கிற மாதிரி தோணும். அதனால தான் எழுதறேன்...."

"சந்தோஷமான சமயங்கள் சரி. துக்கமானதைக் கூட எழுதுவியா?"

"ஆமாக்கா. அதை எழுதறது பின்னால் படிக்கறதுக்கல்ல. அதை எழுதியவுடனேயே மனசு பாரம் குறைஞ்சு லேசாயிடும். அதுக்காகத் தான் நான் அதையும் எழுதறது"

எல்லாவற்றையும் அவள் இதில் எழுதி இருப்பாள் என்பதில் சிவகாமிக்கு சந்தேகம் இல்லை. இதை எல்லாம் யாரும் இன்னொரு முறை படிக்கத் தேவையில்லை என்று சிவகாமி எண்ணினாள். ஏனென்றால் எழுதிய ஆனந்தியே கூட மனதின் பாரம் குறைய தான் இதை எழுதினாளே ஒழிய பின்னால் இன்னொரு முறை படிப்பதற்கல்ல. நிதானமாக சிவகாமி அந்த இரண்டு டைரிகளையும் எடுத்து அறையின் மூலையில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் போட்டாள். ஆனந்தியின் எழுத்துகள் எரிந்து சாம்பலாக ஆரம்பித்தன. இனி யாரும் அதைப் படிக்கப் போவதில்லை.

# 33

**உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்**
**உள்ள நிறைவாமோ?– நன்னெஞ்சே**
**தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்**
**சேர்த்த பின் தேனாமோ?– நன்னெஞ்சே.**
**–பாரதியார்**

ஆர்த்தி அன்று மாலை இரண்டு முறை ஆகாஷை நேருக்கு நேர் பார்த்தாள். ஒரு முறை கூட அவன் அவளைத் தன் பார்வையால் அங்கீகரிக்கவில்லை. அனாயாசமாக அவன் பார்வை அவள் மீது படாமல் விலகியது. அவள் அந்த இடத்தில் இல்லவே இல்லை என்பது போல அவன் நடந்து கொண்டான். அவளால் மட்டும் ஏனோ அது முடியவில்லை. அவன் வெறுக்கிறான், அலட்சியமாக நடந்து கொள்கிறான் என்று தெளிவாகத் தெரிந்த பிறகும் அவள் இதயத் துடிப்பு அவனைப் பார்க்கும் போதெல்லாம் அதிகரிக்காமல் இருக்கவில்லை. அவனது கம்பீரமான நடையையோ, அவன் அழகையோ ரசித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அதனால் துன்பம் தான் அதிகம் என்றாலும், மனம் மேலும் ரணமாகத் தான் ஆகிறது என்றாலும் அவள் இதயம் அவள் அறிவுக்கு அடங்க மறுத்தது. அது தனி சுயாட்சி வாங்கிக் கொண்டு இயங்கியது.

சில நாட்களே பழகி இருந்த போதிலும் அவன் அவள் இதயத்தில் ஆழமாக வேரூன்றி இருந்தான். நேற்று கூட அவள் அறைக்கு அவன் கொண்டு வந்து வைத்த செடிகள், நள்ளிரவில் அவள் கனவு வந்து பயத்தில் விழித்த போது கனிவாக அவள் தலையைக் கோதியது, அவளைத் தன் தோளில் சாய்த்து அழவிட்ட அந்தப் புரிந்து கொள்ளல் எல்லாம் அவள் நினைவுகளில் திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தன.

அன்றிரவு சாப்பாட்டு நேரத்திலும் அவன் அவள் அருகில் உட்காரவில்லை. ஒரு புறம் அவளருகில் பார்த்திபன் உட்கார்ந்திருந்தான். மறுபுறத்தில் இருக்கை காலியாகவே இருந்தது என்றாலும் அந்த இருக்கைக்கு அடுத்த இருக்கையிலேயே வந்து அமர்ந்தான். முந்தைய நாள் அவர்கள் நெருக்கத்தைக் கவனித்திருந்த அனைவரும் இந்த விலகலையும் கவனித்தார்கள்.

மூர்த்திக்குத் தங்கள் திட்டம் வெற்றி அடைந்ததில் மிகவும் திருப்தியாக இருந்தது. பார்த்திபன் ஆர்த்தியிடம் பேசிக் கொண்டு இருந்தாலும் பார்த்திபனை அவன் ஒரு போட்டியாக நினைக்கவில்லை.

மருமகளின் அருகில் இருந்த காலி இருக்கையில் அமிர்தம் வந்தமர்ந்து இடையிடையே அவளிடம் பேசினாள். அவர்கள் இருவரிடமும் பேசியபடி சாப்பிட்டதில் ஆர்த்திக்கு ஓரளவு தன் வேதனையை மறக்க முடிந்தது. பார்த்திபன் நல்ல நகைச்சுவையுடன் பேசி அவள் முகத்தில் சிறு புன்னகைக் கீற்றுகளை அவ்வப்போது கொண்டு வந்தான்.

சந்திரசேகருக்கு மகள் சந்தோஷமாக இல்லை என்று தெரிந்தது. காரணம் ஆகாஷின் விலகல் தான் என்பதையும் ஊகித்தார். அதன் காரணம் தெரியாவிட்டாலும் அவருக்கு ஆகாஷ் மீது கோபம் வந்தது. தனக்கு எதிரே அமர்ந்திருந்த சிவகாமியைப் பார்த்தார். சிவகாமி தன் கணவரிடம் ஏதோ பேசியபடி சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள்.

வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் ஆகாஷால் ஆர்த்தியை நினைத்த அளவுக்கு முழுவதும் மனதில் இருந்து ஒதுக்கி விட முடியவில்லை. தாயைப் பற்றி அவள் சந்தேகப்பட்டாள் என்ற கோபம் அவனுள் எத்தனை கொந்தளிப்பை ஏற்படுத்தி இருந்தாலும், ஆர்த்தி நினைத்திருந்தால் அதை

மறைத்திருக்கலாம் என்ற உண்மை அவன் மனதில் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டு இருந்தது. அவளுக்குப் பாவம் பொய் கூட சொல்ல வருவதில்லை என்பது அறிவுக்கு எட்டாமல் இல்லை.

ஆனால் அதற்காக அவளிடம் பழையபடி பழக முடியும் என்று அவனால் நினைக்க முடியவில்லை. அவளிடம் அவனுக்கு ஏற்ப்பட்ட ஈர்ப்புக்கு அவன் இன்னும் பெயர் வைக்கவில்லை. அதை ஆராயவும் அவன் முனையவில்லை. அது எதுவாக இருந்தாலும் அது அற்பாயுசில் இறந்து விட்டது என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் தாய் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள் என்பதில் அவனுக்கு சந்தேகம் இல்லை. அவளை சந்தேகித்தவள் வேறு எந்த விதத்தில் நல்லவளாக இருந்தாலும் அவளிடம் அவன் எந்த உறவும் வைத்துக் கொள்ள முடியாது.... அவனுக்கு ஏனோ சாப்பிடச் சாப்பிடக் கோபம் வந்தது. பார்த்திபனுடன் பேசிக் கொண்டிருந்த ஆர்த்தி மீது கோபம் வந்தது. நீலகண்டனுக்கு உடல்நிலை சரியில்லை என்றவுடன் தன்னை அனுப்பிய அம்மா மீது கோபம் வந்தது. 'இந்த அம்மா மட்டும் என்னைப் பாண்டிச்சேரிக்கு அனுப்பாமல் இருந்திருந்தால்.....'

பக்கத்தில் அமர்ந்திருந்த ஆகாஷ் கோபமாக இருக்கிறான் என்பதை அவன் முகபாவனையில் இருந்தே ஊகித்த அமிர்தம் எதற்காகக் கோபப்படுகிறான் என்று கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தாள்.

அங்கிருந்த எல்லோருடைய சிந்தனையையும் பேச்சையும் கலைத்தது ஒரு கலகலப்பான குரல். "ஹாய் சந்துரு".

அமிர்தம் புன்னகையுடன் ஆர்த்தி காதில் சொன்னாள். "இது தான் உங்கப்பாவோட சினேகிதன். சின்னதுல இருந்தே சேர்ந்தே தான் சுத்துவானுக. இப்ப டாக்டரா இந்த ஊர்ல தான் இருக்கான். பேரு டேவிட். கூட இருக்கிறது அவன் மனைவி மேரி..... கடைசி வரைக்கும் உங்கம்மாவும் அவளும் நெருங்கின சினேகிதிகளா இருந்தாங்க...."

ஆர்த்தி அந்த தம்பதியரை ஆர்வத்துடன் பார்த்தாள். தம்பதியர் இருவரும் மாநிறமாக, நடுத்தர வயதினராக இருந்தார்கள்.

"டேய் டூர்ல இருந்து இப்ப தான் திரும்பி வந்தேன். உன் மகள் வந்திருக்கறதா சொன்னாங்க. உடனடியா வந்துட்டேன். எங்கே உன் பொண்ணு?" டேவிட் உற்சாகமாகக் கேட்க சந்திரசேகர் பெருமிதத்துடன் ஆர்த்தியை சுட்டிக் காட்டினார்.

டேவிட் மேரி தம்பதியரின் அதிர்ச்சியை ஆர்த்தி தெளிவாகக் காணமுடிந்தது. டேவிட் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்து விட்டு சந்திரசேகரை பொருள் பொதிந்த பார்வை பார்க்க சந்திரசேகர் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டார். மேரி ஆர்த்தியைப் பார்த்து திகைத்து நின்றாள். அவள் கண்களில் லேசாக நீர் திரை போட்டது.

சிவகாமி வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டாள். "ரெண்டு பேருக்கும் தட்டு வைங்க. டேவிட் உட்காருடா. மேரி உட்காரும்மா"

டேவிட் சொன்னார். "இல்லைக்கா. நேரமானதால் வழியிலேயே டிபன் சாப்பிட்டுட்டோம். அதுவும் இங்க வர்ற ப்ரோகிராம் இருக்கலை. ஆர்த்தி வந்துருக்கான்னு கேட்டதால உடனடியா பார்த்துட்டுப் போகலாம்னு வந்தோம்." மேரி ஆர்த்தியிடம் வந்து அவள் தோளில் கைவைத்து குரல் கரகரக்கச் சொன்னாள். "எனக்கு ஒரு நிமிஷம் ஆனந்தியே இங்க வந்துட்ட மாதிரி தோணிடுச்சு"

மனைவியின் கூடவே வந்த டேவிட்டும் சொன்னார். "ஆமாம்மா உங்கம்மாவைப் பார்த்த மாதிரியே இருக்கு"

அவர்களது அன்பான பேச்சில் ஆர்த்தி நெகிழ்ந்து போனாள். எழுந்து நிற்கப் போனவளை அவர்கள் இருவரும் அனுமதிக்கவில்லை. டேவிட் சொன்னார். "உட்காரும்மா. சாப்பிடு. பிறகு பேசலாம். நாங்க உள்ளூர் தான். அது மட்டுமல்ல. எனக்கு லோக்கல்ல இருக்கற வரைக்கும் தினமும் ஒரு தடவையாவது வந்து உங்கப்பன் கிட்ட ஏதாவது வம்பிழுத்து சண்டை போடலைன்னாலும், உன் பெரியத்தை கிட்ட ஏதாவது திட்டு வாங்கலைன்னாலும் தூக்கம் வராது.....நீயும் எங்க வீட்டுக்கு ஒரு தடவை வா. இந்த மாதிரி எங்க வீடெல்லாம் பெருசா அரண்மனை மாதிரி இருக்காது....."

மனிதர் பேசிக் கொண்டே போனார். பத்து நிமிடம் கழித்து சிவகாமி சொன்னாள். "டேவிட், கொஞ்சம் நிறுத்துடா. அவ பயந்துக்கப் போறா."

டேவிட் புன்னகையுடன் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார். "பயந்துக்காதேம்மா. என் சுபாவமே இப்படித் தான். யாராவது ப்ரேக் போடலைன்னா பேசிகிட்டே இருப்பேன். கடைசில என்ன பேசினேன்னு யாராவது கேட்டா எனக்குத் தெரியாது. உன் சின்னத்தை எனக்கு வச்சிருக்கற பேரு எக்ஸ்பிரஸ்ஸுன்னு. சின்னதுல இருந்தே நான்...."

"டேவிட்..." சிவகாமி குரல் கொடுக்க டேவிட் "அக்கா நான் நிறுத்திட்டேன்" என்றார். அதன் பிறகு சில நிமிடங்கள் சந்திரசேகருடன் பேசிக் கொண்டு இருந்து விட்டு டேவிட் மனைவியுடன் கிளம்பினார்.

"என்ன டேவிட் அவசரம்?" என்று அமிர்தம் கேட்டாள்.

"இல்லைக்கா. எல்லாம் போட்டது போட்ட மாதிரியே இருக்கு. க்ளீன் செய்யாம தூங்க முடியாது.. நாளைக்கு வர்றோம். வர்றேன் ஆர்த்தி.." என்றாள் மேரி.

வெளியே வந்த பின்னர் டேவிட்டும், மேரியும் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. சால்வையைப் போர்த்திக் கொண்டு குளிரில் மௌனமாக வீடு நோக்கி நடந்தனர்.

"அவளைப் பார்த்தவுடன் உனக்கு முதல்ல என்ன தோணுச்சு மேரி?" டேவிட் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தார்.

"ஆனந்தியோட கடைசி நாட்கள் தான் ஞாபகம் வந்துச்சு...." மேரி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பழைய நினைவுகள் அழுத்த இருவரும் மறுபடியும் மௌனமானார்கள்.

## 34

Though I am not naturally honest, I am so sometimes by chance.
–William Shakespeare

ஆகாஷிற்குத் தாயிடம் ஆர்த்தியின் தாய் மரணம் பற்றிப் பேசாவிட்டால் தூக்கம் வராதென்று தோன்றியது. சிவகாமி இரவு சாப்பாட்டுக்குப் பின் தனது கணவனுடன் தோட்டத்தில் உட்கார்ந்து விட்டால் பின் இது போல் சீரியசான விஷயங்களைப் பற்றிப் பேச முடியாது. தங்களுடன் பேச்சை பகிர்ந்து கொள்ள சிவகாமி குடும்பத்தினரை அனுமதிப்பாளே ஒழிய மற்றபடி வியாபாரம், பிரச்சினைகள் போன்றவை அங்கு அவளிடம் பேசப்படுவதை அவள் அனுமதிப்பதில்லை. இதை சந்திரசேகர் உட்பட அனைவரும் உணர்ந்து நடந்து கொண்டார்கள்.

இன்றும் சாப்பிட்டுக் கை கழுவி சிவகாமி தோட்டத்திற்கு சால்வையைப் போர்த்திக் கொண்டு போக சங்கரன் நீலகண்டனிடம் பேசிக் கொண்டு நின்றிருந்தார். "நானும் தேவனோட ரசிகன். அவர் எழுதின எல்லா கதைகளையும் எத்தனை தடவை படிச்சிருக்கேன்னு சொல்ல முடியாது. ஆனந்த விகடன்ல வாரா வாரம் அவர் எழுதினதை எடுத்து எல்லாம் பைண்டு செய்து வச்சிருக்கேன். அவர் கதைக்கு கோபுலு வரைஞ்ச படங்கள் எல்லாமே பிரமாதம்....."

நீலகண்டனும் தன்னைப் போலவே அவரும் தேவன் கதைகளை விரும்பிப் படிப்பார் என்று தெரிந்த பின் உற்சாகமாகச் சொன்னார். "எனக்கும் அவர் கதைகள்னா ரொம்பப் பிடிக்கும். மிஸ்டர் வேதாந்தமும், ஜஸ்டிஸ் ஜகன்னாதனும் அவரோட மாஸ்டர் பீஸ்னு நினைக்கிறேன்....."

பார்வதி பேத்தியிடம் சொன்னாள். "இனி உங்க தாத்தா இப்போதைக்கு வர மாட்டார். அவர் தேவன், கல்கி எழுதின கதைகள் பத்தி பேச ஆரம்பிச்சிட்டார்... நான் தூங்கப் போறேன். நீயும் போம்மா"

சங்கரனுக்கும் அந்த எழுத்தாளர்கள் மீதுள்ள ஈடுபாட்டை அறிந்த ஆகாஷும் பார்வதி சொன்னது போல பேச்சு இனியும் நீளும் என்பதை உணர்ந்து தந்தை வருவதற்குள் தாயிடம் இது பற்றிக் கேட்டு விட முடிவு செய்து தோட்டத்திற்கு விரைந்தான்.

தாயின் அருகில் தானும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தபடி ஆகாஷ் சொன்னான். "அப்பாவும் ஆர்த்தியோட தாத்தாவும் தேவன் கதைகளைப் பத்தி பேச ஆரம்பிச்சுட்டாங்க. இனி வர நேரமாகும்....."

சிவகாமி புன்னகைத்தாள். மகன் ஏதோ முக்கியமாய் பேச வந்திருக்கிறான் என்று அனுமானித்தவள் மகன் என்ன பேசப் போகிறான் என்ற கேள்வியுடன் காத்திருந்தாள்.

"அம்மா... நான் உன் கிட்ட சில நாளாவே ஒண்ணு கேட்கணும்னு நினைச்சுகிட்டிருந்தேன். ஆர்த்தியோட அம்மா எப்படி செத்தாங்க?"

சிவகாமி ஒரு நிமிடம் அமைதியாகத் தன் மகனைப் பார்த்தாள். பின் ஊட்டியில் அந்த சமயத்தில் மூன்று நாட்களாகப் பெய்த பெருமழையைப் பற்றியும் அந்த சமயத்தில் பல இடங்களில் ஏற்பட்ட நிலச் சரிவைப் பற்றியும் சொன்னாள். ".... நம்ம பங்களாவில் இருந்து ஒரு பர்லாங்க் தூரத்துல கூட நிலச்சரிவாயிடுச்சு. அங்க நிறைய வீடுகள் தரைமட்டமாயிடுச்சு. பலபேர் மண்ணோட மண்ணாய் சமாதியாயிட்டாங்க. அங்க ஆனந்தி ஏன் போனாள்னு தெரியலை. அவளும் அதில் சிக்கி இறந்துட்டா....."

ஆகாஷ் அடுத்த கேள்வியை மிகவும் கவனமாகக் கேட்டான். "நீங்க எல்லாம் இருந்தும் ஏம்மா போக விட்டீங்க?"

"நான் எங்கே இருந்தேன். நான் அந்த சமயத்துல சிங்கப்பூர்ல ஒரு முக்கிய வியாபார விஷயமா போய் ரெண்டு மாசமா அங்கயே இருந்தேன். நான் இந்தியா வந்து சேர்ந்தவுடனேயே ஊட்டி நிலச்சரிவு பத்தி கேள்விப்பட்டு வந்தேன். அங்கங்கே ரோடு பிளாக் ஆயிருந்துது. டைவர்ஷன் டைவர்ஷன்னு அங்க சுத்தி இங்க சுத்தி எப்படியோ இங்கே வந்து சேர்ந்தா ஆனந்தியைக் காணோம்னு இங்க ஒரே பரபரப்பு. உன் மாமாவும் அப்ப கோயமுத்தூர்ல இருந்தான். அவன் வரவும் நேரமாயிடுச்சு. உன் சித்தி அப்ப இங்கே இல்லை. அவள் புருஷனோட சேலத்துல இருந்தாள். அப்படி நாங்க யாருமே இருக்கலை. அப்ப ஒரு வேலைக்காரி இங்கயே இருந்தாள். அவள் வீடும் அந்த நிலச்சரிவான பகுதியில் தான் இருந்துச்சு. அவள் அங்கே போய் அவளைத் தேடிகிட்டு இவள் போனாளா, இல்லை ரெண்டு பேரும் சேர்ந்து அவ வீடு என்னாச்சுன்னு பார்க்கப் போனாங்களான்னு ஒண்ணுமே புரியலை....."

"...கடைசில அவ உடம்பைத் தேடிக் கண்டுபிடிச்சோம். அதுக்கே ரெண்டு நாளாயிடுச்சு. அதுக்குள்ள அவ முகத்துல ஒரு பாகமும் உடம்புல சில இடங்களும் அழுகிப் போயிடுச்சு... அவங்க அப்பா அம்மாவுக்கு நான் முகத்தைக் கூட காமிக்கல. பார்த்திருந்தா அவங்க தாங்கி இருக்க மாட்டாங்க....."

சொல்லச் சொல்ல சிவகாமி தன்னையும் மீறி உணர்ச்சிவசப்பட்டது போல் இருந்தது. அவள் குரல் லேசாக கரகரத்தது. அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் அவள் தூரத்தில் சிறிய பந்துடன் விளையாடிக் கொண்டிருந்த பூனையைப் பார்க்க ஆரம்பித்தாள். சங்கரன் அந்த சமயத்தில் வந்து சேர அந்தப் பேச்சு அத்துடன் முடிவுக்கு வந்தது. பெற்றோருடன் சில நிமிடங்கள் அமர்ந்திருந்து விட்டு ஆகாஷ் கிளம்பினான்.

அம்மா எதையும் மறைப்பதாக ஆகாஷிற்குத் தெரியவில்லை. அந்த சமயத்தில் அம்மா இரண்டு மாதமாக இந்தியாவிலேயே இருக்கவில்லை, ஆனந்தி காணாமல் போன பிறகு தான் வந்து சேர்ந்தாள் என்ற தகவல் கேட்ட பின் மனம் நிம்மதியடைந்தது. இவளைப் போய் முட்டாள்தனமாக தப்பாக நினைத்தார்களே என்று எண்ணிய போது மனம் கொதித்தது.

ஆர்த்தியின் அறையை நெருங்கிய போது தன் தாய் அந்த சமயத்தில் இந்தியாவிலேயே இருக்கவில்லை என்பதைச் சொல்லி நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நான்கு வார்த்தை கேட்க வேண்டும் என்று ஒரு கணம் ஆகாஷிற்குத் தோன்றியது. ஆனால் அதைச் சொல்லக் கூட அவளிடம் பேச அவனுக்கு மனமில்லை. நாளை இந்தத் தகவலை பார்வதியிடம் சொல்லலாம் என்று நினைத்தான்.

ஆர்த்தி அறையில் மூர்த்தியின் குரல் கேட்டது. "ஆர்த்தி, உனக்கு என்ன உதவி வேணும்னாலும்-அது எவ்வளவு சின்னதாயிருந்தாலும் சரி, பெரிதாக இருந்தாலும் சரி- என் கிட்ட தயங்காம கேளு....."

ஆகாஷ் மனதில் ஒரு எரிமலையே வெடித்தது. 'இவனை மாதிரி ஒழுக்கங் கெட்டவன் இந்த மாதிரி ஒரு பொண்ணு தனியாய் இருக்கிறப்ப அவளோட அறைக்கு வராமல் இருக்கிறதே பெரிய உதவி...."

அவள் அறைப்பக்கம் திரும்பிக் கூட பார்க்காமல் தனதறைக்குள் நுழைந்தான். அவனிடம் மிகவும் ஜாக்கிரதையாக அவள் இருக்க வேண்டும் என்று அவளிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. பிறகு நினைத்துக் கொண்டான். 'அவன் சொன்னதை நம்பித் தானே என் அம்மாவை அவள் சந்தேகப்பட்டாள். அப்படிப்பட்டவள் அவனை நம்பி எக்கேடு கெட்டால் நமக்கென்ன?'.

ஆனாலும் மனம் கேட்கவில்லை. 'அவள் வெகுளி, சூதுவாது தெரியாதவள்....' என்று மனதின் ஒரு பகுதி இன்னும் அவளுக்காகப் பரிந்துரை செய்தது.

இப்படி மனம் இரண்டாகப் பிளந்து ஒன்றுக்கொன்று எதிர்மறையாக வாதம் செய்ய ஆரம்பித்து கடைசியில் அது எந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை. அவனுக்கு உறக்கமும் வரவில்லை.

# 35

It was a dream of perfect bliss
Too beautiful to last.
-T.S.Baylay

சந்திரசேகர் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து சலித்து விட்டார். மகள் முகம் வாடி இருப்பதற்கான காரணம் தெரியாவிட்டால் தலை வெடித்து விடும் போல இருந்தது. எத்தனை சொத்து இருந்து என்ன பயன் என்று தோன்றியது. ஒரே மகளை வளர்க்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. பல வருடங்கள் கழித்து அவள் திரும்பவும் கிடைத்த பின்னும் அவளை சந்தோஷமாக வைத்திருக்கும் பாக்கியமும் இல்லை என்று எண்ணுகையில் ஆத்திரமாக வந்தது. ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தார். புல்லாங்குழல் இசையை ரசித்தபடி அமைதியாக அமர்ந்திருக்கும் தமக்கையையும், அத்தானையும் பார்க்க ஒரு கணம் பொறாமையாக இருந்தது. சற்று நேரம் முன்பு ஆகாஷும் அவர்களுடன் அமர்ந்திருந்தான். பெரியக்கா வாழ்க்கை என்றுமே நிறைவாகவே இருந்திருக்கிறது. இந்த உலகத்தில் தனக்கு வேண்டியதை எல்லாம் மிக சுவாதீனமாக எடுத்துக் கொள்ளும் அபூர்வ சக்தி அவளிடம் இருக்கிறதோ என்று அவர் எண்ணியதுண்டு.....

ஒரு காலத்தில் அக்காவைப் போலவே ஒரு மகள் பிறக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டதுண்டு. அவளைப் போல் தைரியமும், அழகும், திறமையும், அதிர்ஷ்டமும் கொண்ட ஒரு மகள்.... ஒருவேளை இங்கேயே ஆர்த்தியை வளர்க்க முடிந்திருந்தால் அக்கா அவளை அப்படியே ஆக்கி இருப்பாள் என்பதில் அவருக்கு சந்தேகம் இல்லை. விதி விளையாடி எல்லாவற்றையும் மாற்றி விட்டது.....

மகளிடம் பேசி அவள் மனதில் என்ன உள்ளது என்று தெரிந்து கொள்ள நினைத்தார். ஆனால் அவளுடைய அறைக்குச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. அந்த அறை நிறைய வேண்டாத நினைவுகளை ஏற்படுத்துகிறது. அவளின்னும் தன்னுடைய இந்த அறைக்கு வரவில்லை என்பதும் நினைவுக்கு வந்தவுடன் "பவானி" என்றழைத்தார்.

"என்னங்க"

"ஆர்த்தி தூங்கியிருக்கலைன்னா அவளைக் கூட்டிகிட்டு வா. எனக்கு அவள் கிட்ட கொஞ்சம் பேசணும்"

பவானிக்கும் அந்த அறைக்குப் போவதற்கு விருப்பமில்லை. ஆனால் சந்திரசேகர் இப்போது தன் மகள் விஷயத்தில் பெரிய அக்கறை காட்டுகிறாரே தவிர, மற்றபடி தன் பெரிய தமக்கை ஒருத்தியைத் தவிர யாருடைய விருப்பு வெறுப்பைப் பற்றியும் கவலைப்படுபவரல்ல. எல்லோரும் தான் சொன்னதைச் செய்ய வேண்டும் என்று மட்டுமே எதிர்பார்ப்பார். பவானி தயக்கத்துடன் கிளம்பினாள்.

ஆர்த்தியின் அறையில் அவளுடன் பேசிக் கொண்டிருந்த மூர்த்தி தன் பேச்சை நிறுத்தி காதுகளைக் கூர்மையாக்கினான். "ஆர்த்தி உன் சித்தி வர்றாங்கன்னு நினைக்கிறேன்".

அவன் சொன்னது போல பவானி தன் அறைக்குள் நுழைந்த போது ஆர்த்திக்கு வியப்பு தாங்கவில்லை. "நீங்க எப்படி இவ்வளவு கரெக்டா கண்டுபிடிக்கிறீங்க?". அவன் பதில் ஒன்றும் சொல்லாமல் புன்னகை செய்தான். சிறு வயதில் இருந்தே அவன் மற்றவர்களது காலடி ஓசைகளை அறிந்து வைத்திருந்தான். காது கூர்மையும் இயல்பாகவே அவனுக்கு அமைந்திருந்ததால் தூரத்தில் அவனுக்குத் தெரிந்தவர்கள் வரும் போதே அவன் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவான்.

பவானி மூர்த்தியை அங்கு எதிர்பார்க்கவில்லை என்பது அவளுடைய திகைப்பில் இருந்தே தெரிந்தது. தன் மருமகனை கேள்விக்குறியோடு பார்த்த பவானி பின் ஆர்த்தியைப் பார்த்து புன்னகைத்தாள். "உங்கப்பா உன் கிட்ட பேசணுமாம். கூட்டிகிட்டு வரச் சொன்னார்"

ஆர்த்தி சித்தியுடன் கிளம்ப வேறு வழியில்லாமல் மூர்த்தியும் இடத்தைக் காலி செய்தான். அவன் போவதையே ஒரு கணம் வெறித்துப் பார்த்த பவானி ஆர்த்தியுடன் தங்கள் அறையை நோக்கி நடந்தாள்.

"ஆர்த்தி உங்கப்பாவுக்கு நீ வாட்டமாய் இருக்கிற மாதிரியும், எதுக்கோ பயப்படற மாதிரியும் தோணுது. அதைப் பத்திக் கேட்கத்தான் உன்னைக் கூப்பிடுகிறார்னு நினைக்கிறேன்"

ஆர்த்தி புன்னகைக்க முயன்றாள். அவள் மீது பவானிக்கு பச்சாதாபம் தோன்றியது. பின்னால் திரும்பி மூர்த்தி தென்படுகிறானா என்று பார்த்து விட்டு மெல்ல ஆர்த்தியிடம் சொன்னாள். "ஆர்த்தி, உங்கப்பா என்ன கேட்டாலும் சரி உன் பெரியத்தையைப் பத்தி மட்டும் அவர் கிட்ட தப்பா பேசிடாதே. நீ பிறகு பழைய அப்பாவை அவர் கிட்ட பார்க்க முடியாது".

இப்படி சொன்னது பஞ்சவர்ணத்திற்குத் தெரிந்தால் அவள் தன்னை என்ன செய்வாள் என்று பவானிக்கு எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை. ஆனால் இந்த வெகுளிப் பெண்ணிடம் அதைச் சொல்லாமல் இருக்க அவளால் முடியவில்லை.

ஆர்த்தி தன் சித்தியைப் பார்த்து சோகமாகப் புன்னகைத்தாள். "ஒருத்தர் கிட்ட அவங்களை சந்தேகப்படறதா சொல்லி இப்ப நான் எதிரியாவே ஆயிட்டேன். இன்னொரு எதிரியை நான் சம்பாதிச்சுக்க விரும்பலை. சொன்னதுக்கு தேங்க்ஸ் சித்தி"

தந்தையின் அறையில் இருந்த எல்லாமே விலை உயர்ந்த பொருள்களாகவும், கலை நுணுக்கத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்ட ஆர்த்தி எல்லாவற்றையும் மலைத்துப் போய் பார்த்தாள். மகள் அப்படிப் பார்த்ததே சந்திரசேகருக்கு இதயத்தில் ரத்தம் கசிய வைத்தது. இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை என்று நினைக்க வேண்டிய தன் வாரிசை இப்படிப் பார்த்து வியக்கிற அளவுக்கு இறக்கி எல்லோருமாகச் சேர்ந்து இது வரை வாழ வைத்து விட்டார்களே என்று மனம் புழுங்கினார்.

"என்ன ஆர்த்தி இன்னைக்கு ரொம்பவே டல்லா இருக்கேன்னு கேட்கத் தான் கூட்டிகிட்டு வரச் சொன்னேன்" என்று மகளிடம் நேரடியாக சந்திரசேகர் கேட்டார். ஆகாஷ் அவளிடம் ஏனோ கோபமாக இருப்பதால் தான் மகள் வருத்தமாக இருக்கிறாள் என்று கணித்திருந்தாலும், இவளைப் போன்ற ஒரு சாதுப் பெண்ணிடம் கோபப்பட ஆகாஷுக்கு என்ன இருக்கிறது என்று அவருக்குப் புரியவில்லை.

மகள் வரும் வரை கிட்டத்தட்ட அந்த இடத்தில் வைத்து தான் ஆகாஷை அவர் நேசித்து வந்தார். நல்ல குணங்கள், கூர்மையான அறிவு, எந்த இடத்தையும் ஒளிமயமாக்கும் சுட்டித்தனம் நிறைந்த பேச்சுத் திறமை உள்ள அந்த மருமகன் அவர் இதயத்தில் என்றுமே ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்தான். அவன் யாரிடமும் அப்படி அலட்சியமாகவோ கடுமையாகவோ நடந்து கொண்டு அவர் இது வரை பார்த்ததில்லை. சிவகாமி இது போன்ற விஷயங்களில் மிகக் கண்டிப்பானவள் என்பதால் அவனை நல்ல முறையில் தான் வளர்த்திருந்தாள். அதனால் இன்றைய அவனது நடவடிக்கை அவரைக் குழப்பியது. மகளது வருத்தத்தைப் பார்க்கையில் அவருக்கு அவன் மேல் மீண்டும் கோபம் வந்தது.

"ஒண்ணுமில்லைப்பா. எனக்கு லேசாய் தலைவலி. அது தான் டல்லாய் தெரியறேன். அவ்வளவு தான்"

சந்திரசேகர் மகளைத் தன் அருகில் உட்கார வைத்து மிகவும் வாஞ்சையுடன் அவளைப் பார்த்தார். "ஆர்த்தி, அப்பாவுக்கு நீ எப்பவுமே சந்தோஷமாய் இருக்கணும்கிறது தான் ஆசை. உனக்கு என்ன பிரச்சினை இருந்தாலும் என்ன கவலை இருந்தாலும் என் கிட்ட சொல்லு. அதைச் சரி செய்யறது அப்பாவோட பொறுப்பு"

ஆர்த்திக்கு அப்பா தன்னிடம் வைத்துள்ள பாசத்தை அவர் வார்த்தைகளை விட அவர் முகபாவனை மூலம் அதிகமாக உணர முடிந்தது. அந்த அளவு கடந்த பாசம் அவள் மனதை நெகிழ வைத்தது.

அவளுக்கு இப்போது பெரிதாகத் தோன்றிய பிரச்சினையும் கவலையும் ஆகாஷின் விலகல் தான். ஆனால் அதை சரி செய்யும் சக்தி தன் தந்தையிடம் இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. அவன் அன்பை மறுபடியும் மீட்க முடியும் என்றும் அவளுக்கு நம்பிக்கை இல்லை. சில நாட்களே ஆனாலும் அவனிடம் பழகிய அந்த இனிமையை நினைக்கையில் எல்லாம் கனவு போல இருந்தது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் எல்லாக் கனவுகளையும் போல அந்த இனிமையான கனவும் முடிவுக்கு வந்து விட்டது ....

"நீங்க இருக்கிறப்ப எனக்கு என்ன பிரச்சினைப்பா இருக்க முடியும். நான் முதல்லயே சொன்னேனே. லேசான தலைவலி தான். தூங்கி எழுந்தா சரியாயிடும் ...."

அவர் அவள் வார்த்தைகளில் நெகிழ்ந்தார். இப்போதைக்கு அவள் எதையும் சொல்லப் போவதில்லை என்று தோன்றியது. பெருமூச்சு விட்டபடி சொன்னார். "அப்படின்னா நீ போய் தூங்கும்மா. நாளைக்கு பார்க்கலாம்"

அவள் கிளம்பும் முன் தந்தையின் அறையை மீண்டும் ஒரு முறை முழுவதும் நோட்டமிட்டாள். அவர் அறையில் பலருடைய புகைப்படங்கள் இருந்தாலும் அவள் தாயின் புகைப்படம் ஒன்று கூட இருக்கவில்லை.

## 36

If you love someone, set them free.
If they come back they're yours;
If they don't they never were.
-Richard Bach

அன்று அதிகாலையிலேயே கோயமுத்தூருக்கு சிவகாமியும் சந்திரசேகரும் கிளம்பி விட்டார்கள். காரை அர்ஜுன் ஓட்ட, சிவகாமி அமைதியாக சிந்தனையில் ஆழ்ந்திருக்க, சந்திரசேகர் தன் தமக்கையிடம் சொல்ல வேண்டியதை மனதில் தொகுத்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். தெளிவில்லாமல், குழப்பமாகப் பேசினால் அவளிடம் முறைப்பை சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்ற பயம் அவருக்கு இருந்தது.

கார் திடீர் என்று வேகம் குறைய சிவகாமி எதிரே ஏதாவது வாகனம் உள்ளதா என்று பார்த்தாள். இல்லை. தெருவின் ஓரமாக ஒரு இளம் பெண் நடந்து கொண்டிருந்தாள்; வேறு யாரும் இல்லை. அந்தப் பெண்ணை சிவகாமி கூர்மையாக கவனித்தாள். அவளைக் கடந்தவுடன் கார் மறுபடி பழைய வேகம் எடுத்தது.

சந்திரசேகர் இந்தச் சின்ன சம்பவத்தைக் கவனிக்கவில்லை. தொண்டையைச் சரி செய்து கொண்ட அவர் மெல்ல ஆரம்பித்தார். "அக்கா, ஆகாஷுக்கும், ஆர்த்திக்கும் இடையே எதாவது பிரச்சினையா?"

"தெரியலையே, ஏன் கேட்கிறாய்?"

"நேத்து வரைக்கும் எப்பவுமே நெருக்கமாய் இருந்தவங்க, நேத்து ராத்திரி சாப்பிடறப்ப பேசிக்கக் கூட இல்லை. ஆகாஷ் அவ மேல் ஏதோ கோபமாய் இருக்கற மாதிரி தோணிச்சு"

சிவகாமி ஒன்றும் சொல்லவில்லை.

"ஆர்த்தி ரொம்பவே வருத்தத்துல இருக்கறாக்கா."

சிவகாமி தன் தம்பியின் முகத்தில் வாட்டத்தைப் பார்த்தாள். ஆனால் அப்போதும் ஒன்றும் சொல்லவில்லை.

"அவங்க ரெண்டு பேருடைய ஆரம்ப நெருக்கத்தைப் பார்த்தப்ப ரெண்டு பேரும் காதலிக்கிற மாதிரி இருந்தது. அதுக்குள்ள இந்த மாதிரி விலக என்ன காரணமாய் இருக்கும்?"

"சின்ன வயசுக்காரங்களுக்கு ஒட்டிக்கவும் பெரிய காரணங்கள் வேண்டாம். வெட்டிக்கவும் பெரிய காரணங்கள் வேண்டாம்"

அக்காவின் பதில் சந்திரசேகருக்குத் திருப்தி அளிக்கவில்லை. "நீ ஆகாஷ் கிட்ட கேட்டுப் பாரேன்க்கா."

"இதப்பார். இந்த மாதிரி விஷயங்களுக்கு எல்லாம் பெரியவங்க நாம தலையிடறது முட்டாள்தனம். அவங்க நீ சொன்ன மாதிரி நிஜமாவே காதலிச்சிருந்தாங்கன்னா அவங்களா கண்டிப்பா சேர்ந்துக்குவாங்க. அப்படியில்லைன்னா நாம என்ன செஞ்சாலும், சொன்னாலும் அது பிரயோஜனப்படப் போறதில்லை"

சந்திரசேகர் பெருமூச்சு விட்டார். அக்காவின் பேச்சில் உண்மை இருந்தாலும் அவரால் மகள் முகத்தில் பதிந்திருந்த சோகத்தை ஜீரணிக்க முடியவில்லை.

"அக்கா, அவ எத்தனையோ வருஷங்க கழிச்சு எனக்குக் கிடைச்சிருக்கா. அவளோட மனதில் எத்தனையோ துக்கம் தேங்கி இருக்கற மாதிரி படுது. நீ அவ கிட்டயாவது பேசி கொஞ்சம் தைரியம் சொல்லு. நீ பேசினா அவள் மனதில் இருக்கறதை தெரிஞ்சுகிட்டு சரி செய்யலாம்னு தோணுது.... நீ இதுக்கும் ஏதாவது தத்துவம் சொல்லாதே. கண்டிப்பா அவள் கிட்ட பேசறே, சரியா"

சிவகாமி தம்பியின் முகத்தில் தெரிந்த கண்டிப்பைப் பார்த்து புன்னகைத்தாள். "சரி, இன்னைக்கு ராத்திரியே பேசறேன்"

அக்காவிடம் ஒரு விஷயத்தை ஒப்படைத்த பிறகு அதைப்பற்றிக் கவலைப்பட எதுவுமில்லை என்று சந்திரசேகர் நிம்மதியடைந்தார். பின் தன் மனதைக் குழப்பிய நேற்றைய விஷயத்தைச் சொன்னார். "நேத்து என் ரூமுக்கு ஆர்த்தியைக் கூப்பிட்டுப் பேசினேன். கிளம்பறப்ப என் ரூம்ல இருந்த போட்டோவை எல்லாம் ஒரு பார்வை பார்த்தவளோட முகம் திடீர்னு கறுத்து மாறிடுச்சு. இப்படி திடீர் திடீர்னு அவ ஏன் மாறுறான்னு ஒண்ணும் புரிய மாட்டேங்குது"

தம்பி சொன்னதை ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்த சிவகாமி கேட்டாள். "உன் ரூம்ல ஆனந்தி போட்டோ இருக்கா இல்லையா?"

சந்திரசேகர் மெல்ல சொன்னார். "இல்லை"

பின் இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொள்ளவில்லை. அவரவர் எண்ணங்களோடு மௌனமானார்கள்.

★★★★★

இரவுச் சாப்பாட்டிற்கு ஒரே நேரத்தில் டைனிங் ரூமில் எல்லோரும் சேர்வது போல் அந்த வீட்டில் மற்ற நேரங்களில் கூடுவதில்லை. அவரவருக்கு வேண்டிய நேரத்தில் அவரவர் வந்து சாப்பிடும் வழக்கம் இருந்தது. தயார் நிலையில் இருக்கும் வேலைக்காரர்கள் பரிமாற சாப்பிட்டு விட்டுப் போவார்கள்.

ஆர்த்தியும் பார்வதியும் டைனிங் ரூமில் நுழைந்த போது ஆகாஷ் மட்டுமே சாப்பிட்டுக் கொண்டு இருந்தான். பார்வதி அவனைப் பார்த்துப் புன்னகைக்க அவன் லேசாகத் தலையை மட்டுமே ஆட்டினான். ஆர்த்தியைப் பார்த்தது போலக் கூட அவன் காட்டிக் கொள்ளவில்லை.

பார்வதியும் ஆர்த்தியும் அவன் எதிர்ப்புறம் உட்கார்ந்தார்கள். ஆகாஷ் பார்வதியிடம் சொன்னான். "நேத்து அம்மா கிட்ட பேசினேன். உங்க மகள் இறக்கிறதுக்கு ரெண்டு மாசம் முன்னாலேயே அம்மா சிங்கப்பூர் போயிட்டாங்களாம். இறந்த தினம் தான் இந்தியா வந்திருக்காங்க. நீங்க சந்தேகம்னா யாரு கிட்டயாவது கேட்டு உறுதிப்படுத்திக்கலாம்."

பார்வதியும் ஆர்த்தியும் திகைத்துப் போனார்கள். அந்த நேரமாகப் பார்த்து அமிர்தம் உள்ளே வந்தாள். ஒரு நிமிடம் கனத்த மௌனம் அங்கு நிலவியது. ஆகாஷாக அமிர்தத்திடம் பேச்சை ஆரம்பித்தான். "சித்தி, அத்தை இறந்த நாள்ல இங்க யாருமே இல்லைங்கறதைப் பத்தி பேசிகிட்டு இருந்தோம்."

"ஆமா. நான் சேலத்துல எங்க வீட்டுல இருந்தேன். அக்கா சிங்கப்பூர் போயிருந்தா. அத்தான் மெட்ராஸ்ல ஜட்ஜஸ் கான்ஃப்ரன்ஸ் போயிருந்தார். சந்துரு கோயமுத்தூர் போயிருந்தான்.... தனியா

இருந்த ஆனந்தி அந்த ஏரியாவுக்கு ஏன் போனாள்னு தெரியலை. விதி இழுத்துகிட்டு போயிருக்கு. வேற என்ன சொல்றது"

பார்வதி லேசாகக் கண்கலங்க சொன்னாள். "அப்படித் தான் தோணுது. இப்ப இந்த வீட்டுல இருக்கற யாருமே அந்த சமயத்துல ஊட்டியிலயே இல்லைங்கறப்போ வேற எதுவும் சொல்ல முடியாது"

அமிர்தம் பார்வதியைத் திருத்தினாள். "நாங்க தான் ஊட்டியில் இல்லைன்னு சொன்னேன். இப்ப இருக்கறவங்க இல்லைன்னு சொல்லலை...."

ஆர்த்தி, பார்வதி, ஆகாஷ் மூவருமே கேள்விக்குறியோடு அமிர்தத்தைப் பார்த்தார்கள்.

அமிர்தம் சொன்னாள். "பவானி, அவங்கம்மா எல்லாம் அப்ப ஊட்டியில தானே இருந்தாங்க. இங்க இருந்து ஒரு மைல் தூரத்தில் தான் இருந்தாங்க. அந்த நிலச்சரிவுல ஆனந்தி இறந்த மாதிரி மூர்த்தியோட அப்பா அம்மா கூட இறந்து போனாங்களே, அது தெரியாதா? அந்தக் கிழவி உங்களை எல்லாம் கூப்பிட்டு பேசிகிட்டு இருந்தான்னு கேள்விப்பட்டேன். அவ இதை சொல்லலியா?"

இந்தத் தகவல் அவர்களுக்குப் புதியதாக இருந்தது. மகனும் மருமகளும் ஒரு விபத்தில் இறந்து விட்டதாக பஞ்சவர்ணம் பொதுவாகச் சொன்னாலே ஒழிய இதை ஏன் சொல்லவில்லை என்று பார்வதிக்குப் புரியவில்லை. அதுவும் ஆனந்தியின் மரணத்தைப் பற்றித் தான் அன்றைய முழுப் பேச்சும் இருந்தது. அப்படி இருக்கையில் இயல்பாக எல்லாரும் சொல்லக் கூடிய ஒரு விஷயத்தை பஞ்சவர்ணம் ஏன் மூடி மறைத்தாள்?

"அக்கா வந்து கஷ்டப்பட்டு தேடியதில் ஆனந்தி உடலைக் கண்டுபடிக்க முடிஞ்சது. மூர்த்தியோட அப்பா அம்மாவோட உடல்கள் கூடக் கண்டுபிடிக்க முடியலை. அடையாளம் தெரியாம கிடந்த எத்தனையோ பிணங்கள்ல அவங்களோடதும் இருந்திருக்கணும்."

பார்வதிக்கு இன்னும் அந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. தன் மகனும் மருமகளும் கூட அந்த நிலச்சரிவில் இறந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் சிவகாமி மேல் சந்தேகம் குறைந்து விடும் என்று நினைத்தாளா இல்லை அவள் மறைத்ததற்குக் காரணம் வேறு எதாவது இருக்கிறதா?

# 37

Everything is vague to a degree you do not realize till you have tried to make it precise.
- Bertrand Russell

பார்வதியின் முகபாவனையில் இருந்தே பஞ்சவர்ணம் இந்த தகவலை அவர்களிடம் சொல்லவில்லை என்று ஊகித்த அமிர்தம் புன்னகையுடன் சொன்னாள். "கிழவி உங்க கிட்ட சொல்லாதது பெரிய விஷயம் இல்லை. பாட்டியும் பேரனும் அடுத்தவங்க விஷயம்னா துருவித் துருவிக் கேப்பாங்க. ஓட்டுக் கேப்பாங்க. ஆனா தங்கள் விஷயம்னா அது உப்பு சப்பில்லாத சின்ன விஷயம்னாலும் சொல்ல மாட்டாங்க. எல்லாத்தையும் மூடி மறைப்பாங்க. அதுக்குப் பெருசா காரணம் வேணும்னு இல்லை...."

பார்வதிக்கு ஏனோ அப்படித் தோன்றவில்லை. ஏதோ உள்நோக்கத்துடன் தான் பஞ்சவர்ணம் மறைத்தாள் என்று தோன்றியது. ஆகாஷுக்கும் அப்படியே தோன்றியது. ஆர்த்திக்கோ குழப்பம் அதிகமாகி தலை சுற்றியது.

பிறகு பேச்சு பொது விஷயங்களுக்குத் திரும்பியது. ஆகாஷ் அந்தப் பேச்சில் கலந்து கொள்ளாமல் அமைதியாகச் சாப்பிட்டான். அவன் பார்வை தப்பித் தவறி கூட ஆர்த்தி பக்கம் திரும்பவில்லை. ஆர்த்தியால் மட்டும் அவனை அடிக்கடி பார்க்காமல் இருக்கமுடியவில்லை. காந்தமாக அவள் கண்களை அவன் தன் பக்கம் இழுப்பது போல் இருந்தது. அவன் சாப்பிடும் விதம் கூட அழகாக இருப்பது போல அவளுக்குத் தோன்றியது. அவன் அமைதியாக சாப்பிட்டு விட்டு அங்கிருந்து போனான். ஆர்த்திக்கு அவன் உதாசீனப்படுத்துவது சகிக்க முடியவில்லை. மனம் வலித்தது.....

ஆகாஷ் மாடியேறும் போது மூர்த்தி மாடியில் இருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தான். ஆகாஷ் மூர்த்தியின் எதிரே வந்து வழிமறித்தான்.

"என்ன?" என்று மூர்த்தி சந்தேகத்துடன் ஆகாஷைக் கேட்டான்.

"ஆர்த்தியோட அம்மா இறந்த அதே விபத்துல தான் உங்கம்மாவும் அப்பாவும் இறந்ததா கேள்விப்பட்டேன். அவ்வளவு விவரமா அவங்கம்மா இறந்ததை விசாரிச்ச நீங்க ஏன் அதை அவங்க கிட்ட சொல்லாம இருந்துட்டீங்க?"

மூர்த்தி பதில் சொல்லாமல் ஆகாஷை எரித்து விடுவது போல பார்த்தான்.

"அவங்க பிணம் கூட கிடைக்கலை, கண்டுபிடிக்க முடியலைன்னு நான் கேள்விப்பட்டேன்....."

மூர்த்தி முகத்தில் அதிர்ச்சி பலமாகத் தெரிந்தது. உண்மையில் அது அவனுக்குக் கூடத் தெரியாது. அந்த நிலச்சரிவு விபத்தில் தான் தன் பெற்றோர் இறந்தார்கள் என்கிற வரையில் தான் அவனுக்குத் தெரியும். அதில் தன் பெற்றோரின் பிணம் கூட கிடைக்கவில்லை என்பது அவனுக்கே புதுத் தகவலாக இருந்தது.

அவனுடைய அதிர்ச்சி ஆகாஷையே குழப்பியது. இந்தத் தகவல் அவனுக்கே இப்போது தான் தெரியும் என்பது புரிந்த போது அவனுக்குள் பல கேள்விகள் எழுந்தன. பஞ்சவர்ணமும், பவானியும் இதை ஏன் மூர்த்தியிடம் இத்தனை நாட்கள் மறைத்து வைத்திருந்தார்கள்?

"என்ன மூர்த்தி உனக்கே தெரியாதா? இனிமே அடுத்தவங்களப் பத்தி தெரிஞ்சுக்கக் கஷ்டப்படறத விட்டுட்டு உன் சம்பந்தப்பட்டதைப் பத்தி முதல்ல தெரிஞ்சுக்க முயற்சி பண்ணு.... அப்புறம் இன்னொரு விஷயம். எங்கம்மா சிங்கப்பூர்ல ரெண்டு மாசம் இருந்துட்டு ஆர்த்தியோட அம்மா இறந்த தினம் தான் இந்தியாவுக்கே வந்துருக்காங்க....வரட்டுமா"

மூர்த்தி மாடிப்படியிலேயே சிறிது நேரம் சிலையாக நின்றான். கிட்டத்தட்ட ஆர்த்தியின் நிலையில் தான் தானும் இருந்திருக்கிறோம் என்று தோன்றியது. தன் பெற்றோர் மரணத்திலும் ஏதோ புதிர் இருப்பதாக அவனுக்கு ஊகிக்க முடிந்தது. பாட்டி எதையோ மறைக்கிறாள் என்று தெரிந்திருந்தாலும் அதில் ஆகாஷ் சொன்ன இந்தத் தகவலும் இருக்கும் என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

அவன் பெற்றோர் அந்த விபத்தில் இறந்த போது அவனுக்கு வயது ஆறு. அவனுக்கு அவர்கள் ஓரிரு சம்பவங்களில் தான் நினைவுக்கு வந்தார்கள். அவன் தாய் சிவப்பு சட்டை ஒன்றை அவனுக்கு அணிவித்து முத்தமிட்ட நினைவு இருக்கிறது. தந்தை பைக்கில் அவனை உட்கார வைத்து அழைத்துப் போய் பட்டம் வாங்கித் தந்தது நினைவு இருக்கிறது. மற்றபடி இருவர் பற்றியும் வேறு நினைவுகள் எவ்வளவு முயற்சி செய்தும் அவனுக்கு வந்ததில்லை. அவன் பெற்றோரைப் பற்றி பஞ்சவர்ணமும் பவானியும் பேசியதை எழுதினால் ஒரு பாராவில் அடக்கி விடலாம். காரணம் அந்த விபத்து அவர்கள் மனதைப் பெரிதும் பாதித்தது தான் என்றும் அதைப் பற்றிப் பேசி மனம் வருந்த அவர்கள் தயக்கம் காட்டினார்கள் என்றும் தான் அவன் இவ்வளவு நாள் எண்ணியிருந்தான்.

மூர்த்தி கீழே இறங்குவதற்குப் பதிலாகத் திரும்பவும் மேலே போனான். பஞ்சவர்ணத்தின் அறையில் அவன் நுழைந்த போது அவள் கண்களை மூடிக் கொண்டு ஈசி சேரில் அமர்ந்திருந்தாள்.

"என்னடா?"

"பாட்டி எங்கம்மா அப்பாவோட பிணம் கூட அந்த விபத்தில் கிடைக்கலையா?"

பஞ்சவர்ணம் பதில் சொல்லாமல் சிலை போல் சில வினாடிகள் அமர்ந்திருந்தாள். கடைசியில் பேசிய போது அவள் குரல் ஈனசுரத்தில் இருந்தது. "யாருடா சொன்னாங்க?"

"ஆகாஷ்"

"அந்த அமிர்தம் சொல்லியிருப்பாள்...."

"அது உண்மையா பாட்டி"

பஞ்சவர்ணம் தன் மகன் மருமகள் போட்டோவைப் பார்த்து பெருமூச்சு விட்டபடி தலையசைத்தாள்.

"அதை ஏன் பாட்டி என் கிட்ட இது வரைக்கும் சொன்னதில்லை?"

"அந்த விபத்துல எனக்கு இப்பவும் நிறைய சந்தேகங்கள் இருக்குடா மூர்த்தி. அவங்க அதில் சிக்கி இறந்திருக்க வாய்ப்பே இல்லைன்னு என் உள்மனசு சொல்லிகிட்டே இருக்கு. எனக்கே முழுசா தெரியாத ஒரு விஷயத்தை உன் கிட்டே என்னன்னு சொல்லுவேன்?"

மூர்த்தி குழப்பத்துடன் பாட்டியைப் பார்த்தான். அவன் மனம் பல கோணங்களில் நிலைமையை ஆராய்ந்தது. கடைசியில் ஒரு முடிவு பளிச்சிட்டது. ஏன் எப்படி என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கா விட்டாலும் பாட்டிக்கு சிவகாமி மேல் உள்ள தீராத வெறுப்புக்கும், அடிக்கடி கொலைகாரி என்று அவளை அழைப்பதற்கும் இது தான் காரணமாக இருக்கலாம் என்று நினைத்தான். வாய் விட்டு சொன்ன போது அவன் குரல் லேசாக நடுங்கியது. "அப்படின்னா எங்கம்மா அப்பாவையும் சிவகாமி கொன்னிருக்கலாம்னு சந்தேகப்படுறீங்களா பாட்டி"

பஞ்சவர்ணம் ஈசி சேரில் இருந்து எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள். "அந்த சந்தேகம் என் மனசுல இல்லாமல் இல்லை"

"சிவகாமி அவங்களை ஏன் கொல்லணும் பாட்டி?"

பஞ்சவர்ணம் பேரனிடம் எல்லாவற்றையும் விளக்கும் மனநிலையில் இல்லை. இதெல்லாம் சொல்லாமல் மறைக்கக் கூடிய விஷயம் இல்லை என்றாலும் இப்போதைக்கு சொல்லாமல் இருப்பது தான் நல்லது என்று தீர்மானித்தாள். "மூர்த்தி, கொஞ்ச நாள் பொறு. எல்லாத்தையும் சொல்கிறேன். இப்ப என்னை எதையும் கேட்காதே"

"பாட்டி ஆகாஷ் அவங்கம்மா அன்றைக்குத் தான் ஊட்டிக்கு வந்தாள்னு சொல்றான். அப்புறம் எப்படி...?"

"சிவகாமிக்கு எதையும் திட்டம் போடவும் அதை நடைமுறைப்படுத்தவும் எத்தனை நேரம் வேணும்னு
நீ நினைக்கிறாய் மூர்த்தி?"

# 38

Where is there dignity unless there is honesty?
– Cicero

மல்லிகைப் பூக்களைத் தொடுத்துக் கொண்டே அமிர்தம் ஆர்த்தியிடம் சொல்லிக் கொண்டு இருந்தாள். "....எனக்கு சின்னதில் இருந்தே பூக்கள்னா உயிர். அவர் போற வரைக்கும் என் தலை நிறைய பூ இருக்கும். அது கடவுளுக்குப் பொறுக்கலை. அவரை சீக்கிரமே கூப்பிட்டுகிட்டான்...."

புடவைத் தலைப்பால் தன் கண்களைத் துடைத்துக் கொண்ட அமிர்தத்தை அனுதாபத்தோடு ஆர்த்தி பார்த்தாள்.

".... எனக்கு வச்சுக்க முடியாட்டியும் தொடுத்து அக்காவுக்கும், பவானிக்கும் தருவேன். இங்க வேற யாரு இருந்தா. இப்பவாவது நீயும் உங்க பாட்டியும் வந்துட்டீங்க. பூ வச்சுக்க நாலு பேராவது இருக்கீங்க...."

"அத்தை எங்கம்மா நிறைய பூ வச்சுக்குவாங்களா?"

"ஆரம்பத்துல வச்சுகிட்டிருந்தா. பிரசவமாகி உன்னை எடுத்துட்டு இங்க வந்ததுக்கப்புறம் குறைஞ்சுடுச்சு. நான் ஒவ்வொரு சம்மர்லயும் சேலத்துல இருந்து இங்க வந்து ரெண்டு மாசம் இருந்துட்டு தான் போவேன். அப்ப எல்லாம் அவளோட ஈடுபாடு குறைஞ்சுடுச்சு. ஏன்னு தெரியலை...."
ஆர்த்தி தனிமையில் அவளுடன் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் தன் தாயைப் பற்றி நிறைய தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தவளாகக் கேட்டாள். "எங்கம்மா எந்த மாதிரி அத்தை?...."

அமிர்தம் ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் பூத்தொடுத்தபடி இருந்து விட்டு பின் சொன்னாள். "உங்கம்மா ரொம்ப நேர்மையானவள். அதே மாதிரி எல்லாரும் தன்கிட்ட நடந்துக்கணும்னு நினைப்பாள்... நல்ல சுறுசுறுப்பு.... நல்லா வாதம் பண்ணுவாள்.... கோபம் வந்துடுச்சுன்னா அப்புறம் முன்ன பின்ன யோசிக்காம பேசிடுவா... ஆனா உபகாரி.... தன்னால முடிஞ்ச உபகாரம் செய்யக்கூடியவள்....ரொம்ப விஷயத்துல அக்காவும் உங்கம்மாவும் ஒரே மாதிரி. அதனாலேயே ரெண்டு பேரும் ரொம்ப நெருக்கமா இருந்தாங்க. அவங்களுக்கிடையே பெரிய வித்தியாசம்

என்னன்னா அக்கா உணர்ச்சிவசப்படற ரகம் அல்ல. எப்பவுமே நிதானம் இழக்க மாட்டாள். ஆனா உங்கம்மா அதற்கு நேர் எதிர்...."

தன் தாயும் சிவகாமியும் மிக நெருக்கமாக இருந்தார்கள் என்கிற செய்தியையும் பின் அவர்களுக்கிடையே இருந்த வித்தியாசத்தை அமிர்தம் சொன்ன விதத்தையும் பற்றி யோசித்த ஆர்த்திக்கு இன்னொரு உண்மையும் உறைக்காமல் இருக்கவில்லை. 'மிக நெருக்கமாக இருந்தவர்கள் பின் எதிரிகளாக மாறினால் அந்தப் பகையும் அதே ஆழத்தில் தான் இருக்கும்'.

அதே நேரத்தில், ஆகாஷ் சொன்ன தன் தாய் இறந்த சமயத்தில் இரண்டு மாதமாக சிவகாமி நாட்டிலேயே இல்லை என்ற தகவலும் சிவகாமி மேல் இருந்த சந்தேகத்தை மிக வலுவிழக்கச் செய்தது. மேலும் தன் தாயைப் பற்றிக் கேட்க எண்ணிய ஆர்த்தி உடனடியாகத் தன் மனதை மாற்றிக் கொண்டாள். சிவகாமிக்கு எதிரான தகவல் ஏதாவது இருந்தால் அதைக் கண்டிப்பாக அமிர்தம் சொல்வாள் என்று ஆர்த்திக்குத் தோன்றவில்லை. தன் தந்தையின் அறையில் தன் தாயின் புகைப்படம் ஒன்று கூட இல்லாததும், அவர் அவளது அறையில் இருக்கும் போது ஆனந்தியை நினைவுபடுத்தும் பொருள்களைப் பார்த்து நிலைகொள்ளாமல் தவித்ததும் நினைவுக்கு வந்த போது தன் பெற்றோர் உறவில் கூட விரிசல் இருந்திருக்கும் என்ற சந்தேகம் வந்தது. அதைப் பற்றியும் அமிர்தத்திடம் கேட்கவோ, உண்மையான பதில் பெறவோ முடியாது என்று தோன்றியது.

இதையெல்லாம் மேரியிடம் கேட்டால் தக்க பதில் கிடைக்கும் என்று ஆர்த்தி நினைத்தாள். தன்னைப் பார்த்தவுடன் டேவிட்-மேரி தம்பதிகள் நெகிழ்ந்த விதம், மேரி அவளைப் பார்த்துப் பேசிய விதம் எல்லாம் அவள் தன் தோழியின் மகளிடம் தனக்குத் தெரிந்த உண்மைகளைக் கண்டிப்பாக மறைக்காமல் சொல்வாள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

மூர்த்தி தனதறைக்கு வந்ததைப் பார்த்த பவானி தன் தாய் தான் அழைக்கின்றாள் என்று நினைத்தாள். மூர்த்தி பெரும்பாலும் அந்தச் செய்தியைச் சொல்லத்தான் அவள் அறைக்கு வருவான். அவள் புறப்பட எழுந்ததைப் பார்த்த மூர்த்தி சொன்னான். "பாட்டி கூப்பிடலை. நான் உங்க கிட்ட பேசத் தான் வந்தேன்"

எழுந்தவள் அப்படியே உட்கார்ந்தாள். "என்ன?"

"எங்கப்பா அம்மாவையும் சிவகாமி தான் கொன்னுருப்பான்னு நீங்களும் நம்பறீங்களா அத்தை?"

பவானிக்கு ஒரு கணம் மூச்சு விட முடியவில்லை. திகைப்போடு மருமகனைப் பார்த்தாள். "நீ என்ன சொல்றே?"

அவளுடைய திகைப்பு நடிப்பல்ல என்பதை மூர்த்தி நம்பினான். அப்படியானால் தன் சந்தேகத்தை பாட்டி தன் மகளிடம் கூட சொல்லவில்லை என்பது உறுதி. ஏன் என்ற கேள்வி அவன் மனதில் விசுவரூபம் எடுத்து நின்றது. மெல்ல சொன்னான். "பாட்டி அப்படி சந்தேகப்படறாங்க"

பவானி திகைப்பில் இருந்து மீளவில்லை. முகம் வெளுக்க பிரமை பிடித்தபடி மூர்த்தியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"அப்படி அவங்க சந்தேகப்பட காரணம் என்ன இருக்கும்னு நீங்க நினைக்கிறீங்க?"

பவானி தெரியவில்லை என்று தலையசைத்தாள்.

மூர்த்தி அவளை விடுவதாக இல்லை. "இப்ப தான் அமிர்தம் ஆர்த்தி கிட்ட சொல்லிகிட்டிருந்ததைக் கேட்டேன். ஆர்த்தியோட அம்மாவும், சிவகாமியும் ரொம்பவும் நெருக்கமாய் இருந்தாங்கன்னு சொன்னா. அப்படின்னா சிவகாமி எதுக்கு ஆர்த்தியோட அம்மாவைக் கொல்லணும்?"

பவானி குரல் கிணற்றுக்குள் இருந்து வந்தது. "எனக்கென்ன தெரியும்?"

"ஆர்த்தியோட அம்மாவுக்கும் எங்கப்பா அம்மாவுக்கும் என்ன சம்பந்தம்?"

பவானி உடனடியாக பதில் சொல்லவில்லை. அவளுடைய அண்ணன் நினைவு வர கண்களில் நீரும் தழும்பியது. அவள் வாழ்க்கையில் அவளை நேசித்த ஒரே மனிதன் அவன் தான். கடைசியில் அவன் பிணம் கூட கண்ணில் காணக் கிடைக்கவில்லை என்பதை எண்ணி எத்தனை முறை அவள் உருகி இருக்கிறாள். இப்போது பஞ்சவர்ணம் சந்தேகப்படுகிறாள் அவனையும் அவன் மனைவியையும் சிவகாமி கொன்றிருக்கலாம் என்று. ஏன், எதனால் என்று கேட்டுக் கொண்டு அவன் மகன் அவள் எதிரில் நிற்கிறான். அவள் எதைச் சொல்வாள், எப்படிச் சொல்வாள்.

மூர்த்திக்கு அத்தை இந்த உலகில் தான் இருக்கிறாளா என்று சந்தேகம் வந்தது. அவனையும் தாண்டி ஏதோ வெற்றிடத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவளை இரண்டு நிமிடங்கள் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்து விட்டு மறுபடி கேட்டான். "ஆர்த்தியோட அம்மாவுக்கும் எங்கப்பா அம்மாவுக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டேன்"

"சம்பந்தம் .... இல்லை"

"அப்படின்னா சிவகாமிக்கும் எங்கப்பா அம்மாவுக்கும் என்ன சம்பந்தம்? ஏன் பாட்டிக்கு சிவகாமி மேல சந்தேகம் வருது"

பவானி சகல பலத்தையும் தன்னுள் ஒன்று சேர்த்து பேச்சில் வரவழைத்தாள். "அதை நீ சந்தேகப்பட்ட பாட்டி கிட்ட தான் கேக்கணும். எனக்கு எதுவும் தெரியாது"

மூர்த்தி பவானியைக் கூர்ந்து பார்த்தபடி சிறிது நேரம் நின்று விட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினான். அவன் மேலும் குடைந்து கேட்காதது அவளுக்கு பெருத்த ஆசுவாசத்தைக் கொடுத்தாலும் பஞ்சவர்ணம் பேரனிடம் தெரிவித்த சந்தேகம் அவள் மனதில் பெரிய புயலைக் கிளப்பியது. பஞ்சவர்ணம் காரணமில்லாமல் சந்தேகப்படும் நபர் அல்ல. அதுவும் அதை மூர்த்தியிடம் சொல்கிறாள் என்றால் ஏதோ ஒரு காரணம் கண்டிப்பாக இருக்க வேண்டும். என்ன அது?

யோசிக்க யோசிக்க பவானிக்கு மண்டை வெடித்து விடும் போல இருந்தது.

## 39

There is no end. There is no beginning. There is only the infinite passion of life.
-Federico Fellini

டாக்டர் டேவிடிற்குப் பேசாமல் இருப்பது தான் கஷ்டமான செயல் என்று ஆர்த்திக்குத் தோன்றியது. மனிதர் வந்ததில் இருந்து பேச்சை நிறுத்தவில்லை. அவரது நண்பர் சந்திரசேகர் வீட்டில் இல்லாதது அவருக்குப் பேச்சைக் குறைக்க காரணமாகத் தோன்றவில்லை. அமிர்தத்திடமும் ஆர்த்தியிடமும் பார்வதியிடமும் நீலகண்டனிடமும் மாறி மாறி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். நீலகண்டனிடம் மாரடைப்பைப் பற்றிப் பேச ஆரம்பித்தவர் பாண்டிச்சேரி அரவிந்தாஸ்ரமம், ஊட்டி எல்க்ஹில் முருகன் கோயில் பற்றி பார்வதியிடம் சொல்லி, அமிர்தத்திடம் உள்ளூர் சமாச்சாரங்களை அலசி, ஆர்த்தியிடம் எழுத்தாளர் சுஜாதா மரணம் பற்றிப் பேசி அவரது கதைகள் சிலவற்றை விமரிசித்து சிறிது மூச்சு வாங்கிய போது அமிர்தம் கேட்டாள். "ஏன் மேரியை கூட்டிகிட்டு வரலை?"

"ஐயோ சின்னக்கா நான் வந்த வேலையையே மறந்துட்டேன் பார்த்தீங்களா? மேரி ஆர்த்தியை வீட்டுக்குக் கூட்டிகிட்டு வரச் சொன்னாள். அது தான் இந்த மத்தியான வேளையில் வந்திருக்கேன். பேச்சுல மறந்தே போயிட்டேன்"

ஆர்த்திக்கும் மேரியிடம் கேட்க நிறைய இருந்ததால் போக ஆவலாக இருந்தது. அமிர்தத்தை என்ன செய்வது என்பது போலப் பார்த்தாள். தந்தையும், பெரியத்தையும் இல்லாததால் சின்னத்தையின் அனுமதியை எதிர்பார்த்தாள்.

அமிர்தம் தலையசைத்து விட்டுச் சொன்னாள். "போயிட்டு வா ஆர்த்தி. டேவிட் நீ சாயங்காலத்துக்குள்ள கூட்டிகிட்டு வந்துடு. அவங்கப்பா சாயங்காலம் பொண்ணைக் கூட்டிகிட்டு ஷாப்பிங் போகணும்னு பவானி கிட்ட சொல்லிகிட்டிருந்தது காதுல விழுந்துச்சு. அதுக்குள்ள வந்துடு"

"நான் கிளினிக் போறதுக்கு முன்னால் இங்க ஆர்த்தியை கூட்டிகிட்டு வந்துடறேன்." என்றவர் நீலகண்டன் தம்பதியரைப் பார்த்து சொன்னார். "நீங்களும் வாங்களேன்"

"இன்னொரு நாள் வர்றோம்...." என்று பார்வதி சொல்ல டேவிட் ஆர்த்தியை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

போகும் டேவிடைப் பார்த்துப் புன்னகைத்தபடி அமிர்தம் பார்வதியிடம் சொன்னாள். "....எனக்கு தலைவலியே வந்துடுச்சு. இப்படித்தான் பேசினா நிறுத்த மாட்டான். சின்னதுல இருந்தே பழக்கம். அதனால வீட்டாள் மாதிரி தான். அக்கா ஒருத்தியால தான் அந்தப் பேச்சை நிறுத்த முடியும்.... ஆனா ரொம்பவும் நல்ல டைப்....."

காரில் போகும் போதும் டேவிட் பேசிக் கொண்டே தான் காரை ஓட்டினார். "..... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? எங்கப்பா உன் தாத்தாவோட எஸ்டேட்டுல மேனேஜரா இருந்தார். அப்படி நானும் இங்க வர போக உங்கப்பாவும் நானும் ஃப்ரண்ட்ஸ் ஆயிட்டோம். சின்னதுல நானும் உங்கப்பனும் அடிக்காத லூட்டி இல்லை. அப்ப எல்லாம் ஊட்டில சாயங்காலம் அஞ்சு மணிக்கே ரோட்டுல ஆள் நடமாட்டம் அதிகம் இருக்காது. நாங்க ரெண்டு பேரும் ராத்திரி எட்டு மணி வரைக்கும் பேய் மாதிரி உலாவிக்கிட்டு இருப்போம்....."

தந்தையின் இளமைப் பருவ வாழ்க்கையை நினைத்து ஆர்த்தி புன்னகைத்தாள்.

".... அப்ப எல்லாம் எதிர்காலம் என்னங்கற யோசனை செய்யற அளவுக்குக் கூட புத்தி இல்லை. எசஸெல்சில நல்ல மார்க் வாங்கிட்டு வந்தப்ப எங்கப்பா சொல்லிட்டார். "படிச்சது போதும். மேல படிக்க வைக்க என் கிட்ட காசு இல்ல. எங்கேயாவது வேலை பாரு"ன்னுட்டார். அப்ப தான் யதார்த்தம் தலையில் ஆணி மாதிரி அடிச்சது....." சொல்லி விட்டு டேவிட் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அந்த நாள் நினைவு அவரை ஆட்கொண்டது போல இருந்தது.

ஆர்த்தி ஆர்வத்துடன் கேட்டாள். "அங்கிள், அப்புறம் எப்படி டாக்டர் ஆனீங்க?"

டேவிட் குரல் கரகரக்கச் சொன்னார். "எல்லாம் உன் பெரியத்தையோட தயவு தான். அப்ப உங்க தாத்தாவோட அவங்களும் பிசினஸ் பார்த்துகிட்டு இருந்தாங்க. உன் தாத்தான்னா எல்லாருக்கும் பயம். உங்கப்பா, சின்னத்தை கூட அவர் கிட்ட தைரியமா பேச மாட்டாங்க...நானும் வேலை கேட்க சிவகாமி அக்கா கிட்ட தான் போனேன். 'என்னடா படிக்கறத விட்டுட்டு வேலை கேட்டுட்டு வந்திருக்கே. அதுவும் இவ்வளவு நல்ல மார்க் வாங்கிட்டு'ன்னு கேட்டாங்க"

'அப்பா இதுக்கு மேல படிக்க வைக்க முடியாதுன்னாட்டாங்கக்கா'

'அப்ப உனக்கு படிக்க ஆசை இருக்கு'

'ஆசை இருந்து என்னக்கா செய்யறது. அம்சம் இல்லை'ன்னேன்.

'என்ன படிக்க ஆசை?'

'டாக்டருக்குப் படிக்க ஆசை... அதை சொல்லி என்னக்கா பிரயோஜனம்?'

'கொஞ்சம் இரு'ன்னுட்டு உங்க தாத்தா கிட்ட போய் பேசினாங்க. நான் அவர் ரூம் வாசல் பக்கத்துலயே நின்னுட்டு இருந்தேன். உள்ளே பேசினது கேட்டுச்சு. என்னோட படிப்பு செலவ ஏத்துக்க சொல்லி உங்க தாத்தா கிட்ட சொன்னாங்க. அவர் பணம் என்ன மரத்துலயா காய்க்குதுன்னு கத்துனார். மனுஷன் அந்தக் காலத்துலேயே எக்கச்சக்கமா பணமும் சொத்தும் சேர்த்து வச்சிருந்தாலும் எச்சில் கையில காக்கா ஓட்ட மாட்டார். உங்கத்தை விடலை. "அவன் யாரு, நமக்கென்ன உறவு. அவனுக்காக நீயேன் என் கிட்ட வந்து கேட்கிறாய்?"ன்னு உன் தாத்தா கேட்டார். இப்பவும் உங்கத்தை சொன்னதை என்னால் மறக்க முடியாது ஆர்த்தி. "சந்துருவோட ஓடியாடி விளையாடுன பையன். எனக்கு அவனும் சந்துரு மாதிரி தான்"னாங்க.....'

டேவிட் குரல் உடைந்து ஒரு நிமிடம் மௌனமாக இருந்தார். பிறகு தொடர்ந்தார். "அது மட்டுமில்ல. உங்களுக்காகவும் தான் கேட்கறேன்னு அக்கா சொன்னாங்க. உன் தாத்தா "எனக்காகவா? என்ன சொல்ற?'ன்னு கேட்டாரு. "ஒரு நாள் நீங்க மேல போய் சேர்றப்ப எமதர்மன் 'ஏதாவது தர்மம் செஞ்சிருக்கியா?'ன்னு கேட்டா ஒரு ஏழைப் பையன் படிக்க நான் உதவியிருக்கேன்னு சொல்லலாமே"ன்னு அக்கா சொன்னாங்க. அப்ப உன் தாத்தா சிரிச்ச சிரிப்பு மாதிரி நான் அது வரைக்கும் கேட்டதில்லை. கடைசில சொன்னாரு "சரி தர்றேன். ஆனா எமதர்மன் கேப்பான்னு இல்ல. நீ கேக்கறேன்னு தான். ஆனா இனிமே கண்டவங்களுக்காக என் கிட்ட வந்து கேட்டுடாதே. நான் கண்டிப்பா செய்ய மாட்டேன். அப்புறம் கேட்டேன், அப்பா மறுத்துட்டாருன்னு சொல்ல வேண்டாம்"

"சிவகாமியக்கா பெருசா கனிவா பேசற ரகம் அல்ல. என் கிட்ட கூட ஒரு தடவை கூட அப்படி பேசுனதோ பழகுனதோ இல்லை. அப்படியிருக்கையில எனக்காக அவங்க செஞ்ச உதவிய நான் எதிர்பாக்கல. ஒவ்வொரு வருஷமும் மார்க் ஷீட்ட அவங்க கிட்ட கொண்டு போய் காமிப்பேன். மார்க் குறைஞ்சிருந்தா நல்லாவே திட்டுவாங்க.... அதுல எல்லாம் தாட்சண்யமே இருக்காது. நான் நல்லா படிக்க அதுவும் ஒரு காரணமாச்சு.....கடைசில நான் அவங்க தயவுல டாக்டராயிட்டேன்" சொல்லச் சொல்ல டேவிட் நாக்கு தழுதழுத்தது.

ஆர்த்திக்கும் மனம் நெகிழ்ந்தது. சிவகாமியின் பெருந்தன்மை அவளை வியக்க வைத்தது.

டேவிட் தொடர்ந்து சொன்னார். "உன் தாத்தா இறந்த பிறகு அக்கா அவர் பேருலயே ஒரு டிரஸ்ட் ஆரம்பிச்சு நிறைய ஏழைக் குழந்தைங்க படிக்க ஏற்பாடு செஞ்சாங்க...."

அப்படிப்பட்ட ஒருத்தி கொலை செய்ததாய் சந்தேகப்பட்டால் அவள் மகனுக்கு கோபம் வராமல் என்ன செய்யும் என்று ஆர்த்தி தனக்குள் கேட்டுக் கொண்டாள். ஆகாஷின் வெறுப்பை நினைக்கையில் அவள் மனம் வாடியது. அதனை அப்போதைக்கு மறக்க வேண்டி டேவிட்டை ஆர்த்தி கேட்டாள். "அங்கிள், எங்கம்மா எந்த மாதிரி டைப்?"

டேவிட் ஒரு கணம் தாமதித்து சொன்னார். "உங்கம்மா ஒரு உற்சாகமான டைப். எல்லாத்தையும் ஒரு துடிப்போட செஞ்சாங்க; வாழ்ந்தாங்க. அவங்க டல்லா இருந்து பார்க்கறது அபூர்வம்....."

"அவங்க இறந்த விதம் என்னவோ யதார்த்தமில்லாத மாதிரி தோணலையா அங்கிள்?"

டேவிட் தன்னை அறியாமல் காருக்குப் ப்ரேக் போட்டு நிறுத்தினார்.

# 40

Your friends will know you better in the first minute you meet than your acquaintances will know you in a thousand years.
-Richard Bach

டேவிட் தன் அதிர்ச்சியை ஒரு நிமிடத்தில் சுதாரித்துக் கொண்டார். மறுபடி காரைக் கிளப்பிய போது அவர் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"என்ன அங்கிள் சிரிக்கிறீங்க?"

"நான் மேரி கிட்ட நேத்து சொன்னேன். பார்க்க ஆர்த்தி ஆனந்தி மாதிரியே இருந்தாலும் ஆர்த்தி ரொம்ப சைலண்ட் டைப்பா தெரியறாள்னேன். ஆனா நீ இப்படி திடீர்னு இந்தக் கேள்வியை எதிர்பார்க்காதப்ப கேட்டப்ப ஒரு நிமிஷம் உன் அம்மாவாவே மாறிட்ட மாதிரி தோணுச்சு. அவங்களும் இப்படித் தான் எதையும் நேரடியா படார்னு கேட்டுடுவாங்க. அதை நினைச்சு தான்....."

"ஆனா நான் முதல்ல கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லலையே....."

டேவிட் முகத்தில் புன்னகை காணாமல் போனது. ஒரு நிமிடம் அவர் ஒன்றும் பேசவில்லை. பின் பேசிய போது அவர் குரல் சற்று தாழ்ந்து இருந்தது. "ஆனந்தி அந்த இடத்துக்கு ஏன் போனாங்கன்னு யாராலயும் அனுமானிக்க முடியலை. அதுவும் அந்த மாதிரி மழை இருந்தப்ப அங்கங்க நிலச்சரிவு ஆயிட்டு இருக்குன்னு தெரிஞ்ச பிறகு போக என்ன காரணம்னு நானும் மேரியும் பல தடவை எங்களுக்குள்ள கேட்டுகிட்டு இருக்கோம். ஆனா பதில் கிடைக்கலை....."

பேசிக் கொண்டிருக்கையிலேயே டேவிடின் வீடு வந்து விட டேவிட் பேசிக் கொண்டிருந்த விஷயத்தை விட்டு வீட்டைப் பற்றிச் சொன்னார். "உங்க பங்களாவைப் பார்த்துட்டு இதென்ன இவ்வளவு சின்னதாய் வீடு இருக்குன்னு நினைச்சுடாதே ஆர்த்தி"

அவர் சொன்ன அளவுக்கு அந்த வீடு சின்னதாய் இருக்கவில்லை. பாண்டிச்சேரியில் மிகச்சிறிய வீட்டில் வளர்ந்த ஆர்த்திக்கு இந்த வீடு பெரியதாய் தான் தோன்றியது. முன்னால் பூச்செடிகள் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்க வீடும் அழகாகத் தெரிந்தது. ஆர்த்தி அதைச் சொல்ல வாய் திறக்கும் முன் மேரி கார் கதவைத் திறந்து வரவேற்றாள். "வா ஆர்த்தி"

அவளைப் பாசத்துடன் அழைத்த மேரியின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி ஆர்த்தியை நெகிழ்வித்தது. அவளது தந்தையைத் தவிர வேறு யாரும் ஊட்டி வந்த பின்பு இவ்வளவு பாச பழை பொழிந்ததில்லை.

உள்ளே அழைத்துக் கொண்டு போய் அவளிடம் அவள் படிப்பு பற்றியும், பாண்டிச்சேரி வாழ்க்கை பற்றியும், எப்படி ஊட்டி வந்தார்கள் என்பது பற்றியும் டேவிடும், மேரியும் ஆவலுடன் விசாரித்தார்கள். சுருக்கமாக எல்லாவற்றையும் ஆர்த்தி சொன்னாள். தன் கனவு பற்றியோ, தாத்தாவிற்கு ஆனந்தி மரணத்தில் இருக்கும் சந்தேகம் பற்றியோ சொல்லப் போகாமல் தாத்தாவிற்கு மாரடைப்பு ஏற்பட்டது என்றும் அதன் பிறகு தான் பாட்டி மூலம் தந்தை பற்றி அறிய நேர்ந்ததாகவும், ஆபரேஷனுக்கு ஆகும் செலவை செய்ய முடியாத சூழ்நிலையில் தானாக போன் செய்ததாகவும் ஆர்த்தி சொன்ன போது அவர்கள் பரபரப்போடு அதையெல்லாம் கேட்டார்கள்.

டேவிட் கேட்டார். "சிவகாமி அக்கா கிட்டேயும் உன்னால் பேச முடிஞ்சிருக்காட்டி நீ என்ன செஞ்சிருப்பாய்?"

ஆர்த்திக்கு என்ன செய்திருக்க முடியும் என்று நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. யோசித்து விட்டு சொன்னாள். "தெரியலை. போன் மேல போன் போட்டு அழுது புலம்பி இருப்பேன்னு நினைக்கிறேன்.."

மேரி கண்கள் பனிக்க சொன்னாள். "நீ பின் வாங்கி இருக்க மாட்டாய். உங்கம்மா கூட அப்படித் தான் இருந்தா. ஒரு முடிவு எடுத்துட்டா கடவுளே வந்து மாத்தச் சொன்னாலும் மாத்திக்க மாட்டாள். பின் வாங்கவும் மாட்டாள்....."

டேவிட் சற்று கோபத்தோடு சொன்னார். "நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே ஆர்த்தி. உன் தாத்தா ஒரு லூசுப் பேர்வழி...இல்லாட்டி உன்னையும் தூக்கிட்டு ஊரை விட்டுட்டே சொல்லிக்காம ஓடி இருப்பாரா?"

தாத்தாவை லூசுப் பேர்வழி என்றது பேத்திக்குக் கஷ்டமாக இருந்தது. அவள் முக வாட்டத்தைக் கண்ட மேரி சமாளிக்கும் விதமாகச் சொன்னாள். "அவருக்கு ஆனந்தின்னா உயிரு. மகள் போன துக்கத்துல அப்படி நடந்துகிட்டார்..."

"அவர் மகள் போயிட்டான்னு இன்னொருத்தர் மகளையா தூக்கிகிட்டு போவாங்க. சந்துரு மகளை நினைச்சு நினைச்சு எப்படியெல்லாம் துடிச்சுப் போனான் தெரியுமா?"

துடிச்சுப் போன தந்தை நினைத்திருந்தால் தன்னைத் தேடிக் கண்டுபிடிக்க பெரிதாக சிரமப்பட்டிருக்கத் தேவை இருந்திருக்காது என்று ஆர்த்தி தனக்குள் சொல்லிக் கொண்டாள். பணமும் செல்வாக்கும் இருக்கும் அவருக்கு இது ஒரு பெரிய விஷயமே அல்ல. அப்படி இருந்தும் அவர் பெரிய முயற்சி எடுக்காததும், தன்னைப் பாண்டிச்சேரி கல்லூரியில் பார்த்த பின்னும் சிவகாமி தன்னை இங்கு வரவழைக்க முயற்சி செய்யாததும் பெரிய கேள்விக்குறிகளாய் ஆர்த்தி மனதைக் குத்தியபடியே இருந்தன.

மேரி மெள்ளப் பேச்சை மாற்றினாள். "ஆர்த்தி இன்னைக்கு மத்தியானத்துக்கு என்ன சமைக்கறதுன்னு தெரியலை. உனக்கு என்ன பிடிக்கும்னு என்னாலே அனுமானிக்க முடியலை. அதனால உங்கம்மாவுக்கு பிடிச்ச அயிட்டமா செஞ்சேன். பார்க்க மட்டுமல்ல வாய் ருசியும் அவளை மாதிரியே இருக்கும்னு தோணிச்சு" என்று சொல்லியவள் தான் செய்த சமையல் வகைகளைச் சொன்னாள்.

அவள் சொன்னதில் பாதிக்கு மேல் அவளுக்கும் பிடித்தவை தான். ஆனால் அவளுடைய பட்டியல் நீண்டு கொண்டே போன போது ஆர்த்தி சொன்னாள். "ஆண்ட்டி இது என்ன இவ்வளவு ஐட்டம் செஞ்சுருக்கீங்க. ஒவ்வொரு ருசி பார்த்தாலே வயிறு நிறைஞ்சுடும் போல இருக்கு"

"நீ சும்மா இரு. ஒரு காலத்துல உங்கம்மா வர்றதுக்கு முன்னால் உரிமையா பெரிய லிஸ்ட் குடுத்துடுவா. வந்தா சாப்பிட்டுட்டு மணிக்கணக்குல பேசிகிட்டு இருப்போம். நீ வர்றேன்னவுடனே எனக்கு எல்லாத்தையும் செஞ்சு உன்னை சாப்பிட வைக்கணும்னு தோணுச்சு....."

ஆர்த்தி மேரியின் அன்பில் மனம் நெகிழ்ந்தாள். பிறகு அவர்களைப் பற்றி விசாரித்தாள். டேவிட்-மேரி தம்பதியருக்கு அவளை விட இரண்டு வயது மூத்த மகள் ஒருத்தி இருக்கிறாள் என்றும் அவள் கல்யாணமாகி ஈரோடில் இருக்கிறாள் என்றும் சொன்னார்கள். மருமகன் ஐசிஐசிஐ பேங்கில் இருப்பதாகச் சொன்னார்கள்.....

திடீரென்று டேவிட் மனைவியிடம் சொன்னார். "இப்ப கார்ல வர்றப்ப ஆர்த்தி திடீர்னு அவங்கம்மா இறந்த விதம் யதார்த்தமாய் தோணலைன்னா. ஆனந்தி ஏன் அந்த நிலச்சரிவு ஆன இடத்துக்குப் போனாங்கன்னு நமக்கும் தெரியலைன்னு நானும் அவ கிட்ட சொன்னேன்....". தொடர்ந்து டேவிட் ஆர்த்தியிடம் சொன்னார். "இன்னொரு விஷயம் என்னான்னா அந்த சமயத்துல நாங்களும் ஊட்டில இல்லை. வேளாங்கன்னி போயிருந்தோம். நாங்களும் அவங்க முகத்தை கடைசில பார்க்க முடியாமல் போயிடுச்சு....."

மேரியும் சோகமாகத் தலையசைத்தாள். திடீர் என்று ஏதோ நினைவுக்கு வந்தவளாய் மேரி ஆர்த்தியைக் கேட்டாள். "ஆர்த்தி நீ யதார்த்தமாய் இல்லைன்னு சொன்னதுக்கு வேற எதாவது காரணம் இருக்கா. வேறெதாவது அர்த்தத்துல சொன்னாயா?"

ஆர்த்திக்கு எவ்வளவு தூரம் தன் சந்தேகத்தை இவர்களிடம் சொல்லலாம் என்று இன்னும் அனுமானிக்க முடியவில்லை. அதுவும் சிவகாமியால் ஒரு நல்ல வாழ்க்கை பெற்ற மனிதனிடம் என்ன சொல்வது எப்படி சொல்வது குழம்பினாள்.

அப்போது தான் புரிந்தது போல டேவிட் கேட்டார். "நீ கேட்டது மரணம் இயற்கையானதில்லைங்கற அர்த்தத்திலா ஆர்த்தி"

ஆர்த்திக்குத் தலையசைக்கக் கூடத் தயக்கமாய் இருந்தது.

ஆனால் அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் டேவிட் சொன்னார். "ஆர்த்தி ஆனந்தி ஏன் அங்கே போனாங்கன்னு தெரியலையே ஒழிய வேறெதாவது தப்பாய் நடந்திருக்க சான்ஸே இல்லை. ஏன்னா உங்கம்மா சாதாரணமான ஆள் இல்லை. இங்க உங்க குடும்பத்துக்கு நல்ல செல்வாக்கு இருக்கு. அதுவும் உன் பெரியத்தை மேல் இங்க எல்லாருக்குமே பயபக்தி உண்டு. சிவகாமியம்மாவோட தம்பி மனைவிக்கு ஆபத்தை ஏற்படுத்திட்டு தப்பிச்சுக்க முடியும்கிற தைரியம் யாருக்கும் கிடையாது....."

அவர் சொல்லச் சொல்ல மேரிக்கு ஏதோ நினைவு வர அவள் முகம் வெளிறியது.

# 41

It is not so important to know everything as to appreciate what we learn.
– Hannah More

மேரியின் முகம் வெளிறியதை இருவருமே கவனிக்கத் தவறவில்லை. டேவிட் மனைவியிடம் கேட்டார். "என்ன மேரி...."

"ஒண்ணுமில்லை. திடீர்னு ஏதோ தலை சுத்தற மாதிரி இருந்தது"

ஆர்த்திக்கு மேரியைப் பார்க்க பாவமாக இருந்தது. 'இந்த ஆண்ட்டிக்கும் என்னை மாதிரி பொய் சொல்ல சரியா வர்றதில்லை. பாவம்'

டேவிடிற்கும் அது பொய் என்று தெரிந்தாலும் ஆர்த்தி இருக்கும் போது கேட்க வேண்டாம் என்று எண்ணினார். ஆர்த்தியிடம் தொடர்ந்து சொன்னார். "இன்னொரு விஷயம் என்னன்னா அந்த நாள் எங்களுக்குத் தெரிஞ்ச எத்தனையோ பேர் விபத்துல மாட்டியிருக்காங்க. சில பேரோட பிணம் கூட கிடைக்கலை. உங்க சித்தியோட அண்ணா, அண்ணி, அப்புறம் உங்க பங்களாவில் அப்ப வேலைக்கு இருந்த விஜயா எல்லாம் போன சுவடே தெரியலை"

ஆர்த்தி இதற்கு மேலும் சந்தேகப்படுவது போல காண்பித்தால் விஷயம் தன் வீட்டார் காதில் எட்டி விடும் என்ற பயத்தில் சொன்னாள். "சேச்சே.. நான் அப்படி சந்தேகப்படலை. அம்மா அங்கே ஏன் போனாங்கங்கற கேள்வி தான் என்னைக் குழப்பிச்சு அங்கிள்..... அந்த வேலைக்காரி விஜயா தான் அந்த சமயத்துல அம்மா கூட இருந்தவளா?"

டேவிட் சொன்னார். "ஆமா..."

மேரி முகம் இயல்பு நிலைக்கு இன்னும் மாறவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

"என்ன மேரி அந்த விஜயா தானே ஆனந்தி கூட அந்த சமயத்துல இருந்தது.... ஒரு வேளை அவளும் ஆனந்தியும் அந்த விபத்து பகுதிக்கு சேர்ந்து தான் போனாங்களோ என்னவோ"

கணவன் தன்னிடம் பேசியதைக் கேட்டு ஏதோ உலுக்கியதைப் போல பதறி இயல்பு நிலைக்குத் திரும்பிய மேரி "என்ன கேட்டீங்க" என்றாள்.

மனைவியை ஒரு வித எரிச்சலுடன் பார்த்த டேவிட் தான் சொன்னதை மறுபடியும் சொன்னார்.

மேரி சொன்னாள். "ஆமா அந்த விஜயா தான் அப்ப கூட இருந்தவள். ஆனா அவளை மாத்தணும்னு சில நாளாவே ஆனந்தி சொல்லிகிட்டு இருந்தாள்...."

ஆர்த்திக்கு அந்த வேலைக்காரி விஷயமும் புதிராக இருந்து வந்ததால் ஆவலோடு கேட்டாள். "ஏன் ஆண்ட்டி"

"அவள் சரியில்லைன்னு சொல்லிகிட்டு இருந்தாள். ஏன்னு சொல்லலை. சரி வாம்மா சாப்பிட்டுகிட்டே பேசலாம்"

மேரியின் சமையல் பிரமாதமாக இருந்தது. அவள் பரிமாறிய விதமும் ஒரு தாயினுடையதாக இருந்தது. பேச்சு வேறு விஷயங்களுக்கு மாறியது. ஆர்த்திக்கு மேரியிடம் கேட்க இன்னும் நிறைவே இருந்தாலும் ஒரே நாளில் அத்தனையும் கேட்டு சந்தேகத்தைக் கிளப்பிவிட வேண்டாம் என்று தோன்றியது.

சாப்பிட்டு முடித்த போது சந்திரசேகரிடமிருந்து போன் வந்தது. டேவிட் தான் போனை எடுத்தார். பேசி முடித்த பின் ஆர்த்தியிடம் சொன்னார். "உங்கப்பா உன்னை ரெடியா இருக்கச் சொன்னான். ஷாப்பிங்குக்கு கோயமுத்தூர் போகணுமாம். அரை மணி நேரத்துல நேபாளத்தைக் காரோடு அனுப்பறானாம்...."

ஆர்த்தி முகத்தில் தெரிந்த குழப்பத்தைப் பார்த்த மேரி சொன்னாள். "அர்ஜுனைத் தான் இவர் நேபாளம்னு சொல்றார். அவனை உங்க பெரியத்தை நேபாளம் டீர் போனப்ப பார்த்து கூட்டிகிட்டு வந்தாங்க. உன் சின்னத்தை ஆரம்பத்துல அவனை நேபாளம்னு சொல்ல அந்தப் பேரே நின்னு போச்சு. ஆனா உங்க பெரியத்தை கேட்டா மட்டும் சத்தம் போடுவாங்க. அவங்க முன்னால் மட்டும் எல்லாரும் அர்ஜுன்னு சொல்வாங்க....."

டேவிட் சிரித்துக் கொண்டே விளக்கினார். "ஸ்கூல்ல வாத்தியார்களுக்குப் பட்டப் பெயர் வைப்பாங்க தெரியுமா? பசங்களுக்கு அந்த வாத்தியாரோட ஒரிஜினல் பெயர் சொன்னா சட்டுன்னு விளங்காது. பட்டப் பெயர் தான் அவங்களுக்குள்ள பயன்படுத்துவாங்க. அந்த மாதிரி தான் இது ஆயிடுச்சு. அவன் வித்தியாசமாவும் இருந்ததாலயோ என்னவோ இப்படி நேபாளம்கிற பெயரே பழக்கத்துக்கு வந்துருச்சு. உங்கப்பன் பெரியக்கா முன்னால் கூப்பிட்டு அடிக்கடி திட்டு வாங்குவான்....."

மேரி சொன்னாள். "முதல்ல எல்லாம் எனக்கு அவனைப் பார்த்தாலே பயமா இருக்கும். போகப் போக பழகிடுச்சு. ஆனா இப்ப கூட சிவகாமியக்கா கூட அவன் நிக்கறப்ப துர்க்கை பக்கத்துல ராட்சஸன் நிக்கற மாதிரி தோணும். அவங்களானதுனால அவனைக் கூடவே வச்சிருக்காங்க. வேற யாரானாலும் பக்கத்துலயே சேர்க்க மாட்டாங்க.."

டேவிட் சொன்னார். "அந்த விஷயத்துலயும் பெரியக்கா க்ரேட்டுன்னு தான் சொல்லணும். அவங்க இவ்வளவு அழகா இருந்தாலும் என்னைக்குமே சொல்வாங்க. "சொல்லி பெருமைப்பட வேறெதுவுமே இல்லாதவன் தான் அழகாயிருக்கோம்னு பெருமைப்பட்டுக்குவான். அதுக்குப் பெரிய முக்கியத்துவம் குடுக்கறவன் முட்டாள்"னு. அவங்க கிட்ட வார்த்தை வேற நடவடிக்கை வேறன்னு இருந்ததேயில்லை. அவங்களத் தவிர யாருமே நேபாளத்து கிட்ட முகத்தைப் பார்த்து பேசறதில்லை. அவங்க ஒருத்தர் தான் அவன் கிட்ட பேசறப்ப அந்த அசிங்கமான முகத்தை நேரா பார்த்துப் பேசறவங்க....."

ஆர்த்திக்கும் அவர் சொல்வது உண்மை என்று பட்டது. அந்த அசிங்கமான முகத்தைப் பார்த்து நேராக முகம் சுளிக்காமல் அருவருப்பு அடையாமல் பேசுவது சுலபமல்ல என்பதில் சந்தேகம் இல்லை. சிவகாமி ஒரு விதத்தில் இமயமாகத் தெரிந்தாள். இன்னொரு விதத்தில் பார்த்தால் உயரத்தின் அளவுக்கு சந்தேகத்தைக் கிளப்பினாள். திடகாத்திரமான அசுர பலம் கொண்டவனாய்த் தெரிந்த அவனைக் கூட்டிக் கொண்டு வந்து தன்னுடன் வைத்திருப்பதற்கு வேறு காரணம் ஏதாவது இருக்கிறதா என்று சந்தேகப்படாமல் இருக்க முடியவில்லை.

"அந்த நேபாளத்துக்கு இங்க என்ன வேலை?"

"எதுவும் செய்வான். பொதுவா உங்க பெரியத்தைக்குக் கார் ஓட்டுவான். அவங்க நிழல் மாதிரி பின்னாடியே இருப்பான்....."

டேவிட் சொன்னதில் முதல் வாசகம் மட்டும் ஆர்த்தியின் காதில் திரும்பத் திரும்ப ஒலித்தது. "எதுவும் செய்வான். எதுவும் செய்வான். எதுவும் செய்வான்....."

"என்ன ஆர்த்தி எங்கேயே போயிட்ட மாதிரி இருக்கு...."

ஆர்த்தி மழுப்பினாள். "இல்லை. இந்த மாதிரி முகத்துல சதை நிறைய மேடு பள்ளமாய் வளர்ந்திருக்கறது எதனாலன்னு யோசிச்சேன்..."

"அது கோடியில் ஒருத்தருக்கு ஏற்படக்கூடிய ஒருவித அபரிமிதமான வளர்ச்சி. அதற்கு வாயில நுழையாத ஒரு மெடிக்கல் டெர்ம் இருக்கு....." டேவிட் சொல்லிக் கொண்டே போனார்.

அர்ஜுன் கார் ஹாரனை அழுத்திய போது தான் டேவிட் நிறுத்தினார். "வந்துட்டான். சரி நீ கிளம்பும்மா. இன்னொரு நாள் வா. நாங்களும் அடிக்கடி வர்றோம்....."

மேரி கண்கள் பனிக்கச் சொன்னாள். "எனக்கென்னவோ உன்னைப் பார்க்கிறப்ப ஆனந்தியே வந்துட்ட மாதிரி தோணுது. நான் என் தோழியை இழந்துடலைன்னு படுது...."

அந்தப் பாசத்தில் ஆர்த்தியும் மனம் நெகிழ்ந்து போனாள். தலையாட்டி விட்டுக் கிளம்பினாள்.

வெளியே அர்ஜுன் கார்க் கதவைத் திறந்து நின்றிருந்தான். அவள் அமர்ந்தவுடன் கார்க் கதவை சாத்தி விட்டு டேவிட் தம்பதியரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் காரைக் கிளப்பிக் கொண்டு போனான்.

கார் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு டேவிடும் மேரியும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். உள்ளே வந்தவுடன் டேவிட் கேட்டார். "நான் ஆனந்தி செத்ததைப் பத்தி சொல்லச் சொல்ல உன் முகம் பயத்துல வெளுத்துடுச்சு. என்ன விஷயம் மேரி?"

மேரி தயக்கத்துடன் சொன்னாள். "ஒரு வேளை அது விபத்தாய் இல்லாம கொலையா கூட இருக்க சான்ஸ் இருக்குங்க...."

"என்ன மேரி இத்தனை வருஷம் இல்லாம இப்ப நீ புது குண்டைத் தூக்கிப் போடறே...."

"இத்தனை வருஷம் அது விபத்துங்கற கோணத்துலயே நினைச்சுகிட்டு இருந்தோம். இப்ப ஆர்த்தி யதார்த்தமாய் இல்லைன்னு சொன்னப்ப வேற பல விஷயங்களும் ஞாபகத்துக்கு வருது....."

மேரி விவரிக்க விவரிக்க டேவிட் முகமும் வெளிறி பின் கருத்தது. "சரி சரி...மேரி நீ இதையெல்லாம் ஆர்த்தி கிட்ட சொல்லிகிட்டு இருக்காதே. சொல்லி எந்த பிரயோஜனமும் இல்லை. என்ன சொல்றே.."

மேரி தலையசைத்தாள். பின் ஒரு கனத்த மௌனம் அவர்களை அழுத்தியது.

# 42

If you're not confused, you're not paying attention.
-Tom Peters

டேவிட் வீட்டுக்குச் செல்லும் போது அவர் விடாமல் பேசியதற்கு நேர் மாறாக அவர் வீட்டில் இருந்து திரும்பிப் போகையில் அர்ஜுன் மௌனம் சாதித்தான். எதுவும் பேசாமல் காரை அவன் அனாயாசமாக ஓட்டினான். அவன் பின்னால் ஒருத்தி உட்கார்ந்திருக்கிறாள் என்பதே அவன் நினைவில் உள்ளதா இல்லையா என்று ஆர்த்தி சந்தேகப்பட்டாள்.

டேவிட் வீட்டில் அவனிடம் சிவகாமி ஒருத்தி தான் முகத்தைப் பார்த்துப் பேசுவாள் என்று சொன்னது நினைவுக்கு வந்தது. சிவகாமியைப் போல் அந்த முகத்தைப் பார்த்து தன்னால் பேச முடியுமா என்று தன்னையே ஆர்த்தி கேட்டுக் கொண்டாள். மனமார முடியும் என்று தோன்றவில்லை. அருவறுக்கும்படியாக உள்ள அந்த முகத்தைப் பார்த்து பயப்படாமல், முகம் சுளிக்காமல் பேச முடியும் என்று அவளால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

முகத்தைப் பார்த்துப் பேசாவிட்டாலும் பின்னால் இருந்து பேசினால் என்ன என்று தோன்ற, பின் யோசிக்காமல் கேட்டாள். "எங்கம்மாவை உங்களுக்கு ஞாபகம் இருக்கா?".

நல்ல வேளையாக அவன் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் அவள் கேள்வி அவனை ஆச்சரியப்படுத்தியது போல தோன்றியது. சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு சொன்னான். "உங்கம்மாவை யாரும் அவ்வளவு சீக்கிரம் மறந்துட முடியாது"

அவன் குரல் கம்பீரமாக இருந்தது.

"எங்கம்மாவைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

இந்தக் கேள்வி அவனுக்குப் பிடிக்கவில்லை போல ஆர்த்திக்குத் தோன்றியது. இல்லை என்ன பதில் சொல்லலாம் என்று யோசிக்கிறானோ? ஒருவேளை தான் கேட்டது அவன் காதில் விழவில்லையோ என்று ஆர்த்தி சந்தேகப்பட்ட போது அவன் சொன்னான். "ரொம்ப தைரியமானவங்க. எதிலும் ஒளிவு மறைவு கிடையாது...." ஒரு கண நேர மௌனத்திற்குப் பிறகு சொன்னான். "நல்லவங்க"

சொல்லி முடித்தவுடன் காரை வேகமாக ஓட்டினான். அவள் கேள்விகளில் இருந்து தப்பிக்க எண்ணி தான் இப்படிப் பறக்கிறானோ என்று ஆர்த்தி நினைத்தாள். பிறகு அவளும் பேச முற்படவில்லை.

அதே நேரத்தில் பவானி தன் தாய் அறையினுள் நுழைந்தாள். மகளின் அலங்காரத்தைக் கண்ட பஞ்சவர்ணம் கேட்டாள். "எங்கே கிளம்பிட்டே"

"கோயமுத்தூர் போறோம். ஆர்த்திக்கு டிரஸ் எல்லாம் வாங்கணும்னார். அதான்...."

"ஏன் அந்தக் கொலைகாரியை உன் புருஷன் கூட்டிகிட்டு போகலையாக்கும்...."

"அவங்க வரலைன்னுட்டாங்க..... உங்களுக்கு சேலை ஏதாவது வாங்கணுமா?"

"நல்ல காஞ்சிபுரம் பட்டு சேலை பத்து எடு..."

அந்த அறையை விட்டு அதிகம் வெளியே வராத பஞ்சவர்ணத்திடம் விலை உயர்ந்த பட்டுசேலை குறைந்தது நூறாவது இருக்கும். தாய் இன்னும் பத்து பட்டு சேலை கேட்ட போது பவானிக்கு தர்மசங்கடமாக இருந்தது. செலவு செய்வதற்கு சந்திரசேகர் தயங்க மாட்டார் என்றாலும் பஞ்சவர்ணத்திற்கு இன்னும் பத்து சேலை என்றால் இகழ்ச்சியாகப் பார்க்காமல் இருக்க மாட்டார். அவர் அப்படி முன்பு பல முறை பார்த்திருக்கிறார். ஆரம்பத்தில் எல்லாம் பவானி கூனிக் குறுகிப் போவாள். இப்போதெல்லாம் அவர் முகத்தை இது போன்ற சந்தர்ப்பங்களில் பார்க்காமல் இருக்க பவானி பழகி விட்டாள்.

"அந்தப் பொண்ணு நம்ம மூர்த்தி பத்தி என்னடி நினைக்கிறா?"

"நல்ல அபிப்பிராயம் இருக்கற மாதிரி தான் தோணுது"

"நல்ல அபிப்பிராயம் பத்தாதுடி. அதுக்கும் மேல வரணும். அது அவங்க கல்யாணத்துல முடியணும். அவனைப் பத்தி நல்ல விதமா அவள் காதுல போட்டுகிட்டு இரு"

பவானி தலையசைத்தாள். காதில் விழும் விஷயங்களை வைத்துக் காதல் வருமென்று பஞ்சவர்ணம் நிஜமாகவே நினைக்கிறாளா?

மகள் இப்படி சந்தேகத்தோடு தலையசைத்தது பஞ்சவர்ணத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தியது. ஆனால் மகளைத் திட்ட அவள் முற்படவில்லை. இனி மாற்ற முடியாத மனிதர்களிடம் கோபித்து என்ன பயன்?

எரிச்சலை அப்படியே அடக்கிக் கொண்டு பஞ்சவர்ணம் கேட்டாள். "ஆகாஷ், ஆர்த்தி இப்ப எப்படிப் பழகறாங்க"

"அவங்க ரெண்டு பேரும் இப்ப பேசிக்கறதில்லை"

"நல்லது.... அவன் அவங்கம்மா கிட்ட ஏதாவது கேட்டானாடி"

"தெரியலை. ஆனா மூர்த்தி என் கிட்ட வந்து கேட்டான்..."

பஞ்சவர்ணம் பதிலுக்கு எதுவும் சொல்லாமல் மகளைக் கூர்ந்து பார்த்தாள்.

பவானி தொடர்ந்து சொன்னாள். "அவங்கப்பா அம்மாவுக்கும் சிவகாமியக்காவுக்கும் என்ன சம்பந்தம்னு கேட்டான்....."

பஞ்சவர்ணம் ஒன்றும் சொல்லாமல் இறுகிய முகத்துடன் மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பவானி தொடர்ந்தாள். "அவங்கப்பா, அம்மா பிணம் கூட கிடைக்கலைன்னு ஏன் தெரிவிக்கலை. சிவகாமியக்கா கொன்னுருக்கலாம்னு நீங்க நினைக்க காரணம் என்னன்னு கேட்டான். நான் ஒண்ணும் சொல்லலை.... நீங்க உங்க சந்தேகத்தை என் கிட்ட கூட இது வரைக்கும் சொன்னதில்லை. ஏம்மா?"

பஞ்சவர்ணம் மகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியத்தை அப்போதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தன் பார்வையை மகன் மருமகள் போட்டோவின் மீது திருப்பினாள். பவானியும் அண்ணன் போட்டோவைப் பார்த்தாள். அவள் கண்களில் லேசாக நீர் திரண்டது. அவள் அண்ணன் என்றுமே அவளிடம் மிகவும் பாசமாக இருந்தான்..... மறுபடி தாயிடம் பவானி கேட்டாள். "நீங்க எதனால சந்தேகப்படறீங்க?"

பஞ்சவர்ணம் மகளைப் பார்க்காமல் பதில் சொன்னாள். "உன்னை மாதிரி ஆள்கள் எவ்வளவு கம்மியா தெரிஞ்சுக்கறீங்களோ அவ்வளவு தூரம் நிம்மதியா இருப்பீங்க. இந்தப் பேச்சை இத்தோட விட்டுடு....."

சில நிமிடங்கள் தாயை வெறித்துப் பார்த்து நின்ற பவானி பின் மௌனமாக வெளியேறினாள். மகள் போன பிறகு பஞ்சவர்ணம் பெருமூச்சு விட்டாள். மகளிடம் தன் உணர்வுகளை அவள் காண்பிக்கா விட்டாலும் அவள் மனதில் பல கேள்விகள் பிரம்மாண்டமாக எழுந்து அவள் மூளைக்கு வேலை கொடுத்தன. வருடக் கணக்கில் எழும் அந்தக் கேள்விகளுக்கு பல சாத்தியக் கூறுகள் பதில்களாக எழுந்து நின்றன என்றாலும் எது சரி எது தவறு என்று கண்டு பிடிக்க அவளால் இது வரை முடியவில்லை.

இத்தனைக்கும் பதிலை சிவகாமி தான் அறிவாள் என்பதையும், எல்லாவற்றிற்கும் சூத்திரதாரியான அவள் ஒன்றும் தெரியாதது போல நடித்துக் கொண்டு இருக்கிறாள் என்பதையும் நினைக்கையில் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவளுக்குத் தெரிந்த முக்கியமான ஒன்று தனக்குத் தெரியவில்லை என்பதை பஞ்சவர்ணத்தால் ஜீரணிக்கவே முடியவில்லை.

விபத்து நடந்த அந்த இரவில் வேறு என்ன எல்லாம் நடந்திருக்கக் கூடும் என்பதை சலிக்காமல் மறுபடியும் பஞ்சவர்ணம் யோசிக்க ஆரம்பித்தாள். முதலில் சிவகாமி அவசர அவசரமாக அன்று இந்தியா திரும்பக் காரணம் என்னவாக இருக்கும் என்ற கேள்வியில் இருந்து ஆரம்பித்தாள். ஏனென்றால் சிவகாமி குறைந்தது நான்கு மாதமாவது வெளிநாட்டில் இருக்கும் திட்டத்தில் தான் போனாள் என்ற தகவல் பஞ்சவர்ணத்திற்கு முன்பே தெரிந்திருந்தது. அப்படி இருக்கையில் அவள் திடுதிப்பென்று இந்தியா வரக் காரணம் என்ன? வந்தவுடன் இங்கு நடந்ததென்ன?.....

# 43

The best inheritance a person can give to his children is a few minutes of his time each day.

– O.A.Battista

கோயமுத்தூருக்கு காரில் போய்க் கொண்டிருந்த போது சந்திரசேகர் தன் மகளிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தார். பவானி அவரை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவர் இப்படி விடாமல் தொடர்ந்து பேசுவது அபூர்வம். தன் பெரியக்காவிடம் அவர் அப்படி பேசுவார் என்ற போதிலும் என்றுமே அவள் முன்னால் அப்படி பேசியதாய் அவளுக்கு நினைவில்லை. சங்கரன் இருந்தால் கூட சந்திரசேகர் தமக்கையிடம் அதிக நேரம் பேச மாட்டார். மற்றவர்கள் அருகில் இல்லாத போது மட்டுமே அக்காவும் தம்பியும் நிறைய நேரம் பேசுவதை அவள் பார்த்திருக்கிறாள்.

அதனால் இன்று அவர் மகளிடம் பேசுவதை பவானி சுவாரசியத்துடன் பார்த்தாள். அவளுக்குத் தன் தந்தை நினைவு வந்தது. அவரும் அப்படித்தான் எல்லா விஷயங்களைப் பற்றியும் அவளிடம் மணிக்கணக்கில் பேசுவார். அவர் அவள் மீது உயிரையே வைத்திருந்தார். பவானியும் அப்படித்தான்.

தாயிடம் இல்லாத பாசமும் நெருக்கமும் தந்தையிடம் இருந்தது. சில நிமிடங்கள் அவள் பழைய நினைவுகளில் ஆழ்ந்தாள்.

அவள் திரும்பவும் நிகழ்காலத்துக்கு வந்த போது அந்தக் கால ஊட்டியைப் பற்றியும், அந்தக் காலத்தில் ஊட்டியில் தானும் டேவிடும் அடித்த லூட்டியைப் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தார்.

தந்தையின் இளமைக்காலத்தை ரசித்துக் கேட்ட ஆர்த்தி புன்னகையுடன் சொன்னாள். "அங்கிளும் இதை எல்லாம் இன்னைக்கு சொல்லிகிட்டு இருந்தார்".

சந்திரசேகரும் புன்னகைத்தபடி கேட்டார். "வேற என்ன சொன்னான்?"

"பெரியத்தை தயவுல தான் டாக்டராக முடிஞ்சதுன்னு சொன்னார்".

"உண்மை தான்... எங்கப்பா எச்சில் கைல காக்கா ஓட்டாத ரகம். அவர் கிட்ட நான் என் ஃப்ரண்டுக்குன்னு உதவி கேட்டிருந்தா மனுஷன் என்னை குழி தோண்டி புதைச்சுருப்பார். அக்கா கேட்டதால வேற வழியில்லாமல் வேண்டா வெறுப்பா உதவி செஞ்சார். காரணம் அக்கா மேல அவர் உயிரையே வச்சிருந்தார்....."

சிவகாமி மீது ஆர்த்திக்கு ஒரு கணம் பொறாமையாக இருந்தது. தந்தை, தம்பி, மகன் என்று எத்தனை பேர் அவள் மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள்?

சந்திரசேகர் தொடர்ந்தார். "....நானும் சின்னக்காவும் எப்பவுமே அவரை எதிர்த்து பேசினதோ, எதிர்த்து நின்னதோ இல்லை. ஆனா அக்கா அடிக்கடி எதிர்த்துப் பேசுவா. சண்டை போடுவா. ஆனாலும் அவ தான் கடைசி வரை அவரோட செல்லமாய் இருந்தாள்...."

அவர் சொன்ன விதம், அது ஏன் என்பதை அவரால் இன்னும் கண்டு பிடிக்க முடியாமல் வியப்பது போல இருந்தது. சிவகாமி தன் தந்தையிடம் சண்டை போடுவாள் எதிர்த்துப் பேசுவாள் என்ற தகவல் ஆர்த்திக்கு ஆச்சரியத்தைத் தந்தது. தந்தையிடம் நேரடியாக கேட்டாள். "அத்தை எதுக்கு தாத்தா கிட்ட சண்டை போடுவாங்கப்பா?"

சந்திரசேகர் அந்தக் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்லவில்லை. மகளிடம் தேவையில்லாமல் எதையோ சொல்லி இந்தக் கேள்வியை வரவழைத்து விட்டோம் என்று யோசித்ததாக ஆர்த்திக்குத் தோன்றியது. பவானியும் கணவன் என்ன சொல்லப் போகிறார் என்று ஆர்வமாகப் பார்த்தாள்.

சந்திரசேகர் கடைசியில் பொதுவாகச் சொன்னார். "அவர் நிறைய விஷயங்கள்ல அக்காவுக்கு எதிர்மாறாய் இருப்பார். அதனால தான்....." அதற்கு மேல் அவர் எதையும் விவரிக்க முற்படவில்லை. அதற்குச் சரியாக அவர்கள் கார் பெரிய ஜவுளிக்கடை முன் நின்றது.

கடை முழுவதும் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டு இருந்தது. சந்திரசேகரைப் பார்த்தவுடன் கடை முதலாளி எழுந்து நின்று ராஜமரியாதையுடன் வரவேற்றார். அந்தப் பெரிய கடையைப் பார்த்து ஆர்த்தி மலைத்துப் போனாள். அவளுக்காக பவானி ஆடைகள் தேர்ந்தெடுத்துக் கொண்டே போன போது மலைப்பு அதிகரித்தது. "போதும் சித்தி" என்று அவள் சொன்னதை பவானி பொருட்படுத்தவில்லை. ஆர்த்திக்கு எந்த நிறங்கள் பொருந்தும், எந்த மாடல்கள் பொருந்தும் என்று யோசித்து தானே நல்ல ரசனையுடன் ஆடைகளை தேர்ந்தெடுத்தாள். ஓரிரு ஆடைகளில் ஒட்டியிருந்த விலையை ஆர்த்தி

பிரித்துப் பார்த்த போது சந்திரசேகர் மெல்ல மகளின் காதைக் கடித்தார். "விலையெல்லாம் பார்க்காதே. இந்தக் கடையையே வாங்கினாலும் நம்ம பட்ஜெட்டுல துண்டு விழாது""

அவளுக்கு துணிமணிகள் தேர்ந்தெடுத்த பின் தனக்கும் சிலதை பவானி வாங்கிக் கொண்டாள். கடைசியில் தன் தாயிற்காக பட்டு சேலைகள் தேர்ந்தெடுத்த போது சந்திரசேகர் அவள் தேர்ந்தெடுப்பைப் பார்த்து சந்தேகப்பட்டு கேட்டார். "இதெல்லாம் யாருக்கு?"

பவானி அவர் முகத்தைப் பார்க்காமல் சொன்னாள். "எங்கம்மாவுக்கு"

சந்திரசேகர் முகத்தில் இகழ்ச்சி தெளிவாகத் தெரிந்ததை ஆர்த்தி கவனித்தாள். 'நல்ல வேளையாக சித்தி கவனிக்கவில்லை' என்று நினைத்துக் கொண்டாள்.

பவானி பத்து பட்டு சேலைகளை வாங்கி விட்டு ஆர்த்தியிடம் சொன்னாள். "உங்க பாட்டி தாத்தாவுக்கும் டிரஸ் எடுக்க பெரியக்கா சொல்லி இருக்காங்க".

பஞ்சவர்ணத்திற்கு பட்டு சேலை எடுத்த போது இகழ்ச்சியாக தந்தை பார்த்ததை கவனித்திருந்த ஆர்த்திக்கு இன்னொரு இகழ்ச்சியான பார்வையை சந்திக்க விருப்பமிருக்கவில்லை. "அவங்களுக்கு வேண்டாம் சித்தி"

சந்திரசேகர் மகளிடம் சொன்னார். "பரவாயில்லை எடு"

சிவகாமி சொல்லியிருக்கிறாள் என்பதற்காக அப்படி சொல்கிறாரா, இல்லை பஞ்சவர்ணத்தை விட நீலகண்டன் பார்வதி தம்பதியர் மேல் அவருக்கு சிறிதாவது நல்ல அபிப்பிராயம் இருக்கிறதா என்பதை ஆர்த்தியால் ஊகிக்க முடியவில்லை. சிவகாமி தன் தாத்தா பாட்டி மீது காட்டிய அக்கறை அவளை நெகிழ வைத்தது. பவானி மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் அவர்களுக்கும் தானே தேர்ந்தெடுத்தாள்.

கடையை விட்டு வெளியே வந்த போது ஆர்த்திக்கு திடீரென்று தன்னை யாரோ கண்காணிக்கிறார்கள் என்ற உணர்வு ஏற்பட்டது. சுற்றும் முற்றும் பார்த்தாள். ஆட்கள் நிறைய தெருவில் இருந்தாலும் ஓரிருவர் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தாலும் தன்னுள் எழுந்த உணர்வுக்கு அவர்கள் காரணம் இல்லை என்று உறுதியாகத் தோன்றியது. பின் யார் எங்கிருந்து தன்னை கண்காணிக்கிறார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அவளுள் அழுத்தமாகத் தோன்றிய அந்த உணர்வை அவளால் ஒதுக்கி விட முடியவில்லை. சிறு வயது முதல் பல சந்தர்ப்பங்களில் இதே போல் தோன்றியிருக்கிறது. பார்த்த போதெல்லாம் அங்கே கூட்டத்தையும், நெரிசலையும் தான் கண்டிருக்கிறாள். அதில் யார் என்று சுட்டிக் காட்ட அவளால் முடிந்ததில்லை.

இன்று நிறைய ஆட்கள் தெருக்களில் நடந்து கொண்டிருந்தார்கள். சிலர் செல் ஃபோன்களில் பேசியபடி நின்றிருந்தார்கள். இரண்டு இளைஞர்கள் அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இல்லை என்று மறுபடியும் மனம் சொன்னது. தங்கள் காரை நோக்கி நடக்கையில் பக்கத்தில் நின்று கொண்டிருந்த காரில் இருந்து தான் யாரோ பார்ப்பதாக திடீர் என்று தோன்ற ஆரம்பித்தது. காரின் கறுப்புக் கண்ணாடி ஏற்றப்பட்டிருந்தது. உள்ளே ஆட்கள் இருக்கிறார்களா, இல்லையா என்று வெளியே இருந்து சொல்ல முடியாவிட்டாலும் அவள் உள்மனதில் உள்ளே இருந்து தான் யாரோ தன்னை கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணம் வலுப்பட ஆரம்பித்தது.

மகள் திடீரென்று சிலையாக நிற்பதைக் கண்ட சந்திரசேகர் "என்ன ஆர்த்தி?" என்று கேட்டார்.

சொன்னால் தன்னை தந்தை பைத்தியக்காரி என்று நினைப்பார் என்று ஆர்த்திக்குத் தோன்றியது. ஒன்றுமில்லை என்று சொல்லி அவர்களுடன் தங்கள் காரில் ஏறி அமர்ந்தாள். ஆனாலும் அந்த உணர்வை மனதில் இருந்து அவளால் அகற்ற முடியவில்லை. யாரோ அவளை அங்கிருந்து தான் கண்காணிக்கிறார்கள். யார்? ஏன்? அவர்களுடைய கார் கிளம்பியது. அவர்கள் கார் போய் சரியாக ஒரு நிமிடம் கழித்து அந்தக் காரும் அங்கிருந்து கிளம்பியது.

# 44

And thus he has stumbled upon the first of his natural enemies: fear! A terrible enemy--treacherous, and difficult to overcome. It remains concealed at every turn of the way, prowling, waiting. - Carlos Castenada in "The Teachings of Don Juan"

சிவன் கோயிலில் வலம் வந்து கொண்டிருந்த அமிர்தத்தின் உதடுகள் ஸ்தோத்திரங்களை சொல்லிக் கொண்டிருந்தாலும் மனம் வேறு பாதையில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தது. மகனின் எதிர்காலம் பற்றி மனம் கவலைப்பட்டது.

ஆர்த்தி வருவதற்கு முன்னால் தன் மகன் அவள் மனதில் புக ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது என்று ஒரு நம்பிக்கை பிறந்திருந்தது. ஆகாஷ் தான் அவள் மனதில் இருக்கிறான் என்றறிந்த போது அந்த நம்பிக்கை செத்துப் போனது. இப்போது ஆகாஷுக்கும் ஆர்த்திக்கும் இடையே விரிசல் பிறந்துள்ளதால் மறுபடியும் மனதின் ஒரு மூலையில் நம்பிக்கை உருவாகி இருக்கிறது. சிவன் மனம் வைத்தால் ஒரு நல்ல விடியல் அவள் மகன் பார்த்திபனுக்கும் வரும்.

ஆனால் சில நாட்களாக பார்த்திபனுக்கு நிறைய வேலை இருப்பதால் அவன் வீடு திரும்பவே நேரமாகி விடுகிறது. ஆர்த்தியுடன் பேசக் கூட நேரமில்லை. சொந்த மாமன் கம்பெனியில் தான் வேலை என்றாலும் சிவகாமி வேலை விஷயத்தில் மிகவும் கறாராக இருப்பாள். பெற்ற மகனுக்குக் கூட சலுகை காட்டாதவள் என்பதால் இவன் விஷயத்தில் அப்படி இருப்பதை குறை சொல்ல அமிர்தத்தால் முடியவில்லை.

சுவாமி சன்னிதிக்கு முன் வந்த போது மனதை பலவந்தமாக பக்திக்குக் கொண்டு வந்தாள். பிறகு கண்களை மூடிக் கொண்டு வேண்டினாள். "கடவுளே வாழ்க்கையில் இதுவரை எப்பவுமே நீ என்னை ஜெயிக்க விடலை. இனிமேயாவது ஒரு நல்ல வழி காட்டேன்..... அக்கா எப்பவுமே பெரிய பக்தி காமிச்சதில்லை. ஆனா நீ அவளை எப்பவுமே சிகரத்துல தான் வச்சுருக்கிறாய். அவள் அதிர்ஷ்டத்துல எனக்கு பொறாமை இல்லை. ஆனா உன்னை எப்பவுமே பூஜிக்கிற என் கிட்ட நீ ஏன் பாராமுகமாய் இருக்கிறாய் என்கிறது தான் என் வருத்தம். அந்தப் பொண்ணு ஆர்த்திக்கும் பார்த்திபனுக்கும் கல்யாணம் ஆக கொஞ்சம் கருணை காமியேன்.... ...."

கடவுளிடம் பேசி முடித்து கண் திறந்த போது எதிர் வரிசையில் நின்று கொண்டிருந்த ஒருத்தி அவசரமாக அமிர்தத்திடம் இருந்து தன்னை மறைத்துக் கொள்ள முயல்வதைப் பார்க்க நேர்ந்தது. வேறொரு பெண் பின்னால் அவள் மறைந்து கொள்வதைப் பார்த்த போது அமிர்தம் சந்தேகத்தோடு எட்டிப் பார்த்தாள். அந்தப் பெண் அர்ச்சகரிடம் விபூதி கூட வாங்காமல் அவசர அவசரமாக அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக நகர்ந்தாள்.

போகின்ற போது ஓரளவு நன்றாகவே அமிர்தத்தால் அவளை ஒரு கணம் பார்க்க முடிந்தது. "நன்றாக பரிச்சயமான முகம்..... ஆனால் பார்த்து பல காலமாகி விட்ட முகம்....யாரவள்? ஏன் என்னை பார்த்த பின் ஓடி ஒளிகிறாள்?..... அமிர்தம் தன் மூளையை கசக்கிக் கொண்டு நின்றாள். கடவுளையும், அதுவரை உருக்கமாக வேண்டியதையும் ஓரிரு நிமிடங்கள் அமிர்தம் மறந்தாள்.

ஏன் என்ற கேள்வி பூதாகாரமாக எழும் போது அதன் விடையை கண்டுபிடிக்காவிட்டால் மண்டை வெடித்து விடுவது போல உணரும் மனிதர்களில் அமிர்தமும் ஒருத்தி. அவள் மூளை பல தகவல்களை அலசி ஆராய்ந்தது. கடைசியில் மின்னலாக விடை வந்தது. பழைய வேலைக்காரி விஜயா. ஆனந்தி இறந்த போது காணாமல் போய் அவளும் அந்த விபத்தில் இறந்திருக்க வேண்டும் என்று பலராலும் நம்பப்பட்ட அதே விஜயா.

அப்படியானால் இவள் சாகவில்லையா? சரி பிழைத்து விட்டுப் போகட்டும். என்னைப் பார்த்து ஏன் ஓடி ஒளிகிறாள்?.....

★★★★★★★★★

கார் ஊட்டியை நோக்கி வந்து கொண்டிருந்த போது சந்திரசேகரும் பவானியும் பேசியதற்கு ஆர்த்தி எந்திரத்தனமாகப் பதில் அளித்தாள். அவள் மனமெல்லாம் அந்த ஜவுளிக்கடை முன் நின்றிருந்த கார் மீதும் அதன் உள்ளே உட்கார்ந்து கொண்டு தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்ததாய் அவள் சந்தேகப்பட்ட நபர் மீதும் இருந்தது.

'யாரது? சிறுவயதில் இருந்து என்னைக் கவனிப்பதாய் எனக்கு அடிக்கடி தோன்றிய அதே நபரா? இல்லை வேறு நபரா? அதே நபராக இருந்தால் ஏன் இத்தனை காலமாய் என்னைக் கண்காணிக்க வேண்டும்? பாண்டிச்சேரியில் ஆகாஷுடன் கேண்டீனில் இருக்கும் போது ஒரு பெண்மணி என்னைப் பார்த்துக் கொண்டிருந்ததை உணர்ந்த போது அது சிவகாமி அத்தை அனுப்பிய ஆளாகக் கூட இருக்கலாம்னு சந்தேகப்பட்டேனே. இதுவும் அதே நபரா? இப்போது அத்தை அனுப்பி இருக்க வாய்ப்பே இல்லையே. நான் தான் அவர்களுடனேயே வசிக்க இங்கு வந்து விட்டேனே. இப்போது கண்காணிக்க என்ன இருக்கிறது? அதுவும் அப்பாவுடன் இருக்கையில் என்னைக் கண்காணிக்க அவசியம் என்ன இருக்கிறது?'

'இல்லை, அது வேறு இது வேறு என்றால் பலர் என்னைக் கண்காணிக்க என்ன காரணம் இருக்கிறது?'

ஆர்த்திக்குத் தலை வெடித்து விடும் போல இருந்தது. பின்னால் அந்தக் கார் தொடர்ந்து வருகிறதா என்று பல தடவை திரும்பிப் பார்த்தாள். இல்லை. இதே போல் தான் ஓட்டலுக்கு சென்று மூவரும் சாப்பிட்ட போதும் திரும்பிப் பார்த்தபடி இருந்தாள். அப்போது அந்த கண்காணிக்கப்படுவது போன்ற உணர்ச்சி இருக்கவில்லை என்றாலும் எச்சரிக்கை உணர்வு பார்க்க வைத்திருந்தது. சந்தேகத்துக்குரியவர்கள் யாரும் ஓட்டலில் தென்படவில்லை. முன்பு தோன்றியது மனப்பிராந்தியாக இருக்குமா? என்று தன்னை கேட்டுக் கொண்டாள். ஆழ் மனதில் இருந்து கொண்டு ஒரு குரல் வந்தது. 'மனப்பிராந்தி இல்லை. அந்தக் காரின் உள்ளே ஆள் இருந்ததும் கண்காணித்ததும் உண்மை'.

"என்ன ஆர்த்தி களைப்பாய் இருக்கா?" சந்திரசேகர் கேட்க ஆமென்று தலையசைத்து அப்படியே உரிமையுடன் அவர் தோளில் அவள் தலை வைத்து சாய்ந்து கொண்டாள். அந்தச் சின்ன செய்கை சந்திரசேகர் மனதில் பெரிய சந்தோஷத்தை ஏற்படுத்தியது. 'என் மகள்!....'

பவானிக்கும் அந்தப் பயணத்தில் ஆர்த்தியுடன் சற்று அதிக நெருக்கமும், பாசமும் வந்திருந்தது. இந்த ஒரு கணத்தில் அவள், அவள் கணவன், அவர்கள் மகள் என்ற ஒரு குடும்பம் யாருடைய குறுக்கீடும் இல்லாமல் இருப்பதாய் எண்ணம் தோன்ற வாத்சல்யத்துடன் ஆர்த்தியின் முடியை லேசாகக் கோதி விட்டாள். குழந்தை பெறும் பாக்கியம் தனக்கு இல்லாவிட்டாலும் இப்போது தான் தாயின் ஸ்தானத்தில் இருக்கிறோம் என்ற நினைப்பே பெரிய மனநிறைவைத் தந்தது.

பவானியின் அந்த அன்பான செய்கையால் சந்திரசேகர் மனம் இளகியது. அவளுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டது போல நேசத்துடன் அவர் அவளைப் பார்த்துப் புன்னகைத்தார். இப்படி அவர் அவளைப் பார்த்துப் புன்னகைத்து எத்தனையோ வருடங்கள் ஆகியிருந்தன. பவானியின் கண்களில் லேசாக நீர் நிரம்பியது. பதிலுக்கு லேசாகப் புன்னகைத்தவள் மனதிற்குள் ஆர்த்திக்கு நன்றி சொன்னாள்.

ஆர்த்தி வருகிறாள் என்று கேள்விப்பட்ட போது அவள் மனதில் எத்தனையோ பயங்கள் இருந்தன. தாயின் இடத்தில் இருக்கும் ஒருத்தியை அந்தப் பெண்ணால் நேசிக்க முடியும் என்று அவளுக்கு தோன்றி இருக்கவில்லை. ஏற்கெனவே தன்னைப் பெரிதாக மதிக்காத கணவர் அவள் வந்த பின் மேலும் மனதளவில் விலகக் கூடும் என்று பயந்து கொண்டிருந்தாள். ஆனால் ஆர்த்தி நல்ல மனதுடன் பழகிய விதத்தில் எண்ணியதற்கெல்லாம் எதிர்மாறாக பந்தம் பலப்படுகிறது....

ஆர்த்திக்கும் மனம் அமைதியடைய ஆரம்பித்த போது தந்தை சித்தியுடன் இப்படி சேர்ந்திருப்பது சந்தோஷத்தைத் தந்தது.

அவர்கள் வீட்டை அடைந்த போது நள்ளிரவாகி இருந்ததால் வீட்டில் எல்லோரும் தூங்கி இருந்தார்கள். இருவரிடமும் குட்நைட் சொல்லி விட்டு ஆர்த்தி தனதறைக்குப் போனாள்.

பயணத்தின் களைப்பால் உறக்கமும் சீக்கிரமே வந்தது. சிறிது நேரத்தில் அந்தக் கனவும் வந்தது.

வெளியே இடி மின்னலுடன் பேய் மழை பெய்து கொண்டு இருக்கிறது....அழைப்பு மணியை யாரோ விடாமல் அழுத்திக் கொண்டே இருந்தார்கள்...அந்த மழை சத்தத்துடன் சேர்ந்து கேட்கும் போது அந்த அழைப்பு மணியின் தொடர்ச்சியான சத்தம் நாராசமாகக் கேட்கிறது..... கடைசியில் ஈனசுரத்தில் யாரோ ஆர்த்தி என்றழைத்த போது ஆர்த்தி அலறினாள்.

இந்த முறை அலறல் இரவின் அமைதியை விரட்டி பங்களா முழுவதும் எதிரொலித்தது.

# 45

True eloquence consists of saying all that should be, not all that could be, said.
– La Rochefoucauld

ஆர்த்தியின் அலறல் கேட்டு, ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அந்தப் பங்களாவில் இருந்த அத்தனை பேரும் விழித்தார்கள். முதலில் அவள் அறைக்கு ஓடி வந்தது ஆகாஷ் தான். பக்கத்து அறையில் இருந்து ஓடி வந்தவன் கண்ட காட்சி அவன் இரத்தத்தை உறைய வைத்தது. முகமெல்லாம் வெளுத்து, உடலெல்லாம் வியர்த்து கூனிக் குறுகி காலை மடித்து கெட்டியாக பிடித்துக் கொண்டு ஆர்த்தி நடுங்கியபடி கட்டிலின் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தான்.

ஓடிப் போய் அவளை அணைத்து தைரியப்படுத்த ஓரடி வைத்தவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றான். மனம் இரண்டாகி நின்றது. ஒன்று அவளிடம் போகச் சொன்னது. இன்னொன்று 'அவள் அம்மா மீது கொலைக் குற்றம் சாட்டியவள்' என்றது. ஆர்த்தியின் அந்தப் பரிதாப நிலையில் கூட அவனுக்கு அவள் மேல் இருந்த கோபம் குறையவில்லை.

அதற்குள் பலர் ஓடிவரும் காலடிச் சத்தம் கேட்டது. மூர்த்தி, சந்திரசேகர், பவானி, பஞ்சவர்ணம், நீலகண்டன், பார்வதி, அமிர்தம், பார்த்திபன், அர்ஜுன், சங்கரன், வேலைக்காரர்கள் என வரிசையாக ஓடி உள்ளே நுழைந்தனர். ஆர்த்தியைக் கண்ட அத்தனை பேரும் திகைத்துப் போனார்கள். பார்வதி தான் ஓடிப் போய் பேத்தியை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்தினாள். வழக்கத்தை விட அதிகமாய் ஆர்த்தி பாதிக்கப்பட்டிருந்ததாக பார்வதிக்குத் தோன்றியது. ஆர்த்தி அவ்வளவு சீக்கிரம் சகஜ நிலைக்கு வரவில்லை.

பவானிக்கு அந்த சூழ்நிலையிலும், தாயின் வரவு ஆச்சரியப்பட வைத்தது. பஞ்சவர்ணம் மற்றவர்கள் அறைக்குள் நுழைந்து பல வருடங்களாகிறது. பவானியின் அறைக்குக் கூட வருவதில்லை. என்ன வேண்டுமென்றாலும் மூர்த்தியிடம் சொல்லி அனுப்புவாளே ஒழிய அவளாக நேரில் வருவதில்லை என்ற கொள்கையுடன் இருந்தாள். அப்படிப்பட்டவளே வந்திருக்கிறாள் என்பது ஆச்சரியப்படுத்தியது என்றால் சிவகாமி வராதது இன்னும் அதிக ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

சந்திரசேகர் மகளைப் பார்த்து அதிர்ந்து நின்றவர் அதிர்ச்சியில் இருந்து சற்று மீண்டவுடன் சுற்றிலும் பார்த்து விட்டு "அக்காவைக் கூப்புடுங்க" என்றார்.

அர்ஜுன் கிளம்பத் தயாரான போது சிவகாமி உள்ளே நுழைந்தாள். மற்றவர்களின் திகைப்போ, படபடப்போ அவளிடம் காணப்படாவிட்டாலும் அவள் கூட ஆர்த்தியின் இந்தக் கோலத்தை எதிர்பார்க்கவில்லை என்று அவள் முகபாவனை சொன்னது. அடுத்த கணம் அங்கு கூடி நின்ற நான்கு வேலைக்காரர்களைப் பார்த்தாள். அவள் பார்வையிலேயே அவர்கள் அந்த இடத்தைக் காலி செய்தார்கள்.

சிவகாமியைப் பார்த்தவுடன் பார்வதி துக்கத்துடன் சொன்னாள். "இப்படித்தான் இந்தக் கனவு வந்து இவளைப் பாடாய்ப் படுத்துது...."

அடுத்த வார்த்தை பேச சிவகாமி அவளை அனுமதிக்கவில்லை. சைகையால் பார்வதியை மௌனமாக்கினாள். ஆர்த்தியின் அருகில் வந்து "ஆர்த்தி" என்று சத்தமாக அழைத்தாள். அவள் குரலில் இருந்த ஏதோ ஒன்று ஆர்த்தியை மெள்ள சகஜ நிலைக்கு அழைத்து வந்தது.

அப்போது தான் தன் அறையில் எல்லோரும் நின்று கொண்டு இருப்பதை ஆர்த்தி கவனித்தாள். கனவின் பயம் போய் நனவின் அவமான உணர்ச்சி அவளை ஆட்கொண்டது. எல்லோரையும், தூரத்தில் தள்ளி நின்றிருந்த ஆகாஷையும் பார்த்த போது அவமான உணர்ச்சியோடு, துக்கமும், இயலாமையும் சேர்ந்து அவளை விம்மி அழ வைத்தது. சென்ற முறை அவன் அருகில் அணைத்தபடி சமாதானப்படுத்தி அமர்ந்திருந்தான். இப்போதோ அந்நியனாய் தூரத்தில் நிற்கிறான்.....

"முதல்ல அழறதை நிறுத்து ஆர்த்தி" சிவகாமியின் குரல் கண்டிப்புடன் ஒலித்தது. சந்திரசேகருக்கு மகளிடம் அக்கா கொஞ்சம் இதமாகப் பேசினால் தேவலை என்று தோன்றினாலும் அதைத் தெரிவிக்க தைரியம் வரவில்லை.

"கனவு தான் முடிஞ்சுடுச்சே. அப்புறம் என்ன?"

ஆர்த்தி கஷ்டப்பட்டு தன் அழுகையை நிறுத்தினாள். சிவகாமி மற்றவர்களைப் பார்த்து சொன்னாள். "ஏதோ கனவுல பயந்திருக்கிறா. வேறொன்னுமில்லை. நீங்கெல்லாம் போய்த் தூங்குங்க"

"கனவா! நான் என்னவோன்னு பயந்துட்டேன்..."என்று சொல்லிய சங்கரன் நிம்மதியடைந்தவராக அங்கிருந்து முதலில் கிளம்பினார். மற்றவர்கள் அவ்வளவு சீக்கிரமாக அந்த விளக்கத்தில் திருப்தி அடையாவிட்டாலும் சிவகாமி சொன்னதற்குப் பிறகு அங்கு நிற்க முடியாததால் கிளம்பினார்கள். அந்த வகையில் அமிர்தம், பவானி, பஞ்சவர்ணம், மூர்த்தி, பார்த்திபன், ஆகாஷ் ஆகியோர் இருந்தனர்.

பஞ்சவர்ணம் போகும் போது மனம் புழுங்கினாள். சிவகாமி இடத்தில் தான் இருந்திருந்து இப்படி எல்லோரும் தான் சொன்னபடி கேட்டு நடக்கும் நிலை இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று ஒரு கணம் மனம் எண்ணிப் பார்த்து அதற்கு நேர்மாறாக அவள் சொல்லி தான் கேட்க வேண்டியதாகி விட்டதே என்று நினைத்த போது மனமெல்லாம் கசந்தது.

'அந்தக் கிழவி ஏதோ சொல்ல வந்தாள். இந்தக் கிராதகி தான் சொல்ல விடாமல் தடுத்துட்டாள். இவள் கண்ணுல படாமல் இருக்கணும்னு தான் நான் இத்தனை நாள் என் ரூமை விட்டு அதிகம் வெளிய வராம இருந்தேன். இப்ப வந்ததுக்கு எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்...'

போகும் போது மூர்த்தியைப் பார்த்து லேசாகத் தலையசைத்து விட்டுப் போனாள். மூர்த்தியும் தலையாட்டியபடி தன் அறைக்குப் போனான்.

நகராமல் நின்ற நீலகண்டனைப் பார்த்து சிவகாமி சொன்னாள். "நீங்க போய்த் தூங்குங்க மாமா. அத்தை இப்ப வந்துடுவாங்க..."

நீலகண்டன் பேத்தியை வேதனையுடன் பார்த்து விட்டு அங்கிருந்து நகர்ந்தார். 'அடுத்தவர் வீட்டில் இருக்கும் போது அவர்கள் சொன்னபடி கேட்டுத்தானே ஆக வேண்டும்'.

அர்ஜுனைப் பார்த்து சிவகாமி தலையசைத்தாள். அதில் வேறு ஏதோ ஒரு அர்த்தமோ, கட்டளையோ இருந்ததாக ஆர்த்திக்குத் தோன்றியது. அவன் அங்கிருந்து வெளியேறினான். வெளியேறியவன் உடனடியாகப் படியிறங்காமல் நேராக மூர்த்தியின் அறையை நோக்கிப் போனான். மூர்த்தி தூரத்தில் இருந்தே அவன் வருவதைப் பார்த்து உள்ளே போய் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டான். அமைதியாக அவன் அறையை நெருங்கிய அர்ஜுன் அவன் கதவை வெளியே இருந்து தாளிட்டு விட்டு அதே அமைதியுடன் அங்கிருந்து நகர்ந்தான்.

உள்ளே இருந்த மூர்த்திக்கு கோபத்தில் என்ன செய்வதென்று தெரியவில்லை. கை கால்கள் எல்லாம் லேசாக நடுங்கின. கதவைத் தட்டி யாரையாவது அழைத்து தாளை நீக்கச் சொல்லலாம் என்று நினைத்தாலும் அது பலருடைய கவனத்தை ஈர்க்கவே செய்யும் என்ற எண்ணத்தால் அவமானத்துடன் அமைதியாக இருந்தான். அர்ஜுன் கதவை வெளியே இருந்து தாளிட்டிருக்காவிட்டால் வராந்தாவில் ஆள் நடமாட்டம் இல்லாத போது ஆர்த்தியின் அறை வாசலில் ஒதுங்கி உள்ளே நடப்பதை வேவு பார்த்திருப்பான்.

ஏதோ ஒரு குறும்புக்கார சிறுவனை அறையில் இட்டுப் பூட்டுவது போல தன்னை உள்ளே விட்டு வெளியே அர்ஜுன் தாளிட்டதை நினைக்க நினைக்க மூர்த்திக்கு மனம் கொதித்தது. அதுவும் ஒரு வேலைக்காரன் இப்படி செய்ய, எதிர்த்து தன்னால் செயல்பட முடியவில்லையே என்று எண்ணுகையில் மனக்கொதிப்பு உச்ச நிலையை அடைந்தது.

இப்போது ஆர்த்தியின் அறையில் அவளுடன் சிவகாமி, பார்வதி, சந்திரசேகர் மட்டுமே இருந்தார்கள். சிவகாமி பார்வதியைப் பார்த்தாள்.

பார்வதி தாளாத துக்கத்துடன் சொன்னாள். "இவளுக்கு சின்னதில் இருந்தே ஏதோ ஒரு கனவு அடிக்கடி வருதும்மா. அது முடியறப்ப இப்படித்தான் அலறிட்டு முழிச்சுக்கறா....."

கனவு என்ன என்று பார்வதி விரிவாகச் சொல்லாமல் இருந்தாலும் ஆர்த்தியின் சிறு வயதில் நடந்த ஏதோ ஒரு மழை நாள் இரவு நிகழ்ச்சிகள் தான் அவள் கனவில் திரும்பத் திரும்ப வருகின்றன என்பதை மட்டும் சுருக்கமாகச் சொன்னாள்.

கேட்டு விட்டு சிவகாமி எந்த உணர்ச்சியும் காண்பிக்காமல் உட்கார்ந்திருந்தாள் என்றாலும் கேட்டுக் கொண்டிருந்த சந்திரசேகர் முகம் பேயறைந்தது போல மாறியது.

# 46

If you wish to be happy the first thing you need is not effort or even goodwill or good desires but a clear understanding of how exactly you have been programmed.
– (Anthony De Mello)

அத்தையின் அமைதிக்கு எதிர்மாறாக தந்தையின் முகம் மாறிய விதத்தை ஆர்த்தி கவனித்தாள். ஒரு மழை நாள் நிகழ்ச்சிகள் என்று பொதுவாகப் பாட்டி சொன்னதைக் கேட்டு அது என்ன என்று மேற்கொண்டு ஆர்வமாக சிவகாமி கேட்காதது இயல்பான ஒன்றாக ஆர்த்திக்குத் தோன்றவில்லை.

சிவகாமி பார்வதியிடம் கேட்டாள். "டாக்டர் கிட்ட காமிச்சீங்களா?"

பார்வதி பேத்தியைத் தயக்கத்துடன் பார்த்து விட்டு தலை குனிந்து கொண்டு சொன்னாள். "இவர் கூட்டிகிட்டு போய் காமிச்சார். ஹிப்னாடிசம் செஞ்சு ஆழ்மனசுல பதிஞ்சுருக்கறத வெளியே கொண்டு வந்தாத் தான் குணப்படுத்த முடியும்னும் அது ஒரே சிட்டிங்ல முடியாதுன்னும் பல தடவை முயற்சி செஞ்சு கொஞ்சம் கொஞ்சமா தான் வெளியே கொண்டு வர முடியும்னும் சொன்னார். அப்ப இவ ஸ்கூல்ல படிச்சுட்டு இருந்தாள். இவருக்கு அதுல உடன்பாடு இருக்கல. இவளை அடிக்கடி அந்த டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போனா இவளுக்குப் பைத்தியம்னு பார்க்கிற ஜனங்க நினைச்சிடுவாங்கன்னு பயப்பட்டார்....."

ஆர்த்திக்கு மறுபடியும் கண்களில் நீர் திரண்டது.

சிவகாமி இதமான குரலில் அழுத்தமாக சொன்னாள். "ஆர்த்தி நீ முதல்ல ஒவ்வொண்ணுக்கும் அழறத நிறுத்தணும்..."

ஆர்த்தி பரிதாபமாகத் தலையசைத்தாள்.

"இந்த அழுகை, சுய பச்சாதாபம் எல்லாம் யாருக்கும் எப்பவும் பயன் தந்ததில்லை. நீ அதை நல்லா புரிஞ்சுக்கணும். எதையுமே நாம தைரியமா சந்திக்கறப்ப தான் அதை ஜெயிக்க முடியுது. ஓடி ஒளியறதுனாலயோ வருத்தப்படறதாலயோ ஜெயிக்க முடியாது.... ஒரு பிரச்சினை வருதுன்னு வச்சுக்கோ. எப்பவுமே அந்தப் பிரச்சினையை விட நாம் உயர்ந்தவங்கங்கற கோணத்துல இருந்து தான்

அதைப் பார்க்கணும். பிரச்சினைன்னு ஒண்ணு இருந்தா தீர்வுன்னும் ஒண்ணு இருந்து தான் ஆகணும்கிற நம்பிக்கையோட தான் அதை அணுகணும். அப்பத் தான் எல்லாம் சுமுகமாய் முடியும்...."

"உன் ஆழ்மனசுல சின்ன வயசுல உன்னால தாங்கவோ ஜீரணிக்கவோ முடியாதது ஏதோ பதிஞ்சுருக்கு, அது தான் கனவாய் வந்து உன்னைப் பாதிக்குதுன்னா அது என்னன்னு ஆராய்ச்சி செஞ்சு சரி செய்யறது ஒண்ணும் இந்தக் காலத்துல பெரிய விஷயம் இல்லை. சைக்காலஜி படிச்ச உனக்கே தெரியும். நல்ல டாக்டராய் பார்த்து என்ன செய்யணுமோ அதை செய்யலாம்."

சிவகாமி பார்வதி பக்கம் திரும்பினாள். "சைக்கியாடிரிஸ்டுகள் கிட்ட போறவங்க எல்லாம் பைத்தியம்னு அர்த்தம் இல்ல அத்தை. உடம்புல பிரச்சினைன்னா அது சம்பந்தமான டாக்டரைப் பார்க்கிறோம். மனசு சம்பந்தமான பிரச்சினைன்னா அது சம்பந்தமான டாக்டரைப் பார்க்கிறோம். அவ்வளவு தான்.... ஆனா ஒண்ணு. இந்தக் கனவு சம்பந்தமா யாரு என்ன கேட்டாலும் நீங்க எதுவும் சொல்லப் போகாதீங்க. மாமா கிட்டயும் சொல்லி வைங்க. ஆர்த்தி நீயும் தான்.... வற்புறுத்திக் கேட்டா நான் டாக்டர் கிட்ட போன்ல இது பத்தி பேசி அப்பாயின்மெண்ட் வாங்கியிருக்கேன்னும் அவர் ட்ரீட்மெண்ட் முடியற வரைக்கும் அது பத்தி வெளியே பேச வேண்டாம்னு அட்வைஸ் செஞ்சிருக்கிறார்னும் சொல்லுங்க..."

பார்வதியும் ஆர்த்தியும் தலையாட்டினார்கள். அந்த அறைக்கு வந்த கணம் முதல் எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்து சிவகாமி நிலைமையைக் கையாண்ட விதம் இருவரையும் பிரமிக்க வைத்தது. எதிலும் குழப்பமோ, உணர்ச்சிவசப்படுதலோ இல்லாமல் அவள் தெளிவாக செயல்பட்ட விதத்தை அவர்களால் உள்ளூர பாராட்டாமல் இருக்க முடியவில்லை. வேலைக்காரர்களை பார்வையால் அனுப்பியதில் இருந்து இனி என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிய இந்தக் கணம் வரை எல்லாமே நேர்த்தியாகத் தான் இருந்தன.

"ஆர்த்தி அந்தக் கனவு பத்தின விவரங்கள் எதையும் என் கிட்டயோ, உங்கப்பா கிட்டயோ கூட சொல்ல வேண்டாம். ஒண்ணை மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. நாங்க எல்லாம் உன் கூட பக்கபலமாய் இருக்கோம். பயப்பட இனி ஒண்ணும் இல்லை....."

சிவகாமி எழுந்தாள். "சரி ஆர்த்தி நீ தூங்கு. அத்தை நீங்களும் போய்த் தூங்குங்க."

"அவளுக்கு துணைக்கு யாராவது...." சந்திரசேகர் மெல்ல இழுத்தார்.

சிவகாமி அவரைப் பார்த்த பார்வையில் அனல் பறந்தது. மருமகள் பக்கம் திரும்பினாள். "எப்பவாவது அந்தக் கனவு ஒரே நாள்ல ரெண்டு தடவை வந்திருக்கா ஆர்த்தி"

ஆர்த்தி இல்லையென்று தலையசைத்தாள். சிவகாமி தம்பி பக்கம் திரும்பினாள். "இல்லையாம். அதனால பயப்பட ஒண்ணுமில்லை. போகலாம்."

பார்வதி பேத்தியைப் பார்த்தாள். ஆர்த்தி போகச் சொல்லி தலையசைத்தாள். மூவரும் வெளியே வந்த பிறகு சிவகாமி திரும்பி ஆர்த்தியிடம் சொன்னாள். "கதவைத் தாள் போட்டுக்கோ. அநாவசியமா யார் கதவைத் தட்டினாலும் திறக்காதே. எதுவானாலும் பகல்ல பேசிக்கலாம்னு சொல்லிடு"

வெளியே வந்த போது பார்வதியின் மனதில் இருந்து மிகப் பெரிய பாரம் இறங்கி இருந்தது. இந்த விஷயத்தை எப்படிச் சொல்வது, தானாக வெளிப்பட்டாலும் சிவகாமி எப்படி எடுத்துக் கொள்வாள் என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது தேவையில்லாத ஒன்றாய் போய் விட்டது. சிவகாமி அநாவசிய கேள்விகளால் துளைத்து எடுக்காமல், மற்றவர்களுக்கு அநாவசியமாய் பதில்

சொல்லும் நிர்ப்பந்தங்களையும் விலக்கி விட்டு, சிகிச்சை செய்ய ஏற்பாடும் செய்வதாய் சொல்லியது பெருத்த நிம்மதியை தந்தது.

ஆனால் சிவகாமியும் பார்வதியும் போன பிறகு தனதறைக்குள் நுழைந்த சந்திரசேகர் மனதிலோ இமயமே ஏறி நின்றிருந்தது. தன் மகள் பட்ட அவஸ்தையை எண்ணிய போது இதயத்தில் இரத்தம் கசிந்தது. "என் குழந்தை எத்தனை கஷ்டங்களை சின்ன வயதிலிருந்து அனுபவித்திருக்கிறாள்".

அத்தனைக்கும் காரணம் பல வருடங்களுக்கு முன்னால் ஒரு மழை நாளில் நடந்த நிகழ்ச்சி என்று பார்வதி பொதுவாகச் சுட்டிக் காட்டியதும், அந்தக் கனவைப் பற்றி "என்னிடமோ உங்கப்பாவிடமோ கூட சொல்ல வேண்டாம்" என்று சிவகாமி ஆர்த்தியிடம் சொன்னதும் அவரது காதுகளில் திரும்பத் திரும்ப எதிரொலித்தன.

சந்திரசேகர் அதற்கு மேல் தாங்க முடியாமல் அழ ஆரம்பித்தார். அழுவது பிடிக்காத அக்கா அருகில் இல்லாததால் அவரால் வாய் விட்டு அழ முடிந்தது. அப்படி அவர் அழுது பார்த்திராத பவானி அவரிடம் ஏன் என்று கேட்கவோ சமாதானப்படுத்தவோ தைரியம் இல்லாமல் கைகளைப் பிசைந்தபடி அமர்ந்திருந்தாள்.

# 47

Never trust to general impressions, my boy, but concentrate yourself upon details – Sherlock Holmes

அன்றிரவு ஆர்த்தி கூட உறங்கி விட்டாள். ஆனால் பஞ்சவர்ணம் உறங்காமல் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு இருந்தாள். மூர்த்தி அங்கு நடப்பதை எல்லாம் வேவு பார்த்து வந்து அவளிடம் சொல்லும் வரை அவளால் அமைதியடைய முடியாது. பார்வதி 'இப்படித் தான் இந்தக் கனவு வந்து பாடாய்ப் படுத்துகிறது' என்று சொன்னதற்கு என்ன அர்த்தம் இருக்க முடியும் என்று அவளுக்கு நூறு சதவீதம் சொல்ல முடியாவிட்டாலும், சிவகாமி தடுத்து நிறுத்தி அங்குள்ளவர்களை அனுப்பி வைத்த விதம் அவளுக்குப் பல அர்த்தங்களைத் தந்தது.

பல வருடங்களாக அவள் அறிந்திருந்த சிவகாமி பெருத்த சந்தேகத்தைக் கிளப்பினாள். எதையும் பதறாமல், கணக்கிட்டு செயல்படக்கூடிய சிவகாமி அந்த விஷயத்தை சொல்ல விடாமல் தடுக்கிறாள் என்றால் ஏதாவது பெரிய காரணம் இல்லாமல் இருக்காது என்பது மட்டும் அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. அது என்ன என்ற கேள்விக்குத் தான் அவளுக்கு பதில் கிடைக்கவில்லை. மூர்த்தி வந்தால் தான் தெரியும்.

கடிகாரத்தைப் பார்த்த போது பஞ்சவர்ணத்திற்கு ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று தோன்றியது. சிவகாமி வளவளவென்று பேசக்கூடியவளோ, மற்றவர்கள் வளவளவென்று பேசினால் கேட்கக் கூடியவளோ அல்ல. யாராக இருந்தாலும் 'விஷயத்திற்கு வா' என்று பேச்சை வெட்டி விட்டு சாராம்சத்தை மட்டும் கேட்க ஆசைப்படுபவள். அப்படி இருக்கும் போது அவள் ஒன்றரை மணி நேரம் கழிந்த பின்னும் ஆர்த்தியின் அறையில் இந்த நள்ளிரவில் பேசிக் கொண்டு இருப்பாள் என்பதை நம்ப முடியவில்லை. அவள் போய் அடுத்த நிமிடம் தன் அறையில் இருக்க வேண்டிய மூர்த்தியும் இன்னும் வராதது அவள் பொறுமையை சோதித்தது.

இந்த வீடு தனது அதிகாரத்தில் வந்த பிறகு தான் இந்த வீட்டில் சுதந்திரமாக வலம் வருவேன் என்று சூளுரைத்து விட்டு தன் அறையில் முடங்கிக் கிடந்தவள் ஆர்த்தி வந்த பின் தான் ஓரிரு

முறை தன் நிலையை தளர்த்தி இருக்கிறாள். இப்போது மூர்த்தி வராததைப் பார்க்கையில் சந்தேகம் வலுக்க வேண்டாவெறுப்பாக மறுபடி அந்த அறையை விட்டு வெளியே வந்து வராந்தாவைப் பார்த்தாள். சற்று வெளியே வந்து எட்டிப் பார்த்த போது ஆர்த்தியின் அறையில் விளக்கு அணைந்துள்ளது தெரிந்தது. இந்தப்பக்கம் பார்த்த போது மூர்த்தியின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவசரமாக பேரன் அறைக்குப் போன போது அவன் அறை வெளியே தாளிடப்பட்டிருந்தது பார்த்து திகைத்தாள். 'லைட்டைப் போட்டுட்டு எங்கே போயிட்டான்' என்று அறை அருகே வந்த போது "பாட்டி" என்று மூர்த்தி அழைத்தான்.

பஞ்சவர்ணம் ஒன்றும் புரியாமல் அறைக்கதவைத் திறந்து விட்டு தன் அறைக்கு வர சைகை செய்து விட்டு தனதறைக்கு விரைந்தாள். அவனும் பின்னாலேயே வர, தனதறைக்குள் வந்தவுடன் மெல்லக் கேட்டாள்.

"என்னாச்சு?"

மூர்த்தி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவமானத்துடன் நடந்ததைச் சொன்னான். அவனுடைய எல்லை மீறிய கோபம் பஞ்சவர்ணத்திற்குப் பிடித்திருந்தது. இந்தக் கோபம் தான் இவனைச் செயல்பட வைக்கும். உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் இந்தக் கோபம் வெடிக்கும் போது வாழ்க்கையில் எதிரிகளை வென்று முடிக்க பலம் பிறக்கும். மூளை திட்டம் போடும். பவானிக்கு இந்தக் கோபம் இல்லாததால் தான் செயலிழந்து விட்டாள்....

"அவன் பரமசிவன் கழுத்தில இருக்கிற பாம்புடா. அது தான் கருடா சௌக்கியமான்னு கேட்கிறான். ஒரு காலம் கண்டிப்பாய் வரும். நீ அப்படிப்பட்ட காலத்தை வரவழைக்கணும். அந்தத் திமிர் பிடிச்சவனையும் அவனை இயக்கிகிட்டு இருக்கற அந்த அகங்காரியையும் பழி வாங்கவாவது நீ அதைச் செய்யணும். ஒரு நாள் சொத்து உன்னுடையதாகிறப்ப உன்னால எல்லாமே முடியும். அது வரைக்கும் இந்தக் கோபத்தைத் தணிச்சுக்காதே."

சொல்லும் போதே பஞ்சவர்ணத்தின் முகம் கோபத்தில் சிவந்தது. பாட்டியின் குரலில் இருந்த அழுத்தத்தையும், அவள் முகத்தில் தெரிந்த கோபத்தையும் பார்த்த போது மூர்த்திக்கு ஒரு கணம் தன் அவமானம் மறந்து பாட்டியின் கோபத்திற்கான காரணம் பற்றிய யோசனை எழுந்தது. 'நிஜமாகவே சிவகாமி என் அப்பா அம்மாவைக் கொன்றிருப்பாளா? அதனால் தான் பாட்டி இப்படியொரு பகையை மனதில் பாதுகாத்து வருகிறாளா? அதை ஏன் விளக்கமாக என்னிடம் சொல்ல மாட்டேன்கிறாள். என்ன தான் நடந்திருக்கும்?'

பேரனின் முகத்தில் சிந்தனையைப் பார்த்த பஞ்சவர்ணம் அவன் ஏதும் தன்னைக் கேட்கும் முன் தான் முந்தினாள். "அதுசரி. நம்மளையெல்லாம் அனுப்பின அந்த சண்டாளி ஆர்த்தியோட அப்பனையாவது கூட இருக்க விட்டாளா? இல்லை அவனையும் அனுப்பிச்சுட்டாளா?"

"அவர் இருந்தார். ஆர்த்தியோட தாத்தா வெளியே வந்ததைப் பார்த்தேன். அந்தக் கிழவி வெளியே வரலை. ஆர்த்தி கூட அவங்க மூணு பேரும் இருந்தாங்க"

பஞ்சவர்ணம் உடனடியாக ஒன்றும் சொல்லாமல் யோசித்தாள். பின் பேரனிடம் சொன்னாள். "விடிஞ்சவுடனே முதல் வேளையா நீ அந்தக் கிழவனைப் பார்த்து பேசப் போறாய். அக்கறையாய் கேட்கற மாதிரி அந்தக் கனவு சமாச்சாரத்தை விசாரி. அந்தக் கிழவியோ ஆர்த்தியோ இது பத்தி பேசுவாங்கன்னு தோணலை. ஆனா அந்தக் கிழவனை விசாரிக்கற மாதிரி விசாரிச்சா எல்லா உண்மையும் வெளிவரும். ஞாபகம் வச்சுக்கோ. இதுல ஏதோ பெரிய ரகசியம் இருக்குன்னு என் உள் மனசு சொல்லுது. இப்ப மணி என்ன. மூணாச்சா. அந்தக் கிழவன் ஆறு மணிக்கு எழுந்து வாக்கிங்

போறான். அப்ப பிடிச்சுக்கோ. நீ வர்ற வரைக்கும் எனக்கு இருப்பு கொள்ளாது. போ. போய் அஞ்சரைக்கு அலாரம் வச்சுட்டு படு."

சரியாக நீலகண்டன் ஆறுமணிக்கு தலையில் குல்லாவையும், தோளில் மப்ளரையும் போட்டுக் கொண்டு கிளம்புவதைப் பார்த்த போது மூர்த்திக்கு ஆச்சரியமாக இருந்தது. பாட்டி தன் அறையில் இருந்து வெளியே வராவிட்டாலும் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தே எத்தனை விஷயங்களைத் தெரிந்து கொள்கிறாள் என்று வியந்தான்.

"ஹலோ தாத்தா குட்மார்னிங்" என்று சொல்லி தோட்டத்தில் அவரைப் பிடித்தான். அவனைத் திரும்பிப் பார்த்த நீலகண்டன் முகத்தில் புன்னகை வந்தது. "குட்மார்னிங், தம்பி"

அவருடன் சேர்ந்து மூர்த்தி நடக்க ஆரம்பித்தான். சிறிது நடந்தவுடன் ஆரம்பித்தான். "எனக்கு நேத்து ராத்திரி தூக்கமே வரலை தாத்தா. ஆர்த்தியை அந்த நிலையிலே பார்த்த பிறகு மனசே தாங்கல...பாவம். கனவு இவ்வளவு தூரம் ஒரு ஆளை பாதிக்கும்னு யாராவது இதுக்கு முன்னால் சொல்லி இருந்தா நான் நம்பி இருக்க மாட்டேன்."

அவன் குரலில் தொனித்த இரக்கமும் கவலையும் நீலகண்டனை மனம் நெகிழ வைத்தது. ஆனால் ஒன்றும் சொல்லாமல் நடந்தார்.

மூர்த்தி கேட்டான். "ஏன் தாத்தா இந்தக் கனவு ரொம்ப காலமாவே ஆர்த்தியைப் பாதிக்குதுங்கற மாதிரி பாட்டி சொன்னாங்களே. இதுக்கு ஏதாவது ட்ரீட்மெண்ட் எடுத்துக்க முடியாதா?"

பார்வதி பாடம் நடத்தி விட்டுத் தான் நேற்றிரவு அவரைத் தூங்க விட்டாள் என்பதால் நீலகண்டனுக்கு அவனிடம் எல்லாவற்றையும் போட்டுடைக்க மனமிருந்தாலும் சுருக்கமாக மட்டும் சொன்னார். "சின்ன வயசுல ஏதோ பாதிக்கற மாதிரி பார்த்துட்டா. அது தான் கனவா வருதுன்னு டாக்டர் சொல்றாங்க. அதுக்கு நல்ல டாக்டராய் பார்த்து ட்ரீட்மெண்ட் செய்யலாம்னு சிவகாமி சொல்றா"

"கனவுல என்ன வருது தாத்தா?"

"ட்ரீட்மெண்ட் முடியற வரைக்கும் அதைப்பத்தி பேச வேண்டாம்னு அபிப்பிராயப்படறாங்க.. அதுவும் சரின்னு தான் படுது. என்ன சொல்றே?"

"கரெக்ட் தான் தாத்தா" என்று நாகரீகமாக மூர்த்தி நிறுத்திக் கொண்டான். சற்று தூரம் நடந்த பின் அப்போது தான் நினைவுக்கு வந்தவன் போல "என் எம்டிக்கு போன் செய்து பேச வேண்டிய வேலை இருந்துது. இந்த கலாட்டால மறந்தே போயிட்டேன். செல்லை ரூம்லயே வச்சுட்டேன். நீங்க போங்க தாத்தா. நான் போன் பேசிட்டு வந்துடறேன்..."

அடுத்த ஐந்து நிமிடத்தில் பாட்டியின் அறையில் அனைத்தையும் ஒப்பித்து நின்றான்.

பஞ்சவர்ணம் முகத்தில் மின்னல் அடித்து தங்கியது. ஏதோ பாதிக்கற மாதிரி பார்த்துட்டாள் என்றால் அது அந்த மழை நாளில் தாயின் மரணக்காட்சியாகத் தான் இருக்கும் என்று புரிய அவளுக்கு நிறைய நேரமாகவில்லை. இத்தனை நாள் தான் அறிந்து கொள்ள ஆசைப்பட்டதற்கெல்லாம் சாவி ஆர்த்தியின் ஆழ்மனதில் எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறது என்று எண்ணிய போது அபூர்வமாய் அவள் முகத்தில் தானாக புன்னகை மலர்ந்தது.

# 48

"If you cannot forgive because of hurt inflicted by others, you will be unwilling to be vulnerable for fear of being hurt again. Because people are sinners, you cannot love and you cannot minister without getting hurt." - Walter A. Henrichsen

சந்திரசேகர் சிவகாமியும் சங்கரனும் வாக்கிங் போய் விட்டு வரும் வரை தன் அறையில் இருப்பு கொள்ளாமல் காத்திருந்தார். அக்காவிடம் இனி என்ன செய்வது என்று கேட்டு அதைச் செய்யத் துவங்கும் வரை மனம் சமாதானம் ஆகாது என்று அவருக்குத் தோன்றியது. அதிகாலையிலேயே எழுந்து காத்திருந்த அவர் வழக்கம் போல சங்கரன் வாக்கிங் போய் வந்து தோட்டத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து நியூஸ்பேப்பரில் மூழ்க ஆரம்பித்த பிறகு சிவகாமியின் அறைக்குப் போனார்.

"என்னடா?"

"ஆர்த்தி கிட்ட நல்ல டாக்டராய் பார்த்து சிகிச்சை செய்யலாம்னு சொன்னாயே. டாக்டரை செலக்ட் செஞ்சாச்சா?"

"ஏண்டா ராத்திரி ஒரு மணிக்கு சொன்னதை வச்சு காலைல ஏழு மணிக்கே வந்து கேட்கறியே, உன் மனசுல என்னை என்னன்னு நினைச்சுகிட்டு இருக்கே."

"உனக்கு ஆறு மணி நேரமே அதிகம். நீ இதுக்குள்ள ஏதாவது யோசிச்சு வச்சிருப்பேன்னு தெரியும்" சொல்லியபடி தமக்கையின் அருகில் சந்திரசேகர் அமர்ந்தார்.

தம்பியைக் கூர்ந்து பார்த்த சிவகாமி கேட்டாள். "ராத்திரி எல்லாம் தூங்கலையா?"

சந்திரசேகர் கண்களில் நீர் திரண்டது. "தூங்க முடியலை"

சிவகாமி ஏன் எதற்கு என்று கேட்கவில்லை. சந்திரசேகர் மறுபடி அக்காவைக் கேட்டார். "எந்த டாக்டர்?"

"கொஞ்சம் இரு. ஆகாஷைக் கூப்பிடறேன். ஒரு விஷயத்தை ரெண்டு தடவை சொல்ல எனக்கு நேரமில்லை" என்ற சிவகாமி ஆகாஷின் செல்லுக்கு ஃபோன் போட்டு "வா" என்றாள்.

ஆகாஷ் வரும் வரை இருவரும் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். ஆகாஷ் வந்தவுடன் அவர்களுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தான். "என்னம்மா?"

"ஆர்த்திக்கு ஒரே விதமான கனவு வந்து தான் தொல்லை தருதுன்னு அவளோட பாட்டி சொல்றாங்க. ஒரு நல்ல டாக்டரா பார்த்து சிகிச்சை செய்யலாம்னு நினைக்கறேன். அப்ப தான் உன் ஃப்ரண்ட் ஒருத்தன், கோயமுத்தூர்ல பிரபலமாய் இருக்கானே, அவன் ஞாபகம் வந்தது. அவன் பேர் என்ன?"

"ப்ரசன்னா" என்றான் ஆகாஷ்.

ப்ரசன்னாவும் அவனும் மிக நெருங்கிய பள்ளிக்கூட நண்பர்கள். பிறகு வேறு வேறு கல்லூரிகளுக்குப் போனாலும் அந்த நட்பு தொடர்ந்தது. மனோதத்துவ டாக்டராக ஆகி மிகக்குறுகிய

காலத்தில் மிகவும் பிரபலமாகவும் ஆக அவனது கூர்மையான அறிவும், விஷய ஞானமும் மூலகாரணமாக இருந்தது. சர்வதேச பத்திரிக்கைகளில் பலர் பாராட்டும்படி நிறைய கட்டுரைகளும் எழுதி புகழ் பெற்றிருந்த ப்ரசன்னாவை ஆகாஷ் வெகு அபூர்வமாக தான் இப்போதெல்லாம் பார்க்க முடிகிறது. இருவருமே மிகவும் பிசியாக இருப்பது தான் காரணம். அதுவும் ப்ரசன்னாவிடம் சிகிச்சைக்கு ஒரு அப்பாயின்மென்ட் வாங்க மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் காத்திருக்கும் அளவு பிசியாக இருப்பதால் அடிக்கடி போனில் மட்டுமே ஆகாஷ் பேசிக் கொண்டிருந்தான்.

"ஆ... ப்ரசன்னா தான். அவன் கிட்ட ஆர்த்திக்கு ஒரு அப்பாயின்மென்ட் வாங்கு"

"நோ ப்ராப்ளம். அது வாங்கிரலாம். ஆமா.. அது என்ன மாதிரியான கனவு...."

சந்திரசேகர் கைகள் சோபாவின் கைப்பிடியை இறுக்கிப் பிடித்தன. ஆனால் சிவகாமி கண் இமைக்காமல் சொன்னாள். "தெரியலை. நான் கேட்கப் போகலை. டாக்டர் கிட்ட சொன்னாப் போதும். மத்தவங்க கிட்ட சொல்லி தேவையில்லாத விமரிசனத்தை வரவழைக்க வேண்டாம்னு நான் ஆர்த்தி கிட்ட சொல்லிட்டேன். நீ என்ன சொல்றே"

ஆகாஷ் ஒரு சிறு மௌனத்திற்குப் பின் சொன்னான். "சரி தான். அந்தக் கனவு ஏன் வருதாம்?"

மருமகன் சலிக்காமல் வேறு விதமாக அதே கேள்வியைக் கேட்பதைக் கண்ட சந்திரசேகர் அக்காவைப் பார்த்தார். சிவகாமி இயல்பாக சொன்னாள். "சின்னதுல ஏதோ பார்த்து பயந்திருக்கிறாள் போல இருக்கு"

"ஊட்டியிலயா பாண்டிச்சேரியிலயா?"

சிவகாமி கண் இமைக்காமல் சொன்னாள். "யாருக்குத் தெரியும்? நீயே இத்தனை கேள்வி கேட்கிறாய். மத்தவங்களும் கேட்காம இருப்பாங்களா. அதனால் அவ கிட்ட கனவு பத்தி யார்கிட்டயும் பேசாதேன்னுட்டேன். இதைப் பத்தி ஆர்த்தி கிட்டயோ அவங்க பாட்டி தாத்தா கிட்டயோ ஒண்ணும் கேட்காதே... நான் உன்னைக் கூப்பிட்டது என்னை இண்டர்வ்யூ செய்ய இல்லை. ப்ரசன்னா கிட்ட பேசி அப்பாயின்மென்ட் வாங்க..."

சந்திரசேகரால் அக்காவை மெச்சாமல் இருக்க முடியவில்லை. மற்ற யாராக இருந்தாலும் இந்நேரம் தடுமாறி இருப்பார்கள்.

"சரி வாங்கிடறேன்."

"அப்புறம் இன்னொரு விஷயம். இது மாதிரி விஷயங்களுக்கு பல சிட்டிங் தேவைப்படும் போல தெரியுது. அவளை நீயே கூட்டிகிட்டு போறது நல்லதுன்னு நினைக்கிறேன்."

ஆகாஷ் முகம் இறுகியது. "அப்பாயின்மென்ட் வாங்கித் தர்றேன். ஆனா மாமா கூட்டிகிட்டு போகட்டும்"

"இவன் வேண்டாம். இவன் மகளை நேத்து பார்த்துட்டே ராத்திரியெல்லாம் தூங்கலை. இந்த மாதிரி ஆளுங்க கூடப் போனா கடைசில இவனுக்கும் சிகிச்சை ஆரம்பிக்க வேண்டி வந்துடும்"

ஆகாஷ் மாமாவைப் பார்த்தான். உண்மை தான். அவர் முகத்தில் தூங்கின அறிகுறியே தென்படவில்லை. தாமிடமே கூட்டிக்கொண்டு போகச் சொல்லியிருப்பான். ஆனால் ஆர்த்தி தன்

தாயையே சந்தேகப்படுவதால் அவள் அழைத்துச் செல்வது சரியாக இருக்காது. அதே காரணம் தனக்கும் பொருந்தும் என்று தோன்றியது. மேலும் அவனுக்கு ஆர்த்தியுடன் ஒரு நிமிடம் சேர்ந்து இருக்கக்கூடப் பிடிக்கவில்லை.

"அப்படின்னா அவளை வேற யாராவது கூட்டிகிட்டுப் போகட்டும். அவங்க பாட்டி தாத்தாவே போகட்டுமே. கார் குடுத்து அனுப்பிச்சுட்டா சரி"

"அந்த வயசானவங்கள அவ கூட அனுப்பறது சரியா தோணலை. இப்ப அவளுக்கு அண்ணன் யாராவது இருந்திருந்தா கூட்டிகிட்டுப் போயிருப்பான். நீ தான் அண்ணன் ஸ்தானத்தில போகணும்"

ஆர்த்திக்கு அண்ணன் ஸ்தானம் என்று சொன்னவுடன் அவன் தாயிடம் எரிந்து விழுந்தான். "நான் ஒண்ணும் அவளுக்கு அண்ணன் இல்லை"

அவன் கோபம் சந்திரசேகர் முகத்தில் புன்னகையை வரவழைத்தது. அதைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டார். "நிஜமாவே என் பொண்ணை இவன் காதலிக்கிறான். அதனால தான் அண்ணன்னவுடனே எரிஞ்சு விழறான். பின்ன ஏன் அவ மேல கோபமாய் இருக்கான்?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டார்.

"ஒரு உதாரணத்துக்கு சொன்னேன். அவ்வளவு தான். நீ தான் போகணும். உனக்கு அவ கிட்ட சண்டை ஒண்ணும் இல்லையே"

ஆகாஷுக்கு தர்மசங்கடத்தில் தன்னை வீழ்த்தும் தாய் மேல் கோபம் வந்தது. சண்டை என்றால் ஏன் என்ற கேள்வி அடுத்ததாக வரும். என்னவென்று சொல்வான். பார்வதிக்கு வாக்கு கொடுத்திருக்கிறானே. அப்படி இல்லை என்றாலும் அதை தற்போது தாயிடம் தன்னால் சொல்ல முடியும் என்று தோன்றவில்லை.

"ஏன் பார்த்தியை அனுப்புங்களேன்...."

"அவனுக்குக் கொஞ்சம் ஓட்டை வாய். யாராவது கேட்டா உளறிடுவான். அதனால தான் யோசிச்சு உன்னை அனுப்ப முடிவு செஞ்சேன். இன்னும் சும்மா ஒவ்வொரு பேரா சொல்லாதே" சிவகாமி பேச்சு முடிந்தது என்பது போல எழுந்தாள்.

ஆகாஷ் உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு தலையை மட்டும் ஆட்டி விட்டு கிளம்பினான்.

அவன் போனவுடனேயே சந்திரசேகர் அக்காவைக் கேட்டார். "அந்த டாக்டர் எப்படி ட்ரீட் செய்வான்னு நினைக்கிறாய்க்கா"

"எனக்கு என் வேலையைப் பத்தி நினைக்கவே நேரம் போதலை. அந்த டாக்டர் செய்யப் போற வேலையை நினைக்க எங்கே நேரம் இருக்கு"

அக்காவின் பதில் சந்திரசேகருக்கு திருப்தி அளிக்கவில்லை. 'அக்காவுக்கு எதிலும் ஒரு ஐடியா இல்லாமல் இருக்காது. ஆனால் சில சமயங்கள்ல வாயே திறக்க மாட்டா....' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவர் வாய் விட்டு சொன்னார். "உன்னை புரிஞ்சுக்கவே முடியலைக்கா"

"என்னைப் புரிஞ்சுகிட்டு என்ன செய்யப் போறே. உன்னைப் புரிஞ்சுக்கோ. உருப்படலாம்"

"என்ன நாக்குடா சாமி" என்று முணுமுணுத்துக் கொண்டு சந்திரசேகர் எழுந்தார்.

"என்ன சொன்னே"

"ஆகாஷ் கூடவே கிளம்பியிருக்கணும்னேன்" என்று சொன்ன சந்திரசேகர் உடனடியாக இடத்தைக் காலி செய்தார்.

## 49

"Like one blindfolded groping out his way, I will not try to touch beyond to-day. Since all the future is concealed from sight I need but strive to make the next step right." - - Ella Wheeler Wilcox

ஆர்த்தி காலையில் விழித்தெழுந்தும் நிறைய நேரம் படுக்கையிலேயே அமர்ந்திருந்தாள். நேற்றைய கனவும், அதைத் தொடர்ந்து நடந்தவையும் மனதை நிறையவே அழுத்தின. எல்லாவற்றையும் விட பாதித்தது ஆகாஷின் பாராமுகம். அந்த நேரத்திலும் கூட அவனால் அவள் அவன் தாயை சந்தேகப்பட்டதை மறக்க முடியவில்லை என்பதை நினைக்கையில் மனம் வலித்தது. சிலர் கண்ணில் தெரிந்த இரக்கம் கூட அவன் கண்ணில் தெரியவில்லை. மாறாக இறுக்கமான கோபம் தான் இருந்தது. அந்த முகம் மனத்திரையில் அப்படியே தெரிய வருத்தத்தில் கண்களை சிறிது நேரம் மூடிக் கொண்டாள்.

நேற்று சிவகாமி சொன்ன வார்த்தைகள் காதில் மீண்டும் ஒலித்தது. "இந்த அழுகை, சுய பச்சாதாபம் எல்லாம் யாருக்கும் எப்பவும் பயன் தந்ததில்லை. நீ அதை நல்லா புரிஞ்சுக்கணும். எதையுமே நாம தைரியமா சந்திக்கறப்ப தான் அதை ஜெயிக்க முடியுது. ஓடி ஒளியறதுனாலயோ வருத்தப்படறதாலயோ ஜெயிக்க முடியாது.... ஒரு பிரச்சினை வருதுன்னு வச்சுக்கோ. எப்பவுமே அந்தப் பிரச்சினையை விட நாம் உயர்ந்தவங்கங்கற கோணத்துல இருந்து தான் அதைப் பார்க்கணும். பிரச்சினைன்னு ஒண்ணு இருந்தா தீர்வுன்னும் ஒண்ணு இருந்து தான் ஆகணும்கிற நம்பிக்கையோட தான் அதை அணுகணும். அப்பத் தான் எல்லாம் சுமுகமாய் முடியும்"

சிவகாமி நல்லவளோ, கெட்டவளோ, குற்றவாளியோ, நிரபராதியோ, அவள் வார்த்தைகள் அறிவுபூர்வமாக இருந்தது என்பதை ஆர்த்தியால் மறுக்க முடியவில்லை. அவள் நடந்து கொண்ட விதத்திலும் ஆர்த்தியால் குறை கண்டு பிடிக்க முடியவில்லை. உணர்ச்சிவசப்படாமல், பதட்டம் இல்லாமல், கேள்விகளால் துளைத்து எடுக்காமல் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் முடிவெடுத்த விதத்தை நினைக்கையில் ஆர்த்திக்கு அவள் மீது முதலில் தோன்றிய மதிப்பு மீண்டும் வந்தது.

முடிந்த வரை பெரியத்தை போல் எதாலும் பாதிக்கப்படாமல் இருப்பது தான் சிறந்தது என்று நினைத்தாள். இனி தேவையில்லாமல் வருத்தப்படப் போவதில்லை என்று சொல்லிக் கொண்டாள். விலகிய ஆகாஷ் இனி என்றுமே தன்னை நெருங்கப் போவதில்லை என்பது சகிக்க முடியாததாக இருந்தாலும் விதியின் அந்த தீர்மானத்தை எதிர்த்து வருத்தப்பட்டு என்ன ஆகப் போகிறது என்று சமாதானம் செய்து கொண்டாள். அவனுடன் பழகிய அந்த சில நாட்களை, அந்த இனிமையான தருணங்களை மட்டும் மனதின் மூலையில் என்றென்றும் பாதுகாப்பாள். மற்றபடி நடந்ததைப் பற்றி கவலைப்படுவதை விடுத்து நடக்க வேண்டியதை மட்டும்

கவனிப்பாள்.

ஆர்த்திக்கு மனதில் மீண்டும் புத்துணர்ச்சி பிறந்தது. எழுந்து தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள். அவள் குளித்து விட்டு வந்த போது பவானி வந்தாள்.

ஆர்த்தியின் முந்தைய நாள் நிலையைப் பார்த்து அவளுக்காக வருத்தப்பட்ட பவானிக்கு அந்த அறையில் நுழைய கஷ்டமாக இருந்தாலும் அவளைச் சென்று பார்க்காமல் இருக்க மனம் கேட்கவில்லை. வந்தவளுக்கு ஆர்த்தியின் முகத்தில் தெரிந்த தெளிவு பெரும் நிம்மதியைத் தந்தது.

"ஹாய் ஆர்த்தி"

"ஹாய் சித்தி"

"உன்னை இப்ப உங்கப்பா பார்த்தா சந்தோஷப்படுவார். நேத்து பூரா அவர் சரியா தூங்கவேயில்லை"

தந்தையின் பாசம் அவளை நெகிழ வைத்தது. "அப்பா என்ன செய்யறார்"

"பெரியக்கா கிட்ட போயிருக்கார். ஏதாவது பிரச்சினைன்னா அவருக்கு அக்கா பக்கத்துல இருக்கணும். அவங்க வாக்கிங் போயிருக்கறப்ப போனா திட்டுவாங்கன்னு வர்ற வரைக்கும் கஷ்டப்பட்டு காத்துகிட்டு இருந்துட்டு பிறகு போனார்"

"வாக்கிங் போறப்ப அப்பா போனா ஏன் அத்தை திட்டுவாங்க"

"காலைல வாக்கிங் போற நேரமும், ராத்திரி தூங்கறதுக்கு முன்னால் தோட்டத்துல ம்யூசிக் கேட்டுட்டு உட்கார்ற நேரமும் அவங்க தன் புருஷனோட தனியா இருக்க விரும்பற நேரங்க. அந்த நேரத்துல யார் வந்து தொந்தரவு செஞ்சாலோ, சீரியஸ் விஷயங்களைப் பேசினாலோ அவங்களுக்கு பிடிக்காது. அதான்"

சிவகாமி எல்லாவற்றிலும் வித்தியாசமாய் தெரிந்தாள். தம்பியின் இத்தனை சொத்துகளும் சிவகாமியை எந்த விதத்திலும் மாற்ற முடியவில்லை என்பது ஆச்சரியமாக இருந்தது.

"ஆர்த்தி நாம நேத்து எடுத்த டிரஸ்ல ஒண்ணு நீ இன்னைக்குப் போட்டுக்கப் போறே. எது போட்டுக்கறே. சேலையா, சுடிதாரா? என்ன கலர்?"

அவள் நேற்றைய கனவைப் பற்றி பேசாமல் உரிமையுடன் இந்த ஆடைகள் விஷயத்திற்கு வந்தது ஆர்த்திக்குப் பிடித்திருந்தது.

"நீங்களே செலக்ட் செய்யுங்க சித்தி. நான் அதைப் போட்டுக்கறேன்"

அந்த வார்த்தை பவானிக்கு பெரிய சந்தோஷத்தைத் தந்தது. இந்த நெருக்கத்தை, இந்த அங்கீகாரத்தை கனவு கண்டிருக்கிறாள். ஆனால் தைரியமாக ஆர்த்தியிடம் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஒரு குழந்தையின் குதூகலத்தோடு ஆடைகளைப் புரட்ட ஆரம்பித்தாள். ஆடைகளைத் தேர்ந்தெடுத்ததோடு நிற்காமல் அவளுக்குத் தானே தலை வாரினாள். அலங்காரம் செய்தாள்.

சிறிது நேரத்தில் சந்திரசேகர் ஆர்த்தியின் அறையில் நுழைந்த போது இருவரும் பேசி சிரித்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தார். மகள் எந்த மனநிலையில் இருப்பாளோ என்று பயந்து வந்தவருக்கு இந்தக் காட்சி தந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அவருக்கு உடனடியாக என்ன சொல்வதென்று தெரியவில்லை. புன்னகையுடன் வந்த காரியத்தைச் சொன்னார். "டிபன் ரெடியாய் இருக்கு. இன்னைக்கு எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்னு கூப்பிட வந்தேன்...."

அவர் கண்கள் மகளை ஆராய்ந்தது. மகள் இன்று பேரழகாய் இருப்பதாக அவருக்குத் தோன்றியது. மனைவியின் அலங்காரத்துக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவளைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

பவானிக்கு சந்தோஷமாக இருந்தது. கணவனிடம் நேற்று ஆரம்பித்த இந்த மாறுதலுக்குக் காரணம் ஆர்த்தி தான் என்பதில் அவளுக்கு சந்தேகமில்லை.

ஆர்த்திக்கு அப்போது தான் அன்று ஞாயிற்றுக் கிழமை என்பது நினைவுக்கு வந்தது. ஞாயிறு காலையும் எல்லோரும் சேர்ந்து சாப்பிடும் வழக்கம் அந்த வீட்டில் இருந்தது. "ஆச்சு. வந்துட்டோம்ப்பா" என்றாள்.

டைனிங் ஹாலில் அவர்கள் நுழைந்த போது அத்தனை கண்களும் ஆர்த்தி மேல் இருந்தன. முந்தைய நாள் நிகழ்ச்சிக்குப் பின் எப்படி இருக்கிறாள் என்றறியும் ஆவலுடன் பார்த்தவர்கள், அவள் நேற்றைய சுவடே இல்லாததோடு தெளிவாகவும், மிக அழகாகவும் தெரிகிறாள் என்பதையும் கவனித்தார்கள். ஆகாஷ் உடனடியாக கண்களைத் திருப்பிக் கொண்டான். மூர்த்தியும், பார்த்திபனும் அவளை வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்ட போது அவன் தாடை ஒரு கணம் இறுகினாலும் மறு கணம் அமைதியாக சாப்பிட ஆரம்பித்தான்.

அவன் அருகில் இருந்த சங்கரன் சிவகாமியிடம் மெல்லிய குரலில் சொன்னார். "இந்தப் பொண்ணு ஆனந்தியை விட அழகாய் இருக்காள் இல்லையா சிவகாமி"

சிவகாமி தலையாட்டினாள். தன் தந்தை மனிதர்களைக் கவனிப்பதே அபூர்வம் என்பதால் அவரையே கவனித்து சொல்ல வைத்திருக்கிற ஆர்த்தியை ஆகாஷ் மறுபடி ஒரு முறை பார்த்தான். ஆர்த்தியும் அவனைப் பார்த்த போது அவளையுமறியாமல் புன்னகைத்தாள். அவன் புன்னகைக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவளுக்கு அவமானமாக இருந்தது. ஆனால் காலையில் தான் எடுத்த முடிவை நினைவுபடுத்திக் கொண்டு தன்னை திடப்படுத்திக் கொண்டாள்.

அப்போது தான் அமிர்தம் தன் அக்காவிடம் சொன்னாள். "அக்கா, அந்த விஜயா சாகலை. நான் அவளை நேத்து பார்த்தேன்"

"எந்த விஜயா?"

"வேலைக்காரி விஜயா. ஆனந்தி இறந்தப்ப அவளும் செத்திருப்பான்னு நினைச்சுட்டு இருந்தோமே அந்த விஜயா...."

திடீரென்று அங்கு மயான அமைதி நிலவியது.

# 50

It is not bigotry to be certain we are right; but it is bigotry to be unable to imagine how we might possibly have gone wrong.

– G. K. Chesterton:

அமிர்தம் தந்த தகவல் சங்கரன், பார்த்திபன் இருவரைத் தவிர மீதி அத்தனை பேரையும் ஆச்சரியப்படுத்தியது. சந்திரசேகர் சிவகாமியைக் கேள்விக்குறியுடன் பார்த்தார். சிவகாமி முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாவிட்டாலும் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு யோசனையுடன் தங்கையைப் பார்த்தாள். பவானியை அந்தச் செய்தி அதிகமாகவே உலுக்கியது. ஆர்த்தி, மூர்த்தி, ஆகாஷ், நீலகண்டன், பார்வதி ஆகியோர் பரபரப்புடன் அமிர்தத்தைப் பார்த்தார்கள்.

சிறிது நேரம் தொடர்ந்த அமைதியை சிவகாமியே கலைத்தாள். "அவளை எங்கே பார்த்தாய்?"

"சிவன் கோயில்ல"

"பார்த்தது அவளைத் தானா?"

"அவளையே தான். என்னைப் பார்த்து எதிரில் யாரோ ஓடி இன்னொருத்தர் பின்னால் போய் ஒளிஞ்ச மாதிரி இருந்துச்சு. அதனால தான் கவனிச்சேன். இல்லாட்டி கவனிச்சிருக்க மாட்டேன்."

"உன்னைப் பார்த்து அவ ஏம்மா ஓடி ஒளியணும்?" பார்த்திபன் சந்தேகத்துடன் கேட்டான்.

"அதான் எனக்கும் தெரியலை"

"ஒருவேளை உன் கிட்ட கடன் கிடன் வாங்கியிருந்தாளோ" பார்த்திபன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

அமிர்தமும் சிரித்தாள். "அப்படியிருந்திருந்தா அவ ஒளிஞ்சதில் எனக்கு ஆச்சரியமாயிருக்காதே"

சிவகாமி சொன்னாள். "கடன் வாங்கினவங்க கடன் கொடுத்தவங்களப் பார்த்து ஓடி ஒளிஞ்சதெல்லாம் அந்தக் காலம். இப்ப எல்லாம் தைரியமா வந்து குசலம் விசாரிச்சுட்டு போகற நிலைமை வந்துடுச்சு"

சிறிது நேரம் யாரும் பேசவில்லை. அமிர்தம் சொன்ன தகவல் பலரிடம் பல சிந்தனைகளை வரவழைத்திருந்தது. ஆனால் அதை யாரும் வாய் விட்டுச் சொல்லவில்லை.

டிபன் சாப்பிட்ட பிறகு சிவகாமியைப் பின் தொடர்ந்த சந்திரசேகர் தன் சந்தேகத்தை தமக்கையிடம் வெளிப்படுத்தினார். "சின்னக்கா பார்த்தது வேற யாராவது இருக்குமா?"

சிவகாமி சொன்னாள். "அவ பார்வை கூர்மை. அவ பார்த்தேன்னா அது வேற ஆளா இருக்காது சந்துரு"

சந்திரசேகர் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. பின் மெள்ள கேட்டார். "அந்த வேலைக்காரி ....?"

சிவகாமி சொன்னாள். "அவ இந்நேரம் ரொம்ப தூரம் போயிருப்பா"

ஆனாலும் சந்திரசேகருக்கு வேலைக்காரி உயிரோடு இருக்கும் சமாச்சாரம் பதட்டத்தை உண்டு பண்ணியது போல தெரிந்தது.

சிவகாமி புன்னகையோடு சொன்னாள். "அவளைப் பத்தி கவலைப்படாதே. உன் ரெண்டாவது மாமியார் பார்த்துக்குவா"

சிவகாமி சொன்னது போலவே பஞ்சவர்ணம் மூர்த்தி கொண்டு வந்த செய்தியை மிகவும் பரபரப்போடு கேட்டாள். அவன் சொல்லி முடித்தவுடன் நூறு கேள்விகள் கேட்டாள். அமிர்தம் யாரிடம் சொன்னாள். அதை எல்லோரும் எப்படி எடுத்துக் கொண்டார்கள். விஜயாவுடன் யாராவது இருந்ததாக அமிர்தம் சொன்னாளா? கேட்டு விட்டு சிவகாமி என்ன சொன்னாள்? சிவகாமி முகம் எப்படி இருந்தது. ஆர்த்தி ஏதாவது சொன்னாளா? பார்வதி நீலகண்டன் முகம் எப்படி இருந்தது. அவர்கள் ஏதாவது சொன்னார்களா?

ஒரு கட்டத்தில் மூர்த்தி கூடப் பொறுமை இழந்தான். "பாட்டி...."

"ஏண்டா இப்படி சங்கடப்படறே. திடீர்னு ஒரு நிலச்சரிவு வருது. அதில் ஒருத்தி சாகறா. அவளை எரிச்சடறாங்க. மீதி மூணு பேர் காணாமப் போறாங்க. அவங்க அடையாளம் தெரியாத எத்தனையோ பிணத்துல இருந்ததா நினைச்சுகிட்டு இருந்தோம். இப்ப என்னடான்னா திடீர்னு ஒருத்தி மந்திரத்துல காய்ச்ச மாங்கா மாதிரி வந்து நிக்கறா. அதோட இல்லாம அமிர்தத்தைப் பார்த்து ஒளிஞ்சு நிக்கறா. இத்தனை நாள் எங்கே இருந்தா? எதனால சொல்லிக்காம ஓடிப் போனா?... அந்த ராத்திரி என்ன நடந்துச்சுன்னு ஒரு துப்பும் கிடைக்கல, என்ன ஆச்சுன்னு தெரியலைன்னு யோசிச்சிட்டு இருந்த எனக்கு இப்ப எல்லாப் பக்கத்துல இருந்தும் தகவல் வர்ற மாதிரி தோணுது. ஒரு பக்கம் கனவோட இங்க வந்து சேர்ந்த ஆர்த்தி, இன்னொரு பக்கம் உயிரோடு இருக்கற அந்த வேலைக்காரி ....."

மூர்த்தி பஞ்சவர்ணத்தின் பரபரப்பைக் குறைக்கப் பார்த்தான். "பாட்டி அந்த வேலைக்காரிய அமிர்தம் பார்த்தது நேத்து சாயங்காலம். கிட்டத்தட்ட 15 மணி நேரம் ஓடிப் போயிடுச்சு. இந்நேரம் அவள் எங்க போயிட்டாளோ என்னவோ. அப்படியே இருந்தாலும் அவ நம்ம கைக்கு கிடைக்கறதுக்கு முன்னாடி சிவகாமி கைல கிடைச்சுடுவா....."

பஞ்சவர்ணம் ஆழ்ந்த யோசனைக்குப் பின் சொன்னாள். "நீ சொன்ன மாதிரி அவ இந்நேரம் ரொம்ப தூரம் போயிருக்கலாம். இப்ப சிவகாமி என்ன செய்யப் போறாள்ங்கறதை வச்சு இந்த வேலைக்காரிக்கு எந்த அளவு விஷயம் தெரியும்கிறதை நாம முடிவு செய்யலாம்னு தோணுது...."

"பாட்டி, அமிர்தத்தைப் பார்த்து அவள் பயந்து ஒதுங்கறாள்னா அது சிவகாமியோட தங்கைங்கறத வச்சு தான். அவ அப்படி சிவகாமிக்குப் பயப்படறான்னா கண்டிப்பா ஏதாவது காரணம் இல்லாமல் இருக்காது"

பஞ்சவர்ணம் அவன் சொன்னதற்கு கருத்து எதுவும் சொல்லவில்லை. மாறாக அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொன்னாள். "மூர்த்தி காந்தல்ல அந்த விஜயாவோட அண்ணன் ஒருத்தன் தன் குடும்பத்தோட இருக்கான். பேரு வீரையன்னு. வீடு சிவன் கோயிலுக்குப் பக்கத்துல தான் இருக்கு. நீ அங்கே போய் அந்த வீரையன் கிட்ட விஜயாவைப் பத்தி விசாரி. அவன் காசு ஆசை பிடிச்சவன். கொஞ்சம் பணம் கொடுத்தா எல்லாம் சொல்வான்..."

பஞ்சவர்ணம் விஜயாவைப் பற்றி இவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருப்பது மூர்த்திக்கு ஆச்சரியத்தை அளித்தது. இத்தனைக்கும் விஜயா இங்கு வேலை செய்து கொண்டு இருந்த காலத்தில் பஞ்சவர்ணம் இங்கு வசிக்கவில்லை. மூர்த்திக்கு இந்த நேரத்திலும் மூடி மறைத்து தன்னிடம் பஞ்சவர்ணம் விளையாடுவது எரிச்சலைத் தந்தது.

"பாட்டி எனக்கு எல்லா உண்மையையும் சொல்றதா இருந்தா மறைக்காம சொல்லுங்க. அந்த வீரையனைப் பார்க்கப் போறேன். இல்லாட்டி நான் போகலை. இந்தக் கண்ணாமூச்சு விளையாட்டு எனக்கு போரடிச்சுடுச்சு."

அவன் குரலில் அசைக்க முடியாத உறுதி இருந்தது. பஞ்சவர்ணம் பேரனைக் கண்ணிமைக்காமல் பார்த்தாள். பேரனும் பார்வையைத் தவிர்த்து விடாமல் பாட்டியையே பார்த்தான். பஞ்சவர்ணம் இந்த முறை பேரனிடம் தன் சாமர்த்தியம் செல்லுபடியாகாது என்பதை உணர்ந்தாள். என்றாவது அவனிடம் அந்தப் பழங்கதையை சொல்லியே ஆக வேண்டும் என்பதை அறிந்திருந்ததால், எதை எந்த அளவு அவனிடம் சொல்வது என்பதைப் பல முறை ஒத்திகை பார்த்திருந்தாள். ஆனாலும் சொல்ல வேண்டிய அந்த நேரத்தில் தயக்கம் அவள் மனதில் தலை காட்டாமல் இல்லை.

இரண்டு நிமிடம் மௌனமாக இருந்து விட்டு அந்தப் பழங்கதையை பஞ்சவர்ணம் ஆரம்பித்தாள். தேவையில்லை என்று அறிந்திருந்த போதும் ஒரு பீடிகை இல்லாமல் அவளால் ஆரம்பிக்க முடியவில்லை. "உலகத்தில பணம் ஒரு பெரிய பலம்டா மூர்த்தி. அது வேணும்கிற அளவு இருந்து கொஞ்சம் புத்திசாலித்தனமும் இருந்துட்டா உலகத்துல வேற எதுவுமே வேண்டாம். உன் சின்ன வயசுல இருந்தே நீ சிவகாமியப் பார்த்துட்டு வர்றாய். அந்தப் பணம் தான் அவளோட அத்தனை அதிகாரத்துக்கும், வெற்றிக்கும் பக்கபலமாய் இருந்துருக்கு. தன்னோட இஷ்டத்துக்கு எல்லாத்தையும் சுலபமா வளைக்க அவளால் முடிஞ்சதுக்கு அது தான் காரணம்....."

பஞ்சவர்ணம் சூழ்ச்சிகள் நிறைந்த அந்தப் பழைய கதையை பேரனிடம் சொல்ல ஆரம்பித்தாள்.....

# 51

"The evil of the world is made possible by nothing but the sanction [that] you give it."

-Ayn Rand

பஞ்சவர்ணம் சொல்லி முடித்த போது மூர்த்திக்கு என்ன நினைப்பது என்று ஒரு நிமிடம் தெரியவில்லை. மனதில் வெறுமையே மிஞ்சி நின்றது. பஞ்சவர்ணம் பொய் எதுவும் பேரனிடம் சொல்லவில்லை என்றாலும் சாமர்த்தியமாக சில விஷயங்களை சொல்லாமல் விட்டாள். அதைக் கவனித்து பேரன் தர்மசங்கடமான கேள்விகளைத் தன்னிடம் கேட்டால் என்ன செய்வது என்ற படபடப்பு அவளிடம் இருந்தது. மூர்த்தியும் சில இடைவெளிகளை அவள் சொன்னதில் கண்டுபிடித்தாலும் காரணத்தை சுலபமாக ஊகித்தான். பாட்டி வாயால் அதைச் சொல்ல வைக்க அவனும் விரும்பவில்லை.

அவன் மனதில் நின்ற வெறுமையை நீக்க மனதில் எதை வேண்டுமானாலும் நிரப்பி இருக்கலாம். ஆனால் அவன் சிவகாமி மேல் இருந்த ஆத்திரத்தை மனதில் நிரப்பினான். அந்த ஒன்றில் தான் அர்த்தம் இருப்பதாய் தோன்றியது.

"சிவகாமி தான் அவங்களைக் கொன்னிருப்பான்னு சந்தேகத்துக்கே இடமில்லாமல் தெரியுதே. அப்புறம் அதில் என்ன பாட்டி? சிவகாமி தன் கையால் கொன்னிருப்பாளா இல்லை அந்த நேபாளத்தை விட்டுக் கொன்னுருப்பாளான்னா?"

"எப்படி செய்தாள் என்ன நடந்ததுன்னு சரியா தெரியற வரைக்கும் சந்தேகம் ஒரு மூலையில் இருந்துகிட்டே இருக்கும் அல்லவா" என்று சொன்ன பஞ்சவர்ணம் மனதில் பெரிய நிம்மதி இருந்தது. 'நல்ல வேளையா வேண்டாத கேள்வி எதுவும் கேக்கலை'

"இனி என்ன செய்யலாம் பாட்டி"

"முதல்ல அந்த விஜயா பத்தி விசாரி. அப்புறம் ஆர்த்திக்கு எந்த டாக்டரை தேர்ந்தெடுத்துருக்கறாங்கன்னு கண்டு பிடி..."

மூர்த்தி தலையாட்டினான். பஞ்சவர்ணம் பேரனைக் கூர்ந்து பார்த்து விட்டுக் குரல் கரகரக்கச் சொன்னாள். "மூர்த்தி. இனிமேல் வர்ற நாட்கள் நமக்கு ரொம்ப முக்கியம். நாம கவனமாய் இல்லாட்டி சிவகாமியை வீழ்த்த முடியாது. உங்கம்மா அப்பா இறந்துட்டாங்கன்னு தெரிஞ்சவுடனே, பவானிக்கும் இனி குழந்தை இல்லைன்னு ஆனவுடனே நான் நியாயமா பவானி கிட்ட தான் உன்னை வளர்த்த தந்திருக்கணும். ஆனா நான் செய்யாததுக்குக் காரணம் அவள் உன்னை பலவீனமா வளர்த்திடுவாங்கறது தான். தயக்கம், செண்டிமெண்ட் எல்லாம் சிவகாமி மாதிரி ஆள்களை எதிர்க்க உதவாது. பவானியால சந்திரசேகரைக் கல்யாணம் செய்துகிட்டும் இந்த வீட்டுல சிவகாமிய எதிர்த்து ஒரு துரும்பையும் நகர்த்த முடியலை..."

"பாட்டி நீங்க அத்தை மேல கோபப்படறதுல அர்த்தமில்லை. அவங்க பலவீனமானவங்கங்கறதை ஒத்துக்கறேன். ஆனா ரொம்பவும் ஸ்ட்ராங்கானவங்கன்னு நான் கேள்விப்பட்ட ஆர்த்தியோட அம்மானால கூட சிவகாமி பொசிஷனை அசைக்க முடியலைங்கறப்ப அத்தையால என்ன செஞ்சிருக்க முடியும்...."

"முடியாததையும் முடிச்சுக் காட்டறது தாண்டா சாமர்த்தியம். சரி விடு. பவானியைப் பத்தி இப்ப பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை. நடக்க வேண்டியதைப் பார்ப்போம். ஆர்த்தி தான் நமக்கு இப்ப முக்கியமான துருப்புச் சீட்டு. நீ தலை கீழா நின்னாவது அவள் மனசுல இடம் பிடிக்கணும். இப்ப ஆகாஷுக்கு அவள் மேல கோபம் இருந்தால் கூட அவள் மனசுல அவனுக்கு இடம் இருக்கற மாதிரி தான் தோணுது. அதை நீக்கணும், புரியுதா. அந்த டேவிட்டோட மகளுக்கும் ஆகாஷுக்கும் இருந்த உறவை அவள் காதுல போடு. அது ஒண்ணு போதும் அவளுக்கு அவன் மேல் இருக்கற காதல் போக..."

மூர்த்திக்கு பாட்டியின் அறிவுக் கூர்மையை மனதினுள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. "சரி பாட்டி"

"அப்படி ஆகாஷ் நம்ம ரூட்டுல இருந்து போனாலும் பார்த்திபன் இருக்கான். ஆகாஷ் விஷயம் ஆகலைன்னா சந்திரசேகர் எப்பாடு பட்டாவது மகளுக்கு அவனைக் கல்யாணம் செய்து குடுக்கத் தான் பார்ப்பான். அதனால் நீ அவன் விஷயத்துலயும் கவனமாய் இருக்கணும். புரியுதா?"

மூர்த்திக்கு பார்த்திபன் ஒரு குறுக்கீடாகத் தோன்றவில்லை. ஆனாலும் பாட்டியிடம் தலையாட்டி விட்டு எழுந்தான்.

அடுத்த அரை மணி நேரத்தில் காந்தலில் வீரையன் விலாசத்தைக் கண்டு பிடித்து விட்டான். அந்தப் பழைய, சிறிய, நன்றாக பராமரிக்கப்படாத வீடு வீரையனின் நிதி நிலைமையை பறைசாற்றியது. கதவைத் தட்டினான்.

கிட்டத்தட்ட ஐம்பது வயதைத் தாண்டிய ஒரு பெண்மணி கதவைத் திறந்தாள்.

"வீரையன் இருக்காரா?"

அவன் யார் என்று அவள் கேட்கவில்லை. அவள் கண்களில் லேசாகப் பயம் எட்டிப் பார்த்தது. "என்னங்க யாரோ உங்களைக் கேட்கறாங்க" என்று சொல்லியபடி உள்ளே போனாள்.

அடுத்த நிமிடம் வீரையன் வெளியே வந்தான். கிட்டத்தட்ட அறுபது வயதை எட்டியிருந்தாலும் வீரையன் திடகாத்திரமாகவும், முறுக்கு மீசையுடனும் இருந்தான். "நான் தான் வீரையன். உங்களுக்கு வீடு ஏதாவது வாடகைக்கு வேணுமா? எந்த ரேஞ்சுல வேணும்"

அவன் வீட்டு புரோக்கர் தொழில் பார்க்கிறான் என்பது கேள்வியில் தெரிந்தது.

"எனக்கு வீடு எதுவும் வாடகைக்கு வேண்டாம். எனக்கு விஜயாவைப் பார்க்கணும்"

அவன் கண்களிலும் பயத்தின் அறிகுறி தெரிந்தது. ஆனால் வார்த்தைகள் ஒன்றும் அறியாதது போல வந்தது. "இங்க விஜயான்னு யாரும் இல்லைங்களே"

"உங்க தங்கச்சி பேரு விஜயா தானே"

"ஓ அவளைக் கேட்கறீங்களா? அவ செத்து ரொம்ப வருஷமாயிடுச்சுங்களே. ஒரு நிலச்சரிவுல போயிட்டா"

"இல்லை. எங்க வீட்டாள் ஒருத்தர் அவங்களை நேத்து சிவன் கோயில்ல பார்த்திருக்காங்க. அதான்...."

"செத்துப் போனவங்களை எப்படிங்க பார்த்திருக்க முடியும்? அவங்களுக்கு ஆள் மாறிப் போயிருக்கணும்"

மூர்த்தி ஒரு நூறு ரூபாய்க் கட்டை வெளியே எடுத்தான். "எனக்கு அவங்களைக் கண்டிப்பா பார்த்து கொஞ்சம் பேச வேண்டி இருக்கு வீரையன். நீங்க எனக்கு உதவுனா நானும் உங்களைக் கவனிச்சுக்குவேன்"

"பத்தாயிரம் இல்லை பத்து கோடியே கொடுத்தாலும் செத்தவங்களைக் கூட்டிகிட்டு வர முடியுங்களா தம்பி."

"அவங்க சாகலைங்கறதுலயும் அவங்களை எங்க வீட்டாள் பார்த்தது நிஜம் தான்ங்கிறதுலயும் எங்களுக்கு சந்தேகமேயில்லை வீரையன்"

"அப்படி ஒருவேளை இருந்து அடுத்த தடவை நீங்க யாராவது பார்த்தீங்கன்னா தயவு செய்து என் கிட்ட தெரிவிங்க தம்பி. நானும் பார்த்து பேசறேன். ஏன்னா எனக்கும் அவளை விட்டா கூடப் பிறந்தவங்கன்னு வேற யாரும் இல்லை"

வீரையன் வார்த்தைகளில் ஏளனம் இருந்தாலும் அவன் கண்களில் பயம் பிரத்தியேகமாக தெரிந்தது. ஒரு வேளை சிவகாமி நமக்கு முன்னால் இங்கே வந்து விட்டாளோ என்ற சந்தேகம் மூர்த்திக்கு வந்தது. ஆனால் இந்தப் பயத்திற்குக் காரணம் சிவகாமி தான் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை. நீங்கள் யார், எதற்காக விஜயாவிடம் பேச வேண்டும் என்கிறீர்கள் என்ற இயல்பான கேள்விகள் வராதது, அதற்கான விடைகள் வீரையனுக்கு முன்பே தெரிந்திருந்ததினால் தான் என்பதையும் மூர்த்தியால் ஊகிக்க முடிந்தது. மேற்கொண்டு பேசாமல் அங்கிருந்து கிளம்பினான்.

மூர்த்தி போனவுடன் வீரையன் மனைவி வெளியே வந்தாள். "என்னங்க ஏதாவது பிரச்சினையா?"

"அந்த சனியனால எப்பவுமே பிரச்சினை தான். பெரிய இடத்துக்கு வேலைக்குப் போனா வேலையப் பாத்தமா வந்தமான்னு இருந்திருக்கணும். அதை விட்டுட்டு ....."

## 52

It's the repetition of affirmations that leads to belief. And once that belief becomes a deep conviction, things begin to happen." -- Claude M. Bristol

ஆகாஷ் தாயிடம் வந்து சொன்னான், "ப்ரசன்னா இப்ப ஜெர்மனில இருக்கான். சைக்காலஜிகல் கான்ஃப்ரன்ஸ்க்காக போயிருக்கான். அடுத்த வாரம் தான் வருவான். நான் ஆர்த்திக்காக அப்பாயின்மெண்ட் பத்தி பேசினேன். வந்த நாளே ராத்திரி பன்னிரண்டு மணி ஆனாலும் கூட கண்டிப்பா பார்க்கறதா சொல்லிட்டான்...."

"நல்லதா போச்சு"

"அம்மா நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே"

"கோவிச்சுக்கற மாதிரி நீ எதுவும் சொல்லாட்டி கண்டிப்பா நான் கோவிச்சுக்க மாட்டேன்"

"ஆர்த்தி விஷயத்துல எல்லாத்தையும் நீயே தீர்மானம் செய்யறது சரியில்லைன்னு தோணுது"

"அவ என் மருமகள். என் தம்பி என்னை விட நல்லா முடிவெடுக்கறவனாய் இருந்தா அவன் கிட்ட அதை விட்டுருப்பேன். அவன் எந்த விஷயத்துலயும் தானா தீர்மானம் செய்யாம என் கிட்ட தான் எல்லாத்தையும் விடறான். அப்பறம் என்ன செய்யறது...."

ஆகாஷ் வாய் விட்டுச் சொல்ல முடியாமல் தவித்தான். 'அம்மா அவங்க சந்தேகம் உன் மேல் தான் இருக்கு. அப்படி இருக்கும் போது நீ செய்யறதுக்கெல்லாம் அர்த்தம் வேறாகிவிடும்'. அதற்குப் பதிலாக வேறு மாதிரி சொன்னான். "இல்லை. ஆர்த்தியோட தாத்தா, பாட்டி கிட்டயே விடலாமே"

"பதினெட்டு வருஷமா பிரச்சினையை அப்படியே வச்சிகிட்டு எந்தப் பரிகாரமும் செய்யாம இருந்தவங்க கிட்ட இப்ப எதை வச்சு அதைக் கொடுக்கணும்கிறாய்"

அம்மாவிடம் பேசி ஜெயிப்பது சுலபமல்ல. ஆனால் ஆகாஷ் விடவில்லை. "நாம செய்யப் போற சிகிச்சை சரியில்லைன்னு சில பேர் நினைக்கலாம்."

"எவனெவனோ என்னென்னவோ நினைக்கிறான்னு நாம செய்யறதை செய்யாம இருக்க முடியாது. நீ மனசுக்குள்ள எதையோ வச்சிகிட்டுருக்கற மாதிரி தோணுது. என்ன அது உடைச்சு சொல்லு"

ஆகாஷ் எச்சிலை மென்று விழுங்கினான். "ஒண்ணுமில்லைம்மா. தோணியதை சொன்னேன்"

"ஆர்த்தியை டாக்டர் கிட்ட காமிக்கணும்கிறதுல உனக்கு சந்தேகம் இல்லையே"

"இல்லை"

"பிரசன்னாவை விட நல்ல டாக்டர் வேற யாராவது உனக்குத் தெரியுமா?"

"தெரியாது"

"அப்ப இது பத்தி இனி பேசறதுக்கு ஒண்ணும் இல்லை. நீ போய் உன் வேலையைக் கவனி"

ஆகாஷ் மறு பேச்சு பேசாமல் கிளம்பினான்.

★★★★★★★★★★★★★

அதே நேரத்தில் மூர்த்தி தன் காந்தல் விஜயத்தைப் பற்றி பஞ்சவர்ணத்திடம் சொல்லிக் கொண்டு இருந்தான். "அந்த வீரையன் தன் தங்கை அப்பவே செத்துட்டான்னு அடிச்சு சொல்றான். ஆனா அவன் பொய் சொல்றான்னு அவன் கண்ணைப் பார்த்தாலே தெரியுது. ரொம்பவே பயப்படறான்... பத்தாயிரம் ரூபாயைக் கண்ல காட்டுனேன். அவன் வீடு இருந்த நிலைமைக்கு அவன் உண்மையைச் சொல்லி அதை வாங்கியிருந்துருக்கணும். ஆனா வாங்கலை"

பஞ்சவர்ணம் சொன்னாள். "பேராசையை விட பயத்துக்கு சக்தி அதிகம்டா. அவன் பயப்படறான்னா அது சிவகாமிக்காகத் தான் இருக்கும். ஏண்டா ஒரு வேளை சிவகாமியோ இல்லை அவ அனுப்பிய ஆள் யாராவதோ போய் முதல்லயே அவனைப் பார்த்திருப்பாங்களோ?"

"தெரியலை. ஆனா யாரும் அவன் வீட்டுல போய் பார்க்கலைங்கறது உறுதி. அவன் வீட்டு புரோக்கர்ங்கிறதால வேலை செய்யற இடத்துக்குப் போய்ப் பார்த்திருக்க வழியில்லை. ஆனா இவனைப் போகிற வழியில் பார்த்துப் பேசியிருக்க சான்ஸ் இருக்கு."

"வீட்டுல போய் பார்க்கலைங்கறத எப்படி உறுதியா சொல்றே?"

"அவன் வீட்டுக்கு எதிர்ப்பக்கம் நாலு வீடு தள்ளி எப்பவுமே வெளிய கயித்துக் கட்டில்ல உட்கார்ந்திருக்கற ஒரு கிழவியப் புடிச்சேன். நூறு ரூபாக்கு எல்லாம் சொல்லிச்சு. விஜயாவுக்கு அடுத்ததா அவன் வீட்டுக்குப் போன முதல் வெளியாள் நான் தான்னுச்சு"

"என்ன விஜயாவா....?

"ஆமா. யாரோ ஒரு பொம்பளை வீரையன் வீட்டுல ரெண்டு நாள் இருந்ததாகவும் அவனை அண்ணான்னு தான் கூப்பிட்டுகிட்டு இருந்ததாகவும், அமிர்தம் சொன்ன அதே சாயங்காலம் அவசர அவசரமா ஓடி வந்து தன்னோட துணிமணிகளை எடுத்துட்டு போயிட்டதாவும் சொல்லிச்சு"

பஞ்சவர்ணம் எழுந்து அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள். "ஊம் அப்புறம்"

"அந்த வீரையன் குடும்பம் அப்படி யார் கிட்டயும் பேசறதோ பழகறதோ இல்லைங்கறதால் இந்தக் கிழவிக்கு வேற எதுவும் தெரியலை. ஆனா அந்த விஜயா ரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவை அங்க வந்து ரெண்டு மூணு நாள் இருந்துட்டு போவாள்ங்கறதை சொல்லிச்சு"

"வேறென்ன?"

"அந்த வீரையன் நான் யார்னோ, எதுக்காக விஜயாவைப் பத்திக் கேக்கறேன்னோ ஒரு வார்த்தை என் கிட்ட கேக்கலை"

"அந்த விஜயா அமிர்தத்தைப் பார்த்ததா அண்ணன் கிட்ட சொல்லி இருப்பாள். அதனால இந்த வீட்டுல இருந்து யாராவது ஒருத்தர் வருவாங்கன்னு அவன் எதிர்பார்த்துருப்பான்."

"ஏன் பாட்டி அவனை தனியா நாலு தட்டு தட்டிக் கேட்டா என்ன?"

"வேண்டாம். அதுக்கு ரெண்டு காரணம். ஒண்ணு அவனுக்குப் பெருசா எதுவும் தெரிஞ்சுருக்க வாய்ப்பில்லை. அப்படி இருந்துருச்சுன்னா நமக்கு முன்னால் சிவகாமி அவனைப் பார்த்து ஊரை விட்டே கிளப்பி இருப்பாள். சிவகாமி அதைச் செய்யாம அமைதியாய் இருக்கான்னா அவளுக்கு எதிரான எந்த விஷயமும் இவங்களுக்குத் தெரியலைன்னு அர்த்தம். ரெண்டாவது காரணம், அடிதடின்னு வந்துட்டா சிவகாமி காதுல விழாமல் இருக்காது. அடிதடில உன் பேரு மாட்டிகிட்டா ஆர்த்தியைக் கட்டிக்கறது முடியவே முடியாது. நாம கவனமாய் தான் இருக்கணும். முதல்ல அந்த விஜயாவைக் கண்டு பிடிக்கப் பார். மீதிய அப்பறம் பார்க்கலாம்."

சிறிது நேரம் மூர்த்தியும், பஞ்சவர்ணமும் தங்கள் தங்கள் எண்ணங்களில் ஆழ்ந்து இருந்தார்கள். பின் திடீரென்று மூர்த்தி உறுதியான குரலில் சொன்னான். "பாட்டி, என்னைக்கானாலும் சரி எங்கப்பா அம்மாவைக் கொன்ன அந்த சிவகாமியும் அந்த நேபாளமும் என் கையால தான் சாகப் போறாங்க..."

"சந்தோஷம். ஆனா பொறுமையாய் காத்திரு. நான் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தர்றேன். அதை அந்த நேரத்துல நல்லா பயன்படுத்திக்கோ. அது வரைக்கும் மனசுல இருக்கறதை வெளியே காமிச்சுக்காதே"

மூர்த்திக்கு அன்றிரவு தூங்க முடியவில்லை. தன் பெற்றோரின் போட்டோவை பார்த்தபடி நிறைய நேரம் உட்கார்ந்திருந்தான். இன்று தூங்குவது கஷ்டம் என்று தோன்றியது. செல்ஃபோனை எடுத்து எண்களை அழுத்தினான். மறுபக்கத்தில் ஹலோ கேட்டவுடன் சொன்னான். "ரெடியாய் இரு. நான் இப்ப வர்றேன்"

பஞ்சவர்ணம் தன் அறை ஜன்னல் வழியாக பேரன் பைக்கில் போவதைப் பார்த்தாள். கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பதினொன்று. அவள் முகத்தில் அடக்க முடியாத கோபம் தெரிந்தது.

"முட்டாள்...முட்டாள்"

## 53

"Expectation sends an exciting message to our neural system. While it lasts we are alert and most likely to be rewarded." --Max Gunther, The Luck Factor.

பஞ்சவர்ணம் பேரன் வரும் வரை தூங்காமல் காத்திருந்தாள். மூர்த்தி வரும் போது மணி மூன்றாகி இருந்தது. அவன் மாடிப்படி ஏறியவுடன் வராந்தாவில் நின்று கொண்டு இருந்த பாட்டியைப் பார்த்தான். பாட்டியின் முகத்தில் பிரச்சினை என்ற சொல்லைப் படித்தான்.

அவனைப் பார்த்து தனதறைக்கு வர சைகை செய்த பஞ்சவர்ணம் அமைதியாக அறைக்குள் போனாள். அவன் அவள் அறைக்குள் நுழைந்தவுடன் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். குடிபோதையில் இருந்த மூர்த்திக்கு அடுத்த கணம் போதை எல்லாம் பறந்து போனது. கன்னம் சிவந்து வீங்கியதைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை. சிறு வயது முதல் ஒரு முறை கூட அவனை அடித்திராத பாட்டிக்கு இன்று என்ன ஆயிற்று என்றெண்ணி திகைத்தபடி கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

பஞ்சவர்ணம் பல்லைக் கடித்துக் கொண்டு கடுங்கோபத்துடன் சொன்னாள். "சின்ன வயசுல இருந்து உன்னை நான் அடிச்சதில்லை. நீ சிகரெட் பிடிக்க ஆரம்பிச்சப்ப, குடிக்க ஆரம்பிச்சப்ப, பொண்ணுகளோட ஜாலி செஞ்சுட்டு வந்தப்ப, இன்னும் என்னென்னவோ கண்றாவிப் பழக்கம் பழகிட்டு வந்தப்ப எல்லாம் நான் கண்டும் காணாமலும் இருந்தேன். ஏன் தெரியுமா மூர்த்தி. என் அகராதியில் அது எதுவும் தப்பில்லை. என் அகராதியில் தப்புங்கறது ஒண்ணே ஒண்ணு தான். அது என்ன தெரியுமா? முட்டாள்தனம். நீ இன்னைக்கு அது செஞ்சிட்டு வந்திருக்கே...."

மூர்த்தி ஒன்றும் பேசாமல் நின்றான். பாட்டியை இந்த அளவு கோபத்தில் அவன் பார்த்ததில்லை.

"நடந்ததை எல்லாம் நான் உன் கிட்ட சொல்லியாச்சு. ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கோம். ஆர்த்தியைக் கல்யாணம் செய்துக்க என்னென்ன செய்யணுமோ அதைச் செய்யின்னு அடிச்சு அடிச்சு சொல்லியிருக்கேன். அத்தனையும் கேட்டுட்டு பொறுப்பில்லாம வேற எவள் கிட்டயோ போயிட்டு இப்படி வர்றியே இதுக்குப் பேர் என்ன தெரியுமா வடி கட்டின முட்டாள்தனம்...."

மூர்த்தி தலையைக் குனிந்து கொண்டு சொன்னான். "எல்லாரும் தூங்கியாச்சு பாட்டி; யாரும் பார்க்கலை"

"அந்தக் கூர்க்கா தூங்கிட்டானாடா, முட்டாள். அவன் நீ போன நேரத்தையும் வந்த நேரத்தையும் நோட் பண்ணியிருக்க மாட்டான்?"

மூர்த்தி ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்தபடியே நின்றான். பஞ்சவர்ணம் கோபம் குறையாமல் சொன்னாள். "முட்டாளே முதல்லயே எதுவும் நமக்கு சாதகமாயில்லை. ஆர்த்தி சம்பந்தப்பட்ட யாருமே அவளை உனக்குக் கல்யாணம் செய்து குடுக்கத் தயாராய் காத்துகிட்டு இல்லை. சிவகாமி நமக்கு முதல் எதிரி. சந்திரசேகர் ஆகாஷ் இல்லாட்டி பார்த்திபனுக்காவது அவளை கட்டிக் கொடுப்பான், உனக்குத் தரத் தயங்குவான். அந்தப் பாண்டிச்சேரிக் கிழவி உன்னை சந்தேகக்கண்ணோட தான் பார்க்கறா. ஆர்த்திக்கு உன் மேல் பெரிய அபிப்பிராயம் இல்லை. இப்படி இருக்கறப்ப, வேற குறுக்கு வழி எதிலாவது போய் தான் நம்ம காரியத்தை சாதிக்கணும். உனக்கு இப்படி பல தொடர்பு வெளிய இருக்குன்னு தெரிஞ்சா எல்லாமே கை விட்டுப் போயிடும். சீரியசா சொல்றேன். உனக்கு கொஞ்ச நாளாவது கட்டுப்பாடா இருக்க முடியலைன்னா பரவாயில்லை. கொஞ்சம் விஷம் வாங்கி எனக்குக் குடு. குடிச்சுட்டு நான் போய் சேர்ந்துடறேன்....."

"சாரி பாட்டி இனிமேல் இந்தத் தப்பு செய்ய மாட்டேன். ப்ராமிஸ்"

பஞ்சவர்ணம் அவன் குரலில் இருந்த உறுதியால் சிறிது சமாதானம் ஆனாள். குரல் தணிய சொன்னாள். "ஆர்த்தி கழுத்தில் தாலி கட்டிட்டா பின்ன எங்கே வேணும்னாலும் போ, என்ன வேணும்னாலும் செய். நான் எதுவும் சொல்ல மாட்டேண்டா மூர்த்தி. காரியம் முடியற வரைக்கும் நம்ம கவனம் எங்கயும் சிதறக்கூடாதுடா....."

மறுநாள் காலை சிவகாமி ஆர்த்தி அறைக்குள் நுழைந்த போது ஆர்த்தி ஆகாஷ் கொண்டு வந்து வைத்த செடிகளைத் தடவியபடி நின்றிருந்தாள். அந்தச் செடிகள் ஆகாஷுடன் நட்புடன் இருந்த நாட்களின் அடையாளமாக இருந்ததால் அடிக்கடி அவற்றைத் தடவியபடி பழைய நினைவுகளில் ஆழ்வது அவளுக்கு சுகமாக இருந்தது.

ஒரு கணம் சிவகாமிக்கு ஆனந்தியே அங்கு நிற்பது போலிருந்தது. பழைய நினைவுகள் ஒரு சேர வந்து தாக்க சிவகாமி உடனடியாக அவற்றை மனதிலிருந்து அப்புறப்படுத்தினாள். "ஆர்த்தி"

ஆர்த்தி தன் பெரியத்தையின் வரவால் ஆச்சரியமடைந்தாள். "வாங்கத்தை"

சிவகாமி ஆர்த்தி தடவிக் கொண்டு இருந்த செடிகளைப் பார்த்தாள். அந்தச் செடிகளை ஆகாஷ் அறையில் முன்பு கண்டிருந்ததாக நினைவு.

"ஆர்த்தி, டாக்டர் கிட்ட அப்பாயின்மெண்ட் அடுத்த வாரத்துக்கு வாங்கியாச்சு. டாக்டர் ஆகாஷோட க்ளோஸ் ஃப்ரண்ட். பேர் ப்ரசன்னா. கோயமுத்தூர்ல இருக்கான். ரொம்ப திறமைசாலி"

ஆர்த்தி தலையசைத்தாள்.

"நிறைய தடவை போக வேண்டியிருக்கலாம். ஆகாஷையே உன்னைக் கூட்டிகிட்டு போகச் சொல்லி இருக்கேன்"

தன்னைப் பார்க்கக் கூட மனமில்லாத ஆகாஷ் தன்னை பல முறை அழைத்துப் போவதை விரும்புவான் என்று ஆர்த்திக்குத் தோன்றவில்லை. "அவருக்குக் கஷ்டமாய் இருக்காதா?"

"என்ன கஷ்டம்?"

ஆர்த்திக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சிவகாமி அவளையே பார்த்துக் கொண்டு இருந்தாள். ஆர்த்தி மெல்ல சொன்னாள். "இல்லை அவருக்கு வேலை நிறைய இருக்கும்..."

"அதெல்லாம் பெரிய விஷயமில்லை. உனக்கு அவன் கூடப் போக ஒரு மாதிரியா இருந்தா வேறு யாரையாவது ஏற்பாடு செய்யறேன்..."

"ஐயோ அப்படியெல்லாம் இல்லை...." என்று ஆர்த்தி அவசரமாக மறுத்தாள்.

அந்த விஷயம் அத்தோடு முடிந்தது என்பது போல் சிவகாமி லேசாக தலையசைத்து விட்டு ஒரு சாவிக் கொத்தை நீட்டினாள். "இது தான் உங்கம்மாவோட பீரோ சாவிகள். அதில் இருக்கிற பொருள்கள்ல யூஸ் செய்யப் போறத மட்டும் வச்சுட்டு மத்ததை எல்லாம் தனியா எடுத்து ஒதுக்கி வச்சுடு. அப்புறம் பார்க்கலாம்."

ஆர்த்தி தலையசைத்தாள்.

அங்கிருந்து கிளம்ப யத்தனித்த சிவகாமி ஒரு கணம் நின்று சொன்னாள். "உங்கம்மா தன்னோட ஒவ்வொரு பொருள்லயும் ரொம்பவும் பொசசிவா இருந்தா. தன்னோட எதையும் அவள் அவ்வளவு சுலபமா அடுத்தவங்களோட பகிர்ந்துக்கற ரகம் அல்ல. பீரோல இருக்கற எதையும் அடுத்தவங்களுக்கு காமிக்கறதுக்கு முன்னால் அதை நீ ஞாபகம் வச்சுக்கோ...."

சிவகாமி போய் விட்டாள். சாவிக் கொத்தைக் கையில் வைத்திருக்கையில் மனம் சிவகாமி சொன்னதை அசை போட்டது. அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதை ஆர்த்தியால் ஊகிக்க முடியவில்லை. ஒருவித பரபரப்புடன் முதல் பீரோவைத் திறந்தாள்.

# 54

"Curiouser and curiouser!" - Lewis Carroll, Alice in Wonderland

முதல் பீரோவில் ஆனந்தியின் விலையுயர்ந்த ஆடைகள், அழகு சாதனங்கள் எல்லாம் இருந்தன. உள்ளே லாக்கரில் அவள் நகைகள் நிறைய இருந்தன. மேலோட்டமாகப் பார்த்து விட்டு ஆர்த்தி அந்த பீரோவைப் பூட்டி விட்டு அடுத்த பீரோவைத் திறந்தாள். அதில் ஸ்வெட்டர்கள், ஃபோட்டோ ஆல்பங்கள், சில வெள்ளி சாமான்கள் இரண்டு ஷெல்ஃப்களில் இருந்தன. மீதமிருந்த இரண்டு ஷெல்ஃப்களில் டைரிகள் அடுக்கப்பட்டு இருந்தன.

ஆர்த்தி ஆர்வத்துடன் டைரிகளைப் பார்த்தாள். வருடவாரியாக இருந்த டைரிகள் ஆனந்தியின் பத்தாவது வயதில் இருந்து ஆரம்பித்தன. ஒருவித படபடப்புடன் கடைசி டைரியைப் பார்த்தாள். அங்கு இருந்த கடைசி டைரி ஆர்த்தி பிறந்த ஆண்டின் டைரி. ஆனந்தியின் கடைசி இரண்டு டைரிகள் அங்கு இருக்கவில்லை. அன்று பஞ்சவர்ணம் சொன்ன வார்த்தைகள் ஆர்த்தி காதில் மீண்டும் ஒலித்தன. "நீங்க வர்றதுக்கு முந்தின நடுராத்திரியில் ஆர்த்தியோட அம்மா ரூமுக்குப் போய் சிவகாமி ஏதோ எடுத்துகிட்டு போனதை நான் கண்ணால் பார்த்தேன். எதை எடுத்துட்டு போனாளோ அந்த மகராசி எனக்குத் தெரியலை.....".

கடைசி வருடங்களில் தான் ஆனந்தி சந்தோஷமாக இருக்கவில்லை, ஆனால் அதைப் பற்றி தன் பெற்றோரிடம் எதுவும் சொல்லவில்லை என்பது ஆர்த்தி நினைவுக்கு வந்தது. முக்கியமான அந்த இரண்டு டைரிகள் இல்லாதது ஏமாற்றத்தை அளித்தாலும் தாயைப் பற்றி அவள் எழுத்துகளில் இருந்தே தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்த சந்தோஷம் ஆர்த்தியின் மனதில் எழுந்தது. முதலில் தன் அறையின் தாழ்ப்பாளைப் போட்டு விட்டு, வராந்தா பக்கமிருந்த ஜன்னலை சாத்தி விட்டு வந்து தாயின் டைரிகளைப் புரட்ட ஆரம்பித்தாள்.

ஆனந்தியின் எழுத்துக்கள் முத்து முத்தாக அழகாக இருந்தன. இந்த நாள் இந்த நிகழ்ச்சிகள் என்று எழுதாமல் தன் சிந்தனைகளை, தன்னைப் பாதித்தவைகளை எழுதி இருந்தாள். ஒருசில நாள் நிகழ்ச்சிகள் மூன்று பக்கங்கள் கூட இருந்தன. சில நாட்கள் ஒன்றையும் எழுதவில்லை. ஆகவே சில வருட டைரிகள் எல்லாப் பக்கங்களும் நிரம்பி இருக்க சில வருடங்களில் சில காலிப் பக்கங்களும் இருந்தன. தன் மனதிற்குப் பட்டதை எல்லாம் எழுதியிருந்த அந்த எழுத்துக்களில் நேர்மை இருந்தது. துடிப்பு இருந்தது. தனித்தன்மை இருந்தது. நியாயத்திற்காகப் போராடும் தைரியம் இருந்தது... சிறிது சிறிதாக ஆனந்தி அவள் மனதில் வடிவம் பெற ஆரம்பித்தாள்.

ஆரம்ப டைரிகளில் ஆனந்தி தன் தந்தை தாயின் இடையே இருந்த ஆழமான அன்பையும், அவர்களுக்கிடையே சதா வரும் வாக்குவாதங்களையும் சுவாரசியமாக எழுதி இருந்தாள். "இந்த சண்டைகள் தான் அவர்கள் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் விதம் போல் எனக்குத்

தெரிகிறது. வாக்குவாதத்தில் அப்பா என்றுமே அம்மாவை ஜெயித்ததாய் எனக்கு நினைவில்லை. மேற்கொண்டு எதுவும் பேச முடியாதபடி அம்மா சாமர்த்தியமாக நிறுத்துகையில் அப்பாவுக்குக் கோபம் அதிகமாக வந்து கத்த ஆரம்பிக்கிறது வழக்கம். அவர்களுக்கு ஜாதகம் பார்த்த எட்டிமடை ஜோசியன், அம்மாவோட அம்மா செய்து கொடுத்த தண்ணி காபின்னு ஒரு பெரிய புகார் லிஸ்ட்டை அப்பா சொல்ல ஆரம்பிப்பார்.... அம்மா அமைதியாகி விடுவாள். ஆனால் அப்பா எப்போதாவது அமைதியாக இருந்தாலும் அம்மாவால் அதைப் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. ஏதாவது வம்புக்கு அவரை மெள்ள இழுப்பாள்...."

தன் தந்தை தாயைப் பற்றியும் ஆனந்தி பாரபட்சமில்லாமல் கணித்திருந்தாள். தந்தையின் மீது உயிரையே வைத்திருந்தாலும் தந்தையை விடத் தாய் புத்திசாலி என்பதையும், நியாயமானவள் என்பதையும் எழுதியிருந்தாள். தந்தை தன் குறைகளைக் கண்டு கொள்ளாத போது தாய் அவற்றை சுட்டிக் காட்டத் தவறியதில்லை என்பதை ஆனந்தி எழுதி இருந்தாள். மேலும் தன் தாய் எப்போதும் தன்னை விமரிசித்தபடியே இருந்ததைப் பல இடங்களில் எழுதி இருந்தாள். கூடவே எழுதியிருந்த ஒரு அபிப்பிராயம் ஆர்த்தியின் கவனத்தை ஈர்த்தது.

"அம்மாவின் விமரிசனங்கள் எல்லாம் பெரும்பாலும் என்னை ஒரு வீட்டின் மருமகளாகப் போகிறவள் என்ற கோணத்திலேயே இருந்தன. பெண் என்பவள் பொறுத்துக் கொண்டு போக வேண்டியவள் என்று அம்மா ஆனவரை என் மனதில் புகுத்தப் பார்க்கிறாள். அதென்னவோ எனக்கு அது சரியாகப் படவில்லை. பெண்ணாய்ப் பிறந்ததாலேயே பொறுமையைக் கடைபிடிக்க வேண்டியவள் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பொறுத்துக் கொள்ள முடிந்ததைத் தான் ஒருத்தி பொறுத்துக் கொள்ள முடியும்.... ஆனால் அம்மாவைத் தப்பு சொல்ல முடியவில்லை. எல்லா அம்மாக்களும் இதையே தான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது தோழிகள் பேச்சில் இருந்து தெரிகிறது...."

ஆர்த்தி படிப்பதை நிறுத்தி ஒருகணம் கண்களை மூடிக் கொண்டு யோசித்தாள். அம்மாவால் பொறுமையைக் கடைபிடிக்க முடியாதது தான் அவளை அகால மரணமடைய வைத்ததோ? பொறுமை என்றால் எந்த விஷயத்தில்? அம்மாவைப் பொறுமை இழக்க வைத்த விஷயம் எதுவாக இருக்கும்? பொறுமை இழந்த அம்மா என்ன செய்தாள்?.....கேள்விகள் சரமாரியாக வந்தன என்றாலும் பதில்கள் எதற்கும் கிடைக்கவிலை.

மீண்டும் அந்த டைரிகளின் பக்கங்களை ஆர்த்தி புரட்டினாள். ஆனந்தி சந்திரசேகரை சந்தித்ததையும், காதல் மலர்ந்ததையும் எழுதி இருந்த இடங்களில் நிறைய இடங்களில் வசன நடைக்குப் பதிலாக கவிதை நடை இருந்தது. காதல் வரும் போது கவிதையும் வந்து விடுமோ? சந்திரசேகரின் புன்னகையில் இருந்து அவரது நடை, உடை, பேச்சு பற்றி எல்லாம் ஆனந்தி எழுதி இருந்த விதம் அவளுடைய காதலின் ஆழத்தைக் காட்டின.

சிவகாமியைப் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த இடத்தை ஆர்வத்துடன் ஆர்த்தி படித்தாள். "நம் காதலை அவர் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களா என்று நான் கேட்ட போது 'என் பெரியக்கா எஸ் சொன்னா போதும்' என்றார். 'பெரியக்கா எஸ் சொல்லலைன்னா?....' என்று கேட்டேன். அப்படியொரு நிலையை அவரால் யோசித்துக் கூடப் பார்க்க முடியவில்லை என்பது அவர் முகத்தைப் பார்த்த போது எனக்குப் புரிந்தது. பிறந்த போதே தாயை இழந்து, பெரியக்கா வளர்த்ததால் அவர் அவர்கள் மேல் உயிரையே வைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்...."

"ஆனாலும் என்னால் என் மனதில் எழுந்த கேள்விக்கு விடை காணாமல் இருக்க முடியவில்லை. மறுபடி மறுபடி கேட்டேன். 'பெரியக்கா எஸ் சொல்லலைன்னா?...." அவர் சொன்னார். "சொல்ல வைப்பேன்"

"அவங்க பிடிவாதமா இருந்தாங்கன்னா?" என்று கேட்ட போது "நானும் பிடிவாதமா இருந்து சம்மதம் வாங்குவேன்" என்றார்.

ஆனால் ஒரு தடவை கூட அவர்கள் எதிர்த்தாலும் உன்னைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்று அவர் சொல்லவேயில்லை. எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது...."

அதற்குப் பின் சிவகாமியைச் சந்தித்ததையும், சிவகாமி சம்மதித்ததையும், அவள் வீட்டுக்கு வந்து பெண் கேட்டதையும், சிவகாமியால் எல்லோரும் கவரப்பட்டதையும் விவரமாக ஆனந்தி எழுதி இருந்தாள். சிவகாமியின் கம்பீரத்தையும், தெளிவாக முடிவெடுக்கும் தன்மையையும், புத்திசாலித்தனத்தையும் பாராட்டி எழுதியிருந்தாள்.....

பக்கங்களைப் புரட்டிக் கொண்டே வந்த ஆர்த்தி அந்த டைரியில் சில பக்கங்கள் கிழிக்கப்பட்டு இருந்ததைப் பார்த்து திகைத்தாள்.

# 55

Success is not measured by what you accomplish, but by the opposition you have encountered, and the courage with which you have maintained the struggle against overwhelming odds." -- Orison Swett Marden

இரண்டு டைரிகள் கிடைக்காததும், தற்போது ஒரு டைரியில் சில பக்கங்கள் கிழிக்கப்பட்டிருப்பதும் ஆர்த்திக்குப் பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியது. கிழிக்கப்பட்டிருந்த பக்கங்களில் என்ன எழுதப்பட்டிருக்கும் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. அந்தப் பக்கங்கள் ஆனந்தியின் கல்யாணம் முடிந்தவுடன் எழுதப்பட்டிருந்த பக்கங்கள். அந்தப் பக்கங்களை யார் கிழித்திருப்பார்கள்? ஆனந்தியே எழுதிக் கிழித்திருப்பாளோ? இல்லை இது சிவகாமியின் கைங்கர்யமா?

அடுத்த பக்கங்களைப் புரட்டினாள் ஆர்த்தி. அமிர்தத்தைப் பற்றி ஆனந்தி ஓரிடத்தில் அதிருப்தியைத் தெரிவித்திருந்தாள். "இவரது சின்னக்காவைப் பார்க்கும் போது தான் நான் ஏழை என்கிற நினைவே எனக்கு ஏற்படுகிறது. அதை ஞாபகப்படுத்துகிற மாதிரி ஏதாவது ஒரு கேள்வி அல்லது பேச்சு. இந்த விஷயத்தில் பெரியக்கா பெருந்தன்மையானவர்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் என்னை ஒரு தர்மசங்கடமான நிலைக்கு அவர்கள் ஆளாக்கவில்லை....." இதை பார்வதியும் முன்பு சொல்லி இருந்தது ஆர்த்திக்கு நினைவுக்கு வந்தது.

இன்னொரு இடத்தில் ஆகாஷைப் பற்றியும் பார்த்திபனைப் பற்றியும் ஆனந்தி அழகான குழந்தைகள் என்று குறிப்பிட்டு இருந்தாள். அடுத்ததாக ஓரிடத்தில் அர்ஜுனைப் பற்றி விரிவாக ஆனந்தி எழுதியிருந்ததை ஆர்வத்துடன் ஆர்த்தி படித்தாள்.

"பெரியக்காவின் எடுபிடியாக இருக்கும் நேபாளம் என்கிற அந்தப் பையன் பார்க்கிற போதெல்லாம் ஒருவித அருவருப்பை ஏற்படுத்தினான். அதுவும் அவரருகில் அவனைப் பார்க்கையில் ஏதோ துர்க்கையும், அசுரனும் சேர்ந்து இருப்பது போல எனக்குத் தோன்றுகிறது. அவனை அவர்களைத் தவிர வேறு யாருமே ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. ஒருநாள் இவரிடம் அவனைப் பற்றிக் கேட்டேன். இவர் அவனைப் பற்றிச் சொன்ன தகவல்கள் சுவாரசியமாக இருந்தன.."

"சிவகாமியக்காவும் அத்தானும் நேபாள யாத்திரைக்குப் போன போது தான் அவனைப் பார்த்திருக்கிறார்கள். பசுபதிநாதர் கோயிலுக்குப் போய் விட்டு வரும் வழியில் ஒரு பையன் மேல் பல சிறுவர்கள் கல் எறிந்து கொண்டு இருப்பதைப் பார்த்த சிவகாமியக்கா டாக்சியை நிறுத்தச் சொல்லி ஓடிப் போய் அவனைக் காப்பாற்றி இருக்கிறார். அந்தப் பையன் மிகவும் அசிங்கமாய் இருப்பதாலும், அவனுக்கு தாய் தந்தை யாரும் இல்லாததாலும் இது போல் பல முறை நடப்பதாக அந்த டிரைவர் தெரிவித்திருக்கிறான். இந்தியா வரும் போது அவனையும் அக்கா அழைத்து வந்து விட்டார்கள் என்று இவர் சொன்னார்."

"மறுநாள் அக்காவிடம் பேசும் போது அவனைப் பற்றிப் பேசினேன். அக்கா அதைப் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. அக்கா இல்லாத போது அத்தானிடம் மெள்ள அவன் பேச்சை எடுத்தேன். அவர் நேரில் பார்த்தவர் ஆகையால் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார். அந்தப் பையனிடம் அவர்கள் பிறகு பேச்சுக் கொடுத்த போது அவனுடைய சிறு வயதிலேயே தந்தை இறந்து விட்டார் என்றும் தாய் மட்டும் இருக்கிறாள் என்றும் சொல்லியிருக்கிறான். அவனை அவனுடைய தாயிற்குக் கூடப் பிடிக்கவில்லையாம். அவனை ஒரு அவமானச் சின்னமாக அவன் தாய் நினைத்திருக்கிறாள். அவனை விட்டு விட்டு யாரோ ஒருவனுடன் அவள் ஓடிப் போய் மூன்று மாதமாகிறது என்பதையும் அவன் சொல்லி இருக்கிறான்."

‘அத்தான் சொன்னார். "எனக்கும் அவனைப் பார்க்கப் பரிதாபமாய் தான் இருந்தது. உடம்பெல்லாம் கல்லடிபட்ட காயங்கள் இருந்தாலும் அவன் சொல்லும் போது அவன் கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வரவில்லை. இவளுக்கு அவன் அம்மா மேல் வந்த கோபத்திற்கு அளவேயில்லை. 'ஒரு தாய் இப்படி நடந்து கொள்வாளா?" என்று ஆறாமல் நாலைந்து தடவை என்னைக் கேட்டாள். கடைசியில் அவனைக் கூட்டிக் கொண்டு போவது என்று முடிவெடுத்தாள். எனக்கென்னவோ அதில் உடன்பாடு இருக்கவில்லை. இங்கேயே அவன் பாதுகாப்பாய் இருக்க ஏற்பாடு செய்து அதற்குப் பணம் வேண்டுமானாலும் அனுப்பலாம் என்று சொன்னதை சிவகாமி ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு முடிவு எடுத்து விட்டால் மாற்றிக் கொள்கிற வழக்கம் சிவகாமிக்கு இல்லை. அவனை அவள் எங்களுடன் அழைத்து வந்து விட்டாள்"’

ஆனந்தி தொடர்ந்து எழுதி இருந்தாள். "இவருக்கும் கூட அக்கா இப்படியொரு அருவருப்பான பையனை அழைத்து வந்தது பிடிக்கவில்லை. ஆனால் இவரிடம் ‘பிடிக்கலைன்னா நீ பார்க்காதேடா’ என்று அக்கா கறாராக சொன்னதாகச் சொன்னார். இதெல்லாம் கேட்ட போது எனக்குக் கண்ணில் நீர் வந்து விட்டது. எப்படிப்பட்ட மனம் இந்தப் பெரியக்காவிற்கு என்று வியந்தேன். வெளிப்படையாக நேபாளத்திடம் கனிவாகப் பேசியோ, இரக்கத்தைக் காட்டியோ நான் பார்க்கவில்லை. ஆனால் ஒரு மனிதனாக அவர்கள் மட்டுமே இந்த வீட்டில் அவனை நடத்துகிறார்கள் என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன். எல்லோரும் அவனிடம் பேச நேர்கையில் அவன் தோளைப் பார்த்துத் தான் பேசினார்கள். அவர்கள் மட்டுமே அவன் முகத்தைப் பார்த்துப் பேசுகிறார்கள். பெற்ற தாய் கூட வெறுத்து நிர்க்கதியாக விட்டுச் சென்ற ஒருவனை அழைத்து வந்து அடைக்கலம் கொடுத்து அவனை மனிதனாக நடத்தும் பெரியக்கா என் மனதில் இமயமாக உயர்ந்து போனார்....."

ஆர்த்திக்கு மேலே படிக்க முடியவில்லை. மனம் கனத்தது. அர்ஜுனுடைய அந்த நிர்க்கதியான நிலையை ஒரு கணம் கற்பனை செய்து பார்த்தாள். மற்றவர்களுடைய உபத்திரவம் இல்லாமல் வாழ்வதே பெரிய விஷயம் என்று கல்லடிபட்டும், வெறுப்பான பார்வைகள் பட்டும் அவன் எவ்வளவு பெரிய நரகத்தை அனுபவித்திருப்பான் என்று நினைக்கையில் மனம் பதைத்தது. அவனை அப்படி விட்டுப் போன அந்தத் தாயை நினைத்துப் பார்த்தாள். இப்படியும் ஒரு தாய் இருப்பாளா? என்று அவளும் ஆச்சரியப்பட்டாள். ஒருவேளை சிவகாமி அவனைக் காப்பாற்றி அழைத்து வந்திராவிட்டால் அவன் என்னவாகி இருப்பான் என்று கற்பனையால் கூட அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

டேவிட் தான் எப்படி டாக்டரானேன் என்று அன்று சொன்ன கதையும், அர்ஜுனைப் பற்றி அம்மா எழுதி இருந்த கதையும் படிக்கையில் ஆகாஷ் தன் மேல் கொண்ட ஆத்திரத்தில் தவறில்லை என்று ஆர்த்திக்குத் தோன்ற வைத்தது.

'இப்படிப்பட்ட ஒருத்தி கொலை செய்ததாக நான் சந்தேகப்பட்டால் அவர்கள் பெற்ற பிள்ளைக்கு என் மேல் கோபம் வராமல் என்ன செய்யும்?'

அந்த நேரத்தில் மூர்த்தி கதவின் சாவித் துளை வழியாக உள்ளே பார்த்ததை ஆர்த்தி கவனிக்கவில்லை. ஆர்த்தியின் அறைக்கதவு மட்டுமல்லாமல் ஜன்னலும் சாத்தப்பட்டு இருந்ததால் மூர்த்தி சந்தேகமடைந்து சாவித்துளை வழியாக பார்த்துக் கொண்டு இருந்தான். அந்த இரண்டு பீரோக்களும் திறந்திருந்ததையும் ஆர்த்தி டைரிகளைப் படித்துக் கொண்டிருப்பதையும் பார்த்து அவன் கண்கள் வியப்பில் விரிந்தன.

# 56

"If we do not watch, we lose opportunities." - Seneca

பஞ்சவர்ணம் தன் பேரன் சொன்ன தகவலால் பரபரப்படைந்தாள். அடுத்த கணம் சரமாரியாக கேள்விக்கணைகள் அவளிடம் இருந்து வந்தன. இரண்டு பீரோவும் திறந்திருந்ததா, திறந்திருந்த பீரோவில் என்னென்ன எல்லாம் இருந்தன, ஆர்த்தி டைரி படித்துக் கொண்டு இருந்தாளென்றால் படித்துக் கொண்டு இருந்த டைரியைத் தவிர மீதி டைரிகள் எங்கிருந்தன, உத்தேசமாக எத்தனை டைரிகள் அவள் படித்திருக்கக்கூடும், அவள் முகபாவனை எப்படி இருந்தது, அவள் கூட யார் இருந்தார்கள்.....

சில கேள்விகளுக்குச் சரியான பதில் சொன்ன மூர்த்திக்கு சிலவற்றுக்குப் பதில் தெரியவில்லை. அவன் கடைசியில் சிரித்துக் கொண்டே சொன்னான். "பாட்டி, நான் சாவித்துளை வழியாய் தான் பார்த்திருக்கிறேன்ங்கிறதை மறந்துட்டீங்களா. ஏதோ நேரில் முழுசா நிறைய நேரம் பார்த்துட்டு வந்த மாதிரி கேள்வி கேட்டுகிட்டே போறீங்க?"

"புத்திசாலிக்கு நிறைய நேரம் வேண்டியதில்லை, சாவித்துளை அளவே அதிகம் ...." என்ற பஞ்சவர்ணம் பின்னால் கைகளைக் கட்டிக் கொண்டு அறையில் நடக்க ஆரம்பித்தாள். "ஏண்டா சாவி எப்படிடா ஆர்த்திக்குக் கிடைச்சுது?"

"சிவகாமி கொடுத்திருப்பா"

"அப்படின்னா அவ தனக்கு பாதகமான எதையும் அந்த பீரோல விட்டுருக்க மாட்டா. சரி அதை விடு. அவளுக்கு ட்ரீட்மென்ட் பார்க்கப் போற டாக்டர் யார்னு தெரிஞ்சுதா?"

"ப்ரசன்னா. ஆகாஷோட நண்பன். ரொம்ப பிரபலமானவன். கோயமுத்தூர்ல இருக்கான். அடுத்த வாரம் அப்பாயின்மென்ட் ஆகாஷ் வாங்கியிருக்கான்"

"அவளை அழைச்சுட்டு யார் போவாங்க?"

"அது சரியாத் தெரியலை"

"சந்திரசேகரையோ இல்லை ஆகாஷையோ தான் சிவகாமி கூட அனுப்புவாள். அந்த ஆள் எப்படி ட்ரீட்மெண்ட் செய்யப் போறான்னு ஏதாவது தெரியுமா?"

"சரியாத் தெரியலை. ஆனா ஹிப்னாடிசமாய் இருக்கலாம்னு நினைக்கறேன்"

"அந்த டாக்டர் தன்னோட க்ளினிக்குல பேஷண்டோட ரெக்கார்டெல்லாம் எப்படி வச்சுக்கறானாம். டேப்பா, இல்லை பேப்பரா வச்சுக்கறானா?"

மூர்த்திக்குத் தெரியவில்லை. பஞ்சவர்ணம் சொன்னாள். "அதைக் கண்டுபிடி. எப்படி வச்சாலும் அதை நம்ம கைல வரவழைக்கணும்"

"எப்படி பாட்டி?"

"எதைச் செய்யவும் உலகத்துல ஆள் இருக்குடா. ரேட்டு தான் முன்ன பின்ன இருக்கும். பணம் என்ன செலவானாலும் பரவாயில்லை. முதல்லயே சரியான ஆளைப் பிடிச்சு ரெடியா இரு. புரிஞ்சுதா?"

மூர்த்தி தலையசைத்தான். பாட்டி எல்லா விஷயத்தையும் யோசித்து வைத்திருப்பது அவனுக்கு வியப்பாய் இருந்தது. அதிர்ஷ்டம் சிறிது கருணை காட்டியிருந்தாலும் பாட்டி தன் சாமர்த்தியத்தால் எத்தனையோ சாதித்திருப்பாள் என்பதில் அவனுக்கு சந்தேகம் இருக்கவில்லை.

அடுத்தபடியாக அந்தப் பீரோக்கள் விஷயமாக யார் யாரிடம் என்ன கேட்டு எப்படித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பஞ்சவர்ணம் மூர்த்திக்குச் சொல்ல ஆரம்பித்தாள்.

அதே நேரத்தில் ஆர்த்தி தன் தாத்தா பாட்டியிடம் பீரோ சாவி கிடைத்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டு இருந்தாள். ".....பெரியத்தை அந்த ரெண்டு பீரோ சாவியும் குடுத்துட்டுப் போனாங்க"

சில வினாடிகள் நீலகண்டனும் பார்வதியும் திகைப்பில் அமர்ந்திருந்தார்கள். நீலகண்டன் தான் முதலில் சுதாரித்தவர். பரபரப்புடன் எழுந்து வந்து பேத்தியின் அருகில் உட்கார்ந்தார். "என்ன இருந்துச்சு"

ஆர்த்தி இருந்த பொருட்களைப் பட்டியலிட்டாள். டைரிகளில் கடைசி இரண்டு வருட டைரிகள் கிடைக்கவில்லை என்று சொன்ன போது உடனடியாக நீலகண்டன் சொன்னார். "சிவகாமி தான் எடுத்திருப்பாள். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேணுமா?"

பார்வதி சொன்னாள். "அவள் எடுத்திருந்தா ஏன் சாவியைத் தரணும். சாவி காணோம், அது இதுன்னு ஏதாவது சாக்கு சொல்லி சமாளிச்சிருக்கலாமே."

"ஆனா எத்தனை நாளுக்கு சமாளிக்க முடியும்? ரூப்ளிகேட் சாவியாவது செஞ்சு ஒரு நாள் திறந்து தானே ஆகணும். அதான் சாமர்த்தியமா நல்ல பிள்ளையாட்டம் சாவியைக் கொண்டாந்து குடுத்துட்டா. அதான் அந்த சம்பந்தியம்மா அவள் அந்த ரூம்ல இருந்து எதையோ எடுத்துட்டுப் போறதைப் பார்த்ததா சொன்னாங்களே"

"அந்தம்மா பேச்சை என் கிட்ட எடுக்காதீங்க. எனக்கு பத்திகிட்டு வருது. அந்தம்மா கிட்ட நாம பேசிட்டு வந்து அரை மணி நேரம் ஆகலை. அதுக்குள்ள அதை ஆகாஷ் கிட்ட பத்த வச்சு நம்மள

இந்த வீட்டை விட்டே அனுப்பற அளவு அந்தம்மா கிரிமினல் புத்தி வேலை செய்யுது. இந்த லட்சணத்துல அந்தம்மா சிவகாமி பத்தி சொல்லுது. ஈயத்தைப் பார்த்து இளிச்சுதாம் பித்தளை"

"அதான் அந்தப் பையன் மூர்த்தி எதனால சொன்னேன்னு சொல்லி கால்ல விழாத குறையா மன்னிப்பு கேட்டானே"

"ஆகாஷ் கிட்ட சொல்றதிலயும் அந்தப் பையனுக்கு வேகம் தான். கால்ல விழாத குறையா மன்னிப்பு கேக்கறதுலயும் அந்தப் பையனுக்கு வேகம் தான். அதென்னவோ எனக்கு யதார்த்தமா தெரியலை. அவன் பேசறதெல்லாம் அவன் பாட்டி சொல்லிக் குடுத்த டயலாக் மாதிரி தான் தெரியுது..."

"அந்தம்மா என்ன சினிமா டைரக்டரா, இல்லை அந்தப் பையன் தான் நடிகனா டயலாக் சொல்லித் தர"

"அப்படியிருந்தாத் தான் பரவாயில்லையே. அந்த சினிமாவப் பார்க்காம இருந்து தொலையலாம். அவங்க நம்மளையில்ல டைரக்ட் செய்யப் பார்க்கற மாதிரி தெரியுது...?"

ஆர்த்தி வாய் விட்டுச் சிரித்தாள். நீலகண்டனும், பார்வதியும் தங்கள் வாக்குவாதத்தை விட்டு விட்டு பேத்தியைப் பார்த்தார்கள்.

ஆர்த்தி புன்னகையுடன் சொன்னாள். "அம்மா அவங்க டைரியில் உங்க சண்டை பத்தியெல்லாம் விவரமா எழுதி இருக்காங்க. தாத்தாவோட எட்டிமடை ஜோசியன், பாட்டியோட அம்மா தாத்தாவுக்கு தண்ணிக் காப்பி கொடுத்ததுன்னு எதையும் விடலை. தாத்தா எப்படி எல்லாம் செல்லம் கொடுத்தாங்க, பாட்டி எப்படி எல்லாம் விமரிசனம் செஞ்சாங்கன்னு எழுதி இருந்தாங்க"

கேட்ட மறுகணம் அந்த முதிய தம்பதியரின் கண்கள் நிரம்பின. ஒன்றும் பேசாமல் இருவரும் மௌனமாக இருந்தார்கள். இருவரும் தங்கள் மகளின் நினைவுகளில் ஆழ்ந்து போனதாய்த் தோன்றியது.

பார்வதி கண்ணீருடன் கேட்டாள். "நான் விமரிசனம் செஞ்சதையும், திட்டினதையும் மட்டும் தான் எழுதி இருக்காளா? என் பொண்ணு மனசுல அது மட்டும் தான் பதிஞ்சிருக்கா?"

ஆர்த்தி பாட்டியிடம் சொன்னாள். "சேச்சே அப்படியில்லை பாட்டி. அம்மா அதை ஒரு உயர்ந்த விஷயமாய் தான் எழுதி இருக்காங்க. அவங்க மேல் இருக்கற பாசமும், உங்களோட நியாய உணர்ச்சியும் அம்மாவுக்கு நல்லாவே புரிஞ்சிருக்கு"

பார்வதி ஒன்றும் சொல்லவில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு கணவனைப் பார்த்தாள். அவர் கண்களில் இருந்து இன்னமும் கண்ணீர் வந்த வண்ணம் இருந்தது. குரல் கரகரக்க தனக்குள் சத்தமாகப் பேசிக் கொண்டார். "என் பொண்ணு எவ்வளவு நல்லவளா இருந்தா. அவளைக் கொல்றதுக்கு எப்படி மனசு வந்துச்சோ தெரியலையே"

# 57

When you have eliminated the impossible, that which remains, however improbable, must be the truth.

– Sherlock Holmes, "The Sign of Four"

கணவனின் துக்கத்தைப் பார்க்க சகிக்காமல் பார்வதி பேத்தி பக்கம் திரும்பினாள். "ஆர்த்தி, ஆனந்தி வேற என்ன எல்லாம் எழுதியிருக்காள்"

"நான் தொடர்ச்சியாய் படிக்கலை பாட்டி. மேலோட்டமாய் அங்கொன்னும், இங்கொன்னுமாய் தான் படிச்சிகிட்டிருக்கேன்..... அப்புறம் ஒரு டைரியில் கொஞ்சம் பக்கம் கிழிஞ்சிருந்துது. அம்மாவே எழுதி கிழிச்சிருப்பாங்களோ"

"அவ அப்படி கிழிச்சிருக்க மாட்டா, வேற யாராவது தான் கிழிச்சிருக்கணும்...."

நீலகண்டன் கண்களைத் துடைத்துக் கொண்டு பேத்தியிடம் கேட்டார். "எந்த வருஷத்து டைரியில் கிழிச்சு இருந்தது?"

"அவங்க கல்யாணம் முடிஞ்சவுடனே சில பக்கங்கள்...."

சில நிமிடங்கள் மூவரும் மௌனமாய் இருந்தார்கள். கிழிந்த பக்கங்களில் ஆனந்தி என்ன எழுதியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் அவர்கள் மனதை நெருடியது.

ஆர்த்தி அப்போது தான் நினைவு வந்து சொன்னாள். "எனக்கு ப்ரசன்னான்னு ஒரு டாக்டரை தேர்ந்தெடுத்து அவர் கிட்ட அடுத்த வாரம் அப்பாயின்மென்ட் வாங்கியிருக்காங்க. அவர் ஆகாஷோட ஃப்ரண்டாம். ஆகாஷையே என்னைக் கூட்டிகிட்டு போக அத்தை சொல்லியிருக்காங்க".

பார்வதிக்கு அவள் சொன்ன தகவல் திருப்தியைத் தந்தது. ஆர்த்தி ஆகாஷுடன் போவது சிறிதாவது அவன் கோபத்தைத் தணிக்க உதவும் என்று அவள் நினைத்தாள். ஆனால் நீலகண்டனை அந்த தகவல் சந்தேகப்பட வைத்தது. அவரைப் பொறுத்த வரை அவர் மகள் மரணத்தில் சிவகாமிக்கு பங்கு இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. அதனால் அவள் தேர்ந்தெடுத்த டாக்டரிடம் அவள் மகன் ஆகாஷ் ஆர்த்தியை அழைத்துக் கொண்டு போவது என்பது அவருக்கு சரியாகப்படவில்லை.

"ஏன் உங்கப்பா கூட்டிகிட்டு போக மாட்டாராக்கும்" என்று அவர் பேத்தியைக் கேட்டார்.

"தெரியலை" என்ற ஆர்த்தி தனதறைக்குக் கிளம்பினாள். அம்மாவின் டைரியை மேலும் படிக்கும் ஆர்வத்தில் மகள் இருந்தாள். "தாத்தா பாட்டி நீங்களும் அந்த டைரிகளைப் படிக்க வர்றீங்களா?"

பார்வதி சோகமாகச் சொன்னாள். "சின்ன வயசுல இருந்தே அவள் டைரியை நாங்க படிக்கறது அவளுக்குப் பிடிக்காது. அதனால் நாங்க படிக்க வரலை."

ஆர்த்திக்கு ஒரு மாதிரியாக இருந்தது. தாயாக இருந்தாலும் அவள் டைரியைத் தான் படிக்கிறதும் தவறோ? அவள் முகம் மாறியதைக் கண்ட பார்வதி அவசரமாகச் சொன்னாள் "அசடு. நீ படிக்கறது வேற விஷயம். உனக்கு அவள் எப்படிப்பட்டவள், அவள் சிந்தனைகள் எந்த மாதிரி இருந்தது, உலகத்தை அவள் எப்படிப் பார்த்தாள்னு எல்லாம் தெரிஞ்சுக்க அது உதவும்....."

நீலகண்டன் அழுத்தமாகச் சொன்னார். "நீ கண்டிப்பாய் படிக்கணும். அவள் கொலை செய்யப்பட்டது எதனால்ங்கறதுக்கு ஏதாவது துப்பு அந்த டைரியில் எங்கேயாவது ஒரு மூலையில் இருக்கலாம். அதைக் கண்டுபிடி..."

பார்வதி விரக்தியுடன் சொன்னாள். "அந்தக் கடைசி ரெண்டு வருஷத்து டைரியும் காணோம். ஏதாவது எழுதியிருந்தா அந்த ரெண்டு டைரியில தான் எழுதி இருக்கணும். அதுவும் நடந்து முடிஞ்சதை மாத்தற சக்தி நமக்கு இல்லைங்கறப்ப அந்த நினைவுகளோட போராடி என்ன பிரயோஜனம்? கண்டு பிடிச்சு என்ன செய்யறதா உத்தேசம்? பழி வாங்கவாவது உடம்புல தெம்பு இருக்கா? இல்லை வயசு தான் இருக்கா?...."

நீலகண்டன் மனைவியை முறைக்க ஆர்த்தி புன்னகையுடன் எழுந்தாள். 'அடுத்த வாக்குவாதம் ஆரம்பிக்கப் போகிறது.'

மறுபடி ஆனந்தியின் டைரியைப் புரட்டினாள். டேவிட்– மேரி தம்பதியரைப் பற்றி அன்போடு எழுதி இருந்தாள். மேரியிடம் ஒரு நல்ல சிநேகிதியைக் கண்டதாய் எழுதி இருந்தாள். சிவகாமியின் அழகான குழந்தையைப் பற்றி எழுதி இருந்தாள்.

"... கொழு கொழுன்னு அழகாய் குழந்தை ஆகாஷ் இருந்தான். பொழுது போகாத நேரங்களில் அவனைத் தூக்கி வைத்துக் கொண்டு விளையாடினால் நேரம் போவதே தெரியவில்லை. அக்காவிடம் பேசும் போது ஆகாஷ் என்ற பெயர் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் சொன்னார். "எனக்கு எல்லைகள் என்பதே அலர்ஜி ஆனந்தி. எல்லைகள் இருந்தால் சிறைபட்டுப் போகிற மாதிரி, சிறுத்துப் போகிற மாதிரி தோன்றுகிறது. அதனால் தான் என் மகனுக்கு எல்லைகள் இல்லாத ஆகாயத்தோட பெயர் வைத்தேன்." அக்காவின் அந்தப் பெயர்க் காரணம் எனக்குப் பிடித்திருந்தது."

"அந்தக் குழந்தையை நான் கொஞ்சி விளையாடிய அளவிற்கு அவர்கள் கொஞ்சி விளையாடாதது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. அதையும் அவர்களிடம் கேட்டேன். "செல்லம் கொடுத்து அவனைக் கெடுக்க விரும்பலை. தாய் இல்லாப் பிள்ளைன்னு உன் புருஷனை செல்லம் கொடுத்து வளர்த்தி நான் படற அவஸ்தை போதும்". இதை இவரிடம் சொன்ன போது இவர் சிரித்தார். "அக்கா என் மேல் பாசமாய் இருந்தாள், வளர்த்தினாள் என்பதெல்லாம் நிஜம் தான். அவள் மேல் நான் உயிரையே வைத்திருக்கிறேன் என்பதும் நிஜம். ஆனால் செல்லம் எல்லாம் கொடுக்கலை. அக்காவுக்கு செல்லம்னா என்னன்னே தெரியாதுங்கறது தான் பெரிய நிஜம்....."

கதவை யாரோ தட்டினார்கள். ஆர்த்தி டைரியை மூடினாள். டைரிகளை எங்கேயாவது மறைத்து வத்து விட்டு கதவைத் திறக்கலாமா என்ற எண்ணம் ஒரு கணம் அவளுக்குத் தோன்றியது. ஆனால் கதவு பலமாகத் தட்டப்படவே வேறு வழியில்லாமல் உடனடியாகப் போய் கதவைத் திறந்தாள். சந்திரசேகர் நின்றிருந்தார்.

"என்ன செஞ்சுட்டு இருந்தாய்?"

கேட்டு விட்டு ஆர்த்தி பதில் சொல்வதற்கு முன் உள்ளே நுழைந்தவர் திறந்திருந்த அந்த பீரோக்களையும் கட்டிலில் வைக்கப்பட்டிருந்த டைரிகளையும் பார்த்து அதிர்ந்து போய் நின்றார். அவர் சுதாரிக்க சிறிது நேரம் தேவைப்பட்டது. சுதாரித்தவுடன் "சாவி.... சாவி..." என்றார்.

"பெரியத்தை தான் கொண்டு வந்து தந்தார்கள்"

சந்திரசேகர் அந்த டைரிகளை வெறித்துப் பார்த்தார். அவர் மனம் கொந்தளித்தது அவர் முகத்தில் தெரிந்தது. "ஆர்த்தி உங்கம்மா தன்னோட டைரிகளை யாரையும் படிக்க விட்டதில்லை...."

ஆர்த்தி மனதில் மறுபடியும் குற்றவுணர்ச்சி எழுந்தது. ஆனால் பாட்டி சொன்னது நினைவுக்கு வர சொன்னாள். "எனக்கு அம்மா பத்தி எதுவும் தெரியலையேப்பா. இதைப் படிக்கிறப்ப அவங்க எப்படி யோசிச்சாங்க, எப்படி வாழ்ந்தாங்கன்னு கொஞ்சம் புரிஞ்சுக்க முடியுது. அது தான் படிக்கறேன். தப்பாப்பா"

மகள் வெகுளித்தனமாகக் கேட்ட விதம் சந்திரசேகரை நெகிழ்த்தியது. "அப்படியில்லைம்மா.....படி... ஆமா எல்லா டைரியும் இதில் இருக்கா?"

"கடைசி ரெண்டு வருஷங்களோட டைரிகள் மட்டும் இல்லைப்பா"

ஒரு கணம் மனதில் ஏதோ கணக்குப் போட்டு விட்டு சந்திரசேகர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். ஆர்த்தி தந்தையைப் புதிய கண்ணோட்டத்துடன் பார்த்தாள். அவர் நிம்மதிப் பெருமூச்சு அவளை அப்படிப் பார்க்க வைத்தது. சிவகாமி எல்லா நேரங்களிலும் ஒரே போல் இருந்ததால் அவளைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தாலும் சந்திரசேகர் மனதில் என்ன ஓடுகிறது என்பதை ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தது.

அவள் வந்ததில் இருந்து அவர் நடந்து கொண்டதை எல்லாம் நினைத்துப் பார்த்தாள். அந்த அறை அவரை நிலைகொள்ளாமல் இருக்க வைத்த விதம், அவள் கனவைப் பற்றி பார்வதி சொன்ன போது அவர் முகம் பேயறைந்தது போல் மாறிய விதம், அவர் அறையில் ஆனந்தியின் புகைப்படம் இல்லாதது, இப்போதைய அவரது நிம்மதிப் பெருமூச்சு எல்லாவற்றையும் ஒருசேர எண்ணிப் பார்க்கையில் அவளுக்குப் புதிய சந்தேகம் பிறந்தது. ஒரு வேளை குற்றவாளி சிவகாமி இல்லையோ? இவர் தானோ? இவரைக் காப்பாற்றத் தான் சிவகாமி முயற்சி செய்கிறாளோ?

# 58

"There is only one success, to be able to spend your life in your own way."
– Christopher Morley

திடீர் திடீர் என்று முகம் மாறும் மகளை சந்திரசேகரால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. பெரியக்கா இங்கு இருந்திருந்தால் சுலபமாகக் காரணத்தை சொல்லி இருப்பாள் என்று அவருக்குத் தோன்றியது. எல்லாம் டாக்டரிடம் போய் வந்தால் சரியாகும் என்று அவர் நினைத்தார். அவள் ஆழ்மனதில் என்ன பதிந்திருக்கிறதோ அவருக்குத் தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் அது கனவில் தான் அவளைப் பாதிக்கின்றது என்றால் விழித்திருக்கையிலும் இப்படி ஏன் பாதிக்கின்றது என்பது அவருக்குப் புரியவில்லை.

மகளை மிகவும் கனிவாகப் பார்த்துச் சொன்னர். "என்ன ஆர்த்தி இப்படி அடிக்கடி உனக்கு முகம் வெளுத்துப் போகுது? உன்னை எதும்மா இப்படி பயமுறுத்துது?"

ஆர்த்தி என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தாள். அம்மா கொலையில் எனக்கு உங்கள் மேல் கூட சந்தேகமாயிருக்கிறது என்று அவள் எப்படிச் சொல்வாள்?

"எனக்குத் தெரியலைப்பா"

மகளின் அந்த பதில் அவர் மனதை என்னவோ செய்தது. அவள் அருகில் அமர்ந்து அவள் தோளைத் தடவியபடி சொன்னார். "இந்த விஷயத்தில் நீயும் என்னை மாதிரி தான் போல இருக்கு. நானும் சின்னதில் எது எதுக்கோ பயந்துப்பேன். பெரியக்கா வீட்டில் இல்லைன்னா அவ வர்ற வரைக்கும் ஒரு இனம் புரியாத பயம் மனசில் இருந்துகிட்டே இருக்கும். அவள் வந்த பிறகு பயம் சுத்தமா போயிடும். வெளிச்சம் வந்தா இருட்டு காணாம போற மாதிரி...."

"நீங்க எதுக்குப்பா பயந்தீங்க?"

சந்திரசேகர் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லப் பிரியப்படாதது போல் தோன்றியது. யோசித்து விட்டுப் பொதுவாகச் சொன்னார். "எனக்கு சொல்லத் தெரியலை..... சின்னக்கா என்னை விடக் கொஞ்சம் தைரியசாலி. ஆனா பெரியக்காவுக்கு பயம்கிறதே கிடையாது. நான் அவள் மாதிரி ஒருத்தி எனக்கு மகளாய் பிறக்கணும்னு ஆசைப்பட்டேன். உங்கம்மா அவங்கப்பா மாதிரி ஒரு மகன் பிறக்கணும்னு ஆசைப்பட்டாள். அந்த ஆள் கிட்ட அப்படி என்ன இருக்குன்னு அவள் அப்படி ஆசைப்பட்டாள்னு எனக்கு இன்னைக்கு வரைக்கும் விளங்கலை.."

தாத்தாவை அப்படிக் குறைவாக அவர் சொன்னதில் அவளுக்கு லேசாக வருத்தம் ஏற்பட்டது. அதை வெளியில் காட்டிக் கொள்ளாதிருக்க முயற்சித்து அவரிடம் கேட்டாள். "நான் அத்தை மாதிரி தைரியசாலி இல்லைன்னு உங்களுக்கு ஏமாற்றமா இருக்காப்பா?"

சந்திரசேகருக்கு மகள் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்று சந்தேகம் ஏற்பட வேகமாக மறுத்தார். "சேச்சே அப்படியெல்லாம் இல்லை ஆர்த்தி... அக்கா சொல்றாள் நீ அப்படியொன்னும் பயந்த சுபாவக்காரி இல்லையாம். இயல்பாவே நீ மென்மையானவள்னாலும் தைரியசாலின்னு சொல்றாள். மனுஷங்களை கணிக்கிறதில் அக்காவை மிஞ்ச ஆளில்லை. பின்னே நீ எப்படி இருந்தாலும் எனக்கு வருத்தமில்லை....."

தன்னைப் போய் சிவகாமி தைரியசாலி என்று எப்படிச் சொன்னாள் என்று ஆர்த்திக்குத் தெரியவில்லை. அப்பாவிடம் பேசிக் கொண்டு இருக்கையில் பழைய சந்தேகம் கரைய ஆரம்பித்தது. "இவர் கண்டிப்பாய் கொலை செய்திருக்க மாட்டார்" என்று அவளுக்குத் தோன்றியது. அவர் மேல் உள்ள பாசத்தால் அப்படி நினைக்கிறோமா என்று ஒரு கேள்வி மனதின் மூலையில் எழுந்தாலும் அவள் அதை சட்டை செய்யவில்லை. உள்ளுணர்வு தந்தைக்கு ஆதரவாக இருந்தது.

சந்திரசேகர் தொடர்ந்தார். "..... நான் பெரியக்கா மாதிரி ஒரு மகள் வேணும்னு ஆசைப்பட்டது அவள் தைரியசாலிங்கறதுக்காக மட்டும் அல்ல. எல்லா விஷயங்கள்லயும் அவள் வாழ்க்கை நிறைவா இருக்கு. ஆசைப்பட்டபடி வாழ்க்கை அமைஞ்சது. எங்கப்பா அவள் மேல் உயிரயே வச்சிருந்தார், அவள் கணவர் அவள் மேல் உயிரையே வச்சிருக்கார், நான், சின்னக்கா, ஆகாஷ், டேவிட், அர்ஜுன்னு எத்தனையோ பேர் அவளை நிறையவே நேசிக்கிறோம், மதிக்கறோம். இப்படி எல்லாராலயும் நேசிக்கப்படறதை விட பெரிய அதிர்ஷ்டம் ஏதாவது இருக்க முடியுமா ஆர்த்தி. அந்த மாதிரி அதிர்ஷ்டம் உனக்கும் அமையணும்னு நான் ஆசைப்பட்டேன்மா...."

ஆர்த்தி மனதில் சொல்லிக் கொண்டாள். "நான் அப்படி எல்லாராலயும் நேசிக்கப்படணும்னு பேராசைப்படலைப்பா. ஆகாஷ் ஒருத்தர் அப்படி என்னை நேசிச்சா போதும்னு தான் ஆசைப்படறேன். அதுவே நடக்காத அளவு அதிர்ஷ்டம் தான் எனக்கு இருக்கு"

சிவகாமி புராணத்தை இதற்கு மேல் கேட்கத் திராணி இல்லாத மூர்த்தி இனியும் ஓட்டுக் கேட்டால் தலை வெடித்து விடும் என்று அங்கிருந்து கிளம்பி பாட்டியிடம் சென்று, கேட்டதை ஒப்பித்தான்.

அவன் முடித்த போது பஞ்சவர்ணம் காதுகளைப் பொத்திக் கொண்டாள். "ஏண்டா இவன் இப்படி போற பக்கமெல்லாம் அந்த கொலைகாரியைப் பத்தியே புராணம் பாடறானே. அவனுக்கு சின்ன வயசுலயே ஏதோ வசியம் பண்ணி வச்சிருப்பாளோ? எந்த மந்திரவாதியைப் பிடிச்சு செஞ்சாளோ தெரியலையே. தெரிஞ்சா நாமளும் அவன் கிட்ட போயிருக்கலாம்"

மூர்த்தி பதில் பேசாமல் ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தான்.

பஞ்சவர்ணம் சிறிது மௌனம் சாதித்து விட்டுச் சொன்னாள். "அந்தக் கடைசி வருஷங்களோட டைரிக இல்லைன்னு சொன்னா அன்னைக்கு ராத்திரி சிவகாமி அந்த பீரோல இருந்து எடுத்துட்டுப் போனது அந்த ரெண்டு டைரியாத் தான் இருக்கணும். என் சந்தேகம் சரியாயிடுச்சு பார்த்தாயா? அதுசரி உனக்கு அடிக்கடி ஏன் முகம் வெளுத்துப் போகுதுன்னு அவன் கேட்டானே, அதுக்கு முன்னாடி என்ன நடந்தது?"

"கடைசி ரெண்டு வருஷங்களோட டைரிகள் காணோம்னு ஆர்த்தி சொன்னப்புறம் கொஞ்ச நேரத்துல அவ அப்படி ஆயிட்டா."

"எதனால அவள் அப்படி பயந்திருப்பாள்னு நீ நினைக்கிறாய்?"

மூர்த்தி அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. ஆர்த்தி என்ன நினைத்து பயந்தாள் என்பதை அவன் எப்படி ஊகிக்க முடியும்? இதற்கெல்லாம் பதில் அவனுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்று எப்படி பாட்டி எதிர்பார்க்கிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. ஆனால் யோசித்துப் பார்த்த போது அவன் மனதில் வேறு ஒரு கேள்வி விஸ்வரூபம் எடுத்து நின்றது.

"என்னடா யோசிக்கிறாய்?"

மூர்த்தி தயங்கித் தயங்கிக் கேட்டான். "ஆர்த்தியோட அம்மா அந்த கடைசி டைரிகள்ல நம்ம குடும்பத்தப் பத்தி கூட எழுதி இருப்பாளா பாட்டி?"

பஞ்சவர்ணம் உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. ஒரு நிமிட மௌனத்திற்குப் பின்னால் பலவீனமாக அவளிடம் இருந்து பதில் வந்தது. "எழுதி இருக்கலாம்..."

# 59

The effect of one good-hearted person is incalculable.
- Oscar Arias Sanchez

கார் வேகம் சற்று குறைய சிவகாமி வியாபார சிந்தனைகளில் இருந்து மீண்டாள். தெருவின் ஓரத்தில் நடந்து கொண்டு இருந்த ஒரு இளம் பெண்ணைத் தவிர தெருவில் யாரும் இல்லை. வாகனங்களும் இல்லை. இதற்கு முன் கார் வேகம் குறைந்த போது கூட அதே இளம் பெண் தான் தெருவில் நடந்து சென்று கொண்டு இருந்தாள். தற்செயல் என்பது இரண்டாவது முறையாக நடந்தால் அது தற்செயலாக இருக்க முடியாது.

சிவகாமிக்கு சுற்றி வளைத்துப் பேசத் தெரியாது. நேரடியாக அர்ஜுனிடம் கேட்டாள். "யாரந்தப் பொண்ணு?"

அர்ஜுன் தூக்கிவாரிப் போட்டது போல் விழித்தான். "மேடம்?"

"யாரந்தப் பொண்ணுன்னு கேட்டேன்"

அர்ஜுன் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. எப்போதும் சலனமில்லாமல் இருக்கக்கூடியவன் இப்போது அவமான உணர்வால் நெளிந்தான். "சாரி மேடம்"

"நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலை"

"ஒரு ஸ்கூல்ல டீச்சராய் இருக்கிறாள். பேர் வனிதா"

"சரி. சாரி எதுக்கு சொன்னாய்?"

அர்ஜுனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. மௌனமாக இருந்தான். கார் வழக்கமான வேகத்தில் ஓட நல்ல வேளையாக சிவகாமி உடனடியாக அவனை மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

சிவகாமிக்கு மனதில் ஒருவித குற்ற உணர்வு உறுத்த ஆரம்பித்தது. பத்து வயதில் அவனை அழைத்து வந்திருக்கிறாள். அழைத்து வந்து கிட்டத்தட்ட 25 வருடங்கள் ஆரம்பித்து விட்டன. இப்போது அவனுக்கு வயது 35. அவனும் ஒரு மனிதன், அவனுக்கும் இயற்கையான உணர்வுகள் இருக்கும் என்றெல்லாம் எண்ணிப் பார்க்காதது பெரிய தவறு என்று தோன்றியது.

"அந்தப் பொண்ணை எவ்வளவு நாளாய் தெரியும்?" சிவகாமி விடுவதாக இல்லை.

அர்ஜுன் தர்மசங்கடத்துடன் சொன்னான். "ஆறு மாசமா தெரியும். ஆனா அந்தப் பொண்ணுக்கு என்னைத் தெரியாது மேடம். அவ என்னைப் பார்த்தது கூட இல்லை. நான் பேசினதும் இல்லை".

சிவகாமி கேள்விக்குறியுடன் அவனைப் பார்த்தாள்.

அவன் அந்தக் கேள்விக்குறிக்கு தாழ்ந்த குரலில் பதிலளித்தான். "என் முகத்தைப் பார்த்து உங்களைத் தவிர யாரும் பேசறதில்லை மேடம்"

சிவகாமிக்கு மனதை என்னவோ செய்தது. சிறிது நேரம் ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தாள்.

"உனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கா?"

"எனக்குப் பிடிச்சிருந்து என்ன பிரயோஜனம் மேடம். என்னை யாருக்காவது பிடிக்குமா?"

"அவள் குடும்பத்தப் பத்தி சொல்லு"

அர்ஜுன் தர்மசங்கடத்துடன் சிவகாமியைப் பார்த்தான். அவனுக்கு அவள் இந்த விஷயத்தை இத்துடன் விட்டு விட்டால் தேவலை என்று தோன்றியது. மெள்ள தயக்கத்துடன் சொன்னான்.

"ஏழைக் குடும்பம். அம்மா இல்லை. அப்பா ஒரு சேட்டு கிட்ட வேலை பார்க்கறார். தம்பி ப்ளஸ் டூ படிக்கறான்..."

சிவகாமி சிந்திக்க ஆரம்பித்தாள். அர்ஜுன் தர்மசங்கடம் குறையாமல் மௌனமாகக் காரை ஓட்டினான்.

சிவகாமியின் கார் வீட்டுக்கு வந்து சேர்ந்த போது சங்கரன் தோட்டத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து தேவனின் "மிஸ்டர் வேதாந்தம்" படித்துக் கொண்டிருந்தார். அதை அவர் எத்தனையாவது முறையாகப் படிக்கின்றார் என்பது அவருக்கே தெரியாது. கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டவுடன் நிமிர்ந்து பார்த்தார். மனைவி காரில் இருந்து இறங்கி நேரடியாக அவரை நோக்கி வரவே புத்தகத்தை மூடினார்.

'ஏதோ ஒரு பிரச்சினை அவளை பாதித்திருக்கிறது' என்பதை அவள் வந்த விதத்தில் இருந்தே அவர் கண்டு பிடித்தார். அதிகாலை, சாப்பிட்ட பிறகான இரவு வேளை தவிர மற்ற நேரங்களில் வந்து கதைக்க அவளுக்கு நேரம் இருப்பதில்லை. பிசினஸ், வீட்டு காரியங்கள் என்று அவளுக்கு ஏகப்பட்ட வேலைகள். ஆபிஸ் சம்பந்தமான வேலைகள் பற்றி அவள் என்றுமே அவரிடம் பேசியதில்லை. வீட்டு சம்பந்தமான விஷயங்களில் கூட அவருக்குத் தெரியத் தேவை இல்லாதவை என்று அவள் சில விஷயங்களைச் சொல்வதில்லை. அவரும் துருவிக் கேட்பதில்லை. ஆனால் பெரிதாக ஒரு விஷயம் அவளைப் பாதிக்குமானால் அவள் அவரிடம் சொல்லாமல் இருந்ததில்லை. அவளை எதுவும் பெரிதாகப் பாதிப்பதில்லை என்பது வேறு விஷயம். அபூர்வமாய் சில விஷயங்கள் அவளையும் மீறி பாதிப்பதுண்டு.

அவள் வந்து எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தவுடன் கேட்டார். "என்ன சிவகாமி?"

சிவகாமி அர்ஜுன் விஷயத்தைச் சொன்னாள். "..... நான் பெரிய தப்பு செஞ்சுட்ட மாதிரி தோணுதுங்க. பத்து வயசுல கூட்டிகிட்டு வந்தேன். நான் மனசுல நினைச்சு முடிக்கறதுக்குள்ள அவன் எதையும் எனக்காக செஞ்சுட்டு வந்தான். ஆனா அவனுக்கும் இயல்பான உணர்வுகள் இருக்கும்னு இவ்வளவு நாள் நான் நினைச்சுப் பார்க்காம இருந்துட்டேன்னு மனசு உறுத்துதுங்க. இப்ப அவனுக்கு 35 வயசாச்சு. இன்னும் தனிமரமாவே இருக்கான். அவனுக்குன்னு ஒரு துணை, ஒரு குடும்பம்னு செஞ்சு கொடுக்காம நான் அலட்சியமா இருந்துட்டேன்னு தோணுது..."

சங்கரன் மனைவியைக் கனிவுடன் பார்த்தார். "சிவகாமி, அவனுக்கு அந்த விகாரமான முகம் இல்லாட்டி நாம எதாவது செஞ்சுருக்கலாம். நம்மால முடியாத காரியத்தை நாம் எப்படி செய்ய முடியும், சொல்லு"

"என்னால முடியாத காரியம்னு நான் எதையும் நினைச்சதில்லை"

அவள் குரலில் தொனித்த அந்த அசாதாரண உறுதி அவரை பயப்பட வைத்தது. அந்தப் பெண் வனிதாவை எப்படியாவது அர்ஜுனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுவாள் என்பதில் அவருக்கு சந்தேகமேயில்லை. அவசரமாக அவளிடம் சொன்னார். "சிவகாமி, இதெல்லாம் பலவந்தப்படுத்தி செய்யற காரியம் இல்லைங்கறது உனக்குத் தெரியாததல்ல. அந்தப் பொண்ணு அல்ல எந்தப் பொண்ணும் அவன் முகத்தைப் பார்க்கக் கூட விரும்ப மாட்டா."

"மாத்த முடியாததுன்னு எதுவும் இல்லைங்க. இந்த இருபத்தியொராவது நூற்றாண்டுல இருந்துகிட்டு அப்படிச் சொல்றதுல அர்த்தமேயில்லை. ப்ளாஸ்டிக் சர்ஜரிங்கறது இந்த காலத்தில்

பெரிய விஷயமேயில்லை. நான் அர்ஜுன் முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி செஞ்சு மாத்தப் போறேன். அதுக்கு என்ன செலவானாலும் பரவாயில்லை. அப்புறமா அவன் கல்யாணத்தைப் பத்தி பேசலாம்....."

அவள் முடிவு செய்து விட்டாள் என்பது அவருக்குப் புரிந்தது. ஆனால் அவள் முகத்தில் இன்னும் அந்தக் குற்ற உணர்ச்சி தங்கி இருந்ததைப் பார்த்து சங்கரன் கேட்டார். "நல்ல விஷயம். அது தான் தீர்மானிச்சுட்டியே. இன்னும் ஏன் ஒரு மாதிரியா இருக்கே?"

"அவனோட இந்த 35 வயசுல தோணியது அவனோட 25 வயசுலயே எனக்குத் தோணியிருந்தா இந்தப் பத்து வருஷமும் நல்லா வாழ்ந்திருப்பானேன்னு தோணுதுங்க"

சங்கரன் நெகிழ்ந்து போனார். பெற்ற மகனை அனாதரவாக விட்டுப் போன ஒரு தாயிற்கு இருக்காத அந்தக் குற்ற உணர்ச்சி, அவனுக்கு இத்தனை செய்த பின்னும் இவளுக்குத் தோன்றுவது அவருக்கு பிரமிப்பாக இருந்தது. எப்போதும் போல தனக்குள் சொல்லிக் கொண்டார். "இவள் மாதிரி ஒரு மனைவி கிடைக்க நான் நிறைய கொடுத்து வச்சிருந்துருக்கணும்"

# 60

Whenever God prepares evil for a man, He first damages his mind.
– Sophocles 'Antigone'

அடுத்த இரண்டு நாட்களில் அம்மாவின் டைரிகளை ஆர்த்தி முழுவதுமாகப் படித்து முடித்தாள். அம்மா ஒரு நிஜ மனுஷியாக அவள் மனதில் வடிவெடுத்து நின்றாள். எதிலும் எப்போதும் நியாய உணர்வு, எதற்கும் பயப்படாத தன்மை, சுய கௌரவம் ஆகியவை ஆனந்தியின் தனித் தன்மைகளாக இருந்தன.

ஆர்த்தியைப் பிரசவித்துக் கையில் எடுத்துக் கொண்ட அந்தக் கணத்தை ஆனந்தி மிகவும் பரவசமாக எழுதி இருந்தாள். அவள் அனுபவித்த அந்த சந்தோஷத்தை இரண்டு பக்கங்களில் எழுதி இருந்தாள். படிக்கையில் ஆர்த்திக்குக் கண்களில் நீர் நிரம்பியது. 'இப்படிப்பட்ட அம்மா என்னை வளர்க்க எனக்குத் தான் கொடுத்து வைக்கலை'.

ஆனால் எங்குமே கொலை செய்யப்படுவதற்கான காரணங்கள் காணப்படவில்லை. சந்தோஷமான வாழ்க்கையைத் தான் அந்த டைரிகள் பிரதிபலித்தன. சிவகாமியைப் பற்றி எங்குமே தவறாக எழுதப்படவில்லை. 'கணவன் ஆரம்பத்தில் அக்கா எதிர்த்தாலும் தன்னைத் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லாதது ஒரு மாதிரியாக இருந்தது' என்று துவக்கத்தில் குறிப்பிட்டிருந்தாலும் திருமணமான பிறகு சிவகாமியின் அதிகாரத்தைப் பற்றி ஆனந்தி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஒருவேளை கிழிந்திருந்த டைரிப் பக்கங்களில் எழுதி இருந்தாளோ என்னவோ பிறகு எதிலும் இல்லை.

நாளை மாலை டாக்டர் ப்ரசன்னாவிடம் அப்பாயின்மென்ட். லேசாக வயிற்றைப் புரட்டியது. ஒருவித இனம் புரியாத பயம் வர ஆரம்பித்தது. அதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்த போது தான் மூர்த்தி அவள் அறைக்கு வந்தான். "ஹாய் ஆர்த்தி"

"ஹாய்"

மூர்த்தி பாட்டி சொன்னதை மனதில் வைத்து மிக பவ்யமாக ஆனால் தோழமை உணர்வை முகத்திலும் நடவடிக்கையிலும் காட்டப் பழகி இருந்தான்.

புன்னகையுடன், ஒருவித புரிந்து கொண்ட தொனியில் கேட்டான். "என்ன ஆர்த்தி யோசிச்சிகிட்டு இருக்கிறாய். நாளைக்கு டாக்டர் கிட்ட போறதைப் பற்றியா?"

அவன் அதை நினைவு வைத்திருந்ததும், புரிந்து கொண்டு கேட்டதும் ஆர்த்திக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவள் ஆச்சரியத்தையும் புரிந்து கொண்டது போல் கரகரத்த குரலில் மூர்த்தி சொன்னான். "ஆர்த்தி நான் சொன்னால் நீ நம்புவாயா இல்லையான்னு எனக்குத் தெரியலை. ஆனா அந்தக் கனவு உன்னைப் படுத்தின பாட்டைப் பார்த்த பிறகு நீ அதுல இருந்து விடுபடணும்னு நான் கடவுளை வேண்டாத நாள் இல்லை. எனக்கே ஏன்னு தெரியலை. ஒருவேளை சின்ன வயதிலேயே அப்பா அம்மா இல்லாமல் ரெண்டு பேரும் வளர்ந்திருக்கோம்கிறதால இருக்கலாம். அதனால தானோ என்னவோ உன் கஷ்டம் என் கஷ்டமாய் எனக்குத் தோண ஆரம்பிச்சுடுச்சு..."

அவன் வார்த்தைகள் ஆர்த்தியின் மனதை நெகிழ வைத்தன. "தேங்க்ஸ்" என்றாள்.

"உன்னை டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு ஆகாஷ் போகட்டும்னு தீர்மானம் செஞ்சது யார் ஆர்த்தி?"

"பெரியத்தை தான்"

பதில் ஏதும் சொல்லாமல் மூர்த்தி அர்த்தமுள்ள மௌனம் சாதித்தான். அந்தத் தகவல் தன்னை சந்தேகப்பட வைப்பதை வாயால் சொல்லாமல் முகபாவனையால் அவளுக்குத் தெரிவித்தான்.

ஆர்த்தி ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்கு ஆகாஷுடன் செல்வதில் சந்தோஷமே தவிர எந்த வருத்தமும் இல்லை என்பதை அவளும் சொல்லவில்லை.

அந்த நேரத்தில் தோட்டத்தில் டேவிடும் மேரியும் சங்கரனிடம் பேசிக் கொண்டு இருந்ததை ஜன்னல் வழியாக பார்த்த மூர்த்தி இகழ்ச்சியுடன் புன்னகைத்தான். "இந்த ரெண்டு பேருக்கும் எத்தனை பட்டாலும் புத்தி வராது"

அவன் பார்வை போன இடத்தைப் பார்த்த ஆர்த்தி டேவிட் மேரியைப் பார்த்தவுடன் சந்தோஷமடைந்தாள். அவர்களை அவர்கள் வீட்டுக்குப் போய் விட்டு வந்த பிறகு பார்க்கவில்லை. ஆனால் மூர்த்தி ஏன் இப்படி சொல்கிறான் என்பது அவளுக்கு விளங்கவில்லை. "என்ன மூர்த்தி சொல்றீங்க?"

அவளிடம் சொல்வதா வேண்டாமா என்பது போல ஒரு நிமிடம் தர்மசங்கடமாக மௌனம் சாதித்து விட்டு பிறகு மூர்த்தி சொன்னான். "இவங்க பொண்ணு லிசாவும் ஆகாஷும் காதலிச்சுட்டு ஒண்ணா திரிஞ்சுகிட்டு இருந்தாங்க. கடைசில கல்யாணம்னு வந்தப்ப ஆகாஷ் கையை விரிச்சுட்டான். அந்தப் பொண்ணு கொஞ்ச நாள் பைத்தியம் மாதிரி சுத்திகிட்டு இருந்துது. அப்புறமா வேற ஏதோ பையனைப் பார்த்து கல்யாணம் செஞ்சு கொடுத்தாங்க. இத்தனை ஆனாலும் இதுங்க உங்க பெரியத்தைக்குக் கூஜா தூக்கறதை நிறுத்தலை. பணம் பாதாளம் வரைக்கும் பாயும்கிறதுக்கு உதாரணத்தை நீ வேற எங்கே போயும் பார்க்க வேண்டாம்....."

ஆர்த்திக்கு ஒரு கணம் மூச்சு விட முடியவில்லை. ஆகாஷைப் பற்றி இப்படி கேள்விப்பட்ட போது மனதை ஏதோ பலமாக அழுத்தியது. ஆகாஷ் அப்படி செய்யக்கூடியவன் என்பதை நம்ப முடியவில்லை. அவள் முகமாற்றத்தை உள்ளுக்குள் ரசித்தாலும் வெளியே கவனிக்காதவன் போல

காட்டிக் கொண்ட மூர்த்தி தொடர்ந்து சொன்னான். "இத்தனை ஆன பிறகும் ஆகாஷ்னா அப்படியே இன்னும் உருகறாங்க. காரணம் அவங்கம்மா. ஆனா நான் அவங்களுக்கு எந்தக் கெடுதலும் செஞ்சதில்லை. இருந்தாலும் என்னைக் கண்டா ஆகறதில்லை. காரணம் என் கிட்ட பணமோ, அதிகாரமோ இல்லை..."

அவன் சொல்லிக் கொண்டே போனான். ஆனால் ஆர்த்தி மனதில் எதுவும் பதியவில்லை. ஆகாஷை நம்பியதைப் போலவே அவள் டேவிட் மேரியையும் நம்பினாள். இவன் சொல்வதெல்லாம் அவர்களுக்குப் பொருந்துகிற மாதிரி தெரியவில்லை. ஆனாலும் ஒருவித கலவரம் மனதைக் கலக்க ஆரம்பித்தது. "எல்லாமே ஒருவித நாடகம் தானோ. சாமர்த்தியமாக நடிக்கிறார்களோ? அம்மாவும் இப்படித் தான் ஏமாந்து போனாளோ?"

மூர்த்தி அவள் அருகில் வந்து ரகசியமாக மெல்லச் சொன்னான். "இவங்க போடற டிராமாவை அவ்வளவு சுலபமாய் கண்டு பிடிச்சுட முடியாது. உங்க அப்பாவோட அப்பாவும் ஆரம்பத்துல ஏமாந்து தான் போனார், தன்னோட மூத்த பொண்ணு மேல உயிரையே வச்சிருந்தார். ஆனா கடைசியில் உங்க பெரியத்தையோட சுயரூபத்தைக் கண்டு பிடிச்சுட்டார். உங்கப்பா பேரில் சொத்து எழுதி வச்சா அதை அப்படியே உன் பெரியத்தை அபகரிச்சுடுவான்னு சந்தேகம் வந்தவுடனே சொத்தை மாத்தி எழுதினார். தன்னோட ரெண்டு பொண்ணுகளுக்கும் கொஞ்சம் எழுதி வச்சவர் பையன் பேர்ல மீதியை எழுதி வைக்கல. பையனோட வாரிசுக்குத் தான் எழுதி வச்சிருக்கார். இப்ப அத்தனை சொத்துக்கும் நீ தான் அதிபதி."

# 61

The foot less prompt to meet the morning dew,
The heart less bounding at emotion new,
And hope, once crushed, less quick to spring again.
-Matthew Arnold 'Thyrsis' (1866)

மூர்த்தி போன பின் நிறைய நேரம் ஆர்த்தி குழப்பத்தில் அமர்ந்திருந்தாள். சிவகாமி மீது அவள் தந்தை உயிரையே வைத்திருந்தார் என்று சந்திரசேகர் சொல்லி இருந்தார். ஆனால் மூர்த்தியோ அவர் மகள் மீது கடைசியில் சந்தேகப்பட்டு சொத்தையே மாற்றி எழுதியதாகச் சொல்கிறான். இதில் எது உண்மை. சிவகாமியைப் பொறுத்த வரை எல்லாமே ஒன்றுக்கு ஒன்று முரணாகத் தான் காதில் விழுகிறது. ஆரம்பத்தில் இருந்து இப்படித் தான் நடக்கிறது....

பார்வதி பேத்தி அறைக்குள் நுழைந்த போது பேத்தியின் சோர்வைக் கண்டு பயப்பட்டாள். நாளை டாக்டரிடம் போகும் இந்த நேரத்தில் இப்போது என்ன புதிதாக ஒரு மாற்றம்?

"என்ன ஆச்சு ஆர்த்தி?"

ஆர்த்தி மூர்த்தி சொன்னதை எல்லாம் சொன்னாள். ஆகாஷ் டேவிட் மகள் லிசாவைக் காதலித்து விட்டுப் பின் கைவிட்டதாக மூர்த்தி சொன்னதைச் சொன்ன போது அவள் முகத்தில் வேதனை தெரிந்தது. பார்வதி உடனடியாகச் சொன்னாள். "அந்த தடியன் பொய் சொல்றான். ஆகாஷ் அப்படிப்பட்டவன் அல்ல"

"அவர் ஏன் பொய் சொல்லணும் பாட்டி?'

"சில பேருக்கு ஒரு நாளைக்கு இத்தனை பொய் சொல்லணும்னு ஒரு வேண்டுதல் இருக்கும். அத்தனை பொய் சொல்லாட்டா தலை வெடிச்சிடும்."

பாட்டியின் பேச்சு ஆர்த்திக்கு லேசாகப் புன்னகையை வர வைத்தது. சொத்து விஷயத்தைப் பற்றி அவன் சொன்னதையும் ஆர்த்தி சொன்னாள்.

பார்வதி உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. பின் மெள்ள சொன்னாள். "சொத்தை மகன் பேரில் எழுதாமல் எத்தனையோ பேர் பேரன் பேத்திக்கு எழுதறாங்க...."

"ஆனா அதுக்கு ஒரு காரணம் இருக்கணுமே பாட்டி"

"அந்த மனுஷர் உங்கப்பா கல்யாணத்திற்கு முன்னேயே போய் சேர்ந்துட்டார். அவர் மனசுல என்ன நினைச்சார்னு நமக்கு என்னம்மா தெரியும்"

அந்த நேரமாகப் பார்த்து டேவிட் மேரி தம்பதியர் உள்ளே நுழைந்தார்கள். டேவிட் கேட்டார். "என்னம்மா, யாரை உங்கப்பா கல்யாணத்துக்கு முன்னேயே போய் சேர்ந்துட்டார்னு சொல்றீங்க"

"இவங்கப்பாவோட அப்பாவை"

"சின்னக்கா கல்யாணம் முடிஞ்சு ரெண்டு மாசத்துல இறந்தார். அவர் மனசுல என்ன நினைச்சுட்டு இருந்தார்னா கேட்டீங்க. தன்னை ஒரு மகாராஜான்னு நினைச்சுட்டு இருந்தார். எதிர்த்துப் பேசினாலும் சரி எதிரா நடந்துட்டாலும் சரி மனுஷன் விரோதியா தான் பார்ப்பார். முடிஞ்ச அளவு கெடுதல் செய்வார். பெரியக்கா ஒருத்தருக்குத் தான் கட்டுப்படுவார். அவங்களுக்கு ஒண்ணுன்னா மனுஷன் தாங்க மாட்டார். வேற யாருமே அவருக்கு ஒரு பொருட்டில்லை. சாகற வரைக்கும் அப்படித்தான்."

ஆர்த்தியும் பார்வதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மூர்த்தி சொன்னதற்கும் இவர் சொல்வதற்கும் சம்பந்தம் இல்லாதது போல் தோன்றியது.

"சாகறதுக்கு ஒரு வாரம் முன்னாடி தான் என் கிட்ட கேட்டார். 'ஃபுல் ஸ்டாப்பே இல்லாம பேசற உன் நாக்கை இழுத்து வச்சு அறுத்தா என்ன'ன்னு. அப்ப தலை தெறிக்க ஓடுனவன் அவர் செத்துட்டதா ஒரு ஆளுக்கு ரெண்டு ஆளு சொன்னதுக்கப்புறம் தான் சாவுக்கே வந்தேன்..."

பார்வதி வாய் விட்டுச் சிரித்தாள்.

டேவிட் அடுத்த விஷயத்திற்கு உடனடியாக வந்தார். "நாங்க எங்க மகள் வீட்டுக்குப் போய் இருந்தோம். முழுகாம இருக்கிறாள்னு போன் வந்த பிறகு அவளைப் பார்க்கணும்னு ரெண்டு பேருக்கும் தோணுச்சு. போயிட்டு நேத்து தான் வந்தோம். நேத்து ராத்திரி தான் சந்துரு போனில் உன் கனவு பத்தி சொன்னான். டாக்டர் ப்ரசன்னா கிட்ட அப்பாயின்மென்ட் வாங்கி இருக்கறதா சொன்னான். நல்ல டாக்டர். சின்னதுல ஆகாஷ் கூட சுத்திகிட்டு இருந்த பயல். இன்னைக்கு அவன் தான் இந்த ஃபீல்டுல லீடிங். பயப்படாதே. எல்லாம் சரியாயிடும். ஆமா அந்தக் கனவுல என்ன தான் வருது....."

ஆர்த்தி என்ன சொல்வது என்று யோசிப்பதற்குள் பார்வதி சொன்னாள். "அதைப் பத்தி ட்ரீட்மென்ட் முடியற வரைக்கும் யார் கிட்டயும் டிஸ்கஷன் செய்ய வேண்டாம்னு சிவகாமி சொல்றாள்...."

"அக்கா சொன்னதுலயும் அர்த்தம் இருக்கு. என்னவா இருந்தா என்ன நமக்கு, குணமானா சரி. ஆர்த்தி, உங்கப்பா உன் மேல உசிரையே வச்சிருக்கான். நேத்து போன்ல பேசுனப்ப அழற மாதிரி ஆயிட்டான்...."

ஆர்த்தி புன்னகைத்து விட்டு பேச்சை மாற்றினாள். "உங்க மகள் எப்படி இருக்காங்க"

"நல்லா இருக்கா ஆர்த்தி"

"எப்ப இங்கே வருவாங்க?"

"அவள் கல்யாணம் ஆன பிறகு ஒரு கிறிஸ்துமஸுக்கு வந்து ஒரு நாள் இருந்துட்டு போனவள் பிறகு வரவேயில்லை. அந்த முதல் கிறிஸ்துமஸுக்குக் கூட அவளைக் கட்டாயப்படுத்தி தான் கூட்டிகிட்டு வந்தோம். பார்க்கணும்னா நாங்க தான் போகணும்..." டேவிட் சொல்ல சொல்ல மேரி முகம் மாறியது. 'இதை எல்லாம் ஏன் சொல்றீங்க?' என்பது போல கணவனைப் பார்க்க டேவிட் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

"ஏன் அவள் வர்றதில்லை" என்று பார்வதி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

ஒரு நிமிடம் கணவனும் மனைவியும் ஒன்றும் சொல்லவில்லை. மேரியின் முகத்தில் சோகம் படர்ந்தது. "இந்தக் காலத்துக் குழந்தைகள் வேற எதையும் கத்துக்கறாங்களோ இல்லையோ, பிடிவாதத்தை மட்டும் நல்லா கத்துக்கறாங்க. காரணமே தேவையில்லை..."

பார்வதியும் ஆர்த்தியும் அதற்கு மேல் எதையும் கேட்கவில்லை.

மேரி அந்த அறை மேசையில் அடுக்கி வைத்திருந்த டைரிகளை வெறித்துப் பார்த்தாள். "இது ஆனந்தியோட டைரிகளா?"

"ஆமாம். அம்மா எண்ணங்கள் எப்படி இருந்ததுன்னு புரிஞ்சுக்க இந்த டைரிகள் ரொம்பவே உதவியாய் இருந்தது" என்று ஆர்த்தி சொன்னாள்.

"எல்லா டைரியும் படிச்சுட்டியா?" மேரியின் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

"இருந்தது எல்லாம் படிச்சுட்டேன். உங்களைப் பத்தி கூட ரொம்ப புகழ்ந்து எழுதி இருக்காங்க"

மேரி லேசாகக் கண் கலங்கினாள். "எனக்கு அவள் போன பிறகு அந்த அளவுக்கு நெருக்கமான ஒரு தோழி கிடைக்கலை.....அது சரி இருந்தது எல்லாம்னு சொல்றியே, எல்லா டைரியும் கிடைக்கலையா?"

"கடைசி ரெண்டு வருஷத்து டைரி கிடைக்கலை"

மேரி கணவனை அர்த்தத்துடன் பார்த்தாள். டேவிட் அந்த டைரிகளையே பார்த்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் நின்றார். பழைய நினைவுகள் வெள்ளமாகத் திரண்டு வந்து மனதைப் பாடாய்ப் படுத்தின. மனதில் குற்றவுணர்ச்சி லேசாக உறுத்தியது. அவர் நினைத்திருந்தால் அந்தப் பழைய நிகழ்வுகளைத் தடுத்திருக்க முடியும். ஆனால்.... ஆனால்....

# 62

Envy's memory is nothing but a row of hooks to hang up grudges on.
– John Watson Foster

ஆர்த்திக்கு டாக்டரிடம் அப்பாயின்மென்ட் வாங்கி இருந்த நாள் நெருங்கிய போது பலரும் பதட்டம் அல்லது பரபரப்பில் இருந்தார்கள். சந்திரசேகர் சிவகாமியிடம் தயக்கத்துடன் வந்து கேட்டார். "அக்கா எல்லாம் சரியாயிடும் இல்லையா?" சிவகாமி தலையை மட்டும் அசைத்து விட்டு தன் வேலையை கவனிக்க ஆரம்பித்தாள்.

பவானி ஒருவித கலவரத்துடன் இருந்தாள். மூர்த்தி அதைக் கவனித்து விட்டுப் பாட்டியிடம் சொன்னான். "அத்தை ஆர்த்தியை விட அதிகமாய் பயப்படறாங்க பாட்டி".

"எல்லாம் என் தலையெழுத்து. இப்படிப்பட்டது என் வயித்துல பொறந்திருக்கு" என்று சலித்துக் கொண்ட பஞ்சவர்ணம் "அதை விடு. அந்த டாக்டர் என்ன கண்டுபிடிக்கறான்னு நாம தெரிஞ்சுக்க வழி பார்க்கச் சொன்னேனே என்னாச்சு" என்று கேட்டாள்.

"ஒருத்தனைப் பத்தி கேள்விப்பட்டிருக்கேன். அவன் இந்த மாதிரி விஷயத்துல எக்ஸ்பர்ட்டாம். ஆனா ரேட் எக்கச்சக்கமாய் கேட்பாங்கிறாங்க"

"பணத்தைப் பத்தி கவலைப்படாதே. பவானி கிட்ட வாங்கிடலாம். அவனைப் பார்த்து பேசி முடி. எனக்கு ஆர்த்தி மனசுல பதிஞ்ச அத்தனையும் தெரியணும்.... எனக்கே ஒரு பரபரப்பாய் தான் இருக்கு"

ஆகாஷ் ஆர்த்தியுடன் போவதில் விருப்பமில்லாமல் எரிச்சலுடன் இருந்தான். அந்த ஆரம்ப எரிச்சல் நாளுக்கு நாள் கூடி வந்திருந்தது. ஆர்த்திக்கு டாக்டரிடம் போவதில் பயமாக ஒரு புறம் இருந்தாலும் ஆகாஷ் கூடப் போவதில் ஒருவித இனிய எதிர்பார்ப்பு இருந்தது. அவன் பேசாவிட்டாலும் பரவாயில்லை, அவன் வெறுத்தாலும் பரவாயில்லை, அவன் உடன் இருப்பதே பெரும் மகிழ்ச்சியான விஷயம் என்று அவள் மனம் சொன்னது. இது பைத்தியக்காரத்தனம் என்று தெரிந்தாலும் இந்த பைத்தியக்காரத்தனத்தில் இருந்து மீள அவளுக்கு வழி தெரியவில்லை.

ஆர்த்தி கிளம்பிக் கொண்டிருந்த போது பார்வதியும் நீலகண்டனும் வந்தார்கள். நீலகண்டன் முகத்தில் கவலை ஆழமாகத் தெரிந்தது. பேத்தியிடம் சொன்னார். "பயப்படாதே. அன்னை உன் கூட இருப்பாங்க. நான் நேத்துல இருந்து உனக்காக வேண்டிகிட்டு இருக்கேன்."

பார்வதி தெளிவாக இருந்தாள். "பயப்பட என்ன இருக்கு. இந்தியாவுல நம்பர் ஒண்ணுன்னு அந்த டாக்டரை சொல்றாங்க. அவருக்கு இதெல்லாம் ஒரு பெரிய கேஸே இல்லைன்னு அமிர்தம் சொன்னாள்...."

"எல்லாம் சரி, அந்த ஆளை சிவகாமி தேர்ந்தெடுத்து இருக்கிறாள், அதுவும் ஆகாஷோட நண்பன் வேற. அது தான் கொஞ்சம் சந்தேகத்தைக் கிளப்புது"

"சந்தேகம்கிறதே ஒரு வியாதி. அது வந்துட்டா மனுஷன் தானும் நிம்மதியாய் இருக்க மாட்டான். மத்தவனையும் நிம்மதியா இருக்க விட மாட்டான்...."

நீலகண்டன் மனைவியை முறைத்தார். அந்த நேரத்தில் சந்திரசேகர் உள்ளே நுழைய அவர்கள் வாக்குவாதம் நின்றது. சந்திரசேகர் அவர்கள் இருவரும் அந்த அறையில் இருப்பதாக கவனித்தது போல் கூடக் காட்டிக் கொள்ளவில்லை. மகளிடம் சொன்னார். "ரெடியாயிட்டியா ஆர்த்தி. கீழே ஆகாஷும், அர்ஜுனும் காத்துகிட்டிருக்காங்க"

அர்ஜுனும் வருகிறான் என்பது ஏனோ ஆர்த்தியை சங்கடப்படுத்தியது. அவள் முகபாவனையில் இருந்து அதைக் கண்டுபிடித்த சந்திரசேகர் சொன்னார். "அர்ஜுன் சென்னைக்குப் போறான். கோயமுத்தூர்ல ஏரோடிராமில் இறங்கிக்குவான். அவனுக்கு முகத்தை சர்ஜரி செய்ய, அக்கா ஒரு பெரிய சர்ஜன் கிட்ட அப்பாயின்மென்ட் வாங்கியிருக்கா. முதல் ப்ரிலிமினரி செக்கப்புக்கு அவன் போறான். அவனை ஏரோடிராமில் விட்டுட்டு நீங்க டாக்டர் கிட்ட போலாம். திரும்பி வர்றப்ப நீங்க ரெண்டு பேரும் தான் இருப்பீங்க"

அவர் சொன்ன போது புன்னகையை அடக்கிக் கொண்டது போல ஆர்த்திக்குத் தோன்றியது. ஆர்த்தி பேச்சை அர்ஜுன் பக்கமே மாற்றப் பார்த்தாள். "சர்ஜரிக்கு நிறைய செலவாகும் இல்லையாப்பா?"

"அக்கா எதையாவது முடிவு பண்ணிட்டா செலவு பத்தி பார்க்க மாட்டா. சரி கிளம்பு"

கீழே சிவகாமி நின்று கொண்டு இருந்தாள். மருமகள் இப்போதெல்லாம் அழகான விலை உயர்ந்த ஆடைகளில் மிக அழகாகவும் நளினமாகவும் தோன்றுவதைக் கவனிக்கையில் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. ஆர்த்தியைக் கவனித்த ஆகாஷுக்கும் அப்படியே தோன்ற அவன் முகம் கடுகடுத்தது.

மகனிடம் சிவகாமி கேட்டாள். "என்னாச்சு?"

தன் தாய் தன் மனதில் ஓடும் எண்ணங்களைப் படித்து கிண்டல் செய்வதாக அவனுக்குத் தோன்றியது. "இது வரைக்கும் எதுவும் ஆகலை" என்று எரிச்சலுடன் பதில் சொல்லி விட்டு போர்டிகோவில் நின்று கொண்டு இருந்த காரின் முன்புறம் ஏறி அர்ஜுன் அருகே அமர்ந்தான்.

ஆர்த்தி அவன் முன்னிருக்கையில் அமர்ந்ததைக் கண்டு சற்று வாட்டமடைந்தாள். அமிர்தம் பூஜையறையில் இருந்து திருநீறு எடுத்து வந்து மருமகள் நெற்றியில் இட்டாள். "எல்லாம் சரியாகும் பார்"

மூர்த்தி அவளருகே நட்புரிமையுடன் வந்து காதில் சொன்னான். "டேக் கேர்"

சிவகாமி மருமகளைப் பார்த்து தலையசைத்தாளே தவிர எதுவும் சொல்லவில்லை.

ஆர்த்தி காரின் பின்னிருக்கையில் அமர அர்ஜுன் காரைக் கிளப்பினான். அவளிடம் எதுவும் பேசக்கூடாது என்று நினைத்திருந்த ஆகாஷுக்கு மூர்த்தி அவளிடம் அத்தனை நெருங்கி வந்து காதில் பேசியது பிடிக்கவில்லை. பொறுக்க முடியாமல் ஆர்த்தியிடம் திரும்பி சொன்னான். "அந்த மூர்த்தி கேரக்டர் அவ்வளவா சரியில்லை. அவன் கிட்ட ஜாக்கிரதையாய் இரு"

ஆர்த்திக்கு அவன் சொன்னதை நம்ப முடியவில்லை. மூர்த்தி இது வரை பழகிய விதம் எல்லாம் விகல்பமாக அவளுக்குப் படவில்லை. இவ்வளவு பவ்யமாகப் பழகும் நபர் ஆகாஷ் சொன்னபடி இருப்பானோ? அவனும் ஆகாஷின் நடத்தையைத் தப்பாகச் சொன்னானே....

ஆர்த்தியின் முகத்தில் தெரிந்த அவநம்பிக்கை ஆகாஷை மனம் கொதிக்க வைத்தது. 'என் தாயைப் பற்றி யாரோ தவறாக சொன்னார்கள் என்ற போது சுலபமாக நம்பியவள் மூர்த்தியைப் பற்றி சொல்கிற போது மட்டும் நம்ப மறுக்கிறாளே. இது ஒரு அப்பாவிப் பெண்ணின் இயல்பாகத் தெரியவில்லையே'

முகம் கருங்கல்லாக இறுக, திரும்பியவன் பின் அவள் பக்கம் மறுபடி திரும்பவில்லை. அவன் கோபத்திற்கு ஆர்த்திக்குக் காரணம் விளங்கவில்லை. 'நான் எதுவும் சொல்லவில்லையே. பின் ஏன் இவர் இப்படி கோபித்துக் கொள்கிறார்'.

காரை ஓட்டிக் கொண்டு சென்ற அர்ஜுன் இதைக் கவனித்துக் கொண்டு இருந்தான். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. மூவரும் மௌனமாக அவரவர் எண்ணங்களில் மூழ்கி இருக்க காரில் லேசாக வயலின் இசை கேட்டுக் கொண்டு இருந்தது. கார் விமானநிலையத்தை அடைந்த பிறகு அர்ஜுன் இறங்கிக் கொண்டான். அவனிடமும் ஆகாஷ் பேசவில்லை. அவனைப் பார்த்து தலையை மட்டும் அசைத்து விட்டுக் காரைக் கிளப்பினான்.

கார் டாக்டர் ப்ரசன்னாவின் கிளினிக்கை அடைந்தது. ஆர்த்தி கிட்டத்தட்ட அழும் நிலைக்கு வந்து விட்டாள். அவனுடைய அலட்சியம் அவள் இதயத்தைக் கிழித்தது.

காரில் இருந்து இறங்கும் போது அருகே ஒரு கார் நிறுத்தப்பட்டு இருந்ததைக் கவனித்தாள். அப்போதைய அத்தனை சோகமும் திடீர் என்று மறந்து போனது. அந்தக் காரில் இருந்து தன்னை யாரோ பார்த்துக் கொண்டு இருப்பது போல் ஒரு உணர்வு அவளுள் எழ ஆரம்பித்தது. காரில் கறுப்புக் கண்ணாடி முழுவதும் ஏற்றப்பட்டு இருந்ததால் உள்ளே யாராவது இருக்கிறார்களா இல்லையா என்பதை அவளால் உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

கண்காணிக்கப்படுவது உண்மை தான் என்றால் அந்த நபருக்கு அவள் இங்கு இந்த நேரத்தில் வருவது முன்பே தெரிந்திருக்க வேண்டும். அவளுக்காகக் காத்திருந்து அவளைக் கண்காணிக்கும் அந்த நபர் யார்? ஏன் கண்காணிக்கிறார்கள்? அவள் அங்கு அப்போது வருவது எப்படி அந்த நபருக்குத் தெரிந்தது?

கேள்விகள் பிரம்மாண்டமாக அவள் மனதில் எழுந்து நின்றன.

## 63

Not so sick, my lord,
As she is troubled with thick-coming fancies,
That keep her from her rest.
- Shakespeare in 'Macbeth'

ஆர்த்தி அந்தக் காரைப் பார்த்தபடி தயங்கி நிற்பதைக் கண்ட ஆகாஷ் கேட்டான். "என்ன?"

ஆர்த்தி சொன்னாள். "என்னை யாரோ அந்தக் கார்ல இருந்து பார்க்கிற மாதிரி தோணுது....."

ஆகாஷ் எரிச்சலுடன் சொன்னான். "எங்கம்மா தான் அதுக்குள்ளே உட்கார்ந்து உன்னைப் பார்க்கிறாங்க"

அவன் ஓங்கி அறைந்தது போல அவள் துவண்டு போனாள். அவன் கோபத்துடன் டாக்டர் ப்ரசன்னாவின் க்ளினிக் உள்ளே செல்ல, அவள் வேறு வழியில்லாமல் பின்னால் திரும்பி அந்தக் காரை ஒரு முறை பார்த்து விட்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

உள்ளே ரிசப்ஷனில் உட்கார்ந்திருந்த இளம் பெண் ஆகாஷைப் பார்த்ததும் ஆயிரம் வாட்ஸ் பல்பாகப் புன்னகைத்தாள். "ஹலோ"

அவள் ஆகாஷைப் பார்த்த விதம் ஆர்த்திக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அந்தப் பெண் ஆர்த்தியைப் பார்த்தது போலவே தெரியவில்லை. ஆகாஷிடம் கொஞ்சும் குரலில் சொன்னாள். "உட்காருங்க ஆகாஷ். டாக்டர் வேறொரு பேஷண்டைப் பார்த்துட்டு இருக்கார். அஞ்சு நிமிஷத்துல முடிச்சுடுவார்...."

இருவரும் அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தார்கள். ஆகாஷ் நண்பனைப் பார்க்க பல முறை வந்திருக்க வேண்டும், அதனால் அவனை இந்த ரிசப்ஷனிஸ்ட் அறிந்து வைத்திருக்கிறாள் என்று ஆர்த்தி அனுமானித்தாள். ஆகாஷுக்கு ஆர்த்தியிடம் சற்று முன் காரணமில்லாமல் கடுமையாக நடந்து கொண்டோமோ என்ற சந்தேகம் வந்து உறுத்தியது. ஆர்த்தி பாண்டிச்சேரியில் கேண்டீனில் கூட இன்று போல் தன்னைக் கண்காணிப்பதாக சொல்லி அது சரியாகவும் இருந்தது நினைவுக்கு வந்தது. இன்றும் அது போல் நிஜமாகவே அவளை யாரோ கண்காணிக்கிறார்களோ?

ஆகாஷ் உடனடியாக வெளியே சென்று பார்த்தான். அந்தக் கார் அங்கு இல்லை. மறுபடி வந்து உட்கார்ந்தவன் அங்கிருந்த வாரப் பத்திரிக்கையை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தான். அந்தக் கார் அங்கே இல்லை என்று அவளிடம் சொல்ல நினைத்தான். ஆனால் சொல்லவில்லை.

இரண்டு நிமிடங்கள் கழித்து டாக்டர் ப்ரசன்னாவின் அறையில் இருந்து ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி வெளியே வர, ரிசப்ஷனிஸ்ட் "ஆகாஷ் நீங்கள் போகலாம்" என்றாள்.

ஆகாஷைப் பின்தொடர்ந்த ஆர்த்திக்கு உள்ளே செல்கையில் வயிற்றில் பட்டாம்பூச்சி பறந்தது.

டாக்டர் ப்ரசன்னா ஒரு காலேஜ் வாலிபன் போல மிகவும் இளமையாகத் தெரிந்தான். அவன் அணிந்திருந்த தங்க ப்ரேமிட்ட மூக்குக் கண்ணாடி அவனுக்கு ஒரு கம்பீரத்தைத் தந்தது. ஆகாஷைப் பார்த்தவுடன் மிகவும் சந்தோஷமாக தன் இருக்கையை விட்டு வந்து கை கொடுத்து விட்டு அணைத்துக் கொண்டான். "எப்படிடா இருக்கே?"

"ஃபைன். ப்ரசன்னா, இது என் கசின் ஆர்த்தி"

ப்ரசன்னா நட்பாகப் புன்னகைத்தான். "ஹாய் ஆர்த்தி.... உட்காருங்க"

அவர்கள் உட்கார்ந்தார்கள். தன் இருக்கையில் அமர்ந்தபடி ப்ரசன்னா கேட்டான். "உன்னோட ஓல்டு மேன் எப்படியிருக்கார். தேவனோட கதைகளைப் படிக்கறதுல கின்னஸ் ரிக்கார்டு ஏற்படுத்தி இருப்பாரே"

ஆகாஷ் சிரித்தான். கடுகடுவென்று இருந்த முகம் ப்ரசன்னாவிடம் பேசும் போது முற்றிலுமாக மாறியது. "இன்னும் படிச்சுட்டு இருக்கார்."

"அயர்ன் லேடி எப்படி இருக்காங்க?"

"அம்மா வழக்கம் போல தான் இருக்காங்க. பிசினஸ்... பிசினஸ்...பிசினஸ்" தாயைப் பற்றிப் பேசும் போது ஆகாஷால் ஆர்த்தியை ஒருகணம் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அவன் முகத்தின் கடுகடுப்பு ஒரு கணம் தோன்றி மறைந்தது. ஆர்த்தி அவன் பார்வையின் உஷ்ணம் தாளாமல் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். ஐந்து நிமிடங்கள் நண்பர்கள் இருவரும் தங்கள் நண்பர்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

கடைசியில் ப்ரசன்னா ஆர்த்தி பக்கம் திரும்பினான். உடனே ஆகாஷ் ஆர்த்தியின் பிரச்சினை என்ன என்று சொல்ல முற்பட்ட போது புன்னகையுடன் தடுத்தான் ப்ரசன்னா. "நான் ஆர்த்திகிட்டயே கேட்டுக்கறேன் ஆகாஷ்..... நீ வெளியே வெய்ட் செய்யறதானா செய். இல்லை, வேற ஏதாவது வேலை இருந்தா அதை முடிச்சுட்டு வா."

ஆகாஷ் ஆர்த்தியைப் பார்த்தான். ஆர்த்தி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ஒரு கணம் அவனுடைய கோபம் எல்லாம் காற்றாய்ப் பறந்து மனது இளகியது. தைரியமாக இரு என்பது போல அவளைப் பார்த்துத் தலையசைத்து விட்டு எழுந்தான். அவனுக்கு அந்த ரிசப்ஷனிஸ்ட் பார்வையில் காத்திருக்கப் பிடிக்கவில்லை. "எனக்கு இங்கத்து ஆபிஸ்ல கொஞ்சம் வேலை இருக்கு. அதனால அங்கே போயிட்டு வர்றேன். எப்ப வரட்டும்."

"ஒரு மணி நேரம் கழிச்சு வாயேன்"

ஆகாஷை கதவு வரை வந்து வெளியனுப்பிய ப்ரசன்னா கதவருகே நண்பனிடம் மெல்லிய குரலில் கேட்டான். "என்னடா லவ்வா?"

ஆகாஷ் சில வினாடிகள் பேச்சிழந்து நின்றான். பின் பல்லைக் கடித்துக் கொண்டு நண்பனிடம் மறுக்க முற்பட்ட ஆகாஷை ப்ரசன்னா பேச விடவில்லை. சத்தமாக "போயிட்டு வா. ஆகாஷ். பை" என்று சிரித்தபடியே சொன்னான். ப்ரசன்னாவை முறைத்து விட்டு ஆகாஷ் போனான்.

திரும்பவும் வந்து தன் இருக்கையில் அமர்ந்த ப்ரசன்னா ஆர்த்தியைப் பார்த்து புன்னகையுடன் கேட்டான்.

"ஆர்த்தி, என்னை ஒரு டாக்டராய் மட்டுமல்லாமல் ஒரு நல்ல ஃப்ரண்டாவும் உங்களால் நினைச்சுக்க முடியுமா?"

ப்ரசன்னாவைப் பற்றி சந்திரசேகர் மிகவும் உயர்வாகச் சொல்லி இருந்தார். தன் துறையில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி உலகப் புகழ் பெற்றவன் என்றும், அவனிடம் ஒரு அப்பாயின்மென்ட் வாங்கவே மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருந்தார். அப்படிப்பட்டவன் எந்த பந்தாவும் இல்லாமல் தன்னிடம் இப்படிக் கேட்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அது வரை அவள் வயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்த பயம் போய் அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. தலையசைத்தாள்.

"தட்ஸ் குட்." என்றவன் தன் செல் போனை எடுத்து ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டு ஆர்த்தியிடம் சொன்னான். "ஆகாஷ் உங்களை ஏதோ ஒரு பயங்கரக் கனவு அடிக்கடி வந்து

தொந்தரவு செய்யுதுன்னு மட்டும் சொல்லி இருந்தான். விவரமா உங்கள் வாயாலேயே கேட்கணும்னு நான் அவன் கிட்ட வேற எதுவுமே கேட்கலை. முதல்ல அந்தக் கனவைப் பத்தி விவரமா என் கிட்ட சொல்லுங்க."

ஆர்த்திக்கு அந்தக் கனவைப் பற்றி நினைக்கையிலேயே ஒருவித பீதி லேசாக எழுந்தது. வார்த்தைகள் வாயில் இருந்து வர மறுத்தன.

ப்ரசன்னா அமைதியாகக் கேட்டான். "அந்தக் கனவைப் பத்தி இது வரைக்கும் யார் கிட்ட எல்லாம் விவரமா சொல்லி இருக்கீங்க?"

ஆர்த்தி மெல்ல சொன்னாள். "சின்ன வயசுல தாத்தா பாட்டி கிட்ட சொல்லி இருக்கேன். அப்ப ஒரு டாக்டர் கிட்ட கூட சொல்லி இருக்கேன். அந்த மூணு பேர் தவிர வேற யார் கிட்டயும் சொன்னதில்லை"

"சரி. இப்ப நாலாவது தடவையா உங்க ஃப்ரண்ட் கிட்ட சொல்றீங்க. தைரியமா இருங்க. இது வரைக்கும் அந்தக் கனவை நீங்க தனியா தான் சந்திச்சிருக்கீங்க. இனிமே உங்க ஃப்ரண்டோட சேர்ந்து சந்திக்கப் போறீங்க. ஓகே. ஆரம்பியுங்க...."

அந்த வார்த்தைகளை அவன் சொன்ன விதம் தைரியமூட்டுவதாக இருந்தது. தயக்கத்துடன் அந்தக் கனவைப் பற்றி அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

## 64

"Life is like writing with a pen. You can cross out your past but you cannot erase it." - Unknown

ப்ரசன்னா ஆர்த்தி சொன்னதை முழு கவனத்துடன் கேட்டான். அவள் சொன்ன விஷயங்களுக்கு இணையாக அவள் முகபாவனைகள், குரலின் ஏற்ற இறக்கங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன என்பதால் அவன் எதையும் கவனிக்கத் தவறவில்லை. அந்தக் கனவில் வரும் காட்சிகளைச் சொல்லி முடித்த போது அமைதியாகக் கேட்டான்.

"ஆர்த்தி நீங்க சொன்னதெல்லாம் ஒரே மாதிரி சீக்வென்ஸ்ல வருதா, இல்லை மாறி மாறி வருதா?"

"ஒரே மாதிரி வர்றதில்லை. கொஞ்சம் முன்ன பின்ன வரும்"

"உங்க கனவுல வர்ற ரெண்டு பேர் முகமும் தெளிவாகத் தெரியுமா?"

"இல்லை. ஏதோ மங்கலாய், தெளிவில்லாமல் தான் தெரியும்"

"ஆனா அந்த ரெண்டு பேரும் யாருன்னு உங்களால யூகிக்க முடியுதா?"

ஆர்த்தி தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் வேறு விதமாகக் கேட்டான். "....இல்லை அந்த ரெண்டு பேரும் கற்பனை மனிதர்கள்னு நினைக்கிறீங்களா?"

ஆர்த்தி மெல்ல சொன்னாள். "இல்லை அதில் ஒருத்தி எங்கம்மாவாய் இருக்கலாம்னு நினைக்கிறேன்"

"இன்னொருத்தி?"

"எங்கம்மாவைக் கொலை செஞ்சவளாய் இருக்கும்னு தோணுது"

"அந்த இடம் எது என்று நினைக்கிறீர்கள் ஆர்த்தி"

"ஊட்டியில் இருக்கும் எங்கள் வீடாகத் தான் இருக்கணும்"

ப்ரசன்னா சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தான். சிறு வயதில் இருந்தே அவன் ஆகாஷ் வீட்டுக்குப் பல முறை போய் இருக்கிறான். அப்போதெல்லாம் சந்திரசேகருக்கு ஒரு மகள் இருப்பதாகக் கூட அவன் யார் சொல்லியும் கேள்விப்பட்டதில்லை. அப்படி இருக்கையில் திடீர் என்று சென்ற வாரம் ஆகாஷ் போன் செய்து தன் மாமன் மகளுக்காக அப்பாயின்மெண்ட் வாங்கிய போது ப்ரசன்னா அவள் ஏதோ தூரத்து உறவு மாமன் மகளாக இருக்கலாம் என்று தான் நினைத்தான். இப்போது இவள் சொல்வதைப் பார்த்தால்..... உடனடியாக ப்ரசன்னா கேட்டான். "நீங்க ஆகாஷுக்கு எப்படி கசின்?"

"நான் சந்திரசேகர் மகள்"

"எனக்கு எல்லாத்தையும் ஆரம்பத்தில் இருந்து சொன்னால் நல்லாயிருக்கும் ஆர்த்தி"

ஆர்த்திக்கு எதை எப்படி எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தீர்மானிக்க முடியவில்லை.

அதைப் புரிந்து கொண்ட ப்ரசன்னா சொன்னான். "இத்தனை நாள் நீங்க எங்கே இருந்தீங்க? ஏன் இங்கே இருக்கலைங்கிறதுல இருந்து ஆரம்பியுங்களேன்"

அவன் வெறும் டாக்டர் மட்டுமல்ல, ஆகாஷின் நெருங்கிய நண்பனும் கூட என்பதால் ஆர்த்திக்கு சிவகாமி சம்பந்தமான விஷயங்களை எப்படி சொல்வது என்ற தயக்கம் எழுந்தது.

ப்ரசன்னா சொன்னான். "ஆர்த்தி, நீங்க சொல்லப் போகிற எதுவும் என் வாயில் இருந்து இன்னொருத்தர் காதுக்குப் போகாது, அதை நீங்க நம்பலாம். ஆகாஷ் கிட்ட கூட நான் நீங்க சொல்ற எதையும் சொல்ல மாட்டேன். ப்ரொஃபஷனல் எதிக்ஸ் விஷயத்துல நான் இது வரைக்கும் காம்ப்ரமைஸ் செய்ததில்லை. இனியும் செய்யப் போறதில்லை..."

அவன் அவள் மனதைப் படிக்கிறானா என்ற சந்தேகம் அவளுக்கு ஒரு கணம் வந்தது. ரகசியமாய் இருப்பதில் அவன் உறுதியாகச் சொன்ன விதம் அவளை நம்பத் தூண்டியது. மேலும் அவள் இப்போது சொல்லாமல் விட்ட விஷயங்கள் கூட ஒருவேளை அவன் ஹிப்னாடிசம் செய்தால் வெளியே வந்து விடக்கூடும்.

தயக்கத்தை உதறித் தள்ளி விட்டு அவள் சொல்ல ஆரம்பித்தாள். பாண்டிச்சேரியில் தாத்தா வீட்டில் வளர்ந்த தனக்கு தன் தந்தை உயிரோடு இருக்கிறார் என்பதே தெரியாமல் இருந்தது என்றும் ஒரு நாள் பாட்டி சொல்லித் தான் தெரிய வந்தது என்றும் சொன்னவள் பார்வதி சொன்னது, நீலகண்டன் கோபித்தது, நீலகண்டனுக்கு மாரடைப்பு வந்தது என்று வரிசையாக நடந்ததைச் சொன்னாள். ஆனால் பொதுவாக ஆனந்தியின் மரணத்தில் அவர்களுக்கு சந்தேகம், அதனால் தான் தன்னை எடுத்துக் கொண்டு தலைமறைவானார்கள் என்று சொன்னாளே தவிர சிவகாமி மேல் தான்

தாத்தாவிற்கு சந்தேகம் என்று குறிப்பிட்டு அவள் சொல்லத் துணியவில்லை. ஆனந்தியின் முகத்தைக் கூட பார்க்க விடாததால் அவர்களுக்கு சந்தேகம் என்று மட்டும் சொன்னாள். அதோடு சிறு வயதில் இருந்தே தன்னை யாரோ கண்காணிப்பது போன்ற உணர்வு அடிக்கடி தனக்கு வருகிறது என்பதையும் இப்போது கூட வெளியில் இருந்த காரில் இருந்து தன்னை யாரோ கவனிப்பது போல் தோன்றியது என்பதையும் சொன்னாள்.

ப்ரசன்னா கேட்கும் கலையில் வல்லவனாக இருந்தான். ஒரு முறை கூட அவன் இடைமறிக்கவில்லை. கவனத்தை வேறிடத்திற்கு சிதற விடவில்லை. அவள் கண்களில் இருந்து தன் கண்களைத் திருப்பவில்லை. அவ்வப்போது கருத்து தெரிவிக்கவில்லை. அவள் சொல்லாமல் விட்டது நிறைய இருக்கிறது என்பதை அவனால் சுலபமாக ஊகிக்க முடிந்தது. ஆனால் அவன் எதையும் கட்டாயப்படுத்தி அவள் வாயிலிருந்து வரவழைக்க விரும்பவில்லை. அதே சமயம் அவள் சொன்னதைப் பற்றி என்ன நினைத்தான் என்பதையும் அவன் வெளிக்காட்டவில்லை.

அவள் சொல்லி முடித்த பிறகு ப்ரசன்னா கேட்டான். "வெளியே உங்களைக் கண்காணித்தது போலத் தோணியது எந்த மாதிரி காரில் இருந்துன்னு சொல்ல முடியுமா ஆர்த்தி?"

ஆர்த்தி சற்று யோசித்து விட்டு சொன்னாள். "வெள்ளை நிற டாட்டா இண்டிகா"

ப்ரசன்னா இண்டர்காமில் தன் செகரட்டரியிடம் பேசினான். "நளினி, எனக்கு ஒரு சின்ன உதவி செய்றீங்களா? வெளியே ஒரு வயிட் டாட்டா இண்டிகா நம்ம க்ளினிக் முன்னாடி இருக்கான்னு பார்த்து சொல்றீங்களா?. ஓகே. ஐல் வெயிட்..... என்ன இல்லையா. ஓகே நளினி தேங்க் யூ"

பின் ஆர்த்தியிடம் திரும்பி சொன்னான். "இனிமேல் எப்ப சந்தேகம் வந்தாலும் நீங்க தயங்காம போய் பார்த்துடுங்க. ஆள் உள்ளே இருந்தா கேட்டுடுங்க. தயக்கமே வேண்டாம். அடுத்தவங்க என்ன நினைப்பாங்களோன்னு பயப்படாதீங்க. உங்க சந்தேகம் தப்பாயிருந்தா "சாரி" கேட்டுடுங்க. சரியா இருந்தா ஏன் என்னைப் பார்க்கறேன்னு கேட்டுடுங்க. எல்லாத்தையும் முடிஞ்ச அளவு அப்பப்பவே சால்வ் செஞ்சுக்கறது நல்லது ஆர்த்தி."

ஆர்த்தி தலையசைத்தாள்.

"எதையெல்லாம் சால்வ் செய்யலையோ, அதெல்லாம் உங்களை தொந்தரவு செய்துகிட்டே இருக்கும். அது மட்டுமல்ல உங்களால் ஏத்துக்க முடியாத நிஜங்கள், ஜீரணிக்க முடியாத விஷயங்கள் கூட அப்படித்தான். அதெல்லாம் உங்க ஆழ்மனசுல தங்கிக்கும். எதிர்பாராத சமயங்கள்ல, எதிர்பாராத விஷயங்கள்ல, எதிர்பாராத விதங்கள்ல எல்லாம் வந்து பாதிக்கும். இதனால தான் இப்படி உங்களுக்கு ஆகுதுன்னு கூட உங்களுக்குப் புரியாது. உங்க இந்தக் கனவுகள் கூட அப்படித்தான்னு சொல்லலாம். மூணு வயசுக் குழந்தையா பார்த்த அந்த நிகழ்ச்சி உங்களோட அந்தப் பிஞ்சு வயசுல ஜீரணிக்க முடியாத ஒன்னாய் இருந்திருக்கலாம். அந்த நினைவு மனசுக்கு ரொம்பவும் வலி தர்றதாய் இருந்திருக்கலாம். அந்த நினைவோட இருக்கறது தாங்க முடியாததால அதை ஆழ்மனசுல புதைச்சுட்டு வாழ உங்கள் மேல்தள மனசு முடிவெடுத்து இருக்கலாம். ஆனா நான் முன்னமே சொன்ன மாதிரி இதையெல்லாம் நிரந்தரமாய் அப்படி புதைச்சுட முடியாது. அது ஏதாவது ஒரு வழியில தலை தூக்கிகிட்டே இருக்கும். அப்படி தலை தூக்கறது தான் அந்தக் கனவுகளாய் இருக்கலாம்....."

# 65

"Successful people aren't born that way. They become successful by establishing the habit of doing things unsuccessful people don't like to do. The successful people don't always like these things themselves; they just get on and do them."

– William Makepeace Thackeray

பி.ஏ சைக்காலஜி பட்டத்தைப் பெற்றிருந்த ஆர்த்திக்கு அவன் அவள் பிரச்சினையை சொன்ன எளிய விதம் மனதிற்குள் பாராட்ட வைத்தது. தன் துறையில் உலகப் புகழ் பெற்ற அவன் எந்த கஷ்டமான சொல்லையும் உபயோகிக்காமல் ஒரு சாதாரண மனிதருக்கும் புரியும்படியாக சொல்கிறானென்றால் அது சாதாரண விஷயம் இல்லை என்று அவளுக்குத் தோன்றியது. அவன் சொன்னதற்குத் தலையசைத்தாள்.

அவன் தொடர்ந்து சொன்னான். "..... அன்னைக்கு பயத்துல ஏத்துக்க முடியாமல் மனசுல புதைச்சுட்ட விஷயத்தை இப்ப வெளியே கொண்டு வந்து அந்த மனசோட காயத்தைக் குணப்படுத்த முடியும். அதுக்கு ஹிப்னாடிசம் செய்யலாம். ஆனா அதுவும் ஒரே சிட்டிங்ல முடியறது கஷ்டம் ஆர்த்தி. ஆழ்மனசோட இறுக்கம் கொஞ்சம் கொஞ்சமாய் தான் விலகும். அதனால கொஞ்சம் கொஞ்சமா தான் நாம வெளியே கொண்டு வர முடியும். பல சிட்டிங்ஸ் தேவைப்படலாம்."

அவள் தலையசைத்தாள். அவள் முகத்தில் ஒருவித பயம் லேசாகப் படர்வதைக் கண்ட ப்ரசன்னா புன்னகையுடன் சொன்னான். "பயப்பட எதுவுமே இல்லை ஆர்த்தி. என் வார்த்தைல நீங்க தாராளமா நம்பிக்கை வைக்கலாம்"

அவன் சொன்ன விதம் அவள் முகத்தில் படர்ந்த மேகத்தை சிறிது போக்கியது. அவளும் புன்னகை செய்து தலையாட்டினாள்.

"ஆனா ஒரு விஷயத்தை நீங்க ஞாபகம் வச்சுக்கறது நல்லது ஆர்த்தி. உங்களை ஹிப்னாடிசம் செய்து பல உண்மைகளை நாம கண்டுபிடிக்கலாம். உங்க அம்மாவைக் கொன்னது யாருன்னு கூட கண்டுபிடிச்சுடலாம். ஆனா அவங்களை இதை வச்சு தண்டிக்க முடியாது. இன்னும் நம்ம நாட்டு சட்டத்துல இதை ஒரு நம்பத் தகுந்த ஆதாரமா ஏத்துக்க வழி இல்லை."

ஆர்த்தி மீண்டும் தலையசைத்தாள்.

"சட்டம் இந்த மாதிரி இருக்கறதால பெரும்பாலும் ஹிப்னாடிசம் செய்யறதை டேப்பில் ரிகார்டு செய்கிற பழக்கம் இங்கில்லை. வெளிநாட்டில் அதை செய்யறாங்க. இங்க பர்சனலா கேட்டுகிட்டா மாத்திரம் தான் அப்படி எடுத்து சி.டியா வைக்கறோம். இல்லாட்டி நாங்க எடுக்கறது நோட்ஸ் மட்டும் தான். ரிகார்டு பண்ணிகிட்டா நீங்க கூட பிற்பாடு கேட்டுக்கலாம். இல்லைன்னா என்னோட நோட்ஸ் மூலமா படிச்சுக்கலாம். உங்க விஷயத்துல என்ன செய்யலாம்னு நினைக்கிறீங்க?"

ஆர்த்தி சிறிது யோசித்து விட்டு சொன்னாள், "எதுக்கும் நான் வீட்டுல கேட்டுட்டு சொல்றேனே"

"நல்லது. நாம் அடுத்த புதன்கிழமை ஆரம்பிக்கலாம் ஆர்த்தி"

★★★★★★

மூர்த்தி அந்த ரெஸ்டாரண்டில் சரியாக ஐந்தரை மணிக்கு நுழைந்தான். மொத்தமாக நாலைந்து பேர் தான் உள்ளே டிபன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். கடைசி மேசை காலியாக இருந்தது. சென்று அமர்ந்து காத்திருந்தான். வரும் ஆள் எப்படி இருப்பான் என்று அறிய அவனுக்கு மிகவும் ஆவலாக இருந்தது. வரப்போகிறவனுடைய பெயர் தெரியாது, விலாசம் தெரியாது, எப்படி இருப்பான் என்று தெரியாது. மூர்த்தியின் ஆபிசில் வேலை செய்யும் நண்பனின் நண்பனுக்குத் தெரிந்தவனாம். பார்க்க வேண்டும் என்று சொன்னவுடன் அந்த ரெஸ்டாரெண்டில் கடைசி மேசையில் சரியாக ஐந்து முப்பத்தைந்துக்கு சந்திப்பதாக அந்த ஆள் சொல்லி அனுப்பினான். ஒரு வேளை அந்தக் கடைசி மேசையில் யாராவது முன்பே இருந்தால் என்ன செய்வது என்ற சந்தேகம் உள்ளே வருவதற்கு சற்று முன் தான் மூர்த்திக்கு வந்தது. நல்ல வேளையாக அந்த மேசை காலியாகத் தான் இருந்தது.

அவன் நண்பன் சொல்லி இருந்தான். "லேட்டா மட்டும் போயிடாதே. அந்தப் பார்ட்டி வெய்ட் செய்யற டைப் இல்லை"

மூர்த்திக்கு இப்படி தன்னைப் பெரிய ஆளாக நினைத்துக் கொள்ளும் யாரையுமே பிடித்ததில்லை. ஆனால் வருபவன் தன் தொழிலில் இணையற்றவன் என்று பெயர் எடுத்தவன் என்று கேள்விப்பட்டு இருந்தான்.

சரியாக ஐந்து முப்பத்தைந்திற்கு உயரமான திடகாத்திரமான ஒருவன் அந்த ஓட்டலுக்குள் நுழைந்தான். கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்த அவன் மூர்த்தியின் மேசை நோக்கி வந்தான். நடையில் ஒரு உறுதி தெரிந்தது. வந்து மூர்த்தியின் எதிரே அவன் அமர்ந்தான். கைகளை மடித்து மேசையில் வைத்து லேசாக முன்னால் சாய்ந்து "மூர்த்தி?" என்று கேட்டான்.

கைகள் கராத்தே போன்ற கலைகளில் வல்லவனுடையதாக இருந்தது. ஜிம்மில் மணிக்கணக்கில் செலவு செய்து பழக்கப்பட்ட மூர்த்தி அவன் ஒரு அடியில் அடுத்தவனை பேச்சு மூச்சில்லாமல் கிடத்தி விட முடியும் என்பதை சுலபமாக கணித்தான். குரல் ஆழமாக இருந்தது. மூர்த்தி ஆமாம் என்று தலையாட்டினான்.

"விஷயத்தை சொல்லுங்க"

எடுத்தவுடன் அவன் இப்படிக் கேட்டவுடன் உடனையாக மூர்த்திக்கு பேச்சு வரவில்லை. பிறகு சுதாரித்துக் கொண்டு சொன்னான். "டாக்டர் ப்ரசன்னான்னு ஒரு சைக்கியாட்ரிஸ்ட் கோயமுத்தூர்ல இருக்கான். அவன் கிட்ட ஆர்த்தின்னு ஒரு பேஷண்ட் இன்னைக்குப் போயிருக்கா. அவன் அந்தப் பொண்ணை ஹிப்னாடைஸ் செய்து என்ன எல்லாம் கண்டு பிடிக்கிறான்னு தெரியணும்..."

சில வினாடிகள் பேசாமல் இருந்த அந்த நபர் பின் சொன்னான். "இன்னைக்குத்தான் முதல்ல போறாள்னா இன்னைக்கு ப்ரிலிமினரியா கேஸ் என்னன்னு தான் அந்த டாக்டர் கேட்பான். ஹிப்னாடிசம் எல்லாம் பிறகு ஒரு நாள் தான் இருக்கும். அது கூட பல நாளாய் இருக்கலாம். கடைசியா ஒரே நாள்ல போய் அந்த ஃபைலை அப்படியே கொண்டு வந்து குடுக்கணும்னா எனக்கு ரெண்டு லட்ச ரூபாய் வேணும். ஒவ்வொரு நாளும் போய் அன்னைய மேட்டர் கொண்டு வந்து தரணும்னா எக்ஸ்ட்ராவா ஒரு நாளைக்கு ஐம்பதாயிரம் வேணும்."

மூர்த்தி இந்தத் தொகையை எதிர்பார்க்கவில்லை. சிரித்துக் கொண்டு சொன்னான். "உங்க ரேட்டைக் கேட்டா நான் அந்த டாக்டரையோ அந்தப் பொண்ணையோ கொலை செய்யச் சொன்னதுக்குக் கேக்கற மாதிரி இருக்கு. நான் கொலை செய்ய சொல்லலை."

"நான் எந்த வேலை செஞ்சாலும் அதுக்குத் தடயமே இருக்காது. அந்த டாக்டர் கிட்ட இருந்து அந்த ஃபைல் டீடெய்ல்ஸ் திருடிட்டு வந்தேன்னா நான் உள்ளே நுழைஞ்சு அதோட காப்பி எடுத்துருக்கேன்னே அந்த ஆள் கடைசி வரைக்கும் தெரிஞ்சுக்காத மாதிரி இருக்கும். அது தான் என் ஸ்பெஷாலிட்டி. அதனால தான் இந்த ஸ்பெஷல் ரேட்"

"ரேட்டை குறைச்சுக்கிட்டா நல்லாயிருக்கும்"

"நீங்க என் டைமை வேஸ்ட் செய்யறீங்க" அவன் எழுந்து கிளம்பத் தயாரானான்.

மூர்த்தி அவசர அவசரமாக அவனை மறுபடி உட்கார வைத்தான். பஞ்சவர்ணம் பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று முன்பே சொல்லி அனுப்பி இருந்தாள். இவனைப் பற்றி வேண்டிய அளவு கேள்விப்பட்டு இருக்கிறான். இது போல் ஒருவனை விட்டு விட்டால் பாட்டி தன்னை லேசில் விட மாட்டாள் என்று அவனுக்குப் பயமாய் இருந்தது "கோபிச்சுக்காதீங்க. சும்மா கேட்டேன். அவ்வளவு தான். ஓகே"

அவன் மறுபடி உட்கார்ந்தான். சர்வர் ஒருவன் வந்து என்ன வேண்டும் என்று கேட்டான். அந்த நபர் "எனக்கு காபி" என்று சொல்ல மூர்த்தி எனக்கும் தான் என்று சொன்னான். சர்வர் நகர்ந்தவுடன் மூர்த்தி "உங்க பேர்?" என்று கேட்டான்.

"அசோக்" அவன் பெயர் அதுவாக இருக்காது என்று மூர்த்திக்குத் தோன்றியது.

"நான் நீங்க சொன்ன ரெண்டில் எது செய்யணும்னு பிறகு சொல்றேன். உங்க செல் நம்பர்"

"நானே உங்களைக் கூப்பிடறேன்"

மூர்த்திக்கு லேசாக எரிச்சல் வந்தது. ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் சொன்னான். "சரி என் செல் நம்பரை நோட் செய்துக்கோங்க"

"தேவையில்லை. உங்க நம்பர் தெரியும்" என்றவன் வேகமாக மூர்த்தியின் செல் நம்பரைச் சொன்னான்.

"நாளைக்கு நான் உங்களுக்கு போன் செய்யறேன். மொத்தமா தெரிஞ்சுக்கணுமா, அப்பப்ப தெரிஞ்சுக்கணுமான்னு சொல்லுங்க. அட்வான்சா எனக்கு ஒரு லட்ச ரூபாய் வேணும். எங்கே எப்ப தரணும்னு நாளைக்கு பேசறப்ப சொல்றேன்"

மூர்த்தி மெல்ல தலையாட்டினான்.

காபி வந்தது. இருவரும் மௌனமாக காபி குடித்தார்கள். காபி குடித்தவுடன் அவன் சொன்னான். "நாளைக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு போன் செய்யறேன். அதுக்குள்ளே தீர்மானிச்சு வைங்க. பணத்தையும் ரெடி செய்யுங்க"

அவன் எழுந்து போய் விட்டான். மூர்த்தி பில்லைக் கொடுத்து விட்டு வெளியே வந்த போது அவன் மனதில் லேசாக பயம் குடி கொண்டிருந்தது. அசோக் என்ற அந்த மர்ம மனிதன் அவன் மனதில் அந்த பயத்தைக் கிளப்பி இருந்தான்.

# 66

முறையே நடப்பாய் முழு மூட நெஞ்சே!
–பாரதியார்.

காரில் ஊட்டிக்குத் திரும்பிய போதும் ஆகாஷ் ஆர்த்தியிடம் ஒன்றும் பேசவில்லை. ஆர்த்தியிடம் பேசி முடித்து வெளியே வந்த பின் ப்ரசன்னா அடுத்த புதன்கிழமை சிகிச்சை ஆரம்பிக்கலாம் என்று சொன்னானே ஒழிய ஆர்த்தியின் கேஸைப் பற்றி வேறெதுவும் ஆகாஷிடம் சொல்லவில்லை. ஒரு டாக்டராக அவன் எல்லாவற்றையும் நண்பனிடம் கூட சொல்லக் கூடாதென்றாலும் பொதுவாகக் கூட எதையும் சொல்லாதது ஆகாஷிற்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் ஆகாஷாக எதையும் கேட்கப் போகவில்லை. அவனிடம் ஏதாவது பேசி அவன் கேட்ட "என்னடா லவ்வா" என்ற கேள்விக்கு மறுத்து அலட்சியமாய் பதில் சொல்ல ஆகாஷ் நினைத்ததும் நடக்கவில்லை. இன்னொரு இளைஞன் ப்ரசன்னா அறைக்குள் நுழையக் காத்திருந்ததால் ப்ரசன்னா புன்னகையுடன் தலையசைத்து விட்டு உள்ளே போய் விட்டான்.

ஆர்த்தி ப்ரசன்னாவின் அறையில் இருந்து வெளியே வந்த பிறகு சிறிது தெளிவு அடைந்திருப்பது போல ஆகாஷிற்குத் தோன்றியது. காரில் ஏறியவுடன் ஆர்த்தி சொன்னாள். "டாக்டர் ரொம்ப நல்லவராய் தெரியறார்."

ஆகாஷ் மனதிற்குள் சொல்லிக் கொண்டான். "எங்கம்மாவைத் தவிர உலகத்தில் உனக்கு எல்லாரும் நல்லவங்க தான்".

அவன் பேசும் மனநிலையில் இல்லை என்று புரிந்த போது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. இது நிறைய நாட்களாகவே நடப்பது தான் என்றாலும் இன்றும் அது புதிதாக வலிக்க வைத்தது.

தங்கள் இடையே நிலவிய அந்த மௌனத்தின் நாராசத்தை விரட்ட ஆகாஷ் காரில் பாட்டை முடுக்கி விட்டான். அதிலும் இனிமையான காதல் பாட்டுகளே வந்தது அவனுள் ஒருவித எரிச்சலைக் கிளப்பியது. ஆனாலதை மாற்ற அவன் முயற்சிக்கவில்லை.

இரவு நேரமாக இருந்ததால் மேட்டுப்பாளையம் தாண்டி பாதையில் அதிக போக்குவரத்து இருக்கவில்லை. ஆர்த்திக்கு களைப்பாக இருந்தது. அப்படியே தூங்கிப் போனாள். எதிரே வந்த வாகனங்களின் ஹெட் லைட் வெளிச்சத்தில் அசந்து தூங்கும் அவள் தேவதை போல் தெரிந்தாள். தான் அவளைப் பார்ப்பது அவள் உட்பட யாருக்கும் தெரியாது என்பதால் அவளை அடிக்கடி பார்த்தான். குழந்தை போல் நிஷ்களங்கமாய் தூங்கும் அவள் மீது அவனால் அந்தக் கணம் கோபம் கொள்ள முடியவில்லை.

அந்த நேரமாகப் பார்த்து காரில் பாட்டு ஒலித்தது.

"கண்ணுக்கு மை அழகு
கவிதைக்குப் பொய் அழகு
கன்னத்தில் குழி அழகு
கார்கூந்தல் பெண் அழகு...."

அவளுடைய நீளமான கூந்தலை அவன் ரசித்துப் பார்த்தான். பாப் வெட்டிக் கொள்ளும் இந்தக் காலத்தில் இவ்வளவு அழகான நீண்ட கூந்தலை அவன் அதிகம் பார்த்ததில்லை. அதுவும் அழகான ஒரு பெண்ணிடம் பார்த்ததே இல்லை. அதுவும் இப்போதெல்லாம் அவள் அழகு கூடிக் கொண்டே வருகிறது.....

ஆகாஷுக்கு இப்படியெல்லாம் எண்ணும் தன் மீதே கோபம் வந்தது. என்ன மனசு இது என்று நொந்து கொண்டான். இத்தனை காலம் கட்டுப்பாட்டோடு இருந்த மனம் இவளை சந்தித்த பிறகு சுதந்திரம் வாங்கிக் கொண்டு தன்னிஷ்டத்துக்கு இயங்க ஆரம்பித்து விட்டதை அவனால் சகிக்க முடியவில்லை. அவளை அடிக்கடி பார்ப்பதை நிறுத்தி கஷ்டப்பட்டு கவனத்தைத் திருப்பினான்.

++++++++++++++++++++++

பஞ்சவர்ணத்திடம் மூர்த்தி அசோக் சந்திப்பை ஒப்பித்து விட்டு களைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். அவள் பேரன் வர்ணனையில் அந்த அசோக்கை மனதில் ஓரளவு நிர்ணயித்திருந்தாள். கேள்விப்பட்டதெல்லாம் அவளுக்கு மிகவும் சுவாரசியமாக இருந்தது.

"அவன் பேசினதப் பார்த்தா எந்தப் பக்கத்துக் காரன்னு தோணுது?"

மூர்த்தி யோசித்து விட்டு சொன்னான். "தமிழ்நாட்டுக்காரனாத் தெரியலை. பார்த்தா வடநாட்டுக்காரனா இருக்கலாம்னு தோணுது. ஆனா தமிழைத் தப்பில்லாம பேசறான்...நல்லாப் படிச்சவன் மாதிரி தான் இருக்கு. பார்த்தா அவன் இந்தத் தொழில் செய்யறவன்னு யாரும் சொல்ல முடியாது...."

"அப்புறம் என்ன தோணுது?"

"ஒருவிதமான பயம் தோணுது பாட்டி"

பஞ்சவர்ணம் பேரனைக் கேள்விக்குறியோடு பார்த்தாள். "என்னை சந்திக்கறதுக்கு முன்னாடி என்னோட செல் நம்பர் முதற்கொண்டு தெரிஞ்சுகிட்டு வந்துருக்கான்...."

"அது உன் சிநேகிதன் மூலமாகவோ, இல்லை சிநேகிதனோட சிநேகிதன் மூலமாகவோ கூட அவன் வாங்கி இருக்கலாம்டா"

"ஆனா எனக்கென்னவோ அப்படித் தோணலை பாட்டி. அவன் ஒரு ப்ரொஃபஷனலா என்னைப் பத்தி சகலத்தையும் தெரிஞ்சுகிட்டு வந்த மாதிரி தான் தோணுது"

பஞ்சவர்ணம் பேரன் சொன்னதை நம்பினாள். அவன் குரலில் பயம் தெரிவது அபூர்வம். அவள் அவனை அப்படி வளர்த்தவில்லை. அவனுடைய உள்ளுணர்வு உண்மையாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. மூர்த்தி தொடர்ந்தான்.

"பாட்டி ஒவ்வொரு மனுஷன் கிட்டயும் ஏதாவது பலவீனம் இருக்கும் இல்லியா. ஆனா இவனைப் பார்த்தா எனக்கு ஏனோ இவன் கிட்ட அப்படி எதுவும் பலவீனம் இருக்கிற மாதிரி தோணலை. கொஞ்சம் கூட அவசரமோ, பதட்டமோ, பயமோ இவனைப் பாதிக்கற மாதிரி தோணலை. நான் ரேட்டைக் கொஞ்சம் குறைச்சுக்கலாமேன்னு கேட்டவுடன் அவன் எழுந்தது கூட ஒரு நடிப்புக்காகன்னு தோணலை. நான் தடுக்கலைன்னா அலட்சியமா போய் இருப்பான். எனக்கு அவனோட பேர் கூட அசோக்கா இருக்காதுன்னு தோணுது. ஏதோ ஒரு மர்ம மனிதனா தெரியறான்."

பஞ்சவர்ணம் தன் கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள். ஆரம்ப வேகம் போகப் போகக் குறைய ஆரம்பிக்கையில் நடப்பதை நிறுத்தாமல் சொன்னாள். "அவன் பெரிய கில்லாடியா இருப்பான்கிறதுல சந்தேகம் இல்லை. ஆனா நம்ம வேலைக்கு இப்படிப்பட்ட சாமர்த்தியமான ஆள் தான் வேணும். ஆனா நாம ஜாக்கிரதையா கையாளணும். இந்த மாதிரி ஆள் எல்லாம் வெடிகுண்டு மாதிரி. சரியா கையாண்டா எதிரியை அழிச்சுடலாம். ஏமாந்தா நம்மையே அழிச்சுடும். ஆனா பணத்தை சரியா தர்ற வரைக்கும் அவனால் நமக்கு எந்தப் பிரச்சினையும் வராது. நம்ம வேலையை கச்சிதமா செஞ்சு தருவான்னு தான் எனக்குப் படுதுடா"

"சரி அவன் கிட்ட மொத்தமா தெரிஞ்சுக்க ஏற்பாடு செய்யலாமா. இல்லை அப்பப்ப தெரிஞ்சுட்டு வரச் சொல்லலாமா?"

பஞ்சவர்ணம் சிறிதும் யோசிக்காமல் சொன்னாள். "அப்பப்ப நடந்ததை வந்து தெரிவிக்கச் சொல்லு. பணம் பெரிய விஷயமே இல்லை. நமக்கு இப்ப ரொம்ப முக்கியம் நேரம் தாண்டா. நம்ம அடுத்த நடவடிக்கை எப்படி இருக்கணும்கிறதுக்கு ஆர்த்தியோட ஆழ்மனப் பதிவுகளை எல்லாருக்கும் முன்னாடி நாம் தெரிஞ்சுக்கறது முக்கியம்டா மூர்த்தி."

# 67

"Probable impossibilities are to be preferred to improbable possibilities."
~ Aristotle ~

ஆர்த்தியும் ஆகாஷும் வீடு வந்து சேர்ந்த போது இரவு பத்தரை மணி ஆகியிருந்தது. சிவகாமி தன் வழக்கமான நேரத்தில் படுக்கப் போயிருந்தாள். பத்து மணிக்கு அவள் தூங்கப் போகாமல் இருக்க வேண்டும் என்றால் அசாதாரணமான நிகழ்வுகள் ஏதாவது நடக்க வேண்டும். சந்திரசேகருக்குத் தான் இருப்புக் கொள்ளவில்லை. மகளைப் பார்த்துப் பேசாமல் கண்களை மூட முடியாது என்று அவருக்குத் தோன்றியது. பவானியும் ஏதோ ஒரு ஆங்கில நாவலைப் படிக்க முயன்று கொண்டிருந்தாள். மனம் படிப்பதில் இல்லை. ஆர்த்தியிடம் டாக்டர் என்ன சொன்னார் என்றறியும் ஆவலில் அவளும் காத்திருந்தாள்.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு சந்திரசேகர் வேகமாகப் படியிறங்கி வந்தார். உள்ளே நுழைந்த மகள் களைத்துப் போய் இருந்ததை அவர் கவனித்தார். ஆகாஷின் முகம் கடுகடுவென்று இருந்தது. யாரிடமும் எதுவும் பேசாமல் தனதறைக்கு ஆகாஷ் சென்றதையும் கவனித்தவர் 'என்ன இவன் கோபம் இன்னும் குறையவில்லை. அப்படியென்ன இருவருக்கும் சண்டை?' என்று தனக்குள் கேட்டுக் கொண்டார். தனக்காகக் காத்து நிற்கும் தந்தையைப் பார்த்த போது ஆர்த்திக்கு சந்தோஷமாக இருந்தது.

"என்னப்பா தூங்கலையா?"

"இல்லை உன்னைப் பார்த்துட்டு தூங்கலாம்னு இருந்தேன். டாக்டர் என்ன சொன்னார்?"

நீலகண்டன், பார்வதி, அமிர்தம், பவானி, பார்த்திபன், மூர்த்தி என ஒவ்வொருவராக ஹாலில் அதற்குள் வந்திருந்தார்கள். அவர்களும் அவள் பதிலைத் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது அவளுக்குத் தெரிந்தது.

"டாக்டர் நான் சொன்னதை எல்லாம் கேட்டுகிட்டார். அடுத்த புதன்கிழமை தான் ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கப் போகிறார். டாக்டர் ரொம்ப நல்லவராய்த் தெரியறார்"

"இந்த ஃபீல்டில் அவன் பெஸ்ட் ஆர்த்தி" என்றார் சந்திரசேகர்.

அமிர்தம் சொன்னாள். "நம்ம ஆகாஷோட எத்தனையோ நாள் இங்க வந்து தங்கி இருக்கான். நல்லா பேசுவான். யாருக்குமே அவனைப் பிடிக்காம போகாது."

சுற்றிலும் நின்றவர்களைப் பார்த்த சந்திரசேகர் விட்டால் இவர்கள் ஒவ்வொருவராகப் பேசி மகள் தூக்கத்தைக் கெடுத்து விடுவார்கள் என்று எண்ணி சொன்னார். "சரி ஆர்த்தி நீ போய்த் தூங்கு. நேரமாயிடுச்சு. 'லேட்டாகற மாதிரி இருந்தா நம்ம கோயமுத்தூர் பங்களாவிலேயே தங்கிட்டு நாளைக்குக் காலைல வாங்கன்னு ஆகாஷ் கிட்ட சொன்னேன். அவன் கேட்கலை....'"

"ஆனா நாம அன்னைக்குப் போறப்ப கூட அங்கே தங்கலையேப்பா"

"அப்ப அங்கே பெயிண்டிங் வேலை நடந்துகிட்டு இருந்தது. அதனால தான் அன்னைக்கு வந்துட்டோம். இப்ப அதெல்லாம் முடிஞ்சு வீடு க்ளீன் ஆயுடுச்சு"

உண்மையில் ஆகாஷுக்கு ஆர்த்தியுடன் தனிமையில் இருக்க விருப்பமிருக்கவில்லை. அதனால் தான் சந்திரசேகர் சொன்னதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆர்த்திக்கு அவன் மறுத்த காரணம் நன்றாகத் தெரிந்ததால் முகம் வாடியது.

"சரிம்மா...நீ போய்த் தூங்கு. நாளைக்குப் பேசிக்கலாம்"

ஆர்த்தி தன் அறைக்குப் போக நீலகண்டன் பார்வதி மட்டும் பேத்தியைப் பின் தொடர்ந்தார்கள். சந்திரசேகருக்கு அவர்களைப் பார்த்து எரிச்சல் வந்தது. 'இதை விட இவர்களுக்கு எப்படி சுட்டிக் காட்டுவது. இன்னைக்கு ராத்திரி அவளை ரெஸ்ட் எடுக்க விடமாட்டார்கள் போல் இருக்கு' என்று மனதினுள் எரிந்து விழுந்தார். தம்பியின் முகபாவனையைக் கண்ட அமிர்தம் மகனை பார்வையால் அனுப்பி விட்டுத் தானும் தூங்கக் கிளம்பினாள். சந்திரசேகரும் பவானியும் தங்கள் அறைக்குச் செல்ல மூர்த்தியும் கூட இடத்தைக் காலி செய்தான்.

தனதறைக்குச் சென்றவன் சந்திரசேகர், ஆகாஷ் அறைக் கதவுகள் சாத்தப்படும் வரை காத்திருந்து விட்டு ஓட்டுக் கேட்க ஆரத்தி அறைக்கு விரைந்தான்.

ஆர்த்தி அப்போது தான் ஆரம்பித்திருந்தாள். "....பொறுமையா கேட்டுக்கறார். பாட்டி. நான் எல்லாத்தையும் அவர் கிட்ட மனசு விட்டு சொன்னேன். என்னை யாரோ வெளியே கவனிச்சுட்டு இருக்கற மாதிரி தோணுதுங்கறதைக் கூட அவர் கிட்டே சொல்லிட்டேன்....."

சொன்ன பிறகு தான் இந்த விஷயத்தை இவர்களிடம் கூட இது வரை தெரிவிக்கவில்லை என்ற உண்மை அவளுக்கு உறைத்தது. நீலகண்டனும், பார்வதியும் அவளைத் திகைப்புடன் பார்த்தார்கள்.

"என்ன ஆர்த்தி சொல்றே?" பார்வதியின் குரல் நடுங்கியது.

ஆர்த்தி தன்னையே நொந்து கொண்டாள். இனி மறைப்பதில் பயனில்லை என்று தோன்ற எல்லாவற்றையும் சொன்னாள். ஆரம்பத்தில் இருந்து தன்னை யாரோ கண்காணிப்பது போல் தோன்றி வருவதையும், சமீப காலத்தில் கூட பாண்டிச்சேரி ஆஸ்பத்திரி கேண்டீனில், கோயமுத்தூர் ஜவுளிக்கடைக்கு வெளியில், தற்போது டாக்டர் ப்ரசன்னாவின் க்ளினிக்கிற்கு வெளியில் தனக்குத் தோன்றியதை விவரித்தாள்.

கேட்டு விட்டு பார்வதி தனக்குத் தானே சத்தமாகச் சொல்லிக் கொண்டாள். "அப்படின்னா பாண்டிச்சேரி ஆஸ்பத்திரில நான் பார்த்ததும் தற்செயலா நடந்ததில்லை"

நீலகண்டன் மனைவியைக் கேட்டார். "நீ என்ன பார்த்தாய்?"

"ஆஸ்பத்திரில இவள் கேண்டீனில் பார்த்ததா சொன்னதுக்கு முந்தின நாள் நாம மூணு பேரும் ஆஸ்பத்திரி ரூமில் தூங்கிக்கிட்டு இருந்தோம். நான் ராத்திரில எழுந்து பாத்ரூம் போயிட்டு வந்த போது உங்க கட்டிலுக்கும் ஆர்த்தி கட்டிலுக்கும் நடுவுல யாரோ ஒருத்தி நின்னுகிட்டு இருந்தா. என்னைப் பார்த்தவுடனே ஒண்ணும் சொல்லாம வேகமா வெளிய போயிட்டா. நான் நினைச்சேன் அவள் ரூம் மாறி வந்துட்டான்னு. யாரோன்னு நினைச்சு உங்களைப் பார்த்துட்டு நின்னதா நினைச்சேன். இப்ப யோசிச்சா அவள் ஆர்த்தியைப் பார்த்துட்டு கூட நின்னுருக்கலாம்னு தோணுது. அப்ப கூட ரூம் தாழ்ப்பாள் எப்படிப் போட மறந்துட்டோம்னு புரியலை. இப்ப யோசிச்சா எல்லாமே வேற அர்த்தத்துல தெரியுது...."

"எல்லாம் அந்த சிவகாமி வேலை." – நீலகண்டன் கொதித்தார்.

"ஆண்டவன் குடுத்த மூளையைக் கொஞ்சம் உபயோகிச்சுப் பாருங்க மனுஷா. பாண்டிச்சேரில வேணும்னா அவ ஆர்த்தியைக் கண்காணிக்க ஏற்பாடு செஞ்சாள்னு சொன்னா நம்பலாம். இங்க வந்தப்புறமும் அவள் ஆர்த்தியைப் பின் தொடர்ந்து கண்காணிக்க ஏற்பாடு ஏன் செய்யணும்? இவள் கோயமுத்தூர்ல ஜவுளி எடுக்கப் போனது அவள் தம்பியோட. இப்ப டாக்டர் கிட்ட போனது அவள் மகனோட. கூட அவளோட ஆளையே அனுப்பிச்சுட்டு இன்னொரு ஆளை தூரத்துல இருந்து பார்க்க அனுப்ப அவள் என்ன லூசா?"

நீலகண்டனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மூர்த்திக்கு மீதியைக் கேட்கும் பொறுமை இருக்கவில்லை. உடனடியாக பஞ்சவர்ணத்திடம் ஓடினான்.

பேரன் சொன்னதைக் கேட்ட பஞ்சவர்ணமும் திகைத்துப் போனாள். வரிக்கு வரி அப்படியே ஆர்த்தி சொன்னதையும் பார்வதி சொன்னதையும் பேரனைத் திரும்ப சொல்ல வைத்தாள். எழுந்து தனதறையில் நடக்க ஆரம்பித்தவள் நிறைய நேரம் யோசித்தாள். கடைசியில் பேரனிடம் சொன்னாள்.

"அந்தக் கிழவி அகங்காரியானாலும் சொன்னதுல தப்பில்லை மூர்த்தி. கண்டிப்பா ஆர்த்தியைப் பின் தொடர்றது சிவகாமியோட ஆளாயிருக்காது. ஒண்ணு ஆர்த்திக்குத் தோணுனது எல்லாம் கற்பனையா இருக்கணும். கிழவி ஆஸ்பத்திரில பார்த்தது அவள் முதல்ல நினைச்ச மாதிரி ரூம் மாறி வந்த ஆளா கூட இருக்கலாம். ஆர்த்திக்குத் தோணுனது கற்பனை இல்லைன்னா களத்துல சிவகாமியையும், நம்மளையும் தவிர வேற யாரோவும் இருக்காங்க மூர்த்தி..."

# 68

Who never doubted, never half believed.
Where doubt is, there truth is—it is her shadow.
— Philip James Bailey

ஆர்த்தியைப் பின் தொடர்வது யாராக இருக்கும் என்று பஞ்சவர்ணம் மூளையைக் கசக்கிக் கொண்டிருந்த அதே வேளையில் நீலகண்டனும், பார்வதியும் ஆர்த்தியின் அறையில் இருந்து கொண்டு பல்வேறு கோணங்களில் யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் தெளிவாக எந்த முடிவுக்கும் அவர்களால் வர முடியவில்லை. கடைசியில் யாராவது தொடர்வது உண்மை தானா, இல்லை அது ஆர்த்தியின் பிரமை தானா என்று கூட அவர்களால் முடிவெடுக்க முடியவில்லை.

கடைசியில் ஆர்த்தி ப்ரசன்னா ஹிப்னாடிசம் செய்வதை டேப் செய்து வைத்துக் கொள்வதா, இல்லை நோட்ஸ் எடுத்துக் கொண்டால் போதுமா அன்று தன்னைக் கேட்டதை அவர்களிடம் சொன்னாள்.

நீலகண்டன் உறுதியாகச் சொன்னார். "டேப் செய்துக்கறது தான் நல்லது. இவங்க வெளியே வர்ற உண்மையை நம்ம கிட்ட மறைச்சாலும் மறைச்சுடுவாங்க."

பார்வதி சொன்னாள். "அதை நாம எப்படி சொல்ல முடியும். இவங்கப்பா என்ன சொல்றாரோ"

"இவங்க அப்பா எப்ப சொந்தமா முடிவெடுத்திருக்கார். அக்கா சொல்ற முடிவு தான் அவரோடதா இருக்கும். அந்த மகராசி டேப் செய்யறதெல்லாம் என்னத்துக்குன்னு சொல்வாள். வேணும்னா பார்த்துக்கோயேன்"

++++++++++++

ஆர்த்தி மறுநாள் காலை கீழே ஹாலுக்கு வந்த போது சிவகாமி வாக்கிங் போய் விட்டுத் திரும்ப வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள். மருமகளைப் பார்த்தவுடன் புன்னகைத்தாள். "குட் மார்னிங் ஆர்த்தி".

"குட் மார்னிங் அத்தை"

'என்னுடன் வா' என்று சைகை காட்டி விட்டு தனதறைக்கு சிவகாமி செல்ல ஆர்த்தி ஒருவித படபடப்புடன் அத்தையைப் பின் தொடர்ந்தாள்.

சிவகாமியின் அறை மிக அழகாக இருந்தது. எல்லாவற்றையும் மிக அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தாள். அறையில் மூன்றே மூன்று புகைப்படங்கள் இருந்தன. ஒன்றில் அவள், அவள் கணவன், ஆகாஷ் இருந்தார்கள். அது சமீபத்திய புகைப்படமாக இருந்தது. இன்னொன்றில் அவள், அமிர்தம், சந்திரசேகர் மூவரும் இருந்தார்கள். அது சுமார் நாற்பது வருடங்களுக்கு முந்தைய புகைப்படம். மூன்றாவதில் சிவகாமியும் அவள் தந்தையும் நின்றிருந்தார்கள். அதுவும் கிட்டத்தட்ட அதே கால கட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

தாத்தாவின் புகைப்படம் பெரியதாக ஹாலிலும், சிறியதாக அப்பாவின் அறையிலும் கூட இருக்கிறது என்றாலும் அதிலெல்லாம் அவர் முகம் சற்று கடுமையாக காணப்பட்டது. ஆனால் சிவகாமியுடன் இருக்கும் இந்தப் படத்தில் அவர் முகத்தில் சிறு புன்னகை இருந்தது. ஆர்த்தி அந்த மாற்றத்தைத் தன்னை மறந்து சுவாரசியத்துடன் கவனித்தாள்.

"என்ன ஆர்த்தி அந்த ஃபோட்டோவை அப்படிப் பார்க்கிறாய்?"

ஆர்த்தி தயக்கத்துடன் தான் கண்ட அந்த வித்தியாசத்தை சொன்னாள்.

சிவகாமி ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் அவளையே கூர்ந்து பார்த்தாள். மருமகள் கவனிப்பதில் புத்திசாலியாக இருக்கிறாள் என்று எண்ணியவள் புன்னகையுடன் தந்தையைப் பற்றி சொன்னாள். "மனுஷன் எப்பவுமே கடுகடுன்னு தான் இருப்பார். பெருசா காரணம் எதுவும் இருந்த மாதிரி தெரியலை. அவர் சுபாவமே அப்படித்தான்."

"பாட்டி ஃபோட்டா எதுவும் இல்லையா?"

"ஃபோட்டோ எடுத்தா ஆயுசு குறைஞ்சுடும்னு நினைச்ச காலம் அது. அதனால அவ எடுக்கலை. அவ உயிரோட இருக்கற வரை எங்களையும் ஃபோட்டோ எடுத்துக்க விடலை. ஆனாலும் சீக்கிரமே போய் சேர்ந்துட்டா. பார்க்க கிட்டத்தட்ட அமிர்தம் மாதிரி இருப்பா....." சிவகாமி தன் தாயின் நினைவுகளில் சில வினாடிகள் சஞ்சரித்து விட்டு திடீரென்று கேட்டாள். "அதுசரி டாக்டர் என்ன சொன்னார்?"

ஆர்த்திக்கு அவள் திடுதிப்பென்று பேசிக் கொண்டிருந்ததை வெட்டி விட்டு இப்படிக் கேட்டவுடன் என்ன சொல்வதென்று ஒரு கணம் புரியவில்லை. பின் சுதாரித்துக் கொண்டு சொன்னாள். "நான் சொன்னதை எல்லாம் கேட்டுகிட்டார். அடுத்த புதன் கிழமையில் இருந்து ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்கலாம்னு சொன்னார்"

"எப்படி ட்ரீட்மெண்ட் செய்யப் போறார்னு சொன்னாரா?"

"ஹிப்னாடிசம் செய்யறதா சொன்னார்"

சிவகாமி சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அமைதியாக அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள். முன்பே அறிந்திருந்தாலும் அந்தத் தகவல் அவளை ஏதோ விதத்தில் பாதித்ததாக ஆர்த்திக்குத் தோன்றியது. ஆனால் சிவகாமி பேசிய போது அந்த பாதிப்பின் சாயல் இல்லை. "என்ன வேணுமோ அதைச் செய்யட்டும். உனக்கு குணமானா சரி"

"அந்த ஹிப்னாடிசம் செய்யற செஷனை டேப்பில் ரெகார்டு செய்யணுமா, இல்லை நோட்ஸ் எடுத்துகிட்டா போதுமான்னு கேட்டார். நாமளா கேட்டுகிட்டா மட்டும் தான் டேப்பில் ரெகார்டு செய்வாங்களாம். என்னை என்ன செய்யலாம்னு கேட்டார். நான் வீட்டில் கேட்டு சொல்றதா சொன்னேன்"

சிவகாமி மருமகளைக் கூர்மையாகப் பார்த்தாள். ஆர்த்திக்கு நீலகண்டன் சொன்னது நினைவுக்கு வந்தது. அவர் சொன்னபடி டேப் செய்ய வேண்டாம் என்று சொல்வாளா, செய்யலாம் என்று சொல்வாளா என்று யோசித்தபடி அத்தையின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

"இதுல வீட்டுல கேட்க என்ன இருக்கு. உனக்கு எது நல்லதுன்னு தோணுதோ அதை அங்கேயே சொல்லி இருக்கலாமே"

ஆர்த்தி அசந்து போனாள். இந்த அத்தையை கணிக்கவே முடிய மாட்டேன்கிறதே!

"அவர் கேட்டவுடன் எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை....."

"ஆர்த்தி எப்பவுமே உன் விஷயத்தில் நீயே முடிவெடுக்கப் பழகறது நல்லது. நீ எடுக்கற ஒருசில முடிவுகள் தப்பாக் கூட இருக்கலாம். ஆனா அது கூட ஒரு பாடம் தான். அடுத்து எடுக்கற முடிவுகள் சரியா இருக்க அது உதவும். ஆனா முடிவை எப்பவுமே அடுத்தவங்களை எடுக்க விடறப்ப நாம பல நேரங்கள்ல அதுக்குப் பெரிய விலை கொடுக்க வேண்டி இருக்கும். இந்த டேப் எடுக்கற விஷயம் பெரிய விஷயம் இல்லை. அதில் நீ என்ன சொன்னாலும் பாதிக்க எதுவும் இல்லை....நான் சொன்னது வாழ்க்கைல முக்கியமான முடிவுகள் பத்தி...."

ஆர்த்தி தலையசைத்தாள். அவள் சொன்னது அர்த்தமுள்ளதாக இருந்தாலும், இந்த வீட்டில் எல்லா முக்கியமான முடிவுகளையும் தானே எடுக்கக்கூடிய ஒருத்தியிடமிருந்து இந்த அறிவுரை வருவது ஆர்த்திக்கு வேடிக்கையாக இருந்தது.

அந்த நேரமாய் சிவகாமியின் செல்போன் இசைக்க மருமகளிடம் தலையாட்டி விட்டு செல்போனைக் கையில் எடுத்தாள். "ஹலோ"

ஆர்த்தி அந்த அறையை விட்டு வெளியேறினாள்.

"ஹலோ சிவகாமி நான் தேசிகாச்சாரி பேசறேன்மா"

தேசிகாச்சாரி அவர்கள் குடும்ப வக்கீல். சிவகாமியின் தந்தை காலத்து ஆள்.

"சொல்லுங்க சார்"

"உன் தம்பி மகள் வந்துட்டாள்னு நீ தெரிவிச்சதா ஆபிசில் சொன்னாங்க. வாஸ்தவமா?"

"ஆமா சார்"

"நான் அவளைப் பார்த்துப் பேசணுமே"

"நான் அவளை அங்கே அனுப்பட்டுமா, இல்லை நீங்க இங்கே வர்றீங்களா?"

"நானே வர்றேன். நாளைக்குக் காலைல பதினோரு மணிக்கு வீட்டுக்கு வர்றேன்மா. அவளை வீட்டுலயே இருக்கச் சொல்லும்மா."

அவர் போனை வைத்து விட்டார். காலை பதினோரு மணி என்றால் அவளோ, சந்திரசேகரோ வீட்டில் இருக்க மாட்டார்கள் என்பதால் தான் பெரியவர் அந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதில் சிவகாமிக்கு சந்தேகமில்லை. சிவகாமி முகத்தில் லேசாக புன்முறுவல் அரும்பியது. நிறைய நேரம் தன் தந்தையின் புகைப்படத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவளுடைய தந்தையும் அந்த அழுவ புன்னகையுடன் மகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

# 69

There's a door."
"Where does it go?"
"It stays where it is, I think." -- Terry Pratchett

"ஆகாஷ், டாக்டர் ப்ரசன்னா என்ன சொன்னதா சொன்னான்?" சந்திரசேகர் சிவகாமியிடம் ஆவலாகக் கேட்டார்.

"புதன்கிழமையில் இருந்து ஆரம்பிச்சுடலாம்னு பொதுவாகத் தான் சொன்னானாம். அதுக்கு மேல் எதுவும் சொல்லலைன்னான்." என்ற சிவகாமி தேசிகாச்சாரி ஆர்த்தியிடம் நாளை பேச விரும்புகிறார் என்பதையும் தெரிவித்தாள். கேட்டு விட்டு அவர் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். பின் கேட்டார். "என்ன பேசணுமாம்"

"அதை அவர் சொல்லலை"

"என்ன திடீர்னு?"

"உன் பொண்ணுக்கு 21 வயசு முடிஞ்சுடுச்சு இல்லையா. அதான்...."

சந்திரசேகர் ஒரு நிமிடம் யோசித்து விட்டு கண்கலங்கச் சொன்னார், "போன வாரமே அவ பிறந்த நாள் வந்துட்டுப் போயிடுச்சு இல்லையா. யாருமே ஞாபகம் வைக்கலை. வாழ்த்தலை. கஞ்சனான நம்ம அப்பா கூட நம்ம பிறந்தநாளை தாம் தூம்னு கொண்டாடுவார். நான்... நான்...."

தம்பியின் மன உறுத்தல் சிவகாமியையும் அசைத்தது போலத் தெரிந்தது. "சரி விடு. தேதிப்படி தான் பிறந்த நாள் முடிஞ்சுடுச்சு. நட்சத்திரப்படி ஞாயிற்றுக் கிழமை வருது. கொண்டாடிடுவோம்"

சந்திரசேகர் முகம் மலர்ந்தது. சரியெனத் தலையசைத்தார். ஆனால் முகமலர்ச்சி வக்கீல் தேசிகாச்சாரி தயவில் நிறைய நேரம் நீடிக்கவில்லை. மீண்டும் அக்காவிடம் கேட்டார். "அவருக்குத் தான் உடம்புக்கு அதிகம் முடியறதில்லையே. இப்ப எல்லாத்தையும் அவர் மகன் வேங்கடாச்சாரி தானே பார்த்துக்கறார். அப்புறம் இவர் ஏன் வர்றார்?"

"ஆர்த்தியை நேரில் பார்த்து அந்த உயிலைப் படிச்சுக் காண்பிக்கணும்னு நினைக்கிறார் போல இருக்கு"

சொல்லி விட்டு சிவகாமி எழுந்து தன் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள். இனி நீ போகலாம் என்று பொருள் உணர்ந்த சந்திரசேகர் அறையில் இருந்து வெளியேறினார். 'அக்கா தேவைக்கதிகமாக எதைப் பற்றியும் நினைப்பதுமில்லை, பேசுவதுமில்லை. ஒரு விஷயத்திலிருந்து இன்னொன்றுக்கு எவ்வளவு சுலபமாக நகர்ந்து விடுகிறாள். இது ஏன் என்னால் முடிவதில்லை?' என்ற எண்ணம் பிரதானமாக அவர் மனதில் எழுந்தது.

அன்று காலை ஆபிசிற்குக் கிளம்பும் முன் சிவகாமி ஆர்த்தியிடம் சொன்னாள். "ஆர்த்தி நம்ம குடும்ப வக்கீல் தேசிகாச்சாரி உன்னைப் பார்த்துப் பேசணும்னார். நாளை காலை பதினோரு மணிக்கு வர்றாராம். அந்த நேரம் எங்கேயும் போயிடாதே. இங்கேயே இரு".

அவள் மருமகளிடம் ஹாலில் சொன்ன போது பார்வதியும், நீலகண்டனும் ஆர்த்தியுடன் இருந்தார்கள். திடீரென்று சிவகாமி இதைச் சொன்னவுடன் அவர் ஏன் என்னைப் பார்க்க வருகிறார் என்று கேட்க நினைத்த ஆர்த்தி கேட்க வாய் திறக்கும் முன் சிவகாமி போய் விட்டாள். அவள் பின்னால் சென்ற சந்திரசேகரும் மகளைப் பார்த்து தலையசைத்தாரே ஒழிய அவள் அருகே நிற்கக் கூட இல்லை.

"எனக்கென்னவோ அன்னைக்கு உயில் பத்தி மூர்த்தி சொன்னது நிஜம்னு படுது. உயில் பத்திப் பேச தான் அவர் வர்றார்னு நினைக்கிறேன்" என்று நீலகண்டன் சொன்னார்.

ஆர்த்திக்கு இதுபற்றி என்ன நினைப்பது என்றே தெரியவில்லை. திடீரென்று பாண்டிச்சேரியில் அந்த மிகச்சிறிய வீட்டில் ஏழையாக வாழ்ந்த வாழ்க்கை மேல் என்று தோன்றியது. அங்கு பணம் குறைவாகவும் சந்தோஷம் நிறைவாகவும் இருந்தது. இங்கு பணம் நிறைய இருந்தாலும் ஏனோ நிம்மதி இல்லை என்று தோன்றியது.

"சரி ட்ரீட்மெண்டை டேப் எடுக்கற விஷயத்தைப் பத்தி உன் பெரியத்தை என்ன முடிவு செஞ்சா?" நீலகண்டன் பேத்தியைக் கேட்டார்.

"எனக்கு எது நல்லதுன்னு தோணுதோ அப்படியே செய்யச் சொல்லிட்டாங்க"

"அப்படி சொன்னாத் தானே சந்தேகப்பட மாட்டாங்க. அதனால் தான் அப்படிச் சொல்லியிருக்கா"

பார்வதி கணவனைப் பார்த்து ஏளனமாய் சொன்னாள். "நரம்பில்லாத நாக்குடா சாமி. அவ என்ன சொன்னாலும் உங்களுக்குக் குற்றம் தானா?'

நீலகண்டன் மனைவியை முறைத்தார். பின் பேத்தியிடம் திட்டவட்டமாகச் சொன்னார். "ஆர்த்தி என்னவானாலும் சரி டேப் எடுக்கணும்னு அந்த டாக்டர் கிட்ட சொல்லிடு"

ஆர்த்தி சம்மதித்தாள்.
++++++++++++++++++++

"எனக்கு அஞ்சு லட்ச ரூபாய் வேணும் பவானி"

பவானி தாயைத் திகைப்புடன் பார்த்தாள். "எதுக்கும்மா?"

"அது உனக்கென்னத்துக்கு. வேணும். அவ்வளவு தான்"

"என்கிட்ட அவ்வளவு பணம் ஏதும்மா. இந்த வீட்டுல பணம் அக்கா தம்பி கைல தானே இருக்கு. இவர் கிட்ட கேட்டாலும் எதுக்குன்னு கேட்பார்"

"பணமா அவங்க உனக்குத் தந்து வைக்க மாட்டாங்கன்னு எனக்கும் தெரியும். உன்னோட நகைகள் கொஞ்சம் கொடு"

"அம்மா இது அவருக்குத் தெரிஞ்சா நான் இங்கே இருக்க முடியாது"

"ஏண்டி பயந்து சாகறே. அவன் என்ன உன் நகைகளை தினமும் ஸ்டாக் எடுக்கவா போறான்"

பவானி முகம் வெளுக்க தாயைப் பார்த்தாள். பஞ்சவர்ணம் சிறிதும் தயங்காமல் மகளிடம் சொன்னாள். "சீக்கிரம் கொண்டு வா. எனக்கு இப்பவே வேணும்."

பவானி சென்றவுடன் மூர்த்தி வந்தான். "பாட்டி! ஹிப்னாடிசம் செஷனை டேப் எடுக்கறதுன்னு முடிவு செஞ்சுட்டா ஆர்த்தி"

"நல்லது. அந்த அசோக் போன் செஞ்சா நமக்கு அந்த டேப் அப்பப்பவே வேணும்னு சொல்லிடு. பணத்துக்கு பவானி கிட்ட நகை கொண்டு வரச் சொல்லியிருக்கேன்."

"பாட்டி. ஆர்த்தி கையிலிருந்தே அந்த டேப்பை நாம் எடுத்துக்க முடியாதா?"

"ஆர்த்திக்கே அந்த டாக்டர் அப்பப்ப தருவானான்னு சந்தேகம். அப்படியே கொடுத்தாலும் அந்த சிவகாமி கைக்குத் தான் அது முதல்ல போகும். கனவையே சொல்ல விடாத அந்த சண்டாளி இதை மட்டும் நம்ம கைக்குக் கிடைக்க விடுவாளா என்ன. அதனால மூர்த்தி அந்த அசோக் போன் செஞ்சா நான் சொன்ன மாதிரியே சொல்லிடு. பணம் செலவாவதைப் பார்க்காதே"

தலையசைத்து விட்டு மூர்த்தி சொன்னான். "பாட்டி, ஆர்த்தியைப் பார்க்க குடும்ப வக்கீல் தேசிகாச்சாரி நாளைக்கு வர்றாராம்"

பஞ்சவர்ணம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். "சபாஷ். எல்லாமே சரியா ஒத்து வருதுடா...."

மகள் உள்ளே நுழைவதைப் பார்த்த பஞ்சவர்ணம் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை. உள்ளே வந்த பவானி சில நகைகளை தாயிடம் கொடுத்தாள். "அம்மா, என்ன செஞ்சாலும் அவர் காதுக்கோ, பெரியக்கா காதுக்கோ விழாத மாதிரி செய், ப்ளீஸ்".

மகள் கிட்டத்தட்ட அழும் நிலையில் பேசியதை எரிச்சலுடன் கேட்டுக் கொண்ட பஞ்சவர்ணம் "சரிடி சும்மா பாடம் நடத்தாதே. எல்லாம் எனக்குத் தெரியும்" என்றாள்.

அந்த நேரமாக மூர்த்தியின் செல் இசைத்தது. போனில் பேசிய மூர்த்தி "ஹலோ அசோக்கா, ஒரு நிமிஷம்" என்றவன் பஞ்சவர்ணத்தின் கண்ஜாடையைப் படித்து விட்டு அங்கிருந்து அவசரமாக நகர்ந்தான்.

பவானிக்கு தாயின் கண்ஜாடையும், மூர்த்தியிடம் தெரிந்த பரபரப்பும் வயிற்றைக் கலக்கியது. என்னவோ நடக்கிறது என்பது புரிந்தாலும் என்னவென்று தீர்மானமாக ஊகிக்க முடியவில்லை. ஆனால் எதிரணியில் சிவகாமி இருக்கிறாள் என்ற நினைவே அவளுக்கு திகிலைக் கிளப்பியது.

# 70

Solitude excludes pleasure, and does not always secure peace.
- Samuel Johnson

அர்ஜுனின் எதிரே வந்து கொண்டிருந்த பெண்மணி தன் முகத்தை அருவருப்புடன் திருப்பிக் கொண்டாள். அது அர்ஜுனை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. நினைவு தெரிந்த நாளில் இருந்து இந்த அருவருப்பை அவன் மற்றவர்களிடம் பார்த்து தான் வளர்ந்திருக்கிறான். பார்க்கிங் ஏரியாவில் இருந்த தன் வழக்கமான காரில் ஏறி அமர்ந்து கொண்டான். அந்த கோயமுத்தூர்

அலுவலகத்திலிருந்து கார் வெளியே வந்த போது கேட்டைத் திறந்த வாட்ச்மேன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு ஒரு சல்யூட் அடித்தான்.

இந்த சல்யூட் தனக்கல்ல சிவகாமி அம்மாளின் விசுவாசி என்பதற்காக கிடைத்தது என்று அர்ஜுனுக்குத் தெரியும். அதனால் அந்த சல்யூட்டையும் அவன் பொருட்படுத்தவில்லை. வெளியே லேசாக மழை பெய்ய ஆரம்பித்தது. காரை ஓட்டும் போது மனம் ஏனோ அலைபாய்ந்தது. விமானத்தில், சென்னையில் அந்த ஆஸ்பத்திரியில் என்று பலரும் அவனைக் கண்டவுடன் பட்ட அருவருப்பு அவனுக்குத் தாயை நினைவுபடுத்தியது. முதல் முதலில் அவள் முகத்தில் தான் அந்த அருவருப்பைப் பார்த்திருக்கிறான். காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதெல்லாம் அவன் வீட்டு விஷயத்தில் பொய்த்துத் தான் போனது.

"இந்த அசிங்கத்தைப் பிறந்தவுடனே அழிச்சிருக்க வேண்டியது தானே" என்று பக்கத்து வீட்டுக்காரி அவன் தாயிடம் ஒரு நாள் கேட்டது காதில் விழுந்தது.

"அப்ப எனக்கு தைரியம் வரலை" என்ற அவன் தாயின் பதில் இன்னும் நெஞ்சில் திராவகமாக விழுகிறது.

அவள் இரண்டு தெரு தள்ளி இருந்த ஒருவனுடன் ஓடிப் போய் அவன் நடுத்தெருவில் நிராதரவாக நின்ற போது அவள் அவனைத் தைரியமாக ஆரம்பத்திலேயே கொன்றிருந்தால் அது இதை விடக் கருணை உள்ள செயலாக இருந்திருக்கும் என்று தோன்றியது. நாட்கணக்கில் அழுதான். இரக்கப்பட்டு அவள் திரும்பி வருவாள் என்ற நப்பாசை மனதின் ஒரு மூலையில் சில நாட்கள் இருந்தது. அழுகையும் அந்த எதிர்பார்ப்பும் கடைசியில் வரண்டு போனது.

ஆரம்பத்தில் தெருவில் திரியும் சிறுவர்களின் தொந்திரவும் கிண்டலும் தாங்க முடியாமல் போன போது இயல்பாகவே திடகாத்திரமாக இருந்த அவனுக்கு ஓரிருவரை அடித்து நொறுக்க சிரமம் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் பின்னர் எச்சரிக்கையாக நடந்து கொண்டார்கள். தூரத்தில் இருந்து கல் எறிய ஆரம்பித்தார்கள். எத்தனையோ நாட்கள் சரியாக உறக்கமில்லாமல் இருந்திருக்கிறான். எப்போது எங்கிருந்து கல் வந்து விழும் என்று சொல்ல முடியாது. சாவதற்கும் அவனுக்கு வழி தெரியவில்லை. அந்த சமயத்தில் தான் ஒரு தெய்வமாக சிவகாமி அவன் வாழ்க்கையில் வந்தாள்.

ஒருநாள் பல சிறுவர்களின் கற்களை சந்தித்துக் கொண்டு இருந்த போது தான் சிவகாமியை அவன் முதன் முதலில் சந்தித்தான். அவனைப் பாதுகாப்பாய் பின்னுக்குத் தள்ளி பத்திரகாளி போல் ரௌத்திராகாரமாக அந்த சிறுவர்களை சீறித் துரத்திய அந்தக் காட்சி மனதில் இன்னும் பசுமையாக இருக்கிறது. தாங்கள் தங்கிய ஓட்டலுக்கு அழைத்துப் போய் முதலில் வயிறார சாப்பிட வைத்தாள். தங்களுடனேயே வந்து விடுகிறாயா என்று அவள் கேட்ட போது அவனால் நம்ப முடியவில்லை. தலையசைத்தான். இந்தியாவிற்கு அவளுடனே வந்த போதிலும் அவள் ஒரு சில நாட்களில் தன்னைக் கைகழுவி விடுவாள் என நிறைய நாட்கள் பயந்தான். இப்படிப்பட்ட மனிதர்களும் இருப்பார்கள் என்பதை அவனால் உடனடியாக நம்ப முடியவில்லை. அவள் அப்படிக் கைவிட மாட்டாள் என்று உறுதியானவுடன் தனக்குள் ஒரு நிரந்தர சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டான். உடலில் கடைசி துளி உயிர் உள்ளவரை அவளுக்கு விசுவாசமாக இருப்பேன் என்று உறுதி பூண்டான். அவள் எந்த வேலை தந்தாலும் அவன் ஏன் எதற்கு என்று எப்போதுமே கேட்டதில்லை. அது சரியா, தவறா என்று யோசித்ததில்லை. அவனைப் பொறுத்தவரை அவள் தான் எல்லாம்.

எழுதப் படிக்க சொல்லித் தர ஒரு ஆசிரியரை ஏற்பாடு செய்தாள். அவனுக்கு பங்களாவிற்கு வெளியே இருந்த சிறிய அவுட் ஹவுசைத் தங்கக் கொடுத்தாள். அவன் செய்யும் வேலைக்கு ஒரு

சம்பளம் நிர்ணயித்துக் கொடுத்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மனிதன் என்ற அந்தஸ்தைக் கொடுத்தாள். அவன் முகத்தின் விகாரம் அவளைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அவன் முகத்தைப் பார்த்து தான் அன்றிலிருந்து இன்று வரை பேசுகிறாள். இப்போது அவன் முகத்தை மாற்ற முயற்சி செய்கிறாள்.

அவன் முகத்திற்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்வது பற்றி சிவகாமி முதலில் சொன்ன போது அவனால் நிறைய நேரம் எதுவும் பேச முடியவில்லை. கடைசியில் பேச முடிந்த போது சொன்னான். "அதுக்கு நிறைய செலவாகுமே மேடம்"

"அதனாலென்ன?"

"என் கிட்டே அவ்வளவு பணம் இல்லை மேடம்"

"என் கிட்ட இருக்கு"

சொன்ன சிவகாமி தன் செல் போனில் எண்களை அழுத்த ஆரம்பித்தாள். இது சம்பந்தமான பேச்சு இத்தோடு முடிந்தது என்று அர்த்தம்.

பிறகு அவளே சென்னையில் டாக்டரிடம் பேசி அப்பாயின்மென்ட் வாங்கி அவனை அனுப்பியும் வைத்தாள். அங்கு மூன்று மணி நேரம் அவர்கள் விதவிதமான பரிசோதனைகள் செய்தார்கள், அளவுகள் எடுத்தார்கள். டாக்டரிடம் அவன் தெரிந்து கொள்ளும் ஆவலில் எவ்வளவு செலவாகும் என்று கேட்டான். டாக்டர் சொன்னார். "20 லட்சம்".

அர்ஜுன் வாயடைத்துப் போனான். டாக்டர் கேட்டார். "நீங்க மேடத்துக்கு என்ன உறவு?"

அர்ஜுன் சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை. அவன் யாருக்குமே உறவில்லை. பெற்றவள் கூட உறவை உதறி விட்டுப் போன இந்த துர்ப்பாக்கியசாலி, சிவகாமி போல் ஒருத்திக்கு என்ன உறவாக முடியும்?

டாக்டர் பதிலுக்குக் காத்திருக்கிறார் என்று தெரிந்த போது உண்மையைச் சொன்னான். "நான் அவங்க கிட்ட வேலை பார்க்கிறேன்"

கேட்ட போது டாக்டரும் வாயடைத்துப் போன மாதிரி தெரிந்தது. அவன் கிளம்பும் போது டாக்டர் சொன்னார். "மேடம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சர்ஜரி செய்யணும்னாங்க. நான் ரெண்டு நாள்ல சில இமேஜஸ் அவங்களுக்கு ஈ மெயில்ல அனுப்பி வைக்கிறேன்னு சொல்லுங்க. அவங்கள ஏதாவது ஒன்னை செலக்ட் செய்யச் சொல்லுங்க. அடுத்த வாரம் ஒரு நாள் சர்ஜரி செய்துடலாம்....."

இப்போது கூட அவனுக்கு எல்லாமே கனவு போலத் தான் இருந்தது. தனக்காக சிவகாமி 20 லட்சம் ரூபாய் செலவு செய்யத் தயாரானது திகைப்பாக இருந்தது. என்ன மனுஷி அவள். இது வரை அவள் அவனுக்காக செய்ததற்கே ஏழு ஜென்மத்திற்கு அவள் செருப்பாகத் தேய்ந்தால் கூட பட்ட கடன் தீராது என்று அவனுக்குத் தோன்றியது. அத்துடன் இந்தக் கடனும் சேர்ந்தால்.....?

அவனுடைய கார் ஒரு சிக்னலில் நின்றது. இப்போது மழை வலுத்து விட்டது. அந்த மழையில் ஒரு ரெயின் கோட் அணிந்த நபர் சிக்னலில் தெருவைக் கடக்க இருபக்கமும் பார்த்து விட்டு ஒரு

அடி வைத்தவர் அப்போது தான் மிக அருகில் அர்ஜுனைக் கவனித்தார். ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றவர் அடுத்த கணம் பேயைக் கண்டது போல தலை தெறிக்க தெருவைக் கடந்து ஓடினார்.

அர்ஜுன் தன் எண்ணங்களில் ஆழ்ந்திருந்ததால் ஆரம்பத்தில் அவ்வளவு விரைவாக நடந்தது அறிவுக்கு எட்டவில்லை. தன்னைக் கண்டு அந்த உருவம் ஸ்தம்பித்து நின்றதும், பின் தலை தெறிக்க ஓடியதும், பிறகு தான் மூளையில் மின்னலாகத் தாக்கியது. ஆனால் அந்த நபரின் அடையாளம் தெரியவில்லை. அது ஆணா, பெண்ணா என்பது உட்பட எதுவும் தெரியாவிட்டாலும் ஓடுவது தன்னைப் பார்த்து விட்டுத் தான் என்பதில் அவனுக்கு சந்தேகம் இல்லை. யாரது?

# 71

Asking the right questions takes as much skill as giving the right answers."
– Robert Half

தேசிகாச்சாரிக்கு வரும் மாதம் எழுபத்தைந்து வயது முடிகிறது. வக்கீல் தொழிலில் புலி என்று அந்தக் காலத்தில் கருதப்பட்டவர். மகன் வேங்கடாச்சாரி தந்தை வழியில் இப்போது பிரபலமாக இருக்க அவர் எல்லாவற்றையும் மகனிடம் ஒப்படைத்து ரிடையராகி ஆன்மீகத்தில் மூழ்கி இருக்கிறார். சொற்பொழிவுகள் கேட்பது, வேத பாராயணம் செய்வது என்று அவருடைய நேரம் கழிகிறது. ஆனால் அவர் ரிடையராக முடியாத விஷயம் இன்னும் ஒன்று பாக்கி இருக்கிறது. அது அவருடைய காலஞ்சென்ற கட்சிக்காரர் தர்மலிங்கத்தின் உயில் சம்பந்தப்பட்ட விஷயம். அதை அவர் மகன் வேங்கடாச்சாரி பார்த்துக் கொள்ள மாட்டார் என்றல்ல. அதை அவர் தன் தொழில் சம்பந்தப்பட்ட விஷயமாக நினைக்காமல் தனிப்பட்ட விஷயமாக நினைப்பதே அதற்கு முக்கியக் காரணம்.

தர்மலிங்கத்தின் பெயரில் மட்டுமே தர்மம் இருந்தது. வாழ்க்கையில் இருக்கவில்லை. ஆனாலும் அடிமட்டத்திலிருந்து மேலே வந்த அந்தக் கட்சிக்காரர் மீது தேசிகாச்சாரிக்கு ஒரு தனிப்பட்ட மரியாதை இருந்தது. இத்தனைக்கும் மனிதர் ஃபீஸைக் கூட அவ்வப்போது கொடுத்து விட மாட்டார். கேட்கும் போதெல்லாம் 'கொடுக்கலாம். நான் எங்கே ஓடியா போயிடப்போறேன்' என்று சொல்வார். நாள் கழித்துக் கொடுக்கும் போதும் 'இத்தனை கஷ்டப்பட்டு தொழில் செய்யறதுக்கு பதிலா பேசாம வக்கீலாயிருக்கலாம் போல இருக்கு. கஷ்டப்படாமல் காசு சம்பாதிக்கலாம்' என்று சொல்லிக் கொடுப்பார். ஆனாலும் படித்து முடித்து ப்ராக்டிஸ் செய்ய ஆரம்பித்த போது முதன் முதலில் தன்னை வக்கீலாக நியமித்தவர் தர்மலிங்கம் தான் என்பதை தேசிக்காச்சாரி மறக்கவில்லை. 'ஆரம்பம் சரியானால் அனைத்தும் சரியாகும்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த தேசிகாச்சாரி தன் வக்கீல் தொழில் வளர்ச்சிக்கு இந்த ராசியான மனிதர் முதல் கட்சிக்காரராக வந்தது முக்கிய காரணம் என்று நம்பினார். அந்த நன்றியுணர்வு அவருக்கு இன்று வரை இருக்கிறது.

எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கிய தர்மலிங்கம் தன் மூத்த மகள் சிவகாமியிடம் வைத்திருந்த பாசம் எல்லையில்லாதது. 'ஒண்ணுமில்லாம ஆரம்பிச்ச வாழ்க்கை இவள் பிறந்த பிறகு தான் பெருக ஆரம்பிச்சது' என்று பல முறை அவர் தேசிகாச்சாரியிடம் சொல்லி இருக்கிறார். சிவகாமி அருகில் இருக்கும் போதெல்லாம் தர்மலிங்கம் முகத்தில் ஒருவித பெருமிதம் தாண்டவமாடுவதை தேசிகாச்சாரி பல முறை பார்த்து இருக்கிறார். ஆனால் மற்ற இரண்டு பிள்ளைகள் அவருக்கு ஒரு பொருட்டாக இருந்ததில்லை.

சிவகாமி கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்த காலங்களிலேயே தந்தையின் வியாபாரத்தில் பங்கெடுக்க ஆரம்பித்து விட்டாள். அதன் பிறகு அவள் ஆதிக்கம் அவர் கம்பெனி விவகாரங்களில்

அதிகரிக்க ஆரம்பித்தது. பல முக்கியமான முடிவுகள் அவளாலேயே எடுக்கப்பட்டது. தேசிகாச்சாரி தந்தையை விட மகள் கெட்டிக்காரி என்பதை உணர ஆரம்பித்தார். சட்ட நுணுக்கங்களைப் புரிந்து கொள்வதில் சிவகாமி தந்தையைக் காட்டிலும் அறிவு பெற்றிருந்தாள். என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பதில் அவளுக்கு என்றுமே அதிக நேரம் தேவைப்பட்டதில்லை.

ஆனால் மனிதர்களை எடை போடுவதில் சமர்த்தரான தேசிகாச்சாரி சிவகாமி விஷயத்தில் குழம்பிப் போனார். அவள் மனதில் என்ன ஓடுகிறது என்பதை பல சமயங்களில் அவரால் புரிந்து கொள்ள முடிந்ததில்லை. சில சமயங்களில் ஏன் அப்படி நடந்து கொள்கிறாள் என்பதற்கும் காரணம் கண்டுபிடிக்க முடிந்ததில்லை. தன் எண்ணங்களையோ, செயல்களையோ அவள் என்றுமே விளக்கியதில்லை. எத்தனையோ பாதகமான நிகழ்வுகளுக்கு மத்தியில் இருக்கும் போது தர்மலிங்கம் காட்டிய பதட்டம் அவள் காட்டியதில்லை. அவசர முடிவு எடுத்ததில்லை. அலட்சியமாக இருப்பது போல் தோன்றினாலும் திடீரென்று அருமையான முடிவெடுத்து எல்லாவற்றையும் தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதை தேசிகாச்சாரி பார்த்திருக்கிறார்.

தந்தையை விட தர்மசிந்தனை அதிகம் உள்ளவள் என்று பல தடவை அவருக்குத் தோன்றி இருக்கிறது. ஆனால் தன் வியாபார எதிரிகளை மண்ணைக் கவ்வ வைப்பதிலும் தந்தையே தேவலை என்று தோன்றுமளவு கடூரமாக நடந்து கொள்வதையும் தேசிகாச்சாரி பார்த்திருக்கிறார். பல நேரங்களில் யாருமே எதிர்பாராத முடிவுகளை அவள் எடுத்து திகைக்க வைத்திருக்கிறாள்.

அப்படி எடுத்த முடிவுகளில் ஒன்று தான் அவள் சங்கரனைத் திருமணம் செய்து கொள்ள எடுத்த முடிவு. அவளைத் திருமணம் செய்து கொள்ள எத்தனையோ அழகான, கோடீசுவர இளைஞர்கள் போட்டியில் இருக்க நடுத்தர வர்க்க ஒரு வக்கீல் இளைஞனை அவள் தேர்வு செய்த போது தர்மலிங்கம் அவரிடம் பையன் எப்படி என்று விசாரித்தார்.

"பையன் தங்கமான பையன். புத்திசாலி. எங்க வக்கீல்கள் மத்தியில் நல்ல பேர் இருக்கு. ஆனா சொத்து பத்து எதுவும் இருக்கிற மாதிரி தெரியலை."

"நல்ல பேர்ல நாலு எஸ்டேட் வாங்க முடியுமா? கார் பங்களா ஐஸ்வர்யம்னு சுபிட்சமா இருக்க முடியுமா? நம்ம அந்தஸ்துக்கு ஏத்த பையனா பார்க்கணுமா வேண்டாமா? இதைச் சொன்னா 'குடும்ப வாழ்க்கையையும் வியாபாரத்தையும் ஒண்ணா கணக்கு போட்டு குழப்பிக்காதீங்கப்பா'ன்னு சொல்றா. ஒரு முடிவு எடுத்துட்டா மாத்திக்க மாட்டா. அதனால சரின்னுட்டேன்."

பணம் அந்தஸ்து மட்டுமல்ல குணாதிசயங்களில் கூட முற்றிலும் மாறுபட்ட ஒருவனைக் கணவனாக அவள் தேர்ந்தெடுத்தாலும் தர்மலிங்கத்திற்கு மகள் மீது இருந்த அன்பு குறையவில்லை. அந்தப் பாசம் முன்பை விட அதிகமானதாகவே தோன்றியது. அப்படிப்பட்டவர் உயில் எழுத அழைத்த போது முக்கால்வாசி சொத்து சிவகாமிக்கே போய் விடும் என்று தேசிகாச்சாரி நம்பினார். ஏனென்றால் பல முறை தர்மலிங்கம் அவரிடம் சொல்லி இருக்கிறார். "எல்லாத்தையும் அவள் பேரிலேயே எழுதிடலாம்னு தோணுது. இவங்களுக்கு அவ அக்காவா இல்லை. அம்மாவா இருக்கா. அவ பார்த்து இவங்களுக்கு என்ன செய்யணுமோ செய்வாள். இவங்க பேர்ல எழுதி வெச்சா இவங்க சொத்தை தக்க வச்சுக்குவாங்களான்னு சந்தேகமா இருக்கு."

ஆனால் அங்கு போன பின் தர்மலிங்கம் எழுதச் சொன்ன உயில் தேசிகாச்சாரிக்கு திகைப்பை ஏற்படுத்தியது.

"ஏன்?" என்று தேசிகாச்சாரி கேட்டதற்கு தர்மலிங்கம் விளக்கம் தரவில்லை.

"நல்லா யோசிச்சிட்டீங்களா"

தர்மலிங்கம் நன்றாக யோசித்தாகி விட்டது என்று தலையை மட்டும் அசைத்துத் தெரிவித்தார். அவர் பேசும் மனநிலையில் இல்லை என்று புரிந்து கொண்ட தேசிகாச்சாரி இன்னொரு நாள் கேட்டுக் கொள்ளலாம் என்று விட்டு விட்டார். ஆனால் அப்படியொரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவில்லை. உயில் எழுதி பத்து நாளில் தர்மலிங்கம் இறந்து விட்டார். தர்மலிங்கத்தின் மனமாற்றத்திற்கான காரணம் கடைசி வரை தேசிகாச்சாரிக்குத் தெரியாமலேயே போய் விட்டது.

தர்மலிங்கத்தின் மரணத்திற்குப் பின்பும் நடந்த சம்பவங்கள் சிவகாமி மேல் பல சந்தேகங்களைக் கிளப்பின...

# 72

Not every event has a profound significance for you. There are a few, however, that I would consider likely to have changed things for you, to have illuminated your path.

– Carlos Castaneda

தர்மலிங்கம் இறந்த பின் ஒரு நாள் தேசிகாச்சாரி உயிலைப் படித்துக் காட்ட அந்த வீட்டுக்குச் சென்றிருந்தார். முழுக் குடும்பமும் கூடி இருக்க தேசிகாச்சாரி உயிலை வாசித்துக் காட்டினார்.

தர்மலிங்கம் கம்பெனி சொத்தை மூன்றாகப் பிரித்திருந்தார். 20 சதவீதம் சிவகாமிக்கும், 20 சதவீதம் அமிர்தத்திற்கும், 60 சதவீதம் சந்திரசேகருக்கும் எழுதி இருந்தார். ஆனால் சந்திரசேகர் தன் பங்கு ஷேர்களை யாருக்கும் விற்கவோ, தரவோ முடியாதென்றும் அதில் வரும் லாபத்தை மட்டுமே அனுபவிக்க முடியும் என்றும் சொல்லி இருந்தார். வீடும் ஒரு எஸ்டேட்டும் சிவகாமிக்கும், வேறொரு எஸ்டேட் அமிர்தத்திற்கும், மூன்று எஸ்டேட்டுகள் உள்பட மீதம் இருந்த பல அசையா சொத்துகள் சந்திரசேகருக்கும் தர்மலிங்கம் எழுதி இருந்தார். அவற்றிலும் வரும் வருமானத்தை மட்டுமே சந்திரசேகர் அனுபவிக்க முடியும் என்றும், அவற்றையும் விற்கவோ, தரவோ சந்திரசேகருக்கு உரிமை இல்லை என்றும் எழுதி இருந்தார். சந்திரசேகரின் அத்தனை சொத்துகளும் அவருடைய குழந்தைகள் மேஜர் ஆன பிறகு அவர்களுக்கு சரி சமமாக சேரும் என்றும் சந்திரசேகர் உயிருடன் இருக்கும் வரையில் அவர் அனுமதியுடன் அவர்கள் விற்க முடியும் என்றும் அவர் காலத்திற்குப் பின் அவர்கள் தங்கள் விருப்பப்படி விற்பது உட்பட என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்றும் எழுதி இருந்தார்.

உயில் விவரம் தெரிய வந்த போது சிவகாமியின் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. அதில் தேசிகாச்சாரிக்கு ஆச்சரியம் இல்லை. ஏனென்றால் எதைப் பற்றியும் என்ன நினைக்கிறாள் என்பதை அவள் என்றுமே வெளிப்படுத்தியதில்லை. சங்கரனும் பெரிதாக எதையும் நினைத்த மாதிரி தெரியவில்லை.

அமிர்தத்தின் திகைப்பு அவள் முகத்தில் நன்றாக தெரிந்தது. தனக்கு அதிகம் கிடைக்குமென்று அவள் நினைத்திரா விட்டாலும் அக்காவிற்கு இத்தனை குறைவாக கிடைக்கும் என்றும் எதிர்பார்த்திருக்கவில்லை என்று தோன்றியது. அக்காவை அவள் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள். ஆனால் அவள் கணவருக்கு தங்களுக்குக் கிடைத்த பங்கு மிகக் குறைவு என்ற அதிருப்தி இருந்தது தெரிந்தது.

ஆனால் தேசிகாச்சாரியை ஆச்சரியப்படுத்தியது சந்திரசேகரின் திகைப்பின்மையே. உயிலின் சாராம்சம் முன்பே தெரிந்திருந்தது போல சந்திரசேகர் அமர்ந்திருந்தார். ஒருவேளை தர்மலிங்கம் முன்பே மகனை அழைத்து இதைத் தெரிவித்திருப்பாரோ என்று தேசிகாச்சாரி சந்தேகப்பட்டார். அப்படிச் சொல்லி இருந்தால் அவர் ஏன் அப்படி உயிலை எழுதினேன் என்றும் மகனிடம் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் சந்திரசேகர் அன்றும் சரி, பின்பும் சரி உயிலின் சாராம்சம் பற்றி அவரிடம் பேசியதில்லை.

பிற்காலத்தில் சந்திரசேகரின் மனைவி ஆனந்தி ஒரு விபத்தில் இறந்து போய் அவருடைய ஒரே மகளையும் ஆனந்தியின் பெற்றோர் எடுத்துச் சென்று விட்டார்கள் என்று கேள்விப்பட்ட போது அவர் வக்கீல் மூளை சந்தேகப்பட்டது. உண்மையிலேயே குழந்தையை அவர்கள் தான் எடுத்துச் சென்று விட்டார்களா இல்லை இதில் ஏதாவது தகிடுதத்தம் இருக்கிறதா என்று சந்தேகம் எழுந்தது. அந்தக் குழந்தையைக் கண்டுபிடிக்கவோ திருப்பிக் கொண்டு வரவோ சிவகாமி எந்த முயற்சியும் எடுக்காதது அவர் சந்தேகத்தை அதிகரித்தது. சந்திரசேகருக்கு அக்கா மேல் உள்ள பக்தியை அறிந்திருந்த தர்மலிங்கம் சிவகாமியின் உண்மையான குணம் அறிந்த பின் தான் சொத்தை சந்திரசேகரிடம் தக்க வைக்க இப்படி உயில் எழுதினாரோ என்ற சந்தேகம் தேசிகாச்சாரிக்கு வலுக்க ஆரம்பித்தது.

பலமுறை குழந்தையைத் திருப்பிக் கொண்டு வருவது பற்றி சந்திரசேகரிடமும் சிவகாமியிடமும் அவர் பேசி இருக்கிறார். சந்திரசேகரிடம் பேசிப் பயனில்லை என்று அவருக்குத் தெரியும். ஆனாலும் பாசமாவது அவரைத் தூண்டி விடாதா என்ற நம்பிக்கையில் முயற்சி செய்து பார்த்தார். சந்திரசேகர் சரிவர எந்த பதிலும் சொல்லவில்லை. சிவகாமி குழந்தையை கொண்டு சென்றது கொள்ளைக்காரர்கள் அல்ல சொந்தத் தாத்தா தான் என்பதால் போலீசில் புகார் செய்வதோ, பத்திரிக்கைகளில் விளம்பரம் செய்வதோ தங்கள் குடும்ப கௌரவத்திற்கு பங்கம் விளைவிக்கும் என்பது போலப் பேசினாள். மற்றபடி எல்லா முயற்சியும் தான் எடுத்து வருவதாகத் தெரிவித்தாள்.

தேசிகாச்சாரிக்கு சந்தேகம் வலுத்தது. ஏனென்றால் காலம் சென்று கொண்டே இருந்ததே ஒழிய தர்மலிங்கத்தின் ஒரே பேத்தி திரும்ப வருவதாகக் காணோம். சிவகாமி உண்மையாகவே முயற்சி எடுத்திருந்தால் அவளால் முடியாதது எதுவுமில்லை என்பதை அவர் அறிவார். எதுவும் நடக்கவில்லை என்றால் அவள் முயற்சி எடுக்காததே காரணம் என்பதில் அவருக்கு சந்தேகமே இல்லை.

குழந்தையைக் கொன்று விட்டாளோ என்பது உட்பட பல சந்தேகங்கள் தேசிகாச்சாரிக்கு வந்தன. மகனிடம் எல்லா ஃபைல் கட்டுக்களையும் கொடுத்து விட்டு தொழிலில் இருந்து விலகி விட்ட போதும் அவருக்கு ஆர்த்தி விஷயம் உண்மையில் ஒரு உறுத்தலாகவே இருந்தது. வாரிசு என்று ஒன்று இருந்தால் தானே அதற்குப் போகும் என்று சிவகாமி அந்தக் குழந்தையை அப்புறப்படுத்தி விட்டதாகவே அவர் நினைத்து வந்தார்.

வெளிப்பார்வைக்கு அவள் மீது தப்பு சொல்லும்படி எதுவும் இல்லை. தம்பிக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காகவே ஏழை வீட்டுப் பெண் ஒருத்தியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்த போது தர்மலிங்கம் இருந்திருந்தால் இதை ஒத்துக் கொண்டிருக்க மாட்டார் என்பதை தேசிகாச்சாரி கூட நினைத்தார். அதே போல் இரண்டாவது மனைவியைக் கூட ஏழைப் பெண்ணாகவே தான் அவள் தேர்ந்தெடுத்தாள். ஒரு கோணத்தில் பார்க்கையில் இது அவளுக்குப் பணம், அந்தஸ்த்தில் பெரிய தாத்பரியம் இல்லை என்று தோன்ற வைத்தாலும், இன்னொரு கோணத்தில் பார்க்கும் போது இது போன்ற ஏழைப் பெண்களிடம் இருந்தோ, அவர்கள் குடும்பத்தினரிடம் இருந்தோ தனக்கு எதிர்ப்பு இருக்காது என்பது தான் அவளுடைய உள்நோக்கமாய் இருக்குமோ என்று பெருத்த சந்தேகத்தை வரவழைத்தது. அவள் தானும் ஒரு நடுத்தர வர்க்கத்து, சற்று மென்மையான இளைஞனைத் திருமணம் செய்து கொண்டது கூட தன் சுதந்திரத்திற்கு எந்த வித இடைஞ்சலையும் இது போன்ற இளைஞன் ஏற்படுத்த மாட்டான் என்ற கணக்கில் தான் என்றும் அவருக்குத் தோன்றியது.

ஆர்த்தி வந்திருக்கிறாள் என்று தகவல் வந்த போது வேறெதாவது பெண்ணை வைத்து சிவகாமி ஆள் மாறாட்டம் செய்கிறாளோ என்ற சந்தேகம் கூட வந்தது. கூடவே தாத்தா பாட்டியும் வந்திருக்கிறார்கள் என்றறிந்த போது தான் அந்த சந்தேகம் நீங்கியது. ஆனால் நேரடியாக அந்தப் பெண்ணைப் பார்த்து உயில் விவரத்தைத் தெரிவித்து, சில டாக்குமெண்ட்களில் அவள் கையெழுத்து வாங்கி அவள் நிலைமையைப் பாதுகாப்பது தன் கடமை என்று நினைத்தார். அது தான் அவருடைய முதல் கட்சிக்காரரின் ஆத்மசாந்திக்கு தான் செய்யக் கூடிய கைம்மாறு என்று தானே அவளை நேரில் பார்க்கக் கிளம்பி இருக்கிறார்.

## 73

O, photoprocessing machine, I command you to reveal to me that which is hidden!
– The Shutterbug Follies – Jason Little

தேசிகாச்சாரிக்கு ஆர்த்தி என்ற பெயரில் வந்திருக்கும் பெண் நிஜமாகவே சந்திரசேகரின் மகள் தானா என்பதில் இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் அவளை நேரில் பார்த்த பின் நீங்கியது. திடீரென்று ஆனந்தியே நிற்பது போன்ற உணர்வை ஆர்த்தி அவருக்கு ஏற்படுத்தினாள்.

தேசிகாச்சாரியை அமிர்தம் ஆர்த்திக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். "ஆர்த்தி, சார் நம்ம குடும்ப வக்கீல்."

ஆர்த்தி அவரைப் பார்த்து கை கூப்பினாள். தேசிகாச்சாரிக்கு அவளைப் பார்த்தவுடனேயே பிடித்து விட்டது.

"இது ஆர்த்தியோட தாத்தா, பாட்டி"

தேசிகாச்சாரி நீலகண்டனையும் பார்வதியையும் கடுமையாகப் பார்த்தார். சிறிதும் பொறுப்பில்லாமல் பேத்தியை தூக்கிக் கொண்டு ஓடிய அவர்கள் மீது அவருக்கு இருந்த கோபம் இன்னும் குறையவில்லை. பேத்தியைப் பின்பற்றி கைகூப்பிய அவர்களை கண்டிப்புடன் ஒரு பார்வை பார்த்து விட்டு ஆர்த்தி பக்கம் திரும்பியவர் பின் அவர்களைப் பார்க்கவில்லை.

"உங்களுக்கு இப்ப முன்னத்து மாதிரி முடியறதில்லை. அதனால எல்லாத்தையும் உங்க மகன் தான் பார்த்துக்கறார்னு கேள்விப்பட்டேன். உங்க ஆரோக்கியம் இப்ப எப்படி இருக்கு" அமிர்தம் கேட்டாள்.

"எல்லாம் போய் சேர்ற சமயம் வந்துடுச்சும்மா. பகவான் எப்ப கூப்பிடுவான்னு காத்துகிட்டிருக்கேன். இந்தப் பொண்ணு கிட்ட கொஞ்சம் தனியா பேச வேண்டி இருக்கு. சில பேப்பர்ஸ்ல கையெழுத்தும் வாங்க வேண்டி இருக்கு..."

'தனியா' என்ற வார்த்தையை அவர் அழுத்திச் சொன்னதும் அமிர்தம் ஆர்த்தியிடம் சொன்னாள். "அப்படின்னா பார்த்திபன் ரூமுக்குக் கூட்டிகிட்டுப் போம்மா. சாருக்குப் படியேறி உன் ரூமுக்கு வரக் கொஞ்சம் சிரமமாகும்"

ஆர்த்தியும் தேசிகாச்சாரியும் பார்த்திபன் அறைக்குச் செல்வதைப் பார்த்த மூர்த்தி பார்த்திபன் அறையில் நடப்பதை ஓட்டுக் கேட்க உள்புறத்தில் இருந்து முடியாது, பலரும் பார்ப்பார்கள் என்று

கணக்குப் போட்டு அடுத்த நிமிடம் தோட்டத்துப் பக்கமாக சென்று பார்த்திபன் அறை ஜன்னலுக்கருகே வெளியே நின்றான்.

தேசிகாச்சாரி எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் தர்மலிங்கத்தின் உயிலின் சாராம்சத்தை ஆர்த்தியிடம் சொன்னார். கேட்டு ஆர்த்தி திகைத்துப் போனாள். முன்பே சுருக்கமாக மூர்த்தி சொல்லி இருந்தாலும் கூட வக்கீலின் வாயால் கேட்ட போது திகைப்பாய் தான் இருந்தது. திகைப்பை சமாளித்து மீண்ட போது ஒரு கேள்வியைக் கேட்காமல் இருக்க அவளால் முடியவில்லை. "தாத்தா ஏன் அப்படி எழுதினார்?"

"கேட்டேன். ஆனா அவர் சொல்லலை."

"அப்படின்னா பெரியத்தைக்கும் சின்னத்தைக்கும் கம்பெனியில் இருபதிருவது சதவீதம் தான் பங்கு இருக்கா"

"இல்லை. உங்க பெரியத்தைக்கு இப்ப நாற்பது சதவீதம் பங்கும், உங்கப்பாவுக்கும் உனக்கும் அறுபது சதவீதமும் இருக்கு"

ஆர்த்தி குழம்பினாள். "அப்படின்னா சின்னத்தையோட இருபது சதவீதம்"

"அமிர்தம் வீட்டுக்காரர் ஏதோ வியாபாரம் ஆரம்பிக்க பணம் தேவைப்பட்டதால் அவங்க தங்களோட 20 சதவீதத்தை சிவகாமிக்கு வித்துட்டாங்க. உங்க தாத்தா உயில்ல இன்னொரு அம்சம் இருக்கு. நீங்க யாருமே கம்பெனி பங்கை வெளியாருக்கு விற்க முடியாது. குடும்பத்துக்குள்ளே தான் விற்க வாங்க முடியும். அதனால் இப்ப சிவகாமி கிட்ட 40 சதவீத பங்கு இருக்கு. ஆனா அசையா சொத்து இப்பவும் உனக்கு தான் நிறைய இருக்கு....." அவர் சொத்து விவரங்களை சொல்லிக் கொண்டே போனார்.

ஆர்த்திக்குக் கேட்கக் கேட்க தலை சுற்றியது.

"ஆனா ஒரு விஷயத்தை நீ ஒத்துக்கத் தான் வேணும். இப்ப உங்க கம்பெனி மதிப்பு எங்கேயே போயிடுச்சு. இருக்கற சொத்தும் நல்லா பராமரிக்கப்பட்டு வருது. காரணம் சிவகாமியோட திறமை தான். உங்க தாத்தா ரொம்ப கஷ்டப்பட்டு செஞ்சதை எல்லாம் அலட்டிக்காம உன் பெரியத்தை செஞ்சு சம்பாதிக்கறா. உன் தாத்தா ரொம்ப கறாரான மனுஷன். முரட்டுத் தனமா இருப்பார். ஆனா அவரைப் புரிஞ்சுக்க முடிஞ்சுது. கணிக்க முடிஞ்சது. ஆனா உன் பெரியத்தையை என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சதில்லை...."

அதற்கு மேல் சிவகாமியைப் பற்றிச் சொல்ல தேசிகாச்சாரி துணியவில்லை. ஆனால் தன்னால் முடிஞ்ச எச்சரிக்கையை செய்தார். "நீ பொதுவாகவே ஜாக்கிரதையாய் இருக்கணும். யாரையும் கண்மூடித்தனமாய் நம்பிடக்கூடாது. எத்தனை பேருக்கு உன் சொத்து மேல கண், எத்தனை பேருக்கு நிஜமாவே உன் மேல் அக்கறைன்னு சொல்ல முடியாது. இப்ப சில பேப்பர்ஸ்ல நீ கையெழுத்துப் போடணும். சொத்து மேல் உனக்கிருக்கிற உரிமை முழுசா பதிவாக இந்த கையெழுத்து வாங்கறேன். இனி நீ எதையும் படிச்சுப் புரிஞ்சுக்காம எதிலும் கையெழுத்து போட்டுடக் கூடாது..."

தேசிகாச்சாரி நீட்டிய காகிதங்களை ஆர்த்தி வெறித்துப் பார்த்தாள். பாண்டிச்சேரியில் மிகச்சிறிய வீட்டில் வாழ்ந்த வாழ்க்கை சொர்க்கம் என்று தோன்றியது. "எனக்கு இந்த சொத்து எதுவுமே வேண்டாம்னு தோணுது..."

தேசிகாச்சாரிக்கு அவள் மீது பச்சாதாபம் தோன்றியது. "பணமும், சொத்தும் அதிகமாயிருந்தா அது தூரத்துக்குப் பகட்டா இருக்கும். அதை வச்சிருக்கறவனுக்குத் தான் அதை வச்சுக் காப்பாத்தறது எப்படிப்பட்ட கஷ்டம்னு தெரியும். ஆனாலும் பணம் இல்லாட்டி உலகத்துல எதுவும் கிடைக்காது. அதனால கையெழுத்து போடும்மா"

ஆர்த்தி தயக்கத்துடன் அவர் காட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்து போட்டாள்.

தேசிகாச்சாரி அதை எடுத்து கையில் வைத்துக் கொண்டு சொன்னார். "நான் சொன்னதை நீ மறக்கக் கூடாது. படிக்காமல் கையெழுத்துப் போடறது இதுவே கடைசி தடவையாய் இருக்கணும். இப்ப கூட எதுக்கெல்லாம் கையெழுத்து போட்டிருக்கிறாய்னு நீ தெரிஞ்சுக்கணும்..." அடுத்த கால் மணி நேரம் கையில் இருந்த காகிதங்களில் எழுதப்பட்டிருப்பது என்னவென்று விளக்கினார்.

தேசிக்காச்சாரிக்கு அங்கிருந்து கிளம்பும் போது தன் கடமையை சரியாக செய்து விட்ட திருப்தி இருந்தாலும், இந்தப் பெண் மிகவும் மென்மையானவளாகவும், யதார்த்தமாகவும் இருப்பது மனதில் ஒருவித சங்கடத்தை ஏற்படுத்தியது. சிவகாமியைப் போன்ற ஒருத்தியை சமாளிக்க இவளால் முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு வரவில்லை. 'எல்லாம் விதிப்படி தான் நடக்கும்' என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டார்.

ஆர்த்தி பிறகு தாத்தா பாட்டியிடம் உயில் விவரத்தைச் சொன்ன போது நீலகண்டன் சொன்னார். "அந்த மூர்த்தி சரியாத் தான் சொன்னான் பார்த்தாயா. அது சரி பார்வதி, அந்த வக்கீல் ஏன் ஒரு மாதிரியா நம்மளைப் பார்த்தார்."

பார்வதி சொன்னாள். "அந்தாளைப் பொருத்தவரைக்கும் நாம் குழந்தையைத் தூக்கிகிட்டு ஓடுன ஆள்கள், அவ்வளவு தான்...."

"என்ன, குழந்தையைத் தூக்கிகிட்டு ஓடினமா. என்னமோ புள்ளை பிடிக்கறவனைச் சொல்ற மாதிரி சொல்றே. நம்ம பேத்தியை நாம எடுத்துகிட்டு போனோம். என்னமோ அந்தாள் பேத்தியைத் தூக்கிகிட்டு போன மாதிரி அவரு பார்க்கிறாரு. எனக்கு என் பழைய கணக்கு வாத்தியார் ஞாபகம் வருது. தப்பா கணக்கைப் போட்டுட்டா அவரும் இப்படித்தான் பார்ப்பார்"

"நீங்க மட்டும் என்னவாம். கல்யாணமான புதுசுல சின்னச் சின்ன தப்புக்கெல்லாம் என்னை அப்படித் தான் பார்ப்பீங்க...."

அவர்களது வாக்குவாதம் தொடர்ந்தாலும் ஆர்த்தி காதில் அதெல்லாம் விழவில்லை. தேசிகாச்சாரி சொன்ன வார்த்தைகளே காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. இந்த சொத்துகளை எல்லாம் வைத்துக் கொண்டு யாராவது மனநிம்மதியைக் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

## 74

Will you give me yourself?
Will you come travel with me?
Shall we stick by each other
As long as we live?
-Walt whitman

அசோக் இந்த முறை மூர்த்தியை லேக்கின் அருகே உள்ள ஒரு சிமெண்ட் பெஞ்சில் உட்காரச் சொல்லி இருந்தான். மணி சரியாக ஆறை எட்டிய போது அவன் மூர்த்தி அருகே வந்து அமர்ந்தான். ஒரு கை குலுக்கலோ, ஒரு "ஹலோ"வோ இல்லை. அமர்ந்தவுடன் கையை நீட்டினான். மூர்த்திக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தான் கொண்டு வந்திருந்த ஒரு ப்ளாஸ்டிக் கவரைத் தந்தான். "இதில லட்ச ரூபாய் இருக்கு".

அசோக் அதை ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் கொண்டான்.

"எண்ணிப் பார்த்துடுங்க"

"தேவையில்லை. அப்படி அதில் கம்மியா இருந்தா வேலை நடக்காது, அவ்வளவு தான்"

மூர்த்திக்கு ஓங்கி ஒரு அறை விட்டால் என்ன என்று ஒரு வினாடி தோன்றியது. கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான். "அவங்க டேப் செய்யறதா முடிவு செஞ்சுட்டாங்க. புதன் கிழமை செஷனோட டேப் காப்பி எப்ப கிடைக்கும்"

"வெள்ளிக்கிழமை சாயங்காலம் தர்றேன். ஐம்பதாயிரத்தோட வாங்க"

மூர்த்தி தயக்கத்துடன் கேட்டான். "கொஞ்சம் சீக்கிரம் கிடைக்காதா. அடுத்த செஷன் வியாழனோ, வெள்ளியோ கூட இருக்கலாம். அதுக்கு முன்னாலேயே கிடைச்சா நல்லாயிருக்கும்."

அசோக் முகத்தில் அடிக்கிற மாதிரி ஏதாவது சொல்வான் என்று மூர்த்தி எதிர்பார்த்தான். ஆனால் அசோக் கோபப்படாமல் சொன்னான். "அடுத்த செஷன் குறைஞ்சது நாலைந்து நாளுக்கு முன்னால் நடக்காது. அந்த டாக்டரோட அப்பாயின்மெண்ட் புஸ்தகம் மாசக்கணக்கில் ஃபுல்லா இருக்கு. இடையில நீங்க சொன்ன பேஷண்டோட அப்பாயின்மெண்டை அந்த டாக்டர் கஷ்டப்பட்டு புகுத்திட்டு வர்றான். அடுத்த அப்பாயின்மெண்ட் அதற்கடுத்த திங்கட்கிழமை ஃபிக்ஸ் ஆயிருக்கு"

ஆர்த்திக்கே தெரியாத இந்த அடுத்த அப்பாயின்மெண்ட் தகவல் கூட சேகரித்து வைத்திருக்கும் அசோக் மீது மூர்த்திக்குத் தனி மரியாதை ஏற்பட்டது. அதே நேரம் ஒருவித இனம் புரியாத பயமும் பிறந்தது. 'இந்த அளவு உஷாராக இருப்பவன் நம்மைப் பற்றியெல்லாம் என்னென்ன தகவல் சேகரித்து வைத்திருக்கிறானோ"

"அப்படின்னா வெள்ளிக்கிழமை சாயங்காலம் எங்கே வரட்டும்?"

"வியாழக்கிழமை சாயங்காலம் நானே போன் செய்து சொல்றேன்". அவன் போய் விட்டான்.

பஞ்சவர்ணத்திடம் சென்று அசோக்கிடம் பணம் கொடுத்ததையும், அவன் சொன்ன தகவலையும் மூர்த்தி சொன்னான். பஞ்சவர்ணத்திற்கு அசோக் என்ற அந்த நபரைப் பிடித்திருந்தது. "கொடுத்த காசுக்கு அவன் கச்சிதமாய் வேலை செய்வான்னு தான் தோணுது மூர்த்தி. அந்த விஷயத்தைப் பத்தி நாம் பெருசா கவலைப்பட வேண்டியதில்லைன்னு நினைக்கிறேண்டா. இனிமே நாம இங்கே கொஞ்சம் கவனமாய் காய் நகர்த்தணும்டா. அந்த வக்கீல் வந்து நம்ம கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் நிவர்த்தி பண்ணிட்டான். இப்ப சிவகாமி மருமகளை யூஸ் செய்யறதுக்கு முன்னால் நாம் முந்திக்கணும்டா....."

சொல்லி விட்டு பஞ்சவர்ணம் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தபடி குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள். பின் பேரனிடம் என்ன செய்ய வேண்டும் என்று விவரித்தாள்.

★★★★★★★★

"ஹாய் ஆர்த்தி"

ஆர்த்தி கையில் இருந்த புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தினாள். மூர்த்தி.

"ஹாய்..."

"தொந்திரவு செய்யறேனோ?"

"இல்லை. உட்காருங்க"

மூர்த்தி தயங்கியபடி உட்கார்ந்தான். "ஆர்த்தி நான் ஒண்ணு சொன்னா என்னை தப்பா நினைச்சிட மாட்டியே"

"மாட்டேன். சொல்லுங்க....."

ஆனாலும் மூர்த்தி நிறைய யோசித்தான். பின் பீடிகையுடன் ஆரம்பித்தான். "ஆர்த்தி. இந்த உலகத்துல எல்லாருமே பணத்துக்குத் தர்ற மரியாதை வேற எதுக்குமே தர்றதில்லை. இதை நான் என் சின்ன வயசுல இருந்தே பார்த்து வளர்ந்துருக்கேன். ஆகாஷுக்குக் கிடைச்ச மரியாதை சின்னதுல இருந்தே பார்த்திபனுக்குக் கிடைச்சதில்லை. பார்த்திபனுக்குக் கிடைச்ச அளவு மரியாதை கூட எனக்குக் கிடைச்சதில்லை. அந்த மாதிரி மரியாதையைக் கூட என்னை மாதிரி அனாதைகள் எதிர்பார்க்க முடியாதுன்னு சீக்கிரமே புரிஞ்சுடுச்சு. ஆனா அன்பைக் கூட ஏழைகள் எதிர்பார்க்க முடியாதுன்னு உறைச்சப்ப மனசு ரணமாயிடுச்சு. அதனாலேயே நான் இந்த வீட்டுல ஒதுங்கியே இது வரைக்கும் இருந்திருக்கேன். நான் யாரையும் தப்பு சொல்லலை. என் விதிக்கு யாரைத் தப்பு சொல்ல முடியும்...."

ஆர்த்திக்கு அவன் கண்ணில் லேசாகத் திரையிட்ட நீரைப் பார்க்க முடிந்தது. அவளுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது.

அவன் தொடர்ந்தான். "ஏனோ நீயும் என்னை மாதிரியே சின்ன வயசுல கஷ்டப்பட்டிருக்கேன்னு தெரிஞ்ச பிறகு நாம ரெண்டு பேரும் ஒரே மாதிரின்னு ஒரு ஒட்டுதல் தோணிடுச்சு. அப்படி தோண ஆரம்பிச்சப்ப உன் கிட்ட கூட எக்கச்சக்கமான சொத்து இருக்கிறதுங்கற உண்மை ஏனோ எனக்கு உறைக்கலை. அப்புறமா உறைச்சாலும் நீ இவங்க மாதிரி இல்லைன்னு என் மனசு உறுதியா சொல்லிச்சு. அந்த வக்கீல் வந்து உன் கிட்ட பேசிகிட்டு இருந்தப்ப நான் தோட்டத்துல ஒரு வேலையா போயிருந்தேன். அப்ப தற்செயலா நீ அவர் கிட்ட "இந்த சொத்தெல்லாம் வேண்டாம்னு எனக்குத் தோணுது"ன்னு சொன்னது என் காதுல விழுந்தது. ஆர்த்தி நீ நிஜமாவே அப்படி நினைக்கிறியா, இல்லை அப்போதைக்கு அப்படித் தோணிச்சா?"

ஆர்த்தி சொன்னாள். "இப்பவும் அப்படித் தான் தோணுது மூர்த்தி"

"ஆர்த்தி ஒரு வேளை நீ அப்படி சீரியஸாவே நினைச்சு இந்த சொத்து மேல ஆசை இருக்கறவங்களுக்கே அதைத் திருப்பிக் கொடுக்கறதா இருந்தா நீ என்னைக் கல்யாணம் செய்துக்குவியா?"

ஆர்த்தி இதை சற்றும் எதிர்பார்த்திராததால் திடுக்கிட்டுப் போனாள். அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"சொத்தை நீயே ஆண்டு அனுபவிக்கறதா இருந்தா நான் இப்படிக் கேட்டிருக்க மாட்டேன். ஏன்னா அது நான் சொத்துக்காக ஆசைப்பட்டுக் கேட்கற மாதிரி ஆயிடும். எனக்குப் பணம் சொத்து எதுவும் வேண்டாம் ஆர்த்தி. நீ கட்டின துணியோட வந்தாக் கூட போதும், உன்னை நான் என் கண்மணியாய் பார்த்துப்பேன். சாகற வரைக்கும் உன்னை உயிருக்கு உயிராய் நேசிப்பேன். அதை நான் சத்தியம் செய்து தர்றேன், ஆர்த்தி..... நீ இப்ப எனக்கு எந்த பதிலும் சொல்ல வேண்டாம். நல்லா யோசிச்சு முடிவெடு. அதுக்கு எவ்வளவு நாள் வேணும்னாலும் எடுத்துக்கோ. உனக்காக நான் காத்திருப்பேன். ஒருவேளை நீ முடியாதுன்னு சொன்னாக்கூட நான் தப்பாய் நினைக்க மாட்டேன். இப்படி உன் கிட்ட கேட்கக்கூட எனக்கு தகுதி இருக்கா இல்லையான்னு தெரியலை. ஆனா மனசுல இருக்கறதை மறைச்சு வச்சுத் தெரியாத எனக்கு சொல்லாம இருக்க முடியலை. இனி நானா மறுபடி இந்த விஷயத்தைப் பேசி உன்னை தர்மசங்கடப்படுத்த மாட்டேன் ஆர்த்தி. உனக்கு நான் இப்படிக் கேட்டது பிடிக்கலைன்னா நான் சொன்னதையே மறந்துடு. நாம நல்ல ஃப்ரண்ட்ஸாவே இருப்போம்."

அவள் திகைப்பு மாறாமல் அமர்ந்திருக்க அவன் மெள்ள எழுந்தான். "ஆர்த்தி நீ என்ன முடிவெடுத்தாலும் பரவாயில்லை. ஆனா இந்த அனாதைப் பையன் என் கிட்ட எப்படி இப்படிக் கேட்கலாம்னு மட்டும் நினைச்சுடாதே ப்ளீஸ்."

அவன் போய் விட்டான்.

# 75

I am the Love that dare not speak its name.
– 'Two Loves' Lord Alfred Douglas.

மூர்த்தி சொன்னதை எப்படி எடுத்துக் கொள்வது என்று ஆர்த்திக்கு நிறைய நேரம் விளங்கவில்லை. ஆகாஷுக்கு அவள் இதயத்தில் தந்த இடத்தை வேறு ஒருவருக்குத் தருவது என்பது அத்தனை சுலபமல்ல என்று அவள் அறிவாள். ஆனால் மூர்த்தி பேசிய விதம் மிகவும் கண்ணியமாக இருந்தது. அவள் சொத்துக்கு அவன் ஆசைப்பட்டது போல் தெரியவில்லை. மாறாக சொத்தைத் திருப்பித் தரும் பட்சத்தில் தான் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி சொல்கிறான். அவன் கடைசியில் 'இந்த அனாதைப் பையன் என்னை எப்படி இப்படிக் கேட்கலாம்னு மட்டும் நினைச்சுடாதே, ப்ளீஸ்' என்று சொன்னது அவளுக்குப் பாவமாக இருந்தது. மொத்தத்தில் அவன் நல்லவனாகவும், இரக்கப்படத் தகுந்தவனாகவும் தான் அவளுக்குத் தோன்றியது.

இதைப்பற்றி அவள் யாரிடமும் சொல்லத் துணியவில்லை. பாட்டி தாத்தாவிடம் சொல்லலாம் என்றால் பாட்டி அதைக் கேட்டவுடன் மூர்த்தியைக் கண்டபடி திட்டுவாள் என்பதில் அவளுக்குச் சந்தேகமில்லை. அவன், அவர்கள் பஞ்சவர்ணத்திடம் பேசியதை, ஆகாஷிடம் உடனடியாகச் சொன்னது முதல் பார்வதியைப் பொறுத்தவரை சந்தேகத்துக்கு உரிய பேர்வழி ஆகி விட்டான். அவன் பின்னர் வந்து மன்னிப்பு கேட்ட பிறகு ஆர்த்திக்கு அவனை நம்பத்தான் தோன்றியது. ஆனால் பாட்டி இப்போதும் 'அழற ஆம்பிளையை நம்பக்கூடாது' என்று சொல்லி வருகிறாள். தாத்தாவிடம்

சொல்லலாம் என்றால் அவர் எத்தனை தான் பாட்டியிடம் சண்டை போட்டாலும் பாட்டியிடம் எதையும் மறைத்தது இல்லை என்பதால் உடனடியாக அது பாட்டி காதுக்குப் போய் விடும். சந்திரசேகரிடம் சொன்னால் கூட அது மூர்த்தியைப் பாதிக்கும் என்று தோன்றியதால் அதைப் பற்றி யாரிடமும் சொல்லாமல் இருப்பதே நல்லது என்று முடிவெடுத்தாள். அதே போல் இப்போதைக்கு அவன் சொன்னதை வைத்து எந்த முடிவும் எடுக்க வேண்டாம் என்று அவள் தீர்மானித்தாள்.

சந்திரசேகர் மகள் அறைக்கு நுழைந்த போது மகள் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைப் பார்த்தார். தந்தையைக் கண்டதும் மகள் முகத்தில் ஒரு சந்தோஷப் புன்னகை மலர்ந்தது. ஒரு கணம் அது ஆனந்தியை நினைவுபடுத்தி தர்மசங்கடப்படுத்தினாலும் மறு கணம் தன் மகள் தன் மீது வைத்துள்ள பாசத்தில் அவர் மனம் பெருமிதப்பட்டது.

"சாரிம்மா"

"எதுக்குப்பா?"

"உன் பிறந்த நாள் போன வாரம் வந்து சத்தமில்லாமல் போயிடுச்சு. அப்பாவுக்கு ஞாபகமே வரலை"

"பரவாயில்லைப்பா"

"ஆனா வர்ற ஞாயிறு நட்சத்திரப்படி பிறந்த நாள் வருதுன்னு அக்கா சொன்னா. நாம அமர்க்களமாய் கொண்டாடிடலாம். ஓ.கே"

"ஆடம்பரம் எல்லாம் வேண்டாம்ப்பா"

"சரி சிம்பிளா கொண்டாடலாம். உனக்கு என்ன வேணும் சொல்லு. அப்பா வாங்கித் தர்றேன்"

ஆர்த்திக்குத் தந்தையிடம் என்ன கேட்பதென்று தெரியவில்லை. "முதல்லயே எல்லாமே வாங்கித் தந்துட்டீங்களேப்பா. இன்னும் வாங்கித் தர என்ன இருக்கு"

மகளை மன நெகிழ்வுடன் சந்திரசேகர் பார்த்தார். மகளுக்கு எதிலும் பேராசை இல்லை என்று தோன்றியது. இருப்பதில் திருப்தியாக இருக்கிறாள். ஆனால் சில சமயங்களில் வெளிக்காட்டாத துக்கம் அவளிடம் உள்ளது என்றும் தோன்றியது. எல்லாம் இந்த ஆகாஷ் அவளிடம் கோபமாக இருப்பதால் தான் என்று எண்ணிய போது அவன் மீது அவருக்குக் கோபம் பொங்கியது. "கோபம் ஏதாவது இருந்தால் ஒரு நாள் ரெண்டு நாள்ல சரியாகணும். இவன் என்னடாவென்றால் ஓவராகப் போகிறான்".

அவர் மருமகன் மீது கோபப்பட்ட அதே நேரத்தில் சங்கரனும் மகனை அழைத்து சொல்லிக் கொண்டிருந்தார். "...சில நாளாவே நீ சந்தோஷமாய் இல்லை. முகத்தைப் பார்க்கவே சகிக்கலை. உனக்கு என்னடா ஆச்சு?"

ஆகாஷுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. இயல்பாகவே ஜாலியாக இருக்கக் கூடிய அவன் தந்தையின் செல்லப்பிள்ளை. அவரிடம் கூட சந்தோஷமாய் நான்கு வார்த்தை பேசி பல நாளாகிறது என்ற உண்மை அவனுக்கு உறைத்தது. எல்லாம் இந்த ஆர்த்தியை சந்தித்த நேரம்! இன்னும் சரியாகச் சொல்வது என்றால் ஆர்த்தி அவன் அம்மாவை சந்தேகப்பட்ட நேரம்.

"ஒண்ணுமில்லைப்பா. இப்ப கொஞ்ச நாளா வேலை டென்ஷன். அதான்..."

சங்கரன் அவன் சொன்னதை நம்பியதாகத் தெரியவில்லை. அவர் அவனிடம் கனிவாகச் சொன்னார். "பாரு. சந்தோஷமாய் இருக்கிறது ஒரு கலைடா. எதுவுமே இல்லாதவன் கூட சந்தோஷமாய் இருக்கறதுண்டு.எல்லாமே இருக்கிறவன் கூட வாய் விட்டு சிரிக்கத் தெரியாத துரதிர்ஷ்டசாலியாய் இருக்கிறதும் உண்டு. எல்லாமே நாம வாழ்க்கையை எப்படி எடுத்துக்கறோம்கிறதைப் பொறுத்துதாண்டா இருக்கு. இப்ப அம்மாவைப் பாரு. அவளுக்கு இல்லாத டென்ஷனா? ஆனா அவள் எப்பவுமே முகத்தை உர்ருன்னு வச்சு பார்த்திருக்கிறியா?"

ஆகாஷ் தன் மனநிலையை அவருக்கு விளக்க முடியாத நிலையில் இருந்தான்.

சங்கரன் மெள்ளக் கேட்டார். "ஆகாஷ், நீ யாரையாவது காதலிக்கிறியா? அதுல ஏதாவது பிரச்சினையா?"

"சேச்சே அப்படியெல்லாம் இல்லைப்பா. இனி கண்டிப்பா உர்ருன்னு இருக்க மாட்டேன் சரியா?"என்றவன் அவசரமாகப் பேச்சை மாற்றினான். "அம்மா எங்கேப்பா?"

"அர்ஜுன் கிட்ட பேசிகிட்டிருக்கா."

அதே நேரம் அர்ஜுனிடம் டாக்டர் அனுப்பி இருந்த முகங்களின் படங்களை சிவகாமி காண்பித்துக் கொண்டிருந்தாள்.

"இந்த நாலுல ஏதாவது தேர்ந்தெடுக்கச் சொல்லியிருக்கார். உனக்கு எந்த மாதிரி முகம் வேணும்னு பார்"

நான்கும் அழகாகவே இருந்தன. அர்ஜுன் அதிக நேரம் அவற்றைப் பார்க்கவில்லை. அவனுக்கு இன்னும் நடப்பதை நம்பி சந்தோஷப்பட முடியவில்லை. "மேடம் இவ்வளவு செலவு செஞ்சு எனக்கு ஒரு புது முகம் வேணுமா?"

"வேணும்"

"நான் இந்தக் கடனை எத்தனை ஜென்மம் எடுத்து அடைக்கணும்னு எனக்குத் தெரியலை"

"ஏன் அப்படி நினைக்கிறாய். நான் பழைய ஜென்மத்துல உனக்குப் பட்ட கடனை இப்போ அடைக்கிறேன்னு கூட நினைக்கலாமே. நான் கேட்டதுக்கு நீ பதில் சொல்லலை. எந்த முகம் வேணும்?"

"நீங்களே தேர்ந்தெடுங்க மேடம். எனக்கு சொல்லத் தெரியலை"

சரி நீ போகலாம் என்பது போல தலையசைத்தவள் அந்தப் படங்களை ஆராய ஆரம்பித்தாள். அவன் நகராமல் நிற்பதைக் கவனித்து "என்ன?'" என்றாள்.

அர்ஜுன் தன்னைப் பார்த்து கோயமுத்தூரில் ஒரு சிக்னலில் ஒரு நபர் தலை தெறிக்க ஓடியதைச் சொன்னான். ".... நான் நேத்தே சொல்லணும்னு நினைச்சேன். நீங்க பிசியா இருந்ததால் சொல்ல முடியலை. அது ஆணா, பெண்ணான்னு கூடத் தெரியலை. ஆனா ஓடுனது என்னைப் பார்த்துதான்கிறதில் சந்தேகமில்லை. இன்னொரு விஷயம்..."

அவன் பாதியில் நிறுத்தித் தயங்கினான்.

"ஊம்... சொல்லு" கம்ப்யூட்டர் ஸ்கிரீனிலிருந்து கண்ணை எடுக்காமல் சொன்னாள்.

"எனக்கென்னவோ உள்ளுணர்வு சொல்லுது – அந்த நபர் பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் நமக்கு ஏதாவது விதத்தில் சம்பந்தப்பட்ட ஆளாய் இருக்கலாம்னு....."

சிவகாமி கம்ப்யூட்டர் ஸ்கிரீனில் இருந்து கண்களை விலக்கி அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

# 76

Prosperity is dependent on having more love in your life.
– Jo Stevens

ஆர்த்தியின் பிறந்த நாளை எளிமையாகக் கொண்டாடுவது என்று முடிவெடுத்திருந்தாலும் அவளுக்குப் பரிசுப் பொருள் வாங்குவதில் வீட்டார் மும்முரமாக இருந்தார்கள். சந்திரசேகர் வைரத்தில் நெக்லஸ், கம்மல், வளையல் செட் வாங்கி வைத்தார். அமிர்தம் இரண்டு தங்க வளையல்கள், சிவகாமி நெக்லஸ், பஞ்சவர்ணம் ஒரு விலை உயர்ந்த கைக்கடிகாரம் என்று வாங்கி இருந்தனர். டேவிட் மேரி தம்பதியர் பட்டுச் சேலை வாங்கி வைத்திருந்தனர்.

இப்படி மற்றவர்கள் வாங்கி வைத்த பரிசுப் பொருள்களின் விவரம் நீலகண்டன்–பார்வதி தம்பதியர் காதில் விழுந்தது. நீலகண்டன் மனைவியிடம் சொன்னார். "எல்லாரும் இப்படி வாங்கித் தர்றப்ப நாம மட்டும் விலை உயர்ந்த பொருள் ஏதாவது வாங்கித் தரலைன்னா அது நல்லா இருக்குமா பார்வதி"

"இதெல்லாம் சமுத்திரத்தில் ஒரு குடம் தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டற மாதிரி. கோடிக் கணக்கில் சொத்து வந்து சேர்ந்திருக்கிற இந்த நேரத்தில் அவளுக்கு இதெல்லாம் பெரிய விஷயமா?"

"அதுக்கில்லை பார்வதி. எல்லாரும் என்னென்னவோ தர்றப்ப நாம குறைச்சலா தர்றது ஆர்த்திக்கு ஒரு மாதிரியா தோணாதா?"

"அது நாம வளர்த்த பொண்ணுங்க. அப்படியெல்லாம் நினைக்காது. அப்படியும் போடறதுன்னா என்னோட இந்த ரெண்டு தங்க வளையலை அழிச்சு ஏதாவது தர்றதுன்னா தரலாம். ஆனா அவள் கல்யாணத்துக்கு நாம் ஏதாவது செய்யணுமில்லையா, அதுக்கு இதை அழிக்கலாம்னு பார்க்கறேன்"

நீலகண்டன் ஒருவித இயலாமையுடன் மனைவியைப் பார்த்தார். அந்தத் தங்க வளையல்களையும் எடுத்து விட்டால் காது மூக்கில் உள்ள சில்லறைத் தங்கம் தவிர அவளிடம் வேறு தங்கம் இல்லை. எத்தனையோ விஷயங்களுக்காக அவரிடம் சண்டை போடும் பார்வதி ஒரு முறை கூட தங்கம், சேலை, பொருள்கள் வேண்டும் என்று சண்டை போட்டதில்லை. இல்லை என்று ஆதங்கப்பட்டதில்லை.

"உனக்கு நான் நகை எதுவும் செய்து தந்ததில்லை, இருக்கிறதையும் கொஞ்சம் கொஞ்சமாய் அழிச்சுடறேனேன்னு உனக்கு என் மேல் வருத்தம் இல்லையே.." சொல்கையில் அவர் குரல் கரகரத்தது.

பார்வதிக்குக் கணவன் அப்படிக் கேட்டது மனதை நெகிழ வைத்தது. "இந்த வயசுல பூவும் பொட்டும் வச்சுக்கற பாக்கியத்தை எனக்குத் தந்திருக்கீங்க. அதுக்கும் மேலே எனக்கு என்னங்க வேணும்?"

கண்ணில் திரை போட்ட நீரை மனைவிக்குத் தெரியாமல் மறைக்க வேறு பக்கம் முகத்தைத் திருப்பி கிழவர் முயற்சி செய்தார். ஒரு நிமிடம் கழித்துக் கேட்டார். "அப்படின்னா அந்த வளையல் அவள் கல்யாணத்தப்ப அழிச்சிக்கலாம். நாளைக்கு அவள் பிறந்த நாளுக்கு என்ன தர்றது"

"ஏதாவது ஒரு சேலை வாங்கித் தரலாம். போதும். நம்ம பேத்தி நாம என்ன வாங்கித் தந்தாலும் சந்தோஷமாய் ஏத்துக்குவா"

வார்த்தையின்றி நீலகண்டன் தலையசைத்தார். இது வரை வெளியில் எங்கே போவதானாலும் அங்கிருக்கும் கார்களில் ஒன்றில் தான் போவார்கள். ஊட்டியில் பெரும்பாலான கடைக்காரர்களுக்கு சிவகாமி வீட்டுக் கார்கள் அடையாளம் தெரியும். அப்படி இருக்கையில் அவர்கள் காரில் போய் இறங்கி ஒரு ஜவுளிக்கடையில் சாதாரண சேலை எடுத்தால் அது நன்றாக இருக்காது என்று தோன்றியது. ஆயிரம் தான் சொன்னாலும் சில சந்தர்ப்பங்களில் ஏழ்மை ஒரு மனிதனை நிறையவே தர்மசங்கடப்படுத்துகிறது என்று அவர் நினைத்துக் கொண்டார். கடைசியில் வாக்கிங் போவதாய் சொல்லிப் போய் சேலை வாங்கி வருவது என்று கணவனும் மனைவியும் முடிவு செய்தார்கள்.

அதே நேரத்தில் சந்திரசேகர் டேவிடிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "....இந்தப் பிறந்த நாள் விழாவுக்கு வெளியாள் யாரையும் கூப்பிடறதில்லை, டேவிட். நாம மட்டும் தான். உன் மகள் லிஸாவும் வந்தால் நல்லா இருக்கும்னு நினைக்கிறேன் டேவிட். ஆர்த்திக்கு அவள் வயசுல ஒரு தோழி அமைஞ்சா கொஞ்சம் மனசு விட்டு அவள் கிட்ட பேசுவாள், சந்தோஷமாய் இருப்பாள்னு தோணுது."

டேவிட் முகம் வாடியது. "கூப்பிட்டு கூப்பிட்டு நான் சலிச்சுட்டேன் சந்துரு. இனி பிரசவத்துக்குத் தான் வருவேன்னு பிடிவாதமாய் சொல்றாள். என்ன செய்யறது?"

"நான் கூப்பிட்டுப் பேசி அவளை வரவழைக்கிறேன் பார். அக்கா ஒரு முடிவு செஞ்சுட்டா அதை சாதிக்காம விடமாட்டா. அவள் தம்பியில்லையா நான், அந்த சாமர்த்தியத்தில் எனக்குக் கொஞ்சமாவது வராமல் போகுமா என்ன?....." என்றவர் அப்போதே தன் செல் போனை எடுத்தார்.

"ஹலோ லிஸா. நான் சந்துரு பேசறேன். எப்படிம்மா இருக்கிறாய்?"

"சந்துரு அங்கிள் நான் நல்லா இருக்கேன். அதிசயமாய் போன் செஞ்சுருக்கீங்க. எல்லாம் சௌக்கியம் தானே"

"சௌக்கியம் தான். என் மகள் ஆர்த்தி வந்துருக்கா...."

"அம்மா சொன்னாங்க அங்கிள். ரொம்ப சந்தோஷமாய் இருக்கு"

"அவளுக்கு ஞாயித்துக் கிழமை பிறந்த நாள். வீட்டாள்கள் மாத்திரமா சேர்ந்து சின்னதா கொண்டாடலாம்னு நினைச்சிருக்கோம். நீயும் வந்தா தான் வீட்டாள்கள் எல்லாரும் சேர்ந்த மாதிரி ஆகும்..."

"அங்கிள்.....சாரி...."

"உனக்கு என் மகளைப் பார்க்கணும்னு தோணலையா லிஸா"

"தோணுது அங்கிள் ஆனால்....."

"நான் காரை ஈரோடுக்கு அனுப்பறேன். அதில் நீ வந்து சேர். எப்ப அனுப்பட்டும்?"

"அங்கிள்..."

"அவளுக்கு இங்கே ஒரு தோழி கூட இல்லை லிஸா. நீ வந்து தான் அந்தக் குறையை நிவர்த்தி செய்யணும். எப்ப அனுப்பணும் காரைன்னு மட்டும் சொல்லு....இல்லை நான் அங்கே வந்து அழைக்கணுமா?"

"ஐயோ அப்படியெல்லாம் இல்லை அங்கிள்....இவர்"

"ஓ உன் புருஷன் கிட்ட பர்மிஷன் வாங்கறது தான் பிரச்சினையா. அதையேன் முதல்லயே சொல்லலை. நான் அவர் கிட்ட பேசி பர்மிஷன் வாங்கிக்கறேன். சரிதானே. கார் நாளைக்கு மதியத்துக்குள்ளே வரும். நீ சௌகரியப்பட்ட நேரத்துல கிளம்பி வா... மீதியை நேரில் பேசிக்கலாம்....வைக்கட்டுமா?"

டேவிட் தன் நண்பனை பிரமிப்புடன் பார்த்தார். "அவ ஒத்துகிட்டாளா"

"அவளை நான் பேச விடலை. முதல்ல உன் மாப்பிள்ளையோட செல் நம்பர் தா..." என்றவர் டேவிடின் மாப்பிள்ளையிடம் இரண்டு நிமிடம் பேசினார்.

அவர் லிஸாவிடம் பேச ஆரம்பித்தது முதல் அவரையே பார்த்துக் கொண்டிருந்த டேவிடிற்குத் தான் காண்பது கனவா நனவா என்று தெரியவில்லை. கம்பெனி விஷயங்களில் ஒரு சின்ன முடிவை எடுப்பதானால் கூட தமக்கையின் உதவியை நாடும் அவர், எத்தனையோ முறை அவள் திட்டினால் கூட தானாக ஒரு சிறு முயற்சி கூட எடுக்காத அவர், இன்று லிஸாவை ஒரு வார்த்தை கூட பேச விடாமல் வரவழைக்கும் அளவு சாமர்த்தியத்துடன் நடந்து கொண்ட விதம் அவரைத் திகைப்படைய வைத்தது.

டேவிட் ஆச்சரியத்துடன் கேட்டார். "நீ இப்படி பேசி நான் கேட்டதே இல்லையேடா. எதுவானாலும் அக்கா கிட்ட தான் பேசச் சொல்லுவாய். எப்படிடா இப்படி மாறினாய்?"

சந்திரசேகர் பதில் சொல்லாமல் புன்னகைத்தார். இதையெல்லாம் சற்று தொலைவில் இருந்து கவனித்துக் கொண்டு இருந்த மூர்த்திக்கு சந்திரசேகர் லிஸாவை வரவழைப்பது பெரும் சந்தோஷத்தை ஏற்படுத்தியது. லிஸாவின் வரவு ஆகாஷுக்கும் ஆர்த்திக்கும் இடையே உள்ள இடைவெளியை இன்னும் அதிகப்படுத்தும் என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை.

# 77

What! wouldst thou have a serpent sting thee twice?
– Shakespeare in "Merchant of Venice"

ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் வந்து ஆர்த்திக்கு முதலில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தது சந்திரசேகர் தான். ஆர்த்தி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்தரை. மனம் நெகிழ ஆர்த்தி தந்தைக்கு நன்றி சொன்னாள். அவருடன் வந்திருந்த பவானியும் ஆர்த்திக்கு வாழ்த்து சொன்னாள். ஆர்த்தி பவானியைக் கட்டியணைத்துக் கொண்டு கன்னத்தில் முத்தமிட்டாள். "தேங்க்ஸ் சித்தி"

ஒரு கணம் பவானி திகைப்புடன் ஆர்த்தியைப் பார்த்தாள். ஆர்த்தியின் முகத்தில் உண்மையான பாசம் தெரிந்தது. சமீப காலங்களில் அவளிடம் யாரும் இந்த அளவு அன்புடன் நடந்து கொண்டதாக பவானிக்கு நினைவில்லை. தந்தை, தமையனோடு எல்லாம் போயிற்று. இன்று இவள் காட்டிய இந்தப் பாசம் மனமார்ந்த ஒன்றாகத் தெரிய பவானிக்கு கண்கள் லேசாகக் கலங்கின. இன்னும் சிறிது நேரம் அங்கு இருந்தால் வாய் விட்டு அழுது விடுவோமோ என்ற பயத்தில் பவானி சில வினாடிகள் மட்டும் அங்கே தங்கி விட்டு தனதறைக்குச் சென்று விட்டாள். கதவை சாத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள். அவளையும் நேசிக்க ஒரு ஜீவன் இருக்கிறது. அருகதை இருக்கிறதோ இல்லையோ நேசிக்கப்படுவதில் ஒரு சுகம் இருக்கவே செய்கிறது. அதுவும் நேசித்தவர்களை எல்லாம் தொலைத்து விட்டு ஒரு ஜடமாய் வாழ்ந்து வரும் அவளுக்கு இந்தப் பாசம் ஒரு உயிரூட்டமாய்த் தோன்றியது.

சந்திரசேகர் மகளிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "டேவிட் பொண்ணு லிஸாவை கூட்டிகிட்டு வர கார் அனுப்பி இருக்கிறேன். அவள் வந்தால் உனக்கும் ஒரு நல்ல கம்பெனி. ரொம்ப நல்ல பொண்ணு."

லிஸாவைப் பற்றி அவர் சொன்னவுடன் ஆர்த்திக்கு மூர்த்தி சொன்னது தான் நினைவுக்கு வந்தது. அவன் ஆகாஷையும், அந்தப் பெண்ணையும் இணைத்துப் பேசி இருந்தான். அது எவ்வளவு தூரம் உண்மை என்று அவளுக்குத் தெரியவில்லை.

சந்திரசேகர் அவளிடம் பேசிக் கொண்டிருக்கையில் அமிர்தம் வந்து வாழ்த்தினாள். அவர்கள் இருவரும் சென்ற பின் பஞ்சவர்ணமும், மூர்த்தியும் வந்து வாழ்த்து தெரிவித்தார்கள். பஞ்சவர்ணம் அதிக நேரம் நிற்கவில்லை. போய் விட்டாள். ஆனால் மூர்த்தி தங்கி சில நிமிடங்கள் பேசினான். அவன் அன்று தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொன்னது சம்பந்தமாக இன்று எதுவும் பேசவில்லை. ஆனால் பஞ்சவர்ணம் அறிவுரையின் படி லிஸாவைப் பற்றி மட்டும் சொல்லி எச்சரித்தான்.

"ஆர்த்தி அந்த லிஸா வர்றாள்னு கேள்விப்பட்டேன். அவ கிட்ட நீ ஜாக்கிரதையா இருக்கணும். ரொம்ப இனிமையா பழகினாலும் மனசு அந்த அளவு சுத்தமில்லை. நான் ஆகாஷும், அவளும் சொல்லக் கூசற அளவு நெருக்கமா இருந்ததை ரெண்டு மூணு தடவை பார்த்துட்டேன். நான் வெளியே சொல்லிடுவேன்னு பயந்து என்னைப் பத்தி அவங்களாவே தப்பு தப்பா வெளியே பிரச்சாரம் செய்ய ஆரம்பிச்சுட்டாங்க...."

ஆர்த்திக்குக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தது. அவன் போய் நிறைய நேரம் அவளால் வேறெதைப் பற்றியும் சிந்திக்க முடியவில்லை. பார்த்திபன் வந்து வாழ்த்து தெரிவித்து அவள் சிந்தனைகளை திசை திருப்பினான்.

"தேங்க்ஸ். என்ன பார்த்திபன். நீங்க ரொம்ப பிசி போல இருக்கு. இடையில சில நாள் பார்க்கவே இல்லை. அப்படிப் பார்த்தாலும் பேசக் கூட உங்களுக்கு நேரம் இருக்கிறதில்லை"

அது உண்மையே. சில நாட்களாக அவனுக்கு வேலைகள் அதிகமாக இருந்தன. சில நாட்கள் கோயமுத்தூரிலேயே தங்க வேண்டி இருந்தது. சிரித்துக் கொண்டே சொன்னான். "பெரியம்மா கீழே வேலை பார்க்கிறது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை ஆர்த்தி. ஆபிஸ்ல சொந்தம், உறவுன்னு எந்த சலுகையும் கொடுத்துட மாட்டாங்க. என்னை விடு உங்கப்பாவே சில நேரங்கள்ல பெரியம்மா கண்ல படாம இருக்க டிரை செய்வார்..."

சிவகாமிக்குப் பயந்து அப்பா ஓடி ஒளிவதைக் கற்பனை செய்யவே ஆர்த்திக்கு வேடிக்கையாக இருந்தது. பார்த்திபன் தொடர்ந்து சொன்னான். "....எதிர்காலத்துல உன் ஆதிக்கத்துல கம்பெனி வர்றப்ப அவ்வளவு கெடுபிடி இருக்காதுன்னு நினைக்கிறேன்."

ஆர்த்திக்கு கம்பெனி நிர்வாகத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்வதை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. அனுபவமும், திறமையும் தேவையான அளவு இல்லாத அவளால் என்ன செய்து விட முடியும்.? ஆனால் அவளுக்கு அந்தக் கம்பெனி நிர்வாகத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் அதிகாரம் இருக்கிறது என்பதை அவன் மறைமுகமாக சுட்டிக் காட்டுகிறான் என்பது புரிந்தது. பார்வதியும் நீலகண்டனும் வர பார்த்திபன் மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் விடை பெற்றான்.

ஆர்த்தி கீழே வந்த போது சிவகாமியும், சங்கரனும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார்கள். அந்த வீட்டில் ஆகாஷ் மட்டும் வாழ்த்து சொல்லவில்லை. அன்று காலை முதல் அவள் கண்ணுக்கு அவன் தென்படவேயில்லை.

=========

**லி**ஸாவின் வரவால் டேவிடும், மேரியும் சந்தோஷப் பிரவாகத்தில் மூழ்கி தத்தளித்தார்கள்.

"பார்த்தியா மேரி. நாம ரெண்டு பேரும் எவ்வளவு கெஞ்சிக் கூப்பிட்டிருப்போம். அப்ப எல்லாம் வராதவ சந்துரு கூப்பிட்டவுடனே வந்து நிக்கறா பாரு..."

லிஸா தர்மசங்கடத்துடன் பெற்றோரைப் பார்த்தாள். "என் வீட்டுக்காரர் கிட்ட சந்துரு மாமா பேசினவுடனே அவர் 'அவ்வளவு பெரிய மனுஷன் அப்படி வற்புறுத்திக் கூப்பிடறார். நீ போகாம இருந்தா நல்லா இருக்காதுன்னு என்னை தள்ளாத குறையா அனுப்பிட்டார்"

"ஏன் மேரி. அப்ப மாப்பிள்ளைக்கு நான் பெரிய மனுஷனாத் தெரியலையா?"

"அதென்ன, மேரி மேரின்னு மறைமுகமா சாடறது. நேரிலேயே கேட்கலாமே" என்று லிஸா கேட்க மேரி சமாதானப்படுத்தினாள். "அவர் கிடக்கிறார் விடு. யார் கூப்பிட்டு நீ வந்தா என்ன, நீ இங்கே வந்து நின்னதே எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்...."

சிறிது நேரம் குடும்ப விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். பின்பு பேச்சு ஆர்த்தியைப் பற்றியதாக இருந்தது. டேவிட் சொன்னார். "நீ உன் அம்மா கிட்ட அவங்க ப்ரண்டைப் பத்தி அடிக்கடி கேட்பாயில்லையா. ஆர்த்தியைப் பார்த்தா நீ அவ அம்மாவையே பார்த்த மாதிரி தான். அச்சு எடுத்த மாதிரி அப்படியே இருக்கிறாள். ஆனா இவ ஆனந்தியை விடவும் நல்ல பொண்ணு"

"அதென்ன ஆனந்தியை விடவும் நல்ல பொண்ணு. ஆனந்தி கிட்ட அப்படி என்ன நல்லதில்லாம இருந்துச்சு" மேரி கணவனைப் பார்த்து முகம் சுளித்துக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை. வாய் கொஞ்சம் அதிகம். இந்தப் பொண்ணு அப்படியில்லைன்னு சொல்ல வந்தேன்"

"உண்மையைப் பேசினா வாய் அதிகம்னு அர்த்தமா?"

டேவிட் என்ன சொல்வதென்று யோசித்தார். மேரி அவரை விடுவதாக இல்லை. "அதுவே சிவகாமி அக்கா பேசினா நீங்களும், உங்க ஃப்ரண்டும் ஆஹா, ஓஹோன்னு புகழ்வீங்க. எங்கக்காவை மிஞ்சி எதுவுமே இல்லைன்னு தம்பட்டம் அடிச்சுக்குவீங்க. இந்த தைரியம் யாருக்கு வரும்னு கேட்பீங்க. ஆனா நீங்க கட்டிகிட்டு வந்தவ பேசினா மட்டும் வாயாடின்பீங்க. திமிர்ம்பீங்க. ஏங்க இப்படி ஆளுக்கொரு அளவுகோல் வச்சு அளக்குறீங்க"

டேவிட் மெள்ள எழுந்தார். "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. நீங்க பேசிகிட்டிருங்க. நான் இதோ வந்துடறேன்..."

தந்தை சென்ற பின்னும் கோபம் அடங்காமல் அமர்ந்திருந்த தாயை லிஸா திகைப்புடன் பார்த்தாள். மேரி இந்த அளவு கோபித்து அவள் இதுவரை பார்த்ததில்லை. அந்த பழைய நாட்களில் அப்படி என்ன தான் நடந்திருக்கிறது?

# 78

Perdition catch my soul,
But I do love thee! and when I love thee not,
Chaos is come again.
– Shakespeare in "Othello"

"ஆர்த்தி இது தான் எங்க மகள் லிஸா. லிஸா, இது ஆர்த்தி"

மேரி அறிமுகப்படுத்தினாள். லிஸாவைப் பார்த்தவுடன் ஆர்த்திக்கு மூர்த்தி அவளையும் ஆகாஷையும் பற்றி சொன்னது தான் உடனடியாக நினைவுக்கு வந்தது. பார்க்க மிகவும் அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும் கவர்ச்சியான உடற்கட்டோடு இருந்தாள். ஆகாஷுக்கு இவள் மேல் ஈடுபாடு இருந்திருக்க வாய்ப்பு இல்லாமல் இல்லை..... எண்ண ஓட்டத்தை அதற்கு மேல் ஓட ஆர்த்தி விடவில்லை. எது எப்படியிருந்தாலும் பெற்றோர் எத்தனை கூப்பிட்டும் வராதவள், தன் தந்தை தனக்காக அழைத்ததும் இங்கு வந்திருக்கிறாள் என்ற நிஜம் அவளுக்குள் நன்றியுணர்ச்சியை ஏற்படுத்தியது. முகம் மலர ஆத்மார்த்தமாக லிஸாவை வரவேற்றாள்.

லிஸா ஆர்த்தி இவ்வளவு அழகாக இருப்பாள் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. அதுவும் பிறந்தநாளையொட்டி ஆர்த்தியை பவானி நன்றாகவே அலங்காரப்படுத்தி இருந்தாள். தன்னை வரவேற்றவளின் கள்ளங்கபடமில்லாத அந்த முகமலர்ச்சி லிஸாவுக்கு மகிழ்ச்சியை அளித்தது. "ஹேப்பி பர்த்டே ஆர்த்தி"

சிறிது நேரத்திலேயே இருவரும் நெருக்கமாகி விட்டார்கள். தூரத்தில் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரசேகர் சந்தோஷப்பட்டார். "பார்த்தாயா டேவிட். நான் நினைச்ச மாதிரியே அவங்க ரெண்டு பேரும் ஃப்ரண்ட்ஸாயிட்டாங்க."

தோட்டத்திற்குத் தாயுடன் வந்து கொண்டிருந்த ஆகாஷுக்கு ஆர்த்தியுடன் பேசிக் கொண்டிருந்த லிஸாவைப் பார்த்தவுடன் திகைப்பு ஏற்பட்டது. "லிஸாவை யார் கூப்பிட்டாங்க?"

சிவகாமிக்கும் லிஸாவின் வரவு ஆச்சரியத்தைத் தான் ஏற்படுத்தியது. சந்திரசேகர் அவளை அழைத்தது பற்றி அவளிடம் சொல்லியிருக்கவில்லை என்றாலும் அவளால் ஊகிக்க முடிந்தது. மகனிடம் சொன்னாள். "உன் மாமா தான் கூப்பிட்டிருப்பான். ஆர்த்திக்கு மனம் விட்டுப் பேச அவ வயசுல ஒரு தோழி இருந்தா நல்லாயிருக்கும்னு சொல்லிகிட்டு இருந்தான்...."

ஆகாஷ் ஒன்றும் சொல்லவில்லை. தர்மசங்கடமான சில நினைவுகள் அவனை அழுத்தினாலும் வெளியே காண்பிக்காமல் தாயுடன் நடந்தான். சிவகாமிக்கு அவன் தர்மசங்கடத்தை ஊகிக்க முடிந்தாலும் அதைப் பற்றி மேற்கொண்டு சிந்திக்கப் போகவில்லை. சந்திரசேகர் தன் மகளுக்காக யோசித்து யோசித்து செயல்படுவது பற்றி மனம் சிந்தித்தது.....

ஆகாஷைப் பார்த்தது லிஸாவும் ஒரு வித தர்மசங்கடத்தில் நெளிந்ததை ஆர்த்தி கவனித்தாள். மூர்த்தி சொன்னதில் உண்மை இருக்குமோ?

லிஸா தன்னை சமாளித்துக் கொண்டு "ஹாய் ஆகாஷ்" என்றாள். ஆகாஷும் "ஹாய் லிஸா. ஊட்டிக்கு எப்ப வந்தாய்?"

"மத்தியானம்"

அதற்கு மேல் பேசும் வாய்ப்பை சந்திரசேகர் தரவில்லை. "அக்கா எல்லாரும் வந்தாச்சு. ஆரம்பிக்கலாமா?" என்று அவர் சத்தமாய் கேட்க சிவகாமி தலையசைத்தாள்.

தோட்டம் மின் விளக்குகளால் ஜொலித்துக் கொண்டிருக்க அங்கு எல்லோரும் கூடியிருந்தார்கள். கடைசியாக பஞ்சவர்ணம் விலையுயர்ந்த பட்டுச்சேலை உடுத்திக் கொண்டு தோட்டத்தில் பிரவேசித்தாள். மாடியை விட்டு அவள் கீழே இறங்கி அவர்கள் எல்லோரும் பார்த்து பல நாட்கள் ஆகியிருந்ததால் அவளை எல்லோரும் அதிசயமாகப் பார்த்தார்கள். அமிர்தம் சிவகாமியிடம் முணுமுணுத்தாள். "இந்தக் கிழவி எதுக்கு திருவ்ஷ்டி மாதிரி இந்த இடத்துல?"

சிவகாமி பஞ்சவர்ணத்தை அங்கீகரிப்பது கூடத் தன் தகுதிக்குத் தகுந்ததல்ல என்பது போல் இருந்தாள்.

ஆர்த்தி கேக்கை வெட்ட எல்லோரும் கூடி நின்று 'ஹேப்பி பர்த்டே டு யூ' பாடினார்கள். ஆர்த்திக்கு மனம் நிறைந்திருந்தது. இத்தனை வருடங்களும் பிறந்த நாள் என்றால் கோயிலிற்குப் போவதும், வீட்டில் பாட்டி பாயாசம் செய்வதும் மட்டுமே நடக்கும். இது போன்ற ஒரு கூட்டமான வாழ்த்துகள் கேட்டு அவளுக்குப் பழக்கமில்லை. அந்த நிகழ்ச்சியை வீடியோ வேறு எடுக்க சிவகாமி ஏற்பாடு செய்திருந்தாள். காமிரா ஆர்த்தியையே மையம் கொண்டு இருந்தது.

கேக் வெட்டி முடித்ததும் சந்திரசேகர் மகளுக்கு வைரத்தால் ஆன நகை செட்டை பரிசாக அளித்தார். ஆர்த்திக்கு ஒரு பிறந்த நாளுக்கு இவ்வளவு விலை உயர்ந்த பரிசு மிக அதிகம் என்று தோன்றியது. ஆனால் தந்தையிடம் சொன்னால் அவர் மனம் வருத்தப்படும் என்று தோன்றியது.

சிவகாமி வந்து நெக்லஸை அவளுக்கு அணிவித்தாள். அவளும் சங்கரனும் சேர்ந்து அவளை ஆசிர்வதித்தார்கள். அமிர்தம் தங்க வளையல்களை ஆர்த்தி கைகளில் நுழைத்து ஆசிகள் சொன்னாள். பஞ்சவர்ணம் விலை உயர்ந்த கடிகாரத்தை ஆர்த்தி கையில் கட்டி வாழ்த்தினாள்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நீலகண்டனுக்கு தாங்கள் எடுத்து வந்திருந்த நானூறு ரூபாய் புடவையை ஆர்த்தியிடம் தர கூச்சமாக இருந்தது. முன்பே அவர்கள் செய்யப்போவதை அறிந்திருந்த போதிலும் எல்லாருக்கும் முன் அந்த சேலை துச்சமாகத் தோன்றும் என்பதில் அவருக்கு சந்தேகம் இல்லை. ஆனால் பார்வதி அவரைத் தள்ளாத குறையாய் நகர்த்தினாள். "நடங்க"

பள்ளிக்குப் பிரியமில்லாமல் செல்லும் மாணவனைக் கூட்டிக் கொண்டு போவது போல அவரை அழைத்துச் சென்ற பார்வதி அந்த சேலையை அவர் கையால் பேத்திக்குத் தர வைத்தாள். ஆர்த்தி ஆவலாக அந்த சேலையை அங்கேயே பிரித்துப் பார்த்த போது நீலகண்டனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. கூனிக் குறுகிப் போனார்.

"எவ்வளவு அழகா இருக்கு. எனக்குப் புடிச்ச கலர்." பெரிதாக மகிழ்ந்த ஆர்த்தி "தாத்தா தான் செலக்ட் செஞ்சிருப்பார். எனக்குத் தெரியும்" என்று தாத்தாவின் கையைப் பிடித்து முத்தமிட்டு மகிழ்ந்த போது கண்களில் பெருகிய நீரைக் கட்டுப்படுத்துவது கிழவருக்குப் பெரும்பாடாக இருந்தது. அவர் உணர்வுகளை அறிய முடிந்த பார்வதி அந்த வீடியோவில் அவர் அழுவதைப் படம்பிடித்து விடப் போகிறார்கள் என்று பயந்து ஆர்த்தியை வாழ்த்தி விட்டு அங்கிருந்து அவசரமாக அவரை இழுத்துப் பின் வாங்கினாள்.

வைரத்தில் ஒரு முழு செட்டையே செய்து தந்தும் அது ஏற்படுத்தாத மகிழ்ச்சியை அந்த மலிவான சேலை மகளுக்குத் தந்ததை சந்திரசேகரால் ஜீரணிக்க முடியவில்லை. ஆனால் இந்தக் காட்சியைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்த சங்கரன் தன் மனைவியிடம் முணுமுணுத்தார். "இந்தப் பொண்ணு ரொம்பவும் நல்ல பொண்ணு சிவகாமி". தாயின் அருகில் நின்றிருந்த ஆகாஷ் காதிலும் அது விழுந்தது. தாயின் அபிப்பிராயத்திற்காக ஆகாஷ் சிவகாமியைப் பார்க்க அவள் கணவரின் கருத்துக்கு வெறுமனே தலையை ஆட்டினாள்.

டேவிட், மேரி தம்பதிகள் பட்டுச்சேலையையும், லிஸா மேக்கப் செட்டையும், மூர்த்தி இதய வடிவில் ஒரு கடிகாரத்தையும், பார்த்திபன் சில பாடல் சி.டிக்களையும் தந்து அவளை வாழ்த்தினார்கள். அவர்கள் வாழ்த்து தெரிவித்துக் கொண்டிருக்கையில் ஆகாஷ் அமைதியாக அமர்ந்திருந்தானே ஒழிய எழுந்து வாழ்த்தப் போகவில்லை.

அவன் மனம் இரண்டாகப் பிரிந்து வாதாடிக் கொண்டிருந்தன. இன்று எப்போதையும் விட ஆர்த்தி அழகாகத் தெரிந்தாள். அவனைத் தவிர எல்லோரும் சென்று வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். அந்த வீட்டின் உள்ளேயிருந்து பல வருடங்களாக வெளியே வராத பஞ்சவர்ணம் கூட அபூர்வமாய் வாசலைத் தாண்டி வந்துள்ளாள். சென்று வாழ்த்த ஒரு மனது காதலுடன் உந்த, இன்னொரு மனது கட்டுப்பாட்டை விட்டு விடாதே என்று எச்சரித்தது.

# 79

Great thoughts, great feelings, came to them,
Like instincts, unawares.
- RICHARD MONCKTON MILNES.

சிவகாமி ஆகாஷை ஒருவித எரிச்சலுடன் பார்த்தாள். "நீ ஏன் விஷ் பண்ணப் போகாமல் உட்கார்ந்திருக்கிறாய்?"

ஆகாஷிற்கு அம்மாவிடம் என்ன சொல்வதென்று விளங்கவில்லை. அவன் பதிலுக்குக் காத்திராமல் சிவகாமி சொன்னாள். "அவளைக் கூட்டிகிட்டு வந்தப்ப அவள் கிட்ட உனக்குப் பேசி முடியலை. அவ்வளவு நெருக்கமாய் ஒருத்தி கிட்ட பழகிட்டு இப்ப எல்லாம் ஏதோ முன்பின் தெரியாதவன் மாதிரி நீ நடந்துக்கறதே எனக்கு சரின்னு படலை. சின்ன குழந்தைகள் சண்டை பிடிக்கற மாதிரி இருக்கு. அப்படி உங்களுக்குள்ள என்ன தகராறுன்னும் சொல்ல மாட்டேன்கிறாய். சரி அது உன் தனிப்பட்ட விஷயம். ஆனா இப்படி ஒரு சந்தர்ப்பத்துலயும் நீ இந்த மாதிரி இருக்கறது அநாகரிகமா தோணுது."

ஆகாஷ் ஒன்றும் சொல்லாமல் தாயைப் பார்த்தான். ஒருவேளை அம்மாவிடம் ஆர்த்தியின் சந்தேகத்தைச் சொன்னால் கூட அம்மா அதை ஒரு பொருட்டாக நினைக்காமல் இப்போது சொன்னதையே தான் சொல்வாள் என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை.

வேறு வழி இல்லாமல் எழுந்தான். எல்லோரும் முன்பே ஒவ்வொரு பரிசுப் பொருள் வாங்கி வைத்திருந்ததால் அதைத் தந்து ஆர்த்தியை வாழ்த்துகிறார்கள். அவனோ அப்படி வாழ்த்தும் எண்ணமே இல்லாததால் வெறுங்கையுடன் வந்திருந்தான். வெகு இயல்பாக தோட்டத்தில் இருந்த ஒரு அழகான சிவப்பு ரோஜாவைக் கிள்ளி எடுத்து ஆர்த்தியை நோக்கி நடந்தான். 'அவளுக்கு இது போதும்'.

கையில் ரோஜாவுடன் அவனைக் கண்டவுடன் ஆர்த்தியின் முகம் மலர்ந்து கண்கள் விரிந்தன. அவன் வாழ்த்த வருவான் என்ற நம்பிக்கையே அவளிடம் இருந்திருக்கவில்லை.

வாழ்த்து சொல்லி அவன் ரோஜாவை நீட்ட அவள் எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்டாள். கைகுலுக்குகையில் இருவர் கண்களும் பூட்டிக் கொண்டன. மின்காந்த அதிர்வுகள் இருவர் உடல்களிலும் பரவ சில வினாடிகள் இருவரும் இடத்தையும் காலத்தையும் மறந்தார்கள். அவள் முகத்தின் பரவசத்திற்கு அவன் தன்னை மறந்து புன்னகைத்து இசைந்தான். அது வரை இருந்த இறுக்கம் சுவடில்லாமல் விலகியது.

நீலகண்டன் தந்த மலிவுப் புடவையில் மகள் மனமகிழ்ந்ததை ரசிக்காத சந்திரசேகர் ஆகாஷின் ரோஜாவில் மகள் மகிழ்ச்சியின் எல்லைக்கே போனதைக் கண்டு நிறையவே சந்தோஷப்பட்டார். என்ன இருந்தாலும் மனதைக் கவர்ந்தவன் தரும் மலருக்கு ஈடு இணை உண்டோ? அருகில் நின்றிருந்த லிஸாவும் இருவரும் மெய் மறந்து நின்றதைக் கூர்மையாகக் கவனித்தாள். ஆகாஷை அவள் சிறு வயதிலிருந்தே அறிவாள். அவன் முக பாவங்கள் அவளுக்கு அத்துப்படி. ஆர்த்தியை அன்று தான் பார்க்கிறாள் என்றாலும் அவள் முகத்தில் அவள் மனதைச் சுலபமாகப் படிக்க முடிந்தது. லிஸாவின் இதய ஆழத்தில் இருந்த ஊமைக்காயத்தில் லேசாக வலி ஆரம்பித்தது.....

ஆகாஷ் தான் இந்த இதயங்களின் லயிப்பில் இருந்து முதலில் மீண்டவன். ஏளனமாக இது போதும் இவளுக்கு என்று தர வந்தவன் அவளது மகிழ்ச்சியை எதிர்பார்க்கவில்லை. தானும் அப்படி மெய் மறந்து போனதை அவனால் ஒரு கணம் ஜீரணிக்க முடியவில்லை. வசியம் செய்து விடுவது என்பது இது தானோ? தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கையை விலக்கிக் கொண்டு புன்னகை மாறாமல் திரும்பினான்.

அவன் திரும்பியவுடன் அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த அந்த மின்காந்த இணைப்பு துண்டிக்கப்பட ஆர்த்தியும் சுயநினைவுக்கு வந்தாள். சில வினாடிகளில் நிகழ்ந்தது கனவு தானோ என்று அவள் சந்தேகப்படும்படி ஆகாஷ் ஒன்றுமே நடக்காதது போல் தன் தாயருகே போய் உட்கார்ந்தான்.

"என்ன சந்துரு. இவ்வளவு தானா. பிறந்தநாள்னா கொஞ்சம் பாட்டு டேண்ஸ்னு வேண்டாமா?"

"ஆர்த்தி சிம்பிளா இருக்கணும்னு ஆசைப்பட்டதால நான் வேறெந்த ஏற்பாடும் செய்யலை." சந்திரசேகர் குரலில் அவரது மனத்தாங்கல் தெரிந்தது.

சிவகாமி சொன்னாள். "அதனாலென்ன நம்ம பார்த்தியே நல்லா பாடுவான். பாடு பார்த்தி"

சிவகாமியின் அந்த வார்த்தைகள் அமிர்தத்தின் முகத்தில் மின்னல் ஒளியை வர வைத்ததை ஆர்த்தி கவனித்தாள். மகனைப் பற்றி அக்கா உயர்வாகச் சொன்னதில் அமிர்தத்திற்கு எக்கச்சக்க மகிழ்ச்சி.

"ஆகாஷ், நீயும் வயலின் வாசிச்சு எத்தனை காலமாச்சு. நீயும் பார்த்தியும் தான் இந்த சாயங்கால நேரத்தை மறக்க முடியாததாய் செய்யணும்" சந்திரசேகர் ஆர்வத்துடன் சொன்னார்.

ஆகாஷ் சிறு தயக்கத்திற்குப் பிறகு எழுந்து போய் வயலினுடன் வந்தான். பார்த்திபன் நன்றாகப் பாடுவான் என்பதும், ஆகாஷ் நன்றாக வயலின் வாசிப்பான் என்பதும் ஆர்த்தி அப்போது தான் அறியும் விஷயங்கள். ஆர்த்தி எதிர்பார்ப்புடன் அவர்கள் இருவரையும் பார்த்தாள்.

"பார்த்தி நல்ல பாட்டா பாடுப்பா" என்று சங்கரன் சொன்னார்.

ஆகாஷ் குறும்பாகத் தந்தையிடம் கேட்டான். "அப்பா, தொட்டபெட்டா ரோட்டிலொரு முட்ட பரோட்டா மாதிரி நல்ல அர்த்தமுள்ள பாட்டா பாடச்சொல்லவா?"

அங்கே ஒரு சிரிப்பலை எழ சங்கரன் சிவகாமியைப் பொய்க் கோபத்துடன் பார்த்தார். "என்ன சிவகாமி இது?"

"எல்லாம் நீங்க கொடுக்கற செல்லம் தான் வேறென்ன?"

பஞ்சவர்ணம் அந்தக் கலகலப்பில் கலக்காமல் எழுந்து வீட்டை நோக்கி நடந்தாள். அந்தச் சிரிப்பலை அவள் இதயத்தில் திராவகத்தை ஊற்றியது. அங்கு இருக்கப் பிடிக்காவிட்டாலும் நடக்கும் கூத்தை தனதறையில் இருந்தே பார்க்க நினைத்தாள்.

பார்த்திபன் பாட ஆரம்பிக்க ஆகாஷ் வயலின் வாசித்தான். பழைய பாடல்களையும் புதிய பாடல்களையும் மாறி மாறிப் பாடிய பார்த்திபனின் குரல் ஜேசுதாசின் குரல் போல இனிமையாக இருந்தது. ஆகாஷின் வயலின் இசையும் அருமையாய் இருக்க இசை வெள்ளத்தில் எல்லோரும் மிதக்க ஆரம்பித்தார்கள்.

மூர்த்தி வழக்கம் போல மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியே அமர்ந்திருந்தான். மூர்த்தியைத் தவிர எல்லோரும் ஆகாஷையும், பார்த்திபனையும் நெருங்கி அமர்ந்து பாடல்களை ரசித்துக் கொண்டிருந்தார்கள். ஆர்த்தியும் தன்னையும் தன் பிரச்சனைகளையும் மறந்து இசையில் மூழ்கிப் போனாள். ஒரு கணம் இங்கு எல்லாமே அன்பினால் இணைக்கப்பட்ட பந்தமாகத் தோன்றியது. மனம் லேசாக அவள் இசையில் மூழ்கினாள்.

அதே நேரத்தில் தொலைவில் தோட்டத்தின் விளக்குகளின் வெளிச்சம் எட்டாத இருட்டில் அசோக் என்ற பெயரால் மூர்த்திக்கு அறிமுகமானவன் மறைந்திருந்து அங்கு நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தான். அவனுக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலை ப்ரசன்னா என்ற டாக்டரின் க்ளினிக்கில் புதன் கிழமைக்கு மேல் தான் ஆரம்பமாகின்றது என்றாலும் சில விஷயங்களைப் பற்றி அதிகமாக அறிந்திருப்பது என்றுமே நல்லது என்பது அவனுடைய தீவிர நம்பிக்கை.

பஞ்சவர்ணம் அங்கிருந்து போகும் வரை ஒரு இடத்தில் நின்றவன் அவள் மேலே சென்று தனதறை ஜன்னல் வழியாக பிறந்த நாள் நிகழ்ச்சிகளைக் கவனிக்க ஆரம்பித்தவுடன் சத்தமில்லாமல் இடம் மாறி நின்றான். முந்தைய இடம் கூர்ந்து கவனித்தால் பஞ்சவர்ணம் கண்களில் பட்டுவிடக்கூடிய இடம்.

உன்னிப்பாக ஒவ்வொருவரையும் கவனித்து வந்த அசோக்கின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது வீடியோகிராபர் தான். அந்த வீடியோகிராபர் அந்த பிறந்த நாள் விழாவைப் படம் எடுக்க வந்தவனாகத் தெரியவில்லை. மாறாக ஆர்த்தியை மட்டுமே வீடியோ எடுத்துக் கொண்டு இருந்தான். பாடும் பார்த்திபனையும், வயலின் வாசிக்கும் ஆகாஷையும் நோக்கிக் கூட வீடியோ திரும்பாதது அசோக்கிற்கு இயல்பானதாகத் தெரியவில்லை. வீடியோக்காரனின் நடவடிக்கை அவனுள் பெருத்த சந்தேகத்தைக் கிளப்ப ஆர்த்தியைக் கூர்மையாகப் பார்த்தான்.

அவள் ஆகாஷையே பார்த்தபடி இசையின் உதவியுடன் உலகையே மறந்து உட்கார்ந்திருந்தாள். அந்த வீடியோக்காரனின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கையை அறியாமல் அமர்ந்திருந்த அந்த அப்பாவிப் பெண்ணைச் சுற்றி நிறைய மர்மம் சூழ்ந்திருப்பதாக அசோக்கிற்குத் தோன்றியது.

அந்த வீடியோக்காரன் யாரும் குறிப்பாகச் சொல்லியிருக்காமல் இப்படி வீடியோ எடுத்துக் கொண்டிருக்க மாட்டான் என்பதில் அசோக்கிற்கு சந்தேகமில்லை. யார் சொல்லியிருப்பார்கள் என்பதை விட ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பது முக்கியமானது என்று அவனுக்குத் தோன்றியது.

# 80

Know how sublime a thing it is
To suffer and be strong.
– HENRY W. LONGFELLOW "The Light of Stars"

பாட்டுக்கச்சேரி முடிந்து கரகோஷம் எழுந்தது. ஆர்த்தி பார்த்திபனையும், ஆகாஷையும் மனமாரப் பாராட்டினாள். கேட்டு பார்த்திபன் முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பல்பு எரிந்தது. ஆகாஷ் வெறுமனே தலையசைத்தான். அவளிடம் கை குலுக்கிய போது பார்த்த ஆகாஷின் சுவடு இப்போது இல்லை. ஆர்த்தி பெருமூச்சு விட்டாள்.

எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டது. தோட்டத்தில் இருவர், மூவர் என கும்பல்களாகப் பிரிந்து பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். ஆர்த்தியும் லிஸாவும் இந்தக் குறுகிய காலத்திலேயே நெருங்கி விட்டிருந்ததால் சேர்ந்து அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். மூர்த்தி வழக்கம் போல் எல்லோரிடமிருந்தும் தள்ளி ஓதுக்குப் புறமாக அமர்ந்தான்.

யாரும் தன்னைப் பார்த்துக் கொண்டு இல்லை என்ற தைரியத்தில் மூர்த்தியின் கண்கள் ஆர்த்தி மீது நாகரிகம் இல்லாமல் மேய்ந்தன. ஆர்த்தியைப் பார்த்து நேரில் பேசும் போதெல்லாம் கண்ணியத்தின் சிகரமாக இருந்து மறைவில் இப்படி மாறியது அசோக்கிற்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. அவன் கணக்குப்படி மூர்த்திக்கு இது வரை எட்டு பெண்களுடன் மிக நெருங்கிய தொடர்பு இருந்திருக்கிறது. அதில் மூன்று பேர் திருமணம் ஆனவர்கள். இப்போதும் கூட லவ்டேலில் ஒரு கல்லூரி மாணவியும், வண்டிச்சோலையில் ஒரு விதவையும் அவனுடைய காதலிகளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவன் மற்றவர்கள் கவனிக்காத நேரத்தில் ஆர்த்தியைப் போன்ற அழகான பெண்ணைக் காமத்தோடு பார்ப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

இனி இங்கு கவனிக்க ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்த அசோக் சத்தமில்லாமல் அங்கிருந்து மறைந்தான்.

மூர்த்தியைப் பார்த்தபடியே லிஸா ஆர்த்தியிடம் மெல்ல சொன்னாள். "இந்தப் பல்லி நாலு பேரோட சேரவும் சேராது. ஓரேயடியா விட்டும் போயிடாது."

"எந்தப் பல்லி?" ஆர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

மூர்த்தியைக் கண் ஜாடையால் சுட்டிக் காட்டி லிஸா சொன்னாள். "மூர்த்தி தான். எப்பவுமே பல்லி மாதிரி சுவத்தில ஓட்டிகிட்டு நாம ரூமுக்குள்ள பேசறதை ஓட்டுக் கேட்பான். அதனால தான் அமிர்தம் ஆண்ட்டி அந்தப் பெயர் அவனுக்கு வச்சிருக்காங்க"

ஆர்த்திக்கு மூர்த்தி ஓட்டுக் கேட்பான் என்பதை நம்பக் கஷ்டமாய் இருந்தாலும் வக்கீலிடம் அவள் சொன்னதை அவன் தற்செயலாகக் கேட்டது போல் சொன்னது திடீரென்று நினைவுக்கு வந்தது. அது அவன் சொன்னபடி தற்செயலாகவே இருக்குமோ?

லிஸா தாழ்ந்த குரலில் ஆர்த்தியிடம் சொன்னாள். "ஆர்த்தி. அவன் கிட்ட நீ ஜாக்கிரதையா இருக்கணும். பொம்பளைங்க விஷயத்தில் ரொம்ப மோசமானவன்."

அதை ஆர்த்தியால் சுத்தமாக நம்ப முடியவில்லை. இத்தனை நாட்கள் பழகிய விதத்தில் கண்ணியத்தைத் தவிர வேறு எதையும் அவனிடம் அவள் பார்க்க முடிந்ததில்லை. அப்படி இருக்க லிஸா இப்படி அவனைப் பற்றி சொல்கிறாள் என்றால் மூர்த்தி லிஸா மீதும் ஆகாஷ் மீதும் சுமத்திய குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமோ? நினைக்கவே என்னமோ மாதிரி இருந்தது. ஆனால் லிஸாவும் அப்படிப்பட்ட பெண்ணாகத் தெரியவில்லை. உண்மையில் மனிதர்களை எடை போடும் விஷயத்தில் தனக்கு அனுபவம் மிகக்குறைவு என்று ஆர்த்திக்குத் தோன்றியது.

மூர்த்தி விஷயத்தில் இருந்து பேச்சை மாற்ற நினைத்த ஆர்த்தி லிஸாவிடம் சொன்னாள். "எனக்கு நீ வந்தது ரொம்பவே சந்தோஷமாய் இருக்கு லிஸா. உன்னைப் பார்க்கணும்னு நினைச்சுகிட்டு இருந்தேன்."

"எனக்கும் எங்கம்மா அவங்க தோழியை அப்படியே நீ உரிச்சு வைத்திருக்காய்னு சொன்னதுல இருந்து உன்னைப் பார்க்கணும்னு தோணிட்டே இருந்தது"

"ஆனா நீ உங்கம்மாவும் அப்பாவும் இங்கே வரச் சொல்லி எத்தனையோ கட்டாயப்படுத்தினாலும் வரப் பிரியப்படலைங்கற மாதிரி நான் கேள்விப்பட்டேன். ஏன் லிஸா?"

லிஸாவின் கண்கள் அவளையும் அறியாமல் தூரத்தில் தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த ஆகாஷ் மீது தங்கின. உடனடியாக முகத்தில் லேசாக சோகம் படர்ந்தது. தாழ்ந்த குரலில் சொன்னாள். "நான் இன்னொரு நாளில் அதைப் பற்றி விவரமாய் சொல்றேனே. ப்ளீஸ்..."

அதற்கு மேல் ஆர்த்தி அவளிடம் அது பற்றிக் கேட்கப்போகவில்லை என்றாலும் அவள் இங்கு வரத் தயங்குவதற்கும் ஆகாஷுக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது என்பது மட்டும் புரிந்தது. பின் பேச்சு திசை மாறியது.

சிறிது நேரத்தில் டேவிட், மேரி, லிஸா விடை பெற்றார்கள்.

அவர்கள் சென்ற பிறகு சிவகாமி ஒரு வேலைக்காரனை அழைத்து அர்ஜுனுக்கு உணவு அனுப்புமாறு உத்தரவிட்டாள். அப்போது தான் இந்த நிகழ்ச்சியில் அவன் கலந்து கொள்ளவே இல்லை என்கிற உண்மை ஆர்த்திக்கு உறைத்தது. "அவர் ஏன் இங்கே வரலை அத்தை?" என்று சிவகாமியிடம் கேட்டாள்.

"நான் அவனை வரச் சொன்னேன். ஆனா உன்னோட பிறந்த நாளும் அதுவுமா தன் முகத்தை உனக்குக் காமிச்சு சங்கடப்படுத்த அவன் விரும்பலை. வரலைன்னுட்டான்"

ஆர்த்திக்கு என்னவோ போலாகி விட்டது. தாயின் டைரியில் அவனைப் பற்றிப் படித்ததில் இருந்து வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்கள் பட்டிருந்த அவன் மீது இரக்கமே அவளுக்கு மனதில் ஏற்பட்டிருந்தது. இயல்பிலேயே மென்மையான மனதுடைய அவளுக்கு அவன் அப்படி நினைத்து தன் முன் வராததில் வருத்தம் ஏற்பட்டது.

எழுந்து நின்று சொன்னாள். "நானே கொண்டு போய் அவருக்குத் தர்றேன்"

சிவகாமி முகத்தில் ஒரு கணம் ஆச்சரியம் தோன்றி மறைந்தது. சரியென்று தலையசைத்தாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆகாஷிற்கும் ஆர்த்தியின் மனதைப் படிக்க முடிந்தது. "எல்லாம் சரி தான், ஆனால் இவளால் என் அம்மாவை எப்படி சந்தேகிக்க முடிந்தது?" என்ற கேள்வியில் மனம் வந்து தங்கியது.

அவுட் ஹவுசில் ஆர்த்தி நுழைந்த போது அர்ஜுன் பிரயாணத்திற்காக சூட்கேஸில் துணிகளை அடுக்கிக் கொண்டு இருந்தான். காலடி ஓசை கேட்டுத் திரும்பியவன் ஆர்த்தியைப் பார்த்துத் திகைத்து நின்றான். அவளை அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

திறந்திருந்த சூட்கேஸின் மேல் பாகத்தில் சிவகாமியின் புகைப்படம் ஓட்ட வைக்கப்பட்டிருந்ததை ஆர்த்தி பார்த்தாள். அங்கிருந்த மேசையிலும் சிவகாமியின் ஒரு புகைப்படம் இருந்தது. அறையில் வேறு சாமி படங்கள் உட்பட வேறெந்த படமும் இல்லை. சந்திரசேகர் இரண்டு நாட்களுக்கு முன் பேச்சு வாக்கில் அர்ஜுனைப் பற்றிச் சொல்லியிருந்தார். "அவனைப் பொருத்த வரை அக்கா தான் எல்லாம்". அதை அந்த அறையும் உரத்துச் சொன்னதாக ஆர்த்திக்குத் தோன்றியது.

ஆர்த்தி திகைத்து நின்ற அர்ஜுனிடம் சொன்னாள். "நீங்க என் பர்த்டே பார்ட்டிக்கு வராததால் நானே வந்துட்டேன்." தான் கொண்டு வந்த ட்ரேயை அங்கிருந்த மேசையில் வைத்தாள்.

அர்ஜுன் சுதாரித்துக் கொண்டு சொன்னான். "சாரி... ஹேப்பி பர்த்டே"

"தேங்க் யூ" என்று கூறி ஆர்த்தி புன்னகைத்தாள். அவன் வாழ்த்து மனமார்ந்ததாக இருந்ததாலோ என்னவோ அவனுடைய அசிங்கமான முகமும் இப்போது அவளுக்கு அருவறுப்பைத் தரவில்லை.

"நீங்க வெளியூருக்குக் கிளம்பிகிட்டிருக்கிற மாதிரி தெரியுது. நான் வந்து தொந்தரவு செஞ்சுட்டேனோ"

"அப்படியெல்லாம் இல்லை. உட்காருங்க....எனக்கு புதன் கிழமை சர்ஜரி செய்யறாங்க. நாளைக்கே சென்னை ஆஸ்பத்திரியில் வந்து அட்மிட் ஆகச் சொல்லியிருக்காங்க. நாளைக்குக் காலைல கிளம்பணும் அதான்...."

"உட்காரலை. நீங்க சாப்பிட்டுட்டு பிறகு பேக் பண்ணுங்க. நான் கிளம்பறேன். சர்ஜரி நல்லபடியா முடியணும்னு நானும் கடவுளை வேண்டிக்கறேன். வரட்டுமா?"

அவன் தலையசைக்க அவள் போய் விட்டாள். அந்தப் பெண் அங்கு பந்தா எதுவும் இல்லாமல் வந்ததும், பேசிய விதமும் அவனுக்கு அவள் தாயை நினைவுபடுத்தியது. அவளிடமும் என்றுமே கர்வம் இருந்ததில்லை. முக்கியமாக ஆர்த்தியின் அந்தப் புன்னகை ஆனந்தியின் புன்னகையின் மறு அச்சாக இருந்தது...

ஆனந்தியின் நினைவுகள் சில வந்து போய், கடைசியில் பார்த்த அந்த முகம் நினைவில் தங்கியது. பதினெட்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த முகமும், அதில் பார்த்த ஆக்ரோஷமும் இன்னும் பசுமையாக அவனுக்கு நினைவில் இருக்கிறது. எரிமலை என்ற சொல்லுக்குப் பொருளாக அன்றைய தினம் ஆனந்தி இருந்தாள்.....

# 81

Since you cannot avoid forming habits, how important it is that you seek to form those that are useful and desirable. - Harry D Kitson

இரவு காரில் வீடு திரும்பிப் போகையில் டேவிட் தன் மகளிடம் கேட்டார். "ஆர்த்தியைப் பற்றி என்ன நினைக்கிறாய் லிஸா?"

"ரொம்பவே அழகாய் இருக்கிறாள். அதோடு ரொம்பவே நல்லவளாய் தெரியறாள்"

மேரி சொன்னாள். "பவானி தான் அலங்காரம் செய்ததாய் சொன்னார்கள். மேக்கப்பில் பவானி எப்பவுமே எக்ஸ்பர்ட் தான். சாதாரணமாவே அழகாய் தெரியற ஆர்த்தியை பேரழகாய் பவானி மாத்திட்டா"

"அந்த சூனியக்கிழவி அதிசயமாய் வந்து வாழ்த்திட்டுப் போனது ஆச்சரியமாய் இருந்தது. அதை வெளியில் பார்த்து பல வருஷமாச்சு. இல்லையாம்மா?"

பஞ்சவர்ணத்தை லிஸா சிறு வயது முதல் சூனியக்கிழவி என்று தான் அழைப்பது வழக்கம். ஆமாம் என்று மேரி தலையாட்ட டேவிட் வெறுப்புடன் சொன்னார். "சொத்து இப்ப யார் கன்ட்ரோல்ல இருக்குன்னு கிழவிக்குத் தெரியும். அதனால அவளோட குட் புக்ஸ்ல இருக்கணும்னு கிழவி நினைக்கிறா"

"அந்த மூர்த்தியும் ரொம்பத் தான் அவள் கிட்ட பவ்யமாய் நடக்கறான். அவனைப் பத்தி அவள் கிட்ட சொன்னேன். ஆனா அவள் நம்பின மாதிரி தெரியலை."

மேரி மகளிடம் சொன்னாள். "அவள் நிறையக் குழம்பிப் போயிருக்காள்னு நினைக்கிறேன் பாவம். யார் நடிக்கிறாங்க, யார் நிஜம்னு தெரியக் கஷ்டம் தான். அதுலயும் அந்த வீட்டில் இருக்கிற மூணு பசங்களும் அவளுக்கு முறைப்பசங்க. அழகாவும் இருக்கா, சொத்தும் இருக்குங்கறப்ப அவளோட மனசுல இடம் பிடிக்க கொஞ்சம் அதிகமாவே முயற்சி செய்வாங்க. இந்த மூர்த்தி நடிக்கிறதுல சிவாஜியை மிஞ்சிடுவான்...."

"ஆனா அவள் ஆகாஷைத் தான் காதலிக்கிற மாதிரி தெரியுது" லிஸா சொல்ல ஒரு கனத்த மௌனம் அங்கு நிலவியது.

சில நேரங்களில் மணிக்கணக்கான பேச்சை விட மௌனம் அதிகம் பேசுவது உண்டு. மேரி அந்த தர்மசங்கடமான மௌனத்தின் இரைச்சலைக் கேட்க முடியாமல் கலைத்தாள். "லிஸா.... உனக்கு இங்கு வந்தது கஷ்டமாய் இல்லையே?"

சிறிது நேரம் லிஸா ஒன்றும் சொல்லவில்லை. மகள் என்ன சொல்கிறாள் என்பதைக் கேட்க டேவிட்டும் பரபரப்பாக இருந்தார். லிஸா சொன்னாள். "கஷ்டமாயில்லைன்னு சொன்னா அது பொய் சொன்ன மாதிரி ஆயிடும்மா. ஆனா வாழ்க்கை ஒரு இடத்துல தேங்கி நின்னுட முடியாதில்லையா. நாம எல்லோருமே சில கட்டங்களைத் தாண்டி நகர்ந்து தானேம்மா ஆகணும். அதற்கு நான் தயாராயிட்டேம்மா. இங்கே வர்றதுக்கு முன்னாலேயே நான் மனசுல அந்த முடிவெடுத்துட்டுத் தான் வந்தேன். வந்ததுக்கு இப்ப வருத்தமில்லைம்மா. எனக்கு நிஜமாவே ஆர்த்தியை ரொம்பவே பிடிச்சுடுச்சு....."

அவள் பதில் பெற்றோர் இருவர் கண்களையும் லேசாக ஈரப்படுத்தியது.

★★★★★★★★★★★★

கிட்டத்தட்ட அறுபது வயது மதிக்கத்தக்க அந்த வட இந்திய மனிதர் அந்த வீடியோ கடைக்கு நுழையும் முன் வாய் நிறைய வைத்திருந்த வெற்றிலையை வெளியே துப்பினார். தலையில் ஒரு குல்லா, சில்க் ஜிப்பா, தொந்தி, மூக்கின் நுனியில் கண்ணாடி சகிதம் வந்த அந்த நபரை அந்த வீடியோ கடைக்காரன் இது வரை இந்தப் பகுதியில் கண்டதில்லை. "வாங்க" என்று வரவேற்றான்.

வந்த மனிதர் "ஹே ராம்" என்று சொன்னபடி அங்கிருந்த நாற்காலியில் களைப்புடன் உட்கார்ந்து ஒரு நிமிடம் கண்களை மூடி இளைப்பாறினார். கண்களைத் திறந்தவர் "ஒரு காலத்துல ஊட்டி க்ளைமேட் எப்டி இருந்துது.....இப்ப பகல்ல வெயில் தான் ஜாஸ்தி..."

வீடியோ கடைக்காரன் ஆமாமென புன்னகையுடன் தலையாட்டினான்.

"நம்ம பேரன் பர்த்டே வர்ற தர்ஸ்டே வருது. வீட்டில பார்ட்டி வெக்கிறான். வீடியோ கவரேஜ் வேணும்னு அடம் பிடிக்கறான். காசோட வேல்யூ எல்லாம் கவ்லே இல்லே. பிடிவாதம் பிடிக்கிறான்...."

வீடியோகாரன் மனதில் சொல்லிக் கொண்டான். "நாங்க எல்லாம் பிழைக்க வேண்டாமா சேட்டு". இப்போதைய நிதி நெருக்கடி காரணமாக மக்கள் தேவையற்ற செலவுகளை வேறு வழியில்லாமல் குறைக்க ஆரம்பித்து விட்டதால் அவனது வீடியோ தொழில் மிகவும் மந்தமாகி விட்டது.

"வீடு எங்கே சேட்"

சேட் தன் ஜிப்பாவின் பாக்கெட்டில் கையை விட்டு தேடினார். "அரே. இந்த சைத்தான்க நம்ம விசிட்டிங் கார்டு கூட எடுத்து விளையாடறான். அர்ஜெண்டா தேட்னா கிடைக்கிறானில்லை.. நம்ம எஸ்டேட்டும், வீடும் மஞ்சூர் போற வழியில இருக்குது. அது சரி நீங்க எத்தனே சார்ஜ் செய்யறான்....."

அவரிடம் எல்லா விவரங்களும் கேட்டு விட்டு ஒரு தொகையை வீடியோக்காரன் சொல்ல சேட் கேட்கக்கூடாத வார்த்தையை கேட்டு விட்டது போல் மிரண்டார். "அரே நான் திவால் ஆகறான்."

"இப்ப விலைவாசி எல்லாம் அந்த அளவுக்கு இருக்கு சேட். இதுல செலவு எல்லாம் போக எனக்கு பெருசா எதுவும் மிஞ்சாது. தொழில் சுத்தமா இருக்கும். ஒரு தடவை என் வேலையைப் பார்த்துட்டா நீங்களாவே சேர்த்துக் கொடுப்பீங்க"

சேட் அவன் பதிலில் சமாதானமானது போல் தெரியவில்லை. அரை மனதுடன் சொன்னார். "ஏதாவது பர்த்டே கவரேஜ் பண்ணது இருந்தா சேட் பார்த்துட்டு டிசைட் செய்யறான்"

நல்ல வேளையாக நேற்று எடுத்த பிறந்த நாள் வீடியோ தயாராக இருந்ததால் வீடியோக்காரன் உடனடியாகச் சென்று எடுத்து சேட்டுக்குப் போட்டுக் காட்டினான். அதைச் சிறிது நேரம் பார்த்த சேட் பொறுமையிழந்து சொன்னார். "இன்னாயா இது... பர்த்டேன்னா அந்த ஆளையே காமிச்சுகிட்டிருக்கான்.... தொளில் பத்தி பேசறான்... இதுவாய்யா தொளில்..."

வீடியோக்காரன் ஒருவித தர்மசங்கடத்துடன் நெளிந்தான். "சேட். அது அந்த பர்த்டே கவர் செய்ய ஏற்பாடு செய்தவங்க பிரத்தியேகமா அப்படி எடுக்கச் சொல்லி இருந்ததால தான் அப்படி எடுக்க வேண்டியதாப் போச்சு. மத்தவங்க அந்தப் பொண்ணு கிட்ட வர்றப்ப அந்த ஃப்ரேம்ல வந்தாப் போதும், மத்தபடி அந்தப் பொண்ணை மட்டும் கான்சன்ட்ரேட் செய்தாப் போதும்னு சொல்லிட்டாங்க. காசு கொடுத்து இப்படி எடுன்னா அப்படி எடுக்கறது தானே நம்ம வேலை சேட். நானா எடுத்திருந்தா அந்த தோட்டத்து பூக்கள்ல இருந்து வந்திருந்த தனித்தனி மனுஷங்க வரை வித்தியாசமா கவர் செஞ்சிருப்பேன்...."

"அந்த ஆளு மெண்டலாய்யா?"

வீடியோக்காரன் ஒரு நிமிடம் தயங்கினான். பிறகு இந்த சேட்டிடம் சொல்வதில் தவறில்லை என்று நினைத்தவனாகச் சொன்னான். "அந்த மேடத்தை மெண்டல்னு யாருமே சொல்ல முடியாது. பெரிய பிசினஸ் சாம்ராஜ்ஜியத்தையே நடத்திட்டிருக்காங்க. அப்படிப்பட்டவங்க அப்படி சொல்றங்கன்னா ஏதாவது காரணம் இருக்கும்... சரி அவங்கள விடுங்க சேட். நீங்க எப்படி எடுக்கச் சொல்றீங்களோ அப்படி எடுக்கறேன்."

சேட் எழுந்தார். "ஓகே. நான் என் பேரனையே இங்க அனுப்பறான். அவன் இஷ்டம் மாதிரி நீங்க செய்யறான். விசிட்டிங் கார்டு குடுத்தா அவனையே நாளைக்கு அனுப்பறான்..."

வீடியோக்காரன் விசிட்டிங் கார்டு எடுத்து தந்து விட்டு சொன்னான். "உங்க அட்ரஸ் சொன்னா நானே வேணும்னா வந்து பார்க்கறேன்"

"அரே அந்த சைத்தான் தினம் ஒரு தடவே ஊட்டி பஜாருக்கு வர்றான். அவனே வந்து பேசுவான்"

சேட் கிளம்பி விட்டார். சற்று தொலைவில் நிறுத்தி வைத்திருந்த காரில் ஏறிய சேட் காரை சிறிது நேரம் ஓட்டிச் சென்று ஆள் நடமாட்டம் இல்லாத ஒதுக்குப் புறத்தில் நிறுத்தி வேஷத்தைக் கலைத்து அசோக்காக மாறினான்.

வீடியோ எடுக்கச் சொன்னது சிவகாமி தான் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. சம்பந்தமில்லாத விஷயங்களில் துப்பறிய விரும்பாத அசோக்கிற்கு அந்த வீடியோகிராபரை ஏற்பாடு செய்தது மூர்த்தி தானோ என்கிற சந்தேகம் கூட இருந்தது. ஒரு புறம் ஆர்த்தியின் ஆழ்மனதில் புதைந்துள்ளதை அறியத் தன்னை ஏற்பாடு செய்த மூர்த்தி வேறு ஏதாவது சதித்திட்டம் தீட்டி இந்த வீடியோவுக்கு ஏற்பாடு செய்திருக்கலாமோ என்ற சந்தேகம் வந்ததால் தான் நிவர்த்தி செய்ய வீடியோக்காரனைப் பார்த்துப் பேச வந்தான். தனக்கு வேலை கொடுத்தவன் தனக்குத் தெரியாமல் இன்னொருவனுக்கு ஒரு பகுதி வேலையைத் தருகிறான் என்றால் அது அபாயத்தின் அறிகுறி என்பது அசோக்கின் அனுபவம்.

அப்படி எடுக்கச் சொன்னது மூர்த்தி அல்ல என்றாகி விட்ட பிறகு அசோக்கின் ஆர்வம் வடிந்து போயிற்று. சிவகாமி ஏன் அப்படி வீடியோ எடுக்க வீடியோக்காரனிடம் சொன்னாள் என்பது மிக மர்மமாக இருந்தாலும் அதைத் தெரிந்து தனக்கு எதுவும் ஆகப்போகிறதில்லை என்பதால் இது குறித்து மேலும் துப்பறிதல் தேவையில்லாதது என்ற முடிவுக்கு அசோக் வந்தான். ஆனாலும் அந்த ஏன் என்ற கேள்வி சிறிது நேரம் அவன் மனதில் தங்கியிருந்தது. பின் அதை மறந்து போனான்.

# 82

Rumour is a pipe
Blown by surmises, jealousies, conjectures.
-Shakespeare

பஞ்சவர்ணம் தோட்டத்தில் பேசிக்கொண்டே உலாவிய ஆர்த்தியையும் லிஸாவையும் தன்னறை ஜன்னல் வழியாக கவனித்துக் கொண்டு இருந்தாள். லிஸா மூர்த்தியைப் பற்றி மோசமாகத் தான் ஆர்த்தியிடம் சொல்வாள் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் மூர்த்தி முன்பே லிஸாவையும், ஆகாஷையும் பற்றி சொல்லி வைத்திருப்பதால் அப்படியே ஆர்த்தி லிஸா சொல்வதை நம்ப மாட்டாள் என்பது பஞ்சவர்ணத்தின் கருத்தாக இருந்தது. ஆனாலும் நடப்பதெல்லாம் தனக்கு சாதகமாக இல்லை என்று பஞ்சவர்ணம் ஆத்திரப்பட்டாள்.

நீலகண்டன் தன் மனைவியின் வாயிற்கு பயந்து இப்போதெல்லாம் பஞ்சவர்ணத்தைப் பார்க்க வருவதில்லை. அவருடைய நேரம் எல்லாம் சங்கரனுடன் தோட்டத்தில் அமர்ந்து தேவனுடைய கதைகளைப் பற்றி பேசுவதில் தான் போகிறது. ஒருவருக்கொருவர் வாய் விட்டு புத்தகத்தின் சில வரிகளைப் படித்து சிலாகித்துக் கொண்டு மகிழ்ந்தார்கள். பார்வதி அமிர்தத்துடன் சேர்ந்து பேசி

பொழுதைக் கழித்தாள். இருவரும் சேர்ந்து கோயிலுக்குப் போனார்கள். பேசிக் கொண்டே பூக்கள் பறித்துத் தொடுத்தார்கள். பவானியும் இப்போதெல்லாம் கூப்பிடாமல் பஞ்சவர்ணத்தைப் பார்க்க வருவதில்லை. ஆர்த்தியுடன் ஏதாவது பேசிக் கொண்டும், ஷாப்பிங் போய்க் கொண்டும் பொழுதைக் கழித்தாள். இதெல்லாம் பஞ்சவர்ணத்திற்கு பெரும் அதிருப்தியைத் தந்து கொண்டிருந்தது.

ஆர்த்தியின் ஹிப்னாடிஸ செஷன் ஆரம்பிக்கும் புதன்கிழமையோ விரைவாக நெருங்க மறுத்தது. இன்று செவ்வாய்க்கிழமை. நேரமோ மாலை. ஆமையாகத்தான் அந்த மாலையும் நகர்கிறது.....

அந்த நேரத்தில் பாட்டியின் அறைக்குள் நுழைந்த மூர்த்தி தன் பாட்டி ஜன்னல் வழியே ஆர்த்தியையும் லிஸாவையும் கவனித்துக் கொண்டு இருந்ததைப் பார்த்தான். அவர்கள் இருவரும் அந்த அளவு நெருங்கியதை அவனாலும் ஜீரணிக்க முடியவில்லை. அவன் பாட்டியிடம் சொன்னான். "லிஸாவைப் பற்றி நான் அத்தனை சொல்லியும் இப்படி நெருக்கமாய் லிஸா கிட்ட பழகுவாள்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலை பாட்டி"

பேரனைத் திரும்பிப் பார்த்த பஞ்சவர்ணம் அவனை சமாதானப்படுத்தினாள். "ஆர்த்தி நிறையவே குழம்பிப்போயிருக்கா மூர்த்தி. அதனால ஒவ்வொருத்தர் சொல்றதையும் கேட்டுக்கறா. ஆனா அதை வச்சு எந்த முடிவும் எடுக்க முடியாம தவிக்கிறா. நாம எதிர்பார்த்த மாதிரி அவள் நடந்துக்கலைங்கறது உண்மை தான். ஆனா அவள் நாம் பயப்படற அளவுக்கும் நடந்துக்கலை....."

"ஆனா அந்த பர்த்டே பார்ட்டில ஆகாஷும், அவளும் எப்படி ரீயாக்ட் பண்ணினாங்கன்னு பாத்தீங்கள்ல" அவன் குரலில் வருத்தம் இருந்தது.

"வயசுக் கோளாறுடா மூர்த்தி. அதுல அவங்க மாத்திரம் விதி விலக்கா என்ன. ஆனா அவன் சீக்கிரமே சுதாரிச்சுகிட்டு பிறகு விலகியே இருந்தான் பார்த்தியா. அவனுக்கு அவங்கம்மா மாதிரி ஆங்காரம் அதிகம்"

"ஆனால் விலகி நிக்கறது ஆர்த்தியாய் இருந்தாத் தானே நாம தைரியமா இருக்கலாம்."

"விலகி நிக்கறது யாரா இருந்தாலும் இடைவெளி ஒண்ணு தான் மூர்த்தி. அவள் கழுத்தில் தாலி கட்டப் போறவன் நீ தான். அதுக்கு என்ன செய்யணும். எப்போ, எப்படி செய்யணும்னு எனக்குத் தெரியும்டா. நீ தைரியமா இரு. அது வரைக்கும் அந்த ஆர்த்தி கிட்ட லிஸாவைப் பத்தியும், ஆகாஷைப் பத்தியும், ஏன் அந்த பார்த்தியைப் பத்தி கூட மோசமா சொல்லிகிட்டிரு. எப்பவுமே ஒண்ணு ரெண்டு உண்மையை ஆதாரமா வச்சு பொய் சொல்லணுடா. அப்படிப்பட்ட பொய்யத் தான் யாராலும் சந்தேகப்பட முடியாது. புரியுதா?"

மூர்த்தி தலையசைத்தான். பாட்டியின் தன்னம்பிக்கை மூர்த்தியை ஆச்சரியப்பட வைத்தது. மனிதர்களைப் புரிந்து கொள்வதிலும், அவர்களை உபயோகப்படுத்திக் கொள்வதிலும் அவளுடைய திறமையை அவன் பலமுறை பார்த்து வளர்ந்திருக்கிறான். பாட்டியின் திட்டம் என்னவாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியவில்லை. கேட்டாலும் சமயம் வராமல் அவள் அவனிடம் சொல்லப் போவதில்லை. ஆனால் அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாள் என்றால் அது நிச்சயம் சோடை போகாததாக இருக்கும் என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை. ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்தான். லிஸா ஏதோ ஆர்த்தியிடம் சொல்லிக் கொண்டு இருந்தாள். 'அவள் என்ன தான் சொல்கிறாள்'

உண்மையில் ஆர்த்தியிடம் தங்கள் குழந்தைப் பருவத்தைப் பற்றி லிஸா சொல்லிக் கொண்டிருந்தாள். "...நான், ஆகாஷ், பார்த்தி மூணு பேரும் சேர்ந்து சின்னதில் இங்கே அடிச்ச

லூட்டி கொஞ்ச நஞ்சமல்ல ஆர்த்தி. ஆனால் அப்ப எல்லாம் நீ ஒருத்தி இருக்கிறதாகவே இங்கே யாரும் சொல்லலை. எனக்கு இந்த வீட்டுல யாரும் சொல்லாதது கூட வருத்தமில்லை. எங்கம்மா, அப்பாவும் சொல்லாதது தான் வருத்தம். நான் போன்ல நீ வந்ததா சொன்னப்பவே அம்மா கிட்ட சண்டை போட்டுட்டேன்.."

ஆர்த்தி ஆர்வமாகக் கேட்டாள். "உங்கம்மா என்ன சொன்னாங்க?"

"ஏதோ மழுப்புனாங்க. உங்கம்மாவோட மரணத்தை அவங்களால ஜீரணிக்க முடியலைன்னு மட்டும் புரிஞ்சுகிட்டேன். உன்னைப் பத்தி பேசுனா அவங்களோட நினைவும் வந்து சங்கடப்படுத்தும்னு நினைச்சு பேசாமல் விட்ட மாதிரி தோணுது"

"எங்க பாட்டியும் தாத்தாவும் அப்படியேதோ ஒரு எண்ணத்துல தான் என் கிட்ட அப்பாவைப் பத்தியும், இந்தக் குடும்பத்தைப் பத்தியும் சொல்லலை..."

"ஆனா எனக்கு இது முட்டாள்தனமா தோணுது."

ஆர்த்திக்கு லிஸாவின் வெளிப்படையான பேச்சு பிடித்திருந்தது. பிறந்த நாள் விழாவின் மறுநாளே கிளம்பத் தயாரான லிஸாவை சில நாட்கள் தங்கும்படி கேட்டுக் கொண்டதற்கு லிஸாவும் ஒத்துக் கொள்ள அவளுக்கும் ஆர்த்தியைப் பிடித்திருந்ததே காரணம். இருவருக்கும் பேசியே முடியவில்லை.

திடீரென்று முன்னறிவிப்பு இல்லாமல் லிஸா சொன்னாள்."ஆர்த்தி எங்கம்மா உன் கிட்ட ஒரு விஷயத்தைப் பத்தி பேச வேண்டாம்னு சொன்னாங்க. ஆனா என் கிட்ட இருக்கிற ஒரு கெட்ட பழக்கம் என்னான்னா எதை வேண்டாம்னு சொல்றாங்களோ அதைச் செய்யறது தான்..."

ஆர்த்தி சிரித்துக் கொண்டே சொன்னாள். "நீ எதை வேணும்னாலும் என் கிட்ட பேசலாம்"

"உன்னை ஏதோ கனவு அடிக்கடி வந்து தொந்திரவு செய்யுதுன்னும் அது சம்பந்தமா நீ டாக்டர் ப்ரசன்னா கிட்ட போகிறாய்னும் சொன்னாங்க...."

ஆர்த்தி தயக்கத்துடன் சொன்னாள். "ஆமா, அதைப்பத்தி ட்ரீட்மெண்ட் முடியற வரைக்கும் பேச வேண்டாம்னு முடிவு செய்திருக்கேன் லிஸா. சாரி"

"ஓகே. ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு போதும். சொல்லக்கூட வேண்டாம். ஆமா இல்லைன்னு தலையாட்டு போதும். அது உங்கம்மா சம்பந்தப்பட்டதா"

ஆர்த்தி தலையசைத்தாள். இருவரும் சிறிது நேரம் பேசாதிருந்தார்கள்.

பின் லிஸாவே மௌனத்தைக் கலைத்தாள். "உங்கம்மா இறந்த அந்த நாள் ஊட்டியில் எமனோட ராஜாங்கம் தான் நடந்ததுன்னு அப்பா சொல்வார். எத்தனை பேர் செத்தாங்கன்னு இன்னும் சரியா கணக்கு கிடைக்கலையாம். உங்கத்தையோட பவர்னால தான் உங்கம்மாவோட உடம்பைத் தேடியெடுக்க முடிஞ்சதுன்னு அப்பா சொன்னார். மூர்த்தியோட அம்மா அப்பாவோட பிணம் கூட கிடைக்கலைன்னு சொல்லிகிட்டாங்க. அந்த சூனியக்கிழவி, அதான் மூர்த்தியோட பாட்டி, மகன் மருமகளோட பிணத்தைக் கண்டுபிடிக்க ரொம்பவே பாடுபட்டு தேடியிருக்கா. மார்ச்சுவரில அழுகிப் போன பிணத்தை எல்லாம் கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் புரட்டிப் பார்த்தாளாம். அந்த மாதிரி ஒரு தைரியமான பொம்பளையை நாங்க இது வரைக்கும் பார்க்கலைன்னு மார்ச்சுவரில சில பேர்

அப்பா கிட்ட சொன்னாங்களாம். பிணம் கிடைக்காததால என்னைக்காவது மகனும் மருமகளும் திடீர்னு வந்து நிப்பாங்கன்னு கிழவி ரொம்ப நாளைக்கு நம்பிகிட்டு இருந்தாளாம்...."

ஆர்த்திக்கு இந்தத் தகவல் சுவாரசியமாக இருந்தது. பஞ்சவர்ணம் அன்று ஆனந்தியின் மரணத்தைப் பற்றியே விரிவாகப் பேசி, சிவகாமி தான் கொன்றிருக்க வேண்டும் என்று பலரும் சொன்னதாகச் சொல்லி சந்தேகத்தைக் கிளப்பியதை எண்ணிப் பார்த்தாள். அத்தனை பேசியவள் அதே சமயத்தில் தன் வீட்டிலேயே இரட்டை மரணம் நிகழ்ந்திருந்தும் கூட வாயைத் திறக்காததன் உள்நோக்கம் என்னவாக இருக்கும் என்று ஆர்த்தி யோசித்தாள். ஒன்றும் புரியவில்லை....

# 83

**அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில் (428)**
– திருக்குறள்

புதன்கிழமை காலை சிவகாமி ஆபிசிற்குக் கிளம்பிய போது சந்திரசேகர் உடன் கிளம்பவில்லை. மகள் இன்று டாக்டரிடம் போகும் நேரத்தில் வழியனுப்ப வீட்டில் இருக்க முடிவு செய்தார். காலையில் இருந்து மகளின் கூடவே இருந்தார். "பயப்படாதே.... எல்லாம் சரியாயிடும்" என்று அடிக்கடி சொன்னார்.

அவள் கிளம்பிய போதும் அதையே சொல்ல 'பதினேழு' என்று ஆர்த்தி எண்ணினாள். அவர் இப்படி தைரியமூட்டுவது இன்று இது பதினேழாவது முறை. உண்மையில் ஆர்த்திக்கு பயமோ, பதட்டமோ அதிகம் இருக்கவில்லை. டாக்டர் ப்ரசன்னாவிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கை அவளுடைய பயத்தை நிறையவே குறைத்திருந்தது. அவளுக்குத் தந்தையின் இந்த தைரியமூட்டல் மனதை நெகிழ வைத்தது. அதே நேரத்தில் 'இத்தனை பாசத்தைக் கொட்டும் அப்பா இத்தனை காலம் ஏன் தன்னைத் தேடக் கூட பெரிதாக முனையவில்லை?' என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது. ஆனால் வாய் விட்டுக் கேட்டு அவர் மனதை அவள் புண்படுத்த விரும்பவில்லை.

நீலகண்டன் அன்னையின் படத்திற்கு மலர்களை வைத்து நிறைய நேரம் பிரார்த்தனை செய்தார். "அன்னையே அன்னையே. என் மகளைக் கொன்றவளை என் பேத்தி மனசுல இருந்து சரியாக அடையாளம் காட்டுங்கள்".

அவள் ஆகாஷுடன் மதியம் காரில் கிளம்பிய போது பஞ்சவர்ணம் தனதறையில் இருந்து அவளைக் கவனித்துக் கொண்டு இருந்தாள். நீலகண்டன், பார்வதி, அமிர்தம், சந்திரசேகர் எல்லாரும் வழியனுப்பியதை ஏளனமாகப் பார்த்தாள். "ஏதோ வெளிநாட்டுக்குப் போகிறவளை அனுப்பறது போல வந்து வழியனுப்பறாங்க சனியன்கள்."

பிறந்த நாள் விழாவில் ஆகாஷ் மீது காதல் குறையவில்லை என்பதை எப்போது ஆர்த்தி காட்டினாளோ அந்தக் கணத்தில் இருந்து ஆர்த்தி பஞ்சவர்ணத்தின் ஆத்திரத்துக்கு ஆளாகி விட்டாள். என்ன தான் பேரனிடம் இதெல்லாம் சகஜம் என்பது போல் பேசினாலும் அவள் உள்ளுக்குள் கொதித்தாள். தன்னுடைய கணிப்பின் படி நடந்து கொள்ளாதவர்களை அவளால் என்றுமே சகிக்க முடிந்ததில்லை. 'முதல்ல என் பேரனை உன் கழுத்துல தாலி கட்ட வைக்கிறேன். பிறகு கவனிச்சுக்கறேன்டி உன்னை" என்று மனதினுள் சொல்லிக் கொண்டாள்.

அவர்கள் கார் கிளம்பியதும் மூர்த்திக்கு ஃபோன் செய்தாள். "ஆர்த்தி கிளம்பிட்டாடா. அந்த அசோக்கிற்கு ஃபோன் போட்டு எதுக்கும் ஞாபகப்படுத்திடு. அவன் மறந்துடப்போறான்"

மூர்த்தியும் ஃபோன் செய்து ஞாபகப்படுத்தினான். அரை நிமிட மௌனத்திற்குப் பின் அசோக் சொன்னான். "இனிமேல் எதையும் நீங்க ரெண்டாவது தடவை சொல்லி தொந்திரவு செய்ய வேண்டாம் மூர்த்தி. நான் பிசியா இருக்கேன்." மூர்த்தியின் பதிலுக்காகக் காத்திராமல் இணைப்பை துண்டித்தும் விட்டான். மூர்த்தி முகம் சிவந்தது. "என்னவோ இவன் பெரிய ஆள் மாதிரியும், நானெல்லாம் தொந்திரவு செய்யற வாண்டுப்பயல் மாதிரியும் நடந்துக்கறான். ஆனாலும் ஒரு மனுசனுக்கு இவ்வளவு கர்வம் ஆகாது".

காரில் சென்று கொண்டிருந்த போது ஆகாஷ் நிறைய நேரம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அதே நேரம் முகத்தில் கடுகடுப்பும் இல்லை. தந்தையின் அன்றைய அறிவுரைக்குப் பின் முகத்தை ஆர்த்திக்காகக் கூட அப்படி வைத்துக் கொள்வதில்லை என்று அவன் தீர்மானித்திருந்தான்.

ஆர்த்தியாகப் பேசினாள். "நீங்க வயலின் வாசிப்பீங்கன்னு எனக்கு ஞாயித்துக் கிழமை வரை தெரியவே இல்லை. நல்லா வாசிக்கிறீங்க. எப்ப இருந்து கத்துக்கறீங்க"

"பத்து வயசுல இருந்து" சொன்னவன் மீண்டும் வாயைத் திறக்கவில்லை. ஆர்த்தி அவனிடமிருந்து தந்தி வார்த்தைகளை வாங்க விருப்பமில்லாமல் தானும் அமைதியானாள். ஆனாலும் அவளுக்கு அவன் நன்றாகப் பேசாததில் பெரிய வருத்தமில்லை. அது அவளுக்கு இப்போதெல்லாம் பழகி விட்டது. அவனுடன் அமர்ந்து பயணிப்பதே சந்தோஷமாக இருந்தது. அவன் உடலில் இருந்து லேசாக வீசிய மஸ்க் செண்ட் வாசனை அவளுக்குப் பிடித்திருந்தது. அந்த மௌனத்திலும் அவனுடைய அருகாமை தந்த நிறைவிலும் கண்களை மூடிக் கொண்டு லயித்தாள்.

நேரம் செல்லச் செல்ல அவனுக்கும் லேசாக அவளுடன் செய்யும் பயணம் ஒருவித ஆனந்தத்தைத் தர ஆரம்பிக்க அவன் எரிச்சலடைந்தான். இவளுக்கு எதாவது வசிய வித்தை தெரியுமோ? கஷ்டப்பட்டு ஆபிசில் செய்ய வேண்டிய வேலைகள் பற்றி சிந்திக்க ஆரம்பித்தான். ஆனால் இடை இடையிடையே மனம் முரண்டு பிடித்தது.

ப்ரசன்னாவின் க்ளினிக்கை அடைந்த போது மாலை ஐந்து மணியாகி இருந்தது. காரை நிறுத்தும் போது பக்கத்தில் ஏதாவது கார் இருக்கிறதா என்று கவனித்தான். அருகில் எந்தக் காரும் இல்லை. இன்று யாரோ தன்னைக் கண்காணிக்கிறார்கள் என்று ஆர்த்தி சந்தேகப்படக் காரணம் இல்லை. ஆர்த்தியும் அருகில் எந்தக் காரும் இல்லை, தனக்கு அந்தக் கண்காணிக்கும் உணர்வும் வரவில்லை என்று நிம்மதியுடன் ஆகாஷைத் தொடர்ந்து கிளினிக்கினுள் நுழைந்தாள்.

உள்ளே ப்ரசன்னாவின் செகரட்டரி ஆகாஷைப் பார்த்து பிரத்தியேகமாய் ஒரு புன்னகை பூத்து ஆர்த்தியை அதிருப்தியடைய வைத்தாள். "ஹலோ ஆகாஷ், ஆர்த்தியோட அப்பாயின்மென்டுக்கு இன்னும் பத்து நிமிஷம் இருக்கு. டாக்டர் அவங்களை அட்டெண்ட் செய்ய டைம் இருக்கிறதால் நீங்கள் ஏதாவது அவர் கிட்ட பேசறதாயிருந்தா இப்ப போய் பேசிக்கலாம்"

ஆகாஷ் ஆர்த்தியைப் பார்க்க அவள் தலையசைத்தாள். ஆகாஷ் உள்ளே செல்ல செகரட்டரியின் எதிரே இருந்த நாற்காலிகளில் ஒன்றில் ஆர்த்தி அமர்ந்தாள். அந்த செகரட்டரி அவளைப் பார்க்க பிரியப்படாதவளாக ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

"ஹலோ ப்ரசன்னா"

"ஹாய் ஆகாஷ், வா உட்கார். அண்ணி வெளியே உட்கார்ந்திருக்காங்களா?"

"அண்ணியா..." ஆகாஷ் புருவத்தைக் கேள்விக்குறியாக்க ப்ரசன்னா சிரித்துக் கொண்டே சொன்னான். "நண்பனின் மனைவியை அண்ணின்னு தான் பெரும்பாலானவங்க கூப்பிடறாங்க"

"முட்டாள்...." என்று ஆகாஷ் ரௌத்திராகாரமாக, ப்ரசன்னா "கூல் டவுன் மேன். சரி மனைவி இல்லை, மனைவியாகப் போறவங்க" என்று சமாதானப்படுத்தினான்.

ஆகாஷ் முறைத்தான். "என்னடா நீ பாட்டுக்கு கற்பனை செய்யறாய்"

"அந்தப் பொண்ணு பார்வையில் ஓப்பனாத் தெரியுது. நீ அடக்கி வாசிக்கிறாய்ன்னாலும் விஷயம் அதே தான். காதல்"

"உன் செக்ரட்டரி கூட என்னை ஒரு மாதிரியாய் தான் பார்க்கிறாள்"

"ஆனா என் செக்ரட்டரி ஆர்த்தி அளவு உன்னப் பாதிக்கலையே"

ஆகாஷ் கண்களை மூடி தன்னை அமைதிப்படுத்திக் கொண்டான். "சரி விஷயத்துக்கு வா. நீ ஏன் என்னை முதல்ல பார்க்கணும்னாய்"

ப்ரசன்னா புன்னகைத்தான். "அது தான் ஆகாஷ். என் செக்ரட்டரி கேஷுவலாய் சொன்னாலும் நான் தான் தனியாய் உன்னை வரச்சொன்னேன்னு புரிஞ்சுகிட்டாய் பார்".

அரை நிமிடம் மௌனம் சாதித்த ப்ரசன்னா அடுத்துப் பேசிய போது பழைய கேலிப்பேச்சின் சுவடே இல்லை. "ஆகாஷ். ஆர்த்தியை ஹிப்னாடைஸ் பண்ணறப்ப எத்தனையோ உண்மைகள் வெளியே தெரிய வரலாம். ஏன்னா அவள் மனதில் எத்தனையோ நிகழ்வுகள் படமாகப் பதிந்திருக்கு. சில செஷன்கள்லயே அதை வெளியே கொண்டு வந்துடலாம்கிற நம்பிக்கை எனக்கிருக்கு. நானாய் அதை அவளைத் தவிர யார் கிட்டயும் சொல்லப் போறதில்லை. உன் கிட்ட கூடத்தான்...."

அது நியாயம் தானே என்பது போல ஆகாஷ் தலையாட்டினான்.

"ஆனால் இதில் ஒரு பெரிய ஆபத்து ஆர்த்திக்கு இருக்கு"

ஆகாஷ் குழப்பத்துடன் ப்ரசன்னாவைப் பார்த்தான். "என்ன?"

"பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு கொலை நடந்திருக்கிற மாதிரி தெரியுது. அது உண்மையாய் இருந்து, அந்தக் கொலையாளி இப்பவும் உங்க வீட்டுல இருந்தால்...."

"....இருந்தால்?"

"உண்மை வெளியே வரப்போகிறதை ரசிப்பாங்கன்னு உனக்குத் தோணுதா?"

ஆகாஷுக்குப் புரிந்தது. ஹிப்னாடிசம் செய்து உண்மை வெளிவரப்போகிறது என்று கொலையாளிக்குத் தெரிந்தாலே ஆர்த்தியின் உயிருக்கு ஆபத்து தான்.... ஆகாஷுக்கு இரத்தம் உறைந்தது. இந்த ஹிப்னாடிச விஷயம் இப்போதே வீட்டில் உள்ள எல்லோருக்கும் தெரியும்.....

ஆகாஷ் வாயடைத்து அமர்ந்திருக்க ப்ரசன்னா சொன்னான். "ஆர்த்தியைப் பாதுகாக்க இனி எல்லா ஏற்பாடும் செய்யுங்க. தனியா எங்கேயும் விடாதீங்க. சரி நேரமாச்சு. போய் ஆர்த்தியை உள்ளே அனுப்பு"

## 84

With you is the key that opens the door to reality; none can offer it for it is yours. Through your own awareness you can open the door; through your own self-awareness only can you read the rich volume of self-knowledge, for in it are the hints and the openings, the hindrances and the blockages that prevent and yet lead to the timeless, to the eternal.

– J.Krishnamurthy

"ஹலோ ஆர்த்தி எப்படி இருக்கீங்க?"

அவளைக் கண்டதில் டாக்டர் ப்ரசன்னா ஆத்மார்த்தமாய் மகிழ்ந்தது போல ஆர்த்திக்குத் தோன்றியது. இது போல ஒவ்வொரு பேஷண்டிடமும் காட்டிக் கொள்வானோ என்றும் சந்தேகம் கூடவே வந்தது. ஆனாலும் அவனுடைய நட்புடன் கூடிய மகிழ்ச்சியைக் காண ஆர்த்திக்கும் சந்தோஷமாக இருந்தது.

"ஃபைன். தேங்க் யூ"

ஆர்த்தியை உள்ளே இருந்த இன்னொரு அறைக்கு ப்ரசன்னா அழைத்துப் போனான். மங்கலான வெளிச்சத்தில் இருந்த அந்த அறையில் ஒரு அழகான சாய்வு நாற்காலியும், டேப் செய்யும் உபகரணங்களும் இருந்தன. சுவரில் தியானத்தில் இருந்த ஒரு பெரிய புத்தர் ஓவியம் தொங்கிக் கொண்டிருந்தது. ப்ரசன்னா ஆர்த்தியை அந்த நாற்காலியில் அமரச் செய்தான்.

"ஆர்த்தி உங்களுக்கு டென்ஷன் எதுவும் இல்லையே"

"பெருசா இல்லை. இருந்தாலும் கொஞ்சம் இருக்கு"

ப்ரசன்னா புரிகிறது என்பது போல் புன்னகைத்தான். "ஆர்த்தி நம்மைச் சுற்றி நடக்கிற எல்லாமே ஆழ்மனசுல பதிவானாலும் நமக்குத் தேவைன்னு நினைக்கிற ஒருசில விஷயங்களை மாத்திரம் ஆழ்மனசு மேல்தள மனசுக்கு அனுப்புகிறது. அது எல்லாத்தையுமே கவனத்துக்குக் கொண்டு வந்தா மனிதன் சிறப்பா இயங்க முடியாதுங்கறது தான் காரணம். உண்மையில் இது ஒரு மிகவும் புத்திசாலித்தனமான மெக்கானிசம். ஆனாலும் அபூர்வமான சில சமயங்கள்ல அது மேல்தள மனசுக்கு அனுப்பாமல் புதைச்சு வைத்திருக்கிற ஒருசில விஷயங்களை நாம் பிற்பாடு முக்கியம்னு உணர்கிறப்ப மறுபடி அந்த ஆழ்மனசுக்குள்ளே போய் அந்தத் தகவல்களைத் தேட வேண்டி இருக்கிறது. இப்ப இந்த ஹிப்னாடிஸ செஷன்ல நாம் அதைத் தான் செய்யப் போறோம். இது ஒரு சிம்பிளான விஷயம். இதுல டென்ஷனுக்கு ஒண்ணுமே இல்லை. புரியுதா?"

ஆர்த்தி தலையசைத்தாள்.

"சரி ஆர்த்தி. ரிலாக்ஸ். மூச்சை நல்லா இழுத்து வெளியே விடுங்க. உள்ளே இருக்கிற டென்ஷனை எல்லாம் அந்த மூச்சுக் காத்துல வெளியே விடற மாதிரி கற்பனை செய்துக்குங்க.... அப்படி மூணு தடவை செய்யுங்க.....ஓகே. இப்ப நீங்க ரிலாக்ஸ் ஆக ஆரம்பிக்கிறீங்க...."

அவன் குரல் மிகவும் மென்மையாக இருந்தது. மயிலிறகாய் அவள் மனதை வருடுகிறது போலிருந்தது.

"என் குரலை மட்டும் கவனமாய் கேளுங்க ஆர்த்தி....நீங்க இப்ப ரிலாக்ஸ் ஆயிட்டு இருக்கீங்க. உங்களோட உடல் ரிலாக்ஸ் ஆகறதை உங்களால் உணர முடியுது....உங்க மனசும் அப்படியே அமைதியடையறதையும் உங்களால் உணர முடியுது....ஆமா, கொஞ்சம் கொஞ்சமா உங்க டென்ஷன், மன இறுக்கம் குறைஞ்சுட்டே போகுது.... நீங்க நல்லாவே ரிலாக்ஸ் ஆயிட்டு இருக்கீங்க. உங்க இமைகள் கனமாயிட்டே வருது.... உங்களுக்கு தூக்கம் தூக்கமா வருது.... கண்களை மூடிக்குங்க.... நீங்க ஆழமான உறக்கத்துக்குப் போய்கிட்டிருக்கீங்க. கவலைப்படவோ பயப்படவோ எதுவுமில்லை.... நிம்மதியாய் நீங்க தூங்க ஆரம்பிக்கிறீங்க....."

ஆர்த்தியை ஹிப்னாடிசம் செய்யத் தேவையான ஆழ்நிலைத் தூக்கத்தில் ஆழ்த்த ப்ரசன்னாவுக்குப் பத்து நிமிடங்களே தேவைப்பட்டன.

"ஆர்த்தி நீ இப்ப மூணு வயசு சின்னக் குழந்தை. நீ உங்க ஊட்டி பங்களா வீட்டில் இருக்கிறாய். நீ உங்கம்மா, அப்பாவோட இருக்கிறாய். உனக்கு அம்மாவை ஞாபகம் இருக்கா ஆர்த்தி"

"உம். இருக்கு" அவள் குரல் ஏதோ தொலைவில் இருந்து கேட்பது போல் இருந்தது. அவள் குரலில் மழலை ஒலித்தது.

"அம்மா பத்தி உனக்கு என்னவெல்லாம் ஞாபகம் இருக்கு ஆர்த்தி?"

"அம்மா நல்லா பாடுவாங்க. 'நீல வண்ணக் கண்ணா வாடா, நீ ஒரு முத்தம் தாடா.....'" ஆர்த்தி மழலைக் குரலில் பாடிக் காட்டினாள். "அம்மா பாடிட்டே கன்னம் காமிப்பாங்க. நான் கிஸ்ச் குடுப்பேன்...." ஆர்த்தி உதட்டைக் குவித்தாள்.

"உங்க வீட்டுல அப்ப யாரெல்லாம் இருந்தாங்க?"

"அம்மா, அப்பா, அண்ணா....."

"யார் அண்ணா?"

"ஆகாஸ்ச்"

"வேற யாரெல்லாம் இருந்தாங்க"

ஆர்த்தி பதில் சொல்லவில்லை. அவளுக்கு வேறு யாரும் நினைவில் இல்லை என்று தோன்றியது. சிவகாமியும், சங்கரனும் அவள் நினைவில் இல்லை.

"அப்பா அம்மா ரெண்டு பேருக்கும் நீ செல்லம் இல்லையா?"

"உம்" அவள் குரலிலும் முகத்திலும் பெருமிதம் தெரிந்தது.

"அவங்களைப் பத்தி உனக்கு என்னவெல்லாம் ஞாபகம் வருது ஆர்த்தி"

ஒரு சிறிய மௌனத்திற்குப் பிறகு ஆர்த்தி சொன்னாள். "அவங்க ரெண்டு பேருக்கும் டீ. பேசிக்க மாட்டாங்க" ஆர்த்தி முகத்தில் வருத்தம் படர்ந்தது.

"ஏன் ஆர்த்தி?"

அவள் முகத்தில் குழப்பம் தெரிந்தது. அவளுக்கு பதில் தெரியவில்லை என்பது தெரிந்தது.

"ஆர்த்தி அப்பவும் அடிக்கடி மழை பெய்யும். சிலப்ப இடி மின்னல் சேர்ந்து பெரிய மழை பெய்யும். ஞாபகம் இருக்கா?"

"ம்" அவள் முகத்தில் கலவரத்தின் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்க ப்ரசன்னா அதைப் பிறகு வைத்துக் கொள்ளத் தீர்மானித்தான்.

"ஆர்த்தி, உங்கம்மா அப்ப எல்லாம் அதிகமா ஃபோன்ல பேசுவாங்களா?"

அந்த இடி மின்னல் மழை சம்பந்தப்பட்ட நினைவு அளவுக்கு இந்த ஃபோன் விஷயம் கலவரத்தை ஏற்படுத்தா விட்டாலும் ஆர்த்தி முகத்தில் சங்கடம் தெரிந்தது.

"பேசுவாங்க..... சில தடவை ஃபோனை எடுக்கவே மாட்டாங்க..... சில தடவை எடுத்து கீழ வச்சுடுவாங்க.."

"ஏன் ஆர்த்தி?"

"அம்மாக்கு ஃபோன் பிடிக்கல..." அதற்கு மேல் அவளுக்கு சொல்லத் தெரியவில்லை போல் தோன்றியது. ஆனால் அந்த நாட்களில் வந்த சில ஃபோன் கால்கள் ஆர்த்தியின் தாய் ஆனந்தியைத் தொந்திரவு செய்வதாக இருந்தது என்பது ப்ரசன்னாவுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

ப்ரசன்னா மெள்ள அந்த ஃபோன் விவகாரத்தை விரிவாக அலசத் தீர்மானித்தான். குறிப்பிட்ட நாள் எதையும் குறிப்பிட்டு சொல்லாமல் பொதுவாக ஆரம்பித்தான். "ஆர்த்தி அப்படி அம்மாவுக்குப் பிடிக்காத மாதிரி ஒரு கால் வருது.... ஃபோன் மணி அடிச்சுகிட்டு இருக்கு. அந்த நாள் உனக்கு ஞாபகம் இருக்கா?"

"ம்"

"போன் மணி அடிச்சுகிட்டே இருக்கு.... அம்மா என்ன செய்யறாங்க"

அந்த நினைவை நிகழ்காலம் போல் கொண்டு வர ப்ரசன்னா முயற்சி செய்தான். சில சமயங்களில் அதை அப்படியே ஹிப்னாடிசத்தில் ஆழ்த்தப்படுபவர்கள் நேரில் காண்பது போல விவரிப்பதும் உண்டு. அவ்வளவு தெளிவாக அது மனதில் பதியாதவர்களிடத்தில் பதில் குழப்பமாகவே வருவதும் உண்டு. ஆனால் அதிர்ஷ்டவசமாக அப்படியொரு நாள் நிகழ்வுகள் ஆர்த்தி மனதில் தெளிவாகப் பதிந்திருந்தன. ஆர்த்தி நேரில் பார்த்துக் கொண்டிருப்பது போல சொன்னாள்.

"மணி அடிச்சுட்டே இருக்கு.. அம்மா பாத்துட்டே இருக்காங்க..."

"ஃபோனை அம்மா எடுக்கலையா?"

"ரொம்ப நேரம் அம்மா எடுக்கல....."

"அப்புறம்....?"

"அம்மா எடுக்கறாங்க.....ஆனா பேச மாட்டேங்கறாங்க....."

"அப்புறம்...?"

"ஃபோனை பேசாமயே பக்கத்தில் வச்சுடறாங்க... ஃபோனைப் பாத்துட்டே இருக்காங்க.... ஃபோன்ல யாரோ சிரிக்கறாங்க..."

"சிரிக்கிறது ஆம்பிளையா பொம்பிளையா?"

"பொம்பிளை தான்....."

"அப்புறம் அம்மா என்ன செய்யறாங்க?"

"ஃபோனைக் கோவமா பாத்துகிட்டே இருக்காங்க....."

"அந்த சிரிக்கற பொம்பிளை யாருன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியல". அப்படிச் சொன்ன போதிலும் அது சம்பந்தமான ஏதோ ஒன்று அவள் மனதில் உள்ளதாக அவள் முகபாவனையில் இருந்து தோன்ற ப்ரசன்னா கேட்டான்.

"அந்த சிரிப்பை அடிக்கடி ஃபோன்ல நீ கேட்டு இருக்கிறாய்... அப்படித்தானே"

"ஆமா"

"அப்புறம்...?"

"ஃபோன்ல மட்டும் இல்ல...."

ப்ரசன்னா கவனமாக அடுத்த கேள்வியைக் கேட்டான். "அந்தச் சிரிப்பை நேர்லயும் கேட்டிருக்கியா?"

"ஆமா".

ப்ரசன்னா ஒரு கணம் பேச்சில்லாமல் அவளையே பார்த்தான்.

# 85

The beginning of wisdom is found in doubting; by doubting we come to the question, and by seeking we may come upon the truth.

– Pierre Abelard

டாக்டர் ப்ரசன்னா கேட்டான். "அந்த சிரிப்பை எங்கே நேர்ல கேட்டாய்?"

"பார்க்ல. நான் அம்மா கூட பார்க் போய் தூரமா வெளாடிட்டு இருந்தேன். அப்ப அந்தப் பொம்பள சிரிச்சது கேட்டுச்சு. திரும்பிப் பாத்தேன்....அம்மா கிட்ட பேசிட்டிருந்தா"

"அம்மா கிட்ட என்ன பேசிட்டு இருந்தா தெரியுமா?"

"எனக்குக் கேக்கல...."

"அப்ப அவள் கூட வேற யாராவது இருந்தாங்களா?"

"இல்ல..."

"உங்க அம்மா கூட அவளைத் தவிர வேற யாராவது இருந்தாங்களா?"

"இல்ல..."

"அந்தப் பொம்பள யாருன்னு தெரியுமா?"

"தெரியில.... ஆனா அவ பேட் கர்ல் [bad girl]...."

"அந்த பேட் கர்ல் பார்க்க எப்படியிருந்தாள்?"

"அவ பேடா இருந்தா"

மூன்று வயதுக் குழந்தைக்கு அதை விட அதிகமாய் வர்ணிக்கத் தெரியாதது இயல்பே என்று ப்ரசன்னா நினைத்தான்.

"அவ உன் அம்மா கிட்ட ரொம்ப நேரம் பேசினாளா...."

"இல்ல. கொஞ்ச நேரம் தான். நான் ஓடிப் போய் அம்மா காலைப் புடிச்சுகிட்டேன். அப்ப அவ சிரிச்சுட்டே போயிட்டா..."

"உங்கம்மா என்ன செஞ்சாங்க?"

"அம்மா தலையில கை வச்சு உக்காந்துட்டாங்க...."

"அந்த பேட் கர்ள நீ மறுபடி எப்பவாவது பாத்தியா?"

ஆர்த்தியிடமிருந்து பதில் உடனே வரவில்லை. ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு ஆர்த்தி சொன்னாள். "ம்...."

"எங்கே"

ஆர்த்தி பதில் சொல்லவில்லை. அவள் முகம் வெளுத்துப் போனது. கண்ணிமைகள் படபடத்தன. மூச்சு சீரில்லாமல் விட ஆரம்பித்தாள். இனி இந்த செஷனில் அதிகம் எதையும் அறிய முடியாது என்று உணர்ந்த ப்ரசன்னா அவளை அமைதிப்படுத்தும் குரலில் சொன்னான்.

"ஓகே. ஆர்த்தி போதும்.... நோ ப்ராப்ளம்..... எல்லாமே ஃபைன்.. ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்... உன் மனம் இப்ப அமைதியா இருக்கு. எந்தக் கவலையும், பயமும் உனக்கு இல்லை. நீ பாதுகாப்பாய் இருக்கிறாய். நான் ஐந்து வரை எண்ணப் போகிறேன். ஐந்து எண்ணி முடிக்கிறப்ப நீ முழிச்சுக்கப் போகிறாய். ரிலாக்ஸா இரு....ஒன்னு....."

சில வினாடிகள் கழித்து சொன்னான். "ரெண்டு..."

ஆர்த்தியின் மூச்சு சீராகியது.

"மூணு"

ஆர்த்தியின் முகம் அமைதிக்குத் திரும்ப ஆரம்பித்தது.

"நாலு"

ஆர்த்தி ஹிப்னாடிச தூக்கத்திலிருந்து விடுபட ஆரம்பித்தது தெரிந்தது.

"அஞ்சு"

ஆர்த்தி விழித்துக் கொண்டாள். தான் இருக்கும் இடம் இன்னது என்று அறிய அவளுக்குச் சிறிது நேரம் தேவைப்பட்டது. ப்ரசன்னாவைப் பார்த்து சிறிது நேரம் விழித்தவள் எல்லாம் நினைவுக்கு வர ஆர்வமாகக் கேட்டாள். "சக்ஸஸ் ஆச்சா. ஏதாவது தெரிஞ்சுதா?"

"சக்ஸஸ் தான் ஆர்த்தி. ஒருசில விஷயங்கள் தெரிஞ்சுது. மீதியை அடுத்த செஷனில் பார்க்கலாம்"

"என்ன தெரிஞ்சுதுன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"அதை மொத்தமா நீங்க கடைசியில் தெரிஞ்சுக்கறது தான் நல்லது ஆர்த்தி" என்று சொன்ன ப்ரசன்னா அந்த டேப்பை ஆஃப் செய்தான்.

★★★★★★★★★★★★

பஞ்சவர்ணத்திற்குக் கண்ணாடியில்லாமல் படிக்கவோ, டிவி பார்க்கவோ முடிவதில்லை. ஆனால் கண்ணாடி இருந்தும் அவள் அதைப் போட்டுக் கொள்வதைப் பெரும்பாலும் தவிர்த்தாள். அது அவள் வயதைக் கூட்டிக் காண்பிக்கும் என்பது அவள் கவலை. ஆனால் ஆர்த்தியின் பிறந்த நாள் வீடியோவை பவானியிடமிருந்து வாங்கியவள் அதைத் தனியாகப் பார்க்கத் தனதறைக் கதவைச்

சாத்திக் கொண்டு கண்ணாடி அணிந்து கொண்டாள். திரையில் ஓடிய நிகழ்ச்சிகளை ஆரம்பத்தில் பெரிய ஆர்வம் இல்லாமல் பார்த்தாள். போகப் போகக் கூர்ந்து பார்த்தாள். முழுவதும் முடிந்த பிறகு மீண்டும் போட்டுப் பார்த்தாள். இரண்டாவது முறை பார்த்த போது அவள் மூளையில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. மீண்டும் மூன்றாவது முறையாகப் போட்டுப் பார்த்தாள். அதை ஆஃப் செய்து விட்டு கண்ணாடியைப் பத்திரமாக உள்ளே வைத்து விட்டு குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள்.

கதவு தட்டப்பட்டது. தட்டும் விதத்தில் இருந்தே மூர்த்தி தான் என்பதை ஊகித்த பஞ்சவர்ணம் கதவைத் திறந்தாள்.

"வாடா. அந்த அசோக் கிட்ட ஞாபகப்படுத்தினாயா?"

அசோக்கின் பெயரைக் கேட்டதும் மூர்த்தி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "நீங்க சொன்னீங்கன்னு சொல்லி நான் அவன் கிட்ட வாங்கிக் கட்டிகிட்டேன். எதையும் ரெண்டாவது தடவை சொல்லி தொந்திரவு செய்ய வேண்டாம்னு மூஞ்சியில் அடிச்ச மாதிரி சொல்லிட்டான்."

பேரன் கோபம் பஞ்சவர்ணத்தைப் பாதிக்கவில்லை. "அறிவு இருக்கிற இடத்துல ஆங்காரம் கண்டிப்பா இருக்கும்டா. அதை விடு. ஆர்த்தியோட பிறந்த நாள் வீடியோவைப் பார்த்தாயா?"

"இல்லை"

"பார்" என்றவள் அவனைப் பார்க்க விட்டு விட்டு தான் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். அவன் பார்த்து முடித்தவுடன் "எப்படிடா இருக்கு?" என்று கேட்டாள்.

"நல்லா தான் இருக்கு?"

பஞ்சவர்ணம் முகம் சுளித்தாள். "வித்தியாசமா எதுவும் தெரியலையா?"

சிறிது யோசித்து விட்டு மூர்த்தி சொன்னான். "ஆர்த்தியையே அதிகம் காமிச்சிருக்கான். அவளுக்கு சரிசமமா அந்தக் கொலைகாரியையும் காமிச்சிருக்கணும். அப்படித் தான் பொதுவா நடக்கும். இந்தத் தடவை அவள் கூட ஆர்த்தி பக்கத்துல வர்றப்ப தான் தெரியறாள். ஆச்சரியமாயிருக்கு"

ஓரளவு உண்மையை நெருங்கி விட்டான் என்று நினைத்த பஞ்சவர்ணம் கேட்டாள். "அப்படி ஏன் எடுத்திருப்பாங்கன்னு ஊகிக்க முடியுதாடா?"

"அந்தக் கொலைகாரி சொல்லி தான் அப்படி எடுத்திருப்பாங்க?"

"சரியா சொன்னாய். அந்தக் கொலைகாரி அப்படி எடுக்கச் சொல்லி இருப்பாள். அதனால் அந்த வீடியோக்காரன் அப்படி எடுத்திருப்பான். ஓகே. அந்த சிவகாமி அப்படி சொல்லி இப்படி வீடியோ எடுக்கக் காரணம் என்னவாய் இருக்கும்னு நினைக்கிறாய்?"

மூர்த்திக்கு சத்தியமாய் காரணம் தெரியவில்லை. பாட்டியும், சிவகாமியும் ஏன் ஒன்றைச் செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமல்ல என்பது அவன் கருத்து. ஆனால் சிவகாமி ஏன் ஒன்றைச் செய்கிறாள் என்பதைப் பாட்டியால் ஊகிக்க முடியும் என்பதால் மூளையைக் கசக்க முற்படாமல் "நீங்களே சொல்லுங்கள்" என்றான்.

"எனக்குத் தோணுது. அவள் ஒரு டூப்ளிகேட் ஆர்த்தியை எங்கேயாவது ரெடி செஞ்சு வச்சிருக்கணும். ஓரளவு சுமாரா பார்க்க ஒரே மாதிரி உடல்வாகு இருந்தால் போதுமேடா. அந்த நேபாளத்துக்கு இப்ப ப்ளாஸ்டிக் சர்ஜரி செஞ்சு முகத்தை மாத்தற மாதிரி அந்தப் பொண்ணோட முகத்தையும் மாத்தறதுக்கு இவளுக்கு என்னடா கஷ்டம். இந்த வீடியோவைப் பார்த்தா ஆர்த்தி எப்படி நிப்பா, பேசுவா, யார் யார் கிட்ட எப்படி நடந்துக்குவான்னு அந்த டூப்ளிகேட் ஆர்த்திக்குக் கத்துக் கொடுக்கத்தான் இப்படி எடுத்துருக்கற மாதிரி தெரியுது....."

பாட்டி நிறைய தமிழ் சினிமா பார்த்து இப்படிக் கற்பனை செய்கிறாள் என்று மூர்த்திக்குத் தோன்றியது. அதை அவன் முகபாவனையில் இருந்தே கண்டுபிடித்த பஞ்சவர்ணம் எரிச்சலுடன் சொன்னாள். "உனக்கு நம்பக் கஷ்டமாயிருந்தா அவள் இப்படி வீடியோ எடுத்ததுக்கு நீயே காரணம் சொல்லு பார்க்கலாம்...."

மூர்த்திக்குக் காரணம் எதுவும் தெரியவில்லை.

"யோசிச்சுப் பாருடா. ஆர்த்தியை ஆரம்பத்தில் இருந்தே தேட சிவகாமி ஆர்வம் காட்டலை...."

மூர்த்தி கேட்டான். "அப்படி ஒரு டூப்ளிகேட் ஆர்த்தியை ரெடி செய்திருந்தால் அவளையே ஆர்த்தியா இந்த வீட்டுக்குக் கூட்டிகிட்டு வந்திருக்கலாமே பாட்டி"

"ஆர்த்தி மாதிரி ஆளை ரெடி பண்ணலாம். ஆனா அந்தக் கிழவன் கிழவியையுமா அப்படி ஒரே நேரத்துல ரெடி செய்ய முடியும். அந்தக் கிழங்களோட வந்தால் தாண்டா அவளை ஒரிஜினல் ஆர்த்தின்னு நம்புவாங்க"

மூர்த்திக்கு அவள் சொல்வதில் உள்ள லாஜிக் புரிய ஆரம்பித்தது.

"அப்படின்னா பாட்டி, இனி அந்தக் கொலைகாரி என்ன செய்வாள்னு நினைக்கிறீங்க"

"ஒரு நாள் ஒரிஜினல் ஆர்த்தியை அப்புறப்படுத்திட்டு அந்த டூப்ளிகேட் ஆர்த்தியை இங்கே வரவழைச்சுடுவான்னு தோணுதுடா. அதனால் தான் இவளை அவள் பெருசா கண்டுக்காம இருக்கிறாள்னு தோணுதுடா"

பாட்டி அதீதமாய் கற்பனை செய்கிறாளா இல்லை நிஜமாகவே சிவகாமி தன் விருப்பப்படி ஆடுகிற ஒரு டூப்ளிகேட் ஆர்த்தியை தயார் செய்து விட்டு தக்க சமயத்தில் ஆள் மாறாட்டம் செய்யக் காத்திருக்கிறாளா என்பதைக் கண்டுபிடிக்க முடியாத மூர்த்திக்குத் தலை சுற்றியது.

## 86

As we know, there are known knowns. There are things we know we know. We also know there are known unknowns. That is to say we know there are some things we do not know. But there are also unknown unknowns, the ones we don't know we don't know.

- Donald Rumsfeld

ஆகாஷ் பெரும் குழப்பத்தில் இருந்தான். ப்ரசன்னா சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவன் மனதில் அலை மோதின. "பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு கொலை நடந்திருக்கிற மாதிரி தெரியுது. அது உண்மையாய் இருந்து, அந்தக் கொலையாளி இப்பவும் உங்க வீட்டுல இருந்தால்...." "ஆர்த்தியைப் பாதுகாக்க இனி எல்லா ஏற்பாடும் செய்யுங்க. தனியா எங்கேயும் விடாதீங்க....."

ஊட்டிக்குத் திரும்பும் போதும் ஒரு வார்த்தை கூட பேசாமல் அவளை அலட்சியம் செய்தாலும் அன்று இரவு அவனால் சரியாக உறங்க முடியவில்லை. ஆர்த்தியின் அறையில் சின்ன சத்தம் கேட்டாலும் போய் அவள் பத்திரமாக இருக்கிறாளா என்று அவளுக்குத் தெரியாமல் எட்டிப் பார்த்தான். அப்படி மூன்றாவது முறை எட்டிப்பார்க்கையில் மூர்த்தி பின்னால் இருந்து பார்ப்பதைக் கவனித்தான். மணியைப் பார்த்தான். மணி இரவு பன்னிரண்டரை. இந்த நேரத்தில் கூட வேவு பார்ப்பவன் எப்போது தான் உறங்குவானோ என்று ஆகாஷ் ஆச்சரியப்பட்டான்.

அன்றைய இரவெல்லாம் ஒரு கேள்வியே அவன் மனதில் பெரிதாகத் தங்கி நின்றது. "நிஜமாகவே 18 வருடங்களுக்கு முன் கொலை நடந்திருக்குமா? ஆர்த்தி அதை அப்போது நேரில் பார்த்திருப்பாளா?" ஆர்த்தியிடம் அந்த பஞ்சவர்ணக் கிழவி சொல்லியது போல் தன் தாய் கொலை செய்திருப்பாள் என்ற சந்தேகமே அவனுக்கு அபத்தமாகப் பட்டது. அப்படி வேறு யாராவது கொலை செய்திருந்தால் கூடத் தன் தாய் அந்தக் கொலை செய்தவர்களை சும்மா விட்டிருக்க மாட்டாள் என்பதில் அவனுக்கு சந்தேகமில்லை.

ஆனாலும் ப்ரசன்னா சொன்னதை அவனால் ஒதுக்கி விட முடியவில்லை. ஒருவேளை அவளுக்கு ஏதாவது ஆகி விட்டால் தன்னைத் தானே மன்னிக்க முடியாது என்று தோன்ற கடைசியில் தாயிடமும், மாமாவிடமும் ப்ரசன்னா சொன்னதைச் சொல்வது தான் நல்லது என்ற முடிவுக்கு வந்தான். எத்தனையோ சிக்கலான, ஆபத்தான சூழ்நிலைகளிலும் தாயின் அறிவுகூர்மை வேலை செய்து சமாளித்ததை அவன் கண்கூடாகப் பார்த்திருக்கிறான். அவளுக்கு இதை எப்படி சமாளிப்பது என்று தெரியும் என்று அவனுக்குத் தோன்றியது. அதே சமயத்தில் ஆர்த்தியின் தந்தை என்ற நிலையில் மாமா காதிலும் இந்தத் தகவலைப் போடுவது சரியென்று அவனுக்குப் பட்டது.

மறுநாள் காலை அவன் தாயின் அறைக்குள் நுழைந்த போது சந்திரசேகரும் அங்கிருந்தார். நேற்றும் ஆர்த்தி வரும் வரை காத்திருந்து அவள் தெளிவாக இருந்ததைப் பார்த்து சமாதானமான பின் தான் உறங்கப் போனார். இன்று காலையில் ஆகாஷிடம் டாக்டர் என்ன சொன்னார் என்று கேள் என்று அவர் தமக்கையிடம் சொல்லிக் கொண்டிருந்த போது தான் ஆகாஷ் அங்கு வந்தான்.

தம்பி கேட்டுக் கொண்டதற்காகவோ, இல்லை தானே அறிந்து கொள்ளும் ஆவலிலோ சிவகாமி ஆகாஷிடம் கேட்டாள். "வா ஆகாஷ். நேத்து ப்ரசன்னா என்ன சொன்னான்?"

"பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் இந்த வீட்டில் கொலை ஒன்னு நடந்திருக்கலாம்னும், அதுக்கு ஆர்த்தி விட்னஸாய் இருந்திருக்கலாம்னும் அவன் நினைக்கிறான். அப்படி ஒரு வேலை கொலை செய்தவங்க இப்பவும் இருந்து அவங்களுக்கு ஆர்த்திக்கு ஹிப்னாடைஸ் செய்யற தகவலும் தெரிஞ்சுதுன்னா அது ஆர்த்தி உயிருக்கு ஆபத்தாய் முடியலாம்னும் சொன்னான்....."

அங்கு அடுத்த நிமிடம் ஒரு அசாதாரணமான அமைதி நிலவியது. சந்திரசேகர் முகம் வெளிறியது. ஆனால் சிவகாமி முகத்திலோ சலனமே இல்லை. மகனையே கூர்ந்து பார்த்த அவள் பிறகு நிதானமாகச் சொன்னாள். "சுத்த முட்டாள்தனம். ஆர்த்தி எதைப் பார்த்தாள்னு எனக்குத் தெரியாது. ஆனா இங்கே கொலை எதுவும் நடக்கலை. இப்ப ஆர்த்தி உயிருக்கு ஆபத்துன்னு சொல்றது அபத்தமாயிருக்கு..."

"அம்மா நீ ப்ரசன்னா முட்டாள்னு நினைக்கிறியா?"

"இல்லை. ஆனா அவனோட இந்த அப்சர்வேஷன் முட்டாள்தனம்னு நினைக்கிறேன்"

ஆணித்தரமாக வந்தது பதில். இனியும் முழுதாக மறைப்பதில் அர்த்தமில்லை என்று நினைத்த ஆகாஷ் மெள்ள சொன்னான். "ஆர்த்தியோட அம்மா கொலை செய்யப்பட்டு இருக்கலாம்னு ஆர்த்தியோட தாத்தா கூட நினைக்கிற மாதிரி தெரியுதும்மா"

சிவகாமி அவன் சொன்னதைக் கேட்டு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ காட்டவில்லை. கேட்டு கண்களைக் கூட இமைக்காமல் தெளிவாகச் சொன்னாள். "மகள் மேல் வச்சிருக்கிற பாசம் அவரை அப்படி நினைக்க வச்சிருக்கு ஆகாஷ். ஆனந்தியோட முகத்தில் பாதி டேமேஜ் ஆயிருந்ததால நான் அவர் கேட்டுகிட்டும் முகத்தைத் திறந்து காமிக்கல. அதனால் அவர் அப்படி நினைச்சதையும் தப்பு சொல்ல முடியாது. அதனால் தான் பேத்தி உயிருக்கும் ஆபத்துன்னு நினைச்சு அவளைத் தூக்கிட்டு ஓடுனார்னு நினைக்கறேன். ஆனால் அப்படி இங்கே ஆனந்தியை யாரும் கொலை செய்யலங்கறது தான் உண்மை...."

ஆகாஷ் தாயையே பார்த்தான். கொலையே நீங்கள் தான் செய்திருக்கலாம் என்ற சந்தேகமும் இருக்கிறது என்று அவனால் சொல்ல முடியவில்லை. மாமாவைப் பார்த்தான். சந்திரசேகர் மருமகனுக்கு முகத்தைக் காண்பிக்காமல் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டு ஆகாஷுக்கு முதுகைக் காண்பித்து நின்றார்.

ஆகாஷ் மறுபடி தயக்கத்துடன் தாயைக் கேட்டான். "அப்படின்னா ஆர்த்தி உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லைன்னு சொல்றீங்களாம்மா?"

சிவகாமி உறுதியாகச் சொன்னாள். "ஆபத்து இப்பவும் அவளுக்கு இல்லை. நான் இருக்கிற வரைக்கும் ஆர்த்திக்கு இனிமேலும் எந்த ஆபத்தும் வராது."

ஆகாஷ் மனதிலிருந்த மலை இறக்கி வைக்கப்பட்டது போல் உணர்ந்தான். அவள் சொன்னால் அது கடவுள் சொன்ன மாதிரி. இனி ஆர்த்திக்கு ஆபத்தில்லை.

சிவகாமி கேட்டாள். "நேற்றோட செஷன்லயே எல்லாம் முடிஞ்சுதா? இல்லை இனியும் இருக்கா?"

"இன்னும் மூணு அல்லது நாலு செஷனாவது தேவைப்படும்னு ப்ரசன்னா சொல்றான். அடுத்ததாய் திங்கள் வரச் சொல்லியிருக்கான்"

★★★★★★★★★★★★★★★★★

பவானிக்குப் படித்துக் கொண்டிருந்த ஆங்கில நாவல் போரடித்தது. அதைக் கீழே வைத்து சோம்பல் முறித்தவள் ஆர்த்தியைச் சென்று பார்த்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கலாமா என்று நினைத்தாள். ஆனால் அவள் லிஸாவுடன் பேசியபடியே தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தது அறை ஜன்னல் வழியே தெரிந்தது. வெளியே வராந்தாவிற்குப் போனால் பஞ்சவர்ணம் கண்ணில் படும் அபாயம் இருக்கிறது. அப்படி பட்டால் அவள் அழைத்து, கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லி மாளாது.

டிவி ரிமோட்டை எடுத்து டிவியை ஆன் செய்தாள். சன் டிவியில் ஒரு இளைஞன் சொல்லிக் கொண்டிருந்தான். ".....இப்போது நாம் மகாபலிபுரத்தில் இருக்கிறோம். பல்லவ சிற்பிகளின் கைவண்ணம் நம்மை மயக்குகிற இந்த இடத்தில் வந்திருக்கிற இந்த சுற்றுலாப் பயணிகளை சந்திப்போமா?" அவன் அருகிலிருந்த ஒரு குடும்பத்தினரைப் பார்த்து கேட்டான். "நீங்க மகாபலிபுரத்துக்கு வருவது இது தான் முதல் தடவையா?" காமிரா அந்தக் குடும்பத்தை ஃபோகஸ் செய்தது. கணவன், மனைவி, ஒரு டீன் ஏஜ் மகள் மூவரும் காமிராவுக்காகப் புன்னகைக்க பவானி அதிர்ச்சியில் சிலையானாள். அவளுக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடி பார்த்தாள். கண்கள் ஏமாற்றவில்லை. மூச்சு விட மறந்து அவர்களை வெறித்துப் பார்த்தாள். சிறிது நேரம் அவர்கள் பேசியது எதுவும் அவள் காதில் விழவில்லை.....

அவள் தன்னை சுதாரித்துக் கொண்டு கவனித்த போது நிகழ்ச்சியில் அறிவிப்பாளன் அவர்களைப் பார்த்து கேட்டான். "உங்க சொந்த ஊர் எது". அந்த டீன் ஏஜ் மகள் மைக்கை வாங்கிக் கொண்டு சொன்னாள். "நாங்க சென்னைக் காரங்க..."

தீராத அதிர்ச்சியில் அந்த நிகழ்ச்சியையே பார்த்துக் கொண்டிருந்த பவானி கடைசியில் அவர்கள் விரும்பிய பாடலை சன் டிவி ஒலிபரப்ப ஆரம்பித்த போது டிவியை ஆஃப் செய்தாள்.

உயிரற்ற சிலை போல் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். கண்டதை உண்மை என்று நம்ப அவளால் இப்போதும் முடியவில்லை....

பேயறைந்தது போல் பவானி உட்கார்ந்திருந்ததை ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த மூர்த்திக்கு ஏதோ ஒரு விபரீதம் நடந்துள்ளது என்பதை மட்டும் உணர முடிந்தது

# 87

என்னுடைய துயரங்கள் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் ஒன்றும் அதில் பங்கு பெற வேண்டாம். நீங்கள் கொடுத்ததிலேயே பங்கு பெறுவது எதற்காக?
– கண்ணதாசன்

"அத்தை"

மூர்த்தி அழைத்தது வெகு தொலைவில் இருந்து யாரோ அழைப்பது போல் பவானிக்குத் தோன்றியது. பேந்தப் பேந்த முழித்தாள். மூன்று முறை ஜன்னல் வழியாக மூர்த்தி அழைத்த பிறகு தான் பவானி அவனைப் பார்த்தாள்.

"என்னாச்சு அத்தை"

"ஒண்ணுமில்லை. ஏன்...ஏன் கேட்கிறாய்" எப்படியோ தன்னை சமாளித்துக் கொண்டு அவள் கேட்டாள்.

"என்னவோ மாதிரி இருக்கீங்க. என்னாச்சு"

"நான் என்னவோ மாதிரி ஆகி பல வருஷங்களாச்சு. இப்ப என்ன கேள்வி?" சென்று அறை வாசற்கதவைத் திறக்காமலேயே கேட்டாள்.

அவள் எதையோ மறைக்கிறாள் என்பது தெரிந்தது. ஆனால் எதை மறைக்கிறாள், ஏன் பேயறைந்தது போல் இருக்கிறாள் என்பதை எல்லாம் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜன்னல் வழியாகவே அவளைச் சுற்றிலும் பார்த்தான். வெறும் டிவி ரிமோட், ஒரு ஆங்கில நாவல் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்ள பஞ்சவர்ணம் தான் சரி என்று முடிவெடுத்த மூர்த்தி தானாகச் சொன்னான்.

"பாட்டி உங்களைக் கூப்பிடறாங்க"

"எனக்கு ஓரே தலைவலின்னு போய் சொல்லு. அப்புறமா வந்து பார்க்கறேன்"

எப்போதும் கூப்பிட்டவுடன் நாய்க்குட்டியாக ஓடிச் சென்று தாயிடம் நிற்கும் பவானி அலட்சியமாய் சொன்ன விதம் மூர்த்தியைத் திகைக்க வைத்தது. அதுவும் ஏனோ கதவைக் கூடத் திறக்க மறுக்கிறாள்.

மூர்த்தியிடம் சொல்லி விட்டுத் திரும்பிய பவானி அடுத்த கணம் அவனை மறந்தே போனாள். டிவியில் பார்த்த காட்சி மனதில் மறு ஒளிபரப்பாக ஆரம்பித்தது. அன்று வேலைக்காரி விஜயா கோயிலில் உயிர்த்தெழுந்து அமிர்தம் கண்ணில் பட்டாள். இன்று டிவியில் இன்னொரு எழுந்தருளல். என்ன தான் நடக்கிறது என்ற கேள்வி எழுந்தது. நிறைய நேரம் அவள் யோசித்தாள். எத்தனையோ வருடங்களுக்கு முன் ஏற்பட்டிருந்த ஒரு ஊமைக்காயத்தில் இன்று பலமாய் வலித்தது. தான் இத்தனை ஆண்டுகளாய் ஏமாற்றப்பட்டிருப்பதை பவானி உணர்ந்தாள்.... அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. நிறைய நேரம் வாய் விட்டு அழுதாள். பிறகு மனம் சிறிது சமாதானமடைய ஆரம்பித்தது.

அறிந்த உண்மையை அம்மாவிடம் சொன்னால் என்ன என்று ஒரு கணம் தோன்றியது. மறு கணமே மனம் அதற்கு எதிராக ஓட்டுப்போட்டது. இத்தனை பிரச்சினைகளுக்கும் மூல காரணம் அவளே என்பதால் அவளிடம் சொல்வது மேலும் பல பிரச்சினைகளுக்கு வழி வகுக்கும் என்று அறிவு எச்சரித்தது.

ஆனாலும் பஞ்சவர்ணம் பிணக்கிடங்கில் அழுகிய பிணங்களை புரட்டிப் பார்த்து விட்டு வந்ததையும் என்றேனும் ஒரு நாள் மகனும் மருமகளும் நேரில் வந்து நிற்பார்கள் என்று நம்பியதையும் எண்ணிப்பார்க்கையில் அவளுக்குத் தன் தாயின் அன்றைய நியாயமான சந்தேகத்தை மெச்சாமல் இருக்க முடியவில்லை.

நடந்தவை என்ன, அதில் இவர்கள் எல்லாம் தலை மறைவாகக் காரணம் என்ன, இதில் சிவகாமிக்குப் பங்கு உள்ளதா, இருந்தால் அவள் பங்கு என்ன என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. நிறைய யோசித்த பவானி கடைசியில் நேராக சென்னை செல்வது என்று தீர்மானித்தாள்.

டிவியில் அந்தப் பெண் தான் படிக்கும் கல்லூரியின் பெயரையும் படிக்கும் பட்டத்தின் பெயரையும் சொல்லி இருந்தாள். அந்தப் பெண் மூலமாக அவர்கள் வீட்டைக் கண்டு பிடிப்பது ஒன்றும் கஷ்டமில்லை. ....

முடிவுக்கு வந்த பவானி ஒரு தீர்மானத்துடன் எழுந்தாள். அப்போது தான் மூர்த்தி நினைவு வந்தது. அவள் ஜன்னல் பக்கம் பார்க்க மின்னல் வேகத்தில் மூர்த்தி தன் தலையைத் தாழ்த்திக் கொண்டான். பவானி எழுந்து வந்து கதவைத் திறந்து பார்க்க முற்பட, கதவின் தாழ் திறக்கப்படும் சத்தம் கேட்ட மூர்த்தி அந்த இடத்தை உடனடியாகக் காலி செய்ய வேண்டி வந்தது.

பவானி சில நிமிடங்கள் வராந்தாவில் நின்றாள். பிறகு அறைக்குள் நுழைந்தவள் டிராவல்ஸிற்கு போன் செய்து சென்னைக்கு விமானத்தில் என்று டிக்கெட் உள்ளது என விசாரிக்க ஆரம்பித்தாள்.

அதே சமயம் பஞ்சவர்ணம் பேரனைக் கேள்விகளால் குடைந்தெடுத்துக் கொண்டிருந்தாள். "கடைசியா யார் கிட்ட பேசுனா, யாரைப் பார்த்தான்னு தெரியுமாடா?"

"தெரியல பாட்டி. பக்கத்துல ஒரு நாவலும், டிவி ரிமோட்டும் இருந்துச்சு. போரடிக்கிற நாவலைப் படிச்சோ, மெகா சீரியல் ஏதாவது ஒன்னைப் பார்த்தோ அத்தை அப்படி ஆயிருக்கலாமோ என்னவோ?"

பேரன் நகைச்சுவையை பஞ்சவர்ணம் ரசித்தது போல் தெரியவில்லை. தான் கூப்பிடுவதாகச் சொல்லியும் வராததும், வாய் விட்டு அவள் நிறைய நேரம் அழுததும், மூர்த்தி இருக்கிறானா என்று உறுதிப்படுத்திக் கொள்ள வராந்தாவில் வந்து நின்றதும் மகளின் நடவடிக்கையில் பெரியதோர் மாற்றத்தை அவளுக்கு அறிவித்தன.

பாட்டி யோசிப்பதைப் பார்த்த மூர்த்தி சொன்னான். "இன்னொரு தடவை நீங்கள் கூப்புடறதா சொல்லட்டுமா? இல்லை நீங்களே அத்தையைப் போய்ப் பார்க்கிறீங்களா?"

"அவள் சொல்ல வேண்டாம்னு தீர்மானிச்சுட்டாடா. இனி நான் கேட்டாலும் சொல்ல மாட்டா. இப்படி சில தடவை அவள் பிடிவாதமா இருந்துடறதும் உண்டு. ஆனா அந்த மாதிரி நேரங்கள்ல அவளோட அண்ணன் கூட இருந்தான்...."

"அப்பாவும் அத்தையும் ரொம்ப பாசமா இருந்தாங்களா பாட்டி....."

அப்போது தான் அவன் சொன்ன உறவுமுறை உறைத்தது போல நாக்கைக் கடித்துக் கொண்ட பஞ்சவர்ணம் அவசரமாக பேச்சை மாற்றினாள். "நீ போகிற வரைக்கும் காத்திருந்துட்டு உள்ளே போனான்னா அவள் யார் கிட்டயாவது போன் பேசவோ, முக்கியமான எதையோ படிக்கவோ போயிருக்கணும்னு தோணுது. உனக்குத் தெரிய வேண்டாம்னு நினைக்கிறாள்னா அதில் ஏதோ ஒரு மர்மம் இருக்குதுடா மூர்த்தி..."

★★★★★★★★★★

"ஆர்த்தி, நான் நாளைக்கு ஈரோடு போகலாம்னு இருக்கேன். வந்து நாளாயிடுச்சு. அவருக்கு ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கறதுமில்லை. மூனு தடவை போன் செய்துட்டார்"

லிஸா சொன்ன போது ஆர்த்தி லேசான சோகத்தோடு தலையசைத்தாள். இந்த சில நாட்களில் அவள் லிஸாவிடம் நிறையவே நெருங்கி விட்டிருந்தாள். கலகலப்பான சுபாவம், வெளிப்படையான பேச்சு, எதையும் சீக்கிரமாகவே புரிந்து கொள்ளும் சுட்டித்தனம் எல்லாம் லிஸாவிடம் அவளுக்கு நிறையவே பிடித்திருந்தன.

ஆர்த்தி முகத்தில் படிந்த அந்த சோகத்தால் உருகிப் போன லிஸா அவளைக் கட்டிக் கொண்டு சொன்னாள். "எனக்கும் கஷ்டமாய் தான் இருக்கு ஆர்த்தி. ஆனா என்ன செய்யறது?"

தோழிகள் இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். பிறகு லிஸாவாக மௌனத்தைக் கலைத்தாள். "ஆர்த்தி, ஒரு உண்மையை உன் கிட்ட நான் இது வரை சொன்னதில்லை.... நட்புல எதையும் மறைக்கிற அவசியமில்லைன்னு உறுதியா நம்பறவ நான்.... இத்தனை நாளாய் ஊட்டிக்கு

வராததுக்கான காரணம் நீ அன்றைக்குக் கேட்டாய். காரணம் இங்கே வந்தா சில நினைவுகள் என்னைக் கஷ்டப்படுத்தும்கிறது தான்...."

ஆர்த்தி மனம் படபடக்க லிஸாவைப் பார்த்தாள். லிஸா தொடர்ந்தாள். "...நானும் ஆகாஷும் சின்னதில் இருந்தே நல்ல நண்பர்களாய் இருந்தோம். ஒரு கால கட்டத்தில் என்னையும் அறியாமல் நட்பு காதலாய் என் மனதில் அரும்பிடுச்சு. அவன் அழகு, புத்திசாலித்தனம் எல்லாமே அவன் மேல் என்னைப் பைத்தியமாக்கிடுச்சுன்னே சொல்லலாம்....ஒரு நாள் நான் அவன் கிட்ட காதலைத் தெரிவிச்ச போது அவன் நட்பை நட்பாகவே தான் வைத்திருந்தான்னு தெரிஞ்சுது. அவன் ரொம்ப இதமாய் மென்மையாய் அதைச் சொன்னான். தப்பாக நினைக்கிற மாதிரி தனக்கே தெரியாமல் அவன் நடந்திருந்தால் மன்னிக்கச் சொன்னான்....." சொல்லச் சொல்ல அவள் குரல் உடைந்தது.

ஆர்த்திக்கு அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் அவள் கையைப் பிடித்துக் கொண்டாள். லிஸா தன்னை உறுதிப்படுத்திக் கொண்டு தொடர்ந்தாள். "நல்லா யோசிச்சுப் பார்த்தப்ப அவன் என் கிட்ட அந்த மாதிரி பழகலைங்கறது எனக்கும் புரிஞ்சுது. காதலை இழந்தவள் நட்பையும் களங்கப்படுத்திட்ட மாதிரி தோணல்.....ஆனா உலகத்திலேயே ரொம்ப துக்கமான விஷயம், அவமானமான விஷயம் என்ன தெரியுமா ஆர்த்தி. காதல் மறுக்கப்படறது தான்....மூணு நாள் வீட்டுல உட்கார்ந்து நல்லா அழுதேன். மூணு மாசம் ஒரு ஜடம் மாதிரி இருந்தேன். நான் அவன் சொன்னதுக்கு ரியாக்ட் செஞ்ச விதம் அவனையும் ரொம்பக் கஷ்டப்படுத்திடுச்சுன்னு நினைக்கிறேன். அப்புறமா ரெண்டு வார்த்தைக்கு மேல் பேசிக்க எங்க ரெண்டு பேராலயும் முடியலை. கடைசியில் அப்பா அம்மா பார்த்து தேர்ந்தெடுத்த பையனைக் கல்யாணம் செய்துக்க சம்மதிச்சேன்...கல்யாணமாகி போனவளுக்கு இங்கே திரும்பி வந்து ஆகாஷைப் பார்க்க ஒரு கூச்சம் இருந்தது.....அதனால தான் வரலை"

ஒளிவு மறைவில்லாமல் அவள் சொன்ன விதம் ஆர்த்தி மனதை உருக்கியது. "சாரி....லிஸா" என்றாள். அவளையும் அறியாமல் மூர்த்தி லிஸாவையும் ஆகாஷையும் பற்றிச் சொன்னதை எண்ணிப் பார்த்தாள். அவனும் பொய் சொல்கிறவனாய் தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் நட்புடன் இயல்பாய் இருந்த தருணங்கள் அவன் பார்வைக்கு விகற்பமாய் தோன்றியிருக்கலாம்.....

ஆர்த்தியின் கண்களில் லேசாய் திரையிட்ட கண்ணீரைப் பார்த்த லிஸா அவளைக் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள். "ஸோ ஸ்வீட். நீ ஒரு குழந்தை மாதிரி ஆர்த்தி. உன் ஸ்பெஷாலிட்டி உன் அழகல்ல. உன்னோட இந்த கள்ளங்கபடமில்லாத மனசு. இது தான் ஆகாஷை நிறைய கவர்ந்துடுச்சுன்னு நினைக்கிறேன். உண்மையா சொல்லணும்னா உன் பர்த் டே பார்ட்டிக்கு வர்ற வரைக்கும் கூட எனக்கு ஆகாஷ் என்னை மறுத்ததில் கொஞ்ச வருத்தம் மனசுல தங்கி இருந்ததுன்னு சொல்லலாம். ஆனா பர்த் டேயில் உன்னை அவன் பார்த்துட்டு நின்ன விதத்தைப் பார்த்தப்ப மனசுல பட்சி சொல்லிச்சு "டீ இது தாண்டி காதல்னு". அப்படியொரு பார்வை அவன் எப்பவுமே என்னைப் பார்த்ததாய் எனக்கு ஞாபகம் இல்லை. வேறு யாரையும் பார்த்ததாயும் எனக்கு ஞாபகம் இல்லை...."

ஆர்த்தியின் கண்களில் இப்போது வேறு காரணத்திற்காக நீர் கோர்த்தது. "நீ நினைக்கிற மாதிரி இல்லை. லிஸா. உண்மையில் அவர் என்னை வெறுக்கிறார்..."

"முட்டாள். உன்னை அவன் ஏன் வெறுக்கணும்?"

"எங்கம்மாவைக் கொன்னது அவங்கம்மாவாய் இருக்கலாம்னு நான் சந்தேகப்பட்டதால் தான்"

லிஸா அதிர்ந்து போய் அவளைப் பார்த்தாள். "என்னது....?"

# 88

False face must hide what the false heart doth know.
– William Shakespeare

ஆர்த்தி சிறிது தயங்கி விட்டு ஆரம்பத்தில் இருந்து லிஸாவிடம் சொன்னாள். சிறு வயதில் இருந்து தனக்கு வந்த கனவுகள், தந்தை உயிருடன் இருக்கிறார் என்றே அறியாமல் வளர்ந்த விதம், கல்லூரி ஆண்டுவிழாவில் சிவகாமி வந்தது, சிவகாமியின் கம்பீரத்தால் தான் கவரப்பட்டது, அன்று தன்னையே கூர்ந்து பார்த்து அமர்ந்திருந்தும் தன்னைத் தெரிந்தவளாக சிவகாமி காட்டிக் கொள்ளாதது, பின் பாட்டி மூலம் தெரிந்த உண்மைகள், தாத்தாவின் சந்தேகம், அவருடைய மாரடைப்பு, ஆகாஷ் அங்கு வந்து உதவியது, அவள் மனதில் அவன் இடம் பிடித்த விதம், இங்கு வந்த பின் பஞ்சவர்ணம் அழைத்து சொன்ன சந்தேகங்கள், மூர்த்தி ஆகாஷிடம் தாங்க முடியாமல் சொன்னது, ஆகாஷ் தன்னை வந்து "என் தாயைச் சந்தேகிக்கிறாயா?" என்று கேட்டது, கோபப்பட்டுப் பிரிந்தது என எல்லாவற்றையும் ஒளிக்காமல் சொன்னாள். தாயின் காணாமல் போன இரண்டு வருட டைரிகள், கிடைத்ததில் தாயின் டைரியில் காணாமல் போன பக்கங்கள், வக்கீல் தேசிகாச்சாரி வந்து தன்னிடம் சொல்லிய விஷயங்கள் பற்றியும் சொன்னாள். அவளிடம் தன் மனதில் இருந்ததை எல்லாம் இறக்கி வைத்த பின் அவள் மனம் லேசாகியது.

லிஸா ஒரு சுவாரசியமான கதையைக் கேட்பது போல் எல்லாவற்றையும் கேட்டாள். ஆர்த்தி சொல்லி முடித்த பின்னும் சில நிமிடங்கள் அவள் ஒன்றும் பேசவில்லை. பின் தனக்குத் தோன்றியதைச் சொன்னாள்.

"ஆர்த்தி, சிவகாமி ஆன்ட்டி உன்னை காலேஜ் டேயில் பார்த்துட்டு ஏன் அப்பவே உன்னை கூட்டிகிட்டு வரலைங்கறது எனக்குப் புரியலை. ஒரு வேளை உன்னை ஒதுக்கறது தான் அவங்களோட எண்ணம்னா, நீ போன் செய்தப்ப உன்னை யாருன்னே தெரியாதுன்னோ, நீ அவங்க மருமகள்னு நம்பலைன்னோ கூட சொல்லி இருக்கலாம். ஆனா உடனடியா ஆகாஷை அங்கே அனுப்பினது, உன்னையும் உங்க பாட்டி தாத்தாவையும் இங்கே வரவழைச்சது எல்லாம் பார்த்தா அவங்க எண்ணம் உன்னை ஒதுக்கணும்கற மாதிரி தெரியலை...."

"அதே தான் என்னையும் குழப்புது லிஸா"

"ஆர்த்தி அவங்க மனசுல என்ன ஓடுதுன்னு யாராலயும் புரிஞ்சுக்க முடியாது. அவங்க எப்பவுமே ஒரு புதிர் தான். ஆனாலும் அவங்க ஒரு கொலை செய்வாங்கன்னு எனக்குத் தோணல ஆர்த்தி. அவங்க உங்கம்மா பிணத்தை உங்க தாத்தா பாட்டிக்குக் காண்பிக்காம எரிச்சுட்டாங்கன்னா நிஜமாவே அந்தப் பிணம் அழுகினது தான் காரணமாயிருக்கலாம். இல்லைன்னா...ஒருவேளை...." என்று யோசித்தவள் பின் தனக்குத் தோன்றியதைச் சொல்லாமல் தயக்கத்துடன் ஆர்த்தியைப் பார்த்தாள்.

"சொல்லு லிஸா"

"ஒருவேளை அவங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க யாராவது உங்கம்மாவைக் கொன்னுருந்தா கொன்னவங்களைக் காட்டிக் கொடுக்க அவங்க விரும்பாம இருக்கலாம். அவங்க எப்பவுமே தன் குடும்பத்தவங்க, தன்னை நம்பி இருக்கிறவங்களக் காப்பாத்த என்ன வேணும்னா செய்யக் கூடிய ரகம் தான்.... ஆனது ஆயிடுச்சு. காட்டிக் கொடுத்து தண்டனை வாங்கிக் கொடுக்கறதால போனவங்க உயிர் திரும்ப வருமான்னு கூட நினைச்சிருக்கலாம்"

ஆர்த்தி அவளிடம் அவங்களுக்கு ரொம்ப வேண்டியவங்கன்னா யாருன்னு கேட்க நினைத்தாலும் கேட்கவில்லை. அப்பாவைச் சொல்லி விடுவாளோ என்ற சந்தேகம் வர அமைதியாக இருந்தாள்.

லிஸாவும் அவள் அப்படிக் கேட்டு விடுவாளோ என்று பயந்தது போல அவசரமாகப் பேச்சை மாற்றினாள். "ஆர்த்தி அந்த சூனியக்கிழவி சொன்னதை எல்லாம் நம்பாதே. அவள் நல்லவள் இல்லை. சிவகாமி ஆன்ட்டி இருக்கிறதால் தான் அவள் அடங்கிக் கிடக்கிறா.... அந்த மூர்த்தியும் யதார்த்தமாய் தான் ஆகாஷ் கிட்ட சொன்னான்னு நினைக்காதே. அந்தக் கிழவி கையில வளர்ந்தவன் அவன். அவனுக்கும் உடம்பெல்லாம் விஷம்....."

ஆர்த்திக்கு ஏனோ மூர்த்தியைப் பற்றி அவள் சொன்னதை மட்டும் நம்ப முடியவில்லை. அவன் அனாதை, அவர்களுடன் அந்தக் காம்ப்ளக்ஸில் சேர்ந்து பழகாததால் அப்படித் தப்பாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தாள். தன்னைப் போலவே அவனும் தாய் தந்தை பாசம் கிடைக்காமல் வளர்ந்தவன் என்கிற உண்மை அவன் மேல் அவளுக்கு ஒரு பச்சாதாபத்தை ஏற்படுத்தி இருந்தது.

"சரி லிஸா. அந்தக் காணாமல் போன டைரிகள் பத்தி என்ன நினைக்கிறாய்?"

லிஸா சிறிது யோசித்து விட்டு சொன்னாள். "அந்த டைரிகள் உண்மையாகவே இருந்து காணாமல் போயிருந்தா அது சிவகாமி ஆன்ட்டியோட வேலையாய் தான் இருக்கணும். அந்த பீரோ சாவி அவங்க கிட்ட தான் இருந்ததுங்கறதால் வேற யாரும் அதைச் செஞ்சிருக்க முடியாது...ஆனா அவங்க ஏன் அப்படி செஞ்சிருக்கணும், அந்த டைரிகள்ல என்ன இருந்ததுன்னு தெரியலையே ஆர்த்தி"

★★★★★

அந்த நள்ளிரவில் டாக்டர் ப்ரசன்னாவின் க்ளினிக்கினுள் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே செல்வது அசோக் என்றழைக்கப்பட்ட அந்த மனிதனுக்குப் பெரிய கஷ்டமாயிருக்கவில்லை. விலை உயர்ந்த பொருள்களும், பணமும் பாதுகாக்கப்படுவது போல் வேறு எதுவும் பாதுகாக்கப்படுவதில்லை என்பதால் இரண்டு சாதாரண பூட்டுகளைத் திறந்து கொண்டு சுலபாக உள்ளே நுழைந்தான். கவனமாக கதவைச் சாத்தியவன் அமைதியாகக் கையில் இருந்த டார்ச் விளக்கைப் போட்டு உள்ளே உள்ளவைகளை ஆராய்ந்தான். ஒவ்வொன்றும் எங்கே எப்படி இருந்ததோ அப்படியே விட்டு விட்டுப் போனால் ஒருவன் வந்து போன சுவடே தெரியாது. அசோக் எப்போதும் எங்கும் வந்து போன சுவட்டை விட்டு விட்டுப் போவதில்லை.

பிறகு தன் வேலையைத் தொடங்கினான்.

அவன் வெளியே வந்த போது ஆர்த்தியின் ஹிப்னாடிச செஷனைக் காபி செய்த சிடி அவனிடமிருந்தது. அந்தக் கேஸ் குறித்து ப்ரசன்னா தன் கைப்பட எழுதியிருந்த நோட்ஸை விலையுயர்ந்த நுண்ணிய கேமிராவில் போட்டோவும் எடுத்திருந்தான். அவசரமில்லாமல் வெளியே வந்து அந்தப் பூட்டுகளை போலி சாவிகள் மூலம் பூட்டி விட்டு அமைதியாக அங்கிருந்து நடந்து சென்றான். நடக்கையில் சுற்றி, முற்றிப் பார்த்தான். தூரத்தில் படுத்திருந்த ஒரு தெரு நாயைத் தவிர யாருமே இருக்கவில்லை.

★★★★★

மூர்த்தி வீட்டுக்கு வந்த போது பஞ்சவர்ணம் பொறுமையை இழந்து விட்டிருந்தாள். சிறிது காலமாகவே அவளுக்குக் காத்திருப்பது பாகற்காயாகக் கசக்கிறது. பிடித்து வைத்திருந்த மணல் கையிடுக்கில் கீழே விழுவது போல காலம் சிறிது சிறிதாக கழிந்து வருவதை நினைக்கையில் லேசாக ஒரு பயமும் அவளுக்கு அடிக்கடி வருகிறது. "ஏண்டா லேட்... அவன் கொடுத்தானா?"

"கொடுத்தான். பணத்தை வாங்கிகிட்டு ஒரு வார்த்தை அதிகம் பேசலை. அடுத்தது செவ்வாய்க் கிழமை எந்த இடத்துக்கு வரணும்னு போன் செய்யறேன்னான்"

"அவன் பேசலைன்னு நீ ஏண்டா வருத்தப்படறாய். அவன் கிட்ட நீ என்ன சம்பந்தம் பேசவா போனாய். சரி என்ன கொடுத்தான்"

"ஒரு சிடி. சில ஜெராக்ஸ் பேப்பர்ஸ்.....பாட்டி எனக்கென்னவோ அவன் இதில் எல்லாம் ஒவ்வொரு காப்பி வச்சிருப்பான்னு தோணுது"

"வச்சிட்டுப் போறான், நமக்கென்ன? நீ முதல்ல சிடி ப்ளேயரை எடுத்துட்டு வா."

சிறிது நேரத்தில் பாட்டியும் பேரனும் அறைக்கதவை சாத்திக் கொண்டு அந்த ஹிப்னாடிஸ செஷனைக் கேட்க ஆரம்பித்தார்கள். அவர்களுடைய ஆர்வக் கோளாறில் வழக்கமான ஜாக்கிரதை உணர்வு காணாமல் போய் இருந்தது. இல்லையென்றால் பவானி கதவருகே நின்று கேட்பதை மூர்த்தி கண்டிப்பாக மோப்பம் பிடித்திருப்பான். தாயின் படபடப்பும், மூர்த்தி ஏதோ கொண்டு வந்து தாயிடம் பேசியதையும், பின் சிடி ப்ளேயரை எடுத்துக் கொண்டு அவசரமாகப் போவதையும் பார்த்த பவானிக்கு இங்கு என்னவோ நடக்கிறது என்று உள்ளே ஒரு எச்சரிக்கை மணி அடித்தது. அதனால் தான் அவர்கள் கதவை சாத்திய பின் அங்கு வந்து நின்றாள்.

ப்ரசன்னாவின் பேச்சுக்குப் பின் ஆர்த்தி குரல் மாறிய விதம் அவர்கள் மூவரையும் திகைக்க வைத்தது. "அம்மா நல்லா பாடுவாங்க. "நீல வண்ணக் கண்ணா வாடா, நீ ஒரு முத்தம் தாடா....." என்று மழலைக்குரலில் உற்சாகமாக அவள் பாடிய போது மூர்த்தி வாயைப் பிளந்தான். அது பற்றி பாட்டியிடம் தன் கருத்தைச் சொல்ல அவன் முனைந்த போது பஞ்சவர்ணம் பார்வையால் அனலைக் கக்கி அவனை அப்படியே ஊமையாக்கினாள்.

"அம்மா பாடிட்டே கண்ணம் காமிப்பாங்க. நான் கிஸ்ச் குடுப்பேன்...."

அந்தப் பேச்சு உண்மையில் ஒரு மழலையின் பேச்சாய் இருந்தது. வார்த்தைகளை விட அதிகமாக தொனி முழுவதுமாக மழலையினுடையதாக இருந்தது. பின் ஆர்த்தி அந்தச் சிரிப்புச் சத்தம் பற்றிச் சொல்ல உள்ளே பஞ்சவர்ணமும், வெளியே பவானியும் அப்படியே அதிர்ச்சியில் உறைந்தார்கள். மூர்த்திக்கு அந்தப் புதிய தகவல் அதிசயமாக இருக்க பாட்டியைக் கேள்விக்குறியுடன் பார்த்தான். பஞ்சவர்ணம் பேரனின் பார்வையைத் தவிர்த்தாள்.

ப்ரசன்னாவின் கேள்வி ஒலித்த போது அங்கு ஒருவித டென்ஷன் நிலவியது.

"அந்த சிரிப்பை அடிக்கடி போன்ல நீ கேட்டு இருக்கிறாய்... அப்படித்தானே"

"ஆமா"

"அப்புறம்...?"

"போன்ல மட்டும் இல்ல...."

"அந்தச் சிரிப்பை நேர்லயும் கேட்டிருக்கியா?"

"ஆமா".

பவானி தலைசுற்றி விழாமல் இருக்க சுவரில் சத்தமில்லாமல் சாய்ந்தாள்.

பார்க்கில் தான் கண்டதை ஆர்த்தி விவரித்த பின் ப்ரசன்னா கேட்ட கேள்வியில் பவானியின் இதயத்துடிப்பு ஒருகணம் நின்று போனது.

"அந்த பேட் கர்ள நீ மறுபடி எப்பவாவது பாத்தியா?"

ஆர்த்தியிடமிருந்து பதில் உடனே வராததும் பின் "ம்...." என்றதும் "எங்கே" என்று ப்ரசன்னா கேட்டதற்கு அவள் பலமாக மூச்சு விட ஆரம்பித்ததும் பஞ்சவர்ணமே நாற்காலி நுனிக்கு வந்தாள். கடைசியில் ப்ரசன்னாவின் குரலே ஒலிக்க ஆரம்பித்து கடைசியில் ஒலிபரப்பு நிற்க இரண்டு நிமிடங்கள் ஒருவரும் வாய் திறக்கவில்லை. மூர்த்தி தான் கடைசியில் பேசினான்.

"ஆர்த்தி சொல்றதைக் கேட்டா அந்த சிரிப்பே வினோதமா இருக்கும் போலத் தெரியறது. அப்படி சிரிக்கறது எதனால பாட்டி"

பஞ்சவர்ணம் தற்காலிகமாய் செவிடானாள். பவானியின் இதயத்துடிப்பு சம்மட்டி அடிகளாய் சத்தம் போட அவள் தளர்ச்சியுடன் அந்த இடத்தைக் காலி செய்தாள்.

# 89

They say dreams are the windows of the soul--take a peek and you can see the inner workings, the nuts and bolts.
- Henry Bromel, Northern Exposure

"இது என்னடா?" பஞ்சவர்ணம் அந்த ஜெராக்ஸ் நகல்களைக் காட்டிக் கேட்டாள்.

"இது அந்த டாக்டர் கையால் எழுதின நோட்ஸ்" மூர்த்தி சொன்னான்.

"என்ன எழுதியிருக்கான். படிச்சு சொல்லு"

ப்ரசன்னாவின் கையெழுத்து மிக மோசமாய் இருந்தது. மூர்த்தி கஷ்டப்பட்டு படித்து ஆங்கிலத்தில் ப்ரசன்னா எழுதியிருந்ததைத் தமிழில் மொழி பெயர்த்தான். "அந்த போன் சமாச்சாரம் பல நாட்கள் நடந்திருக்கிறது... அந்த சிரிக்கும் பெண் அந்த முக்கிய சம்பவம் நடந்த அன்று வீட்டுக்குள்ளே வந்திருக்கிறாள்.... அந்த மழை நாள் பற்றிய பேச்சு ஆர்த்தியை நிறையவே பாதிக்கிறது. அவள் கண்டிருந்த காட்சி அவளை நிறையவே பயமுறுத்தி இருக்கிறது ஊர்ஜிதமாகிறது. அடுத்த முறை அவள் மனதை நிறையவே தைரியப்படுத்தினால் ஒழிய அந்த நாள் பற்றிய ஹிப்னாடிசம் வெற்றி பெறும் என்று தோன்றவில்லை...."

★★★★★★

ஆர்த்தியிடம் பேசி விட்டு வெளியே வந்த போது லிஸா பார்த்திபன் காரை விட்டு இறங்குவதைப் பார்த்தாள். "என்ன பார்த்தி, உன்னைப் பார்க்கறதே குதிரைக் கொம்பாயிருக்கு"

பார்த்தி தன் தோழியைப் பார்த்து புன்னகைத்தான். "வேலை ஜாஸ்தி லிஸா. அதுவும் பெரியம்மா கிட்ட வேலை பார்க்கறது அவ்வளவு சுலபமில்லை"

லிஸா சிரித்தாள். "ஆண்ட்டி பர்ஃபெக்ஷன் எதிர்பார்க்கறவங்க. அவங்களைத் திருப்திப்படுத்தறது கொஞ்சம் கஷ்டம் தான்"

"கொஞ்சமா..." என்ற பார்த்திபன் சுற்றியும் முற்றியும் பார்த்து யாருமில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு சொன்னான். "எனக்கு பேசாம வேற எங்கயாவது வேலைக்குப் போயிடலாமான்னு தோணுது. அம்மா கிட்ட சொன்னா ஒத்துக்க மாட்டேங்கிறாங்க. உன் கிட்ட சொல்றதுக்கென்ன லிஸா. பெரியம்மா ஆகாஷையும் என்னையும் ஒரே மாதிரி நடத்தறதில்லை. எப்ப பாரு என் மேல் குற்றம் கண்டு புடிச்சுட்டே இருக்கறாங்க...."

லிஸா ஒன்றும் சொல்லவில்லை. பார்த்திபன் மிக நல்லவன். கலகலப்பானவன். இருந்தாலும் தன்னை யாரும் சரியாக மதிப்பதில்லை, அங்கீகரிப்பதில்லை என்கிற புலம்பல் அவனிடம் சிறு வயதிலிருந்தே உண்டு. சிவகாமியின் கெடுபிடிகள் அதிகமாக இருக்கும் என்பது தெரிந்த விஷயம் என்பதால் இப்போதைய புலம்பல் அவளுக்கு ஆச்சரியம் தரவில்லை.

பார்த்திபன் மேற்கொண்டு புலம்பாமல் அவளிடம் கேட்டான். "ஆர்த்தி கிட்ட பேசிட்டு வர்றியா?"

"ஆமா"

"அவள் என்னைப் பத்தி என்ன சொல்றா?" ஆர்வமாக அவன் கேட்டான்.

லிஸாவுக்கு அவனைப் படிக்க முடிந்தது. சிறு வயதில் இருந்தே அவள் நண்பர்களாக இருந்த ஆகாஷையும், இவனையும் அவளால் என்றுமே படிக்க முடியும்.....

"உன்னை அவளுக்கு நிறைய பிடிச்சிருக்கு. உன் கலகலப்பான பேச்சு அவளுக்கு நிறையவே பிடிச்சிருக்கு. ஆனா உன்னை அதிகம் பார்க்க முடியறதில்லைன்னு சொன்னா"

"என்னை அவளுக்கு நிறைய பிடிச்சுடுமோன்னு பயந்துட்டு தான் பெரியம்மா என்னை வீட்டுக்கு சீக்கிரமே வர விடறதில்லைன்னு தோணுது லிஸா...." அவன் குரலில் கோபம் இருந்தது.

'அப்படியெல்லாம் இருக்காது' என்று சொல்ல நினைத்த லிஸா அதைச் சொல்லி அவனை வெறுப்பேற்ற வேண்டாம் என அமைதியாக இருந்தாள்.

"ஆகாஷுக்கும் ஆர்த்திக்கும் இடையே ஏதோ பிரச்சினைன்னு நினைக்கிறேன். அவன் என்னவோ அவள் கிட்ட சரியா பேசறதில்லை. அவள் அதை எப்படி எடுத்துக்கிறான்னு தெரியலை" என்று சொல்லி பார்த்திபன் லிஸா என்ன சொல்கிறாள் என்று ஆவலாகப் பார்த்தான்.

"ஆனா அவங்க ரெண்டு பேரும் ஓர்த்தரை ஒருத்தர் காதலிக்கிறாங்கன்னு நினைக்கிறேன்"

அவள் கருத்தை அவன் ரசிக்கவில்லை போல தெரிந்தது. "அவன் அவ்வளவு அலட்சியம் செஞ்ச பிறகும் அவள் அவனைக் காதலிக்கிறாளா லிஸா"

"சில சமயம் மனசுல ஒருத்தர் நுழைஞ்சவுடனே மனசு தானா பூட்டிக்கும். உள்ள இருக்கிறவங்களை வெளியவும் விடாது. வேற யாரையும் உள்ளயும் விடாது." சொன்ன போது லிஸாவின் குரல் கரகரத்தது.

அவள் சொன்ன விதம் அழகாயிருந்தது. ஆனால் ஆர்த்தி விஷயத்தில் அவள் சொன்னது உண்மையாக இருக்கும் என்று அவன் நம்பவில்லை. ஏனென்றால் அவனுக்கு நம்பப் பிடிக்கவில்லை.

அதைப் புரிந்து கொண்ட லிஸா பெருமூச்சு விட்டாள். காதலித்து காயப்பட வேண்டும் என்று தலையெழுத்து இருந்தால் யார் தான் என்ன செய்ய முடியும்? மறுநாள் தான் ஈரோடு செல்வதாகச் சொல்லி அவனிடம் விடைபெற்றாள்.

★★★★★

மறுநாள் மூர்த்தி பரபரப்புடன் பாட்டியின் அறைக்குள் நுழைந்தான். "பாட்டி இன்னைக்கு ரெண்டு பெரிய தலைப்புச் செய்திகள்...."

"என்னடா?"

"முதல் செய்தி, உங்க மகள் சென்னைக்குப் போறாங்க?"

"எதுக்கு?"

"யாரோ அவங்க தோழியோட கணவர் உடம்பு சரியில்லாம சீரியஸா இருக்காராம். அவரைப் பார்க்க உங்க மகள் போறாங்க"

பஞ்சவர்ணம் அதை சுத்தமாக நம்பவில்லை. "என்னடா உளர்றாய்?"

"உளர்றது உங்க மகள் தான். அவங்க தன் வீட்டுக்காரர் கிட்ட அதைச் சொல்லி தான் சென்னை போக பர்மிஷன் வாங்கினாங்க. நான் இந்தக் காதால் கேட்டேன்"

பஞ்சவர்ணம் ஆழ்ந்து யோசித்தபடி சொன்னாள். "அவள் ரூம்ல பேயறைஞ்ச மாதிரி இருந்தாள், பிறகு அழுதாள்னு எல்லாம் சொன்னாயே. அதோட தொடர்ச்சி தான் இதுன்னு தோணுதுடா மூர்த்தி....."

சொல்லி விட்டு எழுந்து குறுக்கும் நெடுக்குமாக தன் அறையில் நடக்க ஆரம்பித்தாள். அவள் பாதையை மறிக்காமல் ஓதுக்குப்புறமாக நின்றான் மூர்த்தி.

"எப்படா போறா?"

"நாளைக்கு"

"சரி ஒரு வேலை செய். அந்த அசோக்குக்கு இப்பவே போன் போட்டுப் பேசு. பவானி மெட்ராஸ்ல எங்கே போறா, யாரைப் பார்க்கிறாள்னு பின் தொடர்ந்து போய் பார்க்கச் சொல்லு. அதற்காக என்ன கேட்கிறானோ அதைத் தர சம்மதிச்சுடு"

"பாட்டி இது அவ்வளவு முக்கியம்னு நினைக்கிறீங்களா?"

"ஆர்த்தியோட ஹிப்னாடிசம் மாதிரி இதுவும் நாம தெரிஞ்சுக்க வேண்டிய முக்கியமான விஷயம்னு என் மனசு சொல்லுதுடா. அவள் அதை என் கிட்ட இது வரைக்கும் சொல்லலைங்கிறதே அவள் எதையோ மறைக்க நினைக்கிறாங்கிறதுக்கு ஆதாரம்டா"

"சரி சொல்றேன் பாட்டி"

ஆனால் அப்போது பவானி தன் தாயிடம் சென்னை போகும் விஷயத்தைச் சொல்ல வந்து கொண்டிருப்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தாய் கேட்கக்கூடிய பல கேள்விகளுக்கு பதில்களைத் தயாரித்துக் கொண்டு வந்தவள் தாயின் அறையை நெருங்கிய போது தான் அடுத்த கேள்வியை பஞ்சவர்ணம் பேரனிடம் கேட்டாள். "அடுத்தது என்னடா?"

"சிவகாமி நாலு நாள் கழிச்சு மும்பை போறா. ஒரு வாரம் கழிச்சு தான் வருவாளாம்"

பவானி உள்ளே நுழையாமல் மறைந்து நின்றாள்.

பஞ்சவர்ணம் சிறிது நேர மௌனத்திற்குப் பின் பேரனிடம் சொன்னாள். "அந்த சண்டாளி இல்லாத நேரம் நமக்கு விலை மதிக்க முடியாததுடா மூர்த்தி. அதை நாம் நல்லா பயன்படுத்திக்கணும். எனக்கென்னவோ நாம காத்திருந்ததுக்கெல்லாம் முடிவு நெருங்கிட்ட மாதிரி தோணுது. ஆர்த்தியோட ஆழ்மனசுல இருந்ததைக் கண்டுபிடிச்சதுக்கப்புறம் நாம் இந்த வீட்டுல இருக்க முடியறது கஷ்டம். நான் சந்தேகப்படற மாதிரி அந்த அகங்காரி ஒரு டூப்ளிகேட் ஆர்த்தியை எங்கேயாவது ரெடி செஞ்சு வச்சிருந்தா அவளை இந்த ஹிப்னாடிச வேலைகள் முடிஞ்சவுடனே தான் இங்கே கொண்டு வருவான்னு தோணுது. அதனால அது எல்லாம் நடக்கறதுக்கு முன்னால நாம் செய்ய வேண்டியது நிறைய இருக்கு.. இப்பருந்தே நாம கவனமாவும், வேகமாயும் செயல்படணும்டா"

“சரி பாட்டி”

பவானிக்கு டூப்ளிகேட் ஆர்த்தியை சிவகாமி தயார் செய்து வைத்திருப்பதாக பஞ்சவர்ணம் சந்தேகப்படுவதைக் கேட்டு பகீர் என்றது. பஞ்சவர்ணம் முட்டாள் அல்ல. அதனால் அவள் காரணமில்லாமல் சந்தேகப்பட மாட்டாள். அதே நேரத்தில் இந்தக் கற்பனையே முழுக்க சினிமாத்தனமாகவும் அவளுக்குத் தோன்றியது.

"ஆர்த்தியாவே முன் வந்து உன்னைக் கட்டிக்க வாய்ப்பு இருக்கற மாதிரி எனக்குத் தோணலை. ஆனா சொத்து நம் கைக்கு வரணும்னா ஆர்த்தி உன்னைக் கல்யாணம் செய்துக்கணும். அதற்கு அவள் மனசு மாறணும். அதுக்கு ஒரு வழி இருக்குதுடா மூர்த்தி...."

"என்ன பாட்டி" மூர்த்தி ஆர்வமாய் கேட்டான்.

பஞ்சவர்ணம் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "எனக்குத் தெரிஞ்ச ஒரு கோடீசுவரப் பொண்ணு ஒருத்தனை உயிருக்கு உயிரா காதலிச்சுகிட்டிருந்தா. அவங்க வீட்டுலயும் அதுக்கு எதிர்ப்பு இருக்கலை. ஆனா அவளைக் கட்டிக்க அவளோட சொந்தக்காரப் பையன் ஒருத்தன் முயற்சி செய்துகிட்டிருந்தான். அவனுக்கு அந்தப் பொண்ணோட குடும்பத்தோட சப்போர்ட் கிடைக்கலை. அவன் புத்திசாலி. நேர் வழியா கிடைக்காததைக் குறுக்கு வழியா அடையத் திட்டம் போட்டான்."

"ஒரு சந்தர்ப்பத்துல அவனும் அந்தப் பொண்ணும் தனியா ஒரு இடத்துக்குப் போறப்ப ரெண்டு மூணு தடியன்கள் அவங்களை வழி மறிச்சுட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு மயக்க மருந்து தந்து

மயக்கமடைய வச்சுட்டாங்க. அந்த தடியன்களுக்கு பேசுன காசைக் குடுத்து அனுப்பிச்சுட்டு அவன் அந்தப் பொண்ணைக் கெடுத்துட்டான். அப்புறமா தானே தன்னைக் காயப்படுத்திட்டு ரத்தம் வரவழைச்சுகிட்டான். அவ மயக்கம் தெளிஞ்சு எழுந்தவுடனே அவளை அந்த தடியன்கள் கெடுத்துட்டதாகவும் அதைத் தடுக்க ஆன வரைக்கும் தான் போராடுனதாகவும் அழுதுகிட்டே சொன்னான். அந்த விஷயம் தெரிஞ்சு அந்தக் காதலன் பிரிஞ்சுட்டான். இவன் அவளுக்கு வாழ்வு தரத் தயார்னு சொல்லி கடைசியில் அவளைக் கல்யாணம் செஞ்சுகிட்டான். யாராலோ கெடுக்கப்பட்ட தன்னைக் கல்யாணம் செய்துகிட்டு வாழ்வு கொடுத்த தியாகின்னு அந்தப் பொண்ணு நினைச்சுகிட்டு அவன் கிழிச்ச கோட்டைத் தாண்டாத பொண்டாட்டியா கடைசி வரைக்கும் இருந்தா"

கதையைச் சொல்லி விட்டு பஞ்சவர்ணம் அபூர்வமாகப் பேரனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த பவானி தன் தலையில் இடி விழுந்ததைப் போல் உணர்ந்தாள்.

# 90

Had we never loved so kindly
Had we never loved so blindly
Never met, or never parted
We had never been broken hearted.
– Burns

டாக்டர் ப்ரசன்னா தனது க்ளினிக்கில் நுழைந்தவுடன் ஒரு வித்தியாசத்தை உணர்ந்தான். யாரோ வந்து விட்டுப் போயிருக்கிறது போல் அவனுக்குத் தோன்றியது. ஆனால் அறையில் எந்த ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. எல்லாம் அந்தந்த இடத்திலேயே இருந்தன. எதுவும் இடம் மாறவில்லை. அவன் பீரோ, மேசை எல்லாம் பூட்டி தான் இருந்தன. திறந்து பார்த்தான். உள்ளேயும் எல்லாம் வைத்தது வைத்தபடி தான் இருந்தன. எதுவும் காணாமல் போகவில்லை. எத்தனையோ பெரிய மனிதர்களின் வெளியே தெரியாத ஆழ்மன ரகசியங்கள் இங்கு இருக்கின்றன. அவற்றில் எதுவும் திருட்டுப் போனது போல் தெரியவில்லை. ஆனாலும் அந்த உணர்வு அவனை விட்டுப் போகவில்லை.

பிரமையாகத் தான் இருக்க வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாலும் ஒரு நெருடல் அவன் மனதில் இருந்து கொண்டே இருந்தது....

★★★★★★★★★

"ஹாய் ஆகாஷ்"

அதிகாலையில் ஜாகிங் போய்க் கொண்டிருந்த ஆகாஷை வழிமறித்து லிஸா சொன்னாள். ஆகாஷ் நின்றான். "ஹாய்"

"நான் இன்னிக்கு ஈரோடுக்குக் கிளம்பறேன் ஆகாஷ். போகிறதுக்கு முன்னால் உன்கிட்ட கொஞ்சம் பேசணும். பேசலாமா"

அவன் தலையசைத்தான். இருவரும் சேர்ந்து லேசாய் பனி பெய்யும் பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

"ரொம்ப நாளா உன் கிட்ட சாரி கேட்கணும்னு நினைச்சுகிட்டு இருந்தேன் ஆகாஷ். நிஜமாவே சாரி"

"எதுக்கு"

"நீ என்னை காதலிக்கலைன்னு சொன்னதுக்கு நான் ரியாக்ட் செஞ்ச விதத்துக்கு. இப்ப யோசிச்சா எனக்கு அது கிறுக்குத்தனமா படுது. நம்ம நல்ல நட்பை அசிங்கப்படுத்திட்டேனோன்னு தோணுது...."

"சேச்சே அப்படியெல்லாம் இல்லை....இப்பவும் நான் உன்னை நல்ல தோழியா தான் நினைக்கிறேன். உன்னையும் ப்ரசன்னாவையும் தவிர அந்த அளவுக்கு நெருக்கமான நல்ல ஃப்ரண்ட்ஸ் எனக்கு இல்லை, லிஸா"

லிஸாவுக்கு ஏதோ தொண்டையை அடைத்தது. குரல் கரகரக்க சொன்னாள். "தேங்க்ஸ்"

ஒரு நிமிட மௌனத்திற்குப் பின் தன்னை சமாளித்துக் கொண்டு கிண்டலாகக் கேட்டாள். "நல்ல தோழின்னு சொல்கிறாய். காதலிச்சா அதை ஃப்ரண்ட்ஸ் கிட்ட சொல்றதில்லையா?"

ஆகாஷ் நடப்பதை நிறுத்தி அவளைக் கேள்விக்குறியோடு பார்த்தான்.

"நான் காதலிக்கிறேன்னு யார் சொன்னது?"

"நீ தான்"

"எப்ப சொன்னேன்?" அவன் திகைத்தான்.

"ஆர்த்தியோட பர்த்டே பார்ட்டில அவ கையைக் குலுக்கி நின்ன விதத்துல எல்லாருக்கும் பிரகடனமே பண்ணிட்டாயே அப்புறம் என்ன?"

"ரப்பிஷ்" என்றவன் அவளை முறைக்க அதைப் பொருட்படுத்தாத லிஸா சொன்னாள். "சத்தியமா சொல்றேன் நான் சினிமால தான் இந்த மாதிரி காதலைப் பார்த்திருக்கிறேனே ஒழிய நிஜ வாழ்க்கையில் அது வரைக்கும் பார்த்ததில்லை. இல்லாட்டி நீ என்னைக் காதலிக்கிறாய்னு நினைச்சிருப்பேனா. அந்த நேரத்துல நீங்க ரெண்டு பேரும் மெய் மறந்து நின்னீங்க பாரு...அது என் தலையில ஓங்கி குட்டி சொல்லுச்சு. "இது தாண்டீ காதல்"னு..."

நிஜமாகவே ஆகாஷுக்கு அன்றைய சில நிமிட பலவீனத்தை நினைத்து தன் மேலேயே கோபம் வந்தது. கோபத்தோடு சொன்னான். "சும்மா உளறாதே"

"உளர்றது எல்லாம் லவ் செய்யறவங்க தான். என்னை மாதிரி கல்யாணம் செய்துட்டவங்க எல்லாம் அந்த ஸ்டேஜ்ல இருந்து தாண்டிடறாங்க."

இவள் வாய் திருமணத்திற்குப் பிறகும் குறையவில்லை என்று ஆகாஷ் நினைத்தான். முன்பெல்லாம் வாயாடி என்று தான் அவளை அழைப்பான்...."நீ பேசணும்னு சொன்னது இதைத் தானா?"

"காதலிக்கிறதுன்னா அதை நேரா செஞ்சுட்டுப் போயேன். அதென்ன கோபப்படற மாதிரி ஒரு டிராமா எல்லாம்..."

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையாகச் சொன்னான். "லிஸா. உனக்கு சொன்னா புரியாது"

"எல்லாம் புரிஞ்சுது. ஆர்த்தி எல்லாத்தையும் சொன்னாள்."

ஆகாஷுக்கு ஆர்த்தி மீது கோபம் வந்தது. ஊரெல்லாம் சொல்லிக் கொண்டு திரிகிறாளா?

"அவ என் கிட்ட வெளியே சொல்ல வேண்டாம்னு தான் சொல்லி ப்ராமிஸ் வாங்கிகிட்டா. ஆனா எனக்கு சொல்லாம இருக்க முடியலை. வர்ற ஞாயிற்றுக்கிழமை சர்ச்சில போய் இதுக்கு நான் பாவமன்னிப்பு கேட்டுக்கறேன்...."

அவனுக்கு அந்தக் கோபத்தையும் மீறி புன்முறுவல் வந்தது.

அவள் தொடர்ந்தாள். "சிரிக்காதே.... அவளை மாதிரி ஒரு நல்ல பொண்ணு உன்னைக் காதலிக்க நீ கொடுத்து வச்சிருக்கணும். அவள் உங்கம்மாவை சந்தேகப்படறாள்னா அதுக்குக் காரணம் இருக்கு"

கோபத்தில் அவன் கண்கள் அவளைச் சுட்டெரித்தன. அவள் பொருட்படுத்தாமல் தொடர்ந்தாள். "உங்கம்மா எங்கப்பாவுக்கு அன்னைக்கு உதவியிருக்கலைன்னா எங்கப்பா இன்னைக்கு ஒரு சேல்ஸ்மேனாவோ, கடையில் கணக்கு எழுதறவராவோ இருந்திருப்பார். அதை நான் மறக்கலை. ஆனா உங்கம்மா பத்தி எனக்குத் தெரியும். உனக்குத் தெரியும். அவளுக்குத் தெரிஞ்ச உங்கம்மா வேற. அவங்கம்மா பிணத்தோட முகத்தை அவங்க தாத்தா பாட்டிக்குக் காட்டாத உங்கம்மா. அவளை பாண்டிச்சேரியில் காலேஜ் டேயில் போன வருஷம் நேரில் பார்த்துட்டும் அவளைத் தெரிஞ்ச மாதிரியே காமிச்சுக்காத உங்கம்மா...."

சென்ற வருடம் கல்லூரி தினத்தில் அம்மா ஆர்த்தியைப் பாண்டிச்சேரியில் பார்த்திருக்கிறாள் என்ற செய்தி ஆகாஷுக்குத் திகைப்பளித்தது. கேட்டதை நம்ப முடியாமல் அவளைப் பார்த்தான்.

"...அதை வச்சு உங்கம்மா மேல் தப்பு சொல்லலை. அவங்க எப்படின்னு எனக்குத் தெரியும். நீ அவள் ஸ்தானத்துல நின்னு பாரு. அவளுக்கு சந்தேகம் தோணறதுல தப்பிருக்கா?"

"அவளைக் கூட்டிகிட்டு வர என்னை அனுப்பிச்சதும் எங்கம்மா தான். அவ தாத்தாவைக் காப்பாத்துனதும் எங்கம்மா தான். அதெல்லாம் கணக்கிலேயே இல்லையா?"

"அதனால் தான் அவள் குழம்பிப் போயிருக்கா ஆகாஷ். உங்கம்மா மாதிரி ஒரு ஆளைப் புரிஞ்சுக்கறது அவ்வளவு சுலபமில்லை. வேற யாரோ கொலை செஞ்சதை உங்கம்மா மறைக்கப் பார்ப்பதா கூட இருக்கலாம்.....இன்னொரு விஷயத்தை எங்கம்மா வாயிலிருந்து கிளறி தெரிஞ்சுகிட்டேன். ஆர்த்தியோட அம்மா இருக்கறப்பவே ஆர்த்தியோட அப்பாவுக்கும், பவானி ஆண்ட்டிக்கும் இடையே அஃபேர் இருந்துச்சாம். ...."

ஆகாஷ் அவளையே அதிர்ச்சியோடு பார்த்தான்.

"உண்மை தான். அம்மா வாயில இருந்து அதைப் புடுங்கறது சுலபமாயிருக்கலை. நான் இதை ஆர்த்தி கிட்ட கூட சொல்லலை. நீயும் ப்ராமிஸா சொல்லிடாதே. உங்க ரிலிஜன்ல பாவமன்னிப்பு கிடையாது. ஞாபகம் வச்சுக்கோ."

அதிர்ச்சியின் நடுவிலும் அவள் சொன்னது ஆகாஷிடம் மீண்டும் புன்முறுவலை வரவைத்தது.

"நீ அவளை தண்டிக்கறதா நினைச்சு உன்னையும் தண்டிச்சுகிட்டு இருக்கிறாய். காதல்ல தனியா ஒருத்தரை தண்டிச்சுட முடியாது, ஆகாஷ். எதுவுமே ரெண்டு பேரையும் தான் பாதிக்கும். நீ பாதிக்கப்படாத மாதிரி நடிக்கலாம். ஆனா உண்மையில் உள்ளுக்குள்ளே நீயாவது சந்தோஷமாயிருக்கியான்னு உன்னையே கேட்டுக்கோ ப்ளீஸ்....."

"கடைசியா என்ன சொல்ல வர்றே"

"ஆர்த்தி மேல் ஒரு தப்பும் இல்லைன்னு சொல்றேன். ஆர்த்தியை ரொம்ப தூரம் வேதனைப்படுத்தாதேன்னு சொல்ல வர்றேன்."

"நீ நேத்து வரைக்கும் இருந்த மாதிரி ரெண்டு மூணு வார்த்தை பேசற லிஸாவாவே இருந்திருக்கலாம்னு தோணுது"

"அதெல்லாம் உன்னையும் ப்ரசன்னாவையும் மாதிரி நெருக்கமான ஃப்ரண்ட்ஸ் எனக்கு வேற இல்லைன்னு சொல்றதுக்கு முன்னாடி யோசிச்சிருக்கணும். உள்ளதை சொல்றதுக்குத் தான் நிஜமான ஃப்ரண்ட்ஸ். சரி நான் கிளம்பறேன். சொன்னதை ஈகோ இல்லாம யோசி. நான் ஈரோடு போனாலும் போன்ல பேசுவேன், உங்க ரெண்டு பேர் கிட்டயும். ஞாபகம் வச்சுக்கோ. பை"

"பை" என்றவன் போகும் அவளையே பார்த்திருந்து விட்டு பிறகு ஜாகிங்கை தொடர்ந்தான். சிவகாமி சென்ற வருடம் ஆர்த்தியைப் பார்த்திருக்கிறாள் என்ற தகவலும், சந்திரசேகருக்கும் பவானிக்கும் இடையே கள்ளத் தொடர்பு இருந்திருக்கிறது என்ற தகவலும் அவனுக்கு ஜீரணிக்க முடியாதவையாக இருந்தன. மனம் நடந்தவை நடக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று ஆசைப்பட்டது. ஆர்த்தியைப் பார்க்காமல் இருந்திருந்தால்...அவளைக் காதலிக்காமல் இருந்திருந்தால்...அவள் அவன் தாயை சந்தேகப்படாமல் இருந்திருந்தால்....

★★★★★★★★★

பவானிக்குத் தன் தாயை சந்திக்கவே கூச்சமாக இருந்தது. அவள் மூர்த்தியிடம் சொன்ன அருவறுக்கக் கூடிய படு பாதகமான திட்டத்தைக் கேட்ட கணம் முதல் இப்படியொருத்தி வயிற்றில் வந்து பிறந்து விட்டோமே என்ற சுயபச்சாதாபம் அவளுக்குத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

நேற்று ஆர்த்தி அவள் ஒரு மாதிரியாக இருப்பதைப் பார்த்து "என்ன சித்தி உடம்பு சரியில்லையா?" என்று கேட்ட போது பவானி சமாளிக்க "ஓரே தலைவலி ஆர்த்தி" என்று சொல்ல, ஆர்த்தி பலவந்தமாய் அமிர்தாஞ்சன் நெற்றியில் நீவி விட்ட போது அவளுக்குக் கண்களில் நீர் தாரை தாரையாய் வழிய ஆரம்பித்து விட்டது. கண்ணீரின் காரணத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட ஆர்த்தி "சாரி சித்தி நான் கொஞ்சம் அதிகமாகவே தடவிட்டேன் போல இருக்கு" என்று சொல்லிய போது அவள் மனம் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவளுக்குத் தன் தாயைக் காட்டிக் கொடுக்கவும்

முடியவில்லை. அவள் காரியங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கவும் முடியவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பாக அவள் தவித்தாள்.

இன்று காலையிலேயே தன் சென்னை விஜயத்தை தாயிடம் சொல்லி விடுவது என்று கிளம்பினாள்.

மகளைப் பார்த்தவுடனே பஞ்சவர்ணம் கேட்டாள். "உன் தலைவலி எப்படி இருக்கு?"

"பரவாயில்லை"

"முந்தா நாள் நான் கூப்பிட்டப்பவும் தலைவலின்னு நீ வரலை. நேத்து உனக்கு உன் மகள் அமிர்தாஞ்சனம் தடவிகிட்டு இருந்தாள்னும் கேள்விப்பட்டேன். அப்படியென்ன தலைவலி"

"உன் மகள்" என்ற பட்டம் ஏளனமாக சொல்லப்பட்டதைப் புரிந்து கொள்ளாதது போல் பவானி பதில் சொன்னாள்.

"தெரியலை. கண் டெஸ்ட் செய்துக்கணும்னு நினைக்கிறேன்"

"அதுக்குத் தான் மெட்ராஸ் போறியா?"

அதற்குள் தாயிடம் தகவல் வந்து விட்டதை எண்ணி பவானி திகைத்தாள். "அதுக்கல்ல. என் ஃப்ரண்ட் கனிமொழியோட கணவர் சீரியஸா இருக்கார். அவரைப் பார்த்துட்டு வரலாம்னு போறேன்"

"யாரு கனிமொழி? கருணாநிதி மகளா?" பஞ்சவர்ணம் ஏளனமாகக் கேட்டாள்.

"இல்லை. தலைக்குந்தால இருந்து காலேஜுக்கு வருவாளே என் ஃப்ரண்ட் கனிமொழி –அவ தான்"

மகளை பஞ்சவர்ணம் அதற்கு மேல் குடைய விரும்பவில்லை. பின் தொடர்ந்து யாரைச் சந்திக்கிறாள் என்று அறிய ஏற்பாடு செய்து விட்டதால் அவள் பதில் முக்கியமில்லாதது என்று நினைத்தாள். ஆனாலும் வேறு யாரையோ பார்க்கப் போகிறாள் என்பதில் அவளுக்கு சந்தேகமே இல்லை. அது தனக்குத் தெரிந்த நபரா இல்லை தெரியாத நபரா என்பதில் தான் அவளுக்கு குழப்பம் இருந்தது. அது யாராக இருந்தாலும் அது அபாயமே என்று அவள் உள்மனம் சொன்னது.

# 91

False face must hide what the false heart doth know.
– William Shakespeare

பஞ்சவர்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து போய் தன் சென்னைப் பயணத்தைப் பற்றி மேற்கொண்டு கேள்வி கேட்காமல் விட்டது பவானிக்கு நிம்மதியைக் கொடுத்தது. பஞ்சவர்ணம் சிந்தனையை வெளியே இருந்து வந்த கார் சத்தம் கலைத்தது. கண்களை சுருக்கிக் கொண்டு ஜன்னல் வழியே பார்த்தாள்.

காரிலிருந்து ஒரு அழகான வாலிபன் இறங்கினான்.

"கார் இந்த வீட்டுக்கார் தான். ஆனா இறங்கற ஆள் சினிமாக்காரன் மாதிரி தெரியறான். யார்டீ அது"

பவானியும் எட்டிப் பார்த்தாள். அவள் அவனை இதற்கு முன் பார்த்ததில்லை. ஆனால் பார்க்க பஞ்சவர்ணம் சொன்னது போல் அழகாகத் தான் இருந்தான். "தெரியலை".

சந்திரசேகர் சத்தமாக அவனை அழைத்துக் கொண்டே வந்தார். "ஹாய் அர்ஜுன். ஆள் அடையாளமே தெரியாத மாதிரி மாறிட்டாய்". எப்போதுமே சற்று தொலைவிலேயே அவனை நிறுத்தும் சந்திரசேகர் அன்று அவனைக் கட்டிக் கொண்டார். "க்ரேட் ஜாப்". ஆகாஷும் வந்து ஆனந்தத்தோடு அவனைக் கட்டிக் கொண்டான். "எவ்வளவு அழகா வந்திருக்கே அர்ஜுன்"

"யார்டீ அது அந்த நேபாளத் தடியனா?" பஞ்சவர்ணம் ஆச்சரியத்தோடு மகளைக் கேட்டாள்.

"அப்படித் தான் தெரியுது"

"ஏண்டீ அந்தத் தடியன் இருபது வர்ஷத்துக்கும் மேல தன்னோட அசிங்கமான மூஞ்சியக் காட்டிகிட்டு இந்த வட்டாரத்தையே கதி கலங்க வச்சுகிட்டிருந்தான். அவனை பார்த்துட்டு பயந்த எத்தனையோ குழந்தைகளுக்கு மந்திரிக்க வேண்டியதா போச்சு. இத்தனை வர்ஷம் கழிச்சுட்டு அந்தக் கொலைகாரி ப்ளாஸ்டிக் சர்ஜரி செஞ்சுருக்கான்னா உனக்கு சந்தேகம் வருதா இல்லையா?"

வீட்டினுள் அர்ஜுன் நுழைவதையே பார்த்துக் கொண்டிருந்த பவானிக்கு இதில் சந்தேகப்பட என்ன இருக்கிறது என்று தோன்றியது. தாயை கேள்விக்குறியுடன் பார்த்தாள்.

பஞ்சவர்ணம் சொன்னாள். "இது ஒரு ஒத்திகை மாதிரி தோணலையாடி. முகத்தை எப்படி மாத்த முடியுதுன்னு பார்த்துருக்கா"

"எதுக்கு?"

"ஒரு ரீப்ளிகேட் ஆர்த்தியை அந்த சதிகாரி தயார் செய்துட்டு இருக்காடி. நீ இப்ப சென்னை போயிட்டு வர்றப்ப இந்த ஆர்த்தி இருப்பாளோ அந்த ஆர்த்தி இருப்பாளோன்னு தெரியாது. நீ நேத்து அமிர்தாஞ்சனம் பூசினதை ஞாபகம் வச்சுட்டு இன்னொரு தடவை பூசச்சொன்னா அவள் அந்த பாட்டிலை உன் மேலயே தூக்கி எறிஞ்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லை"

நேற்றும் இதையே தான் மூர்த்தியிடம் அவள் சொல்லிக் கொண்டிருந்தாள். 'இதென்ன பைத்தியக்காரத்தனம்' என்று பவானிக்குத் தோன்றியது.

பஞ்சவர்ணம் மகளைப் படித்தாலும் ஆர்த்தியின் பிறந்த நாள் வீடியோ பற்றி அவளிடம் விளக்கப் போகவில்லை. 'இந்த மந்த புத்திக்காரிக்கு சொல்லி விளங்க வைக்க முடியாது. அவளும் நம்ம கிட்ட எத்தனையோ மறைக்கிறப்ப நாம மட்டும் ஏன் சொல்லி விளக்கணும்' என்று நினைத்தவள் மகளிடம் சொன்னாள். "உனக்கு சொன்னாப் புரியாது. ஆனா ஒண்ணு மட்டும் ஞாபகம் வச்சுக்கோ. அந்த சதிகாரி எதையோ பெருசா திட்டம் போட்டுகிட்டிருக்கா. ஜாக்கிரதையாயிரு"

தலை சுற்ற அங்கிருந்து தப்பித்தால் போதும் என்று பவானி கிளம்பினாள்.

+++++++++

அர்ஜுனிற்கு எல்லாம் நாடகம் போலத் தெரிந்தது. ஆரம்பத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கையில் தெரிந்த பிம்பம் யாரோ ஒரு அன்னியனுடையதைப் போல இருந்தது. டாக்டர் சில நாட்களுக்கு அப்படித் தோன்றுவது சகஜம் என்று சொல்லியிருந்தார். சென்னையில் இருந்து கிளம்பிய அந்தக் கணம் முதல் அவனைப் பலரும் பார்த்த பார்வைகள் அவன் இது வரை கண்டறியாதது. அருவருப்பும், முகச்சுளிப்பும் மட்டுமே கண்டவனுக்கு தன் மீது விழுந்த பார்வைகள் தங்கிப் போவது அதிசயமாகத் தோன்றியது. ஓரிரு பெண்கள் அவனைப் பார்த்துப் புன்னகைக்கவும் செய்தார்கள். முதல் முறையாக உலகம் வேறு மாதிரியாகத் தெரிந்தது.

முன்பெல்லாம் அடுத்தவர் பார்த்து அருவருப்படைவதைக் காண்பதற்கு முன் அங்கிருந்து நகர்ந்து விட வேண்டும் என்று அவன் நடையில் வேகம் அதிகம் இருக்கும். இப்போது அவசரம் போய் நிதானம் வந்தது. ஆனாலும் ஏனோ அவனால் சந்தோஷப்பட முடியவில்லை. சந்தோஷம், துக்கம் என்ற இரண்டையும் இழந்து விட்டவனாக இருந்தான்.

இங்கு வந்ததும் சந்திரசேகரின் நட்பான தழுவலும் அவனை ஆச்சரியப்படுத்திய வரிசையில் சேர்ந்தது. ஆகாஷ் என்றுமே தன் அருவருப்பைக் காட்டியதில்லை என்றாலும் நேராக அவனைப் பார்ப்பதை மற்றவர்கள் போலவே தவிர்த்து வந்தான். ஆகாஷ் இப்போது காட்டிய ஆனந்தம் இயல்பாக இருந்தது. அவர்களை எல்லாம் தாண்டி அவன் தன் தெய்வத்தைக் காண சென்று கொண்டிருந்தான். இத்தனை பேர் கருத்தும் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. அவள் என்ன சொல்கிறாள் என்பது தான் மிக முக்கியம்.

தன் அறையில் கம்ப்யூட்டரில் மூழ்கி இருந்த சிவகாமி சத்தம் கேட்டு திரும்பினாள். ஒரு கணம் யார் என்பது போல் பார்த்தவள் மறு கணம் முகமலர்ந்தாள். "அழகாய் தெரிகிறாய் அர்ஜுன்"

"இந்த அழகு என்னோடதில்லை மேடம்." அவன் தனக்குத் தோன்றிய உண்மையை வாய் விட்டுச் சொன்னான்.

"இந்த அழகு உன்னோடது தான் அர்ஜுன். ஒரு புது சட்டையை வாங்கிப் போட்டுக்கறாய்னு வச்சுக்கோ. அது உன்னோடது தானே. இதுவும் அப்படித் தான். புது முகத்தை வாங்கியிருக்கிறாய். இனி உன்னுடையது தான்.... வா. உட்கார்"

அவளுடைய சித்தாந்தம் அவனுக்குப் புதுமையாக இருந்தது. எதுவுமே அவள் வாயில் இருந்து வரும் போது சத்தியமாகவே தோன்றுகிறது. அவள் எதிரில் உட்கார்ந்தான். அவள் சிறிது நேரம் அவன் முகத்தை ஆராய்ந்தாள். அவள் முகமலர்ச்சி அதிகரித்தது. "நான் டாக்டர் கிட்ட நேத்தும் பேசினேன். தான் செஞ்ச சர்ஜரிகளிலேயே இது அவருக்கு ரொம்ப திருப்தியாய் இருந்ததுன்னு சொன்னார்."

அவர் மேற்கொண்டு சொன்னதை சிவகாமி அவனிடம் சொல்லவில்லை. "மத்த கேஸ்ல எல்லாம் அது வழக்கமான வேலை மாதிரி இருந்தது. ஆனா இவர் கேஸ்ல அந்த முகத்தை மாத்தற வரைக்கும் எனக்கே அதைப் பார்க்க சங்கடமாயிருந்துச்சு. ஆனா நீங்க க்ரேட் மேடம்"

"எதுக்கு?"

"ஒரு வேலைக்காரனுக்கு இவ்வளவு செலவு செஞ்சுருக்கீங்க...."

"நான் என்னைக்குமே அவனை வேலைக்காரனா நினைச்சதில்லை டாக்டர்" சிவகாமி போனை வைத்து விட்டாள்.

சிவகாமிக்கு அர்ஜுனிடம் இப்போதும் கூட சந்தோஷம் இல்லாததைக் கண்டு ஒரு கணம் மனம் கனத்தது. தெய்வமே இவன் இன்னும் மனதிலிருந்த அத்தனை சுமைகளையும் ஏன் இறக்கி வைக்க மாட்டேன்கிறான்.

"அர்ஜுன். இந்த சர்ஜரி உன் வாழ்க்கைல ஒரு திருப்பு முனை. பழையதெல்லாத்தையும் நீ அந்த பழைய முகத்தோட தூங்கி எறிஞ்சிருக்கணும். உங்கம்மாவை, உன்னைக் காயப்படுத்துனவங்களை, எல்லாரோட நினைவுகளையும்...."

அவன் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவள் தொடர்ந்து சொன்னாள். "சில நினைவுகள் எப்பவுமே சுமை தான். அது சில சமயம் இறக்கி வைக்க முடியாதது மாதிரி தோணும். ஆனா புதுசா நல்ல நினைவுகளை மனசில் வச்சுக்கிட்டோம்னா அந்த பழைய மோசமான நினைவுகள் தானா மறைஞ்சுடும். நான் இன்னைக்கே போய் அந்த வசந்தியோட அப்பாவைப் பார்த்துட்டு பேசப் போறேன். நான் மும்பைக்கு போறதுக்கு முன்னால் உன் கல்யாணத்தை முடிச்சுடலாம்னு இருக்கிறேன்"

அவன் இப்போது அவளைத் திகைப்போடு பார்த்தான். "எனக்குக் கல்யாணம் எதுக்கு மேடம்?"

"இது என்ன கேள்வி? நல்ல வேளை. வாழ்றது எதுக்குன்னு கேட்காம விட்டாயே"

"கல்யாணத்துக்கு அவங்க சம்மதிக்கணுமே...."

"அதை நான் பார்த்துக்கறேன். கல்யாணம் முடிஞ்சு நீ ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கணும். நேபாளத்துல நடந்தது, இந்த வீட்டுல பல வருஷங்களுக்கு முன்னால நடந்தது, எல்லாத்தையும் மறக்கணும்...."

அர்ஜுன் அவளையே பார்க்க அவள் தலையசைத்தாள். பழைய நினைவுகள் அவளையும் சிறிது அலைக்கழித்தது போல் தெரிந்தது. ஆனால் வேகமாகவே மீண்டு ஓரிரு நிமிடங்கள் கழித்து சொன்னாள். "நாம் எல்லாருமே பல நேரங்கள்ல விதியோட கைப்பாவை தான் அர்ஜுன். நாம் கருவி மாத்திரம். செய்ய வைக்கிறது விதி தான்....."

அவன் ஒன்றும் சொல்லாமல் தலையசைத்தான்.

அடுத்ததாக அவனுக்காகக் காத்திருந்த வேலைகளைச் சொல்ல ஆரம்பித்தாள்.

சிவகாமியின் அறையிலிருந்து வெளியே போகும் அர்ஜுனையே பார்த்துக் கொண்டிருந்த ஆகாஷிற்குத் தன் தாயை நினைத்துப் பார்க்கையில் பெருமையாக இருந்தது. எப்படி இருந்த ஒருவனை அவள் இப்படி மாற்றி இருக்கிறாளே! இப்படிப்பட்டவள் ஏன் ஆர்த்தியின் அம்மா விஷயத்தில் மட்டும் ஏன் தேவையில்லாமல் சந்தேகத்தைக் கிளப்ப வேண்டும் என்று நினைக்கையில் அவனுக்குத் தாயின் மீது சிறிது கோபமும் வந்தது. என்ன தான் தம்பி மேல் பாசம் இருக்கட்டும் அதற்கென்று தம்பியின் கள்ளக்காதலையுமா கண்டு கொள்ளாமல் இருப்பது.

ஆனால் இன்னொரு மனம் அவள் அப்படி கண்டு கொள்ளாமல் இருந்திருப்பாள் என்பதையும் ஒத்துக் கொள்ள மறுத்தது. தவறு என்று தோன்றியதை யார் செய்தாலும் அவள் அதை விமரிசிக்கும் விதம் சவுக்கடியாக இருக்கும். அதில் அவன், பார்த்திபன், அவள் தம்பி யாரும் விதி விலக்கல்ல. பல முறை சந்திரசேகரை மகா கேவலமாகத் திட்டி இருக்கிறாள். அவரது சோம்பேறித்தனமும், எதையுமே சீரியஸாக நினைக்காத பொறுப்பில்லாத்தனமும் தான் பெரும்பாலும் அவள் திட்டக் கிடைக்கும் விஷயங்கள். அவர் வாயே திறக்க மாட்டார். அப்படித் திட்டுபவள் அதை எப்படிப் பொறுத்திருப்பாள்?

ஆனால் ஆர்த்தியை அம்மா பாண்டிச்சேரியில் போன வருடமே பார்த்தாள் என்று ஆர்த்தியே சொன்னதாக லிஸா சொல்கிறாள். ஆர்த்தியிடம் பொய் என்பது பெயருக்குக் கூட இல்லை என்று அவன் உள்மனம் சொன்னது.

இரண்டு புள்ளிகளுக்கிடையே உள்ள தூரம் நேர் கோடு தான் என்று அம்மா என்றுமே சொல்வாள். இந்த விஷயத்தை அவளிடம் நேரடியாகவே கேட்டு விடுவது என்று தீர்மானித்துத் தாயின் அறைக்குள் நுழைந்தான்.

"வாடா. அர்ஜுனைப் பார்த்தாயா? எப்படியிருக்கான்?" மகனைப் பார்த்தவுடன் சிவகாமி கேட்டாள்.

"எனக்கு என் கண்ணையே நம்ப முடியலை. ரியலி ஹேண்ட்ஸம்" என்றவன் தன் தாயிடம் உடனடியாக வந்த விஷயத்தைக் கேட்டு விட நினைத்தான். அதிக நேரம் எடுத்துக் கொண்டால் அதையே காரணமாக வைத்து "எனக்கு வேலை நிறைய இருக்கு" என்று சொல்லித் துரத்தினாலும் துரத்துவாள்.

"அம்மா நான் உன் கிட்ட முக்கியமாய் ஒரு விஷயம் கேட்கணும்னு வந்தேன்"

"கேள்"

"போன வருஷம் நீ ஆர்த்தியை பாண்டிச்சேரியில் அவங்க காலேஜ் டேயில் பார்த்தாயா?"

# 92

"Somehow, that was the most frightening thing of all..."
Agatha Christie, And Then There Were None, Ch. 5

"ஆமாம் பார்த்தேன்." சிவகாமி கண்ணிமைக்காமல் சொன்னாள்.

ஆகாஷிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. "என்ன பார்த்தாயா? பிறகு ஏன் அப்பவே கூட்டிகிட்டு வரலை"

"அவள் தான்னு உறுதியா தெரிஞ்சா தானே கூட்டிகிட்டு வர முடியும். சந்தேகம் வந்துச்சு அவ்வளவு தான். நாலு வருஷத்துக்கு முன்னால் கும்பகோணம் கோயில்ல ஆனந்தி மாதிரி அசப்பில் தெரிஞ்சவளை பிடிச்சுக் கேட்டால் அவள் வேற யாரோன்னு அப்புறம் தான் தெரிஞ்சுது. மூணு வருஷத்துக்கு முன்னால் ரேணிகுண்டா ரயில்வே ஸ்டேஷன்ல ஒருத்தியும் அப்படியே தெரிஞ்சா. அவளைக் கூப்பிட்டு கேட்டால் அவளும் ஆர்த்தியில்லைன்னு ஆயிடுச்சு. அதனால பாண்டிச்சேரியில் அவசரப்படப் போகலை. அதுவும் ஆர்த்தி அந்த காலேஜ் டேயில குஜராத்தி காரங்க மாதிரி டிரஸ் செய்திருந்தா. ஹேர் ஸ்டைலும் என்னவோ வித்தியாசமா செய்திருந்தா. ஏதோ சேட்டுப்

பொண்ணுன்னு நினைச்சு விட்டுட்டேன். அப்புறம் அவள் தாத்தா விஷயமா போன் செய்து பாண்டிச்சேரில இருந்து பேசறேன்னு சொன்னப்ப தான் அப்ப பார்த்தது அவளைத் தான்னு தெரிஞ்சுது"

ஆகாஷிற்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சிவகாமி வேறெதோ அவனிடம் பேச ஆரம்பித்தாள். பத்து நிமிடம் கழித்து வெளியே வந்தவனுக்கு என்ன நினைப்பது என்றே தெரியவில்லை.

சிவகாமி சொன்னதில் குறை கூற முடியா விட்டாலும் அவன் மனதில் ஏதோ நெருடியது. சிவகாமி அவனை ஒன்றுமே கேட்கவில்லை. "நான் ஆர்த்தியைப் பாண்டிச்சேரியில் பார்த்தேன் என்று யார் சொன்னது?" என்று கூடக் கேட்கவில்லை. இப்படியொரு கேள்வி ஒரு நாள் வரும் என்று முன்கூட்டியே யோசித்து அனாயாசமாக அவள் சொன்னது போல் தோன்றியது. இப்போதும் அவன் தாய் அந்த கொடும்பாதகம் செய்திருப்பாள் என்று அவனுக்கு ஒரு சதவீத நம்பிக்கை கூட இல்லை. ஆனால் அவளுடைய தம்பி ஒருவேளை செய்திருந்தால், லிஸா சொன்னது போல், அவள் காட்டிக் கொடுக்கும் ரகம் அல்ல.

தாயைச் சிறுவயதிலேயே இழந்து அக்காவின் நிழலிலேயே வளர்ந்த சந்திரசேகர் அவளுக்கு ஒரு மகனைப் போல் தான். எத்தனையோ சந்தர்ப்பங்களில் தன்னை விட அதிகமாய் மாமா அம்மாவை நேசிக்கிறார் என்பதை ஆகாஷ் உணர்ந்திருக்கிறான். வேலையில் அவள் சற்று கடுமையாகப் பேசினால் ஆகாஷ் கூட ஓரிரு நாட்கள் பேசாமல் இருந்ததுண்டு. ஆனால் சந்திரசேகர் தமக்கையிடம் எத்தனையோ கேவலமாய் திட்டு வாங்கினாலும் ஒரு நிமிடம் கூட தமக்கையிடம் கோபமாய் இருந்து அவன் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட தம்பியை கண்டிப்பாய் சிவகாமி காட்டிக் கொடுக்க மாட்டாள்.....

உடனே அவன் நேராக ஆர்த்தியின் அறைக்குப் போனான். அவனைப் பார்த்தவள் முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அவள் மகிழ்ச்சி அவன் இதயத்தை என்னவோ செய்தாலும், அதைக் காட்டிக் கொள்ளவில்லை. தான் முக்கியமான ஒரு விஷயத்தைப் பேச வந்திருக்கிறேன் என்ற முகபாவனையுடன் அவளிடம் பழைய நெருக்கத்தைச் சிறிதும் காண்பிக்காமல் சொன்னான்.

"நான் அம்மா கிட்ட பேசிகிட்டு இருந்தப்ப அம்மா போன வருஷம் பாண்டிச்சேரில உன் காலேஜ் டேயில் பார்த்ததாய் சொன்னாங்க. உண்மையா?"

ஆர்த்தி அவனைத் திகைப்புடன் பார்த்தாள். இதை சிவகாமியாகவே வாய் விட்டுச் சொல்வாள் என அவள் எதிர்பார்க்கவில்லை. "ஆமாம்" என்றவள் பின் ஏன் அத்தை தன்னை அழைத்துச் செல்லாமல் விட்டாள் என்பதையும் சொல்லியிருப்பாளோ என்று நினைத்தாள்.

"அந்த நாள் நீ குஜராத்தி ஸ்டைல்ல சேலை கட்டி வித்தியாசமான ஹேர்ஸ்டைல்ல இருந்தாயா?" அவன் அவசரமாகக் கேட்டான். அவள் இல்லை என்று சொல்லி விடுவாளோ என்ற பயம் அவனுக்கு இருந்தது.

ஆர்த்தி ஒரு நிமிடம் யோசித்து விட்டு சொன்னாள். "ஆமா! என் ஃப்ரண்ட்ஸ் எல்லாருமா சேர்ந்து காலேஜ் டேல வித்தியாசமா வரலாம்னு முடிவு செஞ்சோம். அதனால அப்படி வந்தோம்..."

அவனுக்குப் போன உயிர் வந்தது. "அதுக்கும் முன்னால் உன்னை மாதிரி ஒரு பொண்ணை கும்பகோணத்திலேயும், ரேணிகுண்டாலயும் பார்த்து ஏமாந்துட்டாங்களாம். அந்த டிரஸ்ல பார்த்தவுடனே

கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் ஏதோ சேட்டு பொண்ணுன்னு நினைச்சுட்டு விட்டுட்டடதா சொன்னாங்க....."

ஆர்த்திக்கு ஒரு மாதிரியாகி விட்டது. இயல்பாகவே மிக நல்லவளான அவளுக்கு அதைக் கேட்டவுடன் சிவகாமி அப்படி நினைத்திருக்கப் போதுமான காரணங்கள் இருப்பதாகவே பட்டது.

"சாரி" என்று குற்றவுணர்ச்சியுடன் சொன்னாள். ஒரு கணம் அவனுக்கு அவளைக் கட்டியணைத்துக் கொள்ளத் தோன்றியது. ஆனால் மறு கணம் ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்து வெளியேறினான்.

அவனுக்கேனோ ஆர்த்தியைப் போல சிவகாமியின் பதிலை இன்னமும் முழுமையாக நம்ப முடியவில்லை. அதே நேரத்தில் அம்மா ஆர்த்தியைப் பார்த்த பிறகும் கூட்டிக் கொண்டு வராததற்கு காரணங்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்படி காரணங்கள் இருந்திருந்தால் ஆர்த்தியாக போன் செய்த போது அவள் ஆர்த்தியை அங்கீகரித்திருக்கத் தேவையில்லை.

தோட்டத்தில் தேவனின் 'மிஸ்டர் வேதாந்த'த்தில் மூழ்கியிருந்த தந்தையைப் பார்த்ததும் அவரிடம் போனான். "வாடா. உட்கார். அர்ஜுனைப் பார்த்தியாடா. ப்ளாஸ்டிக் சர்ஜரி நிஜமாவே ஒரு பெரிய வரப்பிரசாதம்டா. இல்லையா"

ஆகாஷ் தலையசைத்தான்.

"உங்கம்மாவுக்கு ஒரு வருத்தம். இதை பத்து வருஷம் முன்னாடியே செஞ்சிருந்தா அவன் இந்த பத்து வருஷம் நல்லா வாழ்ந்திருப்பானேன்னு சொல்றா. கடவுள் இவளுக்குன்னு இப்படி ஒரு தங்கமான மனசைக் கொடுத்திருக்கிறார் பார்"

ஆகாஷிற்கு அம்மாவின் வருத்தம் அவள் நல்ல மனதைக் கோடிட்டுக் காட்டியது. ஆனால் இதை அம்மா வேறு யாரிடமும் சொன்னதாகத் தெரியவில்லை. அம்மா அப்பாவிடம் மட்டும் சொல்லி இருக்கிறாள். அவர்களுக்கிடையே உள்ள நெருக்கம் ஆழமானது. பல நேரங்களில் அந்த பந்தத்தில் வேறு யாருக்கும் இடம் இல்லை என்று தோன்றும். அவர்கள் உலகம் தனியானது. அவர்களுக்குள் ஒளிவு மறைவு இருக்க வாய்ப்பேயில்லை.

ஆகாஷ் மூளையில் மின்னல் அடித்தது. "அப்பா. அம்மா உங்க கிட்ட எல்லாத்தையும் சொல்வாங்களா? உங்களுக்குள்ளே ஒளிவு மறைவே கிடையாதா?."

சங்கரன் அந்த திடீர் கேள்வியை எதிர்பார்க்கவில்லை என்று தோன்றியது. தூரத்தில் பறந்து கொண்டிருந்த பறவையைப் பார்த்தபடி சொன்னார். "எனக்கு எது முக்கியமாய் தெரியணுமோ அதைச் சொல்வாள். சில சமயங்கள்ல மத்தவங்க கிட்ட சொல்ல முடியாததையும் சொல்வாள். அதுக்குன்னு எல்லாத்தையும் என் கிட்ட சொல்வாள்னு சொல்ல முடியாது"

ஆகாஷிற்கு அந்த பதில் சற்று நெருடலாய் இருந்தது. தாய் தந்தை இருவருக்கிடையே இப்போதும் ஒரு ஆழமான காதல் இருப்பதாய் எண்ணி வந்தவனுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. "அப்பா எனக்குத் தெரிஞ்சு உங்க ரெண்டு பேர் அளவுக்கு நேசிக்கிற ஒரு தம்பதியை நான் பார்த்ததில்லை. அவ்வளவு தூரம் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறப்ப இடையில் ஒளிவு மறைவே இருக்கக் கூடாது இல்லையா?"

சங்கரன் மகனைப் பார்த்து புன்னகைத்தார். "எங்க ரெண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயத்தில் எங்களுக்குள் ஒளிவு மறைவே இல்லை ஆகாஷ். ஆனால் சிவகாமி மனசுல எத்தனையோ பேர் சம்பந்தப்பட்ட விஷயம் இருக்கு. அதை அவள் சொல்றதும் இல்லை. அவள் சொல்லணும்னு நான் எதிர்பார்க்கிறதும் இல்லை. அவளுடைய பிசினஸ் பத்தியோ, அவள் தம்பி, தங்கை பத்தியோ எத்தனையோ விஷயங்கள் இருக்கலாம். நானாய் கேட்டால் அவள் கண்டிப்பாய் என் கிட்ட சொல்வாள். ஆனா நான் கேட்கறதில்லை....."

ஆகாஷிற்கு தந்தையின் பதில் யதார்த்தமாய் இருந்தது. அம்மா அவரிடம் பொய் சொல்வதில்லை. காரணம் அவர் அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே இல்லை.

[[[[[[[[]]]]]]]]

"ஹலோ"

"அண்ணே நான் விஜயா பேசறேன்ணே"

வீரையன் சுற்றிலும் முற்றிலும் பார்த்து விட்டு தான் தங்கையுடன் பேசினான். "சொல்லு"

"அப்புறமா என்னைத் தேடிகிட்டு யாராவது வந்தாங்களாண்ணே"

"ஒரே ஒருத்தன் மட்டும் தான் நீ போன அன்னைக்கு வந்துட்டு போனான். அதுவே என்னை ஒரு கலக்கு கலக்கிடுச்சு"

"வந்தது யாருண்ணே. அந்த அசிங்கமான மூஞ்சிக்காரனா?"

"அவனில்லை"

"அப்புறம் அந்தப் பெரியம்மா பையனா. சின்னம்மா பையனா?"

"ஆமா உறவுக்காரங்களைக் கேட்கறமாதிரி கேளு. அந்த ரெண்டு பேருமே இல்லை. அந்த ஐயா பொண்டாட்டியோட அண்ணன் பையன் ஒருத்தன் இருக்கானே, அந்த பொம்பள பொறுக்கி, அவன் தான் வந்தான்"

"அவன் தானா?" விஜயாவின் குரலில் பெரும் நிம்மதி தெரிந்தது.

"ஏன் சனியனே போன் செஞ்சு கேட்கறே?"

"இங்க வேலை பாக்கற இடத்துல அவங்களுக்கு ஹைதராபாதுக்கு டிரான்ஸ்பர் ஆயிடுச்சு. நீயும் வர்றியான்னு கேக்கறாங்க. போலாம்னு இருக்கேன். போனா சீக்கிரம் வர முடியாது. போறதுக்கு முன்னாடி ஒரு எட்டு உன்னையும் அண்ணியையும் பார்த்துட்டு போலாம்னு பார்க்கறேன்"

"இங்க வந்துட்டு யார் கண்லயாவது பட்டுடப் போறே"

"அந்த அசிங்கமான மூஞ்சிக்காரன் பார்வையில மட்டும் படாம இருந்தா போதும்னே. அவன் பார்த்தா வெறும் கையாலயே என் குறவளையை நசுக்கி விட்டுடுவான்...." சொல்லும் போதே அவள் குரலில் பீதி தெரிந்தது.

"அப்ப இங்க வந்து ஏன் சாகறே. அந்த பொம்பள பொறுக்கிய அந்த பெரியம்மா கூட அனுப்பிச்சு இருக்கலாம். பார்த்துட்டு போக இவன், கொல்றதுக்கு அவன்னு கூட இருக்கலாம்"

"அதெல்லாம் இருக்காதுண்ணே. அந்த பெரியம்மா கூட்டமும், வந்துட்டு போனானே அவன் கூட்டமும் எண்ணெயும் தண்ணியும் மாதிரி. என்னைக்குமே சேராது. அதனால நான் யாருக்கும் தெரியாம வந்து ஒரு நாள் இருந்துட்டு போறேன்ணே. அந்த பெரியம்மா என்னைத் தேடறதா இருந்தா அன்னைக்கே வேற ஆள் வந்துருக்கும்....."

"சனியனே எனக்கு என்னமோ பயமா இருக்கு...."

"பயப்படாதீங்கண்ணே. அந்தக் குடும்பத்துக்காரங்க கண் படற எந்த இடத்துலயும் நான் இல்லாம பார்த்துக்கறேன். எனக்கு உன்னை விட்டா யாருன்னே இருக்காங்க. இன்னும் ஹைதராபாத் போனா எத்தனை வருஷமோ...."

வீரையனுக்கு மனது இளகினாலும் அவள் மேல் கோபமும் வந்தது. "ஒழுங்கா இருக்கற மாதிரி இருந்துருந்தா இத்தனை பிரச்சன இருக்கா புள்ள. இப்படி ஒளிஞ்சு வாழ்றதெல்லாம் ஒரு பொழப்பா?"

"அதையே எத்தனை தடவண்ணே சொல்வே. நடந்தது நடந்து போச்சு. நான் ரெண்டு நாள்ல வர்றேன். யார் கண்ணுலயும் படாம ராத்திரி நேரமா வர்றேன். சரியா?"

அவள் போனை வைத்து விட்டாள். அவள் என்ன சொன்னாலும் வீரையனுக்கு ஏனோ பயம் நீங்கவில்லை. "அந்தம்மாள் அந்த அசிங்கமான ஆளை விட்டு விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது. அந்தம்மாவிடம் உள்ள பணத்துக்கு எத்தனையோ ஆட்களைக் கண்காணிக்க விட்டிருக்கலாமே"

((((((((((((((()))))))))))))))

டாக்டர் ப்ரசன்னாவிடன் அடுத்த செஷனிற்காக காரில் கோயமுத்தூர் நோக்கிப் போகையில் ஆகாஷ் வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆர்த்தி கூட, பேசி அவனை எரிச்சலடையச் செய்ய வேண்டாமென்று பேசவில்லை.

போய்க் கொண்டிருக்கும் போது பின்னால் ஏதாவது கார் தொடர்கிறதா என்று ஆகாஷ் கவனித்தான். சந்தேகப்படும்படியாக ஒரு வாகனமும் பின் தொடரவில்லை. கோயமுத்தூர் போய் சேர்ந்து ப்ரசன்னாவின் க்ளினிக் அருகே காரை நிறுத்திய பின் ஆர்த்தியைப் பார்த்தான். அவன் சொல்லாமலேயே அவளால் அவன் கேள்வியைப் புரிந்து கொள்ள முடிந்தது. "இன்னைக்கு என்னை யாரும் தொடர்கிற மாதிரியோ, கவனிக்கிற மாதிரியோ எனக்குத் தோணலை. முதல் தடவை இங்க வந்தப்ப தோணினதோட சரி. அப்புறமா எப்பவும் அப்படித் தோணலை" என்றாள்.

வார்த்தைகளே தேவையில்லாமல் புரிந்து கொள்கிற அளவு நெருக்கமாகி விட்டோமா என்று நினைத்த போது அவனுக்கு ஒரு கணம் சந்தோஷம் தோன்றி மறைந்தது.

உள்ளே நுழைந்தவுடன் ப்ரசன்னாவின் செகரட்டரி ஆர்த்தியை உள்ளே போகலாம் என்று சைகை காட்டி விட்டு ஆகாஷைப் பார்த்து ஓய்யாரமாய் சிரித்தாள். ஆர்த்தி ப்ரசன்னாவைப் பார்க்கப் போக ஆகாஷ் நாகரிகம் பொருட்டு அந்த செகரட்டரியைப் பார்த்து புன்முறுவல் செய்து விட்டு அங்கிருந்த பத்திரிக்கை ஒன்றைக் கையில் எடுத்து அதில் மூழ்கினான்.

ஆனாலும் அவன் மனம் முன்பு ஆர்த்தியைப் பின் தொடர்ந்து கவனித்த மர்ம நபர் மேலேயே நின்றது. உண்மையில் அப்படி ஒரு நபர் உண்டா இல்லை அது ஆர்த்தியின் கற்பனை தானா? ஒரு வேளை ப்ரசன்னாவிடம் சிகிச்சை ஆரம்பித்தவுடன் அந்த பிரமை போய் விட்டதா? ஆனால் பாண்டிச்சேரியில் அவர்கள் கண்ணில் படாமல் இருக்க ஒரு சிவப்பு சேலைப் பெண்மணி ஓடிய ஓட்டம் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அப்படி உண்மை என்றால் ஏன் இப்போது பின் தொடர்வதில்லை.

அவன் மூளையில் திடீர் என்று ஒரு மின்னல் அடித்தது. ஆர்த்தியின் இந்தத் தொடரல் தோணலைப் பற்றி அவன் தாயிடம் சொன்னதற்குப் பிறகு தான் தொடரல் இல்லை. அவனுக்கு நன்றாக அது நினைவு இருக்கிறது. சிவகாமியிடம் சொன்னதற்கும் இப்போது பின் தொடரல் இல்லாமல் இருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?.....

# 93

If I have the belief that I can do it, I shall surely acquire the capacity to do it even if I may not have it at the beginning."
– Mahatma Gandhi

ஆர்த்தி டாக்டர் ப்ரசன்னாவின் அறையில் இருந்த அதே சமயத்தில் அர்ஜுனின் திருமண விஷயமாய் சிவகாமி வசந்தி வீட்டில் பேசிக் கொண்டிருந்தாள்.

சிவகாமிக்கு வசந்தியையும், வசந்தியின் தந்தையையும் திருமணத்திற்கு சம்மதிக்க வைக்க அதிகம் கஷ்டமிருக்கவில்லை. வசந்தி அர்ஜுனின் தற்போதைய தோற்றத்திலும், சிவகாமியைப் போன்ற ஒருத்தியின் வலதுகரமாக இருப்பதிலும் திருப்தியடைந்தாள். முன்பு அர்ஜுனிற்கு வந்த தோல் வியாதி மிக அபூர்வமானதென்றும் அது தொத்து வியாதியல்ல என்றும் டாக்டரின் சர்டிபிகேட்டை வேறு சிவகாமி அவர்களுக்கு காட்டினாள்.

வசந்தியின் தந்தை அவள் இந்தத் திருமணத்தில் காட்டிய ஈடுபாட்டைக் கண்டு அதை பயன்படுத்திக் கொள்ள நினைத்ததால் அவர் மகன் படிப்புக்கென சிவகாமி ஐந்து லட்ச ரூபாயைத் தர வேண்டி வந்தது. மனித குணாதிசயங்களை ஆழமாக அறிந்திருந்த சிவகாமிக்கு அது பெரிய விஷயமாகத் தோன்றவில்லை. ஆனால் அது அர்ஜுனிற்குத் தெரிய வேண்டாம் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டாள். திருமணம் மூன்றாவது நாள் பக்கத்து பெருமாள் கோயிலில் எளிமையாக நடத்துவது என்று தீர்மானித்தார்கள்.

ஆர்த்தியை ஆழ்மன உறக்கத்தில் ஆழ்த்த ப்ரசன்னாவுக்கு சில நிமிடங்கள் தேவைப்பட்டன.

ஆர்த்தி வருவதற்கு சற்று முன் தான், சென்ற செஷனில் ஆர்த்தி சொன்னதை எல்லாம் டேப்பில் ப்ரசன்னா மீண்டும் ஒரு முறை கேட்டிருந்தான். அதைக் கேட்டு விட்டு அவள் கனவுகளையும் ஒரு முறை அலசினான். சென்ற செஷனில் தன் தாய் போனில் பேச பயப்பட்டாள், போனை எடுத்தாலும் பேசாமலேயே வைத்து விட்டாள் என்றெல்லாம் ஆர்த்தி சொல்லியிருந்தாள். ஆனால் கனவில் அவள் தாய் கலவரத்துடன் யாரிடமோ போனில் பேச முயற்சி செய்து கொண்டிருப்பதும் வருகிறது. அது யாரிடம் என்று அறிய எண்ணினான்.

அவளுடைய மூன்று வயது காலத்திற்கு அவளைக் கொண்டு வந்து கேள்விகளை ஆரம்பித்தான்.

"ஆர்த்தி ஒரு நாள் உங்கம்மா யார் கிட்டயோ போன்ல பேச முயற்சி செய்துகிட்டிருக்காங்க. உன்னால் பார்க்க முடியுதா"

"ம்"

"என்ன பார்க்கிறாய்?"

"அம்மா போனை சுத்தறாங்க. வெக்கிறாங்க...சுத்தறாங்க. வெக்கிறாங்க. அவங்க சீலைல மூஞ்சு துடச்சுக்கறாங்க" ஆர்த்தி மழலைக் குரலில் சொன்னாள்.

"பேசலையா?"

"ரொம்ப நே...ர...ம் கழிச்சு தான் பேசறாங்க"

"யார் கிட்ட பேசறாங்க?"

"தெரியல"

"என்ன சொல்றாங்க...?"

"எனக்கு பயமாயிருக்குன்னு சொல்றாங்க.....என்னைக் கொன்னாலும் கொன்னுடுவாங்கன்னு சொல்றாங்க....சொல்லிட்டு அம்மா அழறாங்க. அம்மா பாவம்" ஆர்த்தி சொல்லும் போது கண்களில் இருந்து நீர் வடிந்தது.

"அப்புறம் என்ன சொல்றாங்க?"

"அம்மா என்னை பாத்துட்டாங்க. இங்கிலீசுல பேசறாங்க"

ஆனந்தி தான் சொல்வது தன் மகளுக்குத் தெரியக்கூடாது என்று ஆங்கிலத்தில் பேசுகிறாள் என்பதை ப்ரசன்னா அனுமானித்தான்.

"எத்தனை நேரம் பேசறாங்க?"

"ரொம்ப நேரம்....."

"இங்கிலீஷ்ல பேசறது உனக்கு ஒன்னுமே புரியலயா?"

"அவங்க ஸ்பீடா பேசறாங்க. அதனால தான் எனக்கு புரியல. எனக்கு இங்கிலீசு தெரியும். ஏ பி சி டி....."

ஜேவையும் யூவையும் விட்டு விட்டு 24 எழுத்துகளை மழலையுடன் சொன்ன ஆர்த்தி முகத்தில் பெருமிதம் தெரிந்தது. ஆங்கிலம் தனக்கு புரியவில்லை என்பதை ஒத்துக் கொள்ளாத அந்த மூன்று வயதுக் குழந்தையின் கௌரவம் ப்ரசன்னாவைப் புன்னகைக்க வைத்தது.

"வெரி குட். உனக்கு நல்லா இங்க்லீஷ் வருது. அம்மா ஸ்பீடா பேசுனதுனால தான் உனக்கு அம்மா பேசுனது புரியல. சரி பேசி முடிச்சுட்டு அம்மா என்ன செய்யறாங்க"

"என்னக் கட்டிப்புடிச்சுட்டு அழறாங்க" ஆர்த்தியின் முகத்தில் மறுபடி சோகம் படிந்தது. "நான் தோத்துட்டேன். தோத்துட்டேன்னு சொல்லி அழறாங்க....அம்மா எப்பவுமே அப்புடி அழ மாட்டாங்க" அவள் கண்களில் இருந்து மறுபடி கண்ணீர்.

"உங்கம்மா யார் கிட்ட எல்லாம் இங்கிலீஷ்ல பேசுவாங்க.?"

"அப்பா கிட்ட எப்பவாவது கோவமா இங்கிலீசுல பேசுவாங்க"

"அப்ப அம்மா பேசுனது அப்பா கிட்ட இருக்கலாமா?"

"தெரியில"

ப்ரசன்னா மெல்ல அந்த மழை நாள் சம்பவத்திற்கு வர எண்ணினான். "அம்மா போன்ல பேசிகிட்டு இருந்தப்ப வெளியே மழை இருந்துச்சா ஆர்த்தி?"

"இல்ல"

"சரி ஆர்த்தி உனக்கு மழை பிடிக்குமா?"

"ரொம்ப புடிக்கும். நான் மழைல வெளாடுவேன். ஆனா அம்மா பாத்தா திட்டுவாங்க"

"ஏன்?"

"சளி புடிக்குமாமா"

"மழை கூட இடி மின்னலும் இருந்துதுன்னாலும் பிடிக்குமா?"

ஆர்த்தியின் முகத்தில் பயம் தெரிய ஆரம்பித்தது.

ப்ரசன்னா அமைதியாக தைரியமளிக்கும் தொனியில் பேசினான். "ஆர்த்தி பயப்படாதே. ரிலாக்ஸ்...ரிலாக்ஸ்... நான் உன் கூட இருக்கேன்....பயப்படறதுக்கு ஒண்ணுமேயில்லை...ஓகே... உன் அம்மாவுக்கு யாரோ கெட்டது செஞ்சுருக்காங்க. நீ அவங்கள பத்தி சொன்னா தான் அவங்கள நாம கண்டு பிடிக்க முடியும். அவங்கள கண்டுபிடிச்சா தானே நாம போலிஸ்ல புடிச்சு குடுக்கலாம்..... அம்மாவுக்கு கெட்டது செஞ்சவங்கள போலீஸ்ல புடிச்சு குடுக்கணுமா வேண்டாமா?"

"புடிச்சு குடுக்கணும்"

"அப்படின்னா நீ பயப்படாம சொல்லு. வெளியே நல்லா இடியோடு மழை பெய்யுது. நீயும் அம்மாவும் வீட்டுக்குள்ளே இருக்கீங்க. வெளியே இருந்து யாரோ காலிங் பெல்ல அமுத்திகிட்டே இருக்காங்க....உனக்கு அந்த சத்தம் நல்லாவே கேட்குது. இல்லையா?"

"கேக்குது" ஆர்த்தியின் குரல் மிகப் பலவீனமாக வந்தது.

"அப்புறம் என்ன ஆகுது?"

"அம்மா என்னைக் கட்டிப் புடிச்சு உக்காந்துட்டாங்க. பெல்லு அடிச்சுட்டே இருக்கு"

"அப்புறம்?"

"அம்மா 'விஜயா கதவத் திறக்காதே'ங்கறாங்க" ஆர்த்தியின் குரல் மிகத் தாழ்ந்தே இருந்தது.

"விஜயா யாரு?"

"வேலக்காரி"

"அதுக்கு விஜயா என்ன சொன்னா?"

"விஜயா ஒண்ணும் சொல்லல. அவ போய் குடையை எடுக்கறா?"

"அப்புறம்?"

"வெளிய வேற எதோ சத்தமும் கேக்குது...."

"என்ன சத்தம்? கொஞ்சம் நல்லா கவனிச்சு சொல்லு"

"யாரோ வேண்டாம்...வேண்டாம்னு கத்தறாங்க"

"யாரு?"

"தெரியல"

"அது ஆம்பிள குரலா? பொம்பள குரலா?

"ஆம்பிள குரலு"

ப்ரசன்னா ஒரு கணம் திகைத்தான். இது வரை அவள் கனவு சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஒரு ஆண் அடிபடவில்லை. இப்போது இது என்ன புதுத் தகவல்.

"அவன் யார் கிட்ட சொல்றான்?"

"தெரியல. அம்மா ஜன்னல் வழியா வெளிய பாக்கறாங்க"

"நீயும் பாத்தியா?"

"எனக்கு ஜன்னல் எட்டல"

"அப்புறம்"

"அந்த விஜயா கதவத் திறந்துட்டா"

ஆர்த்தி மூச்சு ஓரிரு வினாடிகள் நின்று போனது. முகம் வெளிற ஆர்த்தி அலறினாள்.

((((((((((()))))))))))

சர்தார்ஜி வேஷத்தில் இருந்த அசோக் சென்னையில் ஒரு கல்லூரியினுள் பவானி நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆரம்பத்தில் இருந்தே அவளைப் பின் தொடர்வது அவனுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. தன்னை ஒருவன் பின் தொடர்வான் என்ற சந்தேகமே அவளுக்கு ஏற்பட்டது போல் தெரியவில்லை.

விமானத்திலும் அவனுக்குப் பக்கவாட்டில் இரு வரிசைகளுக்கு முன்னால் தான் பவானி அமர்ந்திருந்தாள். விமானத்தில் அவள் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் தன் சக பயணிகள் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு முறை கூடத் திரும்பி அவன் பக்கமும் பார்க்கவில்லை. எனவே அங்கும் அவன் தன்னை மறைத்துக் கொள்ளவோ, நடிக்கவோ தேவையிருக்கவில்லை.

விமானத்தில் இருந்து இறங்கியவள் ஒரு நட்சத்திர ஓட்டலுக்குச் சென்று அறையெடுத்துத் தங்கினாள். மறு நாள் காலை 10 மணி வரை வெளியே வரவில்லை. பின் கால் டாக்சியில் இந்தக் கல்லூரிக்கு வந்து இறங்கி உள்ளே போகிறாள்.

அசோக் தானும் உள்ளே சென்றான். பெண்கள் கல்லூரிக்குள் நுழையும் அந்த இளைஞனைக் கேள்வி கேட்க முனைந்த கூர்க்காவை அவன் அலட்சியமாகவும் கடுமையாகவும் பார்க்க கூர்க்கா பின் வாங்கினான். கூர்க்கா அவனை யாரோ அதிகாரி என்று முடிவு கட்டினான். அந்த சர்தார்ஜியின் கம்பீரம் அப்படி இருந்தது. பவானி கல்லூரி அலுவலகத்திற்கு சென்று ஏதோ விசாரிக்க அசோக் சுமார் இருபதடி தள்ளி நின்று தன் பாக்கெட்டில் இருந்த விசிட்டிங் கார்டுகளில் ஏதோ தேடுவது போல் பாவனை செய்தான்.

அலுவலகத்தில் இருந்து ஒரு பியூன் சாவகாசமாக வெளியே வந்து ஏதோ ஒரு வகுப்புக்குப் போய் ஒரு மாணவியை அழைத்து வந்தான்.

பவானியைப் பார்த்த அந்தப் பெண் ஒரு கணம் திகைத்து நின்றாள்.

"நான் பவானி" என்று பவானி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அந்தப் பெண்ணுக்கு அவளைப் பார்த்தவுடன் பேச்சு வரவில்லை. தலையை அசைத்தாள். அவள் பார்வை பவானியின் விலை உயர்ந்த புடவையிலும், நகைகளிலும், கட்டியிருந்த விலை உயர்ந்த கடிகாரத்திலும் தங்கி ஆராய்ந்தது.

தன்னை யார் என்றோ, வந்த காரணம் என்ன என்றோ அந்தப் பெண் கேட்காதது தன்னைப் பற்றி முன்பே தெரிந்திருந்ததால் தான் என்று பவானி அனுமானித்தாள்.

"சாந்தி நான் அப்பாவைப் பார்க்கணும்"

அந்தப் பெண் எச்சிலை விழுங்கினாள். "அப்பாவுக்கு இன்னைக்கு ஆ஼ப். வீட்ல தான் இருக்கார்"

"எனக்கு அட்ரஸ் வேணும் சாந்தி"

அந்தப் பெண் ஒருவித தயக்கத்திற்குப் பின் வீட்டு விலாசத்தை சொன்னாள். எழுதிக் கொண்ட பவானி அவளுக்கு நன்றி சொன்னாள். கிளம்பும் முன் தன் கையில் இருந்த விலை உயர்ந்த கடிகாரத்தைக் கழற்றி அந்தப் பெண் கையில் மாட்டி விட்டாள். அந்தப் பெண் ஆராய்ச்சியில் அதிகம் பார்வை தங்கி இருந்தது அந்த கடிகாரத்தின் மேல் தான்.

அந்தப் பெண் ஒரு கணம் திகைத்து மறு கணம் ஒருவித வெட்கத்துடன் மறுக்க முற்பட்ட போது பவானி புன்னகையுடன் அவளைத் தட்டி கொடுத்து விட்டு நகர்ந்தாள்.

அசோக்கின் காமிரா அவர்கள் அறியாமல் அவர்களை போட்டோ எடுத்தது.

அந்தப் பெண் சிலை போல நின்று பார்க்க, பவானி கல்லூரியை விட்டு வெளியே வந்து டாக்ஸி டிரைவரிடம் அந்த விலாசத்தைத் தர கார் கிளம்பியது. இன்னொரு டாக்ஸி பிடித்து அசோக் அவளைப் பின் தொடர்ந்தான். அரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு பவானி ஒரு சிறிய வீட்டின் முன் இறங்கினாள்.

அந்த வீடு சுண்ணாம்பைக் கண்டு பல வருடங்கள் ஆகி இருக்கும். கதவு கூட சொந்த நிறம் என்ன என்பதைக் கேள்விக்குறியாக்கி இருந்தது. பவானி அந்த வீட்டின் அழுக்குப் பிடித்த அழைப்பு மணியை அழுத்தினாள்.

கதவைத் திறந்த மனிதன் பவானியைப் பார்த்துத் திகைத்து நின்றான்.

கண்கள் கலங்க பவானி சொன்னாள். "என்னை உனக்கு ஞாபகம் இருக்கான்னு தெரியலை. என் பேர் பவானி"

அடிபட்டது போல சிலிர்த்தவன் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்தபடி நின்றான்.

"உள்ளே வரச் சொல்ல மாட்டாயா?"

அவன் உள்ளே வரச் சொல்லவுமில்லை. விலகி அவள் வர வழி விடவுமில்லை. ஒரே கேள்வியைக் கேட்டான். "நீ இங்கே வந்தது உங்கம்மாவுக்குத் தெரியுமா?" அவன் குரலில் பீதி இருந்தது.

"அம்மாவுக்குத் தெரியாது" என்றாள் பவானி.

அவன் நிம்மதியடைந்தது போலத் தெரிந்தது. "உள்ளே வா" என்றான்.

அவர்களை ஒரு காமிரா போட்டோ பிடித்ததை இருவரும் அறியவில்லை.

## 94

"The evil of the world is made possible by nothing but the sanction [that] you give it."

– Ayn Rand

பவானி உள்ளே நுழைந்தாள். வீடு மிகச் சிறியதாக இருந்தது. சிறிய இரண்டு அறைகள், ஒரு சமையலறை தான் இருந்தன. "வீட்டுல வேற யாரும் இல்லையா?"

"என் பொண்டாட்டி செங்கல்பட்டுல ஒரு கல்யாணத்துக்குப் போயிருக்கா. பொண்ணு காலேஜுக்குப் போயிருக்கா. உட்கார்"

"உன் பொண்ணைப் பார்த்துட்டு தான் வர்றேன்"

அவன் கண்களை மூடிக் கொண்டு சில வினாடிகள் மௌனமாக இருந்தான். பின் பேசிய போது குரல் கரகரத்தது. "சன் டிவில பார்த்துட்டே இல்லையா?"

அவள் தலையசைத்தாள். கண்கள் கலங்க சொன்னாள். "உயிரோட இருக்கேன்னு ஒரு தபால் கார்டு போட்டுருக்கலாம். என்னோட எத்தனையோ கண்ணீர் மிச்சமாயிருக்கும்"

"உனக்கு மட்டும் தெரிய வாய்ப்புருக்குன்னா கண்டிப்பா நான் போட்டுருப்பேன். உனக்குத் தெரிஞ்ச எதுவுமே உங்கம்மாவுக்குத் தெரியாமப் போகாது பவானி"

"ஏன் உங்கம்மா, உங்கம்மான்னு பிரிச்சு சொல்றே. அவங்க உனக்கு அம்மா இல்லையா?"

பவானியின் அண்ணன் இளங்கோ அதற்கு பதில் சொல்லவில்லை. "நம்ம அப்பா எப்படி செத்தார்னு மறந்துட்டியா பவானி?"

சிறிது நேரம் இருவராலும் பேச முடியவில்லை. பஞ்சவர்ணம் தன் கணவனிடம் ஒருநாள் பலத்த வாக்குவாதத்திற்குப் பிறகு சொன்ன வார்த்தைகள் இப்போதும் வார்த்தைக்கு வார்த்தை அவர்களுக்கு நினைவிருந்தது. "இதோ பாருய்யா. சும்மா ஏன் அவன் கூட போனாய், இவன் கூட படுத்தாய்னு இன்னொரு தடவை கேட்டால் நான் பொல்லாதவளாயிடுவேன். லட்சக்கணக்கில சம்பாதிச்சுட்டு வந்து நின்னா நான் ஏன் போறேன். நீ சம்பளம்கிற பேர்ல வாங்கிட்டு வர்ற பிச்சைக்காசுக்கு, நீ வாயைத் திறக்கக் கூடாது"

அவள் பேசும் போது பின்னால் வந்து நின்ற மகனையும் மகளையும் பார்க்கவில்லை. ஆனால் அவள் கணவன் அவர்களைப் பார்த்து விட்டார். அவமானத்தில் தலை குனிந்தவர் பிறகு வாயைத் திறக்கவில்லை. மறுநாள் காலை தூக்கில் தொங்கி அவர் பிணமாய் இருந்தார்.

இளங்கோ சொன்னான். "அன்னைக்கு ஏற்பட்ட வெறுப்பு அதிகமாய் அதிகமாய் கடைசில பதினெட்டு வருஷங்களுக்கு முன்னால் மனசுக்குள்ள பந்தத்தையே அறுத்துடுச்சு"

"என்னை எப்பவாவது நினைச்சுப் பார்த்தியான்னா?"

இளங்கோ ஷோகேஸைக் காண்பித்தான். அதில் பவானியின் புகைப்படமும், மூர்த்தியின் குழந்தைப்பருவப் புகைப்படமும் இருந்தன. பார்த்தவுடன் பவானியின் மனம் நெகிழ்ந்தது. தன்னைப் பார்த்தவுடன் அண்ணனின் மகள் அடையாளம் கண்டு கொண்டது எப்படி என்று இப்போது புரிந்தது.

"அண்ணா நீ ஓடிப் போறப்ப உன் குழந்தையைக் கூட எடுத்துட்டு போயிருக்கலாமே"

"எடுத்துட்டு வரணும்னு தான் நினைச்சேன் பவானி. ஆனா அவன் உங்கம்மா கிட்ட இருந்தான். உங்கம்மாவைத் திரும்பப் பார்க்க எனக்குப் பிடிக்கல. அப்புறம் நீ இருக்கிறாய். அவனை நல்லா

பார்த்துக்குவாய்னு தோணிச்சு. அப்ப யோசித்து பார்க்கற மனநிலையிலயும் நான் இல்லை. சிவகாமி காரைப் பார்த்துட்டு அலறி அடிச்சுட்டு ஓடினவன் தான். அப்புறம் திரும்பிப் பார்க்கல"

"அவனை என் கையில அம்மா கொடுக்கலை. நான் பலவீனமாய் வளர்த்துடுவேனாம்....அம்மா நீயும் அண்ணியும் செத்திருப்பீங்கன்னு ரொம்ப நாள் நம்பலை. திடீர்னு ஒரு நாள் வந்து நிப்பீங்கன்னு நினைச்சுட்டு இருந்தாங்க. நீ ஏன் அண்ணா ஓடி வந்தே?"

"முதல்ல பயம் தான் காரணம் பவானி. சிவகாமி மேல் இருக்கிற பயம். உனக்கு அந்தம்மாவைத் தெரியாது. குடும்பத்துக்குள்ள இருக்கிற சிவகாமி வேற. வெளியில் வர்ற சிவகாமி வேற. நான் அந்தம்மா கம்பெனில தான் வேலை பார்த்தேன்கிறது உனக்கு ஞாபகம் இருக்கலாம். கை நிறைய சம்பளம், போனஸ், குழந்தைகள் படிக்க பணம்னு கொடுக்கறதுல அந்தம்மாவுக்கு மிஞ்சற ஆள் கிடையாது. ஆனா அதே சமயம் யாராவது கம்பெனி பணத்தைக் கையாடிட்டான், துரோகம் செஞ்சுட்டான்னு மட்டும் தெரிஞ்சுதுன்னா அந்தம்மா சொரூபமே மாறிடும் பவானி. போலீஸ், கோர்ட்டுன்னு எல்லாம் அந்தம்மா போகாது. அந்தம்மா தான் கோர்ட்டு. அந்தம்மா தான் போலீஸ், அந்தம்மா நினைக்கிறது தான் தீர்ப்பு. சில ஆளுங்க என்னமா ஆனானுங்கன்னு நான் என் கண்ணால பார்த்திருக்கேன் பவானி.... செய்யறது எல்லாம் செய்துட்டு ஒண்ணுமே நடக்காத மாதிரி நடந்துக்கறதையும் நான் பார்த்துருக்கேன்."

"அந்த நேபாளம் தான் அந்தம்மாவோட வலது கை பவானி. அந்தம்மாவுக்கு ஆகாதவங்கள அவன் எப்படி கையாள்வான்னு நான் நேரில் பார்த்திருக்கேன். கொஞ்ச நாளுக்கு முன்னால் ஒரு வேளையா கோயமுத்தூர்க்கு வந்தவன் ஒரு சிக்னல்ல கார்ல வந்துட்டிருந்த அவனைப் பார்த்துட்டு தலை தெறிக்க ஓடினேன் தெரியுமா? அந்தம்மா எதையும் மறக்கற ரகம் இல்ல. நீயும் உங்கம்மாவும் எரிமலைக்கு மேல தான் உட்கார்ந்திருக்கீங்க பவானி. அது எந்நேரமும் வெடிக்கலாம். நான் உன்கிட்ட அப்பவே சொல்லிகிட்டு இருந்தேன். அப்படி இருக்கறவ தம்பி கூட நீ ஒரு தேவையில்லாத தொடர்பு வச்சுகிட்டது சரியில்லை பவானி...."

பவானி ஒன்றும் சொல்லவில்லை. சந்திரசேகர் அந்த நாட்களில் ஆனந்தியை விவாகரத்து செய்யப்போவதாய் சொல்லிக் கொண்டிருந்தார். பார்க்க அழகாகவும், கோடீஸ்வரனாகவும் இருந்த அவர் மீது அவளுக்கு ஒருவித மையல் வந்ததில் ஆச்சரியம் இல்லை. பஞ்சவர்ணம் அதைப் பட்டவர்த்தனமாக ஆதரித்தாள். இளங்கோ ஒருவன் தான் அதை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தவன். அண்ணன் மீது அவள் நிறையவே பாசம் கொண்டிருந்தாலும் இந்த விஷயத்தில் அவன் பேச்சைக் கேட்கவில்லை.....

"நீ எப்போ இன்னொரு கல்யாணம் செய்துகிட்டாய்" பவானி கேட்டாள்

"ஒரு வருஷம் கழிச்சு. பழசு எல்லாத்தையும் அழிச்சுட்டு வாழ்க்கையைப் புதுசா ஆரம்பிச்சேன். பண வசதி கம்மியின்னாலும் சந்தோஷமாய் இருக்கேன். பவானி நீ சந்தோஷமாய் இருக்கிறியா?"

அந்தச் சின்னக் கேள்வி அவளை அடுத்த கணம் குமுறிக் குமுறி அழ வைத்தது. முகத்தை மூடிக் கொண்டு அழுதபடி சொன்னாள். "நகைக்கடை..... ஜவுளிக்கடை..... பொம்மையாட்டம் இருக்கேன்..."

அவள் அழுது ஓய்ந்த போது இளங்கோ சொன்னான். "ஆனா ஒரு மனைவிங்கற அந்தஸ்தோட அங்கே உன்னை அந்தம்மா உட்கார வைக்கும்னு நான் எதிர்பார்க்கலை. நான் உன்னையும், உங்கம்மாவையும் சுட்டுக் கொன்னு அன்னிக்கு மழையில செத்துப் போன பிணங்களோட போட்டுருப்பான்னு நினைச்சேன். அப்படியெல்லாம் செய்யாமல் விட்டதும், உங்கம்மாவை அந்த

வீட்டுல உக்கார வச்சதும் ஏன்னு எனக்கு இன்னும் புரியல. அந்தம்மா கேரக்டருக்கு இது ஒத்துப் போகல...."

கல்யாணமான புதிதில் சந்திரசேகரின் கட்டாயத்தின் பேரில் தான் தங்கள் திருமணம் நடந்ததென பவானி நம்பியிருந்தாள். பின் தான் புரிந்தது, சிவகாமி லேசாக முகம் சுளித்திருந்தால் போதும் சந்திரசேகர் பவானி என்ற ஒருத்தி இருப்பதையே மறந்திருப்பார் என்று. பின் எப்படி தங்கள் கல்யாணம் நடந்ததென்ற கேள்விக்கு அவளுக்கு இன்றும் பதில் கிடைக்கவில்லை.

இளங்கோ ஆர்வமாகக் கேட்டான். "உங்கம்மாவுக்கும், அந்தம்மாவுக்கும் ஒத்துப் போகுதா?"

பவானி அங்கு வந்த பிறகு முதல் முறையாகப் புன்னகை பூத்தாள். "அம்மா ஆரம்பத்துல கொஞ்சம் கொஞ்சமா அந்த வீட்டு அதிகாரத்தைப் பிடிக்கலாம்னு பார்த்தாங்க. ஆனா பெரியக்கா ஆரம்பத்துலயே சொல்லிட்டாங்க. "என் வீட்டுல விருந்தாளி விருந்தாளி மாதிரி தான் இருக்கணும். அதுக்கும் அதிகமா நடந்துகிட்டா எனக்குப் பிடிக்காது"ன்னு. அன்னிக்கு தன்னோட ரூம்ல போய் அடைஞ்சுகிட்டவங்க அதிகமா வெளியே வர்றதில்லை. ஆனா என்னிக்காவது ஒரு நாள் பழி வாங்காம விட மாட்டேன்னு அடிக்கடி சொல்றாங்க. புதுசு புதுசா திட்டம் போடறாங்க..."

"ஒரு தடவை போட்ட திட்டம் எதுல போய் முடிஞ்சதுன்னு தெரிஞ்ச பிறகும் உங்கம்மாவுக்கு புத்தி வரலை"

"அதுல அம்மா என்ன திட்டம் போட்டாங்க. அன்னிக்கு என்ன தான் நடந்தது?"

இளங்கோ தங்கையை சந்தேகத்தோடு பார்த்தான். "உனக்கு நிஜமாவே தெரியாதா?"

"சத்தியமா தெரியாது. அம்மாவைப் பொறுத்த வரை நான் பலவீனமானவள். அதனால் என் கிட்ட எதுவும் சொல்றதில்லை. நீ எதிர்த்துப் பேசறவன்னு உன் கிட்டயும் சொல்ல மாட்டாங்களே. பிறகு உனக்கெப்படி தெரியும்"

"உங்க அண்ணி சொன்னா..."

"அண்ணி என்ன ஆனாங்க?"

"தெரியல.."

"அண்ணா அந்த நாள் அப்படி என்ன தான் ஆச்சு?"

சிறிது நேரம் தங்கையையே பார்த்து அமர்ந்திருந்த இளங்கோவுக்கு அவளை எண்ணுகையில் பாவமாக இருந்தது. நடந்ததில் அவளுக்கும் பங்கு இருக்கும் என்று சந்தேகித்தது தவறு என்பது புரிந்தது.

"ஆரம்பம் மட்டும் தான் எனக்கும் தெரியும் பவானி..." என்று ஆரம்பித்தவன் அந்த மழைநாளில் அவனுக்குத் தெரிந்து நடந்த சம்பவங்களைப் பற்றி சொல்ல ஆரம்பித்தான்.....

((((((((((()))))))))))

ஆர்த்தியின் அலறலைக் கேட்டு ஆகாஷ் மின்னல் வேகத்தில் எழுந்து உள்ளே ஓட முயற்சிக்க, அந்த செக்ரட்டரி பாய்ந்து வந்து அவனைத் தடுத்தாள்.

"நீங்க போகக்கூடாது ஆகாஷ். நீங்க போனா விபரீதமா எதாவது நடந்தாலும் நடக்கும். இந்த ஸ்டேஜில் பேஷண்டை எப்படி ஹேண்டில் செய்யறதுன்னு டாக்டருக்குத் தெரியும். போய் டிஸ்டர்ப் செய்யாதீங்க"

என்ன தான் வழிந்தாலும் தன் வேலையில் கச்சிதமாக இருக்கிறாள் என்று நினைத்துக் கொண்ட ஆகாஷ் ஆர்த்தியைப் பற்றிய கவலையுடன் வேண்டா வெறுப்பாகத் தன் இருக்கையில் போய் அமர்ந்தான். சென்ற முறை கூட ஒன்றும் ஆகவில்லையே இப்போது ஏனிப்படி ஆயிற்று?

ப்ரசன்னாவும் அந்த அலறலை எதிர்பார்த்திருக்கவில்லை. ஆழ்மன உறக்கத்திலிருந்து விழித்து விடப்போகிறாள் என்று பயந்தவனாக, உடனடியாக சத்தமாக அதே நேரம் தைரியப்படுத்தும் வகையில் சொன்னான்.

"ஆர்த்தி பயப்பட ஒண்ணுமேயில்லை. நான் கூட இருக்கேன். தைரியமாயிரு. ரிலாக்ஸ்.....ரிலாக்ஸ்...."

நல்ல வேளையாக ஆர்த்தி ஆழ்மன உறக்கத்திலிருந்து வெளி வரவில்லை. ஆனால் தைரியமானது போலவும் தெரியவில்லை. அவள் முகத்தில் இன்னும் பயம் விலகவில்லை.

"ஆர்த்தி...விஜயா கதவைத் திறந்துட்டா. யார் உள்ளே வந்திருக்காங்க பார்"

ஆர்த்தியின் உதடுகள் அசைந்தன. ஆனால் சத்தம் வெளியே வரவில்லை. ப்ரசன்னா இரண்டு முறை கேட்டும் அவள் பேசவில்லை. அவள் உடல் லேசாக நடுங்கியது...

ப்ரசன்னா அதைப் பின் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தான். அவளுடைய கனவின் இன்னொரு பகுதியை எடுத்துக் கொண்டான். "ஆர்த்தி யாரோ வேகமா ஓடி வர்றாங்க. சத்தம் உனக்குக் கேட்குதா"

ஆர்த்தி மெல்ல முணுமுணுத்தாள். "கேட்குது"

"யாரது ஆர்த்தி?"

"தெரியல. என்னால பாக்க முடியல. இருட்டா இருக்கு"

ப்ரசன்னாவை அந்தப் பதில் திகைப்படைய வைத்தது. இது வேறு ஒரு நாள் நிகழ்ச்சியா? இல்லை அவள் அந்த சமயத்தில் இருட்டறையில் இருக்கிறாளா? ஆனாலும் தொடர்ந்து கேட்டான்.

"ஓடி வந்த ஆள் ஏதாவது பேசறாங்களா ஆர்த்தி"

"இல்ல....ஆனா பின்னாடியே நடந்து வந்தவங்க சொல்றாங்க. "குழந்தையை முதல்ல எடுத்துட்டு போ"ன்னு"

"அப்படி சொன்னது யார் ஆர்த்தி. உனக்கு அந்தக் குரல் யாரோடதுன்னு தெரியுமா?"

"ம்"

"யாரோடது"

"அக்காவோடது"

"அக்காவா? எந்த அக்கா"

"அப்பா அம்மாவோட அக்கா"

## 95

Strike the enemy when he is in disorder.
Avoid the enemy when he is stronger.
If your opponent has a temper, irritate him.
If he is arrogant, encourage his egotism.
Attack the enemy when he is unprepared.

- Sun Tzu

ஆர்த்தி வெளியே வரும் வரை ஆகாஷிற்கு இருப்பு கொள்ளவில்லை. ஒரு தடவை கேட்டதற்குப் பிறகு மீண்டும் அந்த அலறல் கேட்கவில்லை. அதை எப்படி எடுத்துக் கொள்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. ஊட்டிக்கு வந்த ஆரம்பத்தில் அவள் கனவில் இருந்து விழித்து அழுது கொண்டு உட்கார்ந்தது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அப்படி அழுது கொண்டு அமர்ந்திருப்பாளோ? அந்த நாள் அவன் தோள்களில் சாய்ந்து கொண்டு அழுதாள். இப்போது ப்ரசன்னா தோளில் சாய்ந்து கொண்டு அழுது கொண்டிருப்பாளோ? அந்த எண்ணமே கசந்தது. ப்ரசன்னா டாக்டர் என்பதையும் மீறி அவன் மீது பொறாமையாக இருந்தது.

இந்த மாதிரி சிகிச்சைகளுக்கெல்லாம் பெண் டாக்டர்களிடம் அழைத்துப் போவது தான் நல்லது என்று தோன்றியது. மேலும் சில மனம் சம்பந்தமான கேஸ்களில் பேஷண்டிற்கு டாக்டர் மீது ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விடுவதாக எங்கோ படித்தது நினைவுக்கு வந்து தொலைய அவன் பொறாமைத் தீயில் வேக ஆரம்பித்தான்.

ஆர்த்தி வெளியே வந்த போது புன்னகையுடன் இருந்தாள். அதைப் பார்த்தவுடன் ஏக காலத்தில் நிம்மதியும், கோபமும் அவனுள் எழுந்தன. இண்டர்காமில் பேசிய செக்ரட்டரி "ஆகாஷ் உங்களை இரண்டு நிமிஷம் டாக்டர் கூப்பிடறார்" என்று சொல்ல ஆர்த்தியைக் கண்டு கொள்ளாமல் ஆகாஷ் உள்ளே போனான். உள்ளே ப்ரசன்னா முகத்தில் ஒருவித திருப்தி தெரிந்தது. ஆர்த்தியின் புன்னகையைப் பார்த்து விட்டு வந்த ஆகாஷிற்கு ப்ரசன்னாவின் திருப்தி அடிவயிற்றைக் கலக்கியது. அவன் முகம் போன போக்கைப் பார்த்த ப்ரசன்னா வாய் விட்டுச் சிரித்தான்.

"டேய் நான் ஒரு டாக்டர்டா. அதுவும் உன் ப்ரண்டுடா"

ஆகாஷ் ஒரு கணம் அசந்து போனான். ஒரு நோட்டத்திலேயே தன் எண்ணங்களை எப்படி இவனால் கண்டுபிடிக்க முடிகிறது என்று வியந்தவன் மறு கணம் அமைதியாக நண்பனிடம் கேட்டான். "இப்ப எதுக்கு இதை சொல்றே"

ப்ரசன்னா சிரித்தபடியே சொன்னான். "இது உன் தப்பு இல்லை. காதல் வந்தாலே இப்படித் தான்"

ஆகாஷ் லேசாக அசட்டுப் புன்னகை பூத்து "நீ என்ன சொல்ல வர்றேன்னு எனக்குத் தெரியலை. சரி எதுக்குக் கூப்பிட்டாய்னு சொல்லு"

இனி மூன்று பேஷண்டுகளைப் பார்க்க வேண்டும் என்பதால் ப்ரசன்னா அவனிடம் வம்புக்குப் போகாமல் விஷயத்துக்கு வந்தான். "இன்னும் ஒரு செஷன்ல அவள் கனவுகளோட காரணங்களை முழுசா தெரிஞ்சுக்கலாம். அப்புறமா அவள் ஆழ்மனசை அமைதிப்படுத்தி அந்தக் கனவுகள் வராமல் பார்த்துக்க ஒரு செஷன் தேவைப்படும். நான் நினைச்சதை விட நல்ல முன்னேற்றம் இருக்கு."

அவன் திருப்திக்குக் காரணம் தெரிய வந்த போது ஆகாஷிற்குத் தன் மேலேயே கோபம் வந்தது. "தேங்க்ஸ்டா"

வெளியே வந்த போது தன் மீதே வந்த கோபம் ஆர்த்தி மீது மாறியது. என்னை இப்படிப் பைத்தியமாக்கிட்டாளே. வெளியே வந்த ஆகாஷிடம் செக்ரட்டரி நளினி "ஹாய் ஆகாஷ். சென்ட்ரல் தியேட்டர்ல மூணாவது தடவையா டைட்டானிக் போட்டுருக்கான். கூட்டமே இருக்காது. என்னைக் கூட்டிகிட்டு போறீங்களா?"

ஆகாஷின் அப்போதைய மனநிலை அவனைப் பேச வத்தது. "போலாமே. வர்ற சண்டே போலாமா?"

நளினி இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. "கண்டிப்பா தானே. சண்டே ப்ர்ஸ்ட் ஷோக்கு டிக்கெட் புக் செய்து வைக்கட்டா"

ஆகாஷ் தன் பர்ஸிலிருந்து ஒரு ஐநூறு ரூபாய் தாளை எடுத்து அவளிடம் தந்தான். "ஷ்யூர். ரெண்டு பால்கனி டிக்கெட் புக் பண்ணிடு"

திரும்பி வருகையில் ஆர்த்தியின் முகத்தை அவனால் பார்க்க சகிக்கவில்லை. சிறிது நேரத்திற்கு முன் இருந்த புன்னகை போய் தன்னுடைய பழைய மனநிலையில் அவள் இப்போது இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. வழக்கமாக நிம்மதியாக கண்ணயரும் அவள் ஊட்டி வந்து சேரும் வரை தூங்கவுமில்லை, தன் முகத்தை ஜன்னல் பக்கமிருந்து திருப்பவுமில்லை. 'தியேட்டரில் கூட்டமே இருக்காது. என்னைக் கூட்டிகிட்டுப் போறீங்களா?' என்று ஒரு பெண் ஒரு அன்னியனைப் பார்த்துக் கேட்கிறாளே. இவரும் சரி என்று ரிசர்வ் செய்யக் காசைத் தருகிறாரே. என்று உள்ளே அவள் குமுறிக் கொண்டிருந்தாள்.

இத்தனை நாட்கள் எவ்வளவு தான் ஆகாஷ் கோபப்பட்டாலும் பதிலுக்கு ஆர்த்தி கோபப்பட்டதில்லை. அவன் ஒரு சிறு புன்னகை பூத்து விட்டால் எல்லாவற்றையும் மறந்து விடும் ஆர்த்தியின் இந்தக் கோபம் ஆகாஷிற்கு சிறிது சந்தோஷத்தைக் கொடுத்தது. பொறாமை அந்தப் பக்கமும் இருக்கிறது. அதே நேரத்தில் கொஞ்சம் ஓவராகப் போய் விட்டோமோ என்ற சந்தேகமும் அவனுக்கு வந்தது.

++++++++++++++++

அசோக் ஒரு பெரிய கவர் ஒன்றைத் தந்து மூர்த்தி கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டான்.

"அந்தம்மா யார் யாரைப் பார்த்தாங்கங்கறது போட்டோ, அட்ரஸோட உள்ளே இருக்கு. முதல்ல ஒரு காலேஜ் பொண்ணைப் பார்த்துட்டு அவள் கிட்ட அட்ரஸ் வாங்கிட்டு அவள் அப்பாவைப் போய் பார்த்தாங்க. ரொம்ப நேரம் அந்த ஆள் கூட வீட்டுகுள்ளேயே இருந்து பேசிகிட்டு இருந்தாங்க. சாயங்காலம் அந்தப் பொண்ணும், அந்த ஆள் பொண்டாட்டியும் வந்த பிறகு நாலு பேரும் பீச்சுக்குப் போனாங்க. அதுக்கப்பறம் பாலோ செய்யறதுல அர்த்தம் இல்லை, இனி யாரையும் பார்க்கப் போறதில்லைன்னு புரிஞ்சுடுச்சு. நான் கிளம்பி வந்துட்டேன்."

"அந்த ஆள் யார்? என்னவா இருக்கான்?"

"சென்னையில் ஒரு கெமிக்கல் கம்பெனி பேக்டரியில் மெக்கானிக்காய் இருக்கான். அந்த பேக்டரி அட்ரஸும் உள்ளே இருக்கு. ஓகே. நாளைக்கு சாயங்காலம் அஞ்சரை மணிக்கு கார்டன் வாசல்ல பணத்தோட நில்லு. அந்த ஹிப்னாடிஸ சிடியோட வர்றேன்."

அடுத்து ஒரு வார்த்தை கூட பேசாமல் அவன் போய் விட்டான்.

++++++++++++++++++

நேற்று வீட்டுக்கு வந்ததிலிருந்து ஆர்த்தியின் மாறாத முக வாட்டத்தைக் கண்ட பார்வதிக்கு திக் என்றது. டாக்டரிடம் போய் விட்டு வந்த பின் இந்த வாட்டம் என்பதால் பேத்தியிடம் கவலையுடன் கேட்டாள். "என்ன ஆர்த்தி இன்னைக்கு ரொம்பவே வாட்டமாயிருக்கிறாய்.?"

ஆர்த்திக்கு யாரிடமாவது சொல்லா விட்டால் தலை வெடித்து விடும் போல் இருந்தது. பாட்டியிடம் நளினி ஆகாஷ் விவகாரத்தைச் சொன்ன போது பார்வதிக்கு சிரிப்பு வந்து விட்டது. "இவ்வளவு தானா விஷயம்" என்றாள்.

"என்ன பாட்டி இது என்ன சின்ன விஷயமா?" ஆர்த்திக்கு பாட்டி அதை எடுத்துக் கொண்ட விதம் ஏமாற்றத்தை அளித்தது.

"அசடு. சும்மா அவன் உன்னை சீண்டறான் அவ்வளவு தான். அதைப் புரிஞ்சுக்காம கோபப்படறாய். நீ யார் கூடவாவது சினிமாவுக்குப் போ. அவனுக்கும் இப்படி தான் பொறாமையாய் இருக்கும்"

"எனக்கு ஒண்ணும் பொறாமை இல்லை"

"சரி விடு. எனக்குத் தான் பொறாமை"

சமயசந்தர்ப்பம் தெரியாமல் கிண்டல் செய்யும் பாட்டி மேலும் ஆர்த்திக்குக் கோபம் வந்தது. "போங்க பாட்டி"

அசோக் தந்த கவரைப் பிரித்துக் கூட பார்க்காமல் பாட்டியிடம் தர வீட்டுக்கு வந்த மூர்த்தி பாட்டியின் அறைக்குப் போகும் வழியில் ஆர்த்தியின் அறையில் ஓட்டுக் கேட்ட அந்தத் தகவலை எடுத்துக் கொண்டு பஞ்சவர்ணத்திடம் போனான். பஞ்சவர்ணம் கேட்டு சந்தோஷப்பட்டாள். "விதி நமக்கு சாதகமா இருக்குடா?"

"எப்படி"

"வர்ற ஞாயித்துக் கிழமைன்னா சிவகாமி பம்பாய் போயிருப்பா. நான் அன்னைக்கு சொன்ன திட்டத்தை செயல்படுத்த அந்த நாள் அருமையான சந்தர்ப்பம். நீ சந்தேகத்தை ஏற்படுத்தாம சரியான விதத்துல கூப்பிட்டாய்னா ஆர்த்தி கண்டிப்பா வருவா. நீ அதுக்கு ஆள்களை முதல்லயே ரெடி செஞ்சுடு. சரியான ஆள்கள் இருக்காங்களா? இல்லாட்டி அந்த அசோக் கிட்டயே ஏற்பாடு செய்யச் சொல்லு. பணம் போனா பரவாயில்லை"

"வேண்டாம் பாட்டி. அதுக்குத் தேவையான ஆள்கள் எங்கிட்டயே இருக்கானுக. எல்லாத்துக்கும் அவன் கிட்டயே போறது அவ்வளவு நல்லதில்லன்னு தோணுது...."

"சரி. உன் இஷ்டம். ஆனா கச்சிதமா செய்யணும். சொதப்பக் கூடாது. ஞாபகம் வச்சுக்கோ. எதுலயுமே டைமிங் தான் ரொம்ப முக்கியம். எதிரியை எந்த நேரத்துல எப்படித் தாக்கணும்கிறதுல எப்பவுமே தெளிவா இருக்கணும். நீ இடத்தையும் ஆள்களையும் தீர்மானிச்சு என் கிட்ட நாளைக்குள்ள சொல்லு. சிவகாமி வெளியூர் கிளம்பிப் போகிற வரை ஆர்த்தி கிட்ட எதுவும் மூச்சு விடாதே.... சரி பவானி யாரைப் பார்த்தாள்னு அசோக் சொன்னான்"

"யாரோ கெமிக்கல் பேக்டரி மெக்கானிக்காம். உள்ளே போட்டோவும், அட்ரஸும் இருக்காம்"

"மெக்கானிக்கா?" என்று முகம் சுளித்த பஞ்சவர்ணம் ஆர்வத்துடன் கவரைப் பிரித்தாள். முதல் போட்டோவில் பவானி ஒரு கல்லூரி மாணவி கையில் தன் விலையுயர்ந்த கடிகாரத்தைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

"இது யாருடா?"

"அந்த மெக்கானிக் மகளாம். இவ கிட்ட அட்ரஸ் வாங்கிகிட்டு தான் அந்த மெக்கானிக்கைப் பார்க்கப் போயிருக்காங்க"

"ரொம்ப தாராளமா குடுக்கறா. நாம ஏதாவது கேட்டா, அக்காங்கறா, புருஷன்கிறா, தெரிஞ்சா பிரச்சினைங்கறா...:" என்று சொல்லியபடியே அடுத்த போட்டோவை எடுத்த பஞ்சவர்ணம் தீயைத் தொட்டது போல போட்டோக்களை நழுவ விட்டாள்.

பாட்டி அதிர்ச்சியாகி இது வரை பார்த்திருக்காத மூர்த்தி கீழே சிதறி இருந்த போட்டோக்களை ஆச்சரியத்தோடு பார்த்தான். "அந்த ஆள் அப்... அப்பா மாதிரி இல்லை"

பஞ்சவர்ணம் அந்தப் புகைப்படங்களை வெறித்துப் பார்த்தபடி சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். பேரன் சொன்னதற்குப் பதிலாக எதையும் சொல்லவில்லை. பிறகு மெள்ள தன்னை சுதாரித்துக் கொண்டு தானே குனிந்து சிதறியிருந்த புகைப்படங்களை எடுக்க ஆரம்பித்தாள். பாட்டியளவு சுதாரிக்கும் சக்தியில்லாத மூர்த்தி சிலை போல நின்று அந்தப் புகைப்படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பஞ்சவர்ணம் நிதானமாக ஒவ்வொரு புகைப்படத்தையும் குறைந்தது ஐந்தந்து நிமிடங்களாவது உற்றுப் பார்த்தாள். இரண்டாம் புகைப்படத்தில் பவானியும் இளங்கோவும் ஒரு வீட்டு வாசலில் நின்று இருந்தனர். மூன்றாவது புகைப்படத்தில் பவானி, இளங்கோ, அவனது இரண்டாம் மனைவி, மகள் நான்கு பேரும் வீட்டிலிருந்து வெளியே வந்துகொண்டிருந்தனர். நான்காவது புகைப்படத்தில் கடற்கரையில் அந்த நான்கு பேரும் மகிழ்ச்சியாக கடலலையில் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

பாட்டி பார்த்த புகைப்படங்களை அவள் பின் நின்றபடி தானும் பார்த்த மூர்த்தி கடைசியில் ஈனசுரத்தில் கேட்டான். "அப்படின்னா அம்மா?"

பஞ்சவர்ணத்திடமிருந்து அவனுக்கு பதில் கிடைக்கவில்லை.

–பவானி வீட்டுக்கு வந்து சேர்ந்த ஒரு மணி நேரத்திற்குள் பஞ்சவர்ணத்தால் அழைக்கப்பட்டாள். மூர்த்தி பாட்டி அருகில் நின்று கொண்டு பவானியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"கனிமொழி வீட்டுக்காரர் எப்படியிருக்கார்?" பஞ்சவர்ணம் மகளிடம் கேட்டாள்.

பவானி சொன்னாள். "இப்ப பரவாயில்லை"

பஞ்சவர்ணம் அசோக் எடுத்த போட்டோக்களை மகளிடம் கொடுத்தாள். "இதுல கனிமொழி யாரு அவங்க வீட்டுக்காரர் யாரு?"

பவானிக்கு சில வினாடிகள் இதயம் ஸ்தம்பித்துப் போயிற்று. தன் தாய் தன்னைப் பின்தொடர ஒரு ஆளை ஏற்பாடு செய்திருப்பாள் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. ஏன் உயிருடன் இருப்பதை எனக்குத் தெரிவிக்கவில்லை என்று அவள் கேட்ட போது இளங்கோ சொன்ன பதில் நினைவுக்கு வந்தது. "உனக்குத் தெரிஞ்ச எதுவுமே உங்கம்மாவுக்குத் தெரியாமப் போகாது பவானி".

ஆனால் அந்த அதிர்ச்சி அவளிடம் நிறைய நேரம் நீடிக்கவில்லை. ஏதோ ஒருவித நிம்மதியே பிறகு மிஞ்சியது. எத்தனை நாட்கள் மறைக்க முடியும்? இன்றில்லா விட்டாலும் நாளை தெரியத்தான் போகிறது.... பீச்சில் எடுத்த போட்டோவில் நான்கு பேரும் மிக மகிழ்ச்சியாக இருந்தது அழகாக வந்திருந்தது. இரண்டாவது அண்ணியும் சரி, அண்ணனின் மகளும் சரி மிக அன்பானவர்களாக இருந்தார்கள். மனம் விட்டுப் பேசினார்கள். பவானியும் பெருமையாக ஆர்த்தியின் அழகைப் பற்றியும் அவளுடைய தங்கமான குணத்தைப் பற்றியும் அவர்களிடம் சொன்னாள். அவளுக்குப் பெருமையாகப் பேச வேறொன்றும் இருக்கவில்லை...

"தூங்கிட்டியா" பஞ்சவர்ணம் அவள் நினைவுகளைக் கலைத்தாள்.

"இல்லை"

"ஆரம்பத்துல இருந்து சொல்லு...."

பவானி பெருமூச்சு விட்டு ஆரம்பத்திலிருந்து சொன்னாள். தந்தையின் மறைவை அவர்கள் நினைவு கூர்ந்ததையும், பஞ்சவர்ணத்தைப் பற்றி இளங்கோ வெறுப்புடன் சொன்னவைகளையும் தவிர்த்து மற்றதை அப்படியே சொன்னாள்.

அவள் முடித்த போது பஞ்சவர்ணம் முகத்தில் அவள் இது வரை கண்டறியாத தளர்ச்சி தெரிந்தது. பஞ்சவர்ணம் கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பவானிக்கு முதல் முறையாகத் தன் தாய் மேல் பச்சாதாபம் தோன்றியது.

"அப்படின்னா அவனுக்கும் கல்யாணிக்கு என்ன ஆச்சுன்னு தெரியல" கண்களைத் திறந்த பஞ்சவர்ணம் மூர்த்தியின் தாயைப் பற்றிக் கேட்டாள்.

"ஆமா. அண்ணனுக்கும் தெரியல"

"தெரியாமலேயே ரெண்டாம் கல்யாணம் பண்ணிகிட்டான். சபாஷ்"

பவானி ஒன்றும் சொல்லவில்லை. பஞ்சவர்ணம் வெறுப்புடன் சொன்னாள். "இங்கிருந்து போயும் பெருசா சம்பாதிக்கல. மெக்கானிக்காவே இருக்கான். அவன் பொண்டாட்டி, மகள் கிட்ட பெருசா நகை எதுவும் காணோம்...."

பவானி சொன்னாள். "ஆனா சந்தோஷமா இருக்கான். நகை நட்டுக்கு என் கிட்ட பஞ்சம் இல்லை. ஆனா அவனோட ஒரு நாள் சந்தோஷத்தை இத்தனை வர்ஷங்கள்ல நான் பார்த்ததில்லை"

பஞ்சவர்ணம் மகளை ஏளனமாகப் பார்த்தாள். "உனக்கு வறுமைன்னா என்னன்னு தெரியுமாடி? நான் பார்த்துருக்கேண்டி. பணத்தோட மதிப்பு தெரியுமாடி. இன்னிக்கு உன் பெரியக்கா இத்தனை பவரோட இருக்கான்னா அதுக்குக் காரணம் என்ன தெரியுமாடி. பணம்தாண்டி. உன் அண்ணன் குடும்பம் உன் கூட இருந்தப்ப சந்தோஷமா இருந்த மாதிரி உனக்குத் தெரியும்டி. ஆனா தூங்கறப்ப நாளைக்கு என்ன செய்யறதுங்கிற யோசனையோட தாண்டி அவங்க தூங்க முடியும். நாளைக்கே ஒரு ஆஸ்பத்திரி செலவு வந்தா ஒவ்வொருத்தன் கிட்டயும் கையேந்திகிட்டு நிக்கறப்ப தெரியும்டி பணம் எவ்வளவு முக்கியம்னு...பெருசா சொல்ல வந்துட்டா அண்ணன் சந்தோஷமாயிருக்கானாம்..."

பவானி ஒன்றும் சொல்லவில்லை.

கோபம் ஓரளவு தணிந்த பஞ்சவர்ணம் "அப்புறம் என்னடி உங்கண்ணன் சொல்றான்?"

"பெரியக்கா கிட்ட ஜாக்கிரதையா இருக்கச் சொல்றான். அவங்க வழிக்குப் போகாம இருக்கறது உத்தமம்கிறான்."

பஞ்சவர்ணம் முகத்தில் இகழ்ச்சி தெரிந்தது. "கிழவி எனக்கு இருக்கிற தைரியத்துல கால்வாசி இருந்திருந்தா அவன் ஓடியிருப்பானாடி. அடுத்த தடவை அவனைப் பார்க்கப் போறப்ப சொல்லு. என் பழைய சேலைகள் நிறைய இருக்கு. தர்றேன். அவனை உடுத்திக்க சொல்லு."

'இந்தம்மாவைப் போய் பாவம் என்று நினைத்தேனே' என்று எண்ணிய பவானி ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்து சொல்லிக் கொள்ளாமல் வெளியேறினாள்.

"பாசமலர் சாவித்திரி. அண்ணனைப் பத்தி சொன்னா கோவம் வருது" என்று பஞ்சவர்ணம் மகளைக் கிண்டலடித்தாள்.

++++++++++++++++++++

நிச்சயித்தபடி அர்ஜுன் திருமணம் கோயிலில் எளிமையாக நடந்தது. சிவகாமியும், சங்கரனும் தாய் தந்தை ஸ்தானத்திலிருந்து திருமணத்தை நடத்தினார்கள். பஞ்சவர்ணம் மூர்த்தி தவிர வீட்டிலிருந்த எல்லோரும் திருமணத்தில் கலந்து கொண்டார்கள்.

அர்ஜுன் முகத்தில் இன்னும் நடப்பதை நம்ப முடியாத பிரமை தெரிந்தது. அவன் வசந்தியை விட அதிகமாக சிவகாமியைப் பிரமிப்புடன் பார்த்தான்.

சிவகாமி வசந்தியிடம் தனியாகக் கூப்பிட்டுச் சொன்னாள். "பாரும்மா. நான் அவனைப் பத்து வயசுல இங்க கூட்டிகிட்டு வந்தேன். என்னால அவனுக்கு சாப்பாடு போட முடிஞ்சுது. துணிமணி எடுத்துக் கொடுக்க முடிஞ்சுது. பண வசதி செஞ்சு தரமுடிஞ்சுது. இப்ப ஒரு முகத்தைக்கூட தர முடிஞ்சுது. ஆனா அந்த முகத்துல ஒரு சந்தோஷத்தை வரவழைக்க இத்தனை வருஷங்கள்ல என்னால் முடிஞ்சதில்லை. அது உன் ஒருத்தியால தான் முடியும். அவன் ரொம்ப நல்லவன். அவனை சந்தோஷமாய் வச்சுக்கறது உன் கைல தான் இருக்கு"

வசந்தி நெகிழ்ச்சியுடன் தலையாட்டினாள்.

அர்ஜுனை அழைத்து ஒரு கவரைத் தந்தாள். "இதுல குளூ மணாலிக்கு ரெண்டு டிக்கெட் இருக்கு. ஒரு வாரத்துக்கு ஓட்டல்ல ரூமும் புக் பண்ணியிருக்கேன். அட்ரஸ் விவரம் எல்லாம் உள்ளே இருக்கு. நானும் பாம்பே போறதால் இங்கே உனக்கு பெருசா வேலையும் இல்லை. ரெண்டு பேரும் சந்தோஷமா போயிட்டு வாங்க"

# 96

"Be like a postage stamp—stick to one thing until you get there."
– Margaret Carty

சிவகாமியுடன் சேர்ந்து சந்திரசேகரும் மும்பை போக பஞ்சவர்ணம் மனம் மகிழ்ந்தாள். பேரனைத் தனியாக அழைத்து ரகசியமாகச் சொன்னாள்.

"இப்படி ஒரு கச்சிதமான சந்தர்ப்பம் நமக்கு இனியொரு தடவை கிடைக்காதுடா. அந்த நேபாளத் தடியனும் இல்லை. இந்த சனியன்களும் இல்லை. நீ நான் சொன்ன மாதிரி ஆள்களை தயார் செய்துட்டியா?"

"செய்துட்டேன் பாட்டி. ப்ளானும் ரெடி." என்றவன் தன் திட்டத்தைப் பாட்டியிடம் விவரித்தான். "பெரிய ப்ளஸ் பாயிண்ட் என்ன தெரியுமா பாட்டி. அங்க செல் போனுக்கு டவர் கூட கிடைக்காது."

பஞ்சவர்ணம் முகத்தில் பரம திருப்தி தெரிந்தது.

ஆனால் மூர்த்தி தன் சந்தேகத்தைச் சொன்னான். "ஆனா ஆர்த்தி கூட வரணுமே"

"காதலிக்கிற பொண்ணுங்க மனசு எனக்குத் தெரியும்டா. ஆகாஷ் சினிமா பார்த்துகிட்டிருக்கிற நேரத்துல நானும் சும்மாயில்லைன்னு காண்பிக்க ஆர்த்தி கண்டிப்பா விரும்புவாடா. நீ அவளை மட்டும் கூப்பிடாதே. ஆகாஷ் கோயமுத்தூர்ல சினிமாக்குப் போகிறது உனக்குத் தெரிஞ்ச மாதிரி காமிச்சுக்காதே. ஒரு அழகான பிக்னிக் ஸ்பாட் இருக்கு. கூட்டிகிட்டு போகிற இடத்துல நிறைய நடக்கணும். அதனால பாட்டி, தாத்தா மாதிரி வயசானவங்களால அங்கே போக முடியாது. நீயும், ஆகாஷும், பார்த்திபனும் வாங்க போகலாம்னு சொல்லு. ஆகாஷ் தான் வரப் போறதில்லையே. அந்த பார்த்தி ஒரு நோஞ்சான். அவன் வந்தா பரவாயில்லை. அந்த ஊமைக்கோட்டானும் [அமிர்தம்] தன் பையன் கூட வர்றதுன்னா வாயைத் திறக்காது. பார்த்தி கூட ஆர்த்தி கூப்பிட்டா எங்கேயும் வருவான். ஒருத்தருக்கு ரெண்டு பேரா நீங்க இருக்கிறதால் அந்த கிழங்களும் ஒன்னும் சொல்லாதுக"

பஞ்சவர்ணம் கணித்தது பலித்தது.

மூர்த்தி மிகவும் தயக்கத்துடன் மிக அழகான ஒரு பிக்னிக் ஸ்பாட் ஒன்று உள்ளது என்று ஆரம்பித்து பஞ்சவர்ணம் சொன்னது போல் சொல்லி விட்டு "எனக்கு உன்னைக் கூட்டிகிட்டு போய் காமிக்கணும்னு ஆசை. நாம தனியா போறது நல்லா இருக்காது. பார்த்தியும், ஆகாஷும் கூட வரட்டும். நான் கூப்பிட்டா வர மட்டாங்க. நீ கூப்பிட்டா வருவாங்க. போலாமா" என்று கெஞ்சும் தொனியில் கேட்டான்.

எப்போதும் தனிமையிலேயே இருப்பவன் முதல் தடவையாக ஆசைப்பட்டுக் கேட்கிறான் என்பதால் ஆர்த்திக்கு சம்மதிக்கத் தோன்றியது. ஆர்த்திக்கு ஆகாஷ் மேலிருந்த கோபமும் மூர்த்திக்கு சாதகமாக வேலை செய்தது. "ஆகாஷுக்கு வேற ஏதோ ப்ரோகிராம் இருக்கு. பார்த்தியை நான் கேட்டுப் பார்க்கிறேன்" என்றாள்.

பார்த்திபனுக்கு மூர்த்தி கூட வருவது அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாலும் ஆர்த்திக்காக சம்மதித்தான். பார்வதிக்குத் தான் இந்தப் பயணத்தில் அவ்வளவாக திருப்தியிருக்கவில்லை. ஆனால் நீலகண்டன் மனைவியைத் திட்டினார். "ஆகாஷ் ஒருத்தன் கூட அனுப்பறதுல உனக்குத் தயக்கமே இல்லை. மூர்த்தி பாவப்பட்டவன், அதுவும் தனியா கூப்பிடலை, பார்த்தி ஆகாஷையும் சேர்த்துக் கூப்பிடறான். உனக்கு மனசில்லை....." கடைசியில் பார்த்தி கூட இருக்கிறான் என்ற தைரியத்தில் அவள் தலையாட்டினாள்.

ஆகாஷுக்கு சுத்தமாக ஆர்த்தி அவர்களுடன் போவது பிடிக்கவில்லை. ஆனால் வாயைத் திறந்து மறுப்பு சொல்ல முடியாத நிலையில் இருந்தான். அவனுக்கும் பார்த்திபன் கூடப் போவது ஒரு தைரியமாக இருந்தது. அமிர்தமும் மூர்த்தி கூட இல்லாமல் பார்த்திபனும் ஆர்த்தியும் மட்டும் போனால் நன்றாக இருக்கும் என்று உள்ளூர நினைத்தாலும் ஆகாஷ் இல்லாமல் பார்த்தி ஆர்த்தி கூட இருப்பது நல்லது என்று ஆறுதலடைந்தாள்.

பஞ்சவர்ணமும், மூர்த்தியும் சேர்ந்து போட்ட தற்போதைய திட்டத்தின் முழு விவரம் தெரியாவிட்டாலும் பவானிக்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு கதையுடன் பஞ்சவர்ணம் மூர்த்திக்கு சொன்ன திட்டம் உறுத்தியது. அன்று சொன்ன திட்டத்தில் பார்த்திபனைப் போன்ற கூடுதல் நபர் இல்லை. ஆனாலும் பார்த்திபனையும் அடித்து வீழ்த்த மூர்த்திக்குப் பெரிய கஷ்டம் இல்லை என்று தோன்றியது. வாய் விட்டு ஆர்த்தியிடம் வேண்டாம் என்று சொல்லலாம் என்றாலோ ஒரு காரணத்தை அவளுக்கு சொல்ல வேண்டும். எதைச் சொல்வாள்? தன் தாயையும், மருமகனையும் அவளால் காட்டிக் கொடுக்க முடியுமா?

அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

ஆர்த்தி அவளிடம் போகும் முன் சொல்லிக் கொள்ள வந்தாள். "உங்களையாவது கூட்டிகிட்டு போகலாம்னு நினைச்சேன் சித்தி. மூர்த்தி உங்களுக்குக் கூட நடக்கக் கஷ்டம்னு சொல்றார். ஆனா அவ்வளவு அழகான இடம் இந்த நீலகிரி ஏரியாவிலேயே இல்லைங்கறார். கோத்தகிரிக்குப் பக்கத்துல இருக்காம் அந்த இடம். போயிட்டு வர்றோம் சித்தி"

பவானி தலையசைத்தாலும் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள். ஆர்த்தி, மூர்த்தி, பார்த்திபன் மூவரும் காரில் கிளம்பிப் போய் விட்டார்கள்.

★★★★★

மூன்று நாள் மன உளைச்சலுக்குப் பின் இப்போது தான் மூர்த்தி மகிழ்ச்சியாக இருந்தான். அப்பா உயிரோடு இருக்கிறார் என்று தெரிந்தவுடன் அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும், அம்மா உயிரோடு

இருக்கிறாளா இல்லையா என்று தெரியாததால் ஏற்பட்ட குழப்பமும் அவனை நிறையவே முதலில் அலைக்கழித்தன. பஞ்சவர்ணமும் அவன் கேட்ட கேள்விகளுக்கு மௌனமே சாதித்தாள். அவன் விடவில்லை. தொடர்ந்து கேட்டு அவன் நச்சரித்த போது பஞ்சவர்ணம் "முதல்ல ஆர்த்தியோட ஹிப்னாடிஸ ரெண்டாவது சிடி கிடைக்கட்டும். அப்பத் தான் எதாவது சொல்ல முடியும்" என்று சொல்லி பேரன் வாயை அப்போதைக்கு அடைத்தாள்.

மூர்த்திக்கு அசோக் சிடி தருவதாகச் சொல்லியிருந்த நேரத்திற்கு இரண்டு மணி நேரம் முன் அசோக்கிடம் இருந்து போன் வந்தது. "எனக்கு அவசரமா வெளியூர் போகற வேலை இருக்கிறது. அதனால் திங்கள் கிழமை சாயங்காலம் நான் முதல்ல சொன்ன அதே இடத்துக்கு அதே நேரத்தில் வந்தால் போதும்" அதற்கு மேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை. மூர்த்திக்கு வந்த கோபத்திற்கு எல்லையே இல்லை. அவன் இப்போதைய சிடியில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள பேராவலுடன் இருந்தான். திங்கள் வரை காத்திருக்கும் பொறுமை அவனுக்கு இல்லை. பஞ்சவர்ணத்திடம் சொன்ன போது அவளுக்கும் ஏமாற்றமாக இருந்தது. ஆனால் அர்ஜுன், சந்திரசேகர் இருவரும் கூட ஊட்டியில் இருந்து போகிறார்கள் என்று தெரிந்த போது தங்கள் அடுத்த திட்டத்தை செயல்படுத்த அருமையான சந்தர்ப்பம் வாய்த்தது என பாட்டியும் பேரனும் ஓரளவு உற்சாகத்திற்கு மாறினார்கள்.

என்ன தான் திட்டம் வெற்றி பெறும் என்று பஞ்சவர்ணம் நம்பிக்கை தெரிவித்திருந்தாலும் மூர்த்திக்கு ஆர்த்தி கிளம்பும் வரை நம்பிக்கை வரவில்லை. ஆர்த்தி, பார்த்திபனுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்த இந்த சமயத்தில் தான் பழைய மன உளைச்சல் போய் மகிழ்ச்சி பிறந்திருந்தது. ஆர்த்தியும், பார்த்திபனும் பார்க்காத போதெல்லாம் அவன் ஆர்த்தியை காமத்துடன் பார்த்தான். இன்றிரவு வரை பொறுத்திரு என்று தன் மனதிற்கு சொல்லிக் கொண்டவன் ஆர்த்தியோ, பார்த்திபனோ பார்க்கையில் கண்ணியத்தின் உறைவிடமாக நடந்து கொண்டான்.

முதலில் இயற்கையழகு மிக்க ஓரு சில இடங்களுக்கு அவர்களை அழைத்துப் போனான். அதில் இரண்டு இடங்கள் பார்த்திபனே இது வரை பார்க்காத இடங்கள்.

"நான் கூட்டிகிட்டு போகிற இடங்க எல்லாமே இன்னும் டூரிஸ்ட் கண்களுக்குப் படாத இடங்கள் ஆர்த்தி. கூட்டம் இருக்காது. அசுத்தம் இருக்காது. இயற்கையை இயற்கையாவே நீ பார்க்கலாம். நான் உனக்காகவே பார்த்து வைத்திருக்கிற இடங்கள்" என்று சொன்னது போலவே அவன் அழைத்துப் போன இடங்கள் ஆட்கள் அதிகமில்லாத, இயற்கையழகு அதிகமிருந்த இடங்களாகவே இருந்தன. ஆர்த்தி அந்த இடங்களின் அழகில் தன்னை மறந்து போனாள் என்றே சொல்ல வேண்டும். பார்த்திபனும் கிட்டத்தட்ட அவள் போலவே ரசித்தான். அந்த அழகைப் பற்றி அவர்கள் இருவரும் பேசிக் கொண்ட போது மூர்த்தி சற்று ஒதுங்கியே இருந்தான்.

அவனுடைய வழக்கத்திற்கு மாறான கண்ணியமான நடத்தை பார்த்திபனைக் கூட ஏமாற்றி விட்டது. "நிஜமாவே திருந்திட்டான் போல இருக்கு" என்று அவன் நினைத்துக் கொண்டான்.

ஆர்த்தி மூர்த்தியையும் வலிய தங்கள் பேச்சில் இழுத்தாள். தேவையான அளவு மட்டும் கலந்து கொண்ட மூர்த்தி அவள் ரசனையே தனக்கு பரம திருப்தி என்பது போல் காட்டிக் கொண்டான்.

மதியம் ஒரு முறை பவானியின் போன் ஆர்த்திக்கு வந்தது. "சித்தி. நீங்கள் வந்திருந்தா ரொம்பவே ரசிச்சிருப்பீங்க. மூர்த்திக்கு எப்படி தேங்க்ஸ் சொல்றதுன்னே தெரியலை. மெயின் ஸ்பாட் சாயங்காலம் காண்பிக்கிறாராம். சூரியாஸ்தமனம் அழகாய் இருக்குமாம்....." என்ற ஆர்த்தி தாங்கள் இது வரை பார்த்த இடங்களை எல்லாம் வர்ணித்தாள்.

மூர்த்தி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அவனுடைய இப்போதைய திட்டம் அப்படியே பழுக்கில்லாதது. அவன் கடைசியாக சூரியாஸ்தமனத்தைக் காண்பிக்கப் போகும் இடம் உண்மையிலேயே மிக ரம்மியமானது. ஆனால் அந்த இயற்கையழகுடன் மூர்த்திக்கு சாதகமான அம்சங்கள் நிறைய இருந்தன. ஒன்று அங்கு செல் போனிற்கு டவர் கிடைப்பதில்லை. அந்த இடத்தில் அந்த நேரத்தில் சுத்தமாக ஆள் நடமாட்டம் இருக்காது. அது வேறெங்கும் போவதற்கான வழியுமில்லை என்பதால் வாகனங்களும் அங்கு அந்த நேரத்தில் வருவதில்லை. அவர்கள் வந்த காரும் அங்கே ரிப்பேராகப் போகிறது. அவன் ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் சரியாக ஏழரை மணிக்கு வரப் போகிறார்கள்.....

அவர்கள் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்த போது மணி ஐந்து. மூவரும் இறங்கி ஒற்றையடிப் பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

"ச்சே" என்றான் மூர்த்தி.

"என்னாச்சு" ஆர்த்தி கேட்டாள்.

"தண்ணி பாட்டில் எடுத்துட்டு வர மறந்துட்டேன். நீங்க மெள்ள இந்தப் பாதையிலேயே நடந்துகிட்டே இருங்க. நான் வந்து ஜாயின் செய்துக்கறேன்" என்ற மூர்த்தி ஓட்டமும் நடையுமாக காரை நோக்கி திரும்பி வந்தான். காரை ரிப்பேர் செய்யும் வேலை இரண்டு நிமிடங்களில் முடிந்தது. இனி அவனே நினைத்தாலும் காரை மெக்கானிக் உதவியில்லாமல் கிளப்ப முடியாது. தன் வேலையை முடித்துக் கொண்டு மீண்டும் அவர்களுடன் போய் சேர்ந்து கொண்டான். உண்மையிலேயே இன்றைய சூர்யாஸ்தமனம் அவனைப் பொருத்த வரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகிறது....

++++++++++++++++++++

ஆகாஷிற்குத் தன் மேலேயே கோபம் வந்தது. ஏதோ ஒரு வேகத்தில் நளினியுடன் படம் பார்க்க ஒப்புக் கொண்டவனுக்கு அவள் இப்போது நட்புடன் தன் கையை அவன் கையுடன் கோர்த்துக் கொண்டு தியேட்டரில் நுழைந்த போது அதை ரசிக்க முடியவில்லை. அவளோ ஒரு சில பெண்கள் பார்த்த போது அவன் கைகளை மேலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். அவள் சொன்னது போல ஞாயிற்றுக் கிழமையானாலும் தியேட்டரில் பெரிய கூட்டமில்லை. ஒரு பாதுகாப்புக்கென்று ஆட்கள் இருக்கும் பகுதியிலேயே அவளை அழைத்துப் போய் உட்கார்ந்தான்.

படம் ஆரம்பித்தவுடன் நளினி படத்தில் மூழ்க அவன் மனது ஆர்த்தியையே எண்ணிக் கொண்டிருந்தது. மூர்த்தியுடன் போயிருக்கிறாள் என்பதே அவனுக்குக் கசந்தது. பார்த்திபனும் கூட இருப்பது ஒரு பாதுகாப்பு என்று தோன்றினாலும் மனதில் ஏனோ அவனுக்கு அமைதியில்லை. காரணம் தெரியாத ஒரு சஞ்சலம் அவனைப் படம் பார்க்க விடவில்லை.

++++++++++++++++++++

அரை மணி நேரமாக பவானி ஆர்த்தியின் செல்லில் தொடர்பு கொள்ள முயன்று கொண்டே இருந்தாள். 'Not Reachable' என்றே அறிவிப்பு வந்து கொண்டிருந்தது. நிமிடங்கள் செல்லச் செல்ல பவானியின் பயம் ஊர்ஜிதமாக ஆரம்பித்தது.

ஆர்த்தியின் வாழ்வில் வந்த பல துக்கங்களுக்கு ஒரு விதத்தில் தானும் காரணம் என்ற உறுத்தல் அண்ணனைச் சந்தித்து வந்த பிறகு பவானிக்கு ஏற்பட்டிருந்தது. பஞ்சவர்ணம் அன்று சொன்ன திட்டம் வெறுமனே சொன்னது என்று அவளுக்குத் தோன்றவில்லை. அவர்களுடைய திட்டம் இன்று தான் அரங்கேறப் போகிறதா, இல்லை இந்த நாளில் அப்படி ஏதும் நடக்கப் போவதில்லையா என்றும் அவளுக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் அப்படியொரு திட்டம் உண்மையாகவே இருந்தால் அதை நிறைவேற்ற சிவகாமி இல்லாத ஒரு சூழ்நிலை தான் அவர்களுக்கு சாதகமானது என்பதில் சந்தேகம் இல்லை.

பவானிக்கு என்ன செய்வது என்று தீர்மானிக்க முடியவில்லை. பைத்தியம் பிடிப்பது போல் இருந்தது. ஆர்த்தி அவளிடம் அன்பு காட்டிய தருணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக மனத்திரையில் வந்து போக அவளுக்கு மனம் பாறையாக கனக்க ஆரம்பித்தது. ஏதாவது ஒன்றைச் சொல்லி ஆர்த்தியைப் போகாமல் தடுத்திருக்க வேண்டும் என்று மனம் சொன்னது.

கடைசியாக ஒரு முறை ஆர்த்தியின் செல்லுக்கு பேச முயற்சி செய்தாள். அதே அறிவிப்பு. மூர்த்தியின் காமத்துக்கு ஆர்த்தி இரையாக வாய்ப்பிருப்பதை அவளால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அவளுள் ஒரு பச்சாதாபம் விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்தது. ஆர்த்திக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தைத் தடுத்து நிறுத்த சிவகாமி ஒருத்தியால் தான் முடியும் என்றாலும் அவளும் இப்போது இங்கு இல்லை. ஆனால் எங்கிருந்தாலும் அவளால் ஏதாவது செய்ய முடியலாம். இன்றும் தான் மௌனமாக இருந்து விட்டால் என்றென்றைக்கும் மனசாட்சியின் உறுத்தலில் நிம்மதியாக இருக்க முடியாது என்று தோன்றியது.

சிவகாமியின் செல்லிற்குப் பவானி போன் செய்தாள். இது தான் அவள் சிவகாமிக்கு இத்தனை வருடங்களில் செய்யும் முதல் போன்...

"ஹலோ.." சிவகாமியின் குரல் கேட்டது.

"அக்கா நான் பவானி பேசறேன்:"

"நான் ஒரு மீட்டிங்கிற்குக் கிளம்பிட்டு இருக்கேன். என்ன விஷயம் பவானி?"

"அக்கா.... அக்கா" பவானிக்கு பேச வரவில்லை. அழுகை தான் வந்தது.

"சொல்லு. யாருக்கு என்னாச்சு"

சிவகாமிக்கு சுற்றி வளைப்பது எப்போதுமே பிடிக்காது என்பதால் தன்னை சுதாரித்துக் கொண்ட பவானி அவசர அவசரமாகச் சொன்னாள். "....ஒண்ணும் ஆகல...ஆர்த்தி, மூர்த்தி, பார்த்திபன் ஒரு பிக்னிக் போனாங்க. இப்ப செல்ல பேச டிரை செய்தா நாட் ரீச்சபிள்னே அரை மணிநேரமா வந்துகிட்டிருக்கு"

"பிக்னிக்கா? மூர்த்தி கூடவா?"

"ஆமாக்கா" பவானியின் குரல் பலவீனமானது.

"பவானி. செல் போன் நாட் ரீச்சபிள்னு வர்றது பெரிய விஷயமில்லை. கூட பார்த்திபனும் போயிருக்கான்கிறாய். அப்புறம் என்ன?"

பவானிக்கு தொண்டையை அடைத்தது.

சிவகாமி சரியாக இருபது வினாடிகள் மௌனமாக இருந்தாள். பின் கேட்டாள். "அப்படின்னா இன்னும் ஏதோ இருக்கு. இல்லையா?"

பவானி வாய் விட்டு அழ ஆரம்பித்தாள். சிவகாமி உடனடியாக அழுகையை நிறுத்தச் சொன்னாள். "பார் பவானி. உண்மையாவே ஆர்த்திக்கு ஆபத்து இருந்து அவளை நான் காப்பாத்தணும்னா எனக்கு முழு விவரமும் தெரிஞ்சாகணும். நீ ஏன் பயப்படறேன்னு சொல்லு"

பவானி அன்று தான் ஓட்டுக் கேட்ட விவரத்தை அழுகையினூடே சொன்னாள். கடைசியில் "இப்ப நடக்கறதுக்கும் அன்னிக்கு நான் கேட்டதுக்கும் சம்பந்தம் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனா எனக்கென்னவோ பயம்மா இருக்குக்கா...."

"சரி கடைசியா ஆர்த்தி எப்ப போன் பண்ணினா? என்ன சொன்னா? எங்கேயெல்லாம் போறதா அவங்க கிளம்பறதுக்கு முன்னால் சொன்னாங்க"

பவானி எல்லாவற்றையும் சொன்னாள்.

"சரி. இன்னும் இதை யார் கிட்டயும் நீ சொல்லாதே" சிவகாமி போன் இணைப்பைத் துண்டித்தாள்.

பவானியைப் போல் சிவகாமிக்கு சந்தேகம் இருக்கவில்லை. பஞ்சவர்ணத்தின் திட்டம் தான் இந்த பிக்னிக் என்பதை உறுதியாக நம்பினாள். அர்ஜுன் அங்கே இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்தவள் இனி என்ன செய்வது என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

அப்போது தான் அவளுடைய ஓட்டலறைக்குள் நுழைந்த சந்திரசேகர் "என்னக்கா? இன்னும் கிளம்பாமல் என்ன யோசிச்சுகிட்டு இருக்காய்" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்லை" என்றாள் சிவகாமி.

## 97

It is not bigotry to be certain we are right; but it is bigotry to be unable to imagine how we might possibly have gone wrong.

– G.K.Chesterton

ரிப்பேரான அந்தக் காரை பார்த்திபனும், மூர்த்தியும் முடிந்த அளவு சரி செய்ய முயன்று கொண்டிருந்தார்கள். அவர்கள் முயற்சி வெற்றியடையவில்லை. இருள் சூழ்ந்து கொண்டிருந்தது.

மூர்த்தி தன் ஆச்சரியத்தைப் பல முறை தெரியப்படுத்தினான். "நாம் வந்தப்ப சரியாயிருந்துச்சே... எப்படி இப்படி ஆச்சு...?"

"செல்லுல பேசி மெக்கானிக் யாரையாவது கூப்பிடலாம்னு பார்த்தா டவரும் கிடைக்க மாட்டேன்குது. சே" என்ற பார்த்திபனுக்கு உள்ளே லேசாக பயம் கிளம்ப ஆரம்பித்திருந்தது.

ஆர்த்திக்கு நிலைமையின் தீவிரம், கூட அவர்கள் இருவரும் துணைக்கு இருப்பதால் பெரியதாகத் தெரியவில்லை. "இந்தப் பக்கம் ஏதாவது வண்டியோ, ஆள்களோ வந்தால் பரவாயில்லை.....உதவியாவது கேட்கலாம். ஆனால் யாரும் வர்ற மாதிரி தெரியலை"

மூர்த்தி பரபரப்புடன் மணியைப் பார்த்தான். மணி ஆறே முக்கால். இன்னும் முக்கால் மணி நேரம் தான்.....

"வண்டியை இங்கேயே விட்டுட்டு கொஞ்ச தூரம் நடந்தால் என்ன?" பார்த்திபன் கேட்டான்.

"ஆனால் டார்ச்சும் இல்லையே. இந்த இருட்டுல காட்டுக்குள்ளே நடக்கிறது அபாயம் தான். சே.... சாரி ஆர்த்தி. இப்படியாகும்னு நான் நினைக்கவேயில்லை."

"கார் ரிப்பேரானதுக்கு நீங்க என்ன செய்வீங்க?" என்று ஆர்த்தி அவனை சமாதானப்படுத்தினாள்.

நேரம் ஆக ஆக பார்த்திபனுக்கு இருப்பு கொள்ளவில்லை. அவனும் மூர்த்தியும் மட்டுமாக இருந்தால் காரிலேயே படுத்து மறுநாள் காலை கூட போகலாம். ஆர்த்தியை கூட வைத்துக் கொண்டு இங்கு இன்னும் இருப்பது அபாயமாகவே அவனுக்குத் தோன்றியது.

தூரத்தில் ஒரு கார் வருவது அதன் ஹெட்லைட் வெளிச்சத்தில் தெரிய மூர்த்தி மணியைப் பார்த்தான். மணி ஏழு. "அரை மணி நேரத்துக்கு முன்னாலேயே பசங்க வந்துட்டாங்க போல இருக்கு" என்று நினைத்துக் கொண்டான்.

பார்த்திபனும் ஆர்த்தியும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். நெருங்கிய கார் அவர்கள் அருகே நின்றது. டிரைவர் வெளியே எட்டிப் பார்த்தான். "இப்படி காரை நடுவில நிறுத்தினா நாங்க எப்படி போறது?"

"இதுக்கு மேல போக முடியாது. இது டெட் எண்ட். எங்க கார் ரிப்பேர் ஆயிடுச்சு. அதனால தவிச்சுகிட்டிருந்தோம். எங்களுக்கு ஹெல்ப் பண்ண முடியுமா?" பார்த்திபன் ஆவலாகக் கேட்டான்.

டிரைவர் திரும்பி காரினுள் இருந்த யாரிடமோ பேசினான். உள்ளே யார் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. பின் பதிலேதும் சொல்லாமல் காரை ரிவர்ஸ் எடுத்து வந்த வழியிலேயே போகத் திருப்பினான்.

பார்த்திபன் ஓடிச் சென்று கெஞ்சினான். "நாங்க சிவகாமியம்மா வீட்டு ஆளுங்க. எங்க கூட ஒரு பொண்ணும் இருக்கறதால ஏதாவது ஒரு மெயின் ரோடு வரைக்காவது லிப்ட் கொடுங்களேன் ப்ளீஸ்"

கார் நின்றது. "சரி ஏறச் சொல்லு" என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"தேங்க்ஸ்" என்ற பார்த்திபன் திரும்ப வந்து ஆர்த்தியையும் மூர்த்தியையும் அழைத்தான். "கடவுளே அனுப்பின மாதிரி இருக்கு. வாங்க போகலாம்"

மூர்த்திக்கு எரிச்சலாக வந்தது. "பார்த்தி அவங்களை எப்படி நம்பிப் போகிறது. காலம் கெட்டுக் கிடக்கு" என்றான்.

"உள்ளே ஒரு லேடியும் இருக்காங்க. இங்கே நிக்கறது தான் ஆபத்து. கார் இங்கேயே இருக்கட்டும். நாம் முதல்ல போகலாம்"

ஆர்த்தி உடனடியாக பார்த்திபனைப் பின் தொடர மூர்த்தி என்ன செய்வதென்று தெரியாமல் பின் தொடர்ந்தான். மணியைப் பார்த்தான். மணி ஏழு ஏழு. இன்னும் சிறிது நேரம் தாக்குப்பிடித்தாலும் ஏற்பாடு செய்த ஆள்கள் வந்து விடுவார்கள்...

"இல்லாட்டி எங்க கார் ரிப்பேர் செய்ய உதவி செஞ்சீங்கன்னாலும் போதும்" என்று டிரைவரிடம் மூர்த்தி சொன்னான்.

டிரைவர் திரும்பிப் பார்க்க உள்ளே இருந்த பெண்மணியின் குரல் தெளிவாகக் கேட்டது. "அதுக்கெல்லாம் நேரம் இல்லை. வர்றதானா வரச் சொல்லு. இல்லைன்னா வண்டியைக் கிளப்பு"

பார்த்திபன் மூர்த்தியை முறைத்தான். "சமய சந்தர்ப்பம் தெரியாமல் பேசாதே மூர்த்தி. முதல்ல போகலாம் வா. ஆர்த்தி நீ ஏறிக்கோ"

பின் பக்கத்துக் கார் கதவு திறந்தது. "அந்தப் பொண்ணைப் பின்னாடி ஏறச்சொல்லு. அவங்களை முன்னாடி ஏத்திக்கோ" என்று குரல் கேட்டது. பின்னால் ஏறிய ஆர்த்தி "ரொம்ப தேங்க்ஸ் மேடம்" என்று சொல்லிவிட்டு உள்ளே அமர்ந்திருந்த பெண்மணியைப் பார்த்தாள்.

"நீங்க... நீங்க.... நந்தினி தானே"

அந்தப் பெண்மணி தலையசைத்தாள். நடுத்தர வயதில் கம்பீரமாகத் தோற்றமளித்த அந்தப் பெண்மணியின் புகைப்படங்களை ஆர்த்தி எத்தனையோ பத்திரிக்கைகளில் பார்த்திருக்கிறாள். நந்தினி ஒரு பிரபல சமூக சேவகி. பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிராகப் பல வருடங்களாகக் குரல் கொடுத்து வருபவள். அவள் ஒரு வக்கீலும் கூட. அவளைப் பற்றி நிறைய படித்திருந்த ஆர்த்தி அவளை நேருக்கு நேராக இப்படியொரு இக்கட்டான சந்தர்ப்பத்தில் பார்ப்போம் என்று நினைத்திருக்கவில்லை.

பார்த்திபன் உள்ளே டிரைவர் அருகில் அமர மூர்த்தி கடைசியாக ஒரு முயற்சி செய்தான். "என்னோட பர்ஸ் அங்கே விழுந்திருச்சுன்னு நினைக்கிறேன். ஒரே நிமிஷம் வெயிட் செய்யறீங்களா..."

நந்தினி சொன்னாள். "நீ வண்டியை எடப்பா"

மூர்த்தி வேறு வழியில்லாமல் கிளம்பிய காரினுள் குதித்து அமர்ந்தான்.

நந்தினி ஆர்த்தியைக் கேட்டாள். "சிவகாமியம்மா வீட்டுக்காரங்கன்னு சொன்னீங்க. அவங்களுக்கு நீங்க எல்லாம் என்ன உறவு?"

ஆர்த்தி தன்னையும் அவர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தாள். நந்தினியும் தான் தற்போது கோத்தகிரியில் ஒரு வீட்டில் வசித்து வருவதாகச் சொன்னாள்.

மூர்த்தி தன் சந்தேகத்தை வாய் விட்டே உடனடியாகக் கேட்டான். "நீங்க எப்படி இந்தப் பக்கம்?"

டிரைவர் சொன்னான். "ஒரு இடத்தில் ராங் டைவர்சன் எடுத்துட்டேன்...பாதி வந்தப்பவே சந்தேகம் வந்துச்சு"

அந்தப் பாதையிலிருந்து வலது பக்கம் திரும்பி சில மீட்டர்கள் போயிருப்பார்கள். வேறொரு கார் பின் பிற வழியில் வந்து அந்தப் பாதையில் திரும்பியது. அதை மூர்த்தியும் கவனித்தான். அவன் ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் தான் அவன் வரச் சொல்லியிருந்த இடத்திற்குப் போகிறார்கள். நிஜமாகவே அவனுக்குத் தன் துரதிர்ஷ்டத்தை நினைக்கையில் பற்றிக் கொண்டு வந்தது.

நந்தினி திரும்பிப் பின்னால் பார்த்தபடி சொன்னாள். "வேறொரு காரும் அந்தப் பக்கம் திரும்புது. நிஜமாவே வேறெங்கயோ போக அது வழி போலத் தோணுது"

பார்த்திபன் சொன்னான். "அப்படித் தெரியலை"

சிறிது நேர அமைதிக்குப் பிறகு ஆர்த்தி சொன்னாள். "உங்க குரல் எனக்கு நிறையவே பரிச்சயமான குரல் மாதிரித் தோணுது மேடம்"

நந்தினி உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சில வினாடிகள் மௌனம் சாதித்து விட்டுச் சொன்னாள். "நீ டிவியில் என் பேட்டி ஏதாவது பார்த்திருப்பாய்"

"இல்லை நான் உங்களைப் பத்திப் படிச்சதெல்லாம் பத்திரிக்கைகள்ல தான். ஆனா உங்க குரலை முதல்லயே கேட்ட மாதிரி இருக்கு..... பிரமையா இருக்கலாம். மேடம் நான் உங்க பேன். காலேஜ் நாள்கள்ல எனக்கு ரெண்டு பேர் மேல ஒரு பெரிய பக்தியே இருந்துச்சு. ஒண்ணு நீங்க"

"இன்னொண்ணு?"

"எங்க பெரியத்தை...."

"நீங்க எப்படி இந்த நேரத்துல இங்கே வந்து மாட்டிகிட்டீங்க?"

ஆர்த்தி சுருக்கமாக தங்கள் பயணத்தைப் பற்றியும் கடைசியில் அந்த இடத்தில் வந்து கார் பழுதானதையும் சொன்னாள். "கடைசியில் கடவுளே உங்களை அனுப்பியிருக்காங்க"

"ஒரு வேளை நாங்க வராம இருந்திருந்தா என்ன செஞ்சிருப்பீங்க"

"கடவுள் வேற யாரையாவது அனுப்பியிருக்காங்க. எங்க பாட்டி கடவுளை நம்பறவங்களை அவர் எப்பவுமே கை விட மாட்டார்னு எப்பவும் சொல்வாங்க"

ஆர்த்தியின் நம்பிக்கை நந்தினிக்கு வேடிக்கையாக இருந்தது போல தெரிந்தது. புன்னகைத்தாள்.

ஆர்த்தி அவளிடம் ஆர்வமாக அவளுடைய சமூக சேவை பற்றி கேட்க அவளும் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். மூர்த்திக்கு இன்று கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற ஏமாற்றம் வாட்டி வதைத்தது. பஞ்சவர்ணம் ஒரு திட்டம் கைகூடவில்லை என்றால் சீக்கிரமாகவே அடுத்த திட்டம் மேற்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது. கார் ஊட்டி கோத்தகிரி மெயின் ரோடிற்கு வந்தவுடன் "தேங்க்ஸ் மேடம். இங்கே இறங்கி நாங்க ஊட்டிக்கு போயிக்கறோம். போன் செய்தா பங்களாவில் இருந்து கார் அனுப்புவாங்க" என்றான்.

நந்தினி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்பது. "மணி ஒன்பதாயிடுச்சு. கார் அனுப்பிச்சாலும் அது வந்து சேர இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும். இந்த ராத்திரி நேரத்துல ஆர்த்தியோட நீங்க

ரோட்டுல நிக்கறது பாதுகாப்பில்லைன்னு நினைக்கிறேன். நீங்க பேசாம என் வீட்டுக்கு வந்து தங்கிட்டு காலைல போங்களேன்"

"இல்லை வீட்டுல தேடுவாங்க" மூர்த்தி அவசரமாக மறுத்தான்.

"போன் பண்ணி சொல்லிடுங்களேன்"

"உங்களுக்கு எதுக்கு சிரமம்?"

"இதுல என்ன சிரமம் இருக்கு"

பார்த்திபனுக்கு இந்தப் பனி பெய்யும் இரவு வேளையில் தெருவோரமாக நிற்க விருப்பமில்லை. அவரசரமாக இடைமறித்துச் சொன்னான். "நீங்க சொல்றதும் சரி தான். தேங்க்ஸ் மேடம். ஆர்த்தி நீ என்ன சொல்றே"

"பாட்டி தாத்தாக்கு போன் பண்ணிடலாம். இல்லாட்டி என்ன ஆச்சோன்னு பயப்படுவாங்க."

மூர்த்தியின் அடுத்த ஆசைகளிலும் மண் விழ அவன் மௌனமானான். கார் கோத்தகிரியில் உள்ள நந்தினியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. நந்தினியின் வீடு பெரியதாக இருந்தது. நந்தினி அவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள். வீட்டில் விலை உயர்ந்த பொருள்கள் எதுவும் இல்லையென்றாலும் சகல வசதிகளுடனும் கச்சிதமாக இருந்தது.

முதலில் வீட்டுக்குப் போன் செய்து ஆர்த்தி பாட்டியிடம் தகவலைச் சொன்னாள்.

"அந்தக் கடன்காரன் கூட்டிகிட்டு போனப்பவே எனக்குத் திருப்தியில்லை. அதே மாதிரி ஆச்சு பார்த்தியா. பரவாயில்லை. கடவுள் அந்தம்மா ரூபத்துல வந்து காப்பாத்திட்டார்."

லௌட் ஸ்பீக்கர் ஆனில் இருந்ததால் அவள் குரல் சத்தமாகக் கேட்டது. நல்ல வேளையாக மூர்த்தி வெளியே தன் செல்லில் பேசிக்கொண்டிருந்ததால் அவன் காதில் விழவில்லை. ஆனால் நந்தினி காதில் பார்வதி சொன்னது விழ அவள் புன்முறுவல் பூத்தாள்.

வெளியே மூர்த்தியின் செல்லில் அவன் ஏற்பாடு செய்த ஆட்கள் புலம்பிக் கொண்டிருந்தனர். "என்ன சார் இது. எங்களை வரச் சொல்லிட்டு காரை விட்டுட்டு நீங்க போயிட்டீங்க....." மூர்த்தி மெல்லிய குரலில் அவர்களுக்கு பதில் சொல்லி சமாதானப்படுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

வேலைக்காரியிடம் சப்பாத்தி தயார் சொன்ன நந்தினி வரவேற்பறையில் அவர்களை அமர வைத்துப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் பார்வை மூர்த்தி மேல் அதிக நேரம் தங்கியது. அவனை ஆழமாக அவள் பார்வை ஆராய்ந்தது. அவன் அவளைப் பார்க்கையில் எல்லாம் அவள் பார்வை இடம் மாறினாலும் திரும்பத் திரும்ப மீண்டும் எதையோ அவனிடத்தில் கண்டுபிடிக்க முயல்வதாக இருந்தது அவள் பார்வை. மூர்த்தி தர்மசங்கடத்துடன் நெளிந்தான். "இவள் என்னை முன்பே அறிவாளோ? ஏனிப்படி பார்க்கிறாள்?"

திடீரென்று நந்தினி அவனிடம் நேரடியாகக் கேட்டாள். "உங்க அம்மா அப்பா எங்கே இருக்காங்க?"

அந்த எதிர்பாராத கேள்வி அவனை திகைக்க வைத்தது. எல்லாம் தெரிந்தே கேட்கிறாளா? இப்போது தான் தந்தையைப் பற்றி அவன் அறிந்திருக்கிறான். தாய் என்ன ஆனாள் என்று அவனுக்கே தெரியாது.....

அவன் தர்மசங்கடத்தை வேறு மாதிரி புரிந்து கொண்ட ஆர்த்தி அவனுக்காக பதில் சொன்னாள். "அவங்க அம்மாவும் அப்பாவும் ஊட்டியில் பல வருஷங்களுக்கு முன்னால் நடந்த லேண்ட் ஸ்லைடில் இறந்துட்டாங்க"

ஆர்த்தி பதில் சொன்னாலும் நந்தினி அவள் பக்கம் திரும்பாமல் மூர்த்தியையே கூர்மையாகப் பார்த்தாள். மூர்த்தி தலையை மட்டும் ஆட்டினான்.

சாப்பிடும் போது ஆர்த்தி நந்தினியைக் கேட்டாள். "மேடம் நீங்க இங்கே தனியாய் தான் இருக்கீங்களா?"

"ஆமா." அதற்கு மேல் தன்னைப் பற்றி சொல்ல அவள் பிரியப்படாதது போலிருந்தது.

அவளுக்கென்று ஒரு குடும்பம் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட ஆர்த்தி தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றிக் கேட்க விரும்பவில்லை. ஆனால் ஆர்த்தியின் ஆவல் அவளை வேறு கேள்வி கேட்க வைத்தது. "மேடம் ஆதரவில்லாத பெண்களுக்கு ஆதரவா எத்தனையோ போராட்டம் நடத்தியிருக்கீங்க. குரல் கொடுத்திருக்கீங்க. இப்படி உதவணும்ங்கற எண்ணம் உங்களுக்கு எதனால வந்துச்சு"

"ஒரு காலத்துல நானும் அப்படி ஆதரவில்லாம தான் இருந்தேன்....." என்ற நந்தினி அவள் மேற்கொண்டு கேள்வி கேட்பதை விரும்பாமல் ஆர்த்தியைத் தான் கேள்வி கேட்க ஆரம்பித்தாள்.

தாயின் சந்தேகத்திற்குரிய மரணத்தின் விவரங்களை விட்டு பெரும்பாலான விஷயங்களை ஆர்த்தி சொன்னாள். ஆர்த்தி பேசும் போது அவள் முழுக் கவனமும் ஆர்த்தி மீதே இருந்ததை மூர்த்தி கவனித்தான். சற்று முன் அவனைக் கவனித்தது போல இப்போது நந்தினி ஆர்த்தியைக் கவனித்தாள். பார்த்திபனைப் பெரிதாக அவள் கண்டு கொள்ளவில்லை.

உறங்க மூர்த்திக்கும் பார்த்திபனுக்கும் ஒரு அறையை ஒதுக்கிய நந்தினி ஆர்த்தியைத் தனதறையிலேயே படுக்க ஏற்பாடு செய்தாள். நிறைய நேரம் தனதறையிலும் நந்தினி அவளிடம் பேசிக்கொண்டிருந்தாள். கடைசியில் களைத்துப் போன ஆர்த்தி தூங்க ஆரம்பித்த பின்னும் நந்தினி தூங்கவில்லை. அவளையே பார்த்தபடி நிறைய நேரம் அமர்ந்திருந்தாள்.

இதை ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மூர்த்திக்கு ஆச்சரியமாக இருந்தது. முதல் முறையாகப் பார்க்கும் மனிதர்களிடம் யாராவது இப்படி நடந்து கொள்வார்களா?

நந்தினி எழுந்ததைப் பார்த்த மூர்த்தி சத்தமில்லாமல் தங்களுக்கு ஒதுக்கியிருந்த அறையில் போய் படுத்துக் கொண்டான். பார்த்திபன் நல்ல உறக்கத்திலிருந்தான்.

நந்தினி மூர்த்தி படுத்திருந்த அறை ஜன்னல் வழியாக அவனைப் பார்த்தாள். ஓரக்கண்ணால் கவனித்த மூர்த்தி தானும் ஆழ்ந்து உறங்குவது போல நடித்தான். சில நிமிடங்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்த நந்தினி நகர்ந்தாள். அந்த அறை வெளியிலிருந்து பூட்டப்படும் சத்தம் மூர்த்திக்குக் கேட்டது.

# 98

Great doubts, deep wisdom. Small doubts,
little wisdom.
— Chinese proverb

"ஹலோ சித்தி"

தனதறைக்குள் நுழைந்த ஆர்த்தியைக் கண்டவுடன் பவானியின் கண்கள் நிறைந்தன. ஓடிப் போய் அவளைக் கட்டிக் கொண்டு அழுதாள். "ஆர்த்தி.... ஆர்த்தி"

"என்ன சித்தி குழந்தை மாதிரி அழறீங்க. எனக்கு ஒண்ணும் ஆகலை. அதுவும் தனியாவா போயிருக்கேன். மூர்த்தியும், பார்த்தியும் கூட என்னோட இருந்தாங்க தானே" என்ற ஆர்த்தி நடந்ததை எல்லாம் உற்சாகத்துடன் பவானிக்குச் சொல்ல ஆரம்பித்தாள்.

பவானிக்கு சினிமா பார்ப்பது போல் இருந்தது. நேற்று சிவகாமிக்குப் போன் செய்து சொன்னாலும் அவள் அந்தக் கடைசி தருணத்தில் என்ன செய்ய முடியும் என்ற சந்தேகம் பவானிக்கு இல்லாமல் இல்லை. நந்தினியை சிவகாமி தான் அனுப்பி இருப்பாள் என்று புரிந்தாலும் எப்படி அந்த இடத்தையும் கண்டுபிடித்து சிவகாமி அத்தனை வேகமாக அங்கே அவளை அனுப்பினாள் என்பது மலைப்பாகத் தான் இருந்தது.

அதே நேரத்தில் பஞ்சவர்ணம் பேரனைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"யாருடா அவ?"

"நந்தினின்னு பேரு பாட்டி. சமூக சேவகி"

"அவ எப்படிடா அங்கே வந்தா?"

"அது தான் எனக்கும் தெரியலை பாட்டி"

பஞ்சவர்ணம் ஒன்றும் சொல்லாமல் பேரனையே சிறிது நேரம் பார்த்தாள். சரியான சமயத்தில் நந்தினி அந்த இடத்திற்குச் சென்றதும், அவர்களை அழைத்துச் சென்றதும், இரவில் மூர்த்தி இருந்த அறையைப் பூட்டியதும் தற்செயலாக நடந்த விஷயங்களாக அவளுக்குத் தோன்றவில்லை.

மூர்த்தி அவளுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டு சொன்னான். "எனக்கும் அந்த நந்தினி மேல் சந்தேகமா தான் இருக்கு பாட்டி. அவ தனித் தனியா என்னையும் ஆர்த்தியையும் ஆழமா பார்த்தா பாட்டி. காலைல அங்கே காபி சாப்பிட்டு கிளம்பறப்ப கூட என்னை ஆராய்ச்சியோட பார்த்தா. முன்பின் தெரியாதவங்களை யாரும் அந்த அளவு உற்றுப் பார்க்க மாட்டாங்க பாட்டி"

"ஏண்டா அவள் நீ பழக்கம் வச்சுகிட்டிருந்த பொண்ணுகளோட அக்காவோ அம்மாவோ இல்லையே?"

"அப்படியெல்லாம் இல்லை பாட்டி. அவளுக்குக் குடும்பம் எல்லாம் இருக்கற மாதிரி தெரியலை."

"டேய் அவள் சமூக சேவகி தான்னு உனக்கு உறுதியா தெரியுமா?"

"தெரியும் பாட்டி. போன வாரம் ஆனந்த விகடன்ல கூட அவளோட ஒரு பேட்டி வந்திருக்கு"

பஞ்சவர்ணத்தின் சந்தேகம் அப்போதும் தீர்கிற மாதிரி இல்லை. "நீ எனக்கு அந்த ஆனந்த விகடனை எடுத்துக் கொடு"

அவன் உடனே தன்னறைக்குப் போய் அந்த ஆனந்த விகடன் இதழைக் கொண்டு வந்து தந்தான். பஞ்சவர்ணம் அதை வாங்கிப் பார்த்தாள். ஆனந்த விகடனில் அரைப் பக்கத்திற்கு அவளுடைய புகைப்படம், மூன்றரைப் பக்கத்திற்குப் பேட்டி இருந்தது. படத்தைக் கூர்ந்து பார்த்தாள் பஞ்சவர்ணம். அந்த முகம் அவளுக்குப் பரிச்சயமான முகம் இல்லை. ஒரு முறை பார்த்த முகத்தை பஞ்சவர்ணம் என்றும் மறந்ததில்லை. இவளை இதற்கு முன் பார்த்ததில்லை. பேட்டியிலும் கோத்தகிரியில் வசிக்கிறாள் என்பதைத் தவிர அவளைப் பற்றிய தகவல்கள் இல்லை. ஆதரவற்ற அபலைப் பெண்களுக்கு அவள் செய்து வரும் சேவைகள் பற்றியும், இந்த நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப் பற்றியும் தான் பேட்டியில் இருந்தது.

"இவள் சிவகாமியோட பினாமியா இருக்கலாம்னு நினைக்கிறேன்...." என்று பஞ்சவர்ணம் யோசனையுடன் சொன்னாள்.

"ஆனா அவ எப்படி பாட்டி சரியா அந்த நேரத்துக்கு வந்தா?"

பஞ்சவர்ணத்தையும் அந்தக் கேள்வி தான் நிறையவே குழப்பியது. "நீ என் கிட்ட அந்தத் திட்டத்தைச் சொன்னப்ப யாராவது ஓட்டுக் கேட்டுருக்க முடியுமா?"

"இல்லை பாட்டி. அதுக்கு சான்ஸே இல்லை. ஆர்த்தி, அத்தை ரெண்டு பேரும் வெளியே தோட்டத்தில் இருந்ததை நான் என் கண்ணால் பார்த்தேன். மத்தவங்களும் மாடியில இல்லை. அதுவும் நான் பேசினது மெல்ல தான். வெளியே நின்னுருந்தா கூட கேட்டிருக்க முடியாது"

"அப்படின்னா நீ ஏற்பாடு செஞ்சிருந்த ஆள்கள்ல எவனோ பணத்துக்கு ஆசைப்பட்டு சிவகாமிக்கு சொல்லியிருக்கலாம்"

"சேச்சே. அவனுங்க கிட்ட ஒரு பொண்ணோட வர்றேன்னு சொன்னேனே ஒழிய அது யாருன்னு சொல்லலை. எத்தனையோ தடவை எனக்கு வேலை செஞ்சவனுங்க. உடல் பலம் இருக்கிற அளவுக்கு அறிவு கிடையாதுங்கறதால அவனுக ஊகிக்கவும் சான்ஸ் இல்லை"

யோசித்தபடியே பஞ்சவர்ணம் சொன்னாள். "இங்க இருந்து நீங்க கிளம்புனதுக்கப்பறம் தான் சிவகாமிக்கோ அந்த நந்தினிக்கோ தெரிஞ்சிருக்கணும். முதல்லயே தெரிஞ்சிருந்தா கண்டிப்பா வீட்டை விட்டு வெளியே போகவே சிவகாமி விட்டுருக்க மாட்டா... நீங்க கிளம்புனதுக்கப்பறம் எப்படி தெரிஞ்சிருக்க முடியும்?"

++++++++++++

மிகுந்த ஆர்வத்துடன் நந்தினியைப் பற்றி சொன்னதை நீலகண்டனும், பார்வதியும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். முதல் முதலாய் சிவகாமியைக் கல்லூரியில் பார்த்து விட்டு வந்த பின்னும் இப்படித் தான் ஒரு பரவசத்துடன் ஆர்த்தி அவளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

நீலகண்டன் சுருக்கமாய் சொன்னார். "எல்லாம் அந்த அன்னையோட அருள். அவங்க தான் அந்த டிரைவருக்கு குழப்பத்தை ஏற்படுத்தி அந்தப் பக்கம் அந்த நந்தினி காரை அனுப்பிச்சிருக்காங்க. எனக்கு இதுல சந்தேகமே இல்லை"

பார்வதிக்கு மூர்த்தியின் திட்டம் தெரியாவிட்டாலும் தன் பேத்தி இரு வாலிபர்களுடன் அந்தக் காட்டில் இரவு நேரத்தில் இருப்பது என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அதுவும் காட்டு விலங்கு ஏதாவது வந்திருந்தால்? என்று நினைத்து லேசாக நடுங்கினாள்.

ஆனால் ஆர்த்திக்கு அந்தப் பயத்திற்கான காரணமே இப்போதும் புரியவில்லை நந்தினியைப் பற்றி மேலும் சொன்னாள். "பாட்டி அவங்க குரல் எனக்கு நிறையவே பரிச்சயமான குரல் மாதிரி தோணிச்சு.... அப்புறம் எனக்கு அவங்க வீட்டுல தூங்கினப்பவும் ஒரு கனவு....பயப்படாதீங்க பாட்டி. அந்தக் கனவில்லை....இது வேற. நான் எங்கேயோ போய்கிட்டு இருக்கேன்... என்னை யாரோ தூரத்துல இருந்துட்டு பார்த்துகிட்டே இருக்காங்க...திடீர்னு முழிச்சுகிட்டு பார்த்தா விடிஞ்சுருந்தது... அந்த நந்தினி மேடம் தான் என்னைப் பார்த்துட்டு இருந்தாங்க... கேட்டதுக்கு நான் ஒரு குழந்தை மாதிரி தூங்கிகிட்டு இருந்ததை ரசிச்சதா சொன்னாங்க....."

++++++++++++++

மூர்த்தி அசோக்கிடம் சிடியை வாங்கி வந்து கொண்டிருந்த போது தான் அவன் செல் அடித்தது.

"தம்பி. நான் பொன்னாத்தா பேசறேன்....அன்னைக்கு அந்த விஜயா வந்தா போன் செஞ்சு சொல்லச் சொல்லியிருந்தீய... அதான் போன் செய்யறேன். அவ அண்ணன் வீட்டுக்கு வந்திருக்கா... சொன்னா தாராளமா பணம் தர்றதா சொல்லியிருந்தீய... குடுக்க மறந்துட மாட்டீயளே....."

நேற்றைய தினம் எல்லாமே சிக்கலாக நடந்தாலும் இன்றைய தினம் நல்ல விதமாகப் போவது போல மூர்த்திக்குத் தோன்றியது. பைக்கை வேறுபக்கம் திருப்பினான்.

வெளியே கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த பொன்னாத்தா கையில் இரண்டு நூறு ரூபாய்களை வீசி விட்டுச் சென்று தெருவோரமாய் நடந்து கொண்டு இருந்த விஜயாவை இடைமறித்தான்.

விஜயா பயத்தில் அப்படியே உறைந்தாள். "யார் நீங்க?.... என்ன வேணும்?...."

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட மூர்த்தி அவளைக் கூர்மையாகப் பார்த்தான். அவள் முகத்திலிருந்த பயம் வடிந்தது. திடீரென்று வியர்த்திருந்ததைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு சொன்னாள். "ஓ நீ தானா? ஒரு நிமிசம் என்னைப் பயமுறுத்திட்டியே"

தன்னை அந்த வேலைக்காரி ஒருமையில் அழைத்ததை மூர்த்தி ரசிக்கவில்லை. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் கேட்டான். "யாருன்னு நினைச்சு பயந்துட்டே?"

விஜயா அந்தக் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. எதிர்க் கேள்வி கேட்டாள் "அன்னைக்கு வந்ததும் நீ தான்னு அண்ணன் சொன்னாரு. ஆமா நீ என்னை எதுக்கு தேடறே"

"என் பாட்டி உன்னைப் பார்க்கணும்னாங்க"

"உன் பாட்டி இன்னும் சாகலையா?" என்று ஆச்சரியத்துடன் விஜயா கேட்டது அபசகுனமாக மூர்த்திக்குப் பட்டது.

"என் பாட்டி நல்லாத்தான் இருக்காங்க"

"இருக்கும்.. இருக்கும்... நான் பாத்ததுல அந்த மாதிரி ஆளுங்க அவ்வளவு சீக்கிரமா போகாதுக...." என்று விஜயா ஒருவித நட்புணர்வுடன் பஞ்சவர்ணத்தை எண்ணிப் புன்னகைத்தாள். "உன் பாட்டி என்னை ஏன் பாக்கணும்னு சொல்லிச்சு?"

அவள் பேசிய தோரணை அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. "அன்னைக்கு என்ன நடந்துதுன்னு தெரிஞ்சுக்கத்தான்...."

விஜயா பக்கத்தில் இருந்த பஸ் ஸ்டாப்பில் போட்டிருந்த சிமெண்ட் பெஞ்சைக் காண்பித்து "வா அப்படியே உக்காந்து பேசுவோம்..." என்றாள். அங்கே யாருமில்லாததால் மூர்த்தி சிறிது தயங்கி விட்டுப் போய் அவளுடன் அங்கு உட்கார்ந்தான்.

"சொல்றேன். எனக்கு எவ்வளவு தருவே?"

மூர்த்தி சில நூறு ரூபாய் நோட்டுகளைக் காண்பித்தான். விஜயா அதில் திருப்தியடையவில்லை. "அன்னிக்கு நூறு ரூபா கட்டையே தர்றதா சொன்னேன்னு எங்கண்ணன் சொல்லுச்சு....."

வேறு வழியில்லாமல் தந்தான். விஜயா அந்த நோட்டுக் கட்டை தன் கைப்பையில் பத்திரப்படுத்திக் கொண்டு சொல்லத் தொடங்கினாள். முழுவதும் கேட்டுக் கொண்டவன் கடைசியில் தன் சந்தேகத்தைக் கேட்டான். "அந்த சிரிப்பு பத்தி வேற ஒருத்தர் சொல்லியும் கேட்டிருக்கேன்....ஏன் அப்படி சிரிக்கறாங்க?"

"அது லூசுப்பா. வினோதமா சிரிக்கும்....திடீர்னு அழும்.... முத முதல்ல பாக்கறவங்க பயந்துக்குவாங்க.... ஏன் உன் பாட்டி சொல்லலையாக்கும்"

மூர்த்தி பதில் சொல்லாமல் கேட்டான். "நீ ஏன் ஓடினாய்?'

"எனக்கு மட்டும் உயிர் மேல ஆசையில்லையா? அந்த நேபாளம் கையில அண்ணிக்கு கிடைச்சுருந்தா என் பொணமும் அண்ணிக்கே விழுந்துருக்கும். அந்த சைத்தான் எப்படி இருக்கான்?"

"அவனுக்கென்ன கல்யாணமாயி ஜம்முன்னு இருக்கான்"

"கல்யாணமா? அந்த மூஞ்சியை யாரு கட்டிகிட்டாங்க"

அவன் முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்ததையும், சில நாட்களுக்கு முன் கல்யாணம் ஆனதையும் மூர்த்தி சொன்னான்.

"ஐயோ அப்ப இன்னொரு தடவ அவனை நேர்ல பாத்தா எனக்கு அவனை அடையாளம் தெரியாது... ஆனா அவனுக்கு என்னை நல்லா அடையாளம் தெரியுமே"

"பயப்படாதே. அவன் தேனிலவுக்குப் போயிருக்கான். அந்த ராட்சஸியும் பாம்பே போயிருக்கா. இன்னும் நாலு நாள் கழிச்சு தான் ரெண்டு பேரும் வருவாங்க. சரி அந்த சம்பவத்தன்னைக்கு என் பாட்டியை வந்து பார்க்கிறேன்னு சொன்னாயாமா. அப்புறம் ஏன் நீ வரலை"

"அந்தப் பெரியம்மா [சிவகாமி] நாட்டில இல்லைன்னு நினைச்சு தான் வர்றேன்னு சொன்னேன். அது வந்துடுச்சுன்னு ஆனதுக்கப்புறம் என்னை நான் காப்பாத்திக்க வேணாமா? இப்பவும் சொல்றேன் பாரு. அந்தம்மா நாளைக்கே ஊட்டிக்கு வந்து நின்னாலும் நிக்கும். முதல்ல நான் ஊருக்குக் கிளம்பறது தான் நல்லதுன்னு தோணுது....."

விஜயா எழுந்தாள்.

++++++++++++++

பஞ்சவர்ணம் விஜயா சொன்னதையெல்லாம் பேரன் சொல்ல இடைமறிக்காமல் கேட்டுக் கொண்டாள். பின் ஒன்றும் சொல்லாமல் கண்களை மூடி சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். எப்போதும் ஆயிரம் கேள்விகள் தொடர்ந்து கேட்பவள் அதிசயமாக பேரனிடம் ஒன்றும் கேட்காமல் சொன்னாள்.

"சரி அந்த சிடியைப் போடு."

மூர்த்தி வராந்தாவை ஒரு நிமிடம் எட்டிப்பார்த்து யாருமில்லை என்று உறுதி செய்து கொண்டு கதவை மறுபடி சாத்தி சிடியை போட்டான். மௌனமாக ஆர்த்தியின் ஆழ்மனப்பதிவுகளை இருவரும் கேட்டார்கள்.

.....

"அப்படி சொன்னது யார் ஆர்த்தி. உனக்கு அந்தக் குரல் யாரோடதுன்னு தெரியுமா?"

"ம்"

"யாரோடது"

"அக்காவோடது"

"அக்காவா? எந்த அக்கா"

"அப்பா அம்மாவோட அக்கா"

ஆர்த்தியின் மூச்சுக் காற்று லேசாகக் கேட்க ஆரம்பித்தது. டாக்டர் ப்ரசன்னா அவளை ஆழ்மன உறக்கத்திலிருந்து வெளிக் கொண்டு வரப் பேச ஆரம்பித்தான்..

எல்லாம் முடிந்த பின் மூர்த்தி கேட்டான். "ஆர்த்தி கேட்ட அந்தக் குரல் சிவகாமியோடது தானே பாட்டி."

ஆமென்று தலையை ஆட்டிய பஞ்சவர்ணம் எழுந்து கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடக்க ஆரம்பித்தாள். இளங்கோ, ஆர்த்தி, விஜயா எல்லோர் சொன்னதையும் ஒட்டு மொத்தமாக பார்க்கையில் என்ன நடந்திருக்கும் என்பதைத் தெளிவாக அவளால் ஊகிக்க முடிந்தது. கடைசியில் பேரனிடம் சொன்னாள். "அப்படின்னா அந்த நாள் ராத்திரி நடந்தது ஒரு கொலை இல்லை மூர்த்தி. ரெண்டு கொலை."

++++++++++++

இசைத்த செல் போனை எடுத்த ஆகாஷ் காதில் விழுந்த முதல் வார்த்தை "முட்டாள்"

லிஸாவின் குரலைக் கேட்ட ஆகாஷ் புன்னகையுடன் சொன்னான். "அறிமுகப்படுத்திகிட்டது போதும். விஷயத்தை சொல்லு"

"பேசறப்ப வக்கனையா பேசு. முக்கியமான இடத்துல கோட்டை விட்டுடு. உனக்கு சேர்ந்து டைட்டானிக் பார்க்க வேற ஆளே கிடைக்கலையா."

ஆகாஷ் சொன்னான். "அந்த நளினி நல்ல கம்பெனி"

"முட்டாளே... அவள் கூட படம் பார்க்கறப்ப நீ ஆர்த்தியைத் தான் நினைச்சுகிட்டிருந்திருப்பேங்கறதை மை வச்சுப் பார்க்கத் தேவையில்லை. ஆனா அந்த மூர்த்தி கூட ஆர்த்தியை எந்த தைரியத்துல நீ அனுப்பிச்சே"

"ஏய்.. கூட பார்த்திபன் போயிருக்கான்"

"ஆமா அவன் ஜாக்கி சான். ஆர்த்திக்குப் பெரிய பாதுகாப்பு. அந்த நந்தினி மட்டும் அங்கே போகாம இருந்திருந்தாங்கன்னா என்ன நடந்துருக்கும்னு உனக்கு ஐடியாவாது இருக்கா?"

ஆகாஷ் தர்மசங்கடத்துடன் நெளிந்தான். நடந்ததை பார்த்திபன் வாயில் இருந்து கேள்விப்பட்டதில் இருந்து அவனுக்கும் அது உறுத்தாமல் இல்லை.

"சரி. எல்லாம் பிரச்சினையில்லாமல் முடிஞ்சிடுச்சே. என்னை என்ன செய்யணும்கிறே"

"போய் ஆர்த்தி கிட்ட ஐ லவ் யூ சொல்லு. இனிமே கண்ணாமூச்சு ஆடி ரிஸ்க் எடுத்துக்காதே."

++++++++++++

சிவகாமி, தம்பியுடன் செவ்வாய்கிழமை காலையே ஊட்டி வந்து சேர்ந்தாள். அவள் முன்பு திட்டமிடிருந்ததற்கு மூன்று நாட்கள் முன்பே வந்து சேர்ந்தது மூர்த்தியை ஆச்சரியப்படுத்தியது. நேற்று தான் பழைய வேலைக்காரி விஜயா "அந்தம்மா நாளைக்கே வந்து நின்னாலும் நிக்கும்' என்று சந்தேகத்துடன் சொன்னாள். இன்று அப்படியே சிவகாமி வந்து சேர்ந்து விட்டாளே என்று நினைத்துக் கொண்டிருக்கையில் வேலைக்காரன் ஒருவன் வந்து சொன்னான். "பெரியம்மா உங்களைக் கூப்பிடறாங்க"

இத்தனை வருடங்களில் அவனை சிவகாமி ஒரு முறை கூட கூப்பிட்டனுப்பியதில்லை. பேசியதில்லை. ஆனால் முதல் முறையாக இப்போது கூப்பிடுவது அவனுள் பயத்தைக் கிளப்பியது. சிவகாமியைப் பார்ப்பதற்கு முன் பாட்டியிடம் சென்று விஷயத்தைச் சொன்னான்.

பஞ்சவர்ணமும் இதை எதிர்பார்க்கவில்லை என்பது அவள் முகபாவனையில் இருந்து தெரிந்தது. "அவள் ஞாயித்துக் கிழமை பிக்னிக் பத்திக் கேட்டாலும் கேப்பா. பயப்படாதே. நீயா ஒத்துக்கற வரைக்கும் அவளால் எதையும் நிரூபிக்க முடியாது. நடக்காத ஒண்ணுக்கு நிரூபணம் எப்படி இருக்க முடியும். போயிட்டு சீக்கிரம் என் கிட்ட வந்து என்ன சொன்னாள்னு சொல்லு"

மூர்த்தி சிவகாமியின் அறையில் நுழைந்த போது சிவகாமி சோபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

பஞ்சவர்ணம் எதிர்பார்த்தது போல அவள் அவர்களுடைய பிக்னிக் பற்றி கேட்கவில்லை. அமைதியாக அவனைப் பார்த்து சொன்னாள். "நீயும் உன் பாட்டியும் மூணு நாளுக்குள்ளே இந்த வீட்டை விட்டு வெளியே போகணும். இப்ப மணி ஒன்பது. வெள்ளிக்கிழமை காலை மணி ஒன்பதுக்குள்ளே வெளியே போகலைன்னா ஒன்பது ஒன்றுக்கு உங்களை ஆள்களை விட்டு நான் பலவந்தமாய் வெளியேற்ற வேண்டி இருக்கும். வீடு கிடைக்கலை அப்படி இப்படிங்கற காரணங்கள் சொல்லி ஒரு நிமிஷம் நீங்க இங்க அதிகம் தங்கறதை நான் விரும்பலை."

மூர்த்தி முகத்தில் இரத்தம் வடிந்து முகம் வெளுத்தது. ஏன் என்று அவளைக் கேட்க அவன் துணியவில்லை. அவளும் தன் காரணங்களைச் சொல்லவில்லை.

"அது மட்டுமல்ல, இனி எந்தக் காலத்திலேயும் நீங்க ரெண்டு பேரும் இந்த வீட்டுக்குள்ளே வர்றதை நான் விரும்பலை. உங்களுக்கு எப்பவாவது பவானியைப் பார்க்கணும்னு தோணிச்சுன்னா அவளுக்குப் போன் செஞ்சு நீங்க இருக்கிற இடத்துக்குக் கூப்பிட்டு பார்த்துக்கலாம், பேசிக்கலாம். அவளைக் காரணம் காட்டி இந்த வீட்டுக்குள்ளே நுழையறதை நான் அனுமதிக்க மாட்டேன். புரியுதா?"

மூர்த்தி அவளை அடக்க முடியாத வெறுப்புடன் பார்த்தபடி தலையசைத்தான்.

"நீ போகலாம்" என்ற சிவகாமி தன் அருகே இருந்த அப்பாயின்மெண்ட் புத்தகத்தை எடுத்துப் பிரித்தாள்.

மூர்த்தி கொதிக்கும் மனதுடன் வெளியேறினான். பஞ்சவர்ணத்திடம் சென்று சொன்ன போது அவள் முகமும் உடனடியாக வெளுத்தது. அவளும் இதை எதிர்பார்த்திருக்கவில்லை.

"அவள் சொன்னதை வார்த்தைக்கு வார்த்தை அப்படியே சொல்லு"

சிவகாமி சொன்னதை வார்த்தைக்கு வார்த்தை மூர்த்தி மறுபடியும் சொன்னான்.

"உன்னை அவள் எதுவும் கேட்கலையா?"

"வாய் திறக்க விடலை"

பஞ்சவர்ணம் கண்களை மூடிக் கொண்டு சொன்னாள். "என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு மூர்த்தி. சாயங்காலம் வா போதும்..."

"அப்படின்னா உடனடியா வீடு பார்க்க ப்ரோக்கர் கிட்ட சொல்லட்டா?"

"ம்"

## 99

It is a good rule in life never to apologize. The right sort of people do not want apologies, and
the wrong sort take a mean advantage of them.

P. G. Wodehouse ‘The Man Upstairs’ (1914)

சிவகாமியால் அடுத்ததாக அழைக்கப்பட்டவள் ஆர்த்தி.

"உட்கார்." என்றவள் மருமகள் உட்கார்ந்ததும் நேரடியாக விஷயத்திற்கு வந்தாள். "ஆர்த்தி! மூர்த்தியும் அவன் பாட்டியும் ரெண்டு மூணு நாள்ல இந்த வீட்டை விட்டு வெளியே போகப் போறாங்க.... இனி வெளியே எங்கேயாவது அவன் உன்னைப் பார்த்து கூப்பிட்டான்னா நீ எந்தக் காரணத்தைக் கொண்டும் அவன் கூட நின்னு பேசறதோ, அவன் கூட எங்கேயாவது போறதோ கூடாது. புரியுதா?"

ஆர்த்திக்குத் தூக்கிவாரிப்போட்டது. ஆனாலும் தலையசைத்தாள். "உன் தாத்தா மேல் சத்தியம் பண்ணு"

ஆர்த்திக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. மூர்த்தி தாய் தந்தையில்லாதவன், பாவம், என்றெல்லாம் எண்ணியிருந்த ஆர்த்தி சத்தியம் பண்ணச் சொன்னதும் தயங்கினாள். ஏனென்று புரியாவிட்டாலும் அந்த ஞாயிற்றுக் கிழமை பிக்னிக் தான் இதற்கு முக்கிய காரணம் என்பது மட்டும் தெரிந்தது.

"அத்தை. அன்னைக்கு பிக்னிக்ல கார் நின்னு போய் நாங்க மாட்டிகிட்டதுக்கு மூர்த்தி காரணம்னு நீங்க நினைக்கிற மாதிரி தெரியுது. ஆனா அது உண்மையில்லை அத்தை. மூர்த்தி ரொம்ப நல்லவர்...."

மருமகளைக் கூர்மையாகப் பார்த்த சிவகாமி கேட்டாள். "ஆர்த்தி. நீ பழகினதுலயே யாராவது கெட்ட ஆள் ஒருத்தர் பேரைச் சொல்லேன்"

ஆர்த்தி யோசித்தாள். கஷ்டப்பட்டு யோசித்தாள். அவளுக்கு யாரையும் சொல்லத் தெரியவில்லை. அசடு வழிந்தபடி சிவகாமியைப் பார்த்தாள்.

சிவகாமி சொன்னாள். "உன்னை மாதிரியே இந்த உலகத்துல எல்லாரும் இருந்துட்டா உலகம் சொர்க்கமாயிடும் ஆர்த்தி...இத்தனை வருஷங்கள்ல இந்த கலிகாலத்துல நீ பழகின ஆள்கள்ல ஒரு கெட்டவனை உனக்கு சொல்லத் தெரியலை...இது உனக்கு ஆச்சரியமாயில்லையா ஆர்த்தி"

ஆர்த்திக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"உன்னை ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுக்கற வரை பாதுகாக்கற பொறுப்பு எனக்கு இருக்கு ஆர்த்தி. கல்யாணம் ஆகிற வரைக்கு மட்டும் நான் சொன்னபடி கேட்டால் போதும். அப்புறம் நீயும் உன் புருஷனும் சேர்ந்து அவன் வீட்டுக்கு விருந்தே சாப்பிடப் போனாலும் எனக்குக் கவலையில்லை."

"வீட்டை விட்டுப் போறதுக்கு முன்னால் என் கிட்ட போயிட்டு வர்றேன்னு சொல்ல வந்தா நான் பேசலாமா?" தயக்கத்துடன் ஆர்த்தி கேட்டாள்.

சிவகாமி தலையசைத்தாள். "இந்த வீட்டுக்கு வெளியே தான் நான் சொன்னேன்..."

ஆர்த்தி சத்தியம் செய்து கொடுத்து விட்டு எழுந்தாள். சிவகாமி அவளை மறுபடி உட்காரச் சொன்னாள். "மத்தவங்களையும் கூப்பிட்டிருக்கேன். எல்லார் கிட்டயும் சேர்ந்து பேச வேண்டியிருக்கு. கொஞ்சம் பொறு ஆர்த்தி"

இரண்டு நிமிடங்களில் சந்திரசேகர், ஆகாஷ், பார்த்திபன் மூவரும் வந்தார்கள். உட்காரச் சொன்ன சிவகாமி சொல்ல நினைத்ததைச் சொன்னாள். "வக்கீல் தேசிகாச்சாரி ஆர்த்திக்குக் கம்பெனி அதிகாரங்களை கொடுத்துட்டீங்களா, ஆர்த்தி கம்பெனிக்குப் போகிறாளா, பேப்பர்ஸில் கையெழுத்து போடறாளான்னு தினம் போன் செய்து கேட்டுகிட்டிருக்கார்....."

சந்திரசேகர் முகம் சுளித்தார். "அந்தாளுக்கு வேற வேலை இல்லை"

"ஆனால் அவர் சொல்றது சரி தானே சந்துரு. அதனால் நாளைக்கு புதன் கிழமையில் இருந்து ஆர்த்தி கம்பெனி விஷயங்கள்ல கலந்துக்கட்டும்னு நினைக்கிறேன். ரெண்டு மாச காலத்துக்கு நானும் இருந்து சொல்லித் தர்றேன்...."

சந்திரசேகர் சந்தேகத்தோடு கேட்டார். "அப்புறம் நீ எங்கே போகிறாய்?"

"நானும் அவரும் உலகச் சுற்றுப் பயணம் போகப்போகிறோம். போனா வர ஒரு வருஷம் ஆகும்"

"நானும் வர்றேன்" என்று சந்திரசேகர் சொன்னதைக் காதில் விழுந்த மாதிரியே காட்டிக் கொள்ளாத சிவகாமி தொடர்ந்து சொன்னாள்.

"என் வாழ்க்கைல நான் ஒருத்தரைத் தவிர மற்ற எல்லார் கிட்டயும் நியாயமா நடந்துகிட்டிருக்கேன்னு உறுதியா சொல்ல முடியும். நான் நியாயமா நடக்கலைன்னு நினைக்கிறது என் புருஷன் கிட்டத் தான். ஆரம்பத்திலிருந்தே நான் என் அப்பா, என் தம்பி, தங்கை, என் பிசினஸ்னு இருந்துட்டேன். அவர் ஒரு தடவை கூட அதைத் தப்பா சொன்னதில்லை. அவர் ரிடையராகற வரை அவரும் பிசியா இருந்தார். நானும் பிசியா இருந்தேன். ஆனா அவர் ரிடையரானதுக்கப்புறம் அவர் ப்ரீயாயிட்டார். நான் மட்டும் பிசியாவே இருக்கேன். ஒவ்வொரு நாளும் ஆபிசுக்குக் கிளம்பறப்ப தோட்டத்துல உட்கார்ந்துட்டு படிச்ச தேவன் புஸ்தகத்தையே திரும்பத் திரும்பப் படிச்சுட்டு தனிமையில இருக்கிற அவரைப் பார்க்கிறப்ப எல்லாம் எனக்கு குற்றவுணர்வு வருது. நான் ரொம்பவே சுயநலமா இருந்துட்டேனோன்னு தோணுது...."

அவ்வளவு சீக்கிரம் உணர்ச்சி வசப்படாத சிவகாமியின் குரல் தழுதழுத்ததைப் பார்க்கையில் நான்கு பேருக்குமே மனம் நெகிழ்ந்தது. சிவகாமி நொடியில் சுதாரித்துக் கொண்டு அமைதியாகப் பேசினாள்.

"....ரொம்ப காலமா ரெண்டு பேருமா சேர்ந்து உலக சுற்றுப் பயணம் போகணும்னு ஆசைப்படறார். வயசும் எங்களுக்கு ஆயிட்டே போகுது. இனிமேயும் தள்ளிப் போட்டா போகவே முடியாதோன்னும் தோணுது. அதனால பாம்பேயிலேயே டிக்கட் பண்ண சொல்லிட்டேன்... வேறெந்த யோசனையும் இல்லாம அவரோட சேர்ந்து சுத்திப் பார்த்துட்டு வர்றேன். வர்ற வரைக்கும் நீங்க எல்லாம் ஒழுங்கா பிசினஸ் பார்த்துக்கணும்..."

"நானும் பவானியும் கூட வர்றோம். எங்களுக்கும் டிக்கெட் பண்ண சொல்லிடேன்"

சிவகாமி பொறுமையிழந்து சொன்னாள். "எட்டு வயசை நீ எப்பவோ தாண்டிட்டே சந்துரு. இன்னும் அந்த வயசுப் பையனாகவே நடந்துக்காதே"

++++++++++++++++++

சாயங்காலம் மூர்த்தி பாட்டியின் அறையில் நுழைந்த போது பஞ்சவர்ணம் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

"பாட்டி...இன்னொரு தகவல். இன்னும் ரெண்டு மாசத்துல அந்த ராட்சஸி உலகப் பயணம் போறாளாம் புருஷனோட. ஊமைக் கோட்டான் கிட்ட பார்த்தி சொல்லிட்டு இருந்ததைக் கேட்டேன்"

பஞ்சவர்ணம் அமைதியாகச் சொன்னாள். "அவள் உலகப் பயணம் போகப் போறதில்லை. உலகத்தை விட்டே போகப் போறாள்."

"என்ன பாட்டி சொல்றீங்க"

"மூர்த்தி. எனக்கு சின்ன வயசுல இருந்தே பணம், அதிகாரம் மேல தீராத ஆசை இருந்துச்சு. அது தான் என் லட்சியமா நினைச்சுட்டு இருந்தேன். நேத்துல இருந்து எனக்கு அந்த ஆசை போயிடுச்சு. இப்ப எனக்கு ஒரே ஒரு ஆசை தான் இருக்கு. அந்த சிவகாமியை நான் அழிக்கணும். அவள் அணு அணுவா சாகறதை என் கண்ணால பார்க்கணும். அது மட்டும் முடிஞ்சுதுன்னா என் வாழ்க்கைல வேற ஆசை இல்லை"

பஞ்சவர்ணத்தின் வார்த்தைகள் அடிமனத்திலிருந்து உறுதியாக வந்தன.

"நான் என்ன செய்யணும் பாட்டி?"

"அந்த அசோக்குக்கு போன் போடு. நான் அவன் கிட்ட பேசணும்"

மூர்த்தி தயங்கினான். "பாட்டி அவன் ஆபத்தானவன். அகம்பாவம் புடிச்சவன்....."

"சிவகாமி மாதிரி அவன். அவளை அழிக்க அவன் தான் நமக்கு சரியா உபயோகமாவான் மூர்த்தி. போனைப் போடு"

தயக்கத்தோடு மூர்த்தி அசோக்கின் செல்லிற்கு இணைப்பு தந்து செல்லை பஞ்சவர்ணத்திடம் தந்தான்.

"ஹலோ. தம்பி நான் மூர்த்தியோட பாட்டி பேசறேன். உன்னை நேர்ல பார்த்துப் பேசணும்."

"என்ன விஷயமா?"

"ஒரு புது வேலை இருக்கு. அதை நானே நேர்ல சொல்லணும்."

"அடுத்த வாரம் புதன்கிழமை?"

"இது அவசரமான விஷயம். நாளைக்கே பேச முடிஞ்சுதுன்னா நல்லது"

சில வினாடிகள் மௌனம் சாதித்த அசோக் பேசினான். "சரி எல்க்ஹில் முருகன் கோயிலுக்கு நாளைக்கு சாயங்காலம் நாலு மணிக்கு வாங்க"

போனை பேரனிடம் திருப்பித் தந்த பஞ்சவர்ணம் தன் அபூர்வ புன்னகையுடன் சொன்னாள். "சூரசம்ஹாரம் செய்ய பிள்ளையார் சுழி முருகன் கோயில்ல போடறது பொருத்தம் தான்"

★★★★★★★★★★

சிவகாமி இரண்டு மாதம் கழித்து உலகப் பயணம் போகிறாள், சுமார் ஒரு வருடம் கழித்து தான் வருவாள் என்பதை அறிந்த கணம் முதல் சந்திரசேகர் மனதில் ஆர்த்தியின் திருமணம் பற்றிய எண்ணம் தான் பிரதானமாக இருந்தது. அவள் போவதற்குள் ஆர்த்தியின் திருமணத்தை முடித்து விட்டால் நிம்மதி என்று தோன்றியது. ஆகாஷிற்கும், ஆர்த்திக்கும் இடையே திருமணம் செய்தால் என்ன என்று பல சந்தர்ப்பங்களில் பல விதங்களில் சிவகாமியிடம் சொல்லிப் பார்த்திருந்தார். அது அவர்கள் முடிவு செய்ய வேண்டிய விஷயம், இதில் யாரும் யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது என்பதே அவளுடைய பதிலாக இருந்தது.

ஆர்த்தியும், ஆகாஷும் ஒருவரை ஒருவர் காதலிக்கிற மாதிரியும் தோன்றியது. அதே நேரத்தில் ஆகாஷிற்கு ஆர்த்தி மேல் அதீத கோபம் இருப்பது போலவும் தெரிகிறது. இதற்கு ஒரே வழி அவர்களுக்குள் இடையே என்ன பிரச்சினை என்பதைத் தெரிந்து கொள்வது தான் என்று சந்திரசேகர் முடிவு செய்து மகளை தனதறைக்கு வரவழைத்து நேரடியாகக் கேட்டும் விட்டார்.

"ஆர்த்தி, உனக்கும் ஆகாஷுக்கும் இடையில் என்ன பிரச்சினை?"

ஆர்த்தி தன் தந்தையைப் பரிதாபமாகப் பார்த்தாள். பிரச்சினை சிவகாமி மேல் அவள் சந்தேகப்பட்டது தான் என்பதை அவள் அவரிடம் எப்படி சொல்வாள்.

"அப்படியெதுவும் பிரச்சினை இல்லைப்பா"

அவர் அவள் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. "பார் ஆர்த்தி. பொதுவா அவன் அப்படி ஒரு கோபத்தை ரொம்ப நாளைக்கு வச்சுகிட்டிருக்கிற ரகம் அல்ல. அப்படி விடாமல் கோபத்தை வச்சிருக்க நீ என்ன செய்தாய்?"

ஆர்த்தி மௌனம் சாதித்தாள்.

"ஒன்னு நீ சொல்லு, இல்லாட்டி அவன் கிட்ட போய் நான் கேட்டுக்கறேன். தெரியாமல் நான் விடப் போறதில்லை."

அவள் கண்களில் லேசாக நீர் திரண்டது. அவர்களுக்குள் இருந்த விரிசலுக்குக் காரணம் அறிந்திருந்த பவானி அவருக்குப் பின்னால் இருந்து சொல்லாதே என்று சைகை காண்பித்தாள். சிவகாமியைப் பற்றித் தவறாகச் சொல்பவர்களை அவர் எப்படி வெறுத்திருக்கிறார் என்பதை அவள் அறிவாள்.

"சரி நான் ஆகாஷ் கிட்டயே போய் கேட்டுக்கறேன்...." சந்திரசேகர் தீர்மானமாக எழுந்தார்.

தந்தையின் கைகளைப் பிடித்து நிறுத்திய ஆர்த்திக்குக் கண்களில் திரண்ட நீர் வழிய ஆரம்பித்தது. பவானியின் சைகையையும் மீறி அவள் அவரிடம் உண்மையைச் சொல்ல நினைத்தாள். ஆகாஷ் வாயால் அவர் அதைக் கேட்பதை விட அவள் வாயால் கேட்பதே நல்லது என்று தோன்றியது.

"அப்பா, அம்மாவோட சாவு.... இயற்கையாய் இருக்கலைப்பா. அவங்க சாவுக்கு.... சாவுக்கு பெரியத்தை காரணமாய் இருப்பாங்களோங்கற சந்தேகம் எனக்கு இருந்தது. அதைத் தெரிஞ்ச நாள்ல இருந்து அவர் என் கிட்ட சரியாய் பேசறதில்லை....."

பவானிக்கு ஒரு கணம் இதயத் துடிப்பு நின்று போனது. சந்திரசேகர் முகத்தில் முதலில் நம்ப முடியாமை, பின் அதிர்ச்சி, ரௌத்திரம் எல்லாம் தொடர்ந்து தெரிந்தன. கோபத்தில் உடல் லேசாக நடுங்க மகளை ஓங்கி அறைய கையை அவர் உயர்த்த, பவானி பாய்ந்து வந்து அவர் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

பவானியை வெறித்துப் பார்த்தபடி சில வினாடிகள் நின்ற சந்திரசேகர் பின் பார்வையை மகள் மீது திருப்பினார். அவர் பார்வையில் புது மனிதரைப் பார்த்தாள் ஆர்த்தி. உண்மையைச் சொல்லி ஆகாஷிற்கு அடுத்ததாக இன்னொரு எதிரியை சம்பாதித்துக் கொண்டோம் என்பது ஆர்த்திக்குப் புரிந்தது. அவர் கண்கள் தீப்பிழம்பாய் அவளைச் சுட்டன. ஒரு அற்பப்புழுவைப் பார்ப்பது போல மகளைப் பார்த்துக் கேட்டார். "எங்கக்காவுக்கு உங்கம்மாவைக் கொல்ல வேண்டிய அவசியம் என்ன இருக்கு?"

அந்தக்குரலில் இருந்த கடுமை ஆர்த்தியை வாய் திறக்க விடவில்லை. அவரை அவ்வளவு கோபத்தில் இதுவரை பார்த்திராத அவளுக்கு பயமாக இருந்தது. கோபத்தின் உச்சத்தில் இருந்த சந்திரசேகர் மகளை மறுபடியும் கேட்டார். "சொல்லு"

"எனக்கு .... தெரியலை.... சொத்து காரணமாய் இருக்கும்னு...." என்று தட்டுத் தடுமாறிச் சொல்லி தாத்தாவின் பெயரைச் சொல்ல வந்த ஆர்த்தி அப்படியே நிறுத்திக் கொண்டாள். சொன்னால் இந்த வயதான காலத்தில் தாத்தாவையும் பாட்டியையும் வெளியனுப்பி விட்டால் அவர்களுக்கு யாருமில்லை. சற்று முன் தான் பஞ்சவர்ணத்தைப் போகச் சொல்லி இருக்கிறார்கள். அவளுக்காவது மூர்த்தி இருக்கிறான். ஆனால் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் போக போக்கிடம் கிடையாது.....

"சொத்து...." என்ற சந்திரசேகரின் உதடுகள் பிதுங்கி முகம் கோணியது. மகளை வினோதமாகப் பார்த்தார். ஆனால் சிறிது நேரத்தில் மகள் முகத்தில் தெரிந்த துக்கம், வெகுளித்தனம் எல்லாம் அவரை முழுக் கோபத்தையும் அவள் மேல் காண்பிக்க முடியாமல் தடுத்தன. அவரால் அவள் மீது கோபித்துக் கொள்ள முடியாது என்று தோன்றியது. மெள்ள கோபம் வடிந்தவர் முகத்தில் சோர்வு தெரிந்தது.

அவள் அருகில் உட்கார்ந்தவர் கண்கள் லேசாய் ஈரமாயின. "அவன் அக்காவோட ரத்தம். அதனால தான் இத்தனை ஆனதுக்கப்புறமும் உன் கிட்ட மனிதாபிமானத்தோட நடந்திருக்கான் ஆர்த்தி. உன்னை டாக்டர் கிட்ட கூட்டிகிட்டு போயிருக்கான்... இதைப் பத்தி ஒரு வார்த்தை யார் கிட்டயும் சொல்லலை...."

தந்தையின் கோபம் சற்று குறைந்ததால் அவர் தோளில் சாய்ந்து ஆர்த்தி வாய் விட்டு அழுதாள். அவளை ஒரு கையால் அணைத்துக் கொண்ட சந்திரசேகர் மகள் பெயரைத் திரும்பத் திரும்ப சொன்னார். "ஆர்த்தி.... ஆர்த்தி..."

அவர் கண்கள் அவர் அறை சுவரில் பெரியதாகத் தொங்கிய அவரது தந்தை தர்மலிங்கத்தின் படத்தின் மீது சிறிது நேரம் தங்கியது. பின் உணர்ச்சிகரமாக மகளிடம் பேச ஆரம்பித்தார்.

"ஆர்த்தி. நீ சொத்து பத்தி பேசினாய். அத்தனை சொத்தும் எங்க பரம்பரை சொத்து அல்ல. எங்கப்பா சம்பாத்தியம். எங்கப்பா ஒரு ஏழை விவசாயியோட மகன். அவரோட அம்மாவை சின்ன வயசிலயே இழந்துட்டு, அவரோட அப்பா வயசான காலத்தில் ஒரு கல்யாணம் செய்துகிட்டு அந்த சித்தி கொடுமை தாங்காமல் வீட்டை விட்டு வெறும் கையோட ஊட்டிக்கு ஓடி வந்தார். இங்கே பல இடங்கள்ல எடுபிடியாய் வேலை பார்த்தார் பிறகு ஒரு ஏழைக் குடும்பத்துப் பெண்ணான எங்கம்மாவைக் கட்டிகிட்டார். எங்கக்கா பிறந்த பிறகு சின்னதாய் வியாபாரம் செய்ய ஆரம்பிச்சார். அப்புறம் அவர் தொட்டதெல்லாம் பொன்னாச்சு. நாலைந்து வியாபாரம் செய்ய ஆரம்பிச்சார். அதிலேயும் நல்ல லாபம் வர ஆரம்பிச்சது. அத்தனை அதிர்ஷ்டத்துக்கும் அக்கா தான் காரணம்னு எங்கப்பா உறுதியா நம்பினார். 'அவ வளர வளர என் கிட்ட இருந்த பணமும் வளர ஆரம்பிச்சுது'ன்னு என் காது படவே பல தடவை சொல்லியிருக்கார்."

"பெரியக்காவுக்கு அப்புறம் சின்னக்கா, நான் எல்லாம் பிறந்தோம். எங்கம்மா நான் பிறந்த கொஞ்ச காலத்திலேயே இறந்துட்டாங்க. எங்கப்பாவுக்கு சின்னக்கா மேலயோ, என் மேலயோ பெருசா பாசம் இருக்கலை. அவரைப் பொறுத்த வரைக்கும் பெரியக்கா ஒருத்தி தான் அவரோட அதிர்ஷ்டக் குழந்தை. அழகு, புத்திசாலித்தனம், தைரியம்னு எல்லாமே அக்கா கிட்ட இருந்ததால் அவருக்கு அவள் மேலிருந்த பாசம் கூடிகிட்டே வந்தது. எனக்கும் சின்னக்காவுக்கும் அவள் தான் அம்மா ஸ்தானத்துல இருந்தாள். எது வேணும்னாலும் அப்பா கிட்ட நாங்க நேரா கேட்டதில்லை. அக்கா மூலமா தான் கேட்போம். அக்காவுக்கு மட்டும் அவர் எதுவும் இல்லைன்னு சொன்னதில்லை..."

"எனக்கு கிட்டத்தட்ட எட்டு வயசு இருக்கறப்ப எங்கப்பா வாழ்க்கையில ஒரு பொண்ணு வந்தா. பேரு மாலினி. பார்க்க அழகாய், கவர்ச்சியாயிருப்பாள். அப்பாவை அவள் வசியம் பண்ணிட்டாள். ஆரம்பத்துல நாங்க பெருசா கண்டுக்கலை. ஆனா கடைசில அவளை அப்பா இந்த வீட்டுக்கே கூட்டிகிட்டு வந்துட்டார். அவளோட அண்ணன் ஒரு பெரிய ரௌடி. அவனும் அவள் கூடவே இந்த வீட்டுக்கு வந்துட்டான். வீட்டுல அவங்க ராஜாங்கம் நடக்க ஆரம்பிச்சுது. பெரியக்கா மேல உயிரையே வச்சிருந்த எங்கப்பா அவளை நேரா பார்த்துப் பேசறதைக் கூட கை விட்டுட்டார்...."

சந்திரசேகர் தன் தந்தையின் படத்தையே பார்த்துக் கொண்டு சில வினாடிகள் சொல்வதை நிறுத்தினார். அவர் அந்தக் காலத்திற்கே போய் விட்டது போல் தோன்றியது. இது வரை கேள்விப்பட்டிராத இந்த விஷயத்தை ஆர்த்தியும் பவானியும் கேட்டு ஆர்வத்துடனும், திகைப்புடனும் இருந்தார்கள்.

சந்திரசேகர் தொடர்ந்தார். "அந்த மாலினிக்கும், அவளோட அண்ணனுக்கும் பெரியக்கா ஒருத்தி தான் எதிராய் நின்னா. அக்கா யாருக்கும் பணிஞ்சு நடக்கற ரகம் இல்லை. அதனால அவளை இந்த வீட்டுல இருந்தே அனுப்ப அவங்க தீர்மானிச்சாங்க. எங்கப்பா கிட்ட பேசி அவரை ஒத்துக்கவும் வச்சுட்டாங்க. அப்பா எங்க மூணு பேரையும் இன்னொரு வீட்டுக்கு அனுப்ப முடிவு செஞ்சார். அக்காவைக் கூப்பிட்டு எங்களை அங்கே போகச் சொன்னார். என்ன வேணுமோ அதை எங்களுக்கு அங்கே அனுப்பறதா சொன்னார். அக்கா "என் பிணம் தான் இந்த வீட்டை விட்டுப் போகும். உயிரோட நான் வெளியே போக மாட்டேன்"னு சொன்னதோட வீட்டுல இருந்துட்டே சாப்பிடாம சத்தியாகிரகம் செய்ய ஆரம்பிச்சா"

"அக்கா ரெண்டு வேளை சாப்பிடலைன்னு ஆனதுக்கப்பறம் அப்பாவுக்கு ஒரு மாதிரியாயிடுச்சு. என்ன தான் அந்த மாலினி மேல மோகம் இருந்தாலும் அவர் மனசு கேட்கலை. அக்காவோட பிடிவாதம் தெரிஞ்ச அவர் அவள் கிட்ட "உங்களுக்கு அங்கே போனாலும் எந்தக் குறையும் வைக்க

மாட்டேன்" அப்படி இப்படின்னு சொல்லி அனுப்ப ஆன வரைக்கும் முயற்சி செய்தார். அக்கா அவர் கிட்ட ஒரு வார்த்தை பேசலை. அவர் முகத்தை நேரா பார்க்கலை... சுவத்தைப் பார்த்துட்டே உட்கார்ந்திருந்தாள். நானும் சின்னக்காவும் அவள் பின்னால் கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தோம். எனக்கு பயம்.. அவள் சாப்பிடாம செத்துப் போயிட்டா எங்களுக்கு யாருமில்லாமப் போயிடும்னு.... நாங்களும் அவளைக் கெஞ்சினோம். அக்கா அழுத்தக்காரி. அமைதி இழக்கலை. அசரலை....."

"அன்னைக்கு ராத்திரி அக்காவோட மூணாவது வேளை பட்டினி. அப்பாவுக்கு தூங்க முடியலை. அவர் மறுபடி வந்து அவள் கிட்ட பேசிப்பார்த்தார். அக்கா அவர் சொன்னதைக் கேட்ட மாதிரியே காமிச்சுக்கலை. அப்பா அப்படிக் கெஞ்சறது அந்த மாலினிக்குப் பிடிக்கலை. அப்பாவோட சப்போர்ட் தனக்கு இருக்குங்கற கர்வத்துல அவள் முட்டாள் தனமாய் ஒரு காரியம் செஞ்சாள். 'என்ன திமிர் இவளுக்கு. ஒரு பொண்ணுக்கு இவ்வளவு திமிர் ஆகாது'ன்னு சொல்லி கோபத்துல அக்காவை ஓங்கி ஒரு அறை அறைஞ்சா. எங்கப்பா அக்காவை சின்ன வயசுல இருந்து ஒரு அடி அடிச்சதில்லை. அந்த ஒரு நிமிஷத்துல அவர் மாறுன விதத்தை என்னால இன்னும் நம்ப முடியலை. நரசிம்மாவதாரம் எடுத்துட்டார். அந்த மாலினி மேல இருந்த மோகம் எல்லாம் அந்த நேரத்துல காணாமல் போயிடுச்சு. "என் பொண்ணு மேல கை வைக்கறயாடி நாயே"ன்னு அந்த மாலினியை அடிக்க ஆரம்பிச்சவர் அவள் மயக்கம் போட்டு கிழிஞ்ச சாக்காய் விழற வரைக்கும் விடலை. தடுக்க வந்த அவள் அண்ணனுக்கு நல்லாவே அடி விழுந்தது. அந்த நேரத்துல அவரு மனுஷனாவே இருக்கலை. நான் என் வாழ்க்கைல அப்படியொரு மனுஷன் பேயாட்டம் ஆடினதைப் பார்த்ததில்லை....அதுக்கப்புறம் அந்த ரெண்டு பேரையும் நான் பார்க்கலை. கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அப்பா அவங்களை ஊரை விட்டே அனுப்பிச்சிட்டாரு.... அப்புறம் அப்பா பழையபடி மாறிட்டார்....."

"அந்த நாள்களைப் பத்தி அப்புறம் அவரும் பேசலை. அக்காவோ, நாங்களோ பேசலை. கடைசில அவர் சாகறதுக்கு கொஞ்ச நாள் முன்னால் உயில் எழுதப் போகிறதுக்கு வக்கீல் தேசிகாச்சாரியை வரச் சொல்லிட்டு அக்காவைக் கூப்பிட்டு பேசினார். நான் அவங்க பேசறதை வெளியில இருந்து கேட்டேன். அப்பா சொன்னார். "சிவகாமி நான் சொத்து எல்லாத்தையும் உன் பேருக்கே எழுதிடலாம்னு இருக்கேன். அப்புறமா நீயா பார்த்து உன் தம்பிக்கும் தங்கைக்கும் என்ன தரணும்னு நினைக்கிறியோ அதைத் தந்துடு"

"அக்கா கேட்டா. "ஏன் அப்படி?"

"அப்பா கொஞ்ச நேரம் எதுவும் சொல்லலை. பிறகு சொன்னார். "அமிர்தம் புருஷனுக்கு வியாபார அறிவு இருக்கற மாதிரி தெரியலை. அவளுக்கும் போதாது..."

"சரி சந்துரு"ன்னு அக்கா கேட்டாள். அப்பா தயங்கிட்டே சொன்னார். "என் தாத்தாவுக்கும் வயசான காலத்துல ஒரு வைப்பாட்டி இருந்ததா எங்கப்பா சொல்லுவார். எங்கப்பாவும் வயசான காலத்துல ஒருத்தியைக் கட்டிகிட்டு என்னைத் துரத்திட்டார். நானும் ஒரு காலத்துல அந்த மாலினி கிட்ட ஏமாந்து போயிட்டேன்னு உனக்குத் தெரியும். இது எங்க பரம்பரையிலயே வர்ற வியாதி மாதிரி எனக்குத் தோணுது சிவகாமி. நான் மாறுறதுக்கு நீ இருந்தாய்... இல்லாட்டி என்ன ஆயிருக்கும் யோசிச்சுப் பார். எனக்கென்னவோ சந்துருவும் அப்படியே ஆயிடுவான்னு தோணுது சிவகாமி...."

சொல்லும் போது சந்திரசேகரின் குரல் தானாக வலுவிழந்து தோய்ந்தது. பவானி அவளையறியாமல் இரண்டடி விழகினாள்.

"...அக்கா அது பைத்தியக்காரத்தனம்னா. நான் அப்படி ஆக மாட்டேன்னு சொன்னாள். அப்பா ஒத்துக்கலை. "சொத்து அவனுக்கு எழுதி வச்சா கை மாறி போயிடும்னு எனக்குப் பயமாயிருக்கு

சிவகாமி. அவனுக்கும் அமிர்தத்துக்கும் நீ அக்கா இல்லை. அம்மா மாதிரி. நீ நியாயமானவள். நீயா பார்த்து அவங்களுக்கு அப்புறமா கொடு"ன்னார். அக்கா சொன்னாள். "அப்பா நான் நியாயமானவளா இருக்கலாம். என் குழந்தைகள் எப்படி இருப்பாங்கன்னு நான் எப்படி சொல்ல முடியும். பணம் பத்தும் செய்யும்பா. அவங்க மனசு பிறகு மாறலாம். அதெல்லாம் வேண்டாம்..."னாள். கடைசில இந்த மாதிரி உயில் எழுத அப்பாவுக்கு யோசனை சொன்னவளே அவள் தான் ஆர்த்தி. அன்னிக்கு அவள் அவ்வளவு உஷாரா இல்லாம இருந்திருந்தா சொத்து எல்லாம் மாலினி கைக்குப் போயிருக்கும். அப்பா சொன்னதுக்கு அக்கா ஒத்துகிட்டிருந்தாலும் சொத்து அக்கா கைக்குப் போயிருக்கும். இந்த சொத்து எனக்கு அவள் போட்ட பிச்சை ஆர்த்தி. அந்த சொத்தும் இத்தனை மடங்கா பெருகுனதும் அவளால தான். அவளைப் பார்த்து இந்தச் சொத்துக்காக கொலையே பண்ணியிருப்பாள்னு சொல்றியே ஆர்த்தி...."

# 100

Give me a kisse, and to that kisse a score;
Then to that twenty, adde a hundred more;
A thousand to that hundred; so kisse on,
To make that thousand up a million;
Treble that million, and when that is done,
Let's kisse afresh, as when we first begun.
– Robert Herrick

சந்திரசேகர் அப்படிக் கேட்ட போது ஆர்த்திக்கு அந்தக் கணத்தில் செத்துப் போவது கௌரவம் என்று தோன்றியது. சிவகாமி இமயமாக அவள் எண்ணத்தில் உயர்ந்து போனாள். ஆனால் தான் கடுகாகக் குறுகியது போல் ஒரு உணர்வு அவளுள் எழுந்தது. ஆகாஷ் தன் மீது கோபம் கொண்டது போதாது என்று தோன்றியது. இயல்பாகவே நல்லவளான அவளுக்குத் தங்கள் சந்தேகத்திற்குப் பிராயச்சித்தமே இல்லை என்று தோன்றியது.

"ஆர்த்தி. அப்பா கிட்ட அவள் சொன்னதை நான் கேட்டது அக்காவுக்குத் தெரியாது. அவளாக ஒரு நாளும் அந்த உயில் விவகாரத்தை என் கிட்ட சொன்னதுமில்லை. நானும் ஒருத்தரைத் தவிர இதை யாருக்கும் சொன்னதில்லை. கல்யாணமான புதுசுல உங்கம்மா ஒரு தடவை என்னோட அக்கா பாசத்துல சலிச்சுப் போனப்ப அவள் கிட்ட சொல்லியிருக்கேன். நான் சொன்னதை அவள் தன்னோட டைரியில் எழுதினதைப் பார்த்து "எங்கப்பாவோட தனிப்பட்ட பலவீனத்தை எல்லாம் கூடவா டைரியில் எழுதறதுன்னு" கோபப்பட்டு நான் அந்தப் பக்கங்களைக் கிழிச்சு கூடப் போட்டுருக்கேன். அந்த நேரத்துல இருந்து கடைசி வரைக்கும் உன் அம்மா அக்கா மேல ரொம்பவே மரியாதை வச்சிருந்தாள்....."

"என்னை மன்னிச்சுடுங்கப்பா" என்று அவரிடம் கண்ணீரினூடே சொன்ன ஆர்த்தி "நான் போய் அத்தை கிட்ட நேரடியா மன்னிப்பு கேட்கட்டுமா?" என்று வெகுளித்தனமாய் கேட்க சந்திரசேகர் மனதில் இருந்த கொஞ்ச நஞ்ச கோபமும் காற்றில் பறந்தது.

"வேண்டாம். முதலாவது அக்காவுக்கு இந்த அழுகை, சென்டிமெண்ட் எல்லாம் பிடிக்காது. அப்புறம் ஆகாஷ் அக்கா கிட்ட கண்டிப்பா இதை சொல்லி இருக்க மாட்டான். நீ மன்னிப்பு கேட்கறதா இருந்தா அவன் கிட்ட கேள் ஆர்த்தி...."

ஆர்த்தி தலையாட்டினாள். அவன் மன்னிப்பானா என்று அவளுக்குத் தெரியாது. ஆனால் மன்னிப்பு கேட்க வேண்டியது நியாயம் என்று தோன்றியது.

அம்மாவின் டைரியில் இருந்து கிழிந்த பக்கங்களில் என்ன இருந்தது, யார் கிழித்தார்கள் என்று இப்போது தெளிவாகி விட்டது. ஆனால் காணாமல் போன டைரிகள்? அந்த நேரத்திலேயே கேட்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வது நல்லது என்று தோன்ற தந்தையிடம் கேட்டே விட்டாள்.

"அப்பா, அம்மாவோட கடைசி ரெண்டு வருஷ டைரிகள் எனக்குக் கிடைக்கலை. அது என்ன ஆயிருக்கும்?"

சந்திரசேகர் தர்மசங்கடத்துடன் மகளைப் பார்த்தார். "அது எனக்குத் தெரியலை ஆர்த்தி"

++++++++++++

தனது அறை வாசலில் தயக்கத்துடன் நின்ற ஆர்த்தியை ஆகாஷ் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

கண்ணீருடன் ஆர்த்தி கேட்டாள். "என்னை மன்னிப்பீங்களா?"

"எதுக்கு?"

"நான் எங்கம்மா சாவுக்கு ... உங்கம்மாவை சந்தேகப்பட்டதுக்கு"

"என்ன திடீர் ஞானோதயம்?"

உள்ளே வந்த ஆர்த்தி கண்ணீர் வழிய தன் தந்தை சொன்னதைச் சுருக்கமாகச் சொன்னாள். ஆகாஷ் திகைத்துப் போய் நின்றான். இது இன்று வரை அவன் அறியாதது. 'என்ன ஒரு மனசு அம்மாவுக்கு'.

"நான் அத்தை கிட்டயே மன்னிப்பு கேட்கறதாய் சொன்னேன். அப்பா அவங்களுக்கு இந்த அழுகை செண்டிமெண்ட் எல்லாம் பிடிக்காது, அதனால் வேண்டாம்னார். நீங்களாவது என்னை மன்னீப்பீங்களா?"

ஆகாஷ் அவளையே பார்த்துக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் நின்றான். அவனுக்கு அவள் மேல் இருந்த உண்மையான கோபம் அவள் சந்தேகத்திற்கான காரணங்களை லிஸா சொன்ன அன்றே பெருமளவும் போய் விட்டிருந்தது. மீதியிருந்த கோபமும் இன்றைய அவள் அழுகையில் காணாமல் போய் விட்டது. இந்த அழுகையிலும் அவள் மிக அழகாகத் தெரிந்தாள்.

அவன் மௌனத்தை கோபம் இன்னும் குறையவில்லை என்று எடுத்துக் கொண்ட ஆர்த்தி துக்கத்துடன் சொன்னாள். "ப்ளீஸ். என்னை மன்னிச்சுட்டேன்னு ஒரு தடவை சொல்லுங்க. நான் உங்களை இனி வந்து தொந்தரவு செய்ய மாட்டேன்"

"இனி தொந்தரவு செய்ய மாட்டேன்னு எல்லாம் சொன்னாய்னா நான் மன்னிக்க மாட்டேன்...."

அவளுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. குழப்பத்துடன் விழித்தாள்.

ஆகாஷ் புன்னகையுடன் சொன்னான். "நீ என்னை வந்து தொந்தரவு செய்துகிட்டே இருக்கணும். அப்படின்னா தானே நானும் உன்னைத் தொந்தரவு செய்ய முடியும்?"

சந்தித்த ஆரம்ப நாட்களில் இருந்த அதே சிநேகம்..... அதே குறும்பு. அவளுக்கு இது கனவா நனவா என்று புரியவில்லை. மனதில் ஆனந்தம் புதுவெள்ளமாய் பாய அவனைப் பிரமிப்புடன் பார்த்தவள் நன்றியுடன் அவன் காலில் விழப்போனாள்.

ஆகாஷ் அவளைத் தடுத்து இழுத்து அணைத்துக் கொண்டான். அது வரை தான் அவன் கட்டுப்பாட்டில் நடந்தது. அடுத்ததாக அவனையும் மீறி அவன் அவள் உதடுகளில் லேசாக முத்தமிட, அவளும் தன்னையும் மறந்து இசைந்து கொடுத்தாள். லேசான முத்தம், ஆழமாகி, அதிகமாகி.... அவர்கள் இருவரும் காலத்தை மறந்தார்கள்.....

ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி பொறாமைத் தீயில் வெந்தான். அவர்களுடைய உதடுகள் பிரிவதாக இல்லை. அந்த அணைப்பையும், தொடர் முத்தங்களையும் அதிக நேரம் பார்க்க சகிக்காத மூர்த்தி அங்கிருந்து நகர்ந்தான்.

சுய நினைவுக்கு வந்த பின் ஆகாஷும், ஆர்த்தியும் உடனடியாக விலகிக் கொண்டார்கள். கடிகாரமுட்கள் எத்தனை தூரம் நகர்ந்திருக்கின்றன என்று இருவருக்குமே தெரியவில்லை. இருவரும் இப்போதும் அரை மயக்க நிலையில் தான் இருந்தார்கள்.

ஆகாஷிற்குத் தான் உடனடியாகப் பேச முடிந்தது. "சாரி ஆர்த்தி"

ஆர்த்தி ஒன்றும் சொல்லாமல் வெட்கத்தில் அங்கிருந்து தனதறைக்கு ஓடினாள்.

++++++++++

மூர்த்தி பவானி அறை வாசலில் நின்றான்.

"என்ன மூர்த்தி?" பவானி கேட்டாள்.

"உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும்"

"கேளு"

"நீங்க என் அப்பாவைப் பார்த்தப்ப அவர் என்னைப் பத்தி ஏதாவது கேட்டாரா?"

பவானியை அந்தக் கேள்வி என்னவோ செய்தது. அவன் எத்தனையோ கெட்டவனாக இருக்கலாம், அவனிடம் ஏகப்பட்ட பலவீனங்கள் இருக்கலாம், ஆனாலும் அவனும் மனிதன் தானே? அந்தக் கேள்வி அவளை முதல் முதலாய் யோசிக்க வைத்தது. அவளாகத் தான் அண்ணனிடம் கேட்டாள், ஓடிப் போகும் போது குழந்தையையும் எடுத்துக் கொண்டு ஓடியிருக்கலாமே என்று. அவன் ஏன் குழந்தையை எடுத்துக் கொண்டு போகவில்லை என்று சொன்னான். ஆனால் அவனாக மூர்த்தியைப் பற்றி எதுவும் கேட்கவில்லை....

ஆனால் பவானி சொன்னாள். "கேட்டான். உன்னோட சின்ன வயசு போட்டோவைக் கூட அலமாரில வச்சிருக்கிறான் மூர்த்தி"

ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டு சில நிமிடங்கள் நின்றவன் "சும்மா கேட்டேன்" என்று தெரிவித்து விட்டு நகர்ந்தான்.

++++++++++

அன்றிரவு ஆர்த்திக்கும், ஆகாஷிற்கும் சரியாக உறக்கம் வரவில்லை. எப்போது விடியும் என்று காத்திருந்த ஆகாஷ் காலையில் முதல் வேலையாக ஆர்த்திக்கு குட் மார்னிங் சொல்லி விட்டுக் கேட்டான்.

"ஆர்த்தி நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?"

ஆர்த்திக்கு அந்தக் கணம் வாழ்க்கையின் மிக அதிக சந்தோஷமான கணமாகத் தோன்றியது. 'இது கனவில்லையே'. அவள் முகத்தின் அதீத மகிழ்ச்சியும், அவள் லேசாக வெட்கத்துடன் தலையசைத்த அழகும் இன்னொரு முத்தம் தரத் தூண்டினாலும் இன்று தன் கட்டுப்பாட்டில் இருந்த ஆகாஷ் கண்ணியமாக நகர்ந்தான். "நான் அம்மா கிட்ட பேசறேன். சரியா?"

அதிகாலை வாக்கிங் முடிந்து புல்தரையில் சங்கரனும் சிவகாமியும் சேர்ந்து அமர்ந்திருந்த போது போய் ஆகாஷ் சொன்னான். "அம்மா நானும் ஆர்த்தியும் கல்யாணம் செஞ்சுக்கலாம்னு இருக்கோம்"

சங்கரன் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. "உன் தம்பி கிட்ட பேசி சீக்கிரமா நாளை முடிவு செய் சிவகாமி. நாம் டூர் போறதுக்கு முன்னால் கல்யாணம் முடிச்சுட்டா நல்லது"

ஆகாஷிற்கு அப்பா சொன்னதில் சீக்கிரம் என்ற வார்த்தை பிடித்திருந்தது. அவன் மனதைப் படிக்க முடிந்தது போல் அவனைப் பார்த்து சிவகாமி புன்னகைக்க ஆகாஷ் அசடு வழிந்தான்.

++++++++++

விஷயத்தைக் கேள்விப்பட்டதில் இருந்து பார்த்திபனுக்கு மனதே சரியில்லை. ஏதோ ஒரு நல்ல கனவை இழந்தது போல சோகம் அவனுள் பரந்து விரிந்தது. அன்று காலை டிபன் சாப்பிடும் போது எல்லோர் வாயிலும் கல்யாணப் பேச்சே. சந்திரசேகர் சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தார். ஆர்த்தியும், ஆகாஷும் அதிகமாக பேசிக் கொள்ளவில்லை என்றாலும் அவர்கள் பார்வைகள் நிறைய பேசின. அதைப் பார்த்த போது மூர்த்தி வயிறெரிந்தான். பார்த்திபன் சோகமடைந்தான்.

பார்த்திபன் தாயிடம் தனியாகச் சொன்னான். "நான் வெளியே எங்காவது வேலை பார்க்கலாம்னு இருக்கேன்மா"

"ஏண்டா? அக்கா உன்னையும் சேர்ந்து கூப்பிட்டு தானே பிசினஸை பார்த்துக்க சொன்னாள். இப்ப என்ன திடீர்னு"

"சொத்துல 60 பர்சண்டும், 40 பர்சண்டும் கல்யாணம் பண்ணிக்க போகுது. இனி எனக்கு அதுல என்ன இருக்கு? வேலை பார்க்கிறவனுக்கு எங்கே பார்த்தா என்ன? சொந்தத்துல பார்க்கறதை விட வெளியே பார்த்தா கௌரவமாவது கிடைக்கும். உன்னோட 20 பர்சண்டை உங்கக்கா சாமர்த்தியமா வாங்கிக்காமல் இருந்திருந்தா எனக்கும் எதாவது இங்கே மிஞ்சி இருக்கும்..."

மகன் வார்த்தைகளில் கொப்பளித்த வெறுப்பைக் கவனித்த அமிர்தம் பெருமூச்சு விட்டாள். "சும்மா வாயிக்கு வந்தபடி பேசாதேடா. உங்கப்பா அந்த 20 பர்சண்டை வாங்கினா இவங்களை விடப் பெரிய பணக்காரரா ஆகிக் காட்டறேன்னு என் கிட்ட அப்ப சவால் விட்டார். அக்கா கிட்ட குடுக்க சொன்னப்ப அக்கா ரொம்ப புத்திமதி சொன்னா. தொலைச்சுடுவீங்கன்னு அடிச்சுகிட்டா. நான் தான் உங்கப்பா வீராப்பைக் கேட்டு பிடிவாதமா கொடுத்தேயாகணும்னு நின்னு வாங்கினேன். இப்ப அனுபவிக்கிறேன்...."

பார்த்திபனுக்கு இந்தத் தகவல் கசந்தது. அமிர்தம் சொன்னாள். "உன்னை அக்காவோ, ஆகாஷோ, ஆர்த்தியோ வேலைக்காரனா நினைக்க மாட்டாங்க. உன் மேல் எல்லாருக்கும் பிரியம் இருக்கு. சும்மா கண்டதை எல்லாம் யோசிக்காதே"

++++++++++++++

"கோயிலுக்கு உள்ளே போகிறீங்களா பாட்டி" மூர்த்தி கேட்டான்.

"இல்லை. சும்மா முருகனைத் தொந்திரவு செய்ய வேண்டாம். வெளியவே உட்காரலாம்." என்ற பஞ்சவர்ணம் வெளியே இருந்த கல் மேல் உட்கார்ந்து கொண்டாள். அவளுக்குக் கடவுள் நம்பிக்கை என்றுமே இருந்ததில்லை.

இன்று அவர்கள் கிளம்புவதற்கு முன் ஆர்த்தியும் ஆகாஷும் டாக்டர் ப்ரசன்னாவைப் பார்க்கக் கிளம்பிப் போயிருந்தார்கள். டாக்டர் ப்ரசன்னா இன்றைய செஷனில் ஆர்த்தி ஆழ்மனதிலிருந்து பெரும்பாலும் என்ன வெளிக் கொணர்வான் என்பதை பஞ்சவர்ணம் ஓரளவு அனுமானித்திருந்தாலும் அவள் சந்தேகத்தை ஆர்த்தியின் ஆழ்மனம் ஊர்ஜிதப்படுத்தக் காத்திருந்தாள்.

"ஏண்டா அவனுக்கு இன்னைக்கு டாக்டர் ப்ரசன்னா கிட்ட ஆர்த்திக்கு அப்பாயின்மென்ட் இருப்பது தெரியுமா?

"தெரியும்"

அதிகமாக வீட்டை விட்டு வெளியே வராத பஞ்சவர்ணம் பல வருடங்கள் கழித்து எல்க்ஹில் முருகன் கோயிலுக்கு அசோக்கைப் பார்க்க வந்திருக்கிறாள். அவனைப் பற்றி மூர்த்தி எத்தனை தான் சொல்லி இருந்தாலும் நேரில் பார்க்க ஆர்வமாக இருந்தாள். சரியாக நான்கு மணிக்கு அசோக் எதிரே வந்து நின்றான். கறுப்பு டீ ஷர்ட்டும், சாயம் போன நீல ஜீன்ஸும் அணிந்திருந்தான். முகத்தில் உணர்ச்சியே இருக்கவில்லை. கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தாலும் உள்ளே இருந்து அவன் கண்கள் பஞ்சவர்ணத்தை கூர்ந்து பார்த்தன. கோயில் வாசல் வரை வந்த போதிலும், சொன்னதற்குக் கால் மணி நேரம் முன்பே வந்து விட்டிருந்த போதிலும் கோயிலுக்குள்ளே போகாமல் வெளியிலேயே உட்கார்ந்திருந்த அந்தக் கிழவி அவனை ஆச்சரியப்படுத்தினாள். அரை மணி நேரத்திற்கு முன்பே வந்து மறைவிடத்தில் அவர்களை அசோக் கவனித்ததை அவர்கள் இருவருமே அறிந்திருக்கவில்லை.

பஞ்சவர்ணமும் வைத்த கண் வாங்காமல் அவனை ஆழமாகப் பார்த்தாள். அளவிட முடியாத தன்னம்பிக்கையையும், பயமின்மையையும் பஞ்சவர்ணம் அவனிடத்தில் பார்த்தாள். அவள் முகத்தில் திருப்தி படர்ந்தது.

"பாட்டி இது அசோக். அசோக் இது என் பாட்டி" மூர்த்தி அறிமுகப்படுத்தினான்.

அசோக் தலையை ஆட்டினான். பஞ்சவர்ணம் அவனை ஊடுருவிப் பார்த்தபடி சொன்னாள். "தம்பி. உனக்கு எதையும் சுருக்கமாய், நேரடியாய் சொன்னால் தான் பிடிக்கும்னு மூர்த்தி சொன்னதை வச்சு கணக்குப் போட்டேன். அதனால நேரடியாவே கேட்கறேன். நீ இது வரைக்கும் எப்பவாவது போலீஸ்ல பிடிபட்டிருக்கியா?"

வெளியே காண்பித்துக் கொள்ளாவிட்டாலும் அசோக் இந்தக் கேள்வியை எதிர்பார்த்திருக்கவில்லை. இது வரை யாரும் அவனை இந்தக் கேள்வியைக் கேட்டதில்லை. இந்தக் கிழவி வித்தியாசமானவள் என்று நினைத்த அசோக் லேசாகப் புன்னகைத்தான். அசோக்கின் புன்னகையை முதன் முதலாகப் பார்த்த மூர்த்தி ஆச்சரியப்பட்டான். "ஓ. இவனுக்குப் புன்னகையும் வருமா?"

அசோக் சொன்னான். "இதுவரைக்கும் பிடிபட்டதில்லை. இனிமேல் பிடிபடற உத்தேசமும் இல்லை"

பஞ்சவர்ணமும் தன் அபூர்வப் புன்னகை பூத்தாள். கடந்த காலத்தைப் பற்றி அவன் உண்மையைச் சொல்கிறான் என்பதைக் கணிக்க முடிந்தது. அதே நேரத்தில் எதிர்காலத்திலும் அவன் பிடிபடக்கூடியவன் அல்ல என்று அவள் உள்ளுணர்வு தெரிவித்தது.

"நடந்தது சரி. நடக்கப் போகிறதை எப்படி அவ்வளவு உறுதியா சொல்கிறாய்?"

"எதையும் கச்சிதமாய் திட்டம் போட்டு செயல்படுத்தறவன் நான். என்னல்லாம் தவறாய் போகலாம்னு முன்கூட்டியே தீர்மானிச்சி அதையெல்லாம் சரி செய்யாமல் எந்தக் காரியத்திலும் இறங்க மாட்டேன்"

"நல்லது. எனக்கும் அது தான் வேணும். நான் உன்னை நம்பறேன். நான் நேரா விஷயத்துக்கு வர்றேன். நான் சொல்லப் போறதை நீ கவனமாய் கேளு. முடியுமா, முடியாதான்னு தயங்காமல் சொல்லிடு. ஏன்னா இது பெரிய இடத்து சமாச்சாரம். முடியும்னா பணம் ஒரு பிரச்சனையே இல்லை....."

பஞ்சவர்ணம் அசோக்கை சரியாக அனுமானித்திருந்தாள். இவனைப் போன்றவர்கள் எதையும் முடியாதென்று சொல்லி அறியாதவர்கள். அதே நேரத்தில் பணத்தில் மிகவும் கறாராக இருப்பார்கள். இரண்டையும் தூண்டிலாக அவனுக்குப் போட்ட பஞ்சவர்ணம் தான் சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்ல ஆரம்பித்தாள். அசோக் இடைமறிக்காமல் அவள் சொன்னது முழுவதையும் கவனமாகக் கேட்டான்.

கடைசியில் பஞ்சவர்ணம் அழுத்தமாகச் சொன்னாள். "இதுல ரெண்டு விஷயங்கள் நான் சொன்ன மாதிரியே நடக்கணும். ஒண்ணு அவங்க ரெண்டு பேரையும் சாகடிக்கறது நாங்க ரெண்டு பேராய் தான் இருக்கணும்."

அசோக் சொன்னான். "என்னைக் கேட்டால் கொல்றதை ப்ரொபஷனல் கைல விடறது தான் நல்லது..."

"சில காரியங்களை நாமளே செய்துக்கறது தான் திருப்தி" என்ற பஞ்சவர்ணம் தன் அடுத்த அம்சத்தைச் சொன்னாள். "இன்னொண்ணு அவங்க ரெண்டு பேர் பிணமும் யார் கையிலும் எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடாது....."

அசோக் உடனடியாக ஒன்றும் சொல்லவில்லை. எல்லாவற்றையும் மனதில் வாங்கிக் கொண்டு பிறகு தலையசைத்தான். "பன்னிரெண்டு லட்ச ரூபாய் ஆகும்" என்று தன் விலையைத் தெரிவித்தான். "ஆரம்பத்திலேயே அஞ்சு லட்சம் தந்துடணும்"

பஞ்சவர்ணம் ஒத்துக் கொண்டாள். "சரி. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி சொன்னாயே, எந்த ஓட்டையும் இல்லாமல் கச்சிதமாய் திட்டம் போடறவன் நீயின்னு. அப்படியொரு கச்சிதமான திட்டம் போட்டுட்டு என் கிட்ட வந்து சொல்லு.. நான் அஞ்சு லட்சத்தோட காத்திருக்கேன்....முடிஞ்சா ஆர்த்தியோட இப்னாடிச சிடி நாளைக்குக் கொண்டுவர்றப்பவே உன் திட்டத்தையும் சொல்லு. எவ்வளவு சீக்கிரம் காரியம் நடக்கிறதோ அவ்வளவுக்கு நல்லது. "

# 101

What fond and wayward thoughts will slide
Into a Lover's head!
– William Wordsworth 'Strange Fits of Passion'

நீலகண்டன் முகம் வாடியிருந்ததைக் கண்ட பார்வதி அவர் உடல்நிலை சரியில்லையோ என்று பயப்பட்டாள். "என்ன ஆச்சு? உடம்புக்கு ஏதாவது சரியில்லையா?"

"உடம்பெல்லாம் நல்லாத் தான் இருக்கு. மனசு தான் சரியில்லை"

"மனசுக்கென்ன?"

"ஆர்த்தி ஆகாஷைக் கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தி யோசிச்சேன். நம்ம கிட்ட அனுமதி கேட்கணும்னு அவளுக்குத் தோணலை பார்த்தாயா?"

"அவள் அவங்கப்பா கிட்ட கேட்டிருப்பாள். நம்ம கிட்ட எதுக்குக் கேட்கணும்?"

"நாம வளர்த்த பொண்ணு...."

"வளர்த்தது அவள் சொல்லியோ, அவளுக்கு போக்கிடம் இல்லாமயோ இல்லையே. நாமளா தானே தூக்கிகிட்டு போனோம். அதுக்கு அவள் கோபப்படாம இருக்கறதே அவளோட நல்ல மனசைக் காட்டுது."

பார்வதியை நீலகண்டன் முறைத்தார். என்ன நாக்கு இவளுக்கு. "ஆனாலும் அந்த சிவகாமி மகனை...?"

சந்திரசேகர் சிவகாமியால் தான் தனக்கு சொத்து கிடைத்தது என்று சொன்னதை ஆர்த்தி அவர்களிடம் தெரிவித்த போதும் நீலகண்டனுக்கு சிவகாமி மேல் இருந்த சந்தேகம் முழுவதுமாகப் போய் விடவில்லை. அவள் கொல்ல சொத்து அல்லாமல் வேறெதாவது காரணம் இருக்கும் என்று சொல்லி காலையில் தான் பார்வதியிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தார். ஆனாலும் அவருக்கு மனைவியிடம் எதையும் சொல்லாமலிருக்க முடியவில்லை.

பார்வதி சொன்னாள். "ஆர்த்தியைக் காண்பிக்கற டாக்டர் கிட்டயே உங்களையும் காண்பிக்கிறது நல்லதுன்னு தோணுது. எப்பப் பார்த்தாலும் சிவகாமி மேல் ஒரு துவேஷம்.....ஆர்த்தி முகத்தில இருக்கிற சந்தோஷத்தைப் பார்த்தீங்கல்ல. இதுக்கு மேல நமக்கு என்ன வேணும்... இன்னும் அவள் கிட்ட இதுக்கு எதிரா எதாவது பேசி வருத்தப்பட வைக்காதீங்க. புரிஞ்சுதா?"

நீலகண்டன் வேண்டா வெறுப்பாகத் தலையசைத்தார்.

++++++++++++++

கோயமுத்தூர் நோக்கி ஆகாஷுடன் காரில் போய்க் கொண்டிருந்தது ஒரு இன்பப் பயணமாக ஆர்த்திக்கு இருந்தது. ஆனால் அத்தனை சந்தோஷத்தின் நடுவில் ஒரு உறுத்தல் அவளுக்கு இருந்தது. அதை அவனிடம் வாய் விட்டு கேட்டே விட்டாள்.

"டைட்டானிக் எப்படி இருந்தது?"

ஆகாஷ் குறும்பாகச் சொன்னான். "சூப்பரா இருந்தது. அந்த நளினி ஒரு நல்ல கம்பெனி"

ஆர்த்திக்கு அவன் தமாஷ் செய்கிறான் என்று தெரிந்த போதிலும் லேசாகக் கோபம் வந்தது. "நல்ல கம்பெனின்னா...?"

"தியேட்டர்ல நுழைஞ்சதுல இருந்து, வர்ற வரைக்கும் ரொம்பவே நெருக்கமாய் இருந்தாள். உன்னை மாதிரி ஒரு மைல் தூரத்துல உட்கார்ந்திருக்கலை"

நளினி அப்படி நெருக்கமாகவே இருக்கக்கூடியவள் தான் என்பதில் ஆர்த்திக்கு சந்தேகமில்லை. ஆர்த்தி சொன்னாள். "கல்யாணம் வரைக்கும் இந்த தூரம் நல்லது தான்... அப்புறம் நேத்து மாதிரி..." என்றவள் வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

நேற்றைய முத்தத்தைச் சொல்கிறாள் என்பது புரிந்த ஆகாஷ் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான். "நேத்து நான் உன் கிட்ட ஒரு பொய் சொல்லிட்டேன் ஆர்த்தி"

"என்ன?"

"நேத்து சாரின்னு சொன்னேனே அது தான். உண்மையில் நான் வருத்தப்படவே இல்லை"

வெட்கத்தில் ஆர்த்தி முகம் குங்குமமாகச் சிவந்தது. பொய்யான கோபத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்ட ஆர்த்தி மனதில் நினைத்துக் கொண்டாள். 'நானும் வருத்தப்படலை'.

அவள் வெட்கம் அவனுக்குப் பிடித்திருந்தது. அந்த நேரமாய் செல் அடிக்க செல்லை ஆகாஷ் எடுத்தான்.

"ஹலோ"

"கங்கிராட்ஸ்." லிஸாவின் குரல் சந்தோஷமாகக் கேட்டது.

"ஆர்த்தி கிட்ட காலைல பேசினப்ப சொன்னா. ஆனா பேசறப்ப ரொம்பவே வெட்கப்பட்டா. நீ என்ன செஞ்சே?"

ஒரு நிமிஷம் ஆகாஷுக்கு மூச்சு நின்றது. விட்டால் பிபிசியில் செய்தி வந்து விடும் போல தெரிகிறதே.

"ஒண்ணும் செய்யலையே"

"ஏய் ஃப்ரண்ட் கிட்ட சொல்றதுக்கு என்ன?"

"லிஸா. தமிழ்ல இங்கிதம்னு ஒரு வார்த்தை இருக்கு தெரியுமா?"

"சங்கீதம் தெரியும். இங்கிதமெல்லாம் தெரியாது. அப்படின்னா என்ன ஆகாஷ். ஏதாவது ஊர் பேரா?"

"நான் இப்ப ஆர்த்தி கூட கோயமுத்தூர் போய்கிட்டிருக்கிறேன். டிரைவ் பண்றப்ப அதிகம் பேச முடியாது. நீ போனை கட் பண்ணு"

"ஓ ஆர்த்தி கூட இருக்காயா. சாரி. அப்புறம் பேசறேன். ஆனா அப்புறம் பண்றப்பவாவது நீ என்ன செஞ்சாய்னு சொல்லணும் என்ன" சிரித்துக் கொண்டே போனை லிஸா வைத்து விட்டாள்.

"லிஸாவா. என்ன சொல்றாள்?"

"காலைல போன் செய்து கல்யாணம் நிச்சயமானதை சொன்னாய் சரி. ஏன் அவள் கிட்ட சொல்றப்ப வெட்கப்பட்டாய்?"

"அவள் தான் எப்படி ஆகாஷ் மனசு மாறினான். எப்படி சொன்னான். என்ன செஞ்சான்னு எல்லாம் கேட்டாள்...அதான்" ஆர்த்தி இப்போதும் வெட்கப்பட்டாள்.

"சே. எல்லாரும் என்னை மறக்கவே விட மாட்டேன்கிறாங்க. இப்படி சும்மா சும்மா ஞாபகப்படுத்தினால் நான் இன்னொண்ணு குடுத்துடுவேன். அப்புறம் என் மேல் யாரும் பழி சொல்லக் கூடாது"

"இந்த சாக்கு எல்லாம் வேண்டாம். எல்லாம் கல்யாணத்துக்கப்புறம் தான்"

காரை டாக்டர் ப்ரசன்னா க்ளினிக் முன் நிறுத்தும் போது அங்கு நிறுத்தியிருந்த வாகனங்களைக் கவனமாக நோட்டமிட்டான். ஆர்த்தி அவனைப் பார்த்து தலையசைத்தாள். "யாரும் இல்லை". சரியென்று தலையாட்டி விட்டு அவனும் அவளுடன் க்ளினிக்கினுள் நுழைந்தாலும் அவன் மனதில் அதே எண்ணம் திரும்பவும் வந்தது. 'அம்மாவிடம் அன்று தெரிவித்த பின் தான் அவளை யாரும் பின் தொடர்வதோ, கவனிப்பதோ இல்லை'

"ஆர்த்தி இன்னைக்கு நீங்கள் நிறையவே சந்தோஷமாயிருக்கிற மாதிரி தெரியுது." ஆர்த்தியைப் பார்த்தவுடன் ப்ரசன்னா சொன்னான்.

ஆர்த்தி புன்னகைத்தாள்.

"ஆகாஷ் கூட சமாதானம் ஆயிடுச்சு மாதிரி தெரியுது" ப்ரசன்னா புன்னகையுடன் சொன்னான்.

ஆர்த்திக்கு ஆச்சரியமாயிருந்தது. வெட்கத்துடன் சொன்னாள். "நாங்க கல்யாணம் செஞ்சுக்கப் போறோம்"

"ராஸ்கல் என் கிட்ட சொல்லவே இல்லை, பாருங்க. எப்ப முடிவாச்சு"

ஆர்த்தியின் வெட்கம் ஆழமாகியது. குங்குமமாய் சிவந்த முகத்துடன் சொன்னாள். "நேத்து....இல்லை இன்னைக்கு"

"அவன் கிட்ட இந்த செஷன் முடிஞ்ச பிறகு பேசிக்கறேன். ஆர்த்தி ஆரம்பிக்கலாமா?"

அன்று ஆர்த்தியை ஹிப்னாடிஸ ஆழ்மன உறக்கத்தில் ஆழ்த்த மிகக் குறைந்த நேரமே தேவைப்பட்டது.

"ஆர்த்தி. அன்னைக்கு யாரோ கதவ பலமா தட்டறாங்க. உங்கம்மா வேலைக்காரி விஜயா கிட்ட கதவத் திறக்க வேண்டாம்னு சொல்றாங்க... ஆனாலும் அவ கேட்காமப் போய் கதவைத் திறந்துடறா....யார் கதவத் தட்டுனது?..."

ஆர்த்தியின் முகம் பயத்தில் வெளுத்தது. மூச்சு சீராக இல்லாமல் போக ஆரம்பித்தது. ஆர்த்தியை தைரியப்படுத்தும் தொனியில் அமைதியாக சிறிது நேரம் ப்ரசன்னா பேசினான்.

".....அதனால் தைரியமா சொல்லு. யார் வந்தது?....."

சிறிது நேரம் பேசாமல் இருந்த ஆர்த்தி பின் பலவீனமான மெலிந்த குரலில் சொன்னாள். "அவ தான்..."

"யாரு?"

".... ஒரு மாதிரி சிரிப்பாளே அந்த பேட் கர்ல். அவ கைல....."

"அவ கைல?...."

"கைல...கைல....."

"சொல்லு ஆர்த்தி அவ கைல என்ன இருக்கு. பயப்படாமல் சொல்லு"

"கத்தி...கத்தி...கூரான கத்தி...."

இவள் கனவில் நடக்கும் சம்பவங்களில் பல குழப்பங்கள் இருப்பதாக ப்ரசன்னாவுக்குத் தோன்றியது. அவள் கனவில் துப்பாக்கிச் சூடு சத்தம் தான் கேட்டதாகச் சொல்லி இருந்தாள். இப்போது என்ன கத்தி? கொலை செய்யப் பயன்படுத்திய ஆயுதம் துப்பாக்கியா, கத்தியா?

"வந்தவள் என்ன செய்யறாள்?"

"அவ ஒரு மாதிரியா சிரிச்சுகிட்டே... சிரிச்சுகிட்டே அம்மா கிட்ட வர்றா...."

"அப்புறம்"

"அம்மா கேட்கறாங்க. ஏன் வந்தாய்னு....அவ சொல்றா...சொல்றா... உயிர் வாங்க வந்தேன்னு..... அவளுக்கு அம்மாவப் புடிக்கல.....சொல்றா....அந்த வீடு அவளோடதாம்.... சொத்து அவளோடதாம்....அம்மா வீட்டை விட்டுப் போகணுமாம்.....இப்பவே போகணும்னு சொல்றாள்....மழையிலயே அம்மாவும் நானும் போகணுமாம்..... இல்லாட்டி அவ அம்மாவயும் என்னையும் கொன்னுடுவாளாம்....."

"அம்மா என்ன சொல்றாங்க?"

"அம்மா சொல்றாங்க. நீ போயிடு. உன்னைக் கூப்பிடறார் பாருன்னு சொல்றாங்க"

"யாரு கூப்பிடறாங்க"

"அதான்.... வெளியில் இருந்து ஒரு ஆளு....."

"சரி பேட் கர்ல் என்ன பண்றா"

"அவ ஜன்னல் வழியா பார்த்துட்டு சிரிக்கிறா.... ஜாஸ்தியா சிரிக்கிறா.... முட்டாளுன்னு சொல்றா. சொல்லிட்டு சிரிச்சுகிட்டே இருக்கா...அம்மா அவளை பைத்தியம்னு சொல்றாங்க... பைத்தியம்னு சொன்னவுடனே அவளுக்கு ரொம்ப கோவம் வந்துடுச்சு..... முறைக்கிறா.....ஆனாலும் சிரிக்கிறா....பைத்தியம் என்ன செய்யும் தெரியுமான்னு கேட்டுகிட்டே அம்மா கிட்ட வர்றா...."

"அப்புறம்...?"

"பக்கத்துல வந்து கேட்கறா....பிடிக்கலைன்னா விட்டுட்டு போக வேண்டியது தானே....ஏன் கூட இருக்கே. புடிச்சவங்க கல்யாணம் பண்ணிட்டு சந்தோஷமா இருக்கட்டுமே... போடி..... போயிடு....என் கையில சாகாதேன்னு சொல்றா..... அம்மா சொல்றாங்க... போய் ஒரு நல்ல டாக்டரப் பாரு லூசு..."

"அப்புறம்?"

"அவளுக்கு கோவம் வந்துடுச்சு.....அம்மாவ கத்தியால குத்த வர்றா....அம்மா பயந்துட்டு ரூமுக்குள்ள ஓடறாங்க....அவளும் பின்னாலயே போயிட்டா.....போய் கதவ சாத்திகிட்டா.....நான் அழறேன்"

ஆர்த்தி உண்மையாகவே அழ ஆரம்பித்தாள்..."நான் கதவ தட்டறேன்....கதவ திறக்க மாட்டேங்கிறாங்க.... உள்ளே அம்மா கத்தறாங்க.....கத்தறாங்க.....அவ அம்மாவ என்னவோ செய்யறா.....அம்மா கத்தறாங்க..."

"அப்புறம்"

"அம்மா கதவத் திறந்துட்டு வர்றாங்க...."என்ற ஆர்த்தி பயங்கரமாக அலறினாள்.

"பயப்படாதே ஆர்த்தி. சொல்லு நீ என்ன பார்த்தாய்?"

"அம்மா மூஞ்சியெல்லாம் ரத்தம்....காயம்.....அம்மா என் கிட்ட வர்றாங்க...."ஆர்த்தி"ன்னு சொல்றாங்க....."

ஆர்த்தி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

"அப்புறம்?"

"அம்மா விழுந்துட்டாங்க.... செத்துட்டாங்க.....எனக்கு ஒண்ணுமே தெரியல....எல்லாம் இருட்டாயிடுச்சு.... இருட்டாயிடுச்சு.....யாரோ ஓடி வர்றாங்க....."

ஆர்த்தி மூச்சு சீரில்லாமல் போக ஆரம்பித்தது.

அவசரமாக ப்ரசன்னா கேட்டான். "அந்த துப்பாக்கி வெடிக்கிற சத்தம் எப்ப கேட்டது?"

"அப்புறமா... இருட்டானப்..ப...ற....ம்"
++++++++++++++

ஆர்த்தி வரும் வரை ஆகாஷிற்கு இருப்பு கொள்ளவில்லை. இன்றும் அவள் அலறியது அவனை என்னவோ செய்தது. அவள் மனதில் எத்தனை ரணங்களை சுமந்திருக்கிறாள் பாவம். அவள் வெளியே வந்த போது கரிசனத்துடன் ஓடி வந்து கேட்டான். "எப்படியிருக்கிறாய்?"

ஆர்த்திக்கு அவன் ஏன் கேட்கிறான் என்று புரியவில்லை. அவளுக்கு அவள் இங்கும் அலறியது நினைவில் இல்லை. அந்த செஷனை முடிக்கும் முன் வழக்கம் போல் ப்ரசன்னா அவளை அமைதிப்படுத்தியிருந்ததால் அவள் புன்னகையுடன் சொன்னாள். "நல்லாயிருக்கேன். ஏன் கேட்கறீங்க.?"

"சும்மா தான்"

"அவர் உங்களைக் கூப்பிடறார்."

ஆகாஷ் உள்ளே நுழைந்தவுடன் ப்ரசன்னா திட்டினான். "ராஸ்கல். கல்யாணம் ஃபிக்ஸ் ஆனா சொல்றதில்லையா?"

"நான் எப்படியும் நேர்ல வர்றதால நேராவே சொல்லலாம்னு விட்டுட்டேன். ஆர்த்தி சொன்னாளா?"

"ஆமா. அதென்ன அவள் எப்ப முடிவாச்சுன்னு கேட்டா நேத்துங்கறா, இன்னைக்குங்கறா, ஒரேயடியா வெட்கப்படறா, என்ன விஷயம்"

ஆகாஷ் முகம் போன போக்கைப் பார்த்து ப்ரசன்னா சீரியஸாகக் கேட்டான். "டேய்... டேய். என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை. உன்னோட ட்ரீட்மெண்டுல வெக்கத்துக்கு ஏதாவது வழியிருக்கா?"

"விஷயத்தை சொல்லுடா...."

ஆகாஷ் நண்பனை ஒரு மாதிரியாகப் பார்த்தான். "நீ அப்புறம் கிண்டல் அடிக்கக்கூடாது. ப்ராமிஸ்"

"ப்ராமிஸ். சொல்லு"

"நேத்து தெரியாத்தனமா அவளை ஒரு கிஸ் பண்ணிட்டேன். கல்யாணம் பண்ணிக்கப் போகிற பொண்ணை கிஸ் பண்றது ஒரு தப்பாடா?. அப்புறமா ஓவரா வெக்கப்படறா. இப்ப கூட வர்றப்ப லிஸாவோட போன். அவ வெக்கப்படறாளே என்ன செஞ்சேன்னு. இப்ப நீ கேட்கறே. டேய் இதுக்கே இப்படின்னா இனி கல்யாணம் ஆனதுக்கப்புறம்....."

ப்ரசன்னா சிரிக்க ஆரம்பித்தவன் நிறுத்தவில்லை. கண்களில் நீர் நிரம்பும் வரை சிரித்தவனை ஆகாஷ் முறைத்தான்

ப்ரசன்னா சிரிப்பை நிறுத்தி சொன்னான். "நீ என்னவோ ஒரு கிஸ்னு சொல்றே. அவ வெக்கப்படறதைப் பார்த்தா அது ஒரு சிம்பிள் கிஸ் மாதிரி தெரியலையே. கொஞ்சம் அதிகமா இருக்கும் போலல்லவா தெரியுது"

ஆகாஷ் கோபத்தின் நடுவிலும் லேசாக சிரித்தான். "உன் கிட்ட போய் சொன்னேன் பார் என்னை சொல்லணும்"

சிரிப்பில் இருந்து புன்னகைக்கு மாறிய ப்ரசன்னா சொன்னான். "நீ நிஜமாவே அதிர்ஷ்டக்காரண்டா. ஆர்த்தி மாதிரி ஒரு பொண்ணை இந்தக் காலத்துல பார்க்கிறது கஷ்டம். நீ அவளோட அழகால் ஈர்க்கப்பட்டதை விட அதிகமா அவளோட...என்ன சொல்றது?... ஆ... 'இன்னொசன்ஸ்"ஆல ஈர்க்கப்பட்டது அதிகம்னு நான் நினைக்கிறேன். சரியா?"

ஆகாஷ் தலையசைத்தான். 'இவன் எவ்வளவு சரியாகக் கண்டுபிடிக்கிறான்?'

"கங்கிராட்ஸ். நீங்க ரெண்டு பேரும் ரொம்ப சந்தோஷமா இருப்பீங்கன்னு நான் நினைக்கிறேன் ஆகாஷ். ... அவளோட கனவுகளைப் பொறுத்த வரைக்கும் எல்லாமே தெரிஞ்சாச்சு. இன்னும் அந்த 'ஹீலிங்' ப்ராசஸுக்கு இன்னொரு சிட்டிங் தேவைப்படும். அப்புறமா இந்த பயங்கரக் கனவுகள் வர்றது சுத்தமா நின்னுடும். அப்புறமா வேற விதமான கனவுகள் வர்ற மாதிரி நீ பார்த்துக்குவாய்னு நினைக்கிறேன். எப்படியும் நேத்து அதுக்கான பிள்ளையார் சுழி போட்டுட்டாய்.... டேய்.... டேய்... சும்மா அடிக்காதேடா. இது என்னோட க்ளினிக்டா....."

ஆகாஷ் வெளியே வந்த போது அவனைப் பார்த்து ஆர்த்தி சந்தோஷமாகப் புன்னகைத்தாள். பார்க்கிற போதெல்லாம் சந்தோஷப்படும் அவள் காதல் அவனுக்குப் பெருமையாக இருந்தது.

நளினியிடம் சொன்னான். "நளினி, நானும் ஆர்த்தியும் சீக்கிரமாகவே கல்யாணம் செய்துக்கப் போகிறோம். நிச்சயமானவுடன் உனக்கு சொல்கிறேன். கண்டிப்பாய் வரணும் என்ன"

நளினியின் முகத்தில் ஈயாடவில்லை. மெள்ள தலையசைத்தாள்.

காரில் திரும்பப் போகும் போது ஆகாஷ் ஆர்த்தியைக் கோபித்துக் கொண்டான். "அவன் கல்யாணம் எப்ப முடிவாச்சுன்னு கேட்டா உனக்கு வெட்கப்பட என்ன இருக்கு. நேத்து, இன்னைக்குன்னு என்ன குழப்பம்?"

"இல்லை...நீங்க சொன்னது இன்னைக்குக் காலைலன்னாலும், முடிவு செஞ்சது நேத்து என்னை... நேத்தே தான்னு தோணிச்சு. அதான்... ஏன் என்னை அப்படிப் பார்க்கிறீங்க? ரோட்டைப் பார்த்து காரை ஓட்டுங்க."

++++++++++

சிவகாமி போனில் சொல்லிக் கொண்டிருந்தாள். "இன்னைக்கோட ஆர்த்தியோட ஹிப்னாடிச செஷன் முடியுது. அடுத்தது ஒரு ஹீலிங் செஷன் இருக்காம். அதுக்கப்பறம் அந்த செஷன்ல நடந்ததெல்லாம் ரிப்போர்ட் கைக்கு கிடைச்சுடும். ஆர்த்தியை எதாவது சொல்லி நம்ப வைக்கிறது சுலபம். ஆனா ஆகாஷை அப்படி நம்ப வைக்க முடியாது. அவனோட மனைவியா அவள் ஆனபிறகு அவன் எதையும் ஆழமா தெரிஞ்சுக்கற வரைக்கும் விடமாட்டான். அதனால எதையும் இனி நிறைய நாளுக்கு மறைக்க முடியும்னு எனக்குத் தோணலை. அவங்களை ஃபேஸ் செய்ய எந்த நேரத்துலயும் தயாரா இருக்கிறது நல்லது."

# 102

Keep violence in the mind
Where it belongs.

- Brian Aldiss 'Barefoot in the Head'

மூர்த்தி சென்னைக்கு வந்தது பஞ்சவர்ணத்திற்குத் தெரியாது. ஆபிஸ் வேலையாக வெளியூர் போவதாகச் சொல்லி விட்டு வந்திருக்கிறான். இங்கு சில மணி நேரங்களுக்கு மேல் அவன் இருக்கப் போவதில்லை. ஒரு நபரிடம் அவனுக்கு சிறிது பேச வேண்டியிருக்கிறது. அவ்வளவு தான்.

காலிங் பெல் அடித்து பொறுமையில்லாமல் காத்திருந்தான். கதவைத் திறந்த நபரிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். "நான் உங்க மகன். பேர் மூர்த்தி"

இளங்கோ ஓங்கி அடித்தது போல் நிலை குலைந்து போனது தெரிந்தது. சுதாரித்துக் கொண்டு உள்ளே வரச் சொன்னான்.

வீட்டில் மனைவியும், மகளும் இருக்கவில்லை. உள்ளே சென்ற மூர்த்தி அமரும் முன் அலமாரியைப் பார்த்தான். பவானி சொன்னது போல் அவன் சிறிய வயதுப் புகைப்படம் இருந்தது.

"சொல்லு..." பலவீனமாக இளங்கோவின் குரல் வந்தது.

"நான் நீங்க ஏதாவது சொல்லுவீங்க, கேட்டுட்டு போகலாம்னு வந்தேன். சொல்றதுக்கு ஒண்ணுமே இல்லையா?"

"எல்லாத்தையும் பவானி சொல்லியிருப்பாள்னு நினைக்கிறேன்"

"அது பொது விஷயம். நான் கேட்டது நம்ம விஷயத்தைப் பற்றி. ஒரு அஞ்சு வயசு மகனை விட்டுட்டு வந்துட்டு அவன் ஞாபகார்த்தமாய் ஒரு போட்டோ போதும்னு அதை மட்டும் வச்சுட்டு இங்கே இருந்துட்டீங்களே அதைப் பற்றி"

இளங்கோ முகத்தில் குற்ற உணர்வு படர்ந்தது. "சொன்னா உனக்கு எந்த அளவுக்குப் புரியும்னு தெரியல"

"தமிழ், இங்கிலீஷ் ரெண்டுமே நல்லாவே புரியும். நீங்க வேற பாஷையில பேசப்போறதில்லையே"

இளங்கோ எச்சிலை மென்று விழுங்கினான். "மூர்த்தி நான் செய்தது நியாயம்னு சொல்லலை. உன் நிலைமையில நானிருந்தாலும் கோபம் தான் படுவேன். அன்னைக்கு ராத்திரி எனக்கு வேறொன்னும் தோணலை. எல்லாத்தையும் உதறிட்டு ஓடிப் போகணும்கிற ஒரு உணர்வு மட்டும் தானிருந்தது. எல்லாத்தையுமே தீர்மானிக்கிற அம்மாவை விட்டு, நினைவுகள் எதுவுமே நல்லதில்லாத சூழ்நிலைகளையும் இடத்தையும் விட்டு.... வேற எதையும் நான் யோசிக்கலை."

"ஓடி வந்தப்ப யோசிக்கலை சரி. ஆனா வந்ததுக்கப்புறம் இத்தனை நாள்கள்?"

மூர்த்தியின் கேள்விக்கு இளங்கோ என்ன பதில் சொல்வது என்று சொல்லத் தெரியாமல் திணறினான். ஆனால் மூர்த்தியால் அவன் மௌனத்தில் இருந்து ஒரு மிகப் பெரிய உண்மையைப் பதிலாகப் படிக்க முடிந்தது. இளங்கோவைப் பொறுத்தவரை மூர்த்தி கடந்த காலத்தின் ஒரு பகுதி. கடந்த காலத்தை முற்றிலும் மறக்க நினைத்த போது எல்லாவற்றோடும் சேர்ந்து மறக்கப்பட்டவன். புரிந்த போது மனதில் ஆழமாக வலித்தது.

"நினைச்சுப் பார்க்காத நாளில்லை மூர்த்தி. ஒரு நாள் உன்னைப் பார்க்கணும், உன் கிட்ட மன்னிப்பு கேட்கணும்னு நான் நினைக்காத நாளில்லை.... என் அம்மா மாதிரி ஒருத்தி கிட்ட உன்னை விட்டுட்டு வந்தது என்னை எவ்வளவு உறுத்தியிருக்குன்னு நான் வார்த்தையால் சொல்ல முடியாது மூர்த்தி...." இளங்கோவின் வார்த்தைகள் அவன் காதில் வெறுமையாய் ஒலித்தன.

பவானி வேண்டுமானால் எல்லாவற்றையும் மறந்து அண்ணன் என்று பாசத்துடன் மறுபடி ஓட்டிக் கொள்ளலாம். மூர்த்தியால் முடியாது. அவனால் இது வரை சிவகாமியை விட அதிகமாய் ஒரு நபரை வெறுக்க முடியும் என்று தோன்றியதில்லை. ஆனால் இன்று அப்படியொரு நபரை நேரில் பார்க்கிறான்.

ஒன்றும் சொல்லாமல் மூர்த்தி கிளம்பினான்.

"மூர்த்தி. இரு ஏதாவது சாப்பிட்டுட்டு போ....."

மூர்த்தி கதவைத் திறந்து வெளியே வந்த போது அந்தக் கல்லூரி மாணவி வந்து கொண்டிருந்தாள். அவன் தங்கை. அழகான பெண்கள் யாரைப் பார்த்தாலும் காமத்துடன் மேயும் அவனுடைய கண்கள் தானாக அவளிடம் இருந்து விலகின. அவனுக்கே நாலு அடி அவளைக் கடந்த பிறகு தான் அந்த உண்மை உறைத்தது. ஒரு வினாடி ஒரு எண்ணம் அவனிடம் வந்து

போனது. 'ஒரு வேளை இந்த ஆள் என்னை சிறுவயதிலேயே கூட்டிக் கொண்டு வந்திருந்தால் நான் வேறு மனிதனாக வளர்ந்திருப்பேனோ".

★★★★★

பஞ்சவர்ணம் தன் முன் ஈரமான கண்களுடன் நிற்கும் மகளிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நானும் மூர்த்தியும் நாளைக்குப் போகலாம்னு இருக்கோம். மார்க்கெட்டுக்குப் பக்கத்துல வீடு பார்த்துருக்கானாம். வீடு சின்னது தான். எங்க ரெண்டு பேருக்கு எவ்வளவு இடம் வேணும். ...சிவகாமி சொல்லாட்டியும் நான் திரும்ப இந்த வீட்டுல காலடி எடுத்து வைக்கிறதா இல்லை. அப்பப்ப வந்து பார்த்துகிட்டு இரு..."

பவானி தலையாட்டினாள். மகளைப் பார்க்க பஞ்சவர்ணத்திற்கு ஒரு புறம் பாவமாக இருந்தது. ஆனால் அவள் முகத்தில் தெரிந்த பச்சாதாபத்தைப் பார்க்கையில் இன்னொரு புறம் கோபமாக வந்தது. அவள் யாரிடத்திலும் பார்க்க சகிக்காதது பச்சாதாபம் தான். ஆனால் வீட்டை விட்டுப் போகையில் மகளை சொல்லம்புகளால் அடிக்க அவளுக்கு மனம் வரவில்லை. போகச் சொல்லி சைகை காட்டி விட்டு கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் சோகமயமாக நீலகண்டன் வந்தார். அவரைப் பார்த்தவுடன் அவளுக்கு எரிச்சல் வந்தது. அன்று ஒரு முறை அவளிடம் பேசி விட்டுப் போனவர் பார்வதியின் திட்டுக்குப் பயந்து பிறகு வந்து பார்க்கவில்லை. தன் எண்ணங்களை மறைத்துக் கொண்டு "வாங்க" என்று வரவேற்று அவரை அமரச் சொன்னாள்.

"நீங்க நாளைக்குப் போறீங்கன்னு கேள்விப்பட்டேன்..."

"ஆமா. எப்பவோ போக வேண்டியது. இப்ப தான் நேரம் வந்திருக்கு. உங்க பேத்திக்கு கல்யாணம் முடிவாயிடுச்சுன்னு கேள்விப்பட்டேன்"

"ஆமா..." நீலகண்டன் குரல் தாழ்ந்திருந்தது.

"சிவகாமி கெட்டிக்காரி. எப்படி எதை நடக்க வைக்கணும்னு நல்லா அவளுக்குத் தெரியும். பார்த்தா நடக்கறதுக்கும் அவளுக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி காமிச்சுக்குவாள்... அவளை அடக்கத் தான் ஆள் இல்லை. எப்பப் பார்த்தாலும் ஸ்கூல் பையன் மாதிரி அந்த ஜட்ஜ் புஸ்தகத்தைப் படிக்கறதை விட்டுட்டு பொண்டாட்டிய அடக்கி வைக்கலாம். நீங்க அவர் கிட்ட அடிக்கடி பேசறீங்களே. சொல்ல வேண்டியது தானே"

"அதை நான் சொன்னா நல்லாயிருக்குமா? நானே சமயத்துல பார்வதி வாயை மூட வைக்க முடியாமல் அவஸ்தைப் படறேன்"

பஞ்சவர்ணம் அந்த மனிதரின் யதார்த்தத்தை ரசிக்கவில்லை. "நீங்க எங்க வீட்டுக்கு ஒரு தடவை வாங்க. இல்லாட்டி வேண்டாம். அது அந்த ராட்சஸிக்குப் பிடிக்காம உங்களையும் வெளிய போகச் சொல்லிட்டா நீங்க எங்க போவீங்க பாவம். எனக்காவது மூர்த்தி இருக்கான். உங்களுக்கு யாரிருக்கிறா?"

நீலகண்டனுக்கு அவள் சொன்னதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. பார்வதியிடம் வந்து சொல்லி அவளிடம் வாங்கிக் கட்டிக் கொண்டார்.

"வெளிய போறப்பவும் விஷத்தைக் கக்கிட்டு போறா பார்த்தீங்களா? உங்களை யார் அவகிட்ட போய் பேசச் சொன்னது?"

"சம்பந்தியம்மா போறாங்களேன்னு ஒரு மரியாதைக்கு....."

"யாருக்கு சம்பந்தி? உங்களுக்கா? நமக்கு யாரிருக்கான்னு கேட்கறா. நீங்க சொல்ல வேண்டியது தானே. வெளியே போனாலும் எங்களுக்கு யாரும் தேவையில்லை. நான் டியூஷன் சொல்லிக் கொடுப்பேன். என் பொண்டாட்டி வீட்டு வேலைக்குப் போவா. இந்த காலத்துல அது ரெண்டுக்கும் தான் டிமேண்ட் ஜாஸ்தி. நல்லாவே பொழச்சுக்குவோம். இங்க வர்ற வரைக்கும் கூட யார் காசுலயும் உக்காந்து சாப்பிடலைன்னு சொல்லி இருக்கணும்"

'இவளுக்கு மட்டும் டக் டக் என்று பாயிண்டுகள் எங்கிருந்து தான் கிடைக்குதோ' என்று நீலகண்டன் வருத்தத்துடன் ஆச்சரியப்பட்டார்.

★★★★★

தேனிலவில் இருந்து திரும்பி வந்த அர்ஜுன் முகத்தில் இறுக்கம் நிறையவே குறைந்திருந்தது. முகத்தில் ஒரு மென்மை தெரிய ஆரம்பித்திருந்தது. சிவகாமிக்கு அவனைப் பார்க்கவே நிறைவாய் இருந்தது.

கணவனிடம் சொன்னாள். "மனசுக்குப் புடிச்ச ஒரு பெண் ஒரு ஆண் கிட்ட ஏற்படுத்தற மாறுதலை உலகத்தில் வேற எதுவும் செய்ய முடியறதில்லை. பார்த்தீங்களா?"

சங்கரன் ஆமென்று தலையசைத்தார். "இன்னும் கொஞ்ச நாள் போய் ஒரு குழந்தையும் பிறந்துடுச்சுன்னா அவன் ஒரு சந்தோஷமான குடும்பஸ்தன் ஆயிடுவான் சிவகாமி"

உண்மையில் அர்ஜுன் இந்த ஒரு வாரத்தில் மிகவும் மாறித்தான் போயிருந்தான். தேனிலவின் இனிய நாட்களில் அவனும் அவன் மனைவியும் உடலளவில் மட்டுமல்லாமல் மனதளவிலும் நிறையவே இணைந்திருந்தார்கள். ஒரு நாள் அவன் தன் இளமையில் பட்ட கஷ்டங்களையும், தன் தாய் விட்டு விட்டுப் போன பின் அனுபவித்த துக்கங்களையும் சொன்ன போது நடுநிசியாகி இருந்தது. கேட்டு விட்டு வசந்தி கண்கலங்கினாள். அவன் பிறகு தூங்கி விட்டான். ஆனால் வசந்தியால் அதிகாலை வரை தூங்க முடியவில்லை.

அவன் விழித்த போது அவள் ஈரமான கண்களுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் குரல் கரகரக்கச் சொன்னான். "எனக்காக அழுத முதல் ஆள் நீ தான் வசந்தி"

"நீங்க சிவகாமியம்மாவை மறந்துட்டீங்க"

"இல்லை வசந்தி. அவங்க எப்பவுமே அழுததில்லை. எனக்காகவும், யாருக்காகவும். அழுகிறதால் எதுவும் நடந்துடாதுன்னு அடிக்கடி சொல்லுவாங்க.... தெய்வம் அழாது வசந்தி."

நிறைய நேரம் மௌனமாக இருந்த வசந்திக்கு குற்றவுணர்ச்சி மனதில் எழுந்தது. இவ்வளவு நல்ல மனிதனை மணந்து கொள்ள லஞ்சமாய் ஒரு தொகையை அப்பா வாங்கி விட்டாரே.

ஊட்டி வந்து சேர்ந்த நாள் அன்றே அர்ஜுன் இல்லாத சமயமாகப் பார்த்து வசந்தி அந்தப் பணத்திற்கான செக்கை சிவகாமியிடம் திருப்பிக் கொடுத்தாள். "இந்தப் பணம் வேண்டாம் மேடம். என் தம்பி படிப்பை அவர் பார்த்துக்குவார்ங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு"

அந்தச் செக்கைக் கொடுத்த பிறகு தான் வசந்தியின் மனதில் இருந்த பெரிய பாரம் இறங்கியது.

★★★★★

வெளியூரிலிருந்து வந்த மூர்த்தி மிகவும் களைப்பாகவும், அமைதியிழந்தும் இருந்ததைக் கண்ட பஞ்சவர்ணம் சந்தேகத்துடன் பேரனைக் கேட்டாள். "நீ போனது சென்னைக்கா?"

மூர்த்தி ஆமென்று தலையாட்டினான். இனி மறைப்பதில் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. 'உங்களுக்கும் உங்க மகனைப் பார்க்க ஆசையா இருக்கா பாட்டி"

"என் மகன் செத்து பதினெட்டு வருஷத்துக்கு மேல் ஆயிடுச்சு" பஞ்சவர்ணம் அமைதியாகச் சொன்னாள். அவளைப் போலவே தானும் இருந்திருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. சென்னைக்குச் சென்று இளங்கோவைப் பார்த்தது அவன் மனதை ரணமாக்கி இருந்தது. சொல்லத் தெரியாத எதையோ எதிர்பார்த்துப் போனவனுக்கு மிஞ்சியது ஏமாற்றமும், வேதனையும் தான்.

எதையும் துருவித் துருவி கேட்கும் பஞ்சவர்ணம் அபூர்வமாக அமைதி காத்தாள். பேரனின் மனநிலையே எல்லாத் தகவல்களையும் அவளுக்குத் தெரிவித்திருந்தது.

"நீ வர லேட்டானதும் நான் பயந்துட்டேன். அந்த அசோக்கைப் பார்க்கப் போகிற நேரம் ஆயிடுச்சு. சீக்கிரம் கிளம்பு. அந்தப் பணத்தையும் எடுத்துக்கோ"

"நீங்க வழக்கம் போல அத்தை கிட்ட கேட்காம ஏன் நீங்க கொஞ்சம் கொஞ்சமா சேர்த்திருந்த பணத்தை பேங்கில் இருந்து எடுக்கச் சொன்னீங்க"

"பவானி அழுதழுது தர்ற பணம் ராசியில்லாதது மாதிரி தோணிச்சு. அப்புறம் என் சொந்தப் பணத்தை எடுத்துக் கொடுக்கறப்ப தான் ஜெயிக்கணும்கிற வெறி அதிகமா இருக்கும். அந்த வெறிய இழந்துட நான் விரும்பலைடா மூர்த்தி"

அசோக் அவர்களிடம் பணத்தை வாங்கிக் கொண்டு சிடியை முதலில் தந்தான். பின் தன் திட்டம் பற்றி குறித்துக் கொண்டு வந்திருந்த காகிதங்களை வெளியே எடுத்தான்.

"பொதுவா தேவையில்லாத எதையும் கேட்கிற பழக்கம் எனக்குக் கிடையாது. ஆனா உங்க கிட்ட ஒரு கேள்வியை எனக்குத் தேவையில்லாட்டியும் கேட்கிறேன். உங்களுக்கு யாரையாவது கொன்னு பழக்கம் இருக்கா?"

மூர்த்தி சொன்னான். "இல்லை. ஆனா துப்பாக்கி குறி பார்த்து சுடறதுல நான் நிறைய பரிசு வாங்கி இருக்கேன்"

அதை அசோக் முதலிலேயே அறிந்து வைத்திருந்தான் என்றாலும் அது நிஜக் கொலைக்கு எந்த அளவுக்கு உதவும் என்பதை அசோக்கால் கணிக்க முடியவில்லை.

அவன் முகத்தில் உணர்ச்சிகள் எதுவும் தென்படாவிட்டாலும் எந்தக் கேள்வி அவன் மனதில் எழுந்திருக்க முடியும் என்பதை ஊகிக்க முடிந்திருந்த பஞ்சவர்ணம் சொன்னாள். "வெறுப்புக்கு பெரிய சக்தி இருக்கு தம்பி. அதனால எங்களால முடியுமான்னு சந்தேகப்படாதே. முதல்ல திட்டத்தைச் சொல்லு"

முதலில் துப்பாக்கி ஒன்றை எடுத்து மூர்த்தியிடம் அசோக் தந்தான். அது ஒரு நவீன கள்ளத் துப்பாக்கி. "இது பவர் ஃபுல்லான துப்பாக்கி. ஷார்ட் ரேஞ்சில் கொல்றதுக்கு இது பெஸ்ட்....."

மூர்த்தி அதை வாங்கி கையால் தடவிப்பார்த்தான். சிவகாமி, அர்ஜுன் இருவரின் எமனாக இந்தத் துப்பாக்கி இருக்கப் போகிறது என்பதில் அவனுக்கும், பஞ்சவர்ணத்திற்கும் சந்தேகம் இருக்கவில்லை.

ஒரு வரைபடத்தை எடுத்து விரித்தான். "இது தான் நீங்க கொலை செய்யப் போகிற பில்டிங். இதோட ஓனர் கனடாவில் இருக்கான். இந்த வீட்டுக்கு ரெண்டு ஃபர்லாங்க் தூரத்துல எந்த வீடும் கிடையாது. அவன் ரெண்டு வருஷத்துக்கு ஒரு தடவை தான் வருவான். வந்து இருவது நாள் இருந்துட்டுப் போவான். இந்த வீட்டை பார்த்துக்கறதுக்கு ஒரு வாட்ச்மேனும், அவன் மனைவியும் இருக்காங்க. நீங்க கொலை செய்யப் போகிற தினத்தில் அவங்க ரெண்டு பேரும் இருக்க மாட்டாங்க. அந்த வாட்ச்மேனோட மகனுக்கு அன்னைக்கு ஒரு சின்ன விபத்து ஏற்படப் போகுது. கால் எலும்பு முறியப் போகுது. அவங்க ஆஸ்பத்திரியில் நாலு நாள் தங்க வேண்டி இருக்கும். ஆஸ்பத்திரிக்கும் இந்த வீட்டுக்கும் இடையே ரொம்பவே தூரமானதால வர மாட்டாங்க. அந்த ஆஸ்பத்திரி பக்கத்துலயே வாட்ச்மேன் மனைவியோட அக்கா வீடு இருக்கு. எதுவானாலும் அங்கே போயிக்குவாங்க. இது வீட்டோட ரீப்ளிகேட் சாவி..."

பஞ்சவர்ணம் அவனை மரியாதையுடன் பார்த்தாள்.

அசோக் அதைக் கவனித்த மாதிரி தெரியவில்லை. அடுத்த விஷயத்திற்கு நகர்ந்தான். "ஆர்த்தியைக் கடத்தறது என்னோட பொறுப்பு. கடத்தினது பணத்துக்காகத் தானுங்கிற மாதிரி அந்தம்மாவை நம்ப வைக்கிறதும் என்னோட பொறுப்பு. பத்து லட்ச ரூபாய் மட்டும் கேட்கப் போறேன். அந்தம்மாவுக்கு அது ஒரு பிச்சைக்காசு. கொண்டு வர வேண்டியது அந்தம்மாவும், அந்த அர்ஜுனும் தான்னு சொல்லப் போறேன். எனக்குத் தெரிஞ்சு அந்தம்மா குணத்துக்கு இதை விட ரெட்டிப்பா கேட்டாலும் கொண்டு வருவாங்க, போலிசுக்குப் போக மாட்டாங்கன்னு நம்பறேன். அந்தம்மாவை இந்த வீட்டுக்கு வரச் சொல்லப் போறேன். நீங்க ரெண்டு பேரும் முதல்லயே அங்க போய் இருக்கப் போகிறீங்க. அந்தம்மாவும், அர்ஜுனும் பணத்தோட வரப் போறாங்க. நீங்க அவங்களைக் கொன்னுடப் போறீங்க. அந்தம்மா வர்றதுக்கு முன்னால் நீங்க ரெண்டு பேரும் இதில் இருக்கீங்கன்னு தெரியாது. வந்த பிறகு தான் தெரிஞ்சுக்கப் போறாங்க. ஆனா தெரிஞ்சுகிட்டவங்க திரும்ப உயிரோட திரும்பப் போகிறதில்லைங்கறதால உங்களுக்கு பிற்பாடும் ஆபத்தில்லை.... நீங்க கொன்னதுக்கப்புறம் அந்தப் பிணங்களை எங்க ஆளுங்க டிஸ்போஸ் பண்ணிடுவாங்க"

பஞ்சவர்ணம் திருப்தியுடன் தலையசைத்தாள் என்றாலும் ஒரு விஷயத்தை அவனுக்கு நினைவுபடுத்த முயன்றாள். "ரெண்டு பேர் பிணமும் யார் கைக்கும் எப்பவும் கிடைக்கக் கூடாதுன்னு சொல்லியிருந்தேன். அவங்களுக்கு என்ன ஆச்சுன்னு அத்தனை பேரும் குழம்பணும். தேடணும்...தேடிகிட்டே இருக்கணும்"

"நூறு கிலோமீட்டர் தூரத்துல ஒரு மிருகக்காட்சிசாலை இருக்கு. அதை பத்து நாளுக்கு மூடப் போகிறாங்க. ஏன்னா அங்க கட்டிட வேலை, ரிப்பேர் வேலை எல்லாம் நடக்கப் போகுது. அங்கே சனிக்கிழமை சாயங்காலம் வேலை முடிஞ்சுதுன்னா மறுபடி வேலைக்கு திங்கள்கிழமை தான் ஆட்கள் வேலைக்கு வருவாங்க. மூணே மூணு மிருகக் காட்சி ஊழியர்கள் தான் அந்த இடைப்பட்ட நேரத்துல இருப்பாங்க. அவங்க நம்ம ஆளுங்க. பிணத்தை சனிக்கிழமை சாயங்காலத்துக்கு மேல் போய் அங்க போட்டா சிங்கம், புலி, கரடிக்கெல்லாம் பிணங்க சாப்பாடாயிடும். எதுவும் மிஞ்சாது. அப்படி மிஞ்சறதையும் வழக்கமா மிஞ்சறதைப் போடற மாமிசக்குழியில போட்டுருவாங்க. யாருக்கும் எந்த சந்தேகமும் எப்பவும் வராது..."

# 103

'Well, I never heard it before,' said the Mock Turtle; 'but it sounds uncommon nonsense.'"

– Lewis Carroll, Alice in Wonderland,

"ஹலோ"

"ஆகாஷ். நான் லிஸா. பக்கத்துல ஆர்த்தி இருக்காளா?"

"இல்லை ஏன்"

"நீயும் ஆர்த்தியும் கல்யாணம் செய்துக்க தீர்மானம் செய்துகிட்ட இந்த நேரத்துல நான் அங்கே இல்லையேன்னு எனக்கு ஒரே வருத்தமா இருக்கு. நடந்துகிட்டு இருக்கிறதை தெரிஞ்சுக்காட்டி தலை வெடிச்சுடும் போல இருக்கு.... ஆர்த்தி உன்னைப் பத்தி பேசுனாலே வெட்கப்படறா. அதனால தான் உனக்குப் போன் செய்யறேன். ... பயப்படாதே நீ என்ன செஞ்சேன்னு கேட்கலை....முதல்ல நீ 'ஐ லவ் யூ'ன்னு சொன்னப்ப அவ என்ன சொன்னா?"

"நான்.... அவ கிட்ட என்னை கல்யாணம் செஞ்சுக்கிறியான்னு தான் கேட்டேன். காதலிக்கிறேன்னு சொல்லலையே"

"ஏன்?"

"அது தான் அவளுக்குத் தெரியுமே"

"முட்டாள்.... தெரியும்னாலும் ஒரு பொண்ணுக்கு அவள் மனசுக்குப் புடிச்சவன் வாயில் இருந்து எத்தனை தடவை கேட்டாலும் சலிக்காத ஒரு வாக்கியம் இருக்கும்னா அது அந்த வாக்கியம் தான். இப்ப மட்டும் இல்லை. எத்தனை வருஷம் கழிச்சும் தான். என்ன ஆள் நீ. அழகு, புத்திசாலித்தனம் எல்லாம் இருந்தாலும் என்ன பிரயோஜனம். இந்த காதல் விஷயத்துல இன்னும் எல்கேஜியிலயே தான் இருக்கிறாய். உன் கல்யாணத்துக்கு முன்னால் வந்து உனக்கு பாடம் நடத்த நிறைய விஷயம் இருக்கு"

"அம்மா மகராசி. போன்லயே உன் டார்ச்சர் தாங்கலை. நேர்ல வேறயா?.... நீ போனை வை. எனக்கு நிறைய வேலை இருக்கு"

★★★★★

பஞ்சவர்ணம் ஆர்த்தியின் கடைசி ஹிப்னாடிச செஷன் சிடியைக் கேட்ட பிறகு நிறைய நேரம் கண்களை மூடிக் கொண்டு அமர்ந்திருந்தாள். காரணம் மூர்த்தி முகத்தை அவளுக்குப் பார்க்க சகிக்கவில்லை. அவன் முகத்தில் ஒரு வலி தெரிந்தது. சமீப காலமாக விதி அவனிடம் கருணையோடு நடந்து கொள்ள மறுத்திருக்கிறது.

"ஆனந்தி சொன்ன மாதிரி அவங்க பைத்தியம் தானா பாட்டி"

பஞ்சவர்ணம் பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறினாள். "அப்படி எல்லாம் இல்லை...."

"அந்த வேலைக்காரி விஜயாவும் பைத்தியம்னு தான் சொன்னாள் பாட்டி"

"எப்பவுமே அப்படின்னு சொல்ல முடியாதுடா மூர்த்தி. சில நேரங்கள்ல அவ நடந்துக்கறது கொஞ்சம் வினோதமாய் இருக்கும் அவ்வளவு தான்"

மூர்த்தி அது பற்றி மேற்கொண்டு எதையும் பேசாமல் டாக்டர் ப்ரசன்னாவின் குறிப்புகளை சத்தமாகப் படித்தான். "ஆர்த்தி கண்ட காட்சி கொடூரமாக இருந்ததால் அவளுடைய ஆழ்மனம் தற்காலிகமாக அவளுடைய பார்வை சக்தியைத் தடை செய்திருக்க வேண்டும். அபூர்வமான சில கேஸ்களில் அப்படி நடந்திருக்கிறது....."

அவன் முழுவதுமாகப் படித்து முடித்த போதும் பஞ்சவர்ணம் கண்களை மூடிச் சிந்தனையில் தான் ஆழ்ந்திருந்தாள். இறுக்கமான மனத்துடன் மூர்த்தி அங்கிருந்து வெளியேறினான்.

பஞ்சவர்ணம் தன் மருமகளைப் பற்றிய நினைவுகளுடன் ஆழ்ந்திருந்தாள். மகளிடமும், மகனிடமும் இல்லாத ஒரு நெருக்கம் அவளுக்கு மருமகளுடன் இருந்தது. மகளும், மகனும் அவளுடைய கணவனின் பலவீனத்தையே பெற்றிருந்தார்கள். அவர்கள் அவளைப் பெரிதாக என்றுமே நேசித்ததில்லை. பெரிய புத்திசாலித்தனம் இல்லாத தைரியமும் இல்லாத அவர்கள் இருவரும் தந்தையின் மறைவுக்குப் பின் தாயைப் பார்த்த விதத்தில் என்றுமே குற்றச்சாட்டு மட்டுமே இருந்தது. ஆனால் லட்சியம் என்ற பெயரில் மகன் மணந்து கொண்ட அனாதைப் பெண் கல்யாணி அவளுடன் வந்த நாள் முதல் நன்றாகவே ஒட்டிக் கொண்டாள். அவளுக்கும் பஞ்சவர்ணத்தைப் போலவே பணத்தின் மீதும், படோடாபத்தின் மீதும் நிறைய கனவுகள் இருந்தன. அவள் தன் கனவுகளைப் பற்றி பேசும் போது மட்டும் ஒரு அதீத உணர்வுகளை பஞ்சவர்ணம் கவனித்தாள். அதை பஞ்சவர்ணம் வரவேற்கவே செய்தாள். மாமியாரும் மருமகளும் கோடிக்கணக்கில் பணம் வந்தால் என்னவெல்லாம் செய்யலாம் என்று மணிக்கணக்கில் பேசிக் கனவு காண்பார்கள்.

அந்த நேரத்தில் தான் பக்கத்து வீட்டில் இருந்த டாக்டர் டேவிடின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சந்திரசேகரின் கண்கள் பவானி மேல் விழுந்தன. பஞ்சவர்ணமும், கல்யாணியும் தங்கள் கனவுகள் பலிக்க ஒரு வழியை அவரிடத்தில் கண்டார்கள். கோடிக்கணக்கான சொத்தின் அதிபதியிடம் பவானியைப் பழக ஊக்குவித்தார்கள். திருமணமாயிருந்த அந்த மனிதருடன் பழக பவானிக்கு ஆரம்பத்தில் தயக்கம் அதிகம் இருந்தது. ஆனால் சந்திரசேகர் வீட்டில் வேலை செய்யும் விஜயா மூலம் அவருக்கும், அவர் மனைவிக்கும் இடையே உறவு சரியில்லை என்ற செய்தியைக் கேள்விப்பட்டவர்கள் அதை பவானிக்குச் சொல்லி ஊக்கம் கொடுத்தார்கள். பவானிக்கு அவர் அழகும், சொத்தும் பிடித்திருந்ததால் அவருடன் பழக ஆரம்பித்தாள்.

ஆரம்பம் முதலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவன் இளங்கோ தான். திருமணமான ஒருவருடன் தங்கை பழகுவது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதுவும் அவருடைய கம்பெனியில் வேலை செய்து வந்த அவனுக்கு சிவகாமிக்குத் தம்பியிடம் இருந்த செல்வாக்கு தெரிந்திருந்தது. தங்கையிடம் எதிர்ப்பு தெரிவித்தான்.

"அவர் ஆனந்தியை டிவோர்ஸ் செய்துட்டு என்னைக் கல்யாணம் செய்துக்கறதாய் சொல்லியிருக்கார்ண்ணா" என்று பவானி தெரிவித்தாள்.

"அப்புறம் என்ன?" என்று பஞ்சவர்ணம் கேட்டாள்.

"பிரச்சினை அவரோட மனைவி ஆனந்தி அல்ல. அவரோட அக்கா சிவகாமி. அந்தம்மா சம்மதமில்லாமல் அந்த வீட்டில் ஒன்னும் நடக்காது"

"அவ தான் இப்ப நாட்டிலயே இல்லையே. அப்புறம் என்ன?" என்று கல்யாணி கேட்டாள்.

"அந்தம்மா எங்கேயிருந்தாலும் ஆபத்து தான்....."

அன்று பஞ்சவர்ணம் மகனுடைய கருத்தை நம்பவில்லை. ஒரு அழகான பெண்ணால் சாதிக்க முடியாதது எதுவும் இருக்காது என்று நினைத்தவளுக்கு சந்திரசேகரின் ஒரு அக்காவுக்கு அதை தடுத்து நிறுத்தும் சக்தி இருக்கும் என்று நம்ப முடியவில்லை. பவானியும் அப்படியே நினைத்து ஏமாந்து போனாள்.

பவானி சந்திரசேகரைக் கல்யாணம் செய்து கொண்டால் தங்கள் வாழ்க்கை சொர்க்கமயமாகி விடும் என்று பவானியை விட அதிகம் கனவு கண்ட கல்யாணிக்கும், பஞ்சவர்ணத்திற்கும் ஆனந்தியை சந்திரசேகர் விவாகரத்து செய்ய தாமதமாவது பெரும் எரிச்சலைத் தந்தது. மனிதர்களை எடை போடுவதில் வல்லவளான பஞ்சவர்ணம் பக்கத்து வீட்டுக்கு அடிக்கடி வந்து போகும் ஆனந்தியைப் பார்த்தும், வேலைக்காரி விஜயா மூலம் கேள்விப்பட்டும் ஆனந்தியை ரோஷக்காரி, தன்மானம் மிக்கவள் என்பதைக் கணித்திருந்தாள். அதை உபயோகித்து தான் அவளை விவாகரத்துக்குத் தூண்ட முடியும் என்று கணக்குப் போட்டாள்.

அதைக் கேட்ட கல்யாணி "பவானிக்கு சாமர்த்தியம் போதாது அத்தை. ஆனந்தியாவே அந்த ஆளை விட்டுப் போக வைக்கிற வேலை என்னோடது" என்று பஞ்சவர்ணத்திடம் சொல்லி பவானியைத் தனியாகப் பார்க்க முடிந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவளை விவாகரத்து செய்யத் தூண்டும் வண்ணம் பேசினாள். கணவன் வேறு பெண்ணுடன் நெருக்கமாகப் பழகுகிறான் என்பதைத் தெரிந்த பின் விவாகரத்து செய்து ஒதுங்குவது தான் மானமுள்ள பெண்ணுக்கு அழகு என்கிற ரீதியில் சொல்ல ஆரம்பித்தாள்.

அதை ஒழுங்காகக் கல்யாணி செய்திருந்தால் விவாகரத்து நடந்திருக்கும். ஆனால் கல்யாணி அப்படிச் செய்யவில்லை, தன் இயல்பான கிறுக்குத்தனத்தால் எல்லாவற்றையும் பாழாக்கி விட்டாள் என்பது பின்னாளில் பஞ்சவர்ணத்தின் கணிப்பாக இருந்தது. அந்த மழை நாளில் "இன்று வெற்றியுடன் திரும்புகிறேன், அவளா நானா பார்த்து விடுகிறேன்" என்று மிகுந்த நம்பிக்கையோடு கிளம்பிய மருமகளைப் பின் பஞ்சவர்ணம் பார்க்கவேயில்லை. அவள் போய் சிறிது நேரத்தில் வந்த இளங்கோ கல்யாணி ஆனந்தியைச் சந்திக்கக் கிளம்பியிருக்கிறாள் என்பதை அறிந்து தன் தாயிடம் வெறுப்பைக் கொப்பளித்து வெடித்தான். தன் தந்தையை சாகடித்ததுமல்லாமல், பவானியையும் விபசாரி போல் கல்யாணமான ஒரு நபருடன் சுற்ற விடுவதையும், கல்யாணியையும் வேண்டாததையெல்லாம் செய்ய தூண்டுவதையும் அவன் வன்மையாகக் கண்டித்தான். குடும்ப நிம்மதி ஒட்டு மொத்தமாகப் போக பஞ்சவர்ணம் தான் காரணம் என்று நேரடியாகவே சொல்லி விட்டு மனைவியை திரும்ப அழைத்து வரப் போன இளங்கோவும் வீடு திரும்பவில்லை.....

★★★★★

மூர்த்தி ஆர்த்தியின் அறைக்கு வந்து விடை பெற்றுக் கொண்ட போது ஆர்த்தியின் கண்கள் நிரம்பின.

"சாரி மூர்த்தி...."

"பரவாயில்லை ஆர்த்தி. எப்பவோ நாங்க போயிருக்க வேண்டியது...."

"மூர்த்தி. ஒரு நாள் நீங்க என்னைக் கல்யாணம் செய்துக்க ஆசைப்பட்டீங்க. ஆனா நான் முதல்லயே ஆகாஷ் கிட்ட என் மனசை பறிகொடுத்திருந்தேன். அப்புறம் என்னை மாதிரியே நீங்களும் அப்பா அம்மா இல்லாம வளர்ந்த விதத்தைப் பார்த்தப்ப என் கூடப் பிறந்தவர் போல ஏதோ ஒரு ஒட்டுதல் எனக்கு வந்துச்சு. இப்பவும் உங்களை அப்படித்தான் என்னால் பார்க்க முடியுது....."

"எனக்குப் புரியுது ஆர்த்தி"

"நீங்க போனதுக்கப்புறம் எந்தக் காரணத்தை வச்சும் என் கல்யாணம் முடியற வரைக்கும் வெளியே உங்களைப் பார்த்தா பேசக்கூடாதுன்னு தாத்தா பேர்ல பெரியத்தை சத்தியம் வாங்கியிருக்காங்க.... ஆனா கல்யாணம் முடிஞ்ச பிறகு நான் கண்டிப்பா உங்க வீட்டுக்கு வர்றேன். உங்களுக்கும் ஒரு நல்ல பொண்ணு மனைவியா வரணும்னு ஆசைப்படறேன்...."

பொங்கி எழுந்த ஆத்திரத்தைக் கவனமாக மறைத்துக் கொண்டு எல்லாவற்றையும் அவனால் புரிந்து கொள்ள முடிகிறது என்ற முகபாவனையுடன் தலையாட்டி விட்டு மூர்த்தி கிளம்பினான். பஞ்சவர்ணம் மகளிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்பினாள். பவானி கண்ணீருடன் தாயையும், மருமகனையும் வழியனுப்பினாள். தனதறை ஜன்னலில் இருந்து அவர்கள் இருவரும் டாக்ஸியில் ஏறுவதைப் பார்த்துக் கொண்டு இருந்த ஆர்த்திக்கு வருத்தமாக இருந்தது.

★★★★★

ஆர்த்தி, ஆகாஷ் திருமணம் அடுத்த மாதம் ஏழாம் தேதி என்று முடிவானது. தேதி நிச்சயமானவுடன் டேவிடும், மேரியும் வந்து ஆர்த்தியிடம் வாழ்த்துகள் தெரிவித்தார்கள்.

மேரி ஆர்த்தியிடம் சொன்னாள். "உங்கம்மா இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பா. ஆகாஷ் குழந்தையா இருந்தப்ப எப்பவும் ஆனந்தி அவனை தூக்கி கொஞ்சிகிட்டிருப்பா. அவன்னா அவளுக்கு ரொம்பவே பிடிக்கும்....."

டேவிட் சொன்னார். "எல்லாரையும் விட அதிகமா சந்தோஷப்பட்டது லிஸா தான். போன்ல பேசினாலே அதே பேச்சு தான். அவள் அவ்வளவு சந்தோஷமா இருந்து நாங்க இது வரைக்கும் பார்த்ததில்லை..."

லிஸாவின் சந்தோஷம் ஆர்த்தியையும் வியக்க வைத்தது. ஒரு காலத்தில் தான் காதலித்தவன் இன்னொருத்தியைக் கல்யாணம் செய்து கொள்வதில் ஒருத்தி இவ்வளவு சந்தோஷப்பட முடியுமா?

எல்லோரும் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது ஆர்த்தி, மூர்த்தி, பார்த்திபன் மூவரும் சேர்ந்து போன பிக்னிக் பற்றிய பேச்சும் வந்தது. மேரி சொன்னாள். "அந்த நந்தினி பற்றி நானும் நிறையவே கேள்விப்பட்டிருக்கேன். எத்தனையோ பெண்கள் பிரச்சினைக்காக அவங்க நிறைய போராடியிருக்காங்கன்னு படிச்சிருக்கேன்....."

பார்வதி சொன்னாள். "அன்னைக்கு அந்தக் காட்டுக்குள்ள மாட்டிகிட்ட இவங்களைக் காப்பாத்துனதும் அந்த மகராசி தான். அது போகிற பாதையே இல்லையாம். ஏதோ கடவுளா பார்த்து அவங்க டிரைவரை வழி மாற வச்சு அங்கே அனுப்பியிருக்காங்க. ஒருவேளை அந்த இடத்துல ஏதாவது காட்டு மிருகம் வந்திருந்தா என்ன ஆயிருந்துருக்கும்...."

டேவிட் சொன்னார். "காட்டு மிருகம் ஆபத்தானதோ இல்லையோ மூர்த்தி ஆபத்தானவன். பார்த்திபன் கூட இருந்திருக்கலைன்னா அவனே என்ன செய்வான்னு சொல்ல முடியாது."

மூர்த்தியை அவ்வளவு மட்டமாகச் சொன்னது ஆர்த்திக்கு வருத்தமாய் இருந்தது. அவனைப் பற்றி லிஸா கூட மோசமாகச் சொல்லியிருக்கிறாள். லிஸா பொய் சொல்ல மாட்டாள், அவனுக்கு சில பெண்களுடன் பழக்கம் இருக்கலாம் என்றே வைத்துக் கொண்டாலும் கூட தன் விஷயத்தில் அவன் தவறாக நடந்து கொள்வான் என்பதை இப்போதும் அவளால் நம்ப முடியவில்லை.

நூலகத்திற்குப் புத்தகம் ஒன்றைத் திருப்பித் தர வேண்டியிருக்கிறது என்று அவள் கிளம்பினாள்.

"ஆர்த்தி உன் கல்யாணம் நிச்சயமானதை அந்தம்மா நந்தினிக்கு சொன்னாயா? அவ்வளவு தூரம் உதவி செய்தவங்களை அப்புறமா நாம மறந்துட்டோம்னு இருக்கக்கூடாது. லைப்ரரிக்குப் போகிறதுக்கு முன்னால போன் செஞ்சு சொல்லு. சந்தோஷப்படுவாங்க. நீ பேசிட்டு என் கிட்ட கொடு. நானும் பேசறேன்" பார்வதி சொன்னாள்.

ஆர்த்தி நந்தினிக்குப் போன் செய்து பேசினாள். கேட்டு நந்தினி சந்தோஷப்பட்டாள். பத்திரிக்கை அடித்தவுடன் நேரில் வந்து அழைப்பதாகச் சொன்ன ஆர்த்தி தான் பேசி முடித்தவுடன் "ஆண்ட்டி. உங்க கிட்ட பேசணும்னு ஒருத்தர் ஆவலா இருக்காங்க.... ஒரு நிமிஷம்"

ரிசீவரைப் பாட்டியிடம் கொடுத்து நூலகத்திற்குக் கிளம்பினாள் ஆர்த்தி.

"ஹலோ...."

பார்வதி ஒரு கணம் பேச்சிழந்து போனாள்.

"ஹலோ...யார் பேசறது?" நந்தினியின் குரல் மீண்டும் ஒலித்தது.

திகைப்பிலிருந்து மீண்ட பார்வதி சொன்னாள். "நான் ஆர்த்தியோட பாட்டி பார்வதி பேசறேன்"

மறுமுனை மௌனமாகியது. சில வினாடிகள் பேச்சே இல்லை. பிறகு போன் இணைப்பு துண்டிக்கப்பட்டது. பார்வதி சிலை போல ரிசீவரைப் பிடித்துக் கொண்டே நின்றாள். அவள் அப்படி நிற்பதைக் கண்ட நீலகண்டன் ஓடி வந்தார். "பார்வதி என்னாச்சு?"

டேவிடும் மேரியும் கூட விரைந்து வந்தார்கள். "என்னாச்சுங்க?"

நீண்ட நேரம் பார்வதி பேசவில்லை.

★★★★★

"மேடம் கூப்பிடறாங்க" என்று ஆபிஸ் பியூன் வந்து சொன்ன போது பார்த்திபன் இன்று எதைச் சரியாகச் செய்யவில்லை என்று யோசித்துப் பார்த்தான். பல வருடங்களாக எதற்கெல்லாம் சிவகாமி திட்டுவாள் என்று யோசித்து யோசித்து அவன் செயல்பட்டிருந்தாலும் ஏதாவது ஒன்று விடுபட்டிருக்கும். அதற்காக அவளிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்வான். இன்று என்ன விஷயமோ என்று பயந்து கொண்டே சிவகாமியின் அறைக்குச் சென்றான்.

"உட்கார்" என்றாள் சிவகாமி. பார்த்திபன் உட்கார்ந்தான்.

சிவகாமி சில டாக்குமெண்ட்களை அவனிடம் நீட்டினாள். "இது இந்தக் கம்பெனியோட 20% ஷேர் பேப்பர்ஸ். இதை நான் உங்கம்மா பேர்ல மாத்தியிருக்கேன்..."

பார்த்திபனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவன் இதை என்றும் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. தயக்கத்துடன் அந்த டாக்குமெண்ட்களை வாங்கிக் கொண்டான்.

"உங்கப்பா சொல்லி உங்கம்மா இந்த 20% ஷேர்களை விற்கணும்னு ஒத்தைக் காலில் நின்னப்ப நான் அவள் கிட்ட எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். உங்கப்பா முதல்லயே அவரோட பூர்வீக சொத்தை அழிச்சவர். அவர் இதை அழிக்க நிறைய நாள் ஆகாதுன்னு எதிர்பார்த்தேன். அதே மாதிரி நடந்தது. அவரும் போய் சேர்ந்துட்டார். அவள் கிட்ட இருந்து விலை கொடுத்து வாங்கினாலும் இது என்னைப் பொறுத்த வரைக்கும் அவளோடது தான். இதை எப்பவோ தந்திருக்கணும். ஆனா சுலபமா கிடைக்கறது எதையும் நாம் யாரும் சரியா பாதுகாக்கறதில்லை. உனக்கு ஆரம்பத்துலயே தந்திருந்தா நீயும் உங்கப்பா மாதிரி ஆயிடுவாயோன்னு நினைச்சு தரலை. இப்ப உனக்கும் பக்குவம் வந்திருக்குங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. நானும் சீக்கிரமா லாங் டூர் போகப் போகிறேன். அதான் மாத்திட்டேன்...."

பார்த்திபன் சிலை போல உட்கார்ந்திருந்தான். அவனுக்கு இது கனவல்ல என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

"உங்கம்மா ரொம்ப பாவம் பார்த்தி. சின்ன வயசுல அம்மாவை இழந்தவளுக்கு எங்கப்பா பாசம் கிடைக்கலை. நான் அவளையும் சந்துருவையும் நல்லா பார்த்துகிட்டேன். ஆனா பாசமழை பொழியற குணம் என்கிட்ட இருந்ததில்லை. உன் அப்பா காலத்திலும் அவளுக்கு பெருசா சந்தோஷம் கிடைக்கலை. அவர் போன பிறகும் தான். நீயாவது அவளை கடைசி வரைக்கும் நல்லா பார்த்துக்கணும் பார்த்தி. சரி... போய் வேலையைக் கவனி"

பார்த்திபனுக்குப் பேச வார்த்தைகள் கிடைக்கவில்லை. தலையாட்டி விட்டு அங்கிருந்து கிளம்புகையில் அவன் கண்கள் நிறைந்திருந்தன.

★★★★★

நீல்கிரிஸ் நூலகத்தின் நுழைவு வாயிலுக்கருகே நிறைய கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்பதால் டிரைவர் காரை மிகவும் தள்ளி நிறுத்த வேண்டியதாகி விட்டது. ஆர்த்தி அத்தனை கார்களையும் கடந்து சென்று நூலகத்தினுள் நுழைந்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த டிரைவர் அவள் வருவதற்குள் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கத் தீர்மானித்தான். சிகரெட் குடித்துக் கொண்டிருந்த அவன் கவனம் தெருவில் சண்டை போட்டுக் கொண்டிருந்த இரண்டு பேர் மீது சென்றது. அவர்கள் சண்டை நீண்ட நேரம் நீடித்துப் பின் முடிந்தது. டிரைவர் கடிகாரத்தைப் பார்த்தான். அரை மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. எப்போதும் கால் மணி நேரத்திற்குள் திரும்பி வரும் ஆர்த்தி இன்னமும் திரும்பி வராதது அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. அங்கிருந்த கார்கள் அனைத்தும் போய் விட்டிருந்தன. டிரைவர் நூலக வாசல் நோக்கி நடந்தான். நூலகம் பூட்டப்பட்டிருந்தது. நூலகத்தை வெளியில் சுற்றிப் பார்த்தான். ஆர்த்தி எங்கும் இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்த டிரைவர் ஆர்த்தியின் செல் போனிற்குப் போன் செய்து பார்த்தான். "Switched off" மெசேஜ் வந்தது.

பயந்து போன டிரைவர் சிவகாமிக்குப் போன் செய்தான்.

# 104

The truth is often a terrible weapon of aggression. It is possible to lie, and even to murder, for the truth.

– Alfred Adler 'The Problems of Neurosis'

இத்தனை நாள் தாம்பத்திய வாழ்க்கையில் மனைவி பேச்சிழந்து பார்த்திராத நீலகண்டன் நிஜமாகவே பயந்து போனார். "பார்வதி. என்னாச்சு" மனைவியை உலுக்கினார்.

பார்வதி கணவனையும், டேவிடையும், மேரியையும் மாறி மாறிப் பார்த்தாள். பின் மெல்ல சொன்னாள். "ஆனந்தியோட குரல்....."

"என்ன உளர்றே நீ. அந்த நந்தினி கிட்ட தானே ஆர்த்தி பேசிகிட்டிருந்தா. பேசிட்டு தானே உன் கிட்ட போனைக் கொடுத்தா"

"பேசினது நந்தினின்னு தான் சொன்னாள். ஆனா குரல் ஆனந்தியோடது"

ஒரு நிமிடம் அங்கு மயான அமைதி நிலவியது.

"ஒரே மாதிரி குரல் எத்தனையோ பேருக்கு இருக்கும். அதுவும் போன்ல குரல் எப்பவும் கொஞ்சம் வித்தியாசமாய் தான் கேட்கும்..." டேவிட் சொன்னார்.

"என் பொண்ணு கிட்ட எத்தனையோ தடவை நான் போனில் பேசியிருக்கேன். அவ ஹலோ சொல்ற விதமே ஒரு விதமா இருக்கும்..... இது அவள் குரல் தான்..."

இருந்திருந்தாற் போல தன் மனைவிக்கு மூளை கலங்கி விட்டதோ என்று நீலகண்டன் பயந்தார். என்னென்னவோ பேசுகிறாள். சிறிது நேரம் யாரும் எதுவும் பேசவில்லை. கடைசியில் டேவிட் சொன்னார். "எதுக்கு வீண் சந்தேகம். கோத்தகிரி ஒரு மணி தூரம் தான். என் கார்லயே போய் நேரில் அந்த நந்தினியைப் பார்த்து விட்டால் போச்சு."

"இவ சொல்றதை நம்பி நாம போறது சரி தானா?" நீலகண்டன் கேட்டார்.

"அந்த வழியா வந்தவங்க அப்படியே அவங்களைப் பார்க்கப் போனதாய் சொல்லலாம். பேச்சு கொடுக்கறப்ப நம்ம சந்தேகத்தை நிவர்த்தி செய்துட்டா போச்சு"

கிளம்பினார்கள். போகும் போது ஒருவரும் பேசவில்லை. அவர்களுக்கு இந்தக் குரல் விஷயத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. எப்படிப் பார்த்தாலும் விஷயம் எங்கோ இடித்தது.

கோத்தகிரியில் அந்த வீடு எங்கே என்ற அடையாளத்தை ஆர்த்தி வாயில் சொல்லக் கேட்டிருந்த டேவிடிற்கு அந்த வீட்டைக் கண்டுபிடிப்பது பெரிய கஷ்டமாய் இருக்கவில்லை.

அழைப்பு மணியை அவர்கள் அழுத்த நந்தினி வந்து கதவைத் திறந்தாள். "யாரு வேணும்?"

"நந்தினி...."

"நான் தான்"

பல முறை பத்திரிக்கைகளில் பார்த்து இருந்த முகம். ஆனால் குரல் ஆனந்தியினுடையதாய் தான் இருந்தது. டேவிடும் மேரியும் பார்வதியைப் பார்த்தார்கள். நீலகண்டனும் அந்தக் குரலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்துதானிருந்தார். அவரும் மனைவியைப் பார்த்தார்.

பார்வதி அசரவில்லை. "நான் ஆர்த்தியோட பாட்டி. உங்க குரல் என் மகளோட குரல் மாதிரியே இருந்ததால் நேரில் ஒரு தடவை பார்த்துட்டு போகலாம்னு தோணிச்சு"

நந்தினி ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லாமல் அவர்களைப் பார்த்தாள். பிறகு அவர்களை ஹாலில் அமரச் சொன்னாள். அவர்கள் அமர்ந்த பிறகு கேட்டாள். "என்னைப் பார்த்தால் உங்க மகள் மாதிரி தோணுதா?"

நீலகண்டன் இல்லையென்று தலையசத்தார். பார்வதி சொன்னாள். "உருவத்தைப் பார்த்தா இல்லை. ஆனா குரல் எங்க பொண்ணோடது தான்"

நந்தினி முகத்தில் பல்வேறு உணர்ச்சிக் கொந்தளிப்புகள் வந்து போயின. பின் வரண்ட குரலில் சொன்னாள். "உங்க பொண்ணு செத்துப் பல வருஷம் ஆயிடுச்சும்மா"

பார்வதி மெள்ள எழுந்தாள். "ஆனந்தி"

நீலகண்டன் மனைவியை இழுத்து உட்கார வைக்கப் பார்த்தார். பார்வதி உட்கார்வதாயில்லை. "முகம் வேறாக இருக்கலாம். பேசற ஸ்டைல் எல்லாம் ஆனந்தியோடது தான்."

நந்தினி கண்களில் நீர் நிரம்பியது. "உங்க ஆனந்தி என்னைக்கோ செத்துட்டாம்மா. இப்ப இந்தக் குரலைத் தவிர அவ கிட்ட எதுவுமே மிச்சமில்லை" சொல்லச் சொல்ல அவள் குரல் உடைந்தது. அவள் ஓடி வந்து பார்வதியைக் கட்டிக் கொண்டு அழுதாள். எல்லோரும் அவளைத் திகைப்புடன் பார்த்தார்கள்.

"எனக்கு மண்டையே வெடிச்சுடும் போல இருக்கு. என்னங்க புதிர் போட்டு பேசறீங்க" டேவிட் வெளிப்படையாகச் சொன்னார்.

பார்வதியிடமிருந்து மெள்ள விலகிய நந்தினி கண்களைத் துடைத்துக் கொண்டாள் தன்னை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்டவள் டேவிடைப் பார்த்து ஒன்றும் சொல்லாமல் நீலகண்டனையும், பார்வதியையும் பார்த்துச் சொல்ல ஆரம்பித்தாள். சொல்கையில் அவள் முகத்தில் ஒரு பலத்த சோகம் படர்ந்தது.

"உங்க மகள் ஆனந்தியோட கல்யாண வாழ்க்கையைப் பத்தி நீங்க தெரிஞ்சுகிட்டது கொஞ்சம் தான். தெரிஞ்சுக்காதது நிறைய இருக்கு. ஒரு சொர்க்கத்தையே எதிர்பார்த்துட்டு தான் புருஷன் வீட்டுக்கு வந்தாள். காதலிச்சவனோட வாழ்றதுங்கறதே ஒரு சொர்க்கம் தானே. ஆரம்ப சொர்க்கம் போகப் போக நிறம் மாற ஆரம்பிச்சுடுச்சு. தன்னோட அக்காவோட அழகு, அறிவு, புத்திசாலித்தனம், சுறுசுறுப்பை வாய்க்கு வாய் சொல்லி ரசிச்ச மனுஷருக்கு தன்னோட மனைவி அப்படி இருக்கிறது புடிக்காமப் போக ஆரம்பிச்சுது. பார்க்கறவங்க பல பேர் அவரை விட அவர் மனைவி எல்லா விஷயங்களையும் வேகமா புரிஞ்சுக்கறாள், திறமைசாலி, சுறுசுறுப்புன்னு எல்லாம் சொல்ல ஆரம்பிச்சதை அவர் ரசிக்கலை. மனைவி வேணும்னே நாலு பேர் முன்னால் ஷோ செய்யறாள்ங்கற

அபிப்பிராயம் வர ஆரம்பிச்சது... அவங்க அக்காவே அவளைப் பார்த்தாவது மாறுன்னு சில சமயம் சொன்னது அவரோட ஈகோவை பாதிச்சுது. மனைவி அடக்கி வாசிச்சா பரவாயில்லைன்னு நினைச்சார். ஆனந்தி அவர் நினைச்சபடி நடந்துக்கலை. அவங்களுக்குள்ளே விரிசல் வர ஆரம்பிச்சது....குழந்தையைப் பெத்துட்டு ஆனந்தி போனதுக்கப்புறம் அந்த விரிசல் அதிகமாச்சு...."

"அவளுக்கும் அக்கா கிட்ட முழு வியாபாரத்தையும் விட்டுட்டு ஒரு அலங்கார பொம்மை மாதிரி இருந்துகிட்டு இருந்த கணவர் மீது மரியாதையும் அன்பும் குறைய ஆரம்பிச்சுது. அவருக்கும் தன்னை விட மேலாய் இருக்கிற மனைவி மேல் காதல் குறைய ஆரம்பிச்சது. சாதாரணமா அவங்கக்கா கண்ணுல எதுவும் படாமல் போகாது. ஆனா அவங்க புது யூனிட் ஒன்னை உருவாக்கற முயற்சியில் பிசியா இருந்தாங்க. ஓரளவு ஏதோ பிரச்சனைன்னு தெரிஞ்சாலும் அடுத்தவங்க தனிப்பட்ட விஷயங்கள்ல தலையிடற வழக்கம் இல்லாத அவங்க அதுக்கு மேல கண்டுக்கலை. அவர் தன்னோட நண்பர் டேவிட் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுல குடி வந்த ஒரு அழகான பொண்ணு பவானி கிட்ட பழக ஆரம்பிச்சார். அதை அக்காவுக்குத் தெரியாமல் எச்சரிக்கையா செஞ்சார். அவர் நண்பர் அவரைக் கொஞ்சம் கண்டிச்சார்னு மேரி ஆனந்தி கிட்ட சொன்னாள். ஆனா அந்தப் பழக்கம் தொடர்ந்தது. ஆனந்தி அதை அவங்கக்கா கிட்டே தெரிவிச்சிருந்தா அந்த பழக்கத்தை அடியோட நிறுத்தியிருக்கலாம். ஆனா அவரை அவங்கக்கா கிட்ட போய் சொல்லி புருஷனைத் திருத்தறதை ஆனந்தி அவமானமா நினைச்சாள். அது அவளுக்கு மட்டுமல்ல அவளோட காதலுக்கே அவமானம்னு நினைச்சாள். கட்டாயத்தால தக்க வச்சுக்கற உறவுல அவளுக்கு நம்பிக்கை இருக்கலை...."

மேரியின் கண்கள் ஈரமாயின. டேவிட் ஒருவித குற்ற உணர்ச்சியுடன் விட்டத்தை வெறித்துப் பார்த்தார். அவராவது சிவகாமியிடம் தெரிவித்திருக்கலாம். எல்லாவற்றையும் நிறுத்தி இருக்கலாம். ஆனால் நண்பனைக் காட்டிக் கொடுக்க ஏனோ அந்தக் காலத்தில் மனம் வரவில்லை. நீலகண்டனும், பார்வதியும் நந்தினியை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அந்த சமயம் சிவகாமியக்கா வெளிநாடு போயிட்டாங்க. அக்காவைத் தவிர யாரைப் பத்தியும் கவலைப்படாத அவர் அந்தப் பொண்ணு பவானி கூட இன்னும் நெருக்கமாய் பழக ஆரம்பிச்சார். அவரா ஆனந்தி கிட்ட விவகாரத்து பத்தி பேசலை. ஆனா பவானியோட அண்ணி கல்யாணி ஆனந்தி கிட்ட வெளியிடங்கள்ல பார்த்து விவகாரத்து செஞ்சுட சொல்லி பேச ஆரம்பிச்சா. அந்த கல்யாணி ஒரு சைகிக்னு ஆனந்திக்கு ஆரம்பத்துலயே தெரிஞ்சுடுச்சு. ஒருவித அமானுஷ்யமான சிரிப்பு, கிறுக்குத் தனமான பேச்சு எல்லாம் பார்த்த ஆனந்தி ஆரம்பத்துல அவளை சீரியசா எடுத்துக்கலை. ஆனால் போகப் போக அவளோட நடவடிக்கையும், கொலை மிரட்டலும் ஆனந்தியை லேசா பயமுறுத்த ஆரம்பிச்சுது. ஒரு கட்டத்துல ஆனந்தி வெளிநாட்டுல இருக்கிற சிவகாமியக்கா கிட்ட நடந்ததைச் சொல்ல வேண்டியதாயிடுச்சு. அவங்க உடனடியா கிளம்பி வந்தாங்க...."

"ஆனா அவங்க வந்த அந்த நாள்ல பெரிய மழை. அங்கங்கே நிலச்சரிவு ஆயிருந்தது. அவங்க ஊட்டிக்கு வர நேரமாயிடுச்சு. அவங்க வர்றதுக்கு முன்னால் அந்த கல்யாணி வந்துட்டா. அவ சுய நினைவுல இருந்த மாதிரி தெரியல. அவ ஆனந்தியைக் கத்தியைக் காட்டி மிரட்ட வந்தவ, நேரமாக ஆக, நிஜமாவே கொலைகாரி மாதிரி நடக்க ஆரம்பிச்சுட்டா. ஆனந்தியோட முகத்துல அவளோட கத்தி விளையாட ஆரம்பிச்சுது. அவள் ஆனந்தி முகத்தை செதுக்கி முடிச்சப்ப ஆனந்தி மயங்கி விழுந்துட்டா. அந்தக் காட்சியைப் பார்த்த ஆனந்தியோட குழந்தை மனசுல அது ஆழமான வடுவா பதிஞ்சுடுச்சு. அது இன்னைக்கு வரைக்கும் எப்படி அவளைப் பாதிச்சுதுன்னு உங்களுக்கே தெரியும்"

நீலகண்டனும், பார்வதியும், மேரியும் கண்ணீருடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். டேவிட் இப்படியெல்லாம் நடக்குமா என்பது போல அதிர்ச்சியுடன் நந்தினியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சிவகாமியக்காவும் அர்ஜுனும் அந்த நேரமாய்ப் பார்த்து வந்து சேர்ந்தாங்க. கொஞ்சம் லேட்டா வந்திருந்தா கல்யாணி ஆனந்தியைக் கொன்னுருப்பா. உள்ளே ஓடி வந்து பார்த்த அர்ஜுன் ஆனந்தி மயங்கிக் கிடந்ததையும் ரத்தம் வடியற கத்தியோட கல்யாணி நின்னுகிட்டுருக்கறதையும் பார்த்த பிறகு ஒரு நிமிஷமும் தாமதிக்கலை. துப்பாக்கியால கல்யாணியை சுட்டுட்டான்.... அன்னைக்கு செத்தது ரெண்டு பேரு. உடம்பால செத்தது கல்யாணி, மனசால செத்தது ஆனந்தி..... உடனடியா ஆஸ்பத்திரிக்கு ஆனந்திய கூட்டிகிட்டுப் போனாங்க. ஆனந்தியோட முகத்தில் எலும்புகள் சில சேதமாயிருந்ததால முகத்தை அதே மாதிரி திரும்ப சர்ஜரி செய்யறது கஷ்டம்னு டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டாங்க. ஆனந்திக்கும் பழைய முகம், பழைய வாழ்க்கை எதுவுமே தேவையிருக்கலை."

"நடந்ததுக்கெல்லாம் சிவகாமியக்கா வருத்தம் தெரிவிச்சாங்க. இனி அவங்க தம்பி தவறான உறவு எதுவும் வச்சுக்காம தான் பார்த்துக்கறதாய் சொன்னாங்க. அவங்க அழுத்தமா சொன்ன எதையுமே அவங்க தம்பி மறுக்கப் போகிறதில்லைன்னு ஆனந்திக்கும் தெரியும். ஆனால் ஆனந்திக்கு கட்டாய உறவுகள்ல எப்பவுமே ஈடுபாடு இருந்ததில்லை. உண்மையை சொல்லப் போனா வாழ்க்கையிலயும், காதல்லயும் தோத்துப் போன ஆனந்தியாய் வாழவே அவளுக்கு இஷ்டம் இருக்கலை. அதில் அவள் உறுதியா இருந்தாள். ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்துட்டு வேறொரு மனுஷியாய் மாறி விட நினைத்தாள். இனி யாரையுமே ஆனந்தியா என்னைக்கும் சந்திக்கப் போகிறதில்லைன்னும், உலகத்தைப் பொறுத்த வரைக்கும் தான் செத்தவளாகவே இருந்து விடப்போறதா ஆனந்தி சொல்லிட்டா. எத்தனையோ தடவை வற்புறுத்தியும் அவள் மனம் மாறலை. ஆக்ரோஷமா பேசின ஆனந்தி இனி பின்மாறப்போவதில்லைன்னு சொன்னதைப் பார்த்து சிவகாமியக்கா ஒத்துகிட்டாங்க. கல்யாணியோட பிணத்தை என்ன செய்வதுன்னு யோசிச்சுகிட்டு இருந்த சிவகாமியக்கா பிறகு அதையே ஆனந்தி பிணமா மாத்திட்டாங்க. அதனால தான் அந்த பிணத்தோட முகத்தை அவங்க யாருக்கும் காண்பிக்கலை. ஆனந்தியாவே எரிச்சுட்டாங்க. ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்துகிட்ட ஆனந்தி நந்தினியா மாறிட்டா. மீதி இருக்கிற காலத்தை அபலைப் பெண்களுக்காக அர்ப்பணம் செய்துகிட்டா...."

அவள் பேச்சை நிறுத்தினாள். ஒரு நிமிடம் அங்கு மயான அமைதி நிலவியது. கோபத்தின் உச்சகட்டத்திற்கே சென்று அந்த அமைதியைக் கலைத்தது பார்வதி தான். தன்னுடைய கதையையே யாருடைய கதையையோ போல் சொல்லி இந்த நேரத்திலும் தான் ஆனந்தி என்ற பாத்திரத்தை ஏற்கத் தயாராக இல்லாத மகள் மீது அவளுக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை.

"அந்த கல்யாணி கத்தியில குத்தினதுல முகத்தில மட்டும் தான் அடிபட்டுதா. இல்லை ஆனந்தியோட மூளையிலும் அடிபட்டுடுச்சா"

நந்தினிக்கு பார்வதி எங்கு வருகிறாள் என்று புரிந்தது. "மூளைக்கு அடிபடலை. இதயத்துக்கு தான் பலமான அடி"

"இதயம்கிற ஒன்னு இருந்திருந்தா அவள் இந்த முடிவு எடுத்திருப்பாள்னு எனக்குத் தோணலை. அவள் செத்துட்டதா நினைச்ச காலத்துல இருந்து என் புருஷன் சந்தோஷமாய் ஒரு நாள் இருந்து நான் பார்த்ததில்லை. எத்தனை நாள் நானும் அவரும் அழுதுருப்போம்னு எங்களுக்குத் தான் தெரியும்..."

"இந்த முகத்தோட நான் வந்திருந்தா என்னை உங்க மகளாய் ஏத்துக்க முடிஞ்சுருக்குமா? உண்மையை சொல்லுங்க" பார்வதியையும் நீலகண்டனையும் பார்த்து நந்தினி கேட்டாள்.

"கொஞ்சம் கஷ்டமாயிருந்திருக்கும். ஆனா உடனே ஏத்துக்கப் பழகியிருப்போம். பெத்தவங்க பாசத்தைக் கொட்டறது முகத்தை வச்சு அல்ல. பெத்த பொண்ணையாவது நீ நினைச்சுப் பார்த்திருக்கலாம்"

"நினைச்சுப் பார்க்காம இருக்கலை. நான் என் அம்மா அப்பா தான் என் குழந்தையை வளர்த்தணும்னு சிவகாமியக்கா கிட்ட கேட்டுகிட்டேன். அவங்க கிட்ட நான் கடைசியா அப்படிக் கேட்டுகிட்டதா உங்க கிட்ட சொல்லச் சொல்லியிருந்தேன். ஆனா அதுக்கு நீங்க சந்தர்ப்பமே தராமல் ஆர்த்தியை எடுத்துட்டு ஓடிட்டீங்க. நீங்க எங்க இருக்கீங்கன்னு கண்டுபிடிக்க அவங்களுக்கு அதிக நாள் ஆகலை. ஆனா உங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது ஆகாத வரைக்கும், 21 வயசு ஆகாம ஆர்த்தியை எந்தக் காரணத்தை வச்சும் ஊட்டிக்கு கூட்டிகிட்டு வரக் கூடாதுன்னு நான் சொல்லியிருந்தேன். இன்னொருத்தி என் குழந்தையை வளர்க்கறது எனக்குப் பிடிக்கலை..... பாண்டிச்சேரியில் அந்த லைப்ரரி வேலை அப்பாவுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தது கூட சிவகாமியக்கா தான்."

பார்வதி ஆனந்தியிடம் பேசுவதை விட்டு கணவன் பக்கம் திரும்பினாள். "பொண்ணை பொண்ணு மாதிரி வளர்த்தணும். அதிகமா செல்லம் கொடுத்து குட்டிச்சுவர் செஞ்சதோட விளைவைப் பாருங்க. என் பொண்ணு மாதிரி உலகத்துல புத்திசாலி இல்லைன்னு தலையில வச்சு கூத்தாடினீங்களே. பாருங்க அவளோட புத்திசாலித்தனத்த. இத்தனை நாள் அந்த சிவகாமியை வாயிக்கு வந்த மாதிரி கரிச்சுக் கொட்டினீங்களே. இப்ப என்ன சொல்றீங்க..."

நீலகண்டன் தளர்ந்து போயிருந்தார். அவர் உடைந்த குரலில் மகளிடம் கேட்டார். "உனக்கு எப்படி முடிஞ்சது ஆனந்தி. ஆர்த்தியையோ, என்னையோ பார்க்கணும்னு தோணவேயில்லையாம்மா உனக்கு?"

பார்வதி கணவனிடம் எரிந்து விழுந்தாள். "ஊம். இதுல என்னை விட்டுருங்க. நான் தான் சத்துரு. உள்ளதை உள்ளது மாதிரி சொல்றேன் பாருங்க..."

"சரி...உங்கம்மாவையும் தான்... பார்க்கணும்னு தோணவேயில்லையா?"

ஆனந்தி அழுது கொண்டே சொன்னாள். "எப்படிப்பா தோணாமல் இருக்கும். ஏதோ ஒரு பிடிவாதத்தில் நந்தினியா மாறினாலும் நான் உங்களை நினைக்காத நேரம் இல்லை. எத்தனையோ தடவை நான் பாண்டிச்சேரி வந்திருக்கேன். தூரத்துல இருந்து உங்களை எல்லாம் பார்த்துட்டு திரும்பி வந்துருக்கேன். எத்தனையோ தடவை என் மகளை பின் தொடர்ந்திருக்கேன்.... கடைசியா கூட உங்களுக்கு ஹார்ட் அட்டாக்குன்னு தெரிஞ்சப்ப உங்களைப் பார்க்க பாண்டிச்சேரி ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கேன். உங்க பக்கத்துல நின்னு பார்த்திருக்கேன். அம்மா என்னைப் பார்த்ததுக்கப்பறம் அவசர அவசரமா அங்கேயிருந்து ஓடியிருக்கேன்....."

நீலகண்டன் அதற்கு மேல் தாமதிக்கவில்லை. எழுந்து வந்து மகள் கைகளைப் பிடித்துக் கொண்டார். "எத்தனை கஷ்டப்பட்டுட்டே குழந்தை நீ"

ஆனந்தி தன் தந்தையின் தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்தவள் நிறைய நேரம் நிறுத்தவில்லை. இப்போது கூட அவர் மட்டுமே அவள் கஷ்டத்தைப் பார்க்கிறார்.....

★★★★★

டிரைவர் தெரிவித்த செய்தி சிவகாமியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவனிடம் நடந்ததைத் தெளிவாக இன்னொரு முறை சொல்லச் சொன்னவள் அவன் சொல்லி முடித்த பிறகு காரைத் திரும்ப வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகச் சொன்னாள். இதை இனி யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று மட்டும் சொல்லி விட்டு போனை வைத்தாள்.

கடத்தல் தான் இது என்பது அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. இன்னொரு போனுக்காகக் காத்திருந்தாள். நினைத்தபடி கால் மணி நேரத்தில் அந்த போன் கால் வந்தது. பேசினவன் வரண்ட குரலில் உணர்ச்சியே இல்லாமல் சொன்னான்.

"சிவகாமியம்மா. இன்னேரம் உங்களுக்கு செய்தி தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். உங்க மருமகள் என் கஸ்டடியில் தான் இருக்கிறாள். எனக்கு அவசரமா ஒரு பத்து லட்ச ரூபாய் தேவைப்படுது. உங்க மருமகளுக்காக இன்னும் அதிகமா கேட்டா கூட நீங்க கொடுப்பீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா எனக்குத் தேவைப்படற தொகையைக் குடுத்தா போதும். உங்க மருமகளை நீங்க பத்திரமா கூட்டிகிட்டு போயிடலாம். நீங்களும், உங்க வேலைக்காரன் அர்ஜுனும் மட்டும் வந்து அந்தப் பணத்தை நான் சொல்ற இடத்துல தந்தா போதும். இடத்தைக் குறிச்சுக்குங்க....."

அமைதியாக அவன் சொன்ன இடத்தின் விலாசத்தையும் போக வேண்டிய நேரத்தையும் குறித்துக் கொண்ட சிவகாமி சொன்னாள். "நான் பணத்தோட வர்றேன். ஆனா அவள் மேல ஒரு சின்ன கீறல் கூட விழக்கூடாது"

"நீங்க போலீசுக்குப் போகாத வரைக்கும் அவ மேல சின்னக் கீறல் கூட விழாது. அதுக்கு நான் க்யாரண்டீ. அப்படி போலீசுக்குப் போனா அவளை அறுத்து பத்து பன்னிரண்டு பொட்டலமா நீங்க பல இடங்கள்ல இருந்து பொறுக்க வேண்டியிருக்கும். அதுக்கு நீங்க இடம் தர மாட்டீங்கன்னு நினைக்கிறேன். ஞாபகம் வச்சுக்கோங்க. பணத்தை நீங்களும் அர்ஜுனும் கொண்டு வந்தால் போதும்"

பப்ளிக் பூத்தில் போனை வைத்த அசோக் நாலைந்து கடை தள்ளி இருந்த காயின் பாக்ஸில் இருந்து மூர்த்திக்குப் போன் செய்து பேசினான். போனை வைத்து பக்கத்து தெருவுக்குச் சென்று ஒரு காயின் பாக்ஸில் போன் செய்து, அடுத்து செய்ய வேண்டியதை சங்கேத மொழியில் தெரிவித்தான். பின் கோவைக்குப் போகும் பஸ்ஸில் ஏறினான். இன்று இரவு அவன் ரயிலில் டெல்லிக்குச் செல்கிறான். சிவகாமியைப் போல் ஒரு பெரும்புள்ளி மர்மமான முறையில் காணாமல் போகும் நேரம் பலர் பார்வை படும்படியாக வேறு இடத்தில் பிரயாணம் செய்து கொண்டிருப்பது நல்லது என்பது அவன் கருத்தாக இருந்தது.

# 105

Sometimes when one person is missing, the whole world seems depopulated.
– Lamartine

சிவகாமியும், அர்ஜுனும் அசோக் சொன்ன இடத்திற்கு காரில் போய்க் கொண்டிருக்கையில் சிவகாமி மனதில் ஒரு விஷயம் நெருடிக் கொண்டிருந்தது. போன் செய்த கடத்தல்காரன் குறிப்பாக அர்ஜுனை மட்டும் அழைத்து வரச் சொன்னது விசித்திரமாக இருந்தது. கடத்தல்காரன் யாராக இருந்தாலும் அவர்களைப் பற்றி நன்றாக அறிந்தவனாகத் தான் இருப்பான் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இல்லை. அர்ஜுன் அந்தப் பகுதியில் பலருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தான். உடல்பலத்தில் அவனுக்கு ஈடு இணை இல்லை என்ற பெயர் எடுத்திருந்தான். அப்படியிருக்கையில் கடத்தல்காரன் "அர்ஜுனை மட்டும் கூட்டிக் கொண்டு வராதே" என்று சொல்லியிருந்தால் அது இயற்கையாக இருந்திருக்கும். அர்ஜுனை வரச் சொன்ன காரணம் என்ன என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை.

அந்த பங்களாவை அவர்கள் அடைந்த போது இருட்டியிருந்தது. அசோக் சொன்ன இடத்தில் காரை நிறுத்தி இருவரும் இறங்கினார்கள். தூரத்தில் இன்னொரு வேன் நின்று கொண்டிருந்ததும், அதனுள் ஆட்கள் இருப்பதும் இருவருக்கும் மங்கலாகத் தெரிந்தது. அர்ஜுன் பணம் இருந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டான். சிவகாமி பங்களாவின் அழைப்புமணியை அழுத்தினாள். பின் இருவரும் அமைதியாகக் காத்திருந்தார்கள்.

மாடி ஹால் ஜன்னல் வழியே பைனாகுலர் வழியாக அவர்களை யாராவது பின் தொடர்கிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி அந்த ஹால் நாற்காலியில் அமர்ந்திருந்த பஞ்சவர்ணத்திடம் சொன்னான். "பாட்டி. யாரும் பின் தொடரலை"

பஞ்சவர்ணம் திருப்தியுடன் தலையசைத்தாள். அசோக் முன்பே கணித்துச் சொல்லியிருந்தான். "அந்தம்மா கண்டிப்பா போலீஸுக்குப் போகாது. இந்தப் பத்து லட்ச ரூபாய்க்கு எல்லாம் ரிஸ்க் எடுக்காது. பயப்படாதீங்க". அவன் கணிப்பு பொய்க்கவில்லை. அவன் தான் டில்லிக்குப் போவதையும் அவர்களுக்குத் தெரிவித்திருந்தான். போகும் முன் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்திருப்பதாகவும் சொல்லி இருந்தான். சிவகாமி மற்றும் அர்ஜுனின் உடல் எடுக்க வருபவர்கள் கண்ணில் கூட பட வேண்டாம் என்று சொல்லியிருந்தான். அவர்கள் நம்பகமானவர்கள், எந்த நிலையிலும் வாய் திறக்காதவர்கள் என்றாலும் கூட அவர்கள் கண்ணில் பட அவசியம் என்ன இருக்கிறது என்று கேட்டது அவளுக்குப் பிடித்திருந்தது. கச்சிதமாக, பின்னாளில் கூடப் பிரச்சினை வராத அளவு சிந்தித்திருப்பது அவளுக்கு அவன் மீதிருந்த மதிப்பை அதிகப்படுத்தி இருந்தது.

ஆர்த்தியைக் கடைசி வரை மயக்க நிலையில் தான் வைத்திருக்க வேண்டும் என்று அசோக் சொல்லியிருந்தான். நான்கு மணி நேரத்திற்கு ஒரு தடவை மயக்க ஊசி ஒன்று போடச் சொல்லியிருந்தான். உண்மையில் ஆர்த்தி நூலகத்தில் இருந்து வெளியே வந்த போது ஒரு கைக்குட்டையை பின்னாலிருந்து யாரோ மூக்கருகே கொண்டு வந்ததை மட்டும் உணர்ந்திருந்தாள். அதன் பிறகு மயக்க நிலையில் தான் ஆழ்ந்திருந்தாள். அவளை அந்த பங்களாவில் ஒரு அறையில் அடைத்து வைத்திருந்தார்கள்.

மேலும் அவன் மூர்த்தியிடம் தெளிவாகச் சொல்லி இருந்தான். 'உன் துப்பாக்கி எப்போதுமே அவர்களைக் குறி பார்த்துத் தயாராக இருக்க வேண்டும். நீ முதலில் அர்ஜுனைத் தான் சுட

வேண்டும். சிவகாமியை சுட்டு விட்டால் அவனை சமாளிப்பது உன்னால் முடியாத காரியம். இரண்டாவதாக சிவகாமியை சுட்டுக் கொன்று விடு"

பஞ்சவர்ணம் பேரனிடம் சொல்லியிருந்தாள். "அந்த சண்டாளியையும், தடியனையும் கொன்னுட்டா நீ இஷ்டப்படி மயக்க நிலையில் இருக்கிற ஆர்த்தியை அனுபவி. நம்மளோட முதல் திட்டமே இப்ப கை கூடவும் சான்ஸ் இருக்கு. இல்லைன்னா கூட அந்த ஆகாஷுக்கு முன்னால் அவளை அனுபவிச்சவன் நீயிங்கற திருப்தியாவது மிஞ்சும்"

மூர்த்தி இன்றைய தினம் தனக்கு அதிர்ஷ்டமான தினம் என்று நம்பினான். அப்பழுக்கில்லாத திட்டம் அசோக்கினுடையது என்பதால் அவனுக்கு அந்த இருவர் மரணத்திலும், ஆர்த்தியைத் தான் அனுபவிக்கப் போகிறவன் என்பதிலும் சிறிதும் சந்தேகமில்லை.

மூர்த்தி துப்பாக்கியோடு கீழே போய்க் கதவைத் திறந்தான். துப்பாக்கியுடன் குறி வைத்து நின்ற மூர்த்தியைக் கண்ட சிவகாமி திகைத்தாள். தன் வாழ்க்கையில் எத்தனையோ பார்த்திருந்த சிவகாமி கூட இதை எதிர்பார்த்திருக்கவில்லை.

"பெட்டியை அங்கே வச்சுட்டு ரெண்டு பேரும் கைகளை மேலே தூக்குங்க"

"ஆர்த்தி எங்கே?" சிவகாமி அமைதியாகக் கேட்டாள்.

"கவலைப்படாதே. மேல ஒரு ரூம்ல இருக்கா. மயக்கத்துல இருக்கா. ரெண்டு பேரும் கைகளை மேலே தூக்கிகிட்டே படியேறி மேல போங்க"

அர்ஜுன் சிவகாமியைப் பார்த்தான். சிவகாமி அவனிடம் தலையசைத்து விட்டு கைகளை மேலே தூக்கிக் கொள்ள அர்ஜுனும் கைகளை மேலே தூக்கிக் கொண்டான். சிவகாமி முன் செல்ல அர்ஜுன் பின் சென்றான். மூர்த்தி துப்பாக்கியை நேராகப் பிடித்தபடி பின் தொடர்ந்தான். படியேறி மேலே சென்றவர்களை பஞ்சவர்ணம் வரவேற்றாள். "வா சிவகாமி. வாடா தடியா"

சிவகாமி பஞ்சவர்ணத்தை ஏதோ அபூர்வ ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்தாள். "உனக்கு என்ன வேணும் பஞ்சவர்ணம்?"

"எனக்கு சில உண்மைகள் தெரியணும். என் மருமகளைக் கொன்னது யாரு? நீயா இந்த தடியனா?"

"இதைக் கேட்கறதுக்கா இத்தனை டிராமா?"

"உன் மருமகளைக் கடத்தாமல் இருந்தா நீ வந்திருப்பாயா? என் பேரன் துப்பாக்கியோட தயாரா இல்லாமல் இருந்தா நீ வாயைத் திறப்பாயா? சொல்லு சிவகாமி என் மருமகளைக் கொன்னது யாரு?"

"நான் தான்" என்று சிவகாமியும் அர்ஜுனும் ஒரே நேரத்தில் சொன்னார்கள். பின் சிவகாமி அர்ஜுனை எரிச்சலுடன் பார்த்தாள். "எதையெல்லாம் எனக்காக உன் தலையில் போட்டுக்கறதுன்னு இல்லையா?"

அர்ஜுன் சிவகாமியை தவிப்போடு பார்த்தான். கல்யாணியைச் சுட்டது அவன். அப்படியிருக்க சிவகாமி அந்தப் பழியைத் தான் எடுத்துக் கொள்வது அவனுக்குப் பொறுக்கவில்லை. ஆனால் சிவகாமியின் பார்வை அவனை மௌனமாக இருக்கச் சொன்னது.

"கல்யாணி ஆனந்தியைக் கொன்னதுக்கு அவளை நீ கொன்னுட்டே இல்லையா? சரி பிணத்தை என்ன செய்தாய்?"

சிவகாமி மௌனம் சாதித்தாள். பின் புறம் இருந்த மூர்த்தி துப்பாக்கியோடு முன்னால் வந்து பஞ்சவர்ணம் அருகே வந்து நின்றான்.

"பேசு சிவகாமி. இல்லாட்டி என் பேரன் கைல இருக்கிற துப்பாக்கி பேசும்"

"எரிச்சிட்டேன்"

"எப்படி?"

"ஆனந்தின்னு சொல்லி எரிச்சுட்டேன்"

பஞ்சவர்ணம் திகைத்தாள். "அப்படின்னா ஆனந்தி பிணத்தை என்ன செய்தாய்"

"அது அவ செத்தவுடனே தானே முடிவு செய்யணும்?"

"என்ன ஆனந்தி சாகலையா?"

மிகச்சுருக்கமாக நடந்ததை நாலே வரிகளில் சிவகாமி சொல்ல கோபத்தில் மூர்த்தியும், பஞ்சவர்ணமும் எரிமலையானார்கள். பஞ்சவர்ணம் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டாள். "எல்லாம் தெரிஞ்ச நீ ஏன் பவானியை சந்திரசேகருக்குக் கட்டிக்கொடுக்க சம்மதிச்சாய்"

"என் தம்பி மனைவி இல்லாமல் வாழ முடியும்னு எனக்குத் தோணலை. அவன் உன் மகள் கிட்ட அத்துமீறி நடந்தாச்சுன்னு தெரிஞ்சப்ப ஏதோ ஒரு பொண்ணைக் கட்டி வைக்கிறதை விட உன் மகளையே கட்டி வைக்கிறது சரின்னு தோணுச்சு. அப்புறம் உன் அளவுக்கு உன் மகள் மோசமில்லைங்கறதும் ஒரு காரணம்"

"அதுக்கு நான் உன் கிட்ட நன்றியோட இருக்கணும்னு எதிர்பார்க்கிறாயா சிவகாமி"

"உன் கிட்ட எந்த நல்லதையும் நான் எப்பவுமே எதிர்பார்த்ததில்லை பஞ்சவர்ணம்" ஏளனமாகச் சொன்னாள் சிவகாமி.

"இனி மேல் நீ எதிர்பார்க்க வேண்டியது சாவைத்தான் சிவகாமி. ஆனா முதல்ல இந்த தடியனோட சாவைப் பார்த்துட்டு போய் சேரு"

சிவகாமிக்கு தற்போதைய நிலைமையின் பூதாகாரம் புரிந்தது. அவர்கள் இருவர் கண்ணிலும் வெறுப்பும், கொலைவெறியும் மின்னின. சிவகாமி கேட்டாள். "ஆர்த்தி"

"அவளை மூர்த்தி பார்த்துக்குவான். கவலைப்படாதே...." பஞ்சவர்ணம் புன்னகை செய்து விட்டு பேரனைப் பார்த்து தலையசைத்தாள். மூர்த்தி சந்தோஷமாக அர்ஜுனுக்குக் குறி வைத்து விரலை அழுத்த சிவகாமி மின்னல் வேகத்தில் இயங்கி அர்ஜுனுக்கு முன்பக்கம் பாய்ந்தாள். துப்பாக்கிக் குண்டு அவள் மார்பில் பாய்ந்த அதே நேரத்தில் அவள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து

மின்னல் வேகத்தில் நான்கு முறை சுட்டாள். தொடர்ந்து சுடப்பட்ட குண்டுகள் பஞ்சவர்ணத்தையும், மூர்த்தியையும் பதம் பார்த்தன.

சிவகாமி கீழே சரிந்த போது தாங்களும் குண்டடிபட்டு கீழே சரிவோம் என்று எண்ணியிருக்காத திகைப்பும், அதிர்ச்சியும் பஞ்சவர்ணத்தின் முகத்திலும், மூர்த்தி முகத்திலும் தெரிந்தன. சிவகாமி குறி பார்த்து சுடுவதில் வல்லவள் என்பதால் அவர்கள் இருவரும் பிணமாக அதிக நேரம் ஆகவில்லை.

எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்து விட அர்ஜுன் திக்பிரமையுடன் சிலையாக சமைந்து நின்றான். சிவகாமி அவனிடம் அவசரமாகச் சொன்னாள். "அர்ஜுன். ஆர்த்தி ஏதோ ஒரு ரூம்ல தான் இருக்கணும். நீ அவளைக் கூட்டிகிட்டு போயிடு"

சிவகாமி உடுத்தியிருந்த சிவப்பு சேலையெல்லாம் இரத்தத்தில் மேலும் சிவப்பாகிக் கொண்டிருக்க அர்ஜுன் பதறியபடி சொன்னான்."மேடம். ரத்தம் அதிகமா கொட்டுது. முதல்ல டாக்டர் கிட்ட உங்களை...."

வெளியே இருந்து சிலர் ஓடி வந்து படியேறும் சத்தம் கேட்க சிவகாமி அசுர பலத்தைப் பிரயோகித்து எழுந்து நின்று பஞ்சவர்ணம் முதலில் அமர்ந்திருந்த நாற்காலியை நிமிர்த்தி அதில் உட்கார்ந்து கொண்டாள். "அர்ஜுன். இத்தனை வருஷம் நீ என் வார்த்தையை மீறினதில்லை....இப்ப கடைசியா மீறிடாதே. ஆர்த்தியைக் கண்டுபிடிச்சு அவளைக் கூட்டிட்டு... போயிடு.....நான் எத்தனை நேரம் தாக்குப் பிடிப்பேன்னு....தெரியலை.....ஆனா வர்றவங்களை நான் சமாளிச்சுக்கறேன்.....போ"

மாடியேறி உள்ளே நுழைந்த மனிதர்களை நோக்கி சிவகாமி துப்பாக்கியை நீட்ட வந்தவர்களில் ஒருவன் அவசரமாகச் சொன்னான். "அம்மா சுட்டுடாதீங்க. நாங்க அசோக் சொன்ன ஆளுங்க தான். இந்த ரெண்டு பாடியையும் எடுத்துட்டு போக தான் வந்திருக்கோம்..."

அசோக் அவர்களிடம் தெளிவாகச் சொல்லியிருந்தான். "துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டதும் நீங்கள் போய் ஒரு வயதான அம்மாள் பிணத்தையும், ஒரு இளைஞன் பிணத்தையும் எடுத்துக் கொண்டு போய் விடுங்கள். அங்கே இருக்கும் மனிதர்களை ஆராயப்போக வேண்டாம்..."

அவர்கள் பிணங்களை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையில் சிவகாமி அர்ஜுனைப் பார்த்து தலையசைத்தாள். பல வருடங்களுக்குப் பின் முதல் முறையாக கண்களில் நீர் நிறைய அர்ஜுன் அவளைப் பார்த்தான். சிவகாமி உதடு அசைந்தது. "ப்ளீஸ்..."

என்றுமே அந்த ஒரு வார்த்தையை அவளிடமிருந்து எதிர்பார்க்க முடியாதிருந்த அர்ஜுன் அதற்கு மேல் தாமதிக்கவில்லை. கண்களில் நீர் கங்கையாக வழிய அவசரமாக அங்கிருந்து ஓடினான்.

பிணத்தை அப்புறப்படுத்தியவர்கள் செல்லும் வரை தாக்குப் பிடித்துக் கம்பீரமாக அமர்ந்திருந்த சிவகாமி அவர்கள் சென்ற மறு கணம் சாய்ந்தாள். உயிர் பிரியும் அந்தக் கணத்தில் அவள் மனதில் அவள் கணவனைப் பற்றிய எண்ணம் மட்டுமே மேலோங்கி நின்றது. அவர் தனிமைப்பட்டு விடுவார் என்ற உணர்வு ஆழமாகத் தங்கியது. மானசீகமாகக் கடைசியாக கணவனிடம் சொன்னாள். "சாரிங்க...."

++++++++++++++

சங்கரன் தளர்ந்து போய் தன் மனைவி பிணத்திற்கு அருகே உட்கார்ந்திருந்தார். வெளி உலகிற்கு சிவகாமி மாரடைப்பால் காலமாகி விட்டாள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அவள் உடலைச்சுற்றி எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் நிஜமான துக்கம் குடிகொண்டிருந்தது. சம்பிரதாயத்திற்கான வருத்தமாக அது இல்லாததை சங்கரனால் காண முடிந்தது. இமயம் இதயத்தை அழுத்த குடும்பத்தினரை சங்கரன் கவனித்தார்.

சந்திரசேகரின் துக்கம் ஒரு குழந்தையுடையதாக இருந்தது. சந்திரசேகர் தமக்கையின் காலைப்பிடித்து குழந்தையைப் போல் கதறிக் கொண்டிருந்தார். "அக்கா நான் இனி எந்தத் தப்பும் பண்ண மாட்டேன்க்கா. சத்தியம்க்கா. நீ என்னை எவ்வளவு வேணும்னாலும் திட்டு. ஆனா என்னை விட்டுட்டு போயிடாதேக்கா ப்ளீஸ்". கடைசியில் டாக்டர் வந்து அவருக்கு மயக்க ஊசி போட்டு அமைதிப்படுத்த வேண்டியதாயிற்று.

அர்ஜுனின் துக்கமும் எல்லையில்லாததாக இருந்தது. தன்னைக் காப்பாற்றி சிவகாமி உயிரை விட்டதை அவனால் சிறிதும் ஜீரணிக்க முடியவில்லை. சங்கரனிடம் அவன் சொன்னான். "நான் தான் பிணமாய் இருக்க வேண்டியவன். ஏன் மேடம் என்னைக் காப்பாத்திட்டு...." அவனுக்கு மீதியைச் சொல்ல துக்கம் விடவில்லை. தன் மனைவி மனதில் என்ன நினைத்திருப்பாள் என்பதை ஊகிக்க முடிந்த சங்கரன் குரலடைக்கச் சொன்னார். "நீ இப்ப தான் வாழவே ஆரம்பிச்சிருக்கே அர்ஜுன். உன்னை நம்பி ஒரு பொண்ணு இருக்கா.... சிவகாமி வாழ்ந்து முடிச்சவ.... அது தான் அப்ப அவள் மனசுல இருந்திருக்கும்"

மற்றவர்கள் எல்லாம் நேசித்த ஒரு மனுஷியை இழந்திருக்கிறார்கள். ஆனால் அவன் தெய்வத்தையே இழந்திருக்கிறான். அவன் சமாதானப்படுத்த முடியாதவனாக இருந்தான்.

ஆர்த்தியின் துக்கமும் அர்ஜுனுடையதைப் போலவே அளவிட முடியாததாக இருந்தது. ஆனந்தியின் தோளில் சாய்ந்து கொண்டு அவள் அழுதாள். பதினெட்டு வருடங்களுக்கு முன் அந்த வீட்டின் வாசற்படியை மிதிக்க மாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து இருந்த ஆனந்தி தன் வாழ்வில் முதல் முறையாக அதை மீறி அங்கு வந்திருந்தாள். திருமணமாகி வந்த கணம் முதல் இந்தக் கணம் வரை சிவகாமி தனக்கு செய்த நல்லதெல்லாம் ஒவ்வொன்றாக நினைவில் வர தன்னையும், மகளையும் சமாதானப்படுத்த வகையறியாது நந்தினியாக அங்கு நின்று கொண்டிருந்தாள்.

அமிர்தம் தன் கையால் கட்டிய பெரிய மல்லிகைப்பூ மாலையை தமக்கை உடலுக்குப் போட்டு அழுது கொண்டிருந்தாள். சொத்தைத் திருப்பித் தந்த பெரியம்மாவுக்கு நன்றி கூட சொல்லவில்லை என்பது பார்த்திபனின் பெரிய வருத்தமாக இருந்தது. இத்தனை வருடங்களாக அவளைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்ததற்கு அவன் தன்னையே சபித்தான். அதே போல் நீலகண்டன் கண்ணீருடன் சிவகாமியிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்.

எப்போதும் பேச்சை நிறுத்தத் தெரியாத டேவிட் வாழ்வில் முதல் முறையாக பேச்சிழந்து சோகமாக மனைவியுடன் நின்றிருந்தார்.

ஆகாஷ் தான் எல்லாப் பொறுப்பையும் எடுத்துக் கொண்டிருந்தான். தாய் மீது அவன் வைத்திருந்த பாசம் அதீதமானது. எல்லோரும் சோகத்தில் மூழ்கி இருக்க காரியங்களை எடுத்துச் செய்ய ஆளில்லாமல் போயிருந்தது. இது வரை அங்கு எல்லாவற்றையும் சிவகாமி தான் நடத்திக் கொண்டிருந்ததால் அவள் இறந்த பின் அங்கு எல்லாமே ஸ்தம்பித்துப் போயிருந்தது. அம்மா இருந்திருந்தால் என்ன செய்திருப்பாள் என்று யோசித்து அவன் தான் செயல்பட வேண்டியிருந்தது. துக்கத்தை அடக்கிக் கொண்டு அவன் செய்த முதல் காரியம் தாயின் மரணத்திற்கான காரணத்தை மாரடைப்பாக மாற்றியது தான். பின் தொடர்ந்து மற்ற காரியங்களைக் கவனித்தான். கலெக்டர், மந்திரிகள், தொழிலதிபர்கள் என வந்த பெரிய மனிதர்களிடமும் பேச வேண்டியிருந்தது.

அத்தனை வேலைகளுக்கு மத்தியிலும் தந்தையை அவன் அடிக்கடி கவனித்துக் கொண்டிருந்தான். அவர் இழப்பு ஈடு செய்ய முடியாதது என்று அவனுக்குத் தெரியும். தாயிற்கும் தந்தைக்கும் இடையே இருந்த ஆழமான அந்த பந்தத்தின் வலுவை அவன் நினைவு தெரிந்த நாள் முதல் பார்த்திருக்கிறான். அம்மா அன்று அவருடன் உலகப் பயணம் போவதாகச் சொன்ன போது சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வர மனம் கனத்தது. அவர் அழாமல் அமர்ந்திருந்த விதம் அத்தனை பேர் அழுகையையும் விட அதிகமாய் நெஞ்சை உருக்கியது.

அவரிடம் வந்து தோளைத் தொட்டான்.

"என்ன ஆகாஷ்.?"

"அப்பா அழுது முடிச்சிடுங்கப்பா. மனசுக்குள்ளேயே வச்சு உடைஞ்சி போயிடாதீங்கப்பா. அம்மா மனசு சாந்தியடையாதுப்பா....ப்ளீஸ்ப்பா"

மகனைக் கட்டிக் கொண்டு அந்தத் தந்தை நிறைய நேரம் அழுதார்.

பவானி கூட மிகவும் சோகமாக இருந்தாள். சிவகாமியின் மரணத்திற்கு அவளும் வருத்தப்பட்டாள் என்றாலும் அவள் மனதை இன்னொரு விஷயம் அரித்துக் கொண்டிருந்தது. பஞ்சவர்ணத்தின் உடலையும், மூர்த்தியின் உடலையும் யாரோ சிலர் எடுத்துக் கொண்டு போனார்கள் என்ற தகவல் கிடைத்தது. ஆனால் அவர்கள் உடல்களை யார், எங்கே, எடுத்துக் கொண்டு போனார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. அவளைத் தவிர யாருக்கும் அதைப் பற்றிய கவலையும் இருக்கவில்லை. மாலைகளும், மலர் வளையங்களும், சிவகாமியின் உடல் மீது விழுந்த வண்ணம் இருக்க பஞ்சவர்ணத்தின் பிணமும், மூர்த்தியின் பிணமும் என்ன ஆயின என்று தெரியாமல் அவள் ஒருத்தி மட்டுமே துக்கத்துடன் இருந்தாள்.

++++++++

ரயிலில் தன் லேப் டாப்பை எடுத்துத் தமிழகச் செய்திகளைப் பார்த்த போது அசோக் திடுக்கிட்டான். "சிவகாமியம்மாள் மாரடைப்பால் காலமானார்" என்ற செய்தி தலைப்புச் செய்தியாக வந்து கொண்டிருந்தது. அவர் உடலுக்கு அஞ்சலி செலுத்த மந்திரிகள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் எல்லாம் வந்தபடி இருக்கிறார்கள் என்ற செய்தியைப் படித்த அசோக் தன் செல்லை எடுத்து ஒரு எண்ணிற்கு அழைத்துப் பேசினான்.

"சார். எல்லாம் நீங்க சொன்னபடி கச்சிதமாய் நடந்துகிட்டிருக்கு. இப்ப அந்த ரெண்டு பேர் பிணத்திலும் எலும்புத்துண்டுகள் மட்டும் தான் மிச்சமிருக்கு....."

செல்லில் வெற்றிச் செய்தியாக சொல்லப்பட்ட விவரங்களை இடைமறிக்காமல் ஐந்து நிமிடம் கேட்ட அசோக் ஒன்றும் சொல்லாமல் செல்லை ஆஃப் செய்தான். வயதான கிழவி, ஒரு இளைஞன் என்று மட்டுமே ரகசியத்திற்காக தெரிவித்திருந்தது இப்போது வேறு விதமாக வேலை செய்து விட்டது அவனுக்குப் புரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது. இன்னும் ஐந்து லட்சம் ரூபாய் வர வேண்டியது இனி கிடைக்கப் போவதில்லை என்ற வருத்தம் சிறிது நேரம் அவனுக்கு இருந்தது. "கொலை செய்யற வேலையை ப்ரொஃபஷனல் கிட்ட விடுங்கன்னு சொன்னா முட்டாள்கள் கேட்கலை" என்ற கோபம் சிறிது வந்தது. பின் எல்லாவற்றையும் சுலபமாக மறந்தான்.

அடுத்த ஸ்டேஷனில் அமைதியாக இறங்கிக் கொண்டான். "இனி இந்தப் பயணத்தில் அர்த்தமில்லை".

அவனை இறக்கி விட்ட இரயில் தன் பயணத்தைத் தொடர்ந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தவன் மனதில் ஒரு எண்ணம் தத்துவார்த்தமாய் எழுந்தது. "என்ன தான் கச்சிதமாகத் திட்டமிட்டாலும் சில பயணங்களின் முடிவு திட்டமிட்டபடி இருப்பதில்லை."

அதை ஆமோதிப்பது போல் இரயில் கூக்குரலிட்டது.